# பாடத்திட்டமும் ஆசிரியர் வழிகாட்டி

# 3

## தரம் மூன்று

முன் பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை

இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல் : info@nie.lk

அச்சிடுதலும் விநியோகமும் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

# பாடத்திட்டமும்

# ஆசிரியர் வழிகாட்டியும்

# தரம் 3

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை.
இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

**பாடத்திட்டமும்**
**ஆசிரியர் வழிகாட்டியும்**
**தரம் 3**

முதற் பதிப்பு 2018
தேசிய கல்வி நிறுவகம்
© பதிப்புரிமையுடையது

முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

இணையத்தளம் : **www.nie.lk**
மின்னஞ்சல் : **info@nie.lk**

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக்களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கி நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடுகளையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது.

இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக்கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினை பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய

கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

# பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட எந்தவொரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியாயமற்றவற்றைக் களைந்து, நல்லவற்றைப் பயன்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாக அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதி மிக்கவை எவையோ அவையும் கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். இவ்வகையில், கலைத்திட்டத்தில் அடங்குகின்ற பாடத்திட்டம், ஆசிரியர் வழிகாட்டி, வசதி செய்து கொடுப்போர் (Facilitator) போன்றவை எல்லாம் கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கையின் பண்டைய அருஞ் செல்வங்களையும் நவீன செல்நெறிகளையும் உள்வாங்கி, தனது கல்விக் கோலத்தை மேம்படுத்தி வருகின்றது. சமகாலத் தேவைகளுக்கு அமைய, எட்டாண்டுகளுக்கு ஒரு தடவை கல்வி மறுசீரமைப்புகளினூடாக இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது.

தேசிய மட்டத்தில் பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மை பேணப்படுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் சற்றேனும் மாறுபடாது, அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்கு உரியவை அல்ல. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காக பாட விடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக, கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆக்கபூர்வமானதாக மாற்றி அமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மாணவரது அடைவு மட்டத்தை உயர் சதவீதத்துக்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதல் அளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி, மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்த முடியும். குறித்த பாடத்தின் பாட நூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இந்த ஆசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அல்ல என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை அண்மிக்கச் செய்தல் வேண்டும். அவ்வகையில் பாடத்தைக் கற்பிப்பதற்கு வழிகாட்டி, வசதிசெய்து கொடுப்பவர்களால் வகுப்பறையில் குறிப்பிட்ட பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டின் இறுதியில் மதிப்பீடு நடத்தப்பட வேண்டும். அவ்வாறான களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இந்த ஆசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி வண. மாபுல்கொட சுமணரத்ன தேரர்**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# அறிமுகம்

2018 ஆம் ஆண்டு மூன்றாம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இந்த ஆசிரியர் வழிகாட்டியானது, 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்திய ஆசிரியர் வழிகாட்டியை 9 வருட காலம் அமுல்படுத்திப் பெற்றுக்கொண்ட அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு சீராக்கம் செய்யப்பட்டுள்ளது. அத்தோடு தேசிய கல்வி நிறுவகத்தால் நடைமுறைப்படுத்தப்பட்ட கலைத்திட்ட பின்னடைவு பற்றிய செயலமர்வுகளில் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்கள், பல்வேறு நிறுவனங்கள் மூலமாக ஆரம்பக் கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மூலமாக பெறப்பட்ட தகவல்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரிய ஆலோசகர்கள் மூலமாக பெறப்பட்ட தகவல்கள் என்பனவும் இவ் மறுசீரமைப்பின்போது பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி என்பது ஆசிரியர்கள் தமது வகுப்பறையின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கு வழிகாட்டும் அறிவுறுத்தல் வழிகாட்டியாகும். இவ் அறிவுறுத்தல்களுக்கு அமைவாகத் தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வது ஆசிரியர்களின் பொறுப்பாகும். ஆரம்பக் கல்வி மாணவர்கள் தமது வளர்ச்சிப் பருவத்தில் மிக முக்கியமானதொரு கட்டத்தில் இருப்பவர்கள். மாணவர்களின் ஆக்கச் சிந்தனைத் திறன், சமூகத்திறன், ஆளுமைத்திறன் என்பன கட்டியெழுப்பப்படுவது இப்பருவத்திலேயாகும். இதனால் மாணவர்களுக்கான கற்றல் அனுபவங்களைக் கட்டியெழுப்பும்போது இவ் வழிகாட்டியிலுள்ள தகவல்களும் மேலே குறிப்பிட்ட பிள்ளை விருத்திக் காரணிகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். மாணவர்களின் கற்றலுக்காக அவர்களது அண்மித்த சுற்றாடலை மிகவும் வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொள்ள முடியும். இவ்வயது மாணவர்களின் கற்றல் இடம்பெறுவது முற்றுமுழுதாக சூழலோடு இடைத்தொடர்பை மேற்கொள்ளும் போதேயாகும். இதனால் மாணவர்களுக்குக் கற்றல் அனுபவங்களை வழங்கும்போது அண்மித்த சுற்றாடலை மிக வெற்றிகரமாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்த வழிகாட்டியிலுள்ள கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கும்போது மகிழ்ச்சிகரமான செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டப்பட்ட விளையாட்டுகளுக்கு முக்கிய இடம் வழங்கப்பட்டுள்ளது. மாணவர்களுக்கு தமது பிள்ளைப் பருவத்தில் மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கும் வெற்றிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் சந்தர்ப்பங்கள் வழங்க வேண்டியது அவர்களது முழுமையான விருத்திக்கு அவசியமானதாகும். அவ்வாறே அவர்களது எதிர்கால வாழ்க்கைக்கு அவசியமான தேர்ச்சிகளை எய்துவதற்கான வாய்ப்புகளையும் வழங்க முடியும். அதற்காக வகுப்பறைக்குள் முடியுமானவரை சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். தமது வகுப்பில் கற்கின்ற கற்றல் சந்தர்ப்பங்களின்போது எந்தளவுக்கு மிகச் சிறப்பாக தொடர்புபடுகின்றனர் என்பதில் எப்பொழுதும் ஆசிரியர் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். கணிப்பிடுதல் எனக் குறிப்பிடப்படுகின்ற இச்செயற்பாட்டின் இறுதி விளைவாக அமைய வேண்டியது சகல மாணவர்களினதும் கற்றலை விருத்தி செய்தலாகும்.

இவ் ஆசிரியர் வழிகாட்டியை தயார்செய்யுமுகமாக ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர் கல்லூரிகள், தேசிய கல்விக் கல்லூரிகள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் கல்வி நிர்வாகிகள் பலரதும் உதவிகள் பெறப்பட்டன. இவ் அனைவரும் வழங்கிய பங்களிப்புக்காக மனமார்ந்த நன்றிகளைச் சமர்ப்பிக்கின்றேன். அவ்வாறே எப்பொழுதும் எங்களுக்கு வழிகாட்டுகின்ற தேசிய கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகம் கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர அவர்களையும் நன்றியுடன் நினைவுகூருகின்றேன். இந்நூலை ஆக்குமுகமாக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய எமது திணைக்களத்தின் சகல பணியாளர்களுக்கும் கல்விசாரா ஊழியர்களுக்கும் எனது நிறைவான நன்றிகள் உரித்தாகட்டும்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது, தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக, நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத்திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக்கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்கள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு, தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப, இணங்கி வாழவும் மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு, சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை - 2003 டிசெம்பர்)**

# அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில்நுட்பத் தகைமை

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையிலான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல் விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகிய வற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை : கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல் : தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்.

உயிரியல் சூழல் : வாழும் உலகு, மக்கள், உயிரியல் சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல் : இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும் வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக்கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்; அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்; அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்; பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான சீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள், மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**(vii) "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**


விரைவாக மாறுகின்ற சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.


## கலைத்திட்டக் குழு

**ஆலோசனையும் அனுமதியும்**

| | | |
|---|---|---|
| **ஆலோசனை** | : | **கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர**<br>பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் |
| | | **வண.கலாநிதி மாம்புல்கொட சுமணரத்ன தேரர்**<br>பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம் |
| **பணிப்பு** | : | **ஏம்.ஆர்.டபிள்யூ .மத்தும**<br>பணிப்பாளர், முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித் துறை |
| **தொகுப்பும் இணைப்பாக்கமும்** | : | **வி.என்.எஸ். உதயசந்திரன்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர், முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை |
| **கலைத்திட்டக் குழு** | : | **ஏம்.ஆர்.டபிள்யூ .மத்தும** (பணிப்பாளர்)<br>**ஆர்.எம்.கே. த சில்வா** (சிரேஷ்ட விரிவுரையாளர்)<br>**வி.என்.எஸ்.உதயசந்திரன்** (சிரேஷ்ட விரிவுரையாளர்)<br>**டபிள்யு.ஜீ.எஸ். குமார** (சிரேஷ்ட விரிவுரையாளர்)<br>**எஸ்.எம்.எஸ்.தேசப்பிரிய** (விரிவுரையாளர்)<br>**எம்.சஜீவா ரம்புக்வெல** (விரிவுரையாளர்)<br>**ரீ. சந்திரிக்கா பீரிஸ்** (விரிவுரையாளர்)<br>**ஜே.ஏ.நிர்மலா ஜயசிங்க** (உதவி விரிவுரையாளர்)<br>**எச்.ஜீ. வனசேகர** (உதவி விரிவுரையாளர்)<br>**கே.ஆர்.எம். சகுந்தலா ரணசிங்க** (உதவி விரிவுரையாளர்) |
| **தாய்மொழி (தமிழ்)** | : | **வி.என்.எஸ்.உதயசந்திரன்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்<br>ஆரம்பக்கல்வித் துறை |
| **மொழிபெயர்ப்பு** | : | **எம்.பி.எம்.எம். சிப்லி**<br>ஓய்வுபெற்ற செயற்றிட்ட அதிகாரி<br>**எம்.எச்.எம். யாக்கூத்**<br>ஓய்வுபெற்ற பிரதம செயற்றிட்ட அதிகாரி<br>**கே. ஜெயகாந்தன்**<br>அரச மொழிபெயர்ப்பாளர் |
| **கணினி வடிவமைப்பு** | : | **கே. ஜெயகாந்தன்** |
| **மொழிச் செம்மையாக்கமும் பதிப்பும்** | : | **வி.என்.எஸ்.உதயசந்திரன்**<br>சிரேஷ்ட விரிவுரையாளர்<br>முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும்<br>ஆரம்பக் கல்வித் துறை |

# ஆரம்பக் கல்வித் திட்டம் - 2016



# புதிய கல்விச் சீர்திருத்தங்கள்

புதிய கல்விச்சீர்திருத்தங்கள்- மறுசீரமைப்பின் கீழ் ஆரம்பக்கல்வி கலைத்திட்டத்தின் விசேட பண்புகள்.

- ஐந்து ஆண்டுகளைக் கொண்ட ஆரம்பக்கல்விப் புலம் கலைத்திட்ட விருத்தியினதும் ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளினதும் வசதி கருதி மூன்று முதன்மை நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

  **முதன்மை நிலை 1 - தரங்கள் 1 உம் 2 உம்**
  **முதன்மை நிலை 2 - தரங்கள் 3 உம் 4 உம்**
  **முதன்மை நிலை 3 - தரம் 5**

- தரம் 1 இல் பிரவேசிக்கும் பிள்ளையை இனங்காண்பதற்கு வசதியான செயற்பாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

- பொதுக்கல்வி நிலை இறுதியில் மாணவர்களிடம் விருத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும் என விதந்துரைக்கப்பட்ட அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் வெளியிடப்பட்டுள்ளன. அத்தேர்ச்சி களைக் கட்டியெழுப்புவதற்குப் பொருத்தமான அடித்தளத்தை இட்டுச் செல்லும் கலைத்திட்டமாக, தேர்ச்சி சார்ந்த கலைத்திட்டமாக உள்ளது.

- பாட விடயங்கள் நான்காக வகுக்கப்பட்டுள்ளன.
  - **மொழி**
  - **கணிதம்**
  - **சமயம்**
  - **சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்**

- பிள்ளையின் பூரண விருத்திக்கு மொழி, கணிதத் தேர்ச்சிகளுடன் வேறு சில தேர்ச்சிகளும் விருத்தி செய்யப்படவேண்டியது அவசியமாகும். எடுத்துக்காட்டு: அழகியல், ஆக்கம், விஞ்ஞானம், விழுமியம், உடல் விருத்தி, சுகாதாரம் சார்ந்த தேர்ச்சிகள்

- இத்தேர்ச்சிகளைத் தனித்தனிப் பாட அலகுகள் மூலம் முன்வைப்பதை விட பிள்ளை களுக்குப் பொருத்தமான கருப்பொருள்கள் மூலம் வெளிக்கொணர்ந்து எய்துவதே சிறந்ததென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. 16 கருப்பொருள்களைக் கொண்ட சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எனும் பாடப்பரப்பு முன்பை விட ஒன்றிணைக்கப்பட்ட பண்பைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

- தரம் 1 இலிருந்து செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலமும் இரண்டாவது தேசிய மொழியும் (சிங்களம் / தமிழ்மொழிப் பாடங்கள்) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

- முதன்மை நிலை 2 இலிருந்து முறைசார ஆங்கிலம் சேர்க்கப்பட்டுள்ளது.

- தரம் 1 இலிருந்து தொடர்ச்சியாக பாட இணைச் செயற்பாடுகளுக்கும் தரம் 5 இல் பிள்ளைகளின் விருப்புக்கும், தேவைக்குமேற்பப் பொருத்தமான விருப்புப் பாடங்களைக் கற்பதற்கும் கால அட்டவணையில் வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன.

- ஆரம்பக்கல்விப் பருவத்தினருக்குப் பொருத்தமாக மேற்கொள்ளக்கூடிய கற்றல் - கற்பித்தல் முறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அவை:
  - **விளையாட்டுக்களும் விநோதச் செயற்பாடுகளும்**
  - **செயற்பாடுகள்**
  - **எழுத்து வேலைகள்**

முதன்மை நிலை 1 இல் விளையாட்டுக்களுக்கும் செயற்பாடுகளுக்கும் அதிக அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு முதன்மை நிலைகள் மூன்றிலும் கற்றல் - கற்பித்தல் முறைகள் ஒழுங்கமைக்கப்பட்டுப் படிப்படியாக மாறிச் செல்லும் விதத்தில் அவை வடிவமைக்கப்பட்டுள்ளன.

- பிள்ளையின் முன்னேற்றம், கற்றல் இடர்ப்பாடுகள் தொடர்பாக தகவல் சேகரிப்பதற்கு முறைசாராத கணிப்பீடு முறைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படுகின்ற அதாவது, தொடர்ச்சியாக மேற்கொள்ள வேண்டிய தொடர் கணிப்பீட்டிற்காக முன்னுரிமை பெறுகின்ற கணிப்பீட்டுச் செயல்முறையை நடைமுறைப்படுத்தல்.

- யாவருக்கும் கல்வியை உறுதி செய்வதை இலக்காகக் கொண்டு அதற்குத் தரநிர்ணயமுள்ள ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் மாணவர்கள் கட்டாயமாக பாண்டித்தியம் அடைய வேண்டிய அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

- ஒவ்வொரு முதன்மைநிலை இறுதியிலும் எதிர்பார்க்கின்ற அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளில் சகல மாணவர்களும் பாண்டித்தியம் அடைய வேண்டும் என்பதை இலக்காகக் கொண்டு **ஒவ்வொரு முதன்மைநிலையும் ஒரே ஆசிரியரிடமே** ஒப்படைக்கப்பட்டுள்ளது.

- ஒரு பிள்ளையின் அடைவை இன்னொரு பிள்ளையின் அடைவோடு ஒப்பிட்டுத் தீர்மானம் எடுக்கும் முறைமையை விடுத்து, குறித்தவொரு நோக்குடன், நியதியுடன் அடைவை ஒப்பிட்டு தீர்மானம் மேற்கொள்வதற்கு, நியதிசார்ந்த அடிப்படை கணிப்பீடு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- முதன்மை நிலை 1 இன் பிள்ளைகள் தரம் 5,6 இன் பிள்ளைகளுடன் சேர்ந்து ஒழுங்கமைப்புடன் செயற்பாடுகளிலும் விளையாட்டுக்களிலும் ஈடுபடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல், முதன்மை நிலை ஒன்று தொடக்கம் இரண்டாவது தேசிய மொழியும் அறிமுகம் (சிங்களம்/தமிழ்) செய்யப்பட்டுள்ளது.

- 2007 ஆம் ஆண்டு முதல் செயற்பாடு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் கணித பாடத்துடனும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

- மாணவர்களின் உடல், உள விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தில் உடலியக்கச் செயற்பாடுகள் எனும் வேலைத்திட்டம் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் தரம் ஒன்றிலிருந்து அறிமுகம் செய்யப்படுகின்றது.

# ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்குரிய அறிவுறுத்தல்கள்

2018 ஆம் ஆண்டில் நடைமுறைக்கு வருகின்ற இந்த (திருத்தியமைக்கப்பட்ட) ஆசிரியர் வழிகாட்டியானது, தமது மாணவர்க்கு மேலும் பயனுள்ள வகையிலும் தரமிக்க வகையிலும் கற்பிக்க வழிகாட்டுவதற்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவரைத் தரமான கற்றலின்பால் வழிப்படுத்துவதற்கான இந்த ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

தாய்மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், ஆங்கில பிரதான பாடங்களும் இரண்டாம் தேசிய மொழி, செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலம், மாணவரது முன்னேற்றத்தைக் கணிப்பீடு செய்தல், விளையாட்டு முற்றத்தைப் பயன்படுத்துதல் ஆகியனவும் இதில் அடங்கியுள்ளது. அத்தோடு, கணிதம், சமயம் ஆகிய பாடங்களுக்கென தனித்தனியாகத் தயாரிக்கப்பட்ட ஆசிரியர் வழிகாட்டிகள் உள்ளன. தரம் மூன்றில் கற்கும் மாணவர்களின் கணித பாடத்திற்கென கணித செயல்நூல் ஒன்றும் தாய்மொழிப் பாடத்திற்காக பாடநூலுடன் செயல்நூல் ஒன்றும் சமய பாடத்திற்காக ஒரு பாடநூலும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவரை இனங்காணல் எனும் வேலைத்திட்டத்தின் மூலம் கண்டறியப்படும் தகவல்களைக் கருத்திற்கொண்டு மாணவர்களை, எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளின்பால் இட்டுச்செல்வதற்காக வினைத்திறனான கற்பித்தலின்பால் வழிப்படுத்துவதற்காக இந்த ஆசிரியர் வழிகாட்டியைப் பயனுள்ள வகையில் பயன்படுத்துவது அவசியமாகும். அதற்காக, இந்த ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள சகல விடயங்களையும் நன்கு வாசித்து விளங்கிக்கொள்வது அவசியமாகும். மேலும், அந்தந்தப் பாடப்பகுதியின் கீழ் நாளாந்த கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கும் அது உங்களுக்கு துணையாகும்.

தாய்மொழிப் பாடத்தில் அந்தந்தப் பாடசாலைத் தவணையில் கற்பிக்க வேண்டியவை எவை என்பது தெளிவாகத் தரப்பட்டுள்ளது. தாய்மொழிப் பாடத்தில் செவிமடுத்தல் (கேட்டல்), பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய பரப்புகளுக்கு இடையே ஒன்றிணைப்பு நிகழுமாதலால் அத்தகைய பரப்புக்குரிய பகுதிகளை வெவ்வேறாகக் கற்பித்தலாகாது. தாய்மொழிப் பாடக் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது அந்தந்தச் செயற்பாட்டிற்குப் பொருத்தமானவாறு பாடநூலையும் செயல்நூலையும் துணையாகக் கொள்வது இன்றியமையாதது. அவ்வாறின்றி பாடநூலையும் செயல்நூலையும் மாத்திரம் தொடர்ச்சியாகப் பயன்படுத்திச் செல்லலாகாது. மேலும், கற்றல் - கற்பித்தலின் வெற்றிக்காக மேலும் அர்த்தபுஷ்டியான பொருத்தமான உபகரணங்களைப் பயன்படுத்துவது அவசியமாகும்.

சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் எனும் பாடம், ஆரம்பக்கல்விக் கலைத்திட்டத்தின் மற்றுமொரு பிரதான பாடமாகும். மாணவர்க்கு மிக நெருக்கமாக பௌதிக, உயிரியல் மற்றும் சமூகச் சூழலின்பால் கவனஞ் செலுத்தி, 16 கருப்பொருள்கள் இனங்காணப்பட்டுள்ளதோடு, அவ்வொவ் வொன்றுக்குமுரிய பல செயற்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இப்பாடத்திற்காக ஆசிரியர் வசமுள்ள ஒரேயொரு மூலாதாரம் இந்த ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடக்கம் மாத்திரமேயாகும். சூழலில் தேடல், வரைதல், அழகியல் ஆக்கங்கள், உடற்கல்விச் செயற்பாடுகள், உணவும் போசணையும் போன்ற பல பாடப்பரப்புகளை உள்ளடக்கிய இப்பாடமானது ஓர் ஒன்றிணைந்த பாடமும் இணைப்பாக்கப் பாடமுமாகும். இது பார்த்த விடயப்பரப்பில் உள்ளடக்கி உருப்பெற்றுள்ளது. இந்த எல்லாப் பகுதிகள் தொடர்பாகவும் ஆசிரியர் பூரண விளக்கத்துடன் செயற்படுவது முக்கியமானது.

ஆக்கபூர்வமான ஆசிரியர் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு மாத்திரம் வரையறைப்பட்டிராது புதிய செயற்பாடுகளைத் திட்டமிட்டு மாணவர்க்கு மேலும் பயனுள்ள கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கிச் செயற்படுவதற்கு இந்த ஆசிரியர் வழிகாட்டி தாராளமாக வாய்ப்பளிக்கிறது.

கற்றல் - கற்பித்தல் சாதனங்களைக் கொள்வனவு செய்வதற்குப் பதிலாக தமது சுற்றுப்புறத்தில் பெறத்தக்க இயற்கையான வளங்களை உச்ச அளவில் பயன்படுத்தி அவற்றை ஆக்கிக் கொள்வதில் கவனஞ் செலுத்துவது முக்கியமானது. மேலும் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பொருத்தமான பல்வேறு கற்றல் முறைகளைப் பயன்படுத்தி மாணவரை செயலூக்கத்துடன் கற்றலில் பங்குகொள்ளச் செய்து களிப்புடன் கற்க வகை செய்வதும் இன்றியமையாததாகும்.

செயற்பாடுகள் சார்ந்த வாய்மொழி ஆங்கிலத்தை, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் மட்டுமன்றி கணித பாடத்தின்போதும் பயன்படுத்தச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. ஆங்கில மொழியை மாணவர்க்கு பரிச்சயப்படுத்துவதற்காக நாளாந்த வாழ்க்கையில் பயன்படும் சொற்கள் மற்றும் சொற்றொடர்களைச் கற்றலுடன் சார்ந்த செயற்பாடுகள் பாடத்தில் அடங்கியுள்ள கருப்பொருள்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் தேசிய மொழியை (சிங்களம்) பயன்படுத்துவது தொடர்பாகவும் இந்த ஆசிரியர் வழிகாட்டியில் வழிகாட்டல் வழங்கப்பட்டுள்ளது. அது சார்ந்த பாடத்திட்டமும் பல செயற்பாடுகளும் தரப்பட்டுள்ளதோடு அவற்றைப் பொருத்தமானவாறு பொருத்தியமைத்து, ஒழுங்கமைத்து மாணவர்க்கு வழங்குவது அவசியமாகும். செயற்பாடு சார்ந்த வாய்மொழி ஆங்கிலம், இரண்டாம் மொழி (சிங்களம்) ஆகிய பாடப் பகுதிகளைக் கற்பிக்கும்போது பொருத்தமான கற்றல் - கற்பித்தல் வளங்களைப் பயன்படுத்துவதும் அவசியமாகும். இவ்வாறாக ஒவ்வொரு பாடப்பகுதியின் மூலமும் எதிர்பார்க்கப்படும் கற்றல் தேர்ச்சிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை ஆசிரியர் கணிப்பிட்டுத் தேவையான வழிகாட்டலையும் உதவிகளையும் வழங்குதல் வேண்டும்.

முறைமையில் வகையிலும், முறைசார்ந்த வகையிலும் நடத்தும் கணிப்பீட்டுச் செயன்முறையின் மூலம் இனங்காணப்பட்டுள்ளவாறான மாணவரின் வலிவு - நலிவுகள் தொடர்பாக நாளாந்தம் நடாத்தும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின்போது தேவையான வழிகாட்டலை வழங்குதல் வேண்டும். மாணவர்களைக் கணிப்பிடுவதற்காக உரிய கணிப்பீட்டு நியமங்களை உள்ளடக்கிய கணிப்பீட்டுப் படிவங்கள் இந்த ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன.

இப்பணியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்வதற்காக அந்தந்தப் பாடத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதோடு அந்நேரத்தை உச்சளவில் பயன்படுத்துவதற்கு ஆசிரியர்கள் ஆவன செய்ய வேண்டும்.

தரம் இரண்டில் பிரவேசிக்கும் பிள்ளைகளின் தன்மையும் அவர்களின் கற்றல் கோலமும் ஆளுக்காள் வேறுபட்டுக் காணப்படும். எனவே, அது தொடர்பாக உணர்தன்மையுடன் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒவ்வொருவரும் கவனஞ் செலுத்தி மாணவ மாணவியரை நன்கு இனங்கண்டு செயற்படுவர் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

கலைத்திட்ட இணைப்பாளர்.

# முதன்மை நிலை இரண்டு

## (தரம் 3)

| | பாடம் | வாரத்திற்கான நேர ஒதுக்கீடு |
|---|---|---|
| 1' | தாய் மொழி | 5.00 மணித்தியாலங்கள் |
| 2' | கணிதம் | 5.00 மணித்தியாலங்கள் |
| 3' | சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் | 6.00 மணித்தியாலங்கள் |
| 4' | ஆங்கிலம் | 3.00 மணித்தியாலங்கள் |
| 5' | இரண்டாம் தேசிய மொழி | 1.00 மணித்தியாலங்கள |
| 6' | காலைக் கூட்டமும் சமய அனுட்டானமும் | 1.15 மணித்தியாலங்கள் |
| 7' | சமயம் | 2.00 மணித்தியாலங்கள் |
| 8' | உணவு வேளை (இடைவேளை) | 1.40 மணித்தியாலங்கள் |
| 9' | உடலியக்கச் செயற்பாடுகள் | 2.05 மணித்தியாலங்கள் |
| 10' | இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் | 30 நிமிடங்கள் (வாரம் ஒருநாள்) |
| | வாரத்திற்கான மொத்தக் காலம் | **27 மணித்தியாலங்கள் 30 நிமிடங்கள்** |

# முதன்மை நிலை இரண்டில் பிரவேசிக்கும் பிள்ளையை இனங்காணல்

வருட ஆரம்பத்தில் தம்மிடத்தே வரும் மாணவ, மாணவியரின் இயலுமைகள் - இயலாமைகள், விருப்பு - வெறுப்புகள், கவர்ச்சிகள் போன்றவற்றைப் பற்றிய விளக்கத்தை ஆசிரியர்கள் பெற்றிருப்பது மிக முக்கியமானதாகும். இரண்டாம் முதன்மை நிலையில் முற்றுமுழுதாக இரண்டு வருட காலத்திற்கு ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையே சீரான இடைத்தொடர்புகளைப் பேணுவதற்கான அடித்தளத்தை இலகுவாக இட்டுக்கொள்வதற்கு இது வழிகோலும். மேலும் விளைதிறனுடைய கற்றல் வாய்ப்புகளைத் திட்டமிட்டு உருவாக்கிக்கொள்வதற்கும் அது துணையாக அமையும்.

ஆரம்பத்திலேயே மாணவர்களுக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம் என்பதனை உணரக்கூடிய விதத்தில் வேலைத்திட்டங்களை முதல் வாரத்திலேயே நடைமுறைப்படுத்தல் வேண்டும். அவ்வேலைத்திட்டத்தில் பின்வரும் விடயங்கள் அடங்கியிருத்தல் வேண்டும்.

- **சுமுகமான உரையாடல் :** தரம் இரண்டு வகுப்பின் ஆசிரியர் தமது மாணவர்களை தரம் மூன்று ஆசிரியருக்கு ஒப்படைப்பதுடன் இரு ஆசிரியர்களும் இரு வகுப்பு மாணவர்களும் சுமுகமான உரையாடல்
- **இனங்காணல் :** தரம் மூன்றின் ஆசிரியர் தன்னை அறிமுகம் செய்தல். புது மாணவர்கள் தமது பெயரில் தான் விரும்பிய பகுதியைக்கூறி அறிமுகம் செய்தல். அத்தோடு தகவல்கள் சிலவற்றைக் கூறல்.
- **கருத்து வெளிப்பாட்டுச் சித்திரங்கள் :** தமது கருத்தை வெளிப்படுத்தும் சித்திரம் ஒன்றை வரைந்து, வெளிப்படும் கருத்தை விபரித்தல்.
- **கூட்டாகப் பாடுதல் :** இசைவுடனும் அசைவுடனும் கூட்டாகப் பாடலொன்றைப் பாடுதல்.
- **படங்களுடன்கூடிய எண் விளக்கம் :** பிராணியொன்றின் படமொன்றை வரைந்து வழங்கப்பட்ட பத்திரத்தில் தரப்பட்டுள்ள எண்ணிக்கைக்குப் பொருத்தமான குறித்த வடிவங்களினுள் நிறம் தீட்டல்.
- **கதையைச் செவிமடுத்தல் :** ஆசிரியர், தாள் புரட்டியின் ஊடாகத் தயாரித்த கதையொன்றைக் கவனமாகவும் விளக்கத்துடனும் மகிழ்ச்சியுடனும் செவிமடுத்தல்.
- **ஆக்கச் செயற்பாடுகள் :** வழங்கப்பட்டுள்ள பொருட்களில் தேவையானவற்றைத் தெரிவு செய்து விரும்பிய ஆக்கமொன்றினை முடிவு வரை ஆக்கி விபரித்தல்.
- **கூட்டாக விளையாடுதல் :** இலகுவான கட்டளைகள் கொண்டதும் இலகுவான சட்டதிட்டங்கள் கொண்டதுமான கூட்டாக விளையாடக்கூடிய ஒரு விளையாட்டில் ஈடுபடல்.
- **சொல்லுடன் சொல் சேர்த்தல் :** ஆசிரியர் கூறும் சொல்லில் காணப்படும் இறுதி எழுத்தைக் கொண்டு சொல்லொன்றினை முன்வைத்தல்.
- **போலச் செய்தல் :** வெளியில் பாத்திரங்களைப் போன்று போலச் செய்தலும் சத்தங்களை எழுப்பி போலச் செய்தலும் இதனூடாக இரசனை பெறல்.
- **நிறம், வடிவம், பருமன் ஆகியவற்றுக்கமைய வகைப்படுத்தல் :** சேகரித்த பூக்கள் / வித்துகள் ஊடாக நிறம், வடிவம், பருமன் என்பவற்றுக்கேற்ப வகைப்படுத்தல்.

- **அறிவுறுத்தல்களைப் பின்பற்றல்** : எழுத்துருவில் அமைந்த அறிவுறுத்தல் கொண்ட அட்டையொன்றினை வாசித்து அதில் கூறப்பட்டுள்ள இலகுவான செயற்பாட்டில் ஈடுபடல்
- **கூட்டலும் கழித்தலும்** : கூட்டல், கழித்தல் என்பவற்றுக்கு எண்கள் எழுதப்பட்ட அட்டையைப் பார்த்து விடை எழுதுதல்
- **கதையைத் தொடர்ந்து கொண்டுசெல்லல்** : ஆசிரியர் கூறும் கதையின் ஆரம்பத்தைக் கூறி அக்கதையைத் தொடர்ந்து கொண்டுசெல்லல்.
- **எண் விளக்கம்** : 10 முதல் 20 வரை எண்கள் எழுதப்பட்ட அட்டைத் தொகுதியைப் பயன்படுத்தி குழுவாக எண்களை ஒழுங்குமுறையில் வைத்தல்.
- **படம் பார்த்து வாக்கியம் எழுதுதல்** : வழங்கப்பட்ட படத்தைப் பார்த்து ஆக்கபூர்வமான வாக்கியமொன்றை எழுதுதல்.
- **திரவங்களை அளத்தல்** : எதேச்சையான ஓர் அலகினால் திரவங்களை அளத்தல்.
- **கண்காட்சி** : நான்கு தினங்களிலும் செய்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்தல்
- **மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளல்** : தரம் இரண்டில் வகுப்பாசிரியர், அதிபர், பெற்றோர் ஆகியோர் பங்குகொள்ளக்கூடிய குறைந்தளவு செலவிலான தேநீர் விருந்துபசாரம் ஒன்றினை நடத்தல். கூடியளவு வகுப்பு மாணவர்கள் பொறுப்புகளைப் ஏற்கச் செய்தல்.

## முதன்மை நிலை இரண்டில் பிரவேசிக்கும் பிள்ளையை இனங்காணும்போது மேலும் கவனத்தில் கொள்ளக்கூடிய அணுகுமுறைகள் :

- முதன்மை நிலை ஒன்றின் அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் தொடர்பான அறிக்கை
- முதன்மை நிலை ஒன்றின் ஆசிரியருடன் கலந்துரையாடல்
- பெற்றோர் / பாதுகாவலர்களுடன் கலந்துரையாடல்
- மாணவர்களுடன் கலந்துரையாடல்

இவ்வாறாகப் பல்வேறு நுட்பமுறைகளைப் பயன்படுத்தி, மாணவர்கள் தொடர்பாகப் பெறும் தகவல்களைத் துணையாகக்கொண்டு, கற்றல் - கற்பித்தல் செயன்முறையை ஒழுங்குசெய்வீர்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல் பத்திரத்தைக் கவனத்திற் கொண்டு செயல்படுவது மிகப் பொருத்தமானதாக அமையும்.

# தரம் மூன்று - பாட உள்ளடக்கமும் ஆசிரியர் வழிகாட்டியும்

1.0 தாய்மொழி (தமிழ்) - அறிமுகமும் பாடத்திட்டமும் xx

தாய்மொழி ஆசிரியர் வழிகாட்டி 1

2.0 சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் - அறிமுகமும் பாடத்திட்டமும் 105

**சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் - ஆசிரியர் வழிகாட்டி**

01. எமது நல்வாழ்வு 122

02. நாம் இலங்கையர் 128

03. மரஞ் செடி கொடிகள் 135

04. எம்மைச் சூழவுள்ள பிராணிகள் 144

05. நாம் பயன்படுத்துபவை 153

06. எமது உணவு 161

07. பாதுகாப்பும் கரிசினையும் 170

08. நீர் 177

09. போக்குவரத்து 185

10. வீட்டுத் தோட்டம் 193

11. வேலையை இலகுபடுத்திக்கொள்ளும் வழிகள் 200

12. மனித நடத்தைகள் 207

13. நிலமும் வானும் 213

14. எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள் 222

15. மனிதனும் தகவல்களும் 229

16. எமது பண்டைய தகவல்கள் 236

3.0 செயற்பாடுகள் அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம் 242

4.0 இரண்டாவது தேசிய மொழி - பாடத்திட்டமும் ஆசிரியர் வழிகாட்டியும் 252

5.0 மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல் 281

6.0 அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் 290

**கணிதம், சமயங்கள் தொடர்பான பாடத்திட்டங்களும் ஆசிரியர் வழிகாட்டிகளும் தனித்தனியாக முன்வைக்கப்பட்டுள்ளன.**

# 1.0 தாய் மொழி (தமிழ்) - தரம் 03

## 1.0 அறிமுகம்

செவிமடுத்தல். பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகியன மொழியின் அடிப்படைத் திறன்களாகும். இவை இரு வகைப்படும். செவிமடுத்தல் வாசித்தல் என்பன உள்ளீட்டுத் திறன்களாகும். எழுதுதல், பேசுதல் என்பன வெளியீட்டுத் திறன்களாகும். உள்ளீட்டுத் திறன்களை விருத்தி செய்தலானது, மாணவரின் வெளியீட்டுத் திறன்களின் விருத்தியில் பங்களிப்புச் செய்யும். இத்திறன்களின் விருத்திக்குப் பாடசாலைச் சூழலும் புறச்சூழலும் துணைநிற்கும். எனவே அடிப்படையான மொழித் திறன்களை விருத்தி செய்வதில் ஆரம்பக் கல்வியின் வகிபாகம் அளப்பரியதாகும்.. அடிப்படையான மொழித்திறன்கள் ஒழுங்காக முன்வைப்பதற்காக அவை வெவ்வேறாக காட்டப்பட்டுள்ள போதிலும் ஒன்றிணைந்த வகையில் கற்பிக்கத்தக்கவாறாக அவற்றை முன்வைத்தல் முக்கியமானதாகும்.

தேர்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறையின் போது தொடர்பாடல் திறன்களின் முதன்மையான ஓர் அம்சமாக எழுத்தறிவு இடம்பெறுகின்றது. கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், விளங்கிக் கொள்வதற்காக வாசித்தல், சரியாகவும், தெளிவாகவும் எழுதுதல், விளைதிறனுடையவாறு கருத்துப் பரிமாறுதல் ஆகிய தேர்ச்சிகளின்பால் மாணவரை இட்டுச் செல்வது எதிர்பார்க்கப்படுகின்றது. பிரதானமாக மேற்படி தொடர்பாடல் தேர்ச்சிகளுக்கு மேலதிகமாக, சுற்றாடல் சார்ந்த தேர்ச்சிகள், வேலையுலகுக்கு ஆயத்தமாதல் தேர்ச்சிகள், ஒழுகலாறு மற்றும் சமயம் சார்ந்த தேர்ச்சிகள், விளையாட்டு மற்றும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல் தொடர்பான தேர்ச்சிகள், போசாக்கு மற்றும் வளர்ச்சி தொடர்பான தேர்ச்சிகள், கற்கக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள் ஆகிய ஏனைய தேர்ச்சிகளும் விருத்தியடையும் வகையில் பாடத்துக்குரிய கற்றல் - கற்பித்தற் செய்முறையை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது.

முதன்மை நிலை ஒன்றில் உயிரோட்டமான அடிப்படை மொழித்திறன்களாகிய செவிமடுத்தல் மற்றும் பேசுதலுக்குரிய களிப்பூட்டத்தக்க கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட்டுப் படிப்படியாக வாசித்தல் எழுதுதல் ஆகிய அடிப்படை மொழித்திறன்களை விருத்தி செய்து கொள்வது அவசியமாகும்.

இரண்டாம் முதன்மை நிலையின் போது அடிப்படை மொழித்திறன்களை விருத்தி செய்தவாறு, குறிப்பாக செம்மையாக மொழியை விருத்தி செய்து கொள்வதற்கான செயற்பாடுகளில் ஈடுபடுவது எதிர்பார்க்கப்படுகின்றது. மூன்றாம் முதன்மை நிலையின் இறுதியில், குறிப்பாக ஆக்கபூர்வமாகப் பேசுதல் மற்றும் ஆக்கபூர்வமாக எழுதுதல் தொடர்பான உயர்மட்டப் பாண்டியத்தியம் எதிர்பார்க்கப்படுகின்றது. எனவே தாய்மொழியை நேசிக்கும் பிரசைகளின் முதன்மையான மொழி அத்திவாரத்தையும், இடைநிலைப் பருவத்தில் தாய்மொழியைப் பயில்வதற்குத் தேவையான முதன்மை அடித்தளத்தையும் இடுவது எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஆரம்பக் கல்விப் புலத்தில் எதிர்பார்க்கப்படும் மொழிசார்ந்த தேர்ச்சிகள்

- அன்றாடத் தேவைகளுக்காகச் செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறமைகளை வெளிப்படுத்துவார்.
- கவிதை, பாடல், கதை கேட்டும் வாசித்தும் இரசிப்பார்.
- பிழையின்றி உச்சரித்து உரத்து வாசிப்பார்.
- தெளிவாகவும் பிழையின்றியும் எழுதுவார்.
- செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து சம்பந்தமான நல்ல பழக்கங்களை வெளிப்படுத்துவார்.
- புத்தகங்களை வாசித்து விளங்கிக்கொள்வார், இரசிப்பார்.
- தமது திறமைகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்திக் காட்டுவார்.
- சமுதாயத்தின் மத்தியில் தமது எண்ணங்களை அன்னியோன்னியமாக பண்புடன் சமர்ப்பிப்பார்

## 2.0 தரம் 1 - 5 இற்கான மொழித் தேர்ச்சிகள்

- கிரகித்துத் துலக்குவதற்காகச் செவிமடுப்பார்.
- செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகச் செவிமடுப்பார்.
- விளக்கத்துடன் தெளிவான உச்சரிப்புடன் கருத்துப் புலப்படப் பேசுவார்.
- பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாகப் பேசுவார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.
- தொடர்பாடலுக்காகப் பேசுவார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- கற்றல் விருத்திக்காகப் பேசுவார்.
- கிரகித்தவற்றை ஆக்கத்திறனுடனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறவும் பேசுவார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகப் பேசுவார்.
- வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.
- வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாக வாசிப்பார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.
- தொடர்பாடலுக்காக வாசிப்பார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- கற்றல் விருத்திக்காக வாசிப்பார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார்.
- எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.
- எழுத்துத் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.

- விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார் / வரைவார்.
- நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார்.
- சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.
- தொடர்பாடலுக்காக எழுதுவார்.
- மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.
- கற்றல் விருத்திக்காக எழுதுவார்.
- கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார்.
- நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார்.

## 4.0 கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

மொழித்திறன் ஒவ்வொன்றிலும் விதித்துரைக்கப்பட்ட விடயக் கூறுகளில் மாணவர்கள் உரிய தேர்ச்சி அடைதல்களை உறுதிப்படுத்துவதற்காகக் கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் அமைதல் வேண்டும்.

தரம் 3 இல் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின்போது விளையாட்டு விநோதச் செயற்பாடுகள், செயற்பாடுகள், எழுத்துவேலை ஆகியவற்றுக்குச் சம வாய்ப்பு அளிக்கப்படல் வேண்டும். தமிழ்மொழிப் பாடம் கற்பிக்கப்படும்போது அதற்குரிய பாடநூலையும் உரியவாறு பயன்படுத்தல் வேண்டும். அதற்கான வழிகாட்டலுக்கு ஆசிரியர் வழிகாட்டி துணை புரியும்.

கதை கூறல், பாடுதல், நடித்தல், பாவனை செய்தல், செய்து காட்டுதல், வாசித்தல், பேசுதல், உரையாடுதல், பரிமாறுதல், எழுதுதல், வரைதல், விளக்கம் கூறுதல் போன்றவற்றை உள்ளடக்கிய செயற்பாடுகளிலும் விளையாட்டுக்களிலும் மாணவர்களை ஈடுபடுத்தலாம்.

## பாடநூலைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

1. கற்பித்தலை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆசிரியர் பாடநூலை நன்கு நுணுகி ஆராய்ந்து கற்றல் வேண்டும்.

2. பாடநூலிலுள்ள பாடங்களை மாணவர்களுக்கு முன்வைக்கும்போது எமது நாடு, எமது விழுமியங்கள், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள், உள்நாட்டு மற்றும் உலகளாவிய விடயங்கள், சுற்றுச்சூழல் அழகு மற்றும் பாதுகாப்பு, விவசாயம், இலக்கிய நயம், உலகளாவிய இலக்கியம் போன்ற பல்வேறு துறைகளை அடிப்படையாகக் கொண்ட தத்துவங்களுடன் மாணவர்களுக்கு வழங்க வேண்டியது உங்களது கடமையாகும்.


3. வருடாவருடம் பிள்ளையின் மொழித்தேர்ச்சி விருத்தியுறும் வகையில் பாடநூல் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.

4. செவிமடுத்தல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படை மொழித்திறன்கள் நான்கினையும் மாணவர்கள் விருத்திசெய்து கொள்ளக்கூடிய வகையில் பாடநூலை வாசிப்பதற்கு மாத்திரம் பயன்படுத்தாமல் மேற்குறிப்பிட்ட திறன்களுடன் ஒன்றிணைக்கும் வகையில் பயன்படுத்த வேண்டும்.

5. தரம் மூன்று ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள தேர்ச்சிகளை அடைந்து கொள்வதற்காக முன்மொழியப்பட்டுள்ள ஏதேனும் செயற்பாடுகளுக்குச் சமனான செயற்பாடுகளைப் பாடநூலில் இருந்தும் பெற்றுக்கொள்ள முடியும். அவ்வாறே ஆசிரியர் வழிகாட்டியில் உள்ள ஏதேனும் செயற்பாடுகளுக்கு பாடநூலையும் உசாத்துணையாகப் பயன்படுத்த

முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்கள் எவை என்பதைப் பாடநூலையும் ஆசிரியர் வழிகாட்டியையும் நன்கு நுணுகி ஆராய்ந்து கற்கும்போது விளங்கிக்கொள்ள முடியும்.

6.




## பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

தமிழ்மொழிப் பாடத்துடன் இணைந்த பல செயற்பாடுகளை பாடசாலையில் நடைமுறைப்படுத்த முடியும்.

- காலைக் கூட்டமும் நற்சிந்தனையும்
- வகுப்புக் கூட்டம்
- கலை நிகழ்ச்சிகள்
- கண்காட்சிகள்
- சிறுவர் நிகழ்ச்சிகள் - சந்தை, சுற்றுலா போன்றவை
- சமய நிகழ்ச்சிகள்
- மாணவர் மன்றம்
- ஆசிரியர் தினம், பெற்றோர் தினம் போன்றவை
- பேச்சு
- தனி அல்லது குழுப் பாடல்
- நடிப்பு, அபிநயம் தொடர்பான செயற்பாடுகள் போன்றவையாகும்.

மேற்படி பாடசாலை வேலைத்திட்டத்தில் இருந்து மாணவர்களின் மொழித்திறன்களை விருத்தி செய்வதற்காகப் பின்வரும் செயற்பாடுகளை ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்த முடியும்.

**தரம் 3 மாணவர்கள் மொழிக் கற்றல் தேர்ச்சிகளை அடையும் பொருட்டு பின்வரும் கொள்கைகளைப் பாடசாலை மட்டத்தில் கடைப்பிடித்தல் நன்று.**

- வகுப்பறையை வளமுள்ளதாக்கல்
- மொழிக் கற்றலுக்கான வளங்களையும் வசதிகளையும் அளித்தல்
- மாணவர் பலதரப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடக்கூடியவாறான வசதிகளை வழங்கல்
- இணைப்பாடத்திட்டச் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்
- பொருத்தமான ஆசிரியருக்கு இவ்வகுப்பை ஒப்படைத்தல்
- ஆசிரியருக்குத் தேவையான சேவைக்காலப் பயிற்சி பெறச் சந்தர்ப்பமளித்தல்
- பெற்றோருடன் சாதகமான தொடர்புகளை ஏற்படுத்துதல்
- மேற்பார்வை செய்தல், ஆலோசனை வழிகாட்டல்

## மாணவர்களின் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

தரம் மூன்றில் தாய்மொழிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சைகளைவிட மாணவர்களுடன் இணைந்து மேற்கொள்ளும் செயற்பாடுகளின்போது கண்காணிப்பின் ஊடாக மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டிற்கே முக்கியத்துவம் வழங்குதல் வேண்டும். விளையாட்டு - விநோதச் செயற்பாடுகள், செயற்பாடுகள், எழுத்துவேலை, கலந்துரையாடல், வாய்மொழிமூல வினாக்கள் போன்ற முறைகளின் ஊடாக ஒவ்வொரு மொழித்திறனிலும் மாணவர் அடையவேண்டிய தேர்ச்சிகளை இனங்கண்டு அவற்றை அடைந்துள்ளனரா என்பதைக் கணிப்பீடு செய்தல் எதிர்பார்க்கப்படுகிறது. கணிப்பீடு முறைசார்ந்ததும் முறைசாராததுமாக அமைதல் நன்று. பின்வரும் எடுத்துக்காட்டுகளை அனுசரித்துக் கணிப்பீடுகளை மேற்கொள்ளலாம்.

- அவதானித்துச் செவிமடுத்தல், துலங்குதல், கிரகித்தல் என்பவற்றை அவதானித்தல்
- கருத்துக்களை வெளிப்படுத்திப் பேசுதலை அவதானித்தல்
- கதை கூறல் / பாவோதல் என்பவற்றை உற்றுநோக்குதல்
- எழுத்துக்களை இனங்கண்டு உச்சரித்தலை அவதானித்தல்
- தெளிவாக உச்சரித்து வாசித்தலை அவதானித்தல்
- உறுப்பமைய எழுதுதலைப் பார்வையிடல்
- பொறிமுறையை அனுசரித்து எழுதுதலைப் பார்வையிடல்
- ஆக்கி எழுதுதலைச் சரிபார்த்தல்

## வீட்டுவேலை

- பாடசாலையிலே நாள்தோறும் ஈடுபடும் வேலைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக வீட்டுவேலைகளாக கதை, கவிதை போன்றவற்றைப் பெற்றோர் அல்லது வயது வந்தோரிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் வழங்குங்கள்.
- செய்யவேண்டியவற்றையும் செய்யவேண்டிய விதத்தையும் மாணவர்கள் தெளிவாக விளங்கிக்கொள்ளும் வகையில் அறிவுறுத்தவும்.
- பெற்றோர் / பாதுகாவலர் உங்களைச் சந்திப்பாராயின் அது தொடர்பாக அவர்களுக்கு அறிவுரை வழங்கவும்.
- எழுத்து, வாசிப்புத் தொடர்பான கற்பித்தலுக்கு ஆசிரியர்கள் பொறுப்பேற்றுக்கொள்ளுதல் வேண்டும். அவை தொடர்பாக வீட்டுவேலைகளை வழங்குவதாயின் எழுத்து மூலமாக வழங்குவதுடன் உச்சரிப்புப் போன்றவற்றைச் சரியான முறையில் பிள்ளைகளுக்குச் சொல்லிக் கொடுப்பதற்கும் அறிவுரை வழங்கவும்.
- ஒப்படைக்கப்பட்டுள்ள வீட்டுவேலைகளைச் செய்யும் விதத்தைக்கொண்டும் பிள்ளையைக் கணிப்பிட முடியும்.

# பாடத்திட்டம்

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_1$ $S_1$ | $L_1$ கிரகித்துத் துலங்குவதற்காகச் செவிமடுப்பார். | $L_1$<br>• பேசுவதைச் செவிமடுத்தல்<br>• படம் பார்த்துப் பேசுவதைச் செவிமடுத்தல்<br>• கதை சொல்வதைச் செவிமடுத்தல்<br>• காட்சிப்படங்கள், கதைப் படங்களைப் பார்த்து சொல்வதைச் செவிமடுத்தல்<br>• ஒலி வேறுபாட்டுச் சொற்கள்<br>• ஒருமை, பன்மைச் சொற்கள் |
| | $S_1$ விளக்கத்துடன், தெளிவான உச்சரிப்புடன் கருத்துப் புலப்படப் பேசுவார். | $S_1$<br>• சுயமாகப் பேசுதல்<br>• படம் பார்த்துப் பேசுதல்<br>• சுயமாகக் கதை சொல்லல்<br>• காட்சிப் படங்களைப் பார்த்து கதை கூறுதல்<br>• கதைப் படங்களைப் பார்த்து கதை கூறுதல்<br>• ஒலி வேறுபாட்டுச் சொற்கள்<br>• ஒருமை, பன்மைச் சொற்கள் |
| $R_1$ $W_1$ | $R_1$ வாசிப்புப் பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார். | $R_1$<br>• வாசிப்பதற்கான நுட்பப் பயிற்சிகள்<br>• கதைப் படங்களை வாசித்தல்<br>• சொற்களை வாசித்தல்<br>• சிறிய வாக்கியங்களை வாசித்தல்<br>• ஒலி வேறுபாட்டுச் சொற்கள்<br>• ஒருமை, பன்மைச் சொற்களை வாசித்தல் |
| | $W_1$ எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார். | $W_1$<br>• எழுதுவதற்கான நுட்பப் பயிற்சிகள்<br>- சரியான கொண்ணிலையில் அமரும் பயிற்சி<br>- சரியாகப் பென்சில் பிடிக்கும் பயிற்சி<br>- அப்பியாசக் கொப்பியை வைத்திருந்து எழுதும் பயிற்சி<br>• காட்சிப்படங்களைப் பார்த்துச் சிறிய வாக்கியங்கள் எழுதுதல்<br>• ஒளிப்படங்களைப் பார்த்து சொற்களை எழுதுதல்<br>• கதைப்படங்களைப் பார்த்துச் சிறிய வாக்கியங்கள் எழுதுதல்<br>• ஒலி வேறுபாட்டுச் சொற்கள்<br>• ஒருமை, பன்மைச் சொற்கள் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_2$ $S_2$ $R_2$ $W_2$ | $L_2$ செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_2$ • சொற்கள்<br>- ஒத்த கருத்துச் சொற்கள்<br>- எதிர்க் கருத்துச் சொற்கள்<br>- எதிர்ப்பாற் சொற்கள்<br>- அடைமொழிகள்<br>• வாக்கியங்கள் (காலங்கள்)<br>• நிறுத்தக் குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி) |
| | $S_2$ பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார். | $S_2$ • சொற்கள்<br>- ஒத்த கருத்துச் சொற்கள்<br>- எதிர்க் கருத்துச் சொற்கள்<br>- எதிர்ப்பாற் சொற்கள்<br>- அடைமொழிகள்<br>• வாக்கியங்கள் (காலங்கள்)<br>• நிறுத்தக் குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி) |
| | $R_2$ வாசித்தல் திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார். | $R_2$ • சொற்கள்<br>- ஒத்த கருத்துச் சொற்கள்<br>- எதிர்க் கருத்துச் சொற்கள்<br>- எதிர்ப்பாற் சொற்கள்<br>- அடைமொழிகள்<br>• வாக்கியங்கள் (காலங்கள்)<br>• நிறுத்தக் குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி) |
| | $W_2$ எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார். | $W_2$ • சொற்கள்<br>- ஒத்த கருத்துச் சொற்கள்<br>- எதிர்க் கருத்துச் சொற்கள்<br>- எதிர்ப்பாற் சொற்கள்<br>• வாக்கியங்கள் (காலங்கள்)<br>• நிறுத்தக் குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி) |
| $L_3$ $S_3$ | $L_3$ விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார். | $L_3$ • சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• விரல் பொம்மை உரையாடல்கள்<br>• போலச் செய்தல் (தனி நடிப்பு)<br>• காணொளிகள் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| $R_3$ $W_3$ | $S_3$ விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாகப் பேசுவார். | $S_3$ • சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• விரல் பொம்மை உரையாடல்<br>• போலச் செய்தல்<br>• காணொளிகள் |
| | $R_3$ விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார். | $R_3$ • சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• விரல் பொம்மை உரையாடல்கள்<br>• போலச் செய்தல் (தனி நடிப்பு)<br>• காணொளிகள்<br>• சித்திரங்கள் |
| | $W_3$ விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார்/வரைவார். | $W_3$ • சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் கதைகள்<br>• விரல் பொம்மை உரையாடல்கள்<br>• போலச் செய்தல் (தனி நடிப்பு)<br>• காணொளிகள் (சொற்கள்)<br>• சித்திரங்கள் |
| $L_4$ $S_4$ $R_4$ $W_4$ | $L_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_4$ • நூலகத்துடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்<br>- தகவல்கள்<br>- சுய விபரம் |
| | $S_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார். | $S_4$ • நூலகத்துடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்<br>- தகவல்கள்<br>- சுய விபரம் |
| | $R_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார். | $R_4$ • நூலகத்துடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்<br>- தகவல்கள்<br>- சுய விபரம் |
| | $W_4$ நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார். | $W_4$ • நூலகத்துடன் தொடர்புடைய<br>- அறிவித்தல்கள்<br>- அறிவுறுத்தல்கள்<br>- கட்டளைகள்<br>- தகவல்கள்<br>- சுய விபரம் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_5$ $S_5$ $R_5$ $W_5$ | $L_5$ சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார். | $L_5$ • சிறிய கட்டுரைகள்<br>• மரபுச் சொற்கள்<br>• விடுகதைகள்<br>• குறியீடுகள்(விளக்கம்)<br>• சொல்வதெழுதுதல் |
| | $S_5$ சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார். | $S_5$ • சிறிய கட்டுரைகள்<br>• மரபுச் சொற்கள்<br>• விடுகதைகள்<br>• குறியீடுகள்(விளக்கம்)<br>• சொல்வதெழுதுதல் |
| | $R_5$ சொற்களஞ்சியஷ விருத்திக்காக வாசிப்பார். | $R_5$ • சிறிய கட்டுரைகள்<br>• மரபுச் சொற்கள்<br>• விடுகதைகள்<br>• குறியீடுகள்(விளக்கம்)<br>• சொல்வதெழுதுதல் |
| | $W_5$ சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார். | $W_5$ • சிறிய கட்டுரைகள் (வாக்கியம்)<br>• மரபுச் சொற்கள்<br>• விடுகதைகள்<br>• குறியீடுகள் (விளக்கம்)<br>• சொல்வதெழுதல் |
| $L_6$ $S_6$ | $L_6$ தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார். | $L_6$ • விளையாட்டுக் கடை(மாதிரி)<br>• நூலகம் (உரையாடல்)<br>• வானொலி / தொலைக்காடசி (செய்தி வாசித்தல் / நேர்முக வர்ணனை) |
| | $S_6$ தொடர்பாடலுக்காகப் பேசுவார். | $S_6$ • விளையாட்டுக் கடை (மாதிரி)<br>• நூலகம் (உரையாடல்)<br>• வானொலி / தொலைக்காடசி ( செய்தி வாசித்தல் / நேர்முக வர்ணனை) |
| $R_6$ $W_6$ | $R_6$ தொடர்பாடலுக்காக வாசிப்பார். | $R_6$ • பொது இடங்கள்(பெயர்கள்)<br>• காலநிலை அறிக்கை<br>• ஒட்டிகள் (லேபல்கள்) |
| | $W_6$ தொடர்பாடலுக்காகச் எழுதுவார். | $W_6$ • பொது இடங்கள்(பெயர்கள்)<br>• காலநிலை அறிக்கை<br>• ஒட்டிகள் (லேபல்கள்) |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | $L_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார். | $L_7$ <br>• காட்சிப் படங்கள்<br>• சுயசரிதை<br>• உலகநீதி (தெரிவு செய்யப்பட்ட)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |
| | $S_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார். | $S_7$ <br>• காட்சிப் படங்கள்<br>• சுயசரிதை<br>• உலகநீதி (தெரிவு செய்யப்பட்ட)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |
| | $R_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார். | $R_7$ <br>• காட்சிப் படங்கள்<br>• சுயசரிதை<br>• உலகநீதி (தெரிவு செய்யப்பட்ட)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |
| | $W_7$ மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார். | $W_7$ <br>• காட்சிப் படங்கள்<br>• சுயசரிதை<br>• உலகநீதி (தெரிவு செய்யப்பட்ட)<br>• கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)<br>• பண்டிகைகள் |
| $L_8$ $S_8$ $R_8$ $W_8$ | $L_8$ கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார். | $L_8$ <br>• ஒளிப்படங்கள்<br>• வீட்டிற்கு வருகை தந்த நண்பர்கள்<br>• சுற்றுலா<br>• பசுமை உலகு |
| | $S_8$ கற்றல் விருத்திக்காகப் பேசுவார். | $S_8$ <br>• ஒளிப்படங்கள்<br>• வீட்டிற்கு வருகை தந்த நண்பர்கள்<br>• சுற்றுலா<br>• பசுமை உலகு |
| | $R_8$ கற்றல் விருத்திக்காக வாசிப்பார். | $R_8$ <br>• ஒளிப்படங்கள்<br>• வீட்டிற்கு வருகை தந்த நண்பர்கள்<br>• சுற்றுலா<br>• பசுமை உலகு |
| | $W_8$ கற்றல் விருத்திக்காக எழுதுவார். | $W_8$ <br>• ஒளிப்படங்கள்<br>• வீட்டிற்கு வருகை தந்த நண்பர்கள்<br>• சுற்றுலா<br>• பசுமை உலகு |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| $L_9$ $S_9$ $R_9$ $W_9$ | $L_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார். | $L_9$<br>• சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் நகைச்சுவைக் கதைகள்<br>• விஞ்ஞானிகள்<br>• தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| | $S_9$ கிரகித்தவற்றை ஆக்கத்திறனுடனும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறவும் பேசுவார். | $S_9$<br>• சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் நகைச்சுவைக் கதைகள்<br>• விஞ்ஞானிகள்<br>• தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| | $R_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார். | $R_9$<br>• சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் நகைச்சுவைக் கதைகள்<br>• விஞ்ஞானிகள்<br>• தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |
| | $W_9$ கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார். | $W_9$<br>• சிறுவர் பாடல்கள்<br>• சிறுவர் நகைச்சுவைக் கதைகள்<br>• விஞ்ஞானிகள்<br>• தகவல்கள் (பிராணிகள்)<br>• சிறுவர் இணையத்தளங்கள்<br>• சிறுவர் சஞ்சிகைகள்<br>• சிறுவர் நூல்கள் |

| திறன்கள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| $L_{10}$ $S_{10}$ $R_{10}$ $W_{10}$ | $L_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகச் செவிமடுப்பார். | $L_{10}$ • ஒளிப் படங்கள்<br>• படிப்பினை தரும் கதைகள்<br>• இணையத் தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |
| | $S_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகப் பேசுவார். | $S_{10}$ • ஒளிப் படங்கள்<br>• படிப்பினை தரும் கதைகள்<br>• இணையத் தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |
| | $R_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார். | $R_{10}$ • ஒளிப் படங்கள்<br>• படிப்பினை தரும் கதைகள்<br>• இணையத் தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |
| | $W_{10}$ நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார். | $W_{10}$ • ஒளிப் படங்கள்<br>• படிப்பினை தரும் கதைகள்<br>• இணையத் தளங்கள்<br>• மொழிப் பயிற்சிகள் |

# தாய்மொழி தமிழ்
## ஆண்டுத் திட்டம்

| முதலாந் தவணை | | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 01. | $L_1$ $S_1$ $R_1$ $W_1$ | |
| 02. | $L_2$ $S_2$ $R_2$ $W_2$ | |
| 03. | $L_3$ $S_3$ $R_3$ $W_3$ | |

| | இரண்டாந் தவணை | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 04. | $L_4$ $S_4$ $R_4$ $W_4$ | |
| 05. | $L_5$ $S_5$ $R_5$ $W_5$ | |
| 06. | $L_6$ $S_6$ $R_6$ $W_6$ | |
| 07. | $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | |

| மூன்றாந் தவணை | | |
|---|---|---|
| | தேர்ச்சிகள் | உத்தேச காலம் |
| 08. | $L_8$ $S_8$ $R_8$ $W_8$ | |
| 09. | $L_9$ $S_9$ $R_9$ $W_9$ | |
| 10. | $L_{10}$ $S_{10}$ $R_{10}$ $W_{10}$ | |

# கற்றல் - கற்பித்தற் செயன்முறைக்குரிய வழிகாட்டல்

# 1

**தேர்ச்சிகள் :**

**$L_1$** - கிரகித்துத் துலங்குவதற்காகச் செவிமடுப்பார்.

**$S_1$** - விளக்கத்துடனும் தெளிவான உச்சரிப்புடனும் கருத்துப் புலப்படப் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- சுயமாகப் பேசுதல்
- மற்றவர்கள் பேசுவதைச் செவிமடுத்தல்
- படம் பார்த்துப் பேசுதல்
- படம் பார்த்துப் பேசுவதைச் செவிமடுத்தல்
- கதைப் படங்களைப் பார்த்துச் சுயமாகக் கதை சொல்லுதல்
- கதைப் படங்களைப் பார்த்துக் கதை சொல்வதைச் செவிமடுத்தல்
- ஒலி வேறுபாட்டுச் சொற்கள்
- ஒருமை, பன்மைச் சொற்கள்

**கற்றற்பேறுகள் :**

- சுயமாகப் பேசுவதற்குத் தாமாக முன்வருவார்.
- மற்றவர்கள் பேசுவதைச் செவிமடுப்பார்.
- படம் பார்த்துப் பேசுவதுடன் மற்றவர்கள் படம் பார்த்துப் பேசுவதையும் செவிமடுப்பார்.
- தாம் செவிமடுத்த கதைகளைப் புரிந்து கொண்டு முன்வைப்பார்.
- கதைப் படங்களைப் பார்த்து, தமது பாணியில் சுயமாகக் கதை சொல்வார்.
- ஒலி வேறுபாடுகளைப் புரிந்து கொண்டு, சொற்களை, கருத்துக்களை உரிய முறையில் தெளிவுற வெளிப்படுத்துவார்.
- ஒருமை, பன்மை வேறுபாடுகளை இனங்கண்டு உரிய முறையில் பிரயோகிப்பார்.

**வளங்கள் :**

- பட அட்டைகள், காட்சிப்பட அட்டைகள், கதைப்பட அட்டைகள், கத்தரிக்கோல், இரண்டு பக்கமும் ஒட்டக்கூடிய செலோரேப், ஒட்டும் பலகை, செருகல் அட்டைப் பலகை, பெட்டிகள், நிறப் பென்சில்கள், நிறப் பேனைகள்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

செயற்பாடு 1

- மாணவர்களை வெளியே அழைத்துச் செல்லுங்கள்.

  (பாடசாலைச் சுற்றுப்புறமே புதியவற்றைக் கண்டறிவதற்கும் ஆராய்ந்து நோக்குவதற்கும் சிறந்த இடமாகத் திகழ்கிறது.)

- பாடசாலையின் சுற்றுப்புறத்தைப் பார்வையிடச் சந்தர்ப்பமளியுங்கள்.

- மரங்கள், கற்கள், பாறைகள், தெருக்கள், மண், பறவைகள், கூடுகள், தேன்கூடுகள், மலர்கள், வண்ணத்துப்பூச்சிகள், திறந்தவெளி, நீர்க்குழாய், நீர்த்தாங்கி, சாளரங்கள், கதவுகள் போன்றவை பற்றி உற்றுநோக்கிப் பார்த்த விடயங்கள் தொடர்பாகக் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களைச் சிறிய குழுக்களாக்கி, தாம் சுற்றுப்புறத்தில் பார்த்த விடயங்கள் பற்றிக் கூறுவதற்கு ஆர்வமூட்டுங்கள்.

  (ஒவ்வொருவரும் தாம் பார்த்தவை பற்றி வித்தியாசமாகக் கூறுவதை ஆசிரியர் அவதானிக்க முடியும்.)

*குறிப்பு:* இச்செயற்பாடு சுயமாகப் பேசுவதற்கான ஆர்வத்தைத் தூண்டுவதோடு மகிழ்ச்சியான கற்றலுக்கான ஆரம்பமாகவும் அமைகிறது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

செயற்பாடு 2

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- காட்சிப்படமொன்றை ஒட்டுப் பலகையில் பெரிதாகக் காட்சிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு:*



- மாணவர்களை ஒவ்வொருவராக அழைத்து, அக்காட்சிப்படத்தைப் பார்த்து அதில் உள்ளவற்றைக் கூறுமாறு ஊக்கப்படுத்துங்கள்.
- எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- காட்சிப்படத்தைக் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்பப் பிரித்தெடுத்து ஒவ்வொரு குழுவுக்கும் ஒன்று வீதம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவினரும் காட்சிப்படத்தைப் பார்த்து, தமக்கிடையே அவற்றில் உள்ளவற்றைக் கூற ஆர்வமூட்டுங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் சென்று சிறிது நேரம் அவர்களுடன் அமர்ந்து காட்சிப்படம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.

செயற்பாடு 3:

- மாணவர்களிடம் தம்மிடம் உள்ள தரம் 3 பாடநூலின் முதலாம் பக்கத்திலுள்ள படத்தினைப் பார்க்குமாறு கூறுங்கள்.
- அப்படத்திலுள்ள பிராணிகளை அவதானிப்பதற்கு ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர், மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- குழுக்களுக்கிடையே பாடநூலில் காணப்படும் (முதலாம் பக்கம்) படத்திலுள்ள பிராணிகளை இனங்கண்டு கூறுவதற்கு ஊக்கப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவாக வகுப்பின் முன் அழைத்து, படத்திலுள்ள பிராணிகளின் பெயர்களை உரத்துக் கூறுமாறு அறிவுறுத்துங்கள்.

செயற்பாடு 4:

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- ஒளிப்படக்கருவி (கமெரா) மூலம் எடுக்கப்பட்ட ஒளிப்படம் ஒன்றைப் பிரதியெடுத்து A4 வடிவிலான வெண்பலகையில் காட்சிப்படுத்துங்கள். (இயற்கையுடன் இணைந்த காட்சியாக இருப்பது சிறந்தது) படத்திற் காட்டப்பட்டுள்ளவாறான (A4 வடிவிலான) வெண்பலகையை பெற்றோர்களின் உதவியுடன் தயாரித்துக் கொள்ளுங்கள். குழுச் செயற்பாட்டின் போது இவ்வாறான வெண்பலகைகள் பெரிதும் துணைபுரியும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

*எடுத்துக்காட்டு:*



- அப்படத்தைப் பார்த்து மாணவர்கள் குழுவாக உரையாடச் சந்தர்ப்பமளியுங்கள்.
- குழுக் கலந்துரையாடலின்போது ஆசிரியரும் இணைந்துகொள்ள முடியும்.
- ஒவ்வொரு குழுவாக அழைத்துக் காட்சி பற்றி வகுப்பின் முன் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- இறுதியாக ஆசிரியர் காட்சிப்படம் பற்றிக் கூறுங்கள்.

செயற்பாடு 5

- கதைப் படத்தைப் பார்த்துச் சுயமாகக் கதை சொல்வதற்காகப் பாடநூலில் உள்ள (பக்கம் 2 - 4) கதைப் படங்களைப் பெரிதாகப் பிரதியெடுத்துக் காட்சிப்படுத்துங்கள்.
- பாடநூலில் 2 முதல் 4 வரையுள்ள பக்கங்களில் காணப்படும் கதைப் படங்களை மாணவர்கள் தனித்தனியாகப் பார்வையிடச் சந்தர்ப்பமளியுங்கள்.

- அதன் பின்னர் எழுமாறாகச் சில மாணவர்களை அழைத்து காட்சிப்படுத்தப்பட்டுள்ள கதைப் படங்களைப் பார்த்து தமது பாணியில் கதை சொல்ல ஆர்வமூட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு:*




ஒளிப்படங்கள்: வி.என்.எஸ்.உதயசந்திரன்

- அதன் பின்னர் மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- குழுவிலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வோர் கதைப்படங்களைப் பற்றிக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள். (கதை ஒழுங்கில்)
- மாணவர்களின் ஆக்கத்திறன் வெளிப்படும் வகையில் அவர்களை ஊக்குவியுங்கள்.

செயற்பாடு 6:

- மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப பாடப்புத்தகத்திலுள்ள கதைப் படங்களைப் பிரதியெடுத்துக் கொள்ளுங்கள்.
- அவற்றைத் தனித்தனியாக அட்டைகளில் ஒட்டிக்கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் ஆறு பட அட்டைகள் கிடைக்கக்கூடிய வகையில் பெட்டியில் இட்டு வழங்குங்கள். (ஒரு குழுவில் அறுவர் இடம்பெறுதல் வேண்டும்)
- குழுக்களில் உள்ளவர்கள் இப்பெட்டிகளில் இருந்து ஒவ்வொரு அட்டையை எடுத்துக்கொள்ள வேண்டும். அதன் பின்னர் கதை ஒழுங்கில் நிரையாக நின்றுகொள்ள வேண்டும்.
- அதன் பின்னர், கைகளில் உள்ள பட அட்டைகளை உயர்த்திப் பிடித்துக்கொண்டு தமது அட்டையில் உள்ள படம் பற்றி விபரித்துக் கூறுதல் வேண்டும்.

*எடுத்துக்காட்டு:*



- இதுபோன்று எல்லாக் குழுக்களும் நிரையாக நின்று கதையைக் கூறி முடிக்க வேண்டும்.

செயற்பாடு 7:

- ஒலி வேறுபடும் சொற்களை (ல, ள, ழ) மாணவர்கள் அறிந்துகொள்வதற்காகப் பின்வருமாறு அட்டைக் கீலங்களாக எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

  எடுத்துக்காட்டு: **லகர, ளகர, ழகர** வேறுபாட்டுச் சொற்கள்

**1.**

| | |
|---|---|
| பலம் | பழம் |

**2.**

| | |
|---|---|
| மலை | மழை |

**3.**

| | | |
|---|---|---|
| கிலி | கிளி | கிழி |

**4.**

| | | |
|---|---|---|
| ஒழி | ஒளி | ஒலி |

**5.**

| | | |
|---|---|---|
| அலகு | அளகு | அழகு |

**6.**

| | | |
|---|---|---|
| வலி | வளி | வழி |

**7.**

| | | |
|---|---|---|
| வாழ் | வாள் | வாழ் |

**8.**

| | |
|---|---|
| வெல்லம் | வெள்ளம் |

- அட்டைக் கீலங்களில் எழுதப்பட்டுள்ள லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்களை வாசித்துக் காட்டுங்கள். மாணவர்கள் பயிற்சி பெறும்வரை மாணவர்களுடன் சேர்ந்து மேற்குறிப்பிட்ட சொற்களை உச்சரியுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களை நால்வர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஆசிரியர், அட்டைக் கீலங்களில் எழுதியுள்ள சொற்களைத் தம்மிடையே உச்சரித்துக் கூற ஆர்வமூட்டுங்கள். **ல, ள, ழ** வேறுபாடுகளைச் சரியாகப் புரிந்துகொண்டு உச்சரிக் கிறார்களா என அவதானியுங்கள்.

செயற்பாடு 8:

- மாணவர்களுக்கு ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களை அறிமுகஞ் செய்யுங்கள். பின்வருமாறு அட்டைக் கீலங்களில் ரகர, றகர வேறுபாட்டுச் சொற்களை எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அரம் | அறம் | 5. | கூரை | கூறை |
| 2. | அரை | அறை | 6. | நிரை | நிறை |
| 3. | கரி | கறி | 7. | பாரை | பாறை |
| 4. | கரை | கறை | 8. | உரை | உறை |

- மேற்குறிப்பிட்ட சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்துக்காட்டுங்கள். மாணவர்கள் பயிற்சி பெறும்வரை அவர்களுடன் சேர்ந்து நீங்களும் உரத்து உச்சரியுங்கள். உச்சரிக்கும் போது மாணவர்களின் முகத்தை உற்றுநோக்குங்கள். சரியாக உச்சரிக்கின்றார்களா என அவதானியுங்கள். அதன் பின்னர் எழுமாறாக மாணவர்களை அழைத்து ஆசிரியர் கூறும் சொற்களைச் சரியாக உச்சரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களைக் குழுக்களாக்கி தமக்கிடையே மேற்குறிப்பிட்ட சொற்களைச் சரியாக உச்சரிக்கிறார்களா என அவதானியுங்கள்.

செயற்பாடு 9:

- மாணவர்களுக்குக் கீழ்வரும் னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களை அறிமுகஞ் செய்யுங்கள்.
- னகர, ணகர வேறுபாடுகளை உணராது சொற்பிரயோகம் செய்வதனால் ஏற்படும் பிழைகளை நீக்க இப்பயிற்சி பெரிதும் உதவும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | அன்னம் | அண்ணம் | 5. | கனை | கணை |
| 2. | ஆனி | ஆணி | 6. | பனி | பணி |
| 3. | ஊன் | ஊண் | 7. | மனம் | மணம் |
| 4. | என் | எண் | 8. | வானம் | வாணம் |

- மேற்குறிப்பிட்டவாறு சொற்களை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவற்றை மாணவர்களுக்குச் சரியாக உச்சரித்துக் காட்டுங்கள். மாணவர்கள் சரியாக உச்சரிக்கும் வரை அவர்களுடன் சேர்ந்து உச்சரியுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களை நால்வர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களிடையே மேற்குறிப்பிட்ட சொற்களை உச்சரிக்க வழிப்படுத்துங்கள்.

- அதன் பின்னர் ஒவ்வொரு குழுவிற்கும் சென்று னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களைச் சரியாக உச்சரிக்கிறார்களா என அவதானியுங்கள்.
- இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

**செயற்பாடு 10:**

- மாணவர்களுக்குப் பின்வரும் ஒருமை, பன்மைச் சொற்களை அறிமுகஞ் செய்யுங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பழம் | பழங்கள் | 2. | கிளி | கிளிகள் |
| 3. | குதிரை | குதிரைகள் | 4. | புத்தகம் | புத்தகங்கள் |
| 5. | மரம் | மரங்கள் | 6. | முட்டை | முட்டைகள் |
| 7. | பறவை | பறவைகள் | 8. | மான் | மான்கள் |

- மேலே தரப்பட்டுள்ள ஒருமை, பன்மைச் சொற்களை அட்டைகளில் எழுதி, ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- மாணவர்களுடன் சேர்ந்து அச்சொற்களை உச்சரியுங்கள்.
- அதன் பின்னர் அச்சொற்களை வைத்து வாக்கியங்கள் அமைத்துக் காட்டுங்கள்.
- நீங்கள் அமைத்த வாக்கியங்களை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

குதிரை - குதிரை வேகமாக ஓடியது.

குதிரைகள் - குதிரைகள் வேகமாக ஓடின.

- இவ்வாறு மாணவர்கள் ஒருமை, பன்மைச் சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை அமைத்துக் கூற வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களுடன் சேர்ந்து வாக்கியங்கள் அமையுங்கள்.
- மாணவர்களை எழுமாறாக அழைத்து அவர்களுடன் சேர்ந்து ஒருமை, பன்மை வாக்கியங்களை அமையுங்கள்.
- மேலே தரப்பட்டுள்ள ஒருமை, பன்மைச் சொற்களுக்கு வாக்கியங்கள் அமைக்க மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

**கணிப்பீடு:**

- சுயமாகப் பேச முன்வருதல்
- மற்றவர்கள் பேசுவதைச் செவிமடுத்தல்
- படம் பார்த்துப் பேசுதல்
- சுயமாகக் கதை சொல்லல்
- கதைப் படங்களைப் பார்த்துக் கதை சொல்லல்
- ஒலி வேறுபாட்டுச் சொற்களை இனங்காணல்
- ஒருமை பன்மைச் சொற்களைக் கூறுதல்
- வினாக்களுக்கு விடையளித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள்:**

**$R_1$** - வாசிப்பு பொறிமுறைகளை அனுசரித்து வாசிப்பார்.

**$W_1$** - எழுத்துப் பொறிமுறைகளை அனுசரித்து எழுதுவார்.

**உள்ளடக்கம்:**

- எழுதுவதற்கான நுட்பப் பயிற்சிகள்
  - சரியான கொண்ணிலையில் அமரும் பயிற்சி
  - சரியாகப் பென்சில் பிடிக்கும் பயிற்சி
  - சரியாக அப்பியாசக் கொப்பியை வைத்திருந்து எழுதும் பயிற்சி
- காட்சிப் படங்களைப் பார்த்து சிறிய வாக்கியங்கள் எழுதுதல் (ஒற்றை றூள் கொப்பியில்)
- ஒளிப்படங்களைப் பார்த்து சிறிய வாக்கியங்கள் எழுதுதல் (ஒற்றை றூள் கொப்பியில்)
- கதைப் படங்களைப் பார்த்து சிறிய வாக்கியங்கள் எழுதுதல் (இறந்த காலத்தில்)
- ஒலி வேறுபாட்டுச் சொற்களை எழுதுதல்
- ஒருமை பன்மைச் சொற்களை எழுதுதல்

**கற்றற்பேறுகள்:**

- சரியான கொண்ணிலையில் அமர்ந்து முறைப்படி பென்சிலைப் பிடித்து, சரியான முறையில் கொப்பியை வைத்து எழுதுவார்.
- காட்சிப் படங்களைப் பார்த்துச் சிறிய வாக்கியங்களைப் பிழையின்றி எழுதி வாசிப்பார்.
- ஒளிப் படங்களைப் பார்த்து சிறிய வாக்கியங்களைப் பிழையின்றி எழுதி வாசிப்பார்.
- சிறிய வாக்கியங்களை அளவு, திசைமுகம், உறுப்பு, நேர்த்தி, முழுமை என்பவற்றை அனுசரித்துச் சீரான முறையில் உறுப்பமைய எழுதுவார்.
- ஒலி வேறுபாட்டுச் சொற்களை இனங்கண்டு உரிய முறையில் பிரயோகிப்பார்.
- ஒருமை பன்மைச் சொற்களைச் சரியான முறையில் பிரயோகிப்பார்.

**வளங்கள்:**


- ஒளிப்படங்கள், பட அட்டைகள், ஒருமை பன்மைப் பட அட்டைகள், கதைப்பட அட்டைகள், ஒற்றை றூள் கொப்பி, ஒலி வேறுபாட்டுச் சொல் அட்டைகள், சிறிய பெட்டிகள், அட்டைக் கீலங்கள். A4 வடிவிலான வெண்பலகைகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**


செயற்பாடு 1

- முதன்மை நிலை ஒன்றில், மாணவர்களுக்கு அமர்வதற்கும், பென்சிலைப் பிடிப்பதற்கும், கொப்பியைச் சரியான முறையில் மேசையில் வைத்து எழுதுவதற்கும் முதன்மை நிலை ஒன்றிற்குப் பொறுப்பான ஆசிரியர் பயிற்சியளித்திருப்பார். எனவே அப்பயிற்சியை தரம் மூன்றிற்குப் பொறுப்பான ஆசிரியரும் செயற்படுத்த வேண்டும். மாணவர்களை அவதானியுங்கள். சரியான கொண்ணிலையில் அமராத மாணவர்களை அழைத்து விசேட பயிற்சிகளை வழங்குங்கள். எல்லா மாணவர்களுக்கும் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**பயிற்சி 1 சரியான கொண்ணிலையில் அமர்தல்**




**பயிற்சி 1 பென்சிலை உரியவாறு பிடித்தல்**




பென்சிலை நடுவிரல், சுட்டுவிரல், பெருவிரல் ஆகிய மூன்று விரல்களாலும் பிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதோடு அதற்கான பயிற்சியையும் வழங்குங்கள்.


**பயிற்சி 3 அப்பியாசக் கொப்பியை வைத்திருக்கும் முறை**



- மாணவர்கள் எவ்வாறு அப்பியாசக் கொப்பியை வைத்திருக்கிறார்கள் என அவதானியுங்கள். சரியான முறையில் அப்பியாசக் கொப்பிகளை வைத்து எழுதுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.மேற்குறிப்பிட்ட மூன்று பயிற்சிகளும் மாணவர்களின் எழுதும் திறனை விருத்தி செய்ய உறுதுணையாக அமையும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

செயற்பாடு 2

- மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப காட்சிப் படமொன்றை A4 தாளில் பிரதியெடுத்துக் கொள்ளுங்கள். அக்காட்சிப் படங்களை அட்டைகளில் ஒட்டி மாணவர் குழுக்களுக்கு வழங்குங்கள்.



- காட்சிப்படத்தைப் பார்த்து அதிலுள்ள பிராணிகளின் பெயர்களைக் கூற மாணவர்களுக்கு ஆர்வமூட்டுங்கள்.
- மாணவர்கள் கூறிய பிராணிகளின் பெயர்களைக் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுங்கள்.

*எடுத்துக்காட்டு :*

1. யானை 2. சிங்கம் 3. ஒட்டகச்சிவிங்கி 4. வரிக்குதிரை

- அப்பெயர்களை அப்பியாசக் கொப்பியில் பார்த்து எழுதுமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- எழுதிய சொற்களை மாணவர்கள் வாசிப்பதற்கு ஆர்வமூட்டுங்கள். இடர்ப்படும் மாணவர் களுக்கு அச்சந்தர்ப்பத்திலேயே பரிகாரக் கற்பித்தலை மேற்கொள்ளுங்கள்.
- அதன் பின்னர் காட்சிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் சிறிய வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள். வாக்கியங்களை எழுதி முடித்ததும் முற்றுப்புள்ளி இட வழிகாட்டுங்கள்.

(வாக்கியம் ஒன்றை எழுதியதன் பின்னர் முற்றுப்புள்ளி இடவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திக் கூறுங்கள்)

*எடுத்துக்காட்டு:* வாக்கியங்கள்

1. காண்டாமிருகம் ஒன்று வருகிறது.
2. சிங்கம் படுத்திருக்கிறது.
3. ஒட்டகச்சிவிங்கி பார்க்கிறது.
4. யானை தும்பிக்கையை அசைக்கிறது.
5. வானத்தில் பறவைகள் பறக்கின்றன.


- எழுதிய வாக்கியங்களுக்கு முற்றுப்புள்ளி இடப்பட்டுள்ளதா என்பதை அவதானியுங்கள்.
- அப்பியாசக் கொப்பியில் எழுதிய வாக்கியங்களை வாசித்துக்காட்ட மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

*குறிப்பு :* பாடநூலிலுள்ள “அந்த இடம்” என்ற பாடத்தில் உள்ள படங்களைப் பிரதிசெய்து மாணவர்களுக்கு வழங்குங்கள்

செயற்பாடு 3

- கமெரா மூலம் பிடித்த ஒளிப்படங்களை (காட்சிகளை) அல்லது இணையத்தில் இருந்து பெற்ற ஒளிப்படங்களை (காட்சிகளை) மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு :*



- காட்சிப்படுத்திய ஒளிப்படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களைக் கூறவும் எழுதவும் வழிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு :*

  1. தேயிலைத் தோட்டம் பச்சைப் பசேலென்று காட்சி தருகின்றது.
  2. ..........................................................................................................................
  3. ..........................................................................................................................
  4. ..........................................................................................................................

- எழுதிய வாக்கியங்களை வகுப்பின் முன் வந்து பிழையின்றி வாசித்துக் காட்ட மாணவர்களை ஆர்வமூட்டுங்கள்.

செயற்பாடு 4

- கதைப்படங்களைப் பார்த்து சிறிய வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள். தரம் 3 பாடநூலிலுள்ள அணில் பற்றிய கதைப்படங்களைப் (பக்கம் 2-4) பிரதியெடுத்து மாணவர் குழுக்களுக்கு வழங்குங்கள். (ஒவ்வொரு குழுவிலும் ஐவர் இடம்பெறுதல் வேண்டும்)
- குழுவாக மாணவர்கள் கலந்துரையாடிச் சிறிய வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள். (கதைப்படங்களைப் பார்த்து வாக்கியங்களை எழுதும்போது இறந்த காலத்தில் எழுத மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.)

  *எடுத்துக்காட்டு :*



ஒளிப்படங்கள்: வி.என்.எஸ்.உதயசந்திரன்

குறிப்பு : இதுபோன்ற வேறு கதைப்படங்களை ஆக்கி மாணவர்களுக்கு வழங்கும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு. தெரிவு செய்யும் கதைப்படங்கள் தரம் மூன்று மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும் என்பதனை நினைவிற் கொள்ளுங்கள்.

செயற்பாடு 5

- மாணவர்களுக்கு, தெரிவுசெய்த ஒலி வேறுபாட்டுச் சொற்களை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவற்றை வாசித்துக் காட்டுங்கள்.

**லகர, ளகர, ழகர வேறுபாடு**

| | | | |
|---|---|---|---|
| 1. | பலம் | பழம் | |
| 2. | மலை | மழை | |
| 3. | கிலி | கிளி | கிழி |
| 4. | ஒலி | ஒளி | ஒழி |
| 5. | அலகு | அளகு | அழகு |
| 6. | வலி | வளி | வழி |
| 7. | வால் | வாள் | வாழ் |
| 8. | வெல்லம் | வெள்ளம் | |

- மேலே தரப்பட்டுள்ளவாறு அட்டைக்கீலங்களில் (மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப) எழுதிக்கொள்ளுங்கள். அவற்றைத் தட்டு ஒன்றில் இட்டு ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- அட்டைக்கீலங்களில் எழுதப்பட்டுள்ள **லகர, ளகர, ழகர** ஒலி வேறுபாட்டுச் சொற்களைச் சரியாக உச்சரித்து வாசிக்கவும் அச்சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதவும் வழிப்படுத்துங்கள். கொப்பியில் எழுதிய சொற்களைச் சரியாக வாசித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 6

- ஏற்கனவே அறிமுகம் செய்த **லகர, ளகர, ழகர** ஒலி வேறுபாட்டுச் சொற்களின் கருத்துக்களை அட்டையில் எழுதிக் காட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு :*

| | |
|---|---|
| **பலம்** - உறுதி | **பழம்** - கனி |

| | |
|---|---|
| **மலை** - குன்று | **மழை** - மாரி |

| | | |
|---|---|---|
| **கிலி** - பயம் | **கிளி** - பறவை | **கிழி** - கிழித்தல் |
| **ஒலி** - ஓசை | **ஒளி** - பிரகாசம் | **ஒழி** - நீக்கு/அழி |
| **அலகு** - சொண்டு | **அளகு** - கோழி | **அழகு** - அன்னம் |
| **வலி** - ஒருநோய்/ வலித்தல் | **வளி** - காற்று | **வழி** - பாதை |
| **வால்** - ஒரு உறுப்பு | **வாள்** - ஒரு ஆயுதம் | **வாழ்** - வாழ்தல் |

| | |
|---|---|
| **விளா** - ஒரு மரம் | **விழா** - கொண்டாட்டம் |

- மேற்குறிப்பிட்ட சொற்களின் கருத்தினை மாணவர்களுக்கு விளக்குக. அதன் பின்னர் **லகர, ளகர, ழகர** வேறுபாட்டுச் சொற்களையும் அவற்றின் கருத்துக்களையும் அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துக.
- அதன் பின்னர் தரப்பட்டுள்ள **லகர, ளகர, ழகர** சொற்களின் கருத்துக்களை விளக்கி வாக்கியம் அமைக்க வழிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு :*

  **மலை** - நான் மலையில் ஏறினேன்.

  **மழை** - இன்று மழை பெய்தது.

- சிறிய வாக்கியங்களை அமைத்து எழுதவும் எழுதிய பின்னர் வாசித்துக் காட்டவும் வழிப்படுத்துங்கள்.

  (வாக்கியங்களை எழுதிய பின்னர் முற்றுப்புள்ளி இடுகின்றனரா என அவதானியுங்கள்.)

செயற்பாடு 7

- மாணவர்களுக்கு **ரகர, றகர** வேறுபாட்டுச் சொற்களைப் பின்வருமாறு அட்டைக் கீலங்களில் எழுதி அறிமுகம் செய்யுங்கள்.

1. **அரம்** - அறம்
2. **கூரை** - கூறை
3. **அரை** - அறை
4. **நிரை** - நிறை

| | | | |
|---|---|---|---|
| 5. | **கரி** - கறி | 6. | **பரவை** - பறவை |
| 7. | **கரை** - கறை | 8. | **பாரை** - பாறை |

- அறிமுகம் செய்த பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவுக்கும் 8 அட்டைக் கீலங்கள் கிடைக்கக்கூடிய வகையில் கடதாசித் தட்டுகளில் இட்டு வழங்குங்கள்.
- அட்டைக்கீலங்களில் எழுதப்பட்டுள்ள **ரகர, றகர** வேறுபாட்டுச் சொற்களை குழுவாக வாசிக்கவும் வாசித்த பின்னர் அச்சொற்களை அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுதவும் வழிப்படுத்துங்கள்.
- எழுதிய பின்னர் அச்சொற்களை வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள்.

செயற்பாடு 8

- ஏற்கனவே அறிமுகம் செய்த **ரகர, றகர** ஒலி வேறுபாட்டுச் சொற்களின் கருத்துக்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | **அரம்** | - | ஒரு ஆயுதம் | **அறம்** | - | தர்மம் |
| 2. | **அரை** | - | இரண்டில் ஒன்று | **அறை** | - | இல்லத்தின் ஒரு பகுதி |
| 3. | **கரி** | - | அடுப்புக் கரி/யானை | **கறி** | - | உணவு வகை |
| 4. | **கரை** | - | கடற்கரை | **கறை** | - | கறை படிதல் |
| 5. | **கூரை** | - | வீட்டின் மேற்பகுதி | **கூறை** | - | சேலை |
| 6. | **நிரை** | - | வரிசை | **நிறை** | - | பாரம் / நிரப்பு |
| 7. | **பரவை** | - | கடல் | **பறவை** | - | பட்சி |
| 8. | **பாரை** | - | ஒரு மீன் / ஒரு கருவி | **பாறை** | - | கற்பாறை |

- மேற்குறிப்பிட்ட சொற்களின் கருத்தினை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் எடுத்துக்காட்டுகளுடன் விளங்குங்கள்.
- அதன் பின்னர் ரகர, றகர சொற்களையும் அவற்றின் கருத்துக்களையும் அப்பியாசக் கொப்பியில் எழுதி, வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் ரகர, றகரச் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்துவதற்கு மாணவர்களுக்கு உதவுங்கள்.

*எடுத்துக்காட்டு :*

**பாரை** - அம்மா பாரை மீன் வாங்கினார்.

**பாறை** - நான் கற்பாறையில் ஏறினேன்.

- இதுபோன்ற சிறிய வாக்கியங்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள். மாணவர்கள் ரகர, றகரச் சொற்களைக் கொண்டு வாக்கியங்கள் அமைக்க வழிப்படுத்துங்கள்.
- எழுதிய வாக்கியங்களுக்கு முற்றுப்புள்ளி இடுகிறார்களா என அவதானியுங்கள். வாக்கியங்களைப் பிழையின்றி வாசிக்கிறார்களா எனவும் அவதானியுங்கள்.

செயற்பாடு 9

- மாணவர்கள் னகர, ணகர வேறுபாடுகளை அறிந்துகொள்வதற்காகவும் பிழையின்றி எழுதுவதற்காகவும் பின்வரும் சொற்களை அட்டைக்கீலங்களில் எழுதிக் காட்சிப் படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | **அன்னம்** | **அண்ணம்** | 5. | **கனை** | **கணை** |
| 2. | **ஆனி** | **ஆணி** | 6. | **பனி** | **பணி** |
| 3. | **ஊன்** | **ஊண்** | 7. | **மனம்** | **மணம்** |
| 4. | **பானம்** | **பாணம்** | 8. | **வானம்** | **வாணம்** |

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் எட்டு அட்டைக்கீலங்கள் கிடைக்கக்கூடிய வகையில் தயாரித்து காகிதத் தட்டில் இட்டு வழங்குங்கள். குழுவாக ணகர, னகர வேறுபாட்டுச் சொற்களைச் சரியாக உச்சரித்து வாசிக்கவும் அப்பியாசக் கொப்பியில் எழுதி, பின்னர் அச்சொற்களைப் பிழையின்றி வாசிக்கவும் ஊக்கப்படுத்துங்கள்.

செயற்பாடு 10

- மாணவர்களுக்கு னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களை அறிமுகப்படுத்திய பின்னர் அச்சொற்களின் கருத்துக்களையும் அறிமுகம் செய்யுங்கள்.

*எடுத்துக்காட்டு :*

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. | **அன்னம்** | - சோறு | **அண்ணம்** | - | உள்நாக்கு |
| 2. | **ஆனி** | - ஒரு மாதம் | **ஆணி** | - | இருப்பு ஆணி |
| 3. | **ஊன்** | - இறைச்சி | **ஊண்** | - | உணவு |
| 4. | **கனை** | - ஒலி | **கணை** | - | அம்பு |
| 5. | **பனி** | - குளிர் | **பணி** | - | தொழில் |
| 6. | **பானம்** | - நீராகாரம் | **பாணம்** | - | அம்பு |
| 7. | **மனம்** | - உள்ளம் | **மணம்** | - | வாசனை |
| 8. | **வானம்** | - ஆகாயம் | **வாணம்** | - | மத்தாப்பூ |

- னகர, ணகர வேறுபாட்டுச் சொற்களின் கருத்துக்களை மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் விளக்குங்கள்.
- அதன் பின்னர் அச்சொற்களையும் அச்சொற்களுக்கான கருத்துக்களையும் அப்பியாசக் கொப்பியில் எழுதுமாறு ஊக்கப்படுத்துங்கள். எழுதியவற்றை வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் **னகர, ணகர** வேறுபாட்டுச் சொற்களை வாக்கியங்களில் அமைத்து எழுத வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

ஆனி - நான் **ஆனி** மாதம் பிறந்தேன்.

ஆணி - அவன் இரும்பு **ஆணி**யை எடுத்தான்.

- மேற்குறிப்பிட்டவாறு சிறிய வாக்கியங்களை அமைத்து எழுதவும் அவ்வாக்கியங்களுக்கு முற்றுப்புள்ளி இடவும் வழிப்படுத்துங்கள்.
- அப்படத்திலுள்ள பிராணிகளின் பெயர்களை மாணவர்கள் எழுத வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 11**

- மாணவர்களுக்குப் பரிச்சயமான ஒருமை - பன்மைச் சொற்களை அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பழம் | பழங்கள் | 2. | கிளி | கிளிகள் |
| 3. | குதிரை | குதிரைகள் | 4. | புத்தகம் | புத்தகங்கள் |
| 5. | நாய் | நாய்கள் | 6. | முட்டை | முட்டைகள் |
| 7. | விமானம் | விமானங்கள் | 8. | மான் | மான்கள் |

- மேலே தரப்பட்டுள்ள ஒருமை - பன்மைச் சொற்களை மாணவர்கள் வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- அவர்கள் சரியாக உச்சரித்து வாசிக்கின்றார்களா என அவதானியுங்கள்.
- அச்சொற்களைப் பிழையின்றி அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசித்துக் காட்ட ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் மேலே தரப்பட்டுள்ள ஒருமை - பன்மைச் சொற்களை வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதிக் காட்டுங்கள். அதன் பின்னர் அட்டைக்கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு :

1. **பழம்** - பழம் வாங்கினேன்.
   **பழங்கள்** - பழங்கள் வாங்கினேன்.

2. **கிளி** - கிளி பறந்தது.
   **கிளிகள்** - கிளிகள் பறந்தன.

3. **குதிரை** - குதிரை வேகமாக ஓடியது.
   **குதிரைகள்** - குதிரைகள் வேகமாக ஓடின.

4. புத்தகம் - நான் புத்தகம் வாங்கினேன்.

புத்தகங்கள்- நாங்கள் புத்தகங்கள் வாங்கினோம்.

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- அக்குழுக்களுக்கு அட்டைக்கீலங்களை வழங்குங்கள். அவற்றைத் தமது குழுக்களிடையே வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள்.
- அதன் பின்னர் அட்டைக்கீலங்களில் எழுதப்பட்டுள்ள ஒருமை - பன்மை வாக்கியங்களை அப்பியாசக் கொப்பியில் எழுத ஆர்வமூட்டுங்கள்.
- எழுதும்போது வாக்கியங்களுக்கு முற்றுப்புள்ளி இடுகிறார்களா என அவதானியுங்கள்.
- அதன் பின்னர் பின்வருமாறான பயிற்சிகளில் ஈடுபடுத்துங்கள்.

படிமுறை 1

- கட்டமிடப்பட்ட இடங்களில் பொருத்தமான ஒருமை - பன்மைச் சொற்களை எழுதி வாக்கியங்களாக்குங்கள்.

*எடுத்துக்காட்டு:*

கோழி முட்டை இட்டது.

கோழிகள் முட்டை இட்டன.

1. மான் வேகமாக ஓடியது.

   ............. வேகமாக ஓடின.

2. நாய் குரைத்தது.

   ............ குரைத்தன.

3. விமானம் வானில் பறந்தது.

   ............... வானில் பறந்தன.

4. பென்சில் வாங்கினேன்.

   ............. வாங்கினோம்.

5. ................ வாசித்தேன்.

   ................ வாசித்தோம்.

- இதுபோன்ற மேலும் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

**படிமுறை 2**

- கீழே தரப்பட்டுள்ள ஒருமை வாக்கியங்களைப் பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுத வழிப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு:

மாலை கட்டினேன்.

மாலைகள் கட்டினோம்.

1. நாய் குரைத்தது.

..............................................

2. பானை உடைந்தது.

.............................................

3. சேவல் கூவியது.

..........................................

4. முத்திரை வாங்கினேன்.

..........................................

5. கடிதம் அனுப்பினேன்.

..........................................

- இதுபோன்ற மேலதிக பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

**கணிப்பீடு**

- எழுதுவதற்கான நுட்பங்களை அனுசரித்து எழுதுதல்
- காட்சிப் படங்களைப் பார்த்து சிறிய வாக்கியங்களை எழுதுதல்
- ஒளிப் படங்களைப் பார்த்து சிறிய வாக்கியங்கள் எழுதுதல்
- கதைப் படங்களைப் பார்த்து சிறிய வாக்கியங்கள் எழுதுதல்
- ஒலி வேறுபாடுகளை அனுசரித்து எழுதுதல்
- ஒருமை - பன்மை வாக்கியங்களை எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

# 2

**தேர்ச்சிகள் :**

$L_2$ – செவிமடுத்தல் திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.

$S_2$ – பேசுதல் திறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.

$R_2$ – வாசித்தல் திறனைச் செவிமடுப்பதற்காக வாசிப்பார்.

$W_2$ – எழுதுதல் திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- ஒத்தகருத்துச் சொற்கள்
- எதிர்க்கருத்துச் சொற்கள்
- எதிர்ப்பாற் சொற்கள் (ஆண்பால், பெண்பால்)
- அடைமொழிகள்
- வாக்கியங்கள் (காலங்கள்)
- நிறுத்தக்குறிகள் (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி)

**கற்றற்பேறுகள் :**

- ஒத்தகருத்துச் சொற்கள், எதிர்க்கருத்துச் சொற்கள், எதிர்ப்பாற் சொற்கள் ஆகியவற்றை இனங்கண்டு கொள்வார். அவற்றை உரிய வகையில் பயன்படுத்துவார்.
- அடைமொழிகளை அறிந்து அவற்றைப் பொருத்தமுற வாக்கியங்களில் பயன்படுத்துவார்.
- காலங்களை (இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்) அறிந்து, அவற்றைப் பொருத்தமுற வாக்கியங்களில் பயன்படுத்துவார்.
- வாக்கியங்களில் நிறுத்தக்குறிகளை (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி) இடுவதன் முக்கியத்துவத்தை உணர்ந்து பொருத்தமுறப் பயன்படுத்துவார்.

**வளங்கள் :**

- ஒத்தகருத்து, எதிர்க்கருத்து, எதிர்ப்பாற் சொல் அட்டைகள், வண்ண எழுதுகோல் (நிறப் பேனா), அடைமொழி வாக்கிய அட்டைகள், ஒட்டுப்பலகை, BLU TACK, இறந்தகால, நிகழ்கால, எதிர்கால வாக்கிய அட்டைகள். காகிதத் தட்டுகள், சிறிய மரக்குற்றிகள் / சதுரப் பெட்டிகள் (தாயக்கட்டை) நிறுத்தக்குறி (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி) அட்டைகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- தரம் இரண்டில் கற்ற ஒத்தகருத்துச் சொற்களை மாணவர்களுக்கு நினைவுபடுத்திக் கூறுங்கள்.
- அதன் பின்னர் மாணவர்களுக்குப் பின்வரும் ஒத்தகருத்துச் சொற்களை அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்தி அறிமுகம் செய்யுங்கள்.

படிமுறை 1

*எடுத்துக்காட்டு* :

**ஒத்தகருத்துச் சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **அரசன்** | - | மன்னன் | **ஒளி** | - | வெளிச்சம் |
| **ஆறு** | - | நதி | **வீதி** | - | தெரு |
| **நாடு** | - | தேசம் | **சூரியன்** | - | கதிரவன் |
| **கடல்** | - | சமுத்திரம் | **விளக்கு** | - | தீபம் |
| **ஆகாயம்** | - | வானம் | **குளம்** | - | வாவி |

- மாணவர்கள் அவற்றை வாசிப்பதற்கு ஊக்கப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களைக் குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவிற்கும் ஒத்தகருத்துச் சொற்கள் எழுதப்பட்ட அட்டைகள் ஒவ்வொன்று வீதம் வழங்கி, அவற்றைத் தமது குழுக்களிடையே வாசித்துக் காட்டுவதற்கு வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் அட்டையில் எழுதப்பட்டுள்ள சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி, சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

செயற்பாடு 2

- ஏற்கனவே அறிமுகப்படுத்திய ஒத்தகருத்துச் சொற்களை மாணவர்கள் மனதில் பதியச் செய்வதற்காகப் பின்வரும் பயிற்சி அட்டைகளைத் தயாரித்து மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்பப் பிரதியெடுத்துக்கொள்ளுங்கள். அவற்றை எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். பூர்த்தி செய்ய ஊக்கப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு:

படிமுறை 2

**ஒத்தகருத்துச் சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அரசன் | - | .................... | ஒளி | - | ................. |
| ஆறு | - | ................... | .................. | - | தெரு |
| ............... | - | தேசம் | ................ | - | கதிரை |
| ............. | - | சமுத்திரம் | விளக்கு | - | ................. |
| ஆகாயம் | - | .................. | .................. | - | வாவி |

- அதன் பின்னர் மேலே காட்டப்பட்டவாறு ஒத்தகருத்துச் சொற்களைப் பூர்த்திசெய்யும் அட்டை ஒன்றைத் தயாரித்துக் காட்சிப்படுத்துங்கள். (அவ்வட்டையில் கட்டமிடப்பட்ட இடங்களில் ஒத்தகருத்துச் சொற்களைச் செருகக் கூடியவாறு தயாரிக்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.)

**ஒத்தகருத்துச் சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.** | அரசன் - | | **6.** | ஒளி - | |
| **2.** | ஆறு - | | **7.** | வீதி - | |
| **3.** | நாடு - | | **8.** | சூரியன் - | |
| **4.** | கடல் - | | **9.** | விளக்கு - | |
| **5.** | ஆகாயம் - | | **10.** | குளம் - | |

| | | | | |
|---|---|---|---|---|
| நதி | மன்னன் | சமுத்திரம் | தேசம் | கதிரவன் |
| தெரு | தீபம் | வாவி | வானம் | வெளிச்சம் |

- மாணவர் குழுக்களை அழைத்து, கட்டங்களில் வரவேண்டிய ஒத்தகருத்துச் சொற்களைத் தெரிவுசெய்து கட்டத்தில் செருக வழிப்படுத்துங்கள்.

குறிப்பு: *இதுபோன்று தரம் மூன்று மாணவர்களின் வயது மட்டத்திற்குப் பொருத்தமான ஒத்தகருத்துச் சொற்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.*

செயற்பாடு **3**

- மாணவர்கள் தரம் 2 இல் ஏற்கனவே கற்ற எதிர்க்கருத்துச் சொற்களைக் கேட்டறியுங்கள். அதன் பின்னர் பின்வரும் எதிர்க்கருத்துச் சொற்களை அட்டையில் எழுதிக் காட்சிப் படுத்துங்கள்.

**எதிர்க்கருத்துச் சொற்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.** | **இயற்கை** - | செயற்கை | **7.** | **வெற்றி** - | தோல்வி |
| **2.** | **இன்பம்** - | துன்பம் | **8.** | **மாரி** - | கோடை |
| **3.** | **தொடக்கம்** - | முடிவு | **9.** | **சுத்தம்** - | அசுத்தம் |
| **4.** | **நன்மை** - | தீமை | **10.** | **காடு** - | நாடு |
| **5.** | **ஒற்றுமை** - | வேற்றுமை | **11.** | **புதுமை** - | பழைமை |
| **6.** | **சிரிப்பு** - | அழுகை | **12.** | **வீரம்** - | கோழை |

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள சொற்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசித்துக்காட்ட ஆர்வமூட்டுங்கள்.

**செயற்பாடு 4**

- மேற்குறிப்பிட்ட எதிர்க்கருத்துச் சொற்களை மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப அட்டைகளில் தனித்தனியாக எழுதி (24 சொற்கள்) கடதாசித் தட்டில் இட்டுக் கொள்ளுங்கள்.
- மாணவர்களை அறுவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் 24 சொற்கள் கொண்ட கடதாசித் தட்டை வழங்குங்கள். குழுவிலுள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு சொல் அட்டையை எடுக்கவேண்டும். அச்சொல்லிற்கான எதிர்க்கருத்துச் சொல் அட்டையைக் கடதாசித் தட்டில் தேடியெடுத்து படத்தில் காட்டியவாறு மேசையில் வைக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

| | | | |
|---|---|---|---|
| இயற்கை | செயற்கை | வெற்றி | தோல்வி |
| சுத்தம் | அசுத்தம் | இன்பம் | துன்பம் |

- ஒவ்வொரு குழுவும் தம்மிடமுள்ள எதிர்க்கருத்துச் சொற்களை வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் பின்வருமாறு பயிற்சித்தாள் ஒன்றைப் பிரதிசெய்து எல்லா மாணவர் களுக்கும் வழங்குங்கள். கட்டங்களில் எழுதப்படவேண்டிய எதிர்க்கருத்துச் சொற்களைச் சரியாக எழுத வழிப்படுத்துங்கள்.


| **எதிர்க்கருத்துச் சொற்கள்** | |
|---|---|
| இயற்கை | |
| | துன்பம் |
| தொடக்கம் | |
| | தீமை |
| ஒற்றுமை | |
| | பழைமை |

- மாணவர்கள் விருப்புடன் கற்கக் கூடிய வகையிலான வேறு பயிற்சிகளைத் தயாரித்து வழங்குங்கள்.

செயற்பாடு **5**

- மாணவர்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களை, தாயக்கட்டை விளையாட்டு மூலம் அறிமுகம் செய்யுங்கள். மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப தாயக்கட்டையை காட்போட் அட்டை அல்லது மரக்குற்றியைப் பயன்படுத்தி உருவாக்கிக் கொள்ளுங்கள்.
- தாயக்கட்டையின் ஆறு முகங்களிலும் ஆறு சொற்களை எழுதிக்கொள்ளுங்கள். தாயக்கட்டையை உருட்டுங்கள்.
- தாயக்கட்டையின் முகம் தெரியும் பக்கத்தில் எழுதப்பட்டுள்ள சொல்லுக்குரிய எதிர்க்கருத்துச் சொல்லை தாயக்கட்டையை உருட்டியவர் சொல்ல வேண்டும். இவ்வாறு விளையாட்டை அறிமுகம் செய்தல் வேண்டும்.
- சொல்லிய பின் தாயக்கட்டையில் உள்ள சொல்லையும் அதற்கான எதிர்க்கருத்துச் சொல்லையும் தாயக்கட்டையை உருட்டியவரும் அக்குழுவில் உள்ளவர்களும் அப்பியாசக் கொப்பியில் எழுதிக்கொள்ள வேண்டும். இவ்விளையாட்டைக் குழுவிலுள்ள எல்லா மாணவர்களும் விளையாட வேண்டும்.

***எடுத்துக்காட்டு*** :




தாயக்கட்டை

செயற்பாடு **6**

- மாணவர்களிடம் தரம் இரண்டில் கற்ற எதிர்ப்பாற் சொற்களைக் கேட்டறியுங்கள். அதன் பின்னர் கீழ்வரும் எதிர்ப்பாற் சொற்களைப் பெரிய அட்டையில் எழுதி அறிமுகம் செய்யுங்கள்.

**எதிர்ப்பாற் சொற்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **1.** | **மாதா** | - | பிதா | **7.** | **அரசன்** | - | அரசி |
| **2.** | **மகன்** | - | மகள் | **8.** | **தோழன்** | - | தோழி |
| **3.** | **சகோதரன்** | - | சகோதரி | **9.** | **நடிகன்** | - | நடிகை |
| **4.** | **மூத்தவன்** | - | மூத்தவள் | **10.** | **பெரியப்பா** | - | பெரியம்மா |
| **5.** | **புதல்வன்** | - | புதல்வி | **11.** | **பேரன்** | - | பேர்த்தி |
| **6.** | **பாடகன்** | - | பாடகி | **12.** | **தலைவன்** | - | தலைவி |

- எதிர்ப்பாற் சொற்களை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள்.
- பின்னர், மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். அதன் பின்னர், மாணவர்களை எழுமாறாக அழைத்துச் சொற்களை வாசிக்க வழிப்படுத்துங்கள். வாசித்து முடிந்ததும் அப்பியாசக் கொப்பியில் எதிர்ப்பாற் சொற்களை எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய பின்னர், இருவர் இருவராகச் சோடி சேர்ந்து வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- மாணவர்களுக்கு எதிர்க்கருத்துச் சொற்களை, தாயக்கட்டை விளையாட்டு மூலம் அறிமுகம் செய்தது போன்று எதிர்ப்பாற் சொற்களையும் அறிமுகஞ் செய்யுங்கள்.

செயற்பாடு **7**

- மாணவர்களுக்கு எதிர்ப்பாற் சொற்களைக் கொண்ட வாக்கியங்களை அட்டைக் கீலங்களில் எழுதி அறிமுகம் செய்யுங்கள்.

1. நான் ஒரு **பாடகன்.**
   நான் ஒரு **பாடகி.**

2. அவர் என்னுடைய **பேரன்.**
   அவர் என்னுடைய **பேர்த்தி.**

3. நான் சிறந்த **நடிகன்.**
   நான் சிறந்த **நடிகை.**

4. அவரது **மகன்** வீட்டிற்கு வந்தார்.
   அவரது **மகள்** வீட்டிற்கு வந்தார்.

5. எனது **பெரியப்பா** வீட்டிற்கு வந்தார்.
   எனது **பெரியம்மா** வீட்டிற்கு வந்தார்.

- மேலே தரப்பட்ட வாக்கியங்களைக் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப அட்டைக் கீலங்களில் எழுதிக்கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு குழுவிலும் ஐவர் இடம்பெறுதல் வேண்டும். அட்டைக் கீலங்களைக் கடதாசித் தட்டில் இட்டு குழுக்களுக்கு வழங்குங்கள். அட்டைக் கீலங்களில் எழுதப்பட்டுள்ள எதிர்ப்பாற் சொல் வாக்கியங்களைக் குழுக்களிலுள்ள எல்லா மாணவர்களும் வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர், அட்டைக் கீலங்களில் எழுதப்பட்டுள்ள வாக்கியங்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி, முற்றுப்புள்ளி இட வழிப்படுத்துங்கள். எழுதிய வாக்கியங்களைச் சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

செயற்பாடு **8**

- மாணவர்களுக்கு ஏற்கனவே எதிர்க்கருத்துச் சொற்களைக் தாயக்கட்டை விளையாட்டு மூலம் அறிமுகம் செய்தது போன்று எதிர்ப்பாற் சொற்களையும் அறிமுகம் செய்யுங்கள்.
- மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப தாயக்கட்டையை காட்போட் அட்டை மூலம் தயாரித்துக் கொள்ளுங்கள். தாயக்கட்டையின் ஆறு முகங்களிலும் ஆறு சொற்களை எழுதிக்கொள்ளுங்கள்.
- தாயக்கட்டையை மாணவர் குழுக்களுக்கு வழங்குங்கள். குழுக்களிலுள்ள ஒவ்வொருவரும் தாயக்கட்டையை உருட்ட உற்சாகப்படுத்துங்கள். தாயக்கட்டையை உருட்டிய பின் முகம் தெரியும் பக்கத்திலுள்ள சொல்லுக்குரிய எதிர்ப்பாற் சொல்லைச் சொல்ல வேண்டும்.

- அதன் பின்னர், தாயக்கட்டையின் மேற்பகுதியில் எழுதப்பட்டுள்ள சொல்லையும் அதற்குரிய எதிர்ப்பாற் சொல்லையும் அப்பியாசக் கொப்பியில் எழுத வேண்டும். குழுவிலுள்ள எல்லா மாணவர்களும் உருட்டும்போதும் தாயக்கட்டையின் முகத்திலுள்ள சொல்லையும் அதற்குரிய எதிர்ப்பாற் சொல்லையும் எழுத வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- இவ்விளையாட்டை மாணவர்கள் விரும்பும்வரை விளையாடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு 9

- மாணவர்களுக்கு இலகுவான அடைமொழிச் சொற்களைக் கொண்டு, வாக்கியங்கள் அமைத்துக் காட்டுங்கள்.
- பின்வரும் வாக்கியங்களைக் கரும்பலகையில் எழுதுங்கள். அதன் பின்னர், ஒவ்வொரு வாக்கியமாக வாசித்துக்காட்டுங்கள். அவ்வாக்கியங்களை அடைமொழிச் சொற்களைச் சேர்த்து மீண்டும் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதிக்காட்டுங்கள்.

  *எடுத்துக்காட்டு:*

  1. முயல் ஓடியது.
  2. கிளி பறந்தது.
  3. பூனை எலியைப் பிடித்தது.
  4. நாய் குரைத்தது.
  5. குதிரை ஓடியது.

- கரும்பலகையில் எழுதிய வாக்கியங்களை வாசித்துக் காட்டுங்கள். அதன் பின்னர், அவ்வாக்கியங்களை ஒவ்வொன்றாக, அடைமொழி சேர்த்து எழுதிக் காட்டுங்கள்.

  1. **முயல் ஓடியது.**
     வெள்ளை முயல் ஓடியது.
     வெள்ளை முயல் வேகமாக ஓடியது.

  2. **கிளி பறந்தது.**
     பச்சைக் கிளி பறந்தது.
     பச்சைக் கிளி வேகமாகப் பறந்தது.

  3. **பூனை எலியைப் பிடித்தது.**
     கறுத்தப் பூனை எலியைப் பிடித்தது.
     கறுத்தப் பூனை சிறிய எலியைப் பிடித்தது.

  4. **நாய் குரைத்தது.**
     வெள்ளை நாய் குரைத்தது.
     வெள்ளை நாய் பாய்ந்து குரைத்தது.

  5. **குதிரை ஓடியது.**
     சாம்பல் நிறக் குதிரை ஓடியது.
     சாம்பல் நிறக் குதிரை வேகமாக ஓடியது.

- கரும்பலகையில் எழுதி, வாசித்துக்காட்டிய பின்னர் அவ்வாக்கியங்களை அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுத வழிப்படுத்துங்கள்.
- எழுதிய வாக்கியங்களை மாணவர்களைச் சோடி சோடியாகச் சேர்ந்து வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் பின்வருமாறான பயிற்சியை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு:*

பாத்திமா குடை வாங்கினாள்.

பாத்திமா பச்சைக் குடை வாங்கினாள்.

**பயிற்சி அட்டை**

**1.** வௌவால் மரக்கிளையில் தொங்கியது.

................... வௌவால் மரக்கிளையில் தொங்கியது.

**2.** பாலன் சட்டை அணிந்தான்.

பாலன் ................ சட்டை அணிந்தான்.

**3.** புறாக்கள் பறந்தன.

................ புறாக்கள் பறந்தன.

**4.** சங்கரன் தொப்பி அணிந்தான்.

சங்கரன் .................. தொப்பி அணிந்தான்.

**5.** கடையில் பேனா வாங்கினாள்.

கடையில் ................ பேனா வாங்கினாள்.

- இதுபோன்ற பயிற்சி அட்டைகளைத் தயாரித்துப் பிரதியெடுத்து மாணவர்களுக்கு வழங்கிப் பயிற்சியளியுங்கள்.

**செயற்பாடு 10**

- மாணவர்களுக்குக் காலங்களை அறிமுகம் செய்யுங்கள். நேற்று, இன்று, நாளை என்ற அடிப்படையில் மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

மாணவர் ஒருவரை வகுப்பின் முன் அழைத்து நேற்று என்ன செய்தாய்? என்று கேளுங்கள்.

- நேற்றுச் சித்திரம் வரைந்தேன்.

இன்று என்ன செய்கிறாய்?

- இன்று சித்திரம் வரைகிறேன்.

நாளை என்ன செய்வாய்?

- நாளை சித்திரம் வரைவேன்.

என்று பதிலளிக்க வழிப்படுத்துங்கள்.

- அதன் பின்னர், இதே போன்று ஒவ்வொரு மாணவராக அழைத்து வினவுங்கள். அவர்கள் கூறுபவற்றைக் கரும்பலகையில் எழுதுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**நேற்று** என்ன செய்தாய்?

பாடம் படித்தேன்.

**இன்று** என்ன செய்கிறாய்?

பாடம் படிக்கிறேன்.

**நாளை** என்ன செய்வாய்?

பாடம் படிப்பேன். என்று கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.

- அதன் பின்னர், பின்வருமாறான அட்டவணையைக் காட்சிப்படுத்தி வாக்கியங்கள் அமைத்து எழுத வழிப்படுத்துங்கள்.

| | | |
|---|---|---|
| நேற்று | **சித்திரம்** | வரைந்தேன். |
| இன்று | | வரைகிறேன். |
| நாளை | | வரைவேன். |

- இதேபோன்று கீழ்வரும் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள். இப்பயிற்சிகளைத் தயாரித்து, பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள்.

**பயிற்சி I**

நான் ..................... கடைக்குச் சென்றேன்.

நான் ..................... கடைக்குச் செல்கிறேன்.

நான் ..................... கடைக்குச் செல்வேன்.

**பயிற்சி II**

நான் நேற்று ...............................................

நான் இன்று ...............................................

நான் நாளை...............................................

**பயிற்சி III**

மாமா நேற்று வீட்டிற்கு வந்தார்.

........... இன்று ..............................

........... நாளை ............................

- இதுபோன்ற வேறு பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

- இப்பயிற்சிகளை வழங்கிய பின்னர் கீழ்வரும் அட்டையைக் காட்சிப்படுத்துங்கள்.

**காலங்கள்**

காலங்கள் மூன்று வகைப்படும்.

**(1)** இறந்தகாலம்

**(2)** நிகழ்காலம்

**(3)** எதிர்காலம்

- மாணவர்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர், கீழ்வரும் அட்டவணையைக் காட்சிப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு:

**காலம்**

| **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|
| நடந்துமுடிந்த செயலைக் குறிப்பது | நடக்கின்ற செயலைக் குறிப்பது | நடக்கப் போகும் செயலைக் குறிப்பது |
| பாடினான் **(நேற்று)** | பாடுகிறான் **(இன்று)** | பாடுவான் **(நாளை)** |

- மாணவர்களுக்குக் காலங்கள் தொடர்பான விளக்கத்தை நடைமுறை எடுத்துக்காட்டு களுடன் முன்வையுங்கள்.
- மாணவர்கள் பூரண விளக்கம் பெற்றதும் பின்வரும் பயிற்சியைத் தயாரித்துப் பிரதியெடுத்து மாணவர்களுக்கு வழங்குங்கள்.

**அட்டவணையைப் பூர்த்தி செய்யுங்கள்.**

| **இறந்தகாலம்** | **நிகழ்காலம்** | **எதிர்காலம்** |
|---|---|---|
| வரைந்தாள் | | |
| | பாடுகிறாள் | |
| | | ஓடுவாள் |
| வாசித்தாள் | | |
| | செல்கிறாள் | |

- இதுபோன்ற வேறு பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- அதன் பின்னர் வாக்கியங்கள் அமைக்க மாணவர்களுக்குப் பயிற்சியளியுங்கள்.

***எடுத்துக்காட்டு :*** **வரைந்தான்** - மேரி சித்திரம் வரைந்தாள்.

**பயிற்சி அட்டை**

காலங்களை அனுசரித்து வாக்கியங்கள் அமைப்போம்.

**1.** பாடுகிறான் : ..........................................................

**2.** வாசித்தான் : ..........................................................

**3.** ஓடுவான் : ..........................................................

**4.** செல்கிறாள்: ..........................................................

**5.** நடந்தாள் : ..........................................................

**செயற்பாடு 11**

- பின்வரும் வாக்கியங்களை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவ்வாக்கியங்கள் எந்தக் காலத்தைக் குறிக்கின்றன என அறிந்து காலங்கள் எழுதப்பட்டுள்ள அட்டைகளில் இருந்து பொருத்தமான அட்டைகளைத் தெரிந்து வாக்கியங்களின் அருகில் காட்சிப்படுத்த மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

**எடுத்துக்காட்டு :**

| | |
|---|---|
| மாமா நாளை வீட்டிற்கு வருவார் | எதிர்காலம் |

| | | |
|---|---|---|
| **1.** | நான் பூங்காவிற்குச் சென்றேன். | |
| **2.** | தங்கை வீணை வாசிக்கிறாள். | |
| **3.** | நிசார் நூலகம் செல்கிறான். | |
| **4.** | நேற்று மழை பெய்தது. | |
| **5.** | நான் பூக்கள் வரைவேன். | |

| | | |
|---|---|---|
| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |
| நிகழ்காலம் | எதிர்காலம் | இறந்தகாலம் |
| இறந்தகாலம் | நிகழ்காலம் | எதிர்காலம் |

- மாணவர்கள் இச்செயற்பாட்டில் ஈடுபட்ட பின்னர் அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

*குறிப்பு* : காலங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்குப் போதிய நேரத்தை ஒதுக்கிக்கொள்ளும் உரிமை ஆசிரியருக்குண்டு.

செயற்பாடு **12**

- மாணவர்கள் ஏற்கனவே தரம் இரண்டில் அறிமுகம் செய்த நிறுத்தக்குறிகள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடிப் பின்வரும் நிறுத்தக்குறிகளை அறிமுகம் செய்யுங்கள். மாணவர்களுக்கு நிறுத்தக்குறிகள் தொடர்பான விளக்கங்களை வழங்குவதைத் தவிர்த்து, பிரயோக முறையில் மாணவர்களுக்குப் பயிற்சியளியுங்கள்.
- தரம் மூன்றில் முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி ஆகியவற்றை அறிமுகம் செய்தல் போதுமானது.
- பாடநூலிலுள்ள பாடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள வாக்கியங்களை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

எடுத்துக்காட்டு :

**பாடம் 6 - அந்த இடம்**

1. அப்பா என்னை அழைத்துச் சென்றார்.
2. குட்டி மான்கள், ஒட்டகச்சிவிங்கி கூட இருந்தன.

**பாடம் 7 - தெரிந்து கொள்வோம்**

1. மரப் பொந்துகளில் கிளிகள் வாழ்கின்றன.
2. இவை பழங்கள், விதைகள், பூக்களின் மொட்டுகள் போன்றவற்றை உண்கின்றன.
3. கிளியின் அலகு பலம் வாய்ந்தது.
4. பெங்குயின்கள் பறவை இனத்தைச் சேர்ந்தவை.
5. மரங்கொத்தி, பூச்சிகள், பழங்கள், விதைகள் என்பவற்றை உண்ணுகின்றன.

**பாடம் 13 - எழுதுவதும் அழிப்பதும்**

(தரம் மூன்றில் வினாக்குறி அறிமுகம் செய்யப்படுகிறது.)

1. இது ஒரு வேலையா?
2. எப்படி இருக்கிறாய்?
3. ஏன் பேசமாட்டாய்?
4. எழுதுவது எவ்வாறான கடினமான வேலை தெரியுமா?

**பாடம் 15 - கைகள்**

1. உங்களால் எழுதவும் வாசிக்கவும் முடியுமா?

**பாடம் 16 - பூனையால் வந்த புகார்**

1. எலிகளை ஒழிக்க என்ன செய்யலாம்?

**பாடம் 19 - களப் பயணம்**

1. நீல நிறத் தொட்டி எதற்கு?
2. சிவப்பு நிறத் தொட்டி எதற்கு?
3. பச்சை நிறத் தொட்டி எதற்கு?
4. செம்மஞ்சள் நிறத் தொட்டி எதற்கு?

**பாடம் 12 - விடுகதைகள் (வினாக்குறி)**

1. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது எது?
2. மீன்பிடிக்கத் தெரியாது. ஆனால் அழகாக வலை பின்னும் அது எது?
3. வெளியே விரியும், உள்ளே சுருங்கும் அது என்ன?

- மேலே தரப்பட்ட வாக்கியங்களை அட்டைகளில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவற்றை உரியவாறு வாசித்துக்காட்டுங்கள். முற்றுப்புள்ளி இட்ட வாக்கியத்தை எப்படி வாசிக்க வேண்டும், காற்புள்ளியும் முற்றுப்புள்ளியும் இடப்பட்ட வாக்கியங்களை எப்படி வாசிக்க வேண்டும், வினாக்குறி இடப்பட்ட வாக்கியங்களை எவ்வாறு வினவுவது போன்று வாசிக்கவேண்டும் என்பது தொடர்பாகப் பயிற்சியளியுங்கள்.
- அதன் பின்னர், மாணவர்கள் கற்ற வாக்கியங்களைப் பயிற்சிகளாகத் தயாரித்து வழங்குங்கள்.

**பயிற்சி அட்டை -1**

**பின்வரும் நிறுத்தக்குறிகளுள் பொருத்தமான நிறுத்தக்குறிகளை வாக்கியங்களில் இட்டு வாசியுங்கள்.**

முற்றுப்புள்ளி ( . ) காற்புள்ளி ( , ) வினாக்குறி ( ? )

**1.** அப்பா என்னை அழைத்துச் சென்றார்
**2.** மரப் பொந்துகளில் கிளிகள் வாழ்கின்றன
**3.** இவை பழங்கள் விதைகள் பூக்களின் மொட்டுகள் போன்றவற்றை உண்கின்றன
**4.** கிளியின் அலகு பலம் வாய்ந்தது
**5.** இது ஒரு வேலையா
**6.** நீலத் தொட்டி எதற்கு
**7.** மரங்கொத்தி பூச்சிகள் பழங்கள் விதைகள் என்பவற்றை உண்ணுகின்றது
**8.** காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும் அது என்ன
**9.** உங்களால் எழுதவும் வாசிக்கவும் முடியுமா
**10.** செம்மஞ்சள் தொட்டி எதற்கு

## பயிற்சி அட்டை - 2

பின்வரும் நிறுத்தக்குறிகளைப் பந்தியில் தரப்பட்டுள்ள கட்டங்களில் பொருத்தமுற இட்டு வாசியுங்கள்.

| | | |
|---|---|---|
| முற்றுப்புள்ளி ( . ) | காற்புள்ளி ( , ) | வினாக்குறி ( ? ) |

**உலகில் நிமிடத்திற்கு நிமிடம் பல சம்பவங்கள் நிகழ்கின்றன□ எல்லாவற்றையும் நாம் அறிய முடிவதில்லை □ ஆயினும் முக்கிய நிகழ்வுகளை நாம் அறிந்து கொள்ள வேண்டும்□ அவற்றை எப்படி அறிந்து கொள்கின்றோம்□ பத்திரிகை□ வானொலி□ தொலைக்காட்சி □ இணையம்□ போன்றவற்றின் ஊடாக அறிந்து கொள்கின்றோம்□**

***குறிப்பு*** : இவ்வாறான பல்வேறு பயிற்சிகளை வழங்கும் சுதந்திரம் ஆசிரியருக்குண்டு.

**கணிப்பீடு**

- ஒத்தகருத்துச் சொற்களை இனங்காணல்
- எதிர்க்கருத்துச் சொற்களை இனங்காணல்
- எதிர்ப்பாற் சொற்களை இனங்காணல்
- அடைமொழிகளை இனங்காணல்
- காலங்களை இனங்கண்டு உரிய முறையில் பயன்படுத்தல்
- வாக்கியங்களை எழுதி முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி ஆகியவற்றை இடல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

# 3

**தேர்ச்சிகள் :**

**$L_3$** – விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுப்பார்.

**$S_3$** – விருப்புடனும் இரசனையுடனும் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- சிறுவர் பாடல்கள்
- சிறுவர் கதைகள்
- விரல் பொம்மை உரையாடல்கள்
- போலச் செய்தல்
- ஒலி, ஒளி இறுவட்டுகள்

**கற்றற்பேறுகள் :**

- சிறுவர் பாடல்களை விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுத்து ஆக்கபூர்வமாக வெளிப்படுத்துவார்.
- சிறுவர் கதைகளைச் செவிமடுத்து முகபாவனை, உடலசைவு, தொனி வேறுபாடு ஆகியவற்றை வெளிப்படுத்துவார்.
- விரல் பொம்மைகளைத் தயாரித்து பாடல்கள், கதைகள் மற்றும் உரையாடல்களை விருப்புடனும் இரசனையுடனும் ஆக்கபூர்வமாகவும் வெளிப்படுத்துவார்.
- பாடல்கள், கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் போன்று முகமூடி அணிந்து போலச் செய்துகாட்ட முன்வருவார்.
- ஒலி, ஒளி இறுவட்டுக்களைச் செவிமடுத்து விருப்புடனும் இரசனையுடனும் இயல்பாக வெளிப்படுத்துவார்.

**வளங்கள் :**

- பாடல் அட்டைகள், கதை அட்டைகள், கதைப் படங்கள், விரல் பொம்மைகள், கையுறைகள், ஒலி - ஒளி இறுவட்டுக்கள், முகமூடிகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

செயற்பாடு **1**

- மாணவர்களுக்குத் தெரிந்த பாடல்களைக் கேட்டுப் பின்வரும் பாடல்களை மாணவர் களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.
- தரம் மூன்று பாடநூலைத் துணையாகக் கொள்ளுங்கள். பாடநூலில் தரப்பட்டுள்ள பாடங்களுக்கான படங்கள் பற்றி மாணவர்களுடன் உரையாடிய பின்னர் பாடல்களை அறிமுகம் செய்யுங்கள்.

பாடல் 1

**பாவைப்பிள்ளை**

சின்னச் சின்னப் பாவை
சீருடைய பாவை
அன்னை தந்த பாவை
அன்பு கொண்ட பாவை

என்னைப் போலக் காலும்
என்னைப் போலக் கையும்
இனிய கண்ணும் விரலும்
இயைந் திருக்கும் பாவை

சட்டை இட்டுப் பார்ப்பேன்
தொப்பி இட்டுப் பார்ப்பேன்
பொட்டு மிட்டுப் பார்ப்பேன்
பூவணிந்து பார்ப்பேன்

என் மடியிலிருக்கும்
என் அருகிற் படுக்கும்
என்னுடனே பகலும்
இரவும் ஒன்றாய் இருக்கும்.

முதுதமிழ் புலவர் மு. நல்லதம்பி

- இப்பாடலை நான்கு, நான்கு அடிகளாக அறிமுகம் செய்யுங்கள். இசையுடனும் அபிநயத்துடனும் மாணவர்களுடன் சேர்த்துப் பாடுங்கள்.

**செயற்பாடு 2:**

பாடல் 2

**மறவாதே**

பெற்ற தாயை மறவாதே
பேணும் தந்தையை மறவாதே

கற்ற குருவை மறவாதே
கடவுள் எண்ணம் மறவாதே

கல்வியை என்றும் மறவாதே
கற்றதைச் செய்ய மறவாதே

நல்லார் சொல்லை மறவாதே
நாட்டுப் பணியை மறவாதே

ஒழுக்கம் தன்னை மறவாதே
உண்மை பேச மறவாதே.

- தே.ப. பெருமாள்.

- மாணவர்களுக்குப் பாடலை இவ்விரு அடிகளாகச் சொல்லிக்கொடுங்கள். இரசனையுடன் செவிமடுப்பதற்கும் விருப்புடன் பாடுவதற்கும் அபிநயப்பதற்கும் ஊக்கப்படுத்துங்கள்.

பாடல் 3

**மழையே மழையே**

சிலு சிலு சிலுவென மழை
சிரிக்க வைப்பது மழை
அள்ளிக் கொள்ளவும் மழை
ஆட்டம் போடவும் மழை

மழை மழை இனியது மழை
மகிழ்ச்சி தருவது மழை
மலர்களை நனைப்பது மழை
மண் வாசனை தருவது மழை

தட தட தடவென மழை
தண்ணீர் பெருக்கிடும் மழை
செடி கொடி மரங்களில் மழை
செம்மண் பரப்பிலும் மழை

பரந்த கடலிலும் மழை
பாழும் கிணற்றிலும் மழை
பெரிதும் சிறிதும் மழை
பிரித்துப் பார்க்குமோ மழை

- செல்ல கணபதி

- மாணவர்களுக்கு இப்பாடலை நான்கு, நான்கு அடிகளாக அறிமுகம் செய்யுங்கள். மணல் வீடு கட்டி விளையாடி, பாடி ஆடச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு 4

பாடல் 4

**பூக்கள்**

சின்னச் சின்னப் பூக்கள்
சிறிய வெள்ளைப் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
களிப்பைத் தரும் பூக்கள்

காற்றில் ஆடும் பூக்கள்
கவிஞர் பாடும் பூக்கள்
கொத்துக் கொத்துப் பூக்கள்
கொள்ளை அழகுப் பூக்கள்

மஞ்சள் நிறப் பூக்கள்
மனதைக் கவரும் பூக்கள்
அன்பைத் தரும் பூக்கள்
அழகுச் சிவப்புப் பூக்கள்.

- வி.என்.எஸ். உதயசந்திரன்

- மாணவர்களைக் கொண்டு பூக்களைச் செய்து/அல்லது சூழலில் உள்ள மலர்களைக் கொய்து அபிநயத்துடன் இப்பாடலைப் பாடி ஆட ஆர்வமூட்டுங்கள். பூக்களை இரசிப்பதன் ஊடாக இயற்கையை இரசிக்கும் மனப்பாங்கை மாணவர்கள் மனதில் பதிக்க முயலுங்கள். இப்பாடலை நான்கு நான்கு அடிகளாகப் பாடி ஆட வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு **5**

- மாணவர்களுக்குக் கீழ்வரும் கதையை இரசனையுடன் கூறுங்கள். (இக்கதை பாடநூலிலும் (பக்கம் 15) தரப்பட்டுள்ளது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்)


**உடல் நலம்**

குதிரை ஒன்று ஓட்டப் போட்டியில் பங்குபற்றியது.

தனது உடல் நலக் குறைவினால் தோல்வியடைந்தது.

எப்போதும் ஓட்டப் போட்டியில் குதிரை தோற்றதில்லை.

இம்முறை தோல்வி அடைந்தமைக்கு ஆளுக்கு ஆள் காரணம் சொல்ல ஆரம்பித்தனர்.




ஒரு வெள்ளை முயல் அதன் அருகில் வந்து "குதிரை அண்ணா! நீங்கள் மிக வேகமாக ஓடியிருந்தால் நிச்சயம் வெற்றி பெற்றிருக்கலாம்" என்றது.






பாய்ந்து வந்த குரங்கு ஒன்று "குதிரை அண்ணா! நீங்கள் மற்றவர் களுக்கு இணையாக ஓடவில்லை. மற்றவர்களுக்கு உங்கள் வெற்றியை விட்டுக் கொடுத்து விட்டீர்கள்" என்றது.






எங்கிருந்தோ ஓடி வந்த நாய் குதிரை யைப் பார்த்து, "குதிரையாரே! நீங்கள் தான் வெற்றி பெறுவீர்கள். உங்களை யாரும் வெல்ல முடியாது என்ற ஆணவத்தில் ஓடினீர்கள். அதனால்தான் தோற்றீர்கள்" என்றது.



இவ்வாறு ஒவ்வொருவரும் குதிரைக்கு அறிவுரை கூறி, தமது ஆதங்கத்தைத் தீர்த்துக்கொண்டனர்.



மரப் பொந்தில் அமர்ந்திருந்த சிட்டுக்குருவி எல்லாவற்றையும் கவனித்துக்கொண்டிருந்தது. அது பறந்து வந்து குதிரையின் முதுகில் அமர்ந்தது. தனது அலகினால் குதிரையின் முதுகைத் தடவியது. "அண்ணா! உங்களுக்கு அறிவுரை கூற எனக்குத் தகுதியில்லை. ஏனெனில் ஓட்ட வீரரான உங்களுக்கு எப்படி ஓட வேண்டும் என்று சொல்லத் தேவையில்லை. உங்களுக்கு நல்ல ஆலோசனை ஒன்றைக் கூறுவதற்கு அனுமதி தருவீர்களா?" என்று கேட்டது.

இதுவரை முயல், குரங்கு, நாய் ஆகியவற்றின் கருத்துக்களால் குதிரை மனமுடைந்திருந்தது. சிட்டுக்குருவியின் பேச்சு ஆனந்தத்தைத் தந்தது.

"சிட்டுக்குருவியே நீ என் மனமறிந்து பேசுகிறாய். உன் ஆலோசனை எனக்கு அவசியம். எனவே தயக்கமின்றிக் கூறு" என்றது.

"அண்ணா! எந்த ஒரு வீரனுக்கும் உடலும் உள்ளமும் எப்போதும் உற்சாகமாக இருக்க வேண்டும். உங்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளது. உங்கள் தோல்விக்கு அதுவே காரணம். உடல் நலம் பாதிக்கப்பட்டால் உள்ளமும் பாதிக்கப்படும். இனி நீங்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள். தோல்வியைக் கண்டு துவண்டு விடாதீர்கள். உங்கள் தோல்விக்கான காரணம் உடல் நலக் குறைவுதான். உடல் நலம் சரியானால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்" என்று கூறிவிட்டு சிட்டுக்குருவி பறந்து சென்றது.

இக்கதையை உணர்வுபூர்வமாக மாணவர்களுக்குக் கூறிய பின் மாணவர்களிடம் கதையை மீண்டும் கூறுமாறு கேளுங்கள். பல மாணவர்கள் ஒன்று சேர்ந்து கட்டியெழுப்ப உதவுங்கள். கதையில் கூறப்படும் கருத்துக்களைப் போதனை அடிப்படையில் மாணவர்களுக்குக் கூற முயலாதீர்கள். நடைமுறை எடுத்துக்காட்டுகளுடன் புரிய வையுங்கள்.

கதையில் வரும் உரையாடல்களில் சிலவற்றை எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவ்வுரையாடல்களை வாசித்துக்காட்டுங்கள். மாணவர்கள் உரையாடல்களைச் செவிமடுத்து இரசனையுடன் கூறுவதற்கு வழிகாட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

1. முயல் - "குதிரை அண்ணா! நீங்கள் மிக வேகமாக ஓடியிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம்"

2. குரங்கு - "குதிரை அண்ணா! நீங்கள் மற்றவர்களுக்கு இணையாக ஓடவில்லை. மற்றவர்களுக்கு உங்கள் வெற்றியை விட்டுக்கொடுத்து விட்டீர்கள்"

3. நாய் - "குதிரையாரே! நீங்கள்தான் வெற்றி பெறுவீர்கள். உங்களை யாரும் வெல்ல முடியாது என்ற ஆணவத்தில் ஓடினீர்கள். அதனால்தான் தோற்றீர்கள்"

4. சிட்டுக்குருவி - "உங்களுக்கு நல்ல ஆலோசனை ஒன்றைக் கூறுவதற்கு அனுமதி தாருங்கள்"

5. **குதிரை** - “சிட்டுக்குருவியே நீ என் மனமறிந்து பேசுகிறாய். உன் ஆலோசனை எனக்கு அவசியம். எனவே தயக்கமின்றிக் கூறு”

6. **சிட்டுக்குருவி** - “அண்ணா! எந்த ஒரு வீரனுக்கும் உடலும் உள்ளமும் எப்போதும் உற்சாகமாக இருக்க வேண்டும். உங்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளது. உங்கள் தோல்விக்கு அதுவே காரணம்”

இந்த உரையாடல் கதையைச் சுருக்கமாகக் கூறுங்கள். அதனை மாணவர்கள் இரசனையுடனும் விருப்புடனும் சொல்லிக்காட்ட ஆர்வமூட்டுங்கள். மாணவர்களை ஆறு பேர் கொண்ட குழுக்களாக்கி உரையாடலை வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

செயற்பாடு 6:

- மாணவர்களைச் சுவை என்ற விரல் பொம்மை உரையாடல் பாடலின் ஊடாக விரல் பொம்மை உரையாடலை மாணவர்களுடன் சேர்ந்து செய்துகாட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**சுவை**



**விரல் 1** இனிக்கும் இனிக்கும்
**விரல் 2** கரும்பு இனிக்கும்

**விரல் 1** புளிக்கும் புளிக்கும்
**விரல் 2** மாங்காய் புளிக்கும்

**விரல் 1** உவர்க்கும் உவர்க்கும்
**விரல் 2** உப்பு உவர்க்கும்

**விரல் 1** கசக்கும் கசக்கும்
**விரல் 2** பாகற்காய் கசக்கும்

**விரல் 1** துவர்க்கும் துவர்க்கும்
**விரல் 2** கடுக்காய் துவர்க்கும்

**விரல் 1** உறைக்கும் உறைக்கும்
**விரல் 2** மிளகாய் உறைக்கும்



- விரல் பொம்மை உரையாடல் தரம் மூன்று பாடநூலிலும் (பக்கம் 6) தரப்பட்டுள்ளது என்பதை கவனத்திற் கொள்ளுங்கள் (பாடநூலுடன் இணைந்து விரல் பொம்மை உரையாடலை மேற்கொள்ளுங்கள்). மாணவர்களுடன் சேர்த்து இவ்வுரையாடலை மேற்கொள்ளுங்கள். மாணவர்களின் **நா நெகிழ், நா பிறழ்** பயிற்சிக்கு இவ்வுரையாடல் உதவும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

செயற்பாடு 7

- முதலில் கீழே தரப்பட்டுள்ள படத்தை அறிமுகம் செய்யுங்கள். அந்த இடம் என்ற கதைப் பாடலை இரசனையுடன் மாணவர்களுக்குக் கூறுங்கள். அதன் பின்னர், கவிதை நடையில் கதையை மாணவர்களுக்குக் கூறுங்கள். அதன் பின்னர் மாணவர்களைப் பிராணிகள் போன்று போலச் செய்து காட்ட ஆர்வமூட்டுங்கள்.




**கதைப் பாடல்**

அப்பா என்னை
அழைத்துச் சென்றார்
அங்கு ஓரிடம்

அங்கிருந்த
குயிலும் மயிலும்
ஆடித் திரிந்தன.

பொல்லா நரியும்
புனுகுப் பூனை
எல்லாம் நின்றன.


குட்டி மான்கள்
ஒட்டகச் சிவிங்கி
கூட இருந்தன.



குரங்கு என்னைப்
பார்த்துப் பார்த்து
குறுகு றென்றது.

யானை ஒன்று
காதைக் காதை
ஆட்டி நின்றது.

கரடி கூட
உறுமிக் கொண்டே
காலைத் தூக்கிற்று!




சிறுத்தை ஒன்று
கோபத்தோடு
சீறிப் பாய்ந்தது!

அங்கு எங்கள்
அருகிலேயே
சிங்கம் நின்றது!

கரடி, சிங்கம்
புலியைக் கண்டேன்
கண்டும் பயமில்லை!

சூரனைப் போல்
நின்றிருந்தேன்
துளியும் பயமில்லை!



சென்ற அந்த
இடம் உனக்குத்
தெரியவில்லையா?


மிருகக் காட்சிச்
சாலைதானே
வேறொன்றும் இல்லை.

\- அழ. வள்ளியப்பா.


## போலச் செய்தல்

*எடுத்துக்காட்டு:*


1. அங்கிருந்த குயிலும் மயிலும் ஆடித் திரிந்தன.




2. பொல்லா நரியும் புனுகுப் பூனை எல்லாம் நின்றன.




3. குட்டி மான்கள் ஒட்டகச் சிவிங்கி கூட இருந்தன.




4. குரங்கு என்னைப் பார்த்துப் பார்த்து குறுகு றென்றது.




5. யானை ஒன்று காதைக் காதை ஆட்டி நின்றது.




6. கரடி கூட உறுமிக் கொண்டே காலைத் தூக்கிற்று!




7. சிறுத்தை ஒன்று கோபத்தோடு சீறிப் பாய்ந்தது!



8. அங்கு எங்கள் அருகிலேயே சிங்கம் நின்றது!





9. கரடி, சிங்கம் புலியைக் கண்டேன் கண்டும் பயமில்லை!

- கதைப் பாடல் குறிப்பிட்டது போன்று பிராணிகளாக மாறிப் போலச் செய்து காட்ட மாணவர்களை வழிப்படுத்துங்கள். மாணவர்களுக்கு முன்கூட்டியே முகமூடிகளைச் செய்துகொண்டு வருவதற்கு அறிவுறுத்தல் வழங்கிய பின்னரே, போலச் செய்தலை வகுப்பறையில் செய்துகாட்ட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

செயற்பாடு 8

- யூ ரியுப்பில் (You Tube) தரம் 3 மாணவர்களுக்குப் பொருத்தமான காணொளிகளைத் தெரிவுசெய்து (கதைகள், பாடல்கள், கதைப் படங்கள்) கணினி அல்லது புரஜெக்டர் ஊடாக மாணவர்கள் பார்வையிட்டுச் செவிமடுக்க, இரசிக்க ஆர்வமூட்டுங்கள். தாம் இரசித்தவற்றைச் சுயமாகத் தமது பாணியில் மாணவர் முன்வைக்க ஆர்வமூட்டுங்கள்.

***குறிப்பு*** : பாடசாலையில் உள்ள நவீன தொழினுட்பத்தைப் பயன்படுத்துங்கள். முன்கூட்டியே அதிபரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**கணிப்பீடு:**

- பாடல்களை இரசனையுடன் செவிமடுத்தல் / பாடுதல்
- கதைகளை உணர்வுபூர்வமாகத் தமது பாணியில் கூறுதல்
- போலச் செய்து காட்டுதல்
- விரல் பொம்மை ஊடாக உரையாடுதல்
- காணொளிகள் ஊடாகப் பாடல்கள், கதைகள் ஆகியவற்றைச் செவிமடுத்தல்

போன்றவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள்:**

**R3** விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார்.

**W3** விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார் / வரைவார்.

**உள்ளடக்கம்:**

- சிறுவர் பாடல்கள்
- சிறுவர் கதைகள்
- விரல் பொம்மை உரையாடல்கள்
- போலச் செய்தல்
- காணொளிகள்
- சித்திரங்கள்

**கற்றற்பேறுகள்:**

- பாடல்கள், கவிதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களை வாசித்துப் புரிந்து கொள்வார். பாடலின் கருத்தினை அறிந்துகொள்ள முனைவார்.
- சிறுவர் கதைகளில் வரும் கதாபாத்திரங்கள், பயன்படுத்தப்பட்டுள்ள முக்கிய சொற்கள், மாணவரைக் கவர்ந்த சிறிய உரையாடல் விதிகள் ஆகியவற்றைப் பிழையின்றி எழுதுவார். விருப்புடனும் இரசனையுடனும் வாசிப்பார்.
- விரல் பொம்மை உரையாடலில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சொற்களை விருப்புடனும் இரசனையுடனும் எழுதுவார்.
- போலச் செய்தலின்போது தெரிவு செய்த கதாபாத்திரங்களின் பெயர்களை நினைவுபடுத்திப் பிழையின்றி எழுதி வாசிப்பார்.
- காணொளிகளைப் பார்த்துச் செவிமடுத்த பாடல்கள், கதைகள் உரையாடல்களில் பயன்படுத்தப்பட்ட சொற்களை எழுதுவார் / வாசிப்பார்.
- விருப்புடனும் இரசனையுடனும் செவிமடுத்த பாடல்கள் கதைகளைச் சித்திரமாக வரைவார். தாம் வரைந்த சித்திரங்களைப் பார்த்து சில சொற்களை எழுதி வாசிப்பார்.

**வளங்கள்:**

- பாடல் அட்டைகள், கதை அட்டைகள், வாக்கிய அட்டைகள், உரையாடல் அட்டைகள், செருகு அட்டைகள், நிறப் பென்சில்கள், வண்ணக் கட்டிகள் (Pastel).

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1:**

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற பாடலை மாணவர்களுக்கு நினைவுபடுத்திப் பாட ஆர்வ மூட்டுங்கள். மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள். அதன் பின்னர் பாடநூலில் **"பாவைப்பிள்ளை"** என்ற தலைப்பில் தரப்பட்டுள்ள பாடலை வாசித்துக்காட்டுங்கள். அதன் பின்னர் மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள்.
- நான்கு நான்கு அடிகளாக வாசித்துக்காட்டுங்கள். மாணவர்களையும் வாசிக்க ஆர்வமூட்டுங்கள். அதன் பின்னர் கீழ்வருவது போன்ற பயிற்சியைத் தயாரித்து,

பிரதியெடுத்து மாணவர்களுக்கு வழங்கி பாடலடிகளில் விடுபட்டுள்ள சொற்களைப் பூர்த்திசெய்ய வழிப்படுத்துங்கள். விடுபட்டுள்ள சொற்களைத் தனியாக வழங்குங்கள்.

***எடுத்துக்காட்டு:***

படி 1

| | | |
|---|---|---|
| சீருடை, | அன்பு, | தந்த |

சின்னச் சின்னப் பாவை

.................... பாவை

அன்னை ................ பாவை

....... கொண்ட பாவை.

படி 2

| | | |
|---|---|---|
| கையும், | கண்ணும், | போலக் |

என்னைப் .............. காலும்

என்னைப் போலக் ..............

இனிய .............. வாயும்

இயைந்திருக்கும் பாவை.

படி 3

| | | | |
|---|---|---|---|
| பொட்டு, | பூவணிந்து, | தொப்பி, | பார்ப்பேன் |

சட்டை இட்டுப் ...................

............ இட்டுப் பார்ப்பேன்

............ மிட்டுப் பார்ப்பேன்

............ பார்ப்பேன்.

- ஏற்கனவே படித்த பாடலடிகளைச் சரியாகப் பூர்த்திசெய்வதை உறுதிப்படுத்துங்கள்.

செயற்பாடு 2

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். பாடநூலிலுள்ள மறவாதே என்ற பாடலை மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். எழுமாறாக மாணவர்களை அழைத்து பாடலடிகளைச் சரியாக உச்சரித்து இரசனையுடன் வாசிக்க வழிப்படுத்துங்கள். கீழ்வரும் பயிற்சிகளைத் தயாரித்து, பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். அதன் பின்னர் பாடலடிகளில் விடுபட்டுள்ள சொற்களைக் கட்டத்திலிருந்து தெரிவுசெய்து எழுத ஆர்வமூட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தந்தையை, | குருவை, | ஒழுக்கம், | எண்ணம், | என்றும், | செய்ய, |
| உண்மை, | பணியை, | நல்லார், | தாயை | | |

**மறவாதே**

பெற்ற ................ மறவாதே

பேணும் ............... மறவாதே

கற்ற ............. மறவாதே

கடவுள் ........... மறவாதே

கல்வியை ............. மறவாதே

கற்றதை ................ மறவாதே

................... சொல்லை மறவாதே

நாட்டுப் ............... மறவாதே

............ தன்னை மறவாதே

............ பேச மறவாதே.

- மாணவர்கள் சுயமாக அப்பியாசக் கொப்பியில் மறவாதே என்ற பாடலின் அடிகளைப் பிழையின்றி எழுத ஊக்கமளியுங்கள்.

செயற்பாடு 3

- பாடநூலிலுள்ள **"மழையே மழையே"** (பக்கம் 19) என்ற பாடலடிகளைச் சுயமாக வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுவாகப் பாடலடிகளை உரத்து வாசிக்க வழிப்படுத்துங்கள். மாணவர்களிடம் மணல் வீடு கட்டிய அனுபவத்தினைக் கேட்டறியுங்கள். அதன் பின்னர் கரும்பலகையில் பாடலடிகளில் உள்ள சொற்களை நீக்கிவிட்டு புள்ளிக் கோடிட்டு எழுதுங்கள். மாணவர்கள் பாடலடிகளில் புள்ளிக் கோடிடப்பட்ட இடங்களில் வரவேண்டிய சொற்களைச் சுயமாகப் பூர்த்திசெய்து அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**படி** 1

சிலு சிலு சிலுவென மழை

.................... வைப்பது மழை

.................... கொள்ளவும் மழை

................... போடவும் மழை

படி 2

மழை மழை இனியது மழை
.......... தருவது மழை
மலர்களை ............. மழை
.................. தருவது மழை

படி 3

தட தட .................. மழை
................ பெருக்கிடும் மழை
செடி கொடி .............. மழை
.................. பரப்பிலும் மழை

படி 4

பரந்த ....................... மழை
பாழும் ................... மழை
................... சிறிதும் மழை
பிரித்துப் பார்க்குமோ மழை

- **"மழையே மழையே"** என்ற பாடலை மாணவர்கள் வாசித்தும் பாடியும் அபிநயத்தும் பயிற்சி பெற்ற பின்னர் பாடலடிகளைப் பூர்த்தி செய்யும் பயிற்சியை வழங்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

செயற்பாடு 4


- **"பூக்கள்"** என்ற பாடலை கணினி மூலம் எழுத்தமைப்புச் செய்து, பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள்.

**பாடல் :**

**பூக்கள்**

சின்னச் சின்னப் பூக்கள்
சிறிய வெள்ளைப் பூக்கள்
கண்ணைக் கவரும் பூக்கள்
களிப்பைத் தரும் பூக்கள்

காற்றில் ஆடும் பூக்கள்
கவிஞர் பாடும் பூக்கள்
கொத்துக் கொத்துப் பூக்கள்
கொள்ளை அழகு பூக்கள்



மஞ்சள் நிறப் பூக்கள்
மனதைக் கவரும் பூக்கள்
அன்பைத் தரும் பூக்கள்
அழகுச் சிவப்புப் பூக்கள்

- வி.என்.எஸ். உதயசந்திரன்

- இப்பாடலைக் கவிதை நடையில் மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் அபிநயத்துடன் பாடி ஆட ஆர்வமூட்டுங்கள். பாடலடிகள் நன்கு பயிற்சி பெறும் வரை தனியாகவும் சோடியாகவும் குழுவாகவும் வகுப்பின் முன்னும் வாசித்தக் காட்ட உற்சாகப்படுத்துங்கள். அதன் பின்னர் பாடலடிகளைச் சுயமாகப் பூர்த்தி செய்யும் பயிற்சியை வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு:*

படி 1

சின்னச் சின்னப் பூக்கள்
சிறிய ................ பூக்கள்
கண்ணைக் ........... பூக்கள்
................. தரும் பூக்கள்

படி 2

காற்றில் ............. பூக்கள்
................ பாடும் பூக்கள்
கொத்துக் .............. பூக்கள்
கொள்ளை ........... பூக்கள்

படி 3

............... நிறப் பூக்கள்
மனதைக் ............... பூக்கள்
.............. தரும் பூக்கள்
அழகுச் ............. பூக்கள்

*குறிப்பு* : இதுபோன்ற வேறு பாடல்களையும் அறிமுகம் செய்யும் சுதந்திரம் ஆசிரியருக்குண்டு.

செயற்பாடு **5**

- பாடநூலில் உள்ள **"உடல்நலம்"** என்ற கதையை இரசனையுடன் மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் ஆசிரியர் கதையை இரசனையுடன் வாசித்துக்காட்ட வேண்டும். மீண்டும் மாணவர்களைச் சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள். மாணவர்களுடன் சேர்ந்து நீங்களும் வாசியுங்கள்.

8 உடல் நலம்

குதிரை ஒன்று ஓட்டப் போட்டியில் பங்குபற்றியது. தனது உடல் நலக் குறைவால் தோல்வியடைந்தது.

எப்பொழுதும் ஓட்டப் போட்டியில் குதிரை தோற்றதில்லை. இம்முறை தோல்வி அடைந்தமைக்கு ஆளுக்கு ஆள் காரணம் சொல்ல ஆரம்பித்தனர்.




ஒரு வெள்ளை முயல் அதன் அருகில் வந்து ''குதிரை அண்ணா! நீங்கள் மிக வேகமாக ஓடியிருந்தால், நிச்சயம் வெற்றி பெற்றிருக்கலாம்'' என்றது.

பாய்ந்து வந்த குரங்கு ஒன்று ''குதிரை அண்ணா! நீங்கள் மற்றவர்களுக்கு இணையாக ஓடவில்லை. மற்றவர்களுக்கு உங்கள் வெற்றியை விட்டுக் கொடுத்து விட்டீர்கள்'' என்றது.



எங்கிருந்தோ வேகமாக ஓடிவந்த நாய் குதிரையைப் பார்த்து, ''குதிரையாரே! நீங்கள்தான் வெற்றி பெறுவீர்கள். உங்களை யாரும் வெல்ல முடியாது என்ற ஆணவத்தில் ஓடினீர்கள். அதனால்தான் தோற்றீர்கள்'' என்றது.


இவ்வாறு ஒவ்வொருவரும் குதிரைக்கு அறிவுரை கூறி, தமது ஆதங்கத்தைத் தீர்த்துக்கொண்டனர்.



மரமொன்றில் அமர்ந்திருந்த சிட்டுக்குருவி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தது. அது பறந்து வந்து குதிரையின் முதுகில் அமர்ந்தது. தனது அலகால் குதிரையின் முதுகைத் தடவியது. ''அண்ணா! உங்களுக்கு அறிவுரை கூற எனக்குத் தகுதி இல்லை. ஏனென்றால் ஓட்ட வீரரான உங்களுக்கு எப்படி ஓடவேண்டும் என்று சொல்லத் தேவையில்லை. உங்களுக்கு நல்ல ஆலோசனை ஒன்றைக் கூறுவதற்கு அனுமதி தருவீர்களா?'' என்று கேட்டது.

இதுவரை முயல், குரங்கு, நாய் ஆகியவற்றின் கருத்துக்களால் குதிரை மனமுடைந்திருந்தது. சிட்டுக் குருவியின் பேச்சு ஆறுதலைத் தந்தது.

''சிட்டுக் குருவியே நீ என் மனமறிந்து பேசுகிறாய். உன் ஆலோசனை எனக்கு அவசியம். எனவே தயக்கமின்றிக் கூறு'' என்றது.



''அண்ணா! எந்த ஒரு வீரனுக்கும் உடலும் உள்ளமும் எப்போதும் உற்சாகமாக இருக்கவேண்டும். உங்கள் உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளது. உங்கள் தோல்விக்கு அதுவே காரணம். உடல் நலம் பாதிக்கப்பட்டால் உள்ளமும் பாதிக்கப்படும். இனி, நீங்கள் உடல் நலத்தில் கவனம் செலுத்துங்கள். தோல்வியைக் கண்டு துவண்டு விடாதீர்கள். உங்கள் தோல்விக்கான காரணம் உடல் நலக் குறைவுதான். உடல் நலம் சீரானால் நிச்சயம் வெற்றி கிடைக்கும்'' என்று கூறிவிட்டு, சிட்டுக்குருவி பறந்து சென்றது.

- அதன் பின்னர் கீழ்வரும் உரையாடல்களை மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அட்டைக் கீலங்களில் எழுதிக் காகிதத் தட்டில் இட்டு ஒவ்வொரு குழுவிற்கும் வழங்குங்கள் (ஒரு குழுவில் அறுவர் இடம்பெறுதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்க).

**உரையாடல்கள்:**

1. முயல் - "குதிரை அண்ணா! நீங்கள் மிக வேகமாக ஓடியிருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம்"

2. குரங்கு - "குதிரை அண்ணா! நீங்கள் மற்றவர்களுக்கு இணையாக ஓடவில்லை. மற்றவர்களுக்கு உங்கள் வெற்றியை விட்டுக்கொடுத்து விட்டீர்கள்"

3. **நாய்** - "குதிரையாரே! நீங்கள்தான் வெற்றி பெறுவீர்கள். உங்களை யாரும் வெல்ல முடியாது என்ற ஆணவத்தில் ஓடினீர்கள். அதனால்தான் தோற்றீர்கள்"

4. **சிட்டுக்குருவி** - "உங்களுக்கு நல்ல ஆலோசனை ஒள்றைக் கூறுவதற்கு அனுமதி தாருங்கள்"

5. **குதிரை** - "சிட்டுக்குருவியே நீ என் மனமறிந்து பேசுகிறாய். உன் ஆலோசனை எனக்கு அவசியம். எனவே தயக்கமின்றிக் கூறு"

6. **சிட்டுக்குருவி** -"அண்ணா! எந்த ஒரு வீரனுக்கும் உடலும் உள்ளமும் எப்போதும் உற்சாகமாக இருக்க வேண்டும். உங்கள் உடல்நலம் பாதிக்கப்பட்டுள்ளது. உங்கள் தோல்விக்கு அதுவே காரணம்"

- குழுக்களில் உள்ள எல்லோரும் எல்லா அட்டைகளையும் சுழற்சி முறையில் உணர்வுபூர்வமாக உரத்தும் மௌனமாகவும் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள். வினவப்படும் வினாக்கள் தரம் 3 மாணவர்களுக்குப் பொருத்தமானதாக இருத்தல் வேண்டும்.

**செயற்பாடு 6**

- மேலே தரப்பட்டுள்ள உரையாடல்களே விடைகளாக வரக்கூடிய வினாக்களை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

1. குதிரைக்கு ஆலோசனை கூறிய பிராணிகள் எவை?

   ................................................................................................................................

2. முயல் குதிரையைப் பார்த்து என்ன கூறியது?

   ................................................................................................................................

3. குரங்கு குதிரைக்கு எவ்வாறு அறிவுரை கூறியது?

   ................................................................................................................................

   ................................................................................................................................

4. குதிரை வேதனைப்படும்படி நாய் என்ன கூறியது?

   ................................................................................................................................

   ................................................................................................................................

5. உங்களுக்கு நல்ல ஆலோசனை ஒன்றைக் கூறுவதற்கு அனுமதி கேட்ட பிராணி எது?

   ................................................................................................................................

6. குதிரை சிட்டுக்குருவியைப் பார்த்து என்ன கூறியது?

.................................................................................................................................

.................................................................................................................................

7. சிட்டுக்குருவி குதிரையின் தோல்விக்கு என்ன காரணத்தைக் கூறியது?

.................................................................................................................................

.................................................................................................................................

- உரையாடல் அட்டையில் உள்ளவற்றை விடையாக எழுதுவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள். உற்சாகப்படுத்துங்கள். (ஒரே நாளில் எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வேண்டாம்.)


**செயற்பாடு 7**

- கீழே தரப்பட்டுள்ள எழுதுவதும் அழிப்பதும் என்ற கதையை மாணவர்களுக்கு உணர்வுபூர்வமாக வாசித்துக்காட்டுங்கள்.

***எடுத்துக்காட்டு:***


**எழுதுவதும் அழிப்பதும்**

நந்தினி உபகரணப் பெட்டியைத் திறந்தாள். அதற்குள் புதிய அழிறப்பரையும் பென்சிலையும் வைத்தாள். அழிறப்பர் பென்சிலைப் பார்த்தது. பென்சில் அழிரப்பரைக் பார்த்தது. இருவரும் எதுவும் பேசவில்லை. சிறிது நேரத்தின் பின்னர் அழிறப்பர் பென்சிலைப் பார்த்துச்சிரித்தது. பென்சில் சிரிக்கவே இல்லை.



அழிறப்பர் பென்சிலைப் பார்த்து "எப்படி இருக்கிறாய்?" என்று கேட்டது. அதற்குப் பென்சில் "நான் உன்னுடன் பேசமாட்டேன்" என்றது. அழிறப்பர் பென்சிலைப் பார்த்து "ஏன் பேசமாட்டாய்?" என்றது. அதற்குப் பென்சில் "எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை" என்று கூறியது.


"ஏன் என்னைப் பிடிக்கவில்லை?" என்று அழிறப்பர் சோகத்துடன் கேட்டது. "நீதானே நான் எழுதுபவற்றை எல்லாம் அழித்துவிடுகிறாய். நான் ஏன் உன்னுடன் பேச வேண்டும்?" என்று பென்சிலிடம் கோபமாகக் கூறியது.



"நான் தவறுகளை மட்டும்தானே அழிக்கிறேன்" என்று அழிறப்பர் பணிவுடன் கூறியது. "அழிப்பது மட்டும்தானா உனது வேலை?" என்று பென்சில் கேட்டது. "ஆம் அழிப்பது தான் எனது வேலை! என்று அழிறப்பர் பதில் அளித்தது. "இது ஒரு வேலையா?" என்று பென்சில் எரிச்சலுடன் கேட்டது. அழிறப்பர் பென்சிலைப் பார்த்து எழுதுவது உனது வேலை, அழிப்பது எனது வேலை. இரண்டு வேலையும் பயன்மிக்கதே எனக் கூறியது.


"எழுதுவது எவ்வளவு கடினமான வேலை தெரியுமா? சிந்தித்துத்தான் எழுத வேண்டும். உனது வேலை அப்படி அல்லவே" என்று பென்சில் பதில் அளித்தது.

அதற்கு அழிறப்பர் “எது சரி, எது பிழை எனச் சரியாகத் தெரிந்த பிறகுதான் அழிக்க வேண்டும். அதற்கும் சிந்திக்க வேண்டும்” என்று கனிவுடன் கூறியது.



பென்சில் சிறிது நேரம் எதுவும் பேசவில்லை. அழிறப்பர் மீண்டும் பேசத் தொடங்கியது. “தவறுகளை அழித்தால்தான் நீ எழுதியவற்றை மற்றவர்கள் பாராட்டுவார்கள். இதை நீ உணர்ந்துகொள்” என்றது.

“நண்பனே, நீ சொல்வது சரிதான். இனி உன்னை வெறுக்கமாட்டேன்” என்று பென்சில் மகிழ்ச்சியுடன் கூறியது.



“எந்த வேலையையும் நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. எல்லா வேலைகளுமே முக்கியமான வைதான்” என்று அழிறப்பர் கூறியது. அதற்குப் பென்சில் “இனி நாம் இருவரும் ஒற்றுமையாக இருப்போம்” என்று மகிழ்ச்சியுடன் கூறியது.

- இக்கதையை மாணவர்கள் உணர்வுபூர்வமாக வாசித்தும் வாசிக்கும்போது நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசிக்கவும் வழிப்படுத்துங்கள். பாடநூலில் தரப்பட்டுள்ள இக்கதையை ஒரே நாளில் வாசிக்க மாணவர்களைத் தூண்டுவதைத் தவிர்க்கவும். மாணவர்களின் வயதிற்கேற்ற வேகத்தில் வாசிப்பது போதுமானது. மாணவர்கள் வாசித்த பின் அவர்கள் விரும்பிய உரையாடல் வரிகளை இனங்கண்டு அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். கதை தொடர்பாக வினாக்களுக்கு மாணவர்கள் விடையளிக்கும் பயிற்சியை வழங்கி மாணவர்களைச் சிந்திக்கத் தூண்டுங்கள்.

செயற்பாடு 8

- இக்கதையை விரல்பொம்மை உரையாடலாக மாற்றி மாணவர்கள் குழுவாக உரையாட வழிப்படுத்துங்கள். உரையாடல்களை பிரதியெடுத்து எல்லா மாணவர்களுக்கும் வழங்குங்கள். எல்லா மாணவர்களும் வாசித்துப் பயிற்சி பெற்ற பின்னர் விரல்பொம்மை உரையாடலை மேற்கொள்ளுங்கள்.

**அழிறப்பர்** : எப்படி இருக்கிறாய்?”

பென்சில் : நான் உன்னுடன் பேசமாட்டேன்.

**அழிறப்பர்** : ஏன் பேசமாட்டாய்?

பென்சில் : எனக்கு உன்னைப் பிடிக்கவில்லை

**அழிறப்பர்** : ஏன் என்னைப் பிடிக்கவில்லை?

பென்சில் : நீதானே நான் எழுதபவற்றை எல்லாம் அழித்து விடுகிறாய். நான் ஏன் உன்னுடன் பேச வேண்டும்?

**அழிறப்பர்** : நான் தவறுகளை மட்டும்தானே அழிக்கிறேன்

பென்சில் : அழிப்பது மட்டும்தானா உனது வேலை?

**அழிறப்பர்** : ஆம் அழிப்பது தான் எனது வேலை!

பென்சில் : இது ஒரு வேலையா?

**அழிறப்பர்** : எழுதுவது உனது வேலை, அழிப்பது எனது வேலை. இரண்டு வேலையும் பயன்மிக்கதே.

பென்சில் : எழுதுவது எவ்வளவு கடினமான வேலை தெரியுமா? உனது வேலை அப்படி அல்லவே.

**அழிறப்பர்** : எது சரி, எது பிழை எனச் சரியாகத் தெரிந்த பிறகுதான் அழிக்க வேண்டும். அதற்கும் சிந்திக்க வேண்டும்.

பென்சில் : .............. (மௌனம்)

**அழிறப்பர்** : தவறுகளை அழித்தால்தான் நீ எழுதியவற்றை மற்றவர்கள் பாராட்டுவார்கள். இதை நீ உணர்ந்துகொள்.

பென்சில் : நண்பனே, நீ சொல்வது சரிதான். இனி உன்னை வெறுக்கமாட்டேன்

**அழிறப்பர்** : எந்த வேலையையும் நாம் குறைத்து மதிப்பிடக் கூடாது. எல்லா வேலைகளுமே முக்கியமானவைதான்.

பென்சில் : இனி நாம் இருவரும் ஒற்றுமையாக இருப்போம்.

*குறிப்பு:* பென்சில் போன்றும் அழிறப்பர் போன்றும் காட்போட்டில் விரல்பொம்மை செய்து இச்செயற்பாட்டைச் செய்யுங்கள். விரல்பொம்மை செய்வதற்கு அதிபரின் அனுமதியுடன் பெற்றோரின் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ளுங்கள்.


- விரல் பொம்மை உரையாடலில் மாணவர்கள் தமக்குப் பிடித்த உரையாடல் வரிகளை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். இவ்வுரையாடல் தொடர்பாக மாணவர்களிடம் வினாக்களை வழங்கி அவற்றிற்கான விடைகளை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 9

- ஏற்கனவே கற்ற பாடல்கள், கதைகள் போன்றவற்றின் கதாபாத்திரங்களைப் போன்று போலச் செய்து காட்டவும் அவற்றை வாக்கியங்களில் எழுதவும் வழிப்படுத்துங்கள். பாடநூலிலுள்ள உடல்நலம் என்ற பாடத்தின் ஊடாகப் பின்வருவன கதைப்பது போன்று செய்துகாட்ட வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு :* குதிரையும் முயலும்
குதிரையும் குரங்கும்
குதிரையும் நாயும்
குதிரையும் சிட்டுக்குருவியும்


1. **குதிரையும் முயலும்**




2. குதிரையும் குரங்கும்



3. குதிரையும் நாயும்



4. குதிரையும்
சிட்டுக்குருவியும்



- மேற்குறிப்பிட்ட கதாபாத்திரங்கள் கதைப்பது போன்று மாணவர்கள் போலச்செய்து காட்டவும் உரையாடவும் ஊக்கப்படுத்துங்கள். அதன் பின்னர் அவ்வுரையாடல்களை எழுதிக்காட்டவும் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இதுபோன்ற பாடல்கள், கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் போலச் செய்து உரையாடவும் அவ்வுரையாடல்களை எழுதவும் வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 10

- இணையத்தளங்கள் ஊடாகப் பெறப்பட்ட சிறுவர் பாடல்கள், கதைகள் கொண்ட காணொளிகளை மாணவர்கள் பார்க்கவும், செவிமடுக்கவும் அது தொடர்பாகப் பேசவும் களம் அமைத்துக் கொடுங்கள்.
- மாணவர்கள் இரசித்த, கேட்ட பாடல்கள், கதைகளில் வரும் பாத்திரங்கள் பற்றிச் சில வாக்கியங்கள் எழுத வழிப்படுத்துங்கள். மாணவர்கள் சுயமாக கதையில் வரும் பாத்திரங்கள் போன்று உரையாடல்களை எழுதி ஒலிப்பதிவு செய்து மீண்டும் செவிமடுக்க வாய்ப்பு வழங்குங்கள்.

செயற்பாடு 11

- இதுவரை கற்ற பாடல்கள், கதைகள் தொடர்பாக மனதில் தோன்றுபவற்றைச் சித்திரமாக வரைந்து நிறந்தீட்டிக் காட்சிப்படுத்த மாணவர்களை வழிப்படுத்துங்கள். காட்சிப்படுத்திய சித்திரங்களுக்குக் கீழே அச்சித்திரங்கள் எதைப் பற்றி விபரிக்கின்றன எனச் சிறிய வாக்கியங்கள் எழுத மாணவர்களை வழிப்படுத்துங்கள். தாம் வரைந்த சித்திரங்களை இரசிக்கவும் மற்றவர்களின் சித்திரங்களை மதிக்கவும் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுங்கள்.

**கணிப்பீடு:**

- பாடல்களை இரசனையுடன் வாசித்தல் / எழுதுதல்
- கதையில் வரும் உரையாடல்களை விருப்புடனும் இரசனையுடனும் வாசித்தல் / எழுதுதல்
- விரல் பொம்மை உரையாடல்களை வாசித்தல் / எழுதுதல்
- போலச் செய்து காட்டிய பாத்திரத்தை வாசித்தல் / எழுதுதல்
- காணொளிகளைப் பார்த்து செவிமடுத்து தாம் இரசித்தவற்றை எழுதுதல் / வாசித்தல்
- கற்ற பாடல்கள், கதைகளில் வரும் காட்சிகளை வரைதல்; அதற்கு உரிய தலைப்பிற்கு எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

# 4

**தேர்ச்சிகள் :**

- $L_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- $S_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காகப் பேசுவார்.
- $R_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக வாசிப்பார்.
- $W_4$ – நாளாந்தத் தேவைகளை நிறைவு செய்வதற்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- நூலகத்துடன் தொடர்புடைய
  - அறிவித்தல்கள்
  - அறிவுறுத்தல்கள்
  - கட்டளைகள்
  - தகவல்கள்
  - சுய விபரம்

**கற்றற்பேறுகள் :**

- நூலகத்துடன் தொடர்புடைய சிறிய, சுருக்கமான அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களை விளங்கி அவற்றுக்கேற்ப துலங்குவார்.
- நூலகத்துடன் தொடர்புடைய கட்டளைகளைச் செவிமடுத்து அதற்கேற்பத் துலங்குவார்.
- நூலகத்துடன் தொடர்புடைய தகவல்களை அறிந்துகொள்வார். தகவல்களைத் தெளிவாக எழுதிச் சமர்ப்பிப்பார்.
- பாடசாலை நூலக அங்கத்துவப் படிவத்தை வாசித்துப் பிழையின்றிச் சுருக்கமாகப் பூர்த்திசெய்ய முன்வருவார்.

**வளங்கள் :**

- அறிவித்தல், அறிவுறுத்தல், அட்டைக் கீலங்கள், சொல் அட்டைகள், கட்டளை அட்டைகள், பயிற்சி அட்டைகள், நூலக அங்கத்துவப் படிவம், அட்டைத் தட்டுகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

செயற்பாடு **1**

- மாணவர்களை அழைத்துச் சென்று நூலகமொன்றைப் பார்வையிடச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுங்கள். அங்குள்ள அறிவித்தல்கள், அறிவுறுத்தல்களை வாசிக்க வழிப்படுத்துங்கள். நூலகத்தைப் பார்வையிட்ட பின் வகுப்பறையில் மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

செயற்பாடு 2

- நூலகம் ஒன்றிலுள்ள அறிவித்தல்களை அட்டைக் கீலங்களில் எழுதி மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு:*

**அறிவித்தல் 1**

நூலகத்தில் அமைதியைப் பேணவும்.

**அறிவித்தல் 2**

நூலகத்திற்கு வரும்போது அங்கத்துவ அட்டையைக் கொண்டுவரவும்.

**அறிவித்தல் 3**

நூலகம் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை திறந்திருக்கும்.

**அறிவித்தல் 4**

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3 மணிக்கு சிறுவர்களுக்கான கதை சொல்லும் நிகழ்வு நடைபெறும்.

**அறிவித்தல் 5**

பௌர்ணமி தினங்களில் நூலகம் மூடப்படும்.

**அறிவித்தல் 6**

புத்தகங்களை அனுமதியின்றி வெளியே எடுத்துச் செல்லாதீர்கள்.

- காட்சிப்படுத்திய அறிவித்தல்களை மாணவர்களுக்கு வாசித்துக்காட்டுங்கள். அதன் பின்னர் மாணவர்கள் சுயமாக வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் அட்டைக்கீலங்கள் கொண்ட அட்டைத் தட்டை வழங்குங்கள். குழுவிலுள்ள ஒவ்வொருவரும் அறிவித்தல்களை வாசித்து மற்றவர்களுக்குக் கூறுதல் வேண்டும். அதன் பின்னர் அவ்வறிவித்தல்களை அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுத வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 2

- நூலகத்தில் எழுதப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் தொடர்பாகக் கேட்டறியுங்கள். நூலகத்துடன் தொடர்புடைய அறிவித்தல்களை மாணவர்களுக்கு அட்டைக் கீலங்களில் எழுதி ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

  **எடுத்துக்காட்டு:**

**அறிவுறுத்தல் 1**

நூலகத்திற்குள் கைத்தொலைபேசியைப் பயன்படுத்தக்கூடாது.

**அறிவுறுத்தல் 2**

இரவல் பெற்ற புத்தகங்களை உரிய திகதியில் ஒப்படைக்காவிடின் தண்டப்பணம் அறவிடப்படும்.

**அறிவுறுத்தல் 3**

நூலகத்தில் இரவல் பெறும் புத்தகங்களை சேதப்படுத்தினால் தண்டப்பணம் அறவிடப்படும்.

**அறிவுறுத்தல் 4**

நூலகத்தில் உள்ள புத்தகங்களை ஒளிப்படம் எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

**அறிவுறுத்தல் 5**

சிறுவர் நூலக வாசிப்புப் பகுதிக்குள் சிறுவர்கள் தவிர்ந்த வேறு எவரும் உள்நுழையலாகாது.

**அறிவுறுத்தல் 6**

நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசித்து முடித்ததும் உரிய இடங்களில் வைத்துவிட்டுச் செல்லவும்.

- ஒட்டுப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். மாணவர்கள் சிலரை எழுமாறாக அழைத்து அறிவுறுத்தல்களை வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்கள் சோடி சேர்ந்து தாம் எழுதிய அறிவுறுத்தல்களை வாசிக்க வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 3

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் அறிமுகப்படுத்திய அறிவுறுத்தல்களில் சில சொற்களை நீக்கிக் கட்டமிட்டு அட்டைக் கீலங்களில் எழுதி, தட்டொன்றில் இட்டு வழங்குங்கள். அவ்வட்டைக் கீலங்களில் எழுதப்பட்டுள்ள அறிவுறுத்தல்களில் விடுபட்டுள்ள சொற்களைக் கண்டுபிடிக்க வழிப்படுத்துங்கள்.
- கண்டுபிடித்த பின்னர் அறிவுறுத்தல்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய பின்னர் எல்லா மாணவர்களினதும் கொப்பிகளைப் பார்வையிடுங்கள்.

***எடுத்துக்காட்டு:***

1. நூலகத்திற்குள் ........................... பயன்படுத்தக்கூடாது.
2. நூலகத்தில் இரவல் பெற்ற புத்தகங்களை உரிய திகதியில் ஒப்படைக்காவிடின் .................... அறவிடப்படும்.
3. நூலகத்தில் இரவல் பெறும் புத்தகங்களைச் ....................... தண்டப்பணம் அறவிடப்படும்.

4. நூலகத்தில் உள்ள புத்தகங்களை ...................... எடுப்பது தண்டனைக்குரிய குற்றமாகும்.

5. சிறுவர் நூலக வாசிப்புப் பகுதிக்குள் ................. தவிர்ந்த வேறு எவரும் உள்நுழையலாகாது.

- மாணவர்கள் ஏற்கனவே வாசித்த அறிவுறுத்தல்களை நினைவுபடுத்தி அறிவுறுத்தல்களில் விடுபட்ட இடங்களைப் பூர்த்திசெய்ய வழிப்படுத்துங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு உதவுங்கள்.

செயற்பாடு 4

- மாணவர்களுக்கு நூலகத்துடன் தொடர்புடைய கட்டளைகளை அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**1.** வாசித்த புத்தகங்களை வலது புறத்திலுள்ள இறாக்கையில் வையுங்கள்.


**2.** சிறுவர் நூல்களைப் பார்வையிட இரண்டாம் மாடிக்குச் செல்லுங்கள்.

**3.** புத்தகங்களைத் தெரிவுசெய்த பின்னர் புத்தக அலுமாரியை மூடிவிடுங்கள்.

**4.** அலுமாரியின் கீழ்த்தட்டில் உள்ள புத்தகங்களை எடுக்காதீர்கள்.

**5.** நூலகத்தினுள் உரத்துப் பேசாதீர்கள். அமைதியாக இருந்து வாசியுங்கள்.

- காட்சிப்படுத்தப்பட்ட அட்டைகளை வாசிக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள். வாசித்த பின் அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுதி, முற்றுப்புள்ளியிட வழிப்படுத்துங்கள். அப்பியாசக் கொப்பியில் எழுதியவற்றை, இருவரிருவராகச் சோடி சேர்ந்து வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.
- மாணவர்களை வட்டமாக அமரச் செய்யுங்கள். அமர்ந்த பின்னர் ஒரு மாணவனை அழைத்து காட்சிப்படுத்தப்பட்டுள்ள கட்டளை ஒன்றை வாசித்து மனதில் நிறுத்தி அருகிலுள்ள மாணவனுக்குக் கூற வேண்டும். செவிமடுத்த மாணவன் அக்கட்டளையை அடுத்த மாணவனுக்குக் கூற வேண்டும். இவ்வாறு எல்லா மாணவர்களுக்கும் கூற வேண்டும். இறுதியில் உள்ள மாணவன் எழுந்து நின்று அக்கட்டளையை உரத்துக் கூற வேண்டும். முதலில் கூறிய மாணவன் தான் கூறிய கட்டளையைக் கூற வேண்டும். எவ்வாறு கட்டளைகள் பரிமாறப்பட்டன, எங்கு தவறு நடக்கிறது என்று உரையாடுங்கள். எல்லா மாணவர்களையும் இவ்வாறு பரிமாற வழிப்படுத்துங்கள்.



செயற்பாடு 5

- மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். அவர்கள் குழுவாக நூலகத்திற்குச் சென்று தகவல்களைச் சேகரிக்க ஆர்வமூட்டுங்கள். (முன்கூட்டியே அதிபரிடமும் நூலகரிடமும் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுங்கள்).
- பாடசாலையில் நூலக வசதி இல்லாதிருப்பின் அருகிலுள்ள நூலகத்திற்கு (அனுமதி பெற்று) அழைத்துச்செல்லுங்கள். மாணவர்கள் நூலகத்திற்குச் செல்வதற்கு முன்னர் எவ்வாறு புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளன, புத்தக அலுமாரியில் எழுதப்பட்டுள்ள நூல்கள் பற்றிய விபரம், நூலகம் திறக்கும் நேரம், நூலாசிரியர் பெயர், நூலகம் ஆரம்பித்த ஆண்டு போன்ற விபரங்களைத் திரட்டிவருமாறு கூறுங்கள்.
- மாணவர்கள் தகவல் திரட்டியதும் ஒவ்வொரு குழுவாகத் தகவல்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள். எல்லாக் குழுக்களும் கூறிய தகவல்களையும் சுருக்கமாக கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுங்கள். அதன் பின்னர் தேவையான தகவல்களை மட்டும் அட்டைக் கீலங்களில் எழுதி, ஒட்டுப் பலகையில் காட்சிப் படுத்துங்கள். அவற்றை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். எழுதிய தகவல்களைச் சுயமாக வாசிக்க ஆர்வமூட்டுங்கள்.

செயற்பாடு 6

- நூலக அங்கத்தவப் படிவம் ஒன்றைப் பெற்று அப்படிவத்தை எல்லா மாணவர்களுக்கும் பிரதியெடுத்து வழங்குங்கள்.

**பொதுசன நூலகம்**

**சிறுவர் பகுதி அங்கத்துவ விண்ணப்பம்**

நகர எல்லைக்குள் வசிக்கும் / கல்வி கற்கும் வயது 14 வருடங்களிற்கு கீழ்ப்பட்டவராகிய நான் பொதுசன நூலக விதிகளிற்கும் பிரமாணங்களிற்கும் அமைவாக சிறுவர் பகுதி அங்கத்தவராக இணைவதற்கு விண்ணப்பிக்கின்றேன். எனது சுய விபரம் பின்வருமாறு:

(1) முழுப் பெயர் : ................................................................

(2) முகவரி : ................................................................

(3) பாடசாலையின் பெயர் : ................................................................

(4) பிறந்த திகதி : ................................................................

அங்கத்தவராக அனுமதிக்கப்பட்டால் நூலக விதிகளுக்கு அமைவாகச் செயற்படுவேன் என உறுதியளிக்கின்றேன்.

..................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

- மாணவர்கள் நூலக அங்கத்துவ அட்டையைப் பூர்த்தி செய்யும்போது உறுப்பமைய எழுத வேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறுங்கள். வெட்டி, அழித்து, சிதைக்கக் எழுதக்கூடாது என்பதையும் நினைவுபடுத்துங்கள்.

*குறிப்பு* : நூலக அங்கத்துவப் படிவம் ஒன்றை மாணவர்களுக்குப் பூர்த்தி செய்து காட்டிய பின்னரே மாணவர்களைப் பூர்த்தி செய்யப் பயிற்சியளிக்க வேண்டும் என்பதைக் கவனத்திற் கொள்ளுங்கள்.

கணிப்பீடு :

- அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள் ஆகியவற்றைச் செவிமடுத்துத் துலங்குதல், வாசித்தல், எழுதுதல், தகவல்களைத் திரட்டுதல், நூலக அங்கத்துவப் படிவத்தைப் பூர்த்தி செய்தல் ஆகியவற்றைக் கணிப்பிடுக.

# 5

**தேர்ச்சிகள் :**

**$L_5$** – சொற்களஞ்சிய விருத்திக்காகச் செவிமடுப்பார்.

**$S_5$** – சொற்களஞ்சிய விருத்திக்காகப் பேசுவார்.

**$R_5$** – சொற்களஞ்சிய விருத்திக்காக வாசிப்பார்.

**$W_5$** – சொற்களஞ்சிய விருத்திக்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- சிறிய கட்டுரைகள்
- இளமைப் பெயர்கள் (மரபுச் சொற்கள்)
- விடுகதைகள்
- குறியீடுகள்
- சொல்வதெழுதல் (தெரிவுசெய்யப்பட்ட சொற்கள்)

**கற்றற்பேறுகள் :**

- சிறிய கட்டுரைகளைச் செவிமடுத்து அவற்றை மீளவும் முன்வைப்பார். உரிய வகையில் பிரயோகிப்பார்.
- மரபுச் சொற்களை அறிந்து உரியமுறையில் பிரயோகிப்பார்.
- விடுகதைகளைக் கேட்டறிந்து முன்வைப்பதோடு ஆர்வத்துடன் விடுவிப்பார்.
- குறியீடுகளை இனங்காண்பதோடு விளங்கிப் பொருத்தமுறப் பயன்படுத்துவார்.
- தெரிவுசெய்யப்பட்ட சொற்களைக் கவனமாகச் செவிமடுத்துப் பிழையின்றி எழுதுவார்.

**வளங்கள் :**

- கட்டுரை அட்டைகள், சொல்லட்டைகள், விடுகதை அட்டைகள், பட அட்டைகள், வினா அட்டைகள், ஒலிப்பதிவுக் கருவி, கணினி, கைப்பேசி, இளமைப் பெயர் அட்டைகள், விடுகதைக்கான விடைப் படங்கள், ஒட்டுப்பலகை, அட்டைக் கீலங்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்கள் சொற்களஞ்சியத்தை விருத்திசெய்து கொள்வதற்காகப் பாடப்புத்தகத்தில் உள்ள வண்ண மீன்கள் கட்டுரையைப் பிரதியெடுத்து காட்சிப்படுத்துங்கள். காட்சிப்படுத்திய கட்டுரையை ஏற்ற, இறக்கங்களுடன் வாசித்துக்காட்டுங்கள். அதன் பின்னர் மாணவர்களிடம் மீன் தொட்டி பற்றிக் கேளுங்கள். மீன் தொட்டியில் வளர்க்கப்படும் மீன்கள் பற்றி உரையாடுங்கள். மீன் தொட்டியைப் பார்த்துக்கொண்டு இருப்பீர்களா? அது அழகாக இருக்குமா? என்று கேளுங்கள். அதன் பின்னர் பாடப்புத்தகத்தில் உள்ள ‘‘வண்ண மீன்கள்’’ (பக்கம் 23) என்ற பாடத்தை மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள்.

*எடுத்துக்காட்டு:*

11

## வண்ண மீன்கள்



அழகை அனைவரும் விரும்புகின்றோம். நாம் வாழும் வீடு அழகாக இருக்கவேண்டும். அழகுக்கு மேலும் அழகு தருவது தொட்டிகளில் வளர்க்கப்படும் வண்ண வண்ண மீன்களே! சுறுசுறுப்பாக நீந்திச் செல்லும் மீன்கள் வற்றாத மகிழ்ச்சியை எமக்குத் தருகின்றன.

நம் முன்னோர் இயற்கையுடன் வாழ்ந்தார்கள். நிம்மதியாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள். ஆனால் நாமோ இயற்கையைப் புறக்கணித்தோம். மனநிம்மதியை இழந்தோம். வீட்டினுள் நிம்மதியைத் தேடுவதானால் இயற்கையின் சில அம்சங்களையாவது வீட்டினுள் கொண்டு வரவேண்டும். மீன் தொட்டிகளில் அலங்கார மீன் வகைகளை வளர்த்தல் அவ்வாறான ஒரு செயற்பாடாகும்.

மீன் தொட்டியின் அழகை இரசியுங்கள். வண்ண வண்ண மீன்கள் சுறுசுறுப்பாக நீந்துவதைப் பாருங்கள். அவை ஒன்றையொன்று துரத்திச் செல்வது அழகோ அழகு! அதைப் பார்க்கும் போது எமது மனதிற்கு அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கும்.

அலங்கார மீன்கள் சுறுசுறுப்பாக நீந்தி விளையாடுவதற்கு ஒட்சிசனே காரணம். அதற்கு நீர்த்தாவரங்களைத் தொட்டியில் இடலாம். அல்லது செயற்கையாகத் தொட்டி நீரினுள் ஒட்சிசனைச் செலுத்தலாம். தொட்டி நீரினுள் ஒட்சிசன் குறையுமானால் மீன்கள் சோர்வடைந்துவிடும். ஒட்சிசனுடன் அளவான உணவும் தேவை. அத்துடன் தொட்டியில் மீன் வளர்ப்பவர்கள் தொட்டியைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

இவ்வாறு அலங்கார மீன்களை வளர்ப்பது தமது உடல் நலத்திற்கும் நல்லது எனக் கூறுவர். இவற்றைப் பார்த்து மகிழ்வதால் மன அழுத்தம் குறைகிறது. இரத்த அழுத்தம் உடையவர்களுக்கு அது குறைவதாகக் கண்டறிந்துள்ளனர். எனவே நாமும் அழகிய மீன்களைத் தொட்டிகளில் வளர்த்துப் பயன்பெறுவோம்

வண்ண மீன்கள் வளர்ப்போம்.
அன்பினைப் பரிமாறி மகிழ்ச்சி அடைவோம்.

- அதன் பின்னர், மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். பாடப்புத்தகத்தை வாசிக்க வழிப்படுத்துங்கள். பாடநூலில் ஐந்து பந்திகள் உள்ளன. முதற் பந்தியை மாணவர்களைக் குழுவாக வாசிக்க வையுங்கள். அதன் பின்னர் நீங்களும் அக்குழுக்களுடன் சேர்ந்து வாசியுங்கள். அதன் பின்னர் இரண்டாவது பந்தி, மூன்றாவது, நான்காவது, ஐந்தாவது பந்தி என்றவாறு வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் பந்தியில் வரும் சில முக்கிய சொற்களை அட்டையில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு* :

| | | |
|---|---|---|
| சுறுசுறுப்பு | அமைதி | இயற்கை |
| ஒட்சிசன் | முன்னோர் | நீர்த்தாவரங்கள் |
| மகிழ்ச்சி | செயற்கை | தொட்டிகள் |
| மன அழுத்தம் | நிம்மதி | உடல்நலம் |

- இச்சொற்களை மாணவர்களுக்குச் சரியாக உச்சரித்து வாசித்துக்காட்டுங்கள். மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். காட்சிப்படுத்திய இச்சொற்களை அகற்றிவிட்டு, அச்சொற்களைச் சொல்வதெழுதலாக வழங்குங்கள். மாணவர்களின் அப்பியாசக் கொப்பியைப் பார்வையிட்டு உடனுக்குடன் திருத்தங்களைச் செய்யுங்கள்.

செயற்பாடு 2

- வண்ண மீன்கள் என்ற கட்டுரையிலிருந்து சொற்களஞ்சிய விருத்திக்காகப் பின்வரும் பயிற்சியை வழங்குங்கள்.

பயிற்சி 1

கட்டத்திற்குள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியங்களைப் பூர்த்திசெய்க.

| |
|---|
| அழகாக, இயற்கையுடன், அழகை, அனைவரும், மகிழ்ச்சியுடன் |

1. அழகை ..................... விரும்புகின்றோம்.
2. நாம் வாழும் வீடு ................ இருக்க வேண்டும்.
3. நம் முன்னோர்கள் .................. வாழ்ந்தார்கள்.
4. நிம்மதியாக .................. வாழ்ந்தார்கள்.
5. மீன் தொட்டியின் ............... இரசியுங்கள்.

- இதுபோன்ற வேறு பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்குங்கள்.

செயற்பாடு 3

- மாணவர்களுக்குப் பின்வரும் மரபுச் சொற்களை (இளமைப் பெயர்களை) அறிமுகம் செய்யுங்கள். (பெரிய தாளில் பெரிய எழுத்துக்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள்.)

*எடுத்துக்காட்டு:*

தொகுதி 1

**இளமைப் பெயர்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.** | **அணில் -** | பிள்ளை, குஞ்சு | **6.** | **பூனை -** | குட்டி, பறழ் |
| **2.** | **எலி -** | குஞ்சு | **7.** | **மான் -** | குட்டி, கன்று |
| **3.** | **குதிரை -** | குட்டி | **8.** | **மீன் -** | குஞ்சு |
| **4.** | **குரங்கு -** | குட்டி, பறழ் | **9.** | **கரடி -** | குட்டி |
| **5.** | **சிங்கம் -** | குட்டி, குருளை | **10.** | **காகம் -** | குஞ்சு |

- முதல் தொகுதி இளமைப் பெயர்களை மாணவர்கள் நன்கு பரிச்சயம் பெறும் வரை எல்லா மாணவர்களிடமும் பல தடவை வினவி, மனதிற் பதியவையுங்கள். அதன் பின்னர் இளமைப் பெயர்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி இருவரிருவராகச் சேர்ந்து வாசித்துக்காட்ட உற்சாகப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் இளமைப் பெயர்களை வாக்கியங்களில் அமைத்துக் காட்டி, அவர்களையும் வாக்கியங்கள் அமைக்க வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

1. பூனைக் குட்டிகள் தாயுடன் விளையாடின.
2. குதிரைக் குட்டி தாயுடன் சேர்ந்து ஓடியது.
3. சிங்கம் தனது குட்டிகளைக் கவனமாகப் பாதுகாத்தது.
4. எலிக் குஞ்சு அங்குமிங்கும் ஓடியது.
5. மான் குட்டியைப் பார்க்க அழகாக இருந்தது.

செயற்பாடு 4

- மாணவர்களுக்கு மேலும் சில இளமைப் பெயர்களை (தொகுதி 2) அறிமுகம் செய்யுங்கள்.

*எடுத்துக்காட்டு:* தொகுதி 2

**இளமைப் பெயர்கள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **1.** | **நெல் -** | நாற்று | **6.** | **கிளி -** | பிள்ளை |
| **2.** | **மா -** | கன்று | **7.** | **மாடு -** | கன்று |
| **3.** | **வாழை -** | குட்டி | **8.** | **ஆடு -** | குட்டி |
| **4.** | **கமுகு -** | பிள்ளை, கன்று | **9.** | **கோழி -** | குஞ்சு |
| **5.** | **பனை -** | வடலி | **10.** | **பாம்பு -** | குட்டி |

- மாணவர்களுக்கு இரண்டாம் தொகுதி இளமைப் பெயர்களை அறிமுகம் செய்யுங்கள். அதன் பின்னர் மாணவர்களை அப்பியாசக் கொப்பியில் எழுதி, சுயமாக வாசிக்குமாறு கூறுங்கள். வாசித்த பின்னர் மாணவர்கள் எல்லோரிடமும் இளமைப் பெயர்களை வினவுங்கள். அவர்கள் பரிச்சயம் பெறும்வரை வினவுங்கள்.
- அதன் பின்னர், இளமைப் பெயர்களை வாக்கியங்களில் அமைத்துக்காட்டுங்கள்.

***எடுத்துக்காட்டு :***

1. வயலில் பெண்கள் நாற்று நட்டார்கள்.
2. மாங்கன்றை நாட்டினார்கள்.
3. தாயினைக் கண்ட கன்று துள்ளிக் குதித்தது.
4. கோழி தனது குஞ்சுகளைப் பாதுகாத்தது.
5. ஆட்டுக்குட்டி துள்ளி ஓடியது.

செயற்பாடு 2

- மாணவர்களுக்குப் பின்வரும் விடுகதைகளை(7) பெரிய தாளில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். விடுகதையை வாசித்துக் காட்டுங்கள். மாணவர்கள் விடுகதையைக் கண்டுபிடிக்க வாய்ப்புக் கொடுங்கள். அதன் பின்னர் மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள். குழுக்களிடையே விடுகதைகளை வாசித்து விடையைக் கண்டுபிடிக்க வழிப்படுத்துங்கள். கண்டுபிடிக்க முடியாவிடின் அருகில் தரப்பட்டுள்ள படங்களில் இருந்து விடையைக் கண்டுபிடிக்க வழிப்படுத்துங்கள். பாடநூல்-பக்கம்25)

***எடுத்துக்காட்டு*** : (முதல் 7 விடுகதைகள்)


12

விடுகதைகள்

1. மனிதன் செய்யாத குடை; மழைக்குப் பிடிக்க முடியாத குடை. அது என்ன?

2. முட்டையிடும். அடைகாக்கத் தெரியாது கூட்டிலே குடியிருக்கும்; கூடு கட்டத் தெரியாது. அது எது?

3. உள்ளே இருந்தால் ஓடித் திரிவான்; வெளியே வந்தால் விரைவில் மடிவான். அவன் யார்?

4. ஒருவனை அழைத்தால் ஊரையே கூட்டுவான். அவன் யார்?

5. காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடும். அது எது?

6. மீன் பிடிக்கத் தெரியாது. ஆனால் அழகாக வலை பின்னும். அது எது?

7. வாசலிலே வண்ணப் பூ. தினம் தினம் மாறும் பூ. தெளிவாகத் தோன்றும் பூ அது என்ன?

- அதன் பின்னர் முதல் ஏழு விடுகதைகளையும் அப்பியாசக் கொப்பியில் எழுதி விடையையும் எழுத வழிப்படுத்துங்கள். (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி ஆகியவற்றை இடுகின்றார்களா என அவதானியுங்கள்.

செயற்பாடு 3

- பாடநூலில் (பக்கம் 26) தரப்பட்டுள்ள 8 தொடக்கம் 15 வரையுள்ள விடுகதைகளை அறிமுகம் செய்யுங்கள். மாணவர் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப விடுகதைக்குரிய விடைப் படங்களைப் பிரதியெடுத்து வெட்டி அட்டையில் ஒட்டி, அட்டைத் தட்டில் இட்டு எல்லாக் குழுக்களுக்கும் வழங்குங்கள். ஆசிரியர் விடுகதையை வாசிக்கும்போது அதற்குரிய விடைப் படத்தை எல்லாக் குழுவினரும் எடுத்துக் காட்டிக் கூற வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு :*

8. ஆயிரம் நூற்பின்னலை அள்ளி அள்ளித் தின்னலாம். அது என்ன?



9. வால் உண்டு; உயிரில்லை, அங்கும் இங்கும் பறப்பான். அவன் யார்?




10.ஒளி கொடுக்கும்; விளக்கல்ல; சூடு கொடுக்கும்; நெருப்பல்ல. அது என்ன?



11.பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து. அது என்ன?



12.வெளியே விரியும்; உள்ளே சுருங்கும் அது என்ன?



13.நெருப்பில் பட்டு சிவந்தவனுக்கு நீண்ட ஆயுள். அவன் யார்?



14.நீர் நிறைந்திருக்கும் நெற்றியிலே கண் இருக்கும். அது என்ன?



15.கத்தியின்றி இலைகளை வெட்டும். அது என்ன?



- அதன் பின்னர் விடுகதைகளை எழுதி அதற்குரிய விடைகளையும் எழுத வழிப்படுத்துங்கள் (நிறுத்தக் குறிகளைச் சரியாக இடுகிறார்களா என அவதானியுங்கள்).

செயற்பாடு 4

- பழமொழிகளை (12) அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவற்றை, மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். பழமொழிகளின் கருத்தினையும் பழமொழி களுக்கு அருகில் அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். அவற்றையும் விளக்குங்கள். மாணவர்களைப் பழமொழிகளின் விளக்கத்தைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு உதவுங்கள். இங்கு தரப்பட்டுள்ள பழமொழிகள் பாடசாலையிலும் உள்ளன. எனவே பாடநூலிலுள்ள பழமொழிகளைப் பிழையின்றி வாசித்தறிவதற்கு மாணவர்களை இருவர் இருவராகச் சோடியாக்கி வாசிக்க ஊக்கப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு*** :

**பழமொழிகள்**

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அழுதபிள்ளை பால் குடிக்கும்.
3. ஆத்திரக்காரனுக்கு புத்தி மட்டு.
4. ஆனைக்கும் அடி சறுக்கும்.
5. ஆழமறியாது காலை விடாதே.
6. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
7. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
8. கந்தையானாலும் கசக்கிக் கட்டு.
9. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை.
10. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
11. பொறுத்தார் பூமியாள்வார்.
12. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

- மாணவர்கள் பழமொழிகளில் பரிச்சயம் பெற்ற பின்னர் பழமொழிகளில் சில சொற்களை நீக்கி, கோடிட்டு வழங்குக. கோடிட்ட இடங்களில் சரியான சொல்லை இட்டு எழுதிப் பூர்த்திசெய்ய வழிப்படுத்துக.

*எடுத்துக்காட்டு:* 1

1. அகத்தின் ............... முகத்தில் தெரியும்.
2. அழுதபிள்ளை ................. குடிக்கும்.
3. ஆனைக்கும் ................ சறுக்கும்.
4. ஒன்றுபட்டால் ............. வாழ்வு.
5. கூடி ................... கோடி நன்மை.

- இதுபோன்ற வேறு பயிற்சிகளையும் மாணவர்களுக்கு வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு :* 2

சொற்களை ஒழுங்குபடுத்தி பழமொழிகள் ஆக்கும் பயிற்சியை வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு :*

1. மட்டு / புத்தி / ஆத்திரக்காரனுக்கு
2. விடாதே / காலை / ஆழமறியாது
3. எழுத்து / கல்வி / சிலையில் / இளமையிற்
4. பொன்னல்ல / மின்னுவதெல்லாம்
5. வாழ்வே / குறைவற்ற / நோயற்ற / செல்வம்

- இதுபோன்ற வேறு பயிற்சிகளையும் வழங்குங்கள்.

## செயற்பாடு 5


- தரம் 1, 2 இல் கற்ற குறியீடுகளை மாணவர்களுக்கு நினைவுபடுத்துங்கள். அதன் பின் மாணவர்களுக்குப் பின்வரும் குறியீடுகளைக் காட்சிப்படுத்தி அறிமுகம் செய்யுங்கள்.



- இக்குறியீடுகளைக் காட்சிப்படுத்துங்கள். குறியீடுகளின் கருத்தினைக் கேட்டறியுங்கள். அதன் பின்னர் அப்பியாசக் கொப்பியில் குறியீடுகளை வரைந்து, குறியீடுகளின் கருத்தினையும் எழுதுமாறு வலியுறுத்துங்கள்.

செயற்பாடு 6

- அதிகமாகச் சீனியை உணவில் சேர்த்துக்கொள்வதால் நீரிழிவு நோய் வருகிறது என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள். சிறு வயதிலேயே வருகின்றது என்பதை வலியுறுத்துவதோடு சீனியை உணவில் சேர்த்துக்கொள்வதைத் தவிர்க்குமாறு கூறுங்கள். குளிர்பானப் போத்தல்களில் சீனியின் அளவை அறிமுகப்படுத்துவதற்காகப் பயன்படுத்தப் பட்டுள்ள நிறங்களைக் கேட்டறியுங்கள். மாணவர்களுக்கு மூன்று விதமாக நிறக் குறியீடுகள் கொண்ட போத்தல்களைக் காட்டுங்கள். அதன் பின் அந்நிறங்கள் குறிப்பவற்றை விளக்குங்கள்.




- மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் நிறங்கள் வரைந்து அதன் கருத்தினை எழுத வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 7

- மாணவர்கள் இதுவரை கற்றவற்றில் இருந்து மாணவர்கள் இடர்ப்படும் சொற்களைத் தெரிவுசெய்து சொல்வதெழுதலாக வழங்குங்கள். ஒரு நாளில் பத்துச் சொற்களுக்கு மேல் மாணவர்களுக்குச் சொல்வதெழுதலாக வழங்கக்கூடாது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு :**

- கட்டுரையின் சுருக்கத்தைக் கூற முன்வருதல்
- இளமைப் பெயர்களைக் கூறுதல்
- விடுகதைகளை விடுவித்தல்
- பழமொழிகளைக் கூறுதல்
- குறியீடுகளை இனங்காணலும் விடுவித்தலும்
- கற்ற சொற்களைச் சொல்வதெழுதலாக எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

# 6

**தேர்ச்சிகள் :**

**$L_6$** – தொடர்பாடலுக்காகச் செவிமடுப்பார்.

**$S_6$** – தொடர்பாடலுக்காகப் பேசுவார்.

**உள்ளடக்கம் :**

- விளையாட்டுக் கடை (மாதிரி)
- நூலகம்
- வானொலி / தொலைக்காட்சி (செய்தி வாசித்தல் / நேர்முக வர்ணனை)

**கற்றற்பேறுகள் :**

- பொது இடங்களில் எவ்வாறு பேச வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு கண்ணியமாகப் பேசுவார்.
- மாற்றங்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்துச் செவிமடுத்துத் துலங்குவார்.
- நூலகத்தில் எவ்வாறு உரையாட வேண்டும் என்பதை அறிந்து துலங்குவார்.
- வானொலி / தொலைக்காட்சிகளில் எவ்வாறு செய்தி வாசிக்க வேண்டும் / எவ்வாறு நேர்முக வர்ணனை செய்ய வேண்டும் என்பதைப் புரிந்துகொண்டு செயற்படுவார்.

**வளங்கள் :**

- மாதிரிப் பலசரக்குக் கடைக்குத் தேவையான பொருட்கள் (மாதிரி), மாதிரி நூலகம், மாதிரி வானொலிப் பெட்டி (காட்போட் பெட்டி), தொலைக்காட்சிப் பெட்டி (காட்போட் பெட்டி), ஒலிப்பதிவுக் கருவி, கணினி, திரைச்சீலை

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாதிரிப் பலசரக்குக் கடை ஒன்றைப் பாடசாலையில் அமைப்பதற்கு பெற்றோரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள். அக்கடையைப் பலவிதமான பொருட்களை விற்பனை செய்யும் வகையில் ஒழுங்கமையுங்கள்.

  ***எடுத்துக்காட்டு :***

  பாடசாலை உபகரணங்கள், உணவுப் பொருட்கள், தானியங்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்றவை

- தமது பிரதேசத்தில் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு பலசரக்குக் கடையை அமைக்க ஊக்கப்படுத்துங்கள். பலசரக்குக் கடையில் பொருட்களை வாங்குவதற்கு கற்றலுக்காகக் கடைகளில் விற்கும் மாதிரிப் பணத்தாள்களைப் பயன்படுத்துங்கள். (பணத்தாள்களை நகல்பிரதி எடுப்பதைத் தவிர்க்கவும்.)
- மாணவர்கள் சிலரைத் தெரிவுசெய்து பொருட்களை விற்பனை செய்பவர்களாகவும் ஏனைய மாணவர்களைப் பொருட்களை வாங்குபவர்களாகவும் மாற அறிவுறுத்துங்கள். பொருட்களை வாங்குபவர்கள் சாதாரண உடையணிந்து வாங்குவதற்கு வழிப்படுத் துங்கள். (அதிபரின் அனுமதியுடன் பெற்றோரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்)

- கடையில் பொருட்களை விற்பனை செய்பவர்களும் வாங்குபவர்களும் பண்பாகவும் சுமுகமாகவும் உரையாடுதல் வேண்டும் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.

*எடுத்துக்காட்டு :*

| | | |
|---|---|---|
| வாங்குபவர் | : | ஐயா, எனக்கு இந்தத் துண்டில் எழுதப்பட்டுள்ள பொருட்களைத் தாருங்கள். |
| விற்பவர் | : | தம்பி, அத்துண்டைத் தாருங்கள். |
| வாங்குபவர் | : | ஐயா துண்டில் எழுதியவற்றைத் தாருங்கள். |
| விற்பவர் | : | (துண்டைப் பார்த்து வாசித்தல் வேண்டும்) |
| | | ஒரு கிலோ சீனி |
| | | ஒரு கிலோ துவரம்பருப்பு |
| | | இரண்டு கிலோ கோதுமை மா |
| | | ஒரு லீற்றர் சூரியகாந்தி எண்ணெய் |
| | | ஒரு கிலோ பயறு |
| | | அரைக் கிலோ கடலை |
| | | ஒரு கிலோ அரிசி மா பைக்கற்றுகள் - 3 |
| | | 250 கிராம் வெந்தயம் |
| | | 100 கிராம் மிளகு |
| | | 250 கிராம் பெருஞ்சீரகம் |
| | | ஒரு கிலோ ரவை |
| வாங்குபவர் | : | ஐயா எல்லாப் பொருட்களும் உங்கள் கடையில் இருக்கிறதுதானே? |
| விற்பவர் | : | ஆம் இருக்கிறது. அரை மணித்தியாலம் செல்லும். தயவுசெய்து அரை மணித்தியாலயத்திற்குப் பிறகு வாருங்கள். எல்லாப் பொருட்களையும் பொதி செய்து வைக்கிறேன். |
| வாங்குபவர் | : | சரி ஐயா. அரை மணி நேரத்திற்குப் பிறகு வருகிறேன். |

..........................................................................................................

..........................................................................................................

- மாணவர்கள் சுதந்திரமாகப் பொருட்களை வாங்குவதற்கு அனுமதியுங்கள். பொருட்களை வாங்கும்போது அப்பொருட்களின் பெயர்களைச் சரியாக உச்சரிக் கிறார்களா என அவதானியுங்கள். பலசரக்குக் கடையில் விற்கப்படும் பொருட்களின் விலைப்பட்டியலையும் காட்சிப்படுத்தியிருக்க வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- எல்லா மாணவர்களையும் இச்செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள். மாணவர்கள் பண்புடன் உரையாடுவதற்கு அவர்களை வழிப்படுத்துங்கள். விளையாட்டுக் கடைச் செயற்பாடு நிறைவுபெற்றதும் மாணவர்களை வகுப்பறைக்கு அழைத்துச்சென்று கலந்துரை யாடுங்கள்.

*எடுத்துக்காட்டு :*

  - பொருட்கள் வாங்கும்போது பொருட்களின் நிறை, உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி என்பவற்றை அவதானிக்க வேண்டும்.

- பொதி செய்யப்பட்ட பொருட்களாயின் சரியாக பொதி செய்யப்பட்டுள்ளதா என அவதானிக்க வேண்டும்.
- கலப்படம் செய்யப்பட்ட பொருளா எனவும் அவதானிக்க வேண்டும்.
- குளிர்பானமாயின் சீனியின் அளவு, நிறம் என்பன குறியீட்டின் ஊடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதா என அவதானித்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டவற்றை மாணவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

செயற்பாடு 2

- மாணவர்களை நூலகம் ஒன்றிற்கு அதிபரின் அனுமதியுடன் அழைத்துச்செல்லுங்கள். நூலகத்திற்கு எவ்வாறு செல்லவேண்டும், எப்படி நூல்களைத் தெரிவுசெய்ய வேண்டும், நூலகத்தில் அங்கத்தவராவது எப்படி, புத்தகங்களை எப்படி இரவல் பெறலாம் போன்ற விடயங்களை அவர்களுக்கு விளக்குங்கள்.
- நூலகத்தில் புத்தகங்கள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பது போன்ற விபரங்களையும் மாணவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.
- மாணவர்களை நூலகத்தில் அமர்ந்து அமைதியாகப் புத்தகங்களை வாசிக்கும் அனுபவத்தைப் பெற்றுக்கொடுங்கள்.
- நூலகத்தில் எவ்வாறு உரையாட வேண்டும் மற்றும் மௌனமாக வாசிப்பது எப்படி என்றும் அவர்களுக்குச் சொல்லிக்கொடுங்கள்.

செயற்பாடு 3

- வகுப்பறையில் நூலகம் ஒன்றை அமைத்து, நூலக வாசிப்பு அனுபவத்தைப் பெற ஏற்பாடு செய்யுங்கள். மாணவர்கள் சுயமாக வாசிப்பதோடு தாம் பெற்ற அனுபவத்தைக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள். வாசித்த புத்தகங்களின் பெயர்,பத்திரிகையின் பெயர், நூலாசிரியரின் பெயர் போன்ற விபரங்களை அவர்களிடம் கேட்டறியுங்கள்.

செயற்பாடு 4

- மாணவர்களுக்கு வானொலியில் பேசுவதற்கு, பாடுவதற்கு ஆர்வமூட்டலாம். அவர்களைப் பண்புடன் பேச வைப்பதற்காக மாதிரி வானொலி நிலையமொன்றை அமைத்து அதில் மாணவர்கள் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுங்கள். (வகுப்பிலேயே காட்போட் பெட்டியை வைத்து, அதன் மேல் திரை போட்டு வானொலியாக மாற்றி அதன் பின்னால் இருந்து மாணவர்களைப் பேச, செய்தி வாசிக்க, நேர்முக வர்ணனை செய்ய ஊக்கப்படுத்துங்கள். இச்செயற்பாடு மாணவர்களின் ஆக்கத்திறன் விருத்திக்கும் சொற்களஞ்சிய விருத்திக்கும் உதவும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- இச்செயற்பாட்டில் எல்லா மாணவர்களையும் பங்குபெறச் செய்யுங்கள். செய்தி வாசிப்பு, நேர்முக வர்ணனை, நிகழ்ச்சித் தொகுப்பு, பாடல்கள் பாடுதல், கதை சொல்லுதல் போன்றவற்றை நிகழ்த்திக் காட்ட மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*

**நேர்முக வர்ணனை**

- ♦ நாங்கள் இப்பொழுது பூங்காவிற்குள் நிற்கின்றோம்.
- ♦ நிறையச் சிறுவர்கள் தங்கள் பெற்றோருடன் வந்திருக்கிறார்கள்.

- ♦ சிறுவர்கள் அங்குமிங்கும் ஓடியாடி விளையாடுகிறார்கள்.
- ♦ சிலர் கச்சான், கடலை வாங்குகிறார்கள்.
- ♦ அதோ வானத்தில் விமானம் ஒன்று பறக்கிறது.
- ♦ அதனைச் சிறுவர்கள் அண்ணாந்து பார்க்கிறார்கள்.

என்றவாறு மாணவர்களைக் கற்பனையாக நேர்முக வர்ணனை செய்ய வழிப்படுத்துங்கள். ஒரு சில வாக்கியங்கள் கூறுதல் போதுமானது.

**செய்தி வாசிப்பு**

பத்திரிகை ஒன்றின் தலைப்புச் செய்திகளை வாசிக்க வழிப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***

- ♦ எரிபொருளைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்.
- ♦ நாடு முழுவதும் அடைமழை.
- ♦ வாகனச் சாரதிகளுக்கான விசேட அறிவித்தல்
- ♦ தேங்காயின் விலையில் மாற்றமில்லை.

**செயற்பாடு 5**

- மாதிரித் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்றைப் பெற்றோரின் உதவியுடன் உருவாக்கிக் கொள்ளுங்கள். அதன் வாயிலாக மாணவர்களைச் செய்தி வாசிக்கவும் நேர்முக வர்ணனை செய்யவும் ஊக்கப்படுத்துங்கள். மாணவர்களை ஐவர் கொண்ட குழுக்களாக்கி இச்செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- எதற்கும் முன்வராத மாணவர்கள்கூட தொலைக்காட்சிப் பெட்டியூடாகப் பேசுவதற்கு ஆர்வத்தைக் காட்டுவார்கள். தயங்குகின்ற மாணவர்களை உற்சாகமூட்டி அவர்களையும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

**கணிப்பீடு :**

- மாதிரிக் கடையில் பொருட்களை விற்கும்போதும் வாங்கும்போதும் பண்புடன் உரையாடுதல்
- வாங்கும், விற்கும் பொருட்களின் பெயர்களைச் சரியாக உச்சரித்தல்
- போலச் செய்தல்
- மாதிரி வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகள் ஊடாக திறமைகளை வெளிக்காட்டுதல்

போன்றவற்றைக் கணிப்பீடு செய்க.

**தேர்ச்சிகள் :**

$R_6$ – தொடர்பாடலுக்காக வாசிப்பார்.

$W_6$ – தொடர்பாடலுக்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- பொது இடங்கள் (பெயர்கள்)
- காலநிலை அறிக்கை
- ஒட்டிகள் (லேபிள்கள்)

**கற்றற்பேறுகள் :**

- மாணவர்கள் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய பொது இடங்களின் பெயர்களை வாசித்துப் புரிந்துகொள்வதோடு தகவல்களையும் பெற்றுக்கொள்ள முயல்வார்.
- காலநிலை தொடர்பாக வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை, இணையத்தளம் மூலம் தகவல்களைப் பெற்று அறிக்கைப்படுத்துவார்.
- ஒட்டிகளின் பெயர்களை வாசித்துத் தெரிந்துகொள்வார்.

**வளங்கள் :**


- பொது இடங்கள் (பெயர்கள்), காலநிலை அறிக்கை எழுதப்பட்ட அட்டைகள், தினசரிப் பத்திரிகைகள், பல்வேறு வகையிலான ஒட்டிகள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்கள் அறிய வேண்டிய பொது இடங்களின் பெயர்களை அறிமுகம் செய்யுங்கள்.

*எடுத்துக்காட்டு:*



- மேலே தரப்பட்டுள்ள பெயர்களை மாணவர்கள் வாசிக்க வழிப்படுத்துங்கள். பொது இடங்களின் பெயர்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள். அதன் பின்னர் பொது இடங்களின் பெயர்களைத் தொடர்புபடுத்தி வாக்கியங்கள் அமைக்க மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு:*

  - ♦ நான் நூல் நிலையத்திற்குச் சென்றேன்.
  - ♦ நான் வைத்தியசாலைக்குத் தந்தையுடன் சென்றேன்.
  - ♦ சங்கரன் தபால் நிலையத்தில் முத்திரைகள் வாங்கினான்.
  - ♦ கண்டிப் புகையிரத நிலையத்திலிருந்து புகையிரதம் கொழும்பு நோக்கிப் புறப்பட்டது.

- இவ்வாறு பொது இடங்களுடன் தொடர்புபடுத்தி வாக்கியங்களை எழுதவும், அவ்விடங்கள் தொடர்பாக மாணவர்கள் அறிந்துகொள்ளவும் வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 2

- வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள், இணையத்தளங்கள் போன்றவற்றின் ஊடாக காலநிலையை அறிந்துகொள்ள மாணவர்களை ஊக்கப்படுத்துங்கள். நாட்டின் காலநிலை அவ்வப்போது மாற்றமடைகிறது. அதனால் காலநிலை பற்றி அறிந்துகொள்ள வேண்டிய தேவை ஏற்படுகிறது. மாணவர்கள் காலநிலை பற்றி அப்பியாசக் கொப்பியில் குறித்துக்கொள்ள வழிப்படுத்துங்கள். ஆசிரியரும் காலநிலை பற்றிய தகவல்களை மாணவர்களுக்கு வழங்க முடியும்.
- தினமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில், காலநிலை பற்றி வானிலை ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகள் கூறுவார்கள். அவர்கள் கூறுவதை மாணவர்கள் செவிமடுத்து அப்பியாசக் கொப்பியில் எழுதி வகுப்பின் முன் வந்து வாசித்துக்காட்ட ஊக்கப்படுத்துங்கள்.
- இச்செயற்பாட்டில் எல்லா மாணவர்களும் ஈடுபட வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

  *எடுத்துக்காட்டு:*



செயற்பாடு 3

- மாணவர்களுக்குக் கடைகளில் வாங்கும் பொதிசெய்யப்பட்ட பொருட்களின் பெயர்கள், உற்பத்தித் திகதி, காலாவதியாகும் திகதி எழுதப்பட்ட ஒட்டிகளை வாசிக்க வழிப்படுத்துங்கள். ஆசிரியர் மாணவர்களுக்குப் பொதி செய்யப்பட்ட பொருட்களின் ஒட்டிகளைக் காட்சிப்படுத்துங்கள்.
- அவ் ஒட்டிகளை வாசித்துப் பொருளின் பெயர், உற்பத்தி செய்யப்பட்ட திகதி, காலாவதியாகும் திகதி என்பவற்றை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் குறித்துக்கொள்ள வழிப்படுத்துங்கள். மாணவர்களுக்குத் தேவையற்ற, பொருத்தமற்ற

பொருட்களில் அல்லது பொருத்தமற்ற போத்தல்களில் ஒட்டப்பட்டுள்ள அல்லது ரின்களில் ஒட்டப்பட்டுள்ள ஒட்டிகளை அறிமுகம் செய்வதைத் தவிர்த்துக் கொள்ளவும். தெரிவு செய்யப்பட்ட பொருட்களின் ஒட்டிகளை அறிமுகம் செய்யுங்கள் மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கி குறிப்பிட்ட ஒட்டிகளைச் சேகரிக்குமாறு கூறுங்கள். அவ்வாறு மாணவர்கள் சேகரித்த ஒட்டிகளை அப்பியாசக் கொப்பியில் ஒட்டி, அதில் உள்ள முக்கிய தகவல்களை அப்பியாசக் கொப்பியில் எழுத ஊக்கப்படுத்துங்கள்.

***எடுத்துக்காட்டு:***







**செயற்பாடு 4**

- நூலகமொன்றிற்கு அழைத்துச் செல்லுங்கள். நூலகத்தின் பல்வேறு இடங்களிலும் ஒட்டப்பட்டுள்ள ஒட்டிகளைப் பார்த்து மாணவர்கள் வாசிக்கவும் அவற்றை எழுதிக் குறித்துக்கொள்ளவும், ஒட்டிகளைத் தயாரிக்கவும் வழிப்படுத்துங்கள்.

  எடுத்துக்காட்டு:

  சிறுவர் பிரிவு

  பத்திரிகை பார்வையிடும் பிரிவு

  கற்கைகள் கூடம்

  இரவல் வழங்கும் பகுதி

  சிறுவர் கதைகள்

  சிறுவர் பாடல்கள்

***குறிப்பு*** : ஆசிரியர் இதுபோன்ற வேறு ஒட்டிகளையும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்யலாம்.

**கணிப்பீடு :**

- பொது இடங்களின் பெயர்களை வாசித்து எழுதுதல்
- காலநிலை பற்றிய அறிக்கையை வாசித்து எழுதுதல்
- ஒட்டிகளை வாசித்து, முக்கிய தகவல்களை எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

# 7

**தேர்ச்சிகள் :**

- $L_7$ – மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காகச் செவிமடுப்பார்.
- $S_7$ – மொழியாட்சிததிறனை விருத்தி செய்வதற்காகப் பேசுவார்.
- $R_7$ – மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக வாசிப்பார்.
- $W_7$ – மொழியாட்சித்திறனை விருத்தி செய்வதற்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- காட்சிப் படங்கள்
- சுயசரிதை
- உலகநீதி
  (தெரிவுசெய்யப்பட்ட 10 அடிகள்)
- கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய)
- பண்டிகைகள்

**கற்றற்பேறுகள் :**

- காட்சிப் படங்களைப் பார்த்து தமது மொழிநடையில் விபரிப்பார், எழுதுவார்.
- சுயசரிதைகளை மொழியாட்சித்திறனை விருத்திசெய்வதற்காக முன்வைப்பார்.
- தெரிவுசெய்யப்பட்ட உலகநீதி அடிகளை (10 அடிகள்) மனனஞ்செய்து தெளிவாக முன்வைப்பார். அவற்றின் கருத்தினை அறிந்துகொள்வார்.
- கிராமிய விளையாட்டுக்களின் விதிமுறைகளை அறிந்து மற்றவர்களுடன் இணைந்து விளையாடுவார், மகிழ்வுறுவார், விளையாட்டு விதிகளை எழுதுவார்.
- பாரம்பரியப் பண்டிகைகளில் பரிமாறப்படும் உணவுகளை / தின்பண்டங்களைத் தெரிந்துகொள்ள முன்வருவார். அவற்றின் பெயர்களை அறிந்து எழுதுவார்.

**வளங்கள் :**

- காட்சிப் படங்கள், சுயசரிதைக்கான முகமூடிகள், உலகநீதி அடிகள் எழுதப்பட்ட அட்டைக் கீலங்கள், பண்டிகைகள் தொடர்பான உணவுகள் / தின்பண்டங்களின் படங்கள்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1**

- மாணவர்கள் நிகழ்காலத்தில் விபரித்துக் கூறக்கூடிய காட்சிப் படமொன்றைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள். அப்படத்தைக் குழுக்களின் எண்ணிக்கைக்கேற்ப (ஒரு குழுவில் ஐவர் இடம்பெற வேண்டும்) பிரதியெடுத்து அட்டைகளில் ஒட்டி குழுவுக்கு ஒரு பட அட்டை வீதம் வழங்குங்கள். காட்சிப் பட அட்டையைப் பார்த்து நிகழ்காலத்தில் விபரித்து வாக்கியங்களாகக் கூறவும், எழுதவும், எழுதிய வாக்கியங்களைத் தமது குழுக்களிடையே வாசித்துக்காட்டவும் வழிப்படுத்துங்கள்.


எடுத்துக்காட்டு :



- காட்சிப்படத்தைப் பார்த்து மாணவர்கள் கூறும் வாக்கியங்களில் இருந்து பொருத்தமான வாக்கியங்களைத் தெரிவுசெய்து அட்டைக் கீலங்களில் எழுதிக் காட்சிப்படுத்தி மாணவர்களை வாசிக்கவும் அவற்றை அப்பியாசக் கொப்பியில் பிழையின்றி எழுதி நிறுத்தக்குறிகளை இடவும் வழிப்படுத்துங்கள்.
- மேலே தரப்பட்டவாறான காட்சிப்படங்களைத் தெரிவுசெய்து மாணவர்களுக்கு வழங்குங்கள். மாணவர்கள் அக்காட்சிப்படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் எழுத வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 2

- மாணவர்கள் ஏற்கனவே கற்ற சுயசரிதை ஒன்றை நினைவுபடுத்துங்கள். அதன் பின்னர் உங்கள் கைகள் பேசினால் எப்படிப் பேசும் என்று கேட்டறியுங்கள். அதன் பின்னர் “கைகள்” என்ற சுயசரிதையை அறிமுகம் செய்யுங்கள். பாடநூலிலுள்ள சுயசரிதையை (பக்கம் 32) வாசித்துக் காட்டுங்கள்.




15

கைகள்

நாங்கள் தான் உங்கள் கைகள். நாங்கள் இல்லாமல் உங்களால் எழுதவும் வாசிக்கவும் முடியுமா? நாங்கள் வேலை செய்யும்போது சோர்வடைவது கிடையாது.

கால்கள் சோர்ந்துவிட்டன; நடக்க முடியவில்லை. கழுத்து வலிக்கிறது. உடல் சோர்வடைந்து விட்டது என்றெல்லாம் சொல்வதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள். ஆனால் மிகவும் அரிதாகவே கை வலிக்கிறது என்ற நிலை ஏற்படலாம்.



நாங்கள்தான் எல்லாப் பொருள்களையும் உற்பத்தி செய்கின்றோம். கலை, கலாசாரம், மொழி, அறிவியல் என்பவை எல்லாம் எங்களால்தான் வளர்ந்தன. மனிதனை மனிதனாக மாற்றியதும் நாங்கள்தான்.

அத்துடன் வாய் பேச முடியாதவர்களுக்கு நாங்கள் தான் உதவுகின்றோம். எங்கள் உதவியுடன் சைகை மொழியில் அவர்களால் பேச முடியும். கண் தெரியாதவர்களுக்கும் நாங்கள்தான் உதவுகின்றோம். வெள்ளைப் பிரம்பைப் பிடித்து வழிகாட்டுபவர்களும் நாங்கள்தான்.

நாங்கள் கரம் கூப்பி வணக்கம் செலுத்த உதவுகின்றோம். கைகுலுக்கி நட்பையும் அன்பையும் வெளிப்படுத்த உதவுகின்றோம். இவ்வாறு பல்வேறு வழிகளில் உதவும் நாங்கள், நீங்கள் உறங்கும் போது மட்டுமே ஓய்வாக இருக்கிறோம்.

- அதன் பின்னர் மாணவர்களை இருவரிருவராகச் சோடி சேர்த்து வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் கைகளுக்கு நிறச் சாயத்தைப் பூச வைத்துக் கைகள் பேசுவது போன்று பேசிக்காட்ட மாணவர்களைப் பயிற்றுவியுங்கள்.

*எடுத்துக்காட்டு:*



நாங்கள்தான் உங்கள் கைகள்.

நாங்கள் இல்லாமல் உங்களால் எழுதவும் வாசிக்கவும் முடியுமா?

நாங்கள் வேலை செய்யும்போது சோர்வடைவது கிடையாது.

நாங்கள் தான் எல்லாப் பொருட்களையும் செய்கிறோம்.

மனிதனை மனிதனாக மாற்றியதும் நாங்கள்தான்.

நாங்கள் வாய் பேசாதவர்களுக்கு உதவுகிறோம்.

நாங்கள் கரம்கூப்பி வணக்கம் செலுத்தவும் உதவுகிறோம்.

கைகுலுக்கி அன்பையும் நட்பையும் வெளிப்படுத்துகிறோம்.

- மேற்குறிப்பிட்ட வாக்கியங்களைத் தனித்தனியாக அட்டைக் கீலங்களில் எழுதுங்கள். ஒரு மாணவனுக்கு ஒரு கீலமாவது கிடைக்கக்கூடிய விதத்தில் அட்டைக் கீலங்களில் வாக்கியங்களை எழுதித் தயாரித்துக்கொள்ளுங்கள்.
- மாணவர்கள் தமக்குக் கிடைத்த அட்டைக் கீலங்களில் எழுதப்பட்டுள்ள வாக்கியத்தை உரத்துக்கூற உற்சாகப்படுத்துங்கள்.
- மாணவர்களுக்கு முன்கூட்டியே அறிவித்தல் வழங்கி கை முகமூடிகளை வீட்டிலிருந்து செய்துகொண்டு வருமாறு கூறி சுயசரிதையை அறிமுகம் செய்ய முடியும்.
- மாணவர்கள் வாசித்த சுயசரிதை வாக்கியங்களைக் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுங்கள். அவ்வாக்கியங்களை மாணவர்கள் கொப்பியில் எழுதி வாசித்துக்காட்ட ஊக்கப்படுத்துங்கள். அதன் பின்னர், பாடநூலிலுள்ள கைகள் என்ற பாடத்தை வாசிக்க ஊக்கப்படுத்துங்கள்.

- இது போன்ற வேறு உறுப்புகளின் சுயசரிதையையும் அறிமுகம் செய்யுங்கள். (கண், காது) இதன் மூலம் தங்கள் உறுப்புகளைப் பாதுகாப்பதற்கு மாணவர்கள் விழிப்புடன் செயற்படுவார்கள்.

**செயற்பாடு 3**

- சுயசரிதை வாக்கியங்களில் சில சொற்களை நீக்கி கோடிடுங்கள். அவ்வாக்கியங்களைப் பூர்த்திசெய்யுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***

  1. நாங்கள்தான் ................ கைகள்
  2. நாங்கள் இல்லாமல் உங்களால் .............. வாசிக்கவும் முடியுமா?
  3. நாங்கள் வேலை செய்யும்போது ................. கிடையாது.
  4. நாங்கள்தான் எல்லாப் ................... செய்கிறோம்.
  5. நாங்கள் கரம்கூப்பி ................... செலுத்தவும் உதவுகிறோம்.

- மாணவர்கள் சுயமாக இப்பயிற்சியைச் செய்ய ஊக்கப்படுத்துங்கள். இதுபோன்ற வேறு பயிற்சிகளையும் வழங்குங்கள்.

**செயற்பாடு 4**

- பின்வரும் உலகநீதி அடிகளை மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.

  1. **ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்.**
  2. **ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்.**
  3. **மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.**
  4. **போகவிட்டுப் புறம்சொல்லித் திரிய வேண்டாம்.**
  5. **நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.**
  6. **மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்**
  7. **மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.**
  8. **கருதாமற் காரியங்கள் முடிக்க வேண்டாம்.**
  9. **செய்ந்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.**
  10. **புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்.**

- பாடநூலில் (பக்கம் 60 - 61) உள்ள அடிகளை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள். அதன் பின்னர் மாணவர்களைப் பாடநூலைப் பார்த்து உலகநீதி அடிகளை எழுதுமாறு கூறுங்கள். அதன் பின்னர் அப்பியாசக் கொப்பியில் எழுதி, வாசிக்க ஆர்வமூட்டுங்கள். மாணவர்கள் உலகநீதி அடிகளை மனனம் செய்ததும் ஒவ்வொருவராக அழைத்து உலகநீதி அடிகளைக் கூறச் செய்யுங்கள். எல்லா உலகநீதி அடிகளையும் ஒரே நாளில் மனனம் செய்து கூற வற்புறுத்தாதீர்கள். ஒரு நாளில் மூன்று அடிகளை அவர்கள் நினைவில் வைத்துக்கொள்ளக்கூடிய வகையில் பயிற்சி அளியுங்கள்.

செயற்பாடு 5

- மாணவர்கள் நன்கு பயிற்சி பெற்றதும் உலகநீதி அடிகளில் சில சொற்களை நீக்கிக் கோடிடுங்கள். கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்ய மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு:*


  1. ஓதாமல் ஒருநாளும் .............. வேண்டாம்.
  2. ஒருவரையும் ................. சொல்ல வேண்டாம்.
  3. மாதாவை ................... மறக்க வேண்டாம்.

- கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்யும் பயிற்சியின் பின்னர் பூர்த்திசெய்த உலகநீதி அடிகளை மாணவர்கள் சுயமாக முன்வந்து வாசித்துக்காட்ட ஊக்கப்படுத்துங்கள்.

செயற்பாடு 6

- உலகநீதி அடிகளின் கருத்துக்கள் பாடநூலில் தரப்பட்டுள்ளன. அக்கருத்துக்களை மாணவர்கள் வாசித்தறிய வழிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு:*









செயற்பாடு 7

- மாணவர்களுக்குப் பாடநூலில் (பக்கம் 37 - 38) தரப்பட்டுள்ள கிராமிய கிளித்தட்டு என்ற விளையாட்டை அறிமுகம் செய்யுங்கள். விளையாட்டு விதிகளையும் அவர்களுக்கு விளக்குங்கள்.

***எடுத்துக்காட்டு :***


17 கிளித்தட்டு

கிளித்தட்டு என்பது கிராமிய விளையாட்டு. இவ்விளையாட்டு மரபு வழியாக விளையாடப்பட்டு வருகின்றது. கிளித்தட்டு விளையாட இரு அணியினர் தேவை. குறைந்தது நான்கு பேர் தேவை. விளையாடுவதற்கு முன், மைதானத்தில் செவ்வகம் ஒன்று கீற வேண்டும். அதனை ஆறு கட்டங்களாகப் பிரித்துக் கோடுகள் கீற வேண்டும்.

இரண்டு அணிகளில் ஒன்று இறங்கும் அணி. மற்றது மறிக்கும் அணி. விளையாட இறங்கும் அணியினரை 'காய்' என்பர். எதிர்க்கும் அணியின் தலைவர் 'கிளி' என அழைக்கப்படுவார்.


செய்ந்நன்றி ஒருநாளும் மறக்க வேண்டாம்.

ஒருவர் உங்களுக்குச் செய்த நன்மைகளை எப்போதும் நினைத்துக் கொண்டே இருத்தல் வேண்டும். ஒருவர் செய்த நன்மையை நீங்கள் ஒரு நாளும் மறக்கக் கூடாது

புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்.

நீங்கள் எப்பொழுதும் கேட்பவர் மனம் மகிழும்படியான விடயங்களையே சொல்லுதல் வேண்டும். மனம் நோகும்படி எதனையும் சொல்லுதல் கூடாது. எனவே நீங்கள் கேட்பவர் மனம் புண்பட்டு, வருந்தும்படியான கடும் சொற்களைச் சொல்லக் கூடாது.



- இவ்விதிமுறைகளை மாணவர்களுக்குப் புரியும்படி எடுத்துக்கூறுங்கள். அதன் பின்னர் பாடநூலிலுள்ள கிளித்தட்டு என்ற பாடத்தை வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் கிளித்தட்டுப் பாடம் தொடர்பான பயிற்சிகளை வழங்குங்கள்.

*குறிப்பு:* இதுபோன்ற உங்களது பிரதேசத்திலுள்ள வேறு விளையாட்டுக்களையும் அறிமுகம் செய்யுங்கள்.

செயற்பாடு 8

- பண்டிகைகளின்போது பரிமாறப்படும் பலகாரங்கள் / உணவுகள் பற்றிக் கேட்டறியுங்கள். ஒவ்வொரு சமயத்தவரும் கொண்டாடும் பண்டிகைகளின்போது பரிமாறும் உணவு வகைகளை மாணவர்களுடன் சேர்ந்து பட்டியற்படுத்துங்கள். அவற்றின் பெயர்களை அப்பியாசக் கொப்பியில் எழுத மாணவர்களுக்கு வழிப்படுத்துங்கள். அவற்றின் அருகே படங்களை ஒட்டவும் ஊக்கப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*





- பாடசாலையில் எல்லாச் சமயத்தவர்களினதும் பலகாரங்களைக் கொண்டுவரச் செய்து, மாணவர்களுடன் சேர்ந்து பரிமாறி உண்டு, மகிழ்வதற்கான ஒழுங்குகளை அதிபரின் அனுமதியுடன் மேற்கொள்ளுங்கள்.
- பெற்றோரின் ஒத்துழைப்பையும் அதிபரின் அனுமதியுடன் பெற்றுக்கொள்ளுங்கள். பண்டிகை உணவுகள் / பலகாரங்களைக் காட்சிப்படுத்துங்கள். பண்டிகை உணவுகள் என்ற பெயரில் உணவுக் கண்காட்சியை வகுப்பு மட்டத்தில் ஏற்பாடு செய்யுங்கள். பார்வையிட வருவோருக்கு உணவு வகைகள் பற்றிய விளக்கங்களை மாணவர்களே வழங்குவதற்கு அவர்களைப் பயிற்றுவியுங்கள்.

**கணிப்பீடு :**

- காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் கூறுதல், எழுதுதல்
- சுயசரிதையை, போலச் செய்தல் மூலம் முன்வைத்தல், எழுதுதல்
- தெரிவுசெய்யப்பட்ட உலகநீதி அடிகளைப் பிழையின்றிக் கூறுதல்
- கிராமிய விளையாட்டுக்களை அறிந்து கூறுதலும் விருப்புடன் விளையாடுதலும்
- பண்டிகை உணவுகள், பலகாரங்கள் தொடர்பான அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ளல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

# 8

**தேர்ச்சிகள் :**

- **$L_8$** – கற்றல் விருத்திக்காகச் செவிமடுப்பார்.
- **$S_8$** – கற்றல் விருத்திக்காகப் பேசுவார்.
- **$R_8$** – கற்றல் விருத்திக்காக வாசிப்பார்.
- **$W_8$** – கற்றல் விருத்திக்காக எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- ஒளிப்படங்கள்
- வீட்டிற்கு வருகைதந்த நண்பர்கள்
- சுற்றுலா
- பசுமை உலகு

**கற்றற்பேறுகள் :**

- ஒளிப்படங்களைப் பார்த்து, இரசித்து கருத்துக்களைக் கூறுவார், வாக்கியங்களை நிகழ்காலத்தில் எழுதுவார்.
- வீட்டிற்கு வருகைதந்த நண்பர்கள் தொடர்பான அனுபவங்களை வகுப்பில் பகிர்ந்துகொள்வார்.
- சுற்றுலா சென்ற அனுபவங்களைப் பகிர்ந்துகொள்வார்; அவற்றைக் குறித்துக்கொள்வார்.
- மரங்களை வளர்ப்பதன் அவசியத்தை உணர்ந்துகொள்வார். அதன் பயன்பாட்டையும் அறிந்துகொள்வார்.

**வளங்கள் :**

- ஒளிப்படங்கள்,
  சுற்றுலாப் படங்கள்,
  வாக்கிய அட்டைகள்,
  கணினி (இணையத்தளம்)

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

### செயற்பாடு 1

- மாணவர்களுக்கு இரசிக்கக்கூடிய ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்துங்கள். அப்படங்களைப் பார்த்து இரசித்து, கருத்துக்களைக்கூற வாய்ப்பொன்றை வழங்குங்கள். (ஒளிப்படத்தை A4 அளவில் வெண்பலகையில் காட்சிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*



- ஒளிப்படங்களைப் பார்த்து கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் நிகழ்காலத்தில் வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள்.

எடுத்துக்காட்டு:

(1) ........கடலில் மீன்கள் துள்ளித்துள்ளி விளையாடுகின்றன.........

(2) ..........................................................................................................

(3) ..........................................................................................................

செயற்பாடு 2

- மாணவர் விரும்புகின்ற ஒளிப்படமொன்றைத் தெரிவுசெய்யுங்கள். சுயமாகவே தமது கருத்துக்களை விருப்புடன் கூறுவதற்கும் ஏனையவர்களுடன் கலந்துரையாடுவதற்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள். மாணவர்களுடன் சேர்ந்து ஒளிப்படம் தொடர்பான கருத்துக்களைத் தெரிவியுங்கள். இடர்ப்படும் மாணவர்களுக்கு வினாக்கேட்டு அதனூடாக அவர்களின் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

*எடுத்துக்காட்டு:*



- ஒளிப்படத்தைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களை எழுதி முற்றுப்புள்ளி இட வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு :*

(1) படகு ஒன்று கரையை நோக்கி வருகின்றது. ..........

(2) ..........

(3) ..........

செயற்பாடு 3

- மாணவர்களின் வீட்டிற்கு விசேடமாக வருகைதந்தவர்கள் பற்றிக் கேட்டறியுங்கள். விடுமுறையில் வீட்டிற்கு வந்த நண்பர்கள், உறவினர்கள் பற்றிக் கேட்டறியுங்கள். அவர்களுடன் பொழுதைப் போக்கிய விதம் பற்றிக் கேட்டறியுங்கள். அதன் பின்னர் மாணவர்களுக்கு பாடநூலிலுள்ள "ஞாயிற்றுக்கிழமை" என்ற பாடத்தை (பக்கம் 20) வாசித்துக் காட்டுங்கள்.


*எடுத்துக்காட்டு :*



10 ஞாயிற்றுக் கிழமை

அன்று, காலையிலேயே காந்தன் எழுந்து விட்டான். ஞாயிற்றுக் கிழமைதானே இன்னும் கொஞ்ச நேரம் உறங்கப் போகிறேன் என்று கூறுபவன் அன்று ஏன் எழும்பினான்! அதற்குக் காரணம் என்ன தெரியுமா? அவனது நண்பர்கள் முரளி, மேரி, கரீம் யாவரும் அவனது வீட்டுக்கு வரப் போகிறார்கள்.

நேரம் போவதாக இல்லை. காந்தன் வீதியைப் பார்ப்பதும் வீட்டிற்குள் நுழைவதாகவும் இருந்தான். ''ஆ! அதோ, தொலைவில் மூவர் வருகின்றனர். அவர்கள் எனது நண்பர்கள்தான்'' என்று கூறிக்கொண்டு வெளியே காந்தன் ஓடினான். ஆவலோடு யாவரையும் வரவேற்றான். தாய் தந்தையருக்கு அவர்களை அறிமுகப்படுத்தினான்.



''வாருங்கள், வாருங்கள் நாம் விரைந்து பட்டம் செய்வோம்'' என்று காந்தன் அவர்களை அழைத்தான். பட்டம் கட்டுவதற்குக் கரீம் ஈர்க்கை எடுத்தான்; அதனை அழுத்தமாகச் சீவி, அளந்து முறித்தான். முரளி கடதாசியை எடுத்து அளவாக வெட்டினான். காந்தன் ஈர்க்கு களினால் பட்டத்தைக் கட்டினான். கடதாசியை அதன் மேல் ஒட்டினான். மேரி பட்டத்திற்கு வால் செய்தாள். அதனைப் பட்டத்தில் கட்டினாள்.

காந்தன் பட்டத்தை எடுத்தான். கரீம் நூலைச் சுற்றினான். நான்கு சிறுவர்களும் பட்டத்தை விடுவதற்கு, விளையாட்டுத் திடலுக்குச் சென்றார்கள்.

காற்று வீசும்போது பட்டத்தை ஏற்றினார்கள். பட்டம் மெல்ல மெல்ல மேலே ஏறியது. அது அங்கும் இங்கும் காற்றில் ஆடி அசைந்தது. அவர்களின் ஆனந்தத்திற்கு அளவே இல்லை. துள்ளிக் குதித்து மகிழ்ந்தனர்.

காந்தனின் தாய் மதிய உணவு உண்ண யாவரையும் அழைத்தார். உணவு உண்ண ஓடிவந்த அவர்களைப் பார்த்து, ''கைகளை நன்கு கழுவி விட்டு வாருங்கள்'' என்று கூறினார்.



வரிசையாக நின்று ஒருவரை ஒருவர் பார்த்துச் சவர்க்காரம் போட்டனர். கைகள், விரல்கள் மற்றும் நகங்கள் ஆகியவற்றை நன்கு தேய்த்தனர். பாடசாலையில் கற்ற, கை கழுவும் முறையைப் பின்பற்றிக் கைகளைக் கழுவினர். கைகள் இரண்டையும் திருப்பிப் பார்த்தனர். சுத்தமாக இருப்பதைக் கண்டு திருப்தியடைந்தனர். மதிய உணவு உண்ண ஆயத்தமாயினர்.

கைகளை நன்றாகக் கழுவுவோம்.
நோய் வராமல் காப்போம்.

- எல்லா இனத்தவர்களுடனும் நாம் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற கருத்தை இப்பாடத்தின் ஊடாக மாணவர் மனதில் பதியவையுங்கள். காந்தனும் அவனது நண்பர்களும் ஞாயிற்றுக்கிழமையை எவ்வாறு கழித்தார்கள் என்பதை விளக்குங்கள். நாம் ஓய்வு நேரங்களில் பயனுள்ள வேலைகளைச் செய்யவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
- ஞாயிற்றுக்கிழமை என்ற பாடத்துடன் தொடர்புடையதாக மாணவர்களுக்கு பயிற்சி களைத் தயாரித்து வழங்குங்கள். மாணவர்கள் பாடத்தை உற்சாகத்துடன் நிறுத்தக் குறிகளை அனுசரித்து வாசிக்க பயிற்றுவியுங்கள்.

செயற்பாடு 4

- மாணவர்களைச் சுற்றுலா அழைத்துச்செல்லுங்கள். கல்விச் சுற்றுலா மூலம் மாணவர்கள் பல விடயங்களைக் கற்றுக்கொள்கிறார்கள். எனவே அதிபரின் அனுமதியை முன்கூட்டியே பெற்று அதன் பின்னர் பெற்றோரின் அனுமதியையும் பெற்று சுற்றுலாவை ஒழுங்குசெய்யுங்கள். அச்சுற்றுலா செல்லுமிடம் அருகிலுள்ள ஊராகக்கூட இருக்கலாம் அல்லது களப்பயணமாகக்கூட இருக்கலாம்.

செயற்பாடு 5

- மாணவர்களுக்குப் பாடநூலிலுள்ள களப்பயணம் என்ற பாடத்தை உரையாடல் மூலம் அறிமுகம் செய்யுங்கள். அப்பாடத்தின் ஊடாக கற்பனையில் மாணவர்களை களப்பயணத்திற்கு கூட்டிச்செல்லுங்கள். உரையாடல் வடிவில் வாசித்துக் காட்டுங்கள். ஒலிப்பதிவுக் கருவியில் ஒலிப்பதிவு செய்தும் மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யலாம் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்கிக் களப்பயணம் என்ற பாடத்தை உரையாடல் வடிவில் வாசிக்க ஊக்கப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*


19 களப் பயணம்

ஆசிரியர் - வாருங்கள் பிள்ளைகளே, நாம் பார்க்க வேண்டிய இடம் வந்துவிட்டது.

மாணவன் - ஆகா! இந்தப் பூங்கா நல்ல அழகாக இருக்கிறதே.

ஆசிரியர் - இன்னும் உள்ளே சென்று பார்த்தால் மேலும் இனிமையான பல காட்சி களைக் கண்டு இரசிக்கலாம்.

வலது பக்கமாகச் செல்லவும்

மாணவி - அதோ, ‘வலது பக்கமாகச் செல்லவும்’ என்று எழுதப் பட்டுள்ளதே?

ஆசிரியர் - ஆம். அந்த அம்புக் குறியைப் பின்பற்றியே நாம் செல்ல வேண்டும். இதோ, பாருங்கள். எத்தனை அழகான வண்ண மலர்கள். சிவப்பு, மஞ்சள், வெள்ளை, நீலம்...

பூக்களைப் பறிக்காதீர்கள்


மாணவி - அவற்றை நாம் தொடக் கூடாது. பார்த்து ரசிக்க வேண்டும். ‘பூக்களைப் பறிக்காதீர்கள்’ என எழுதப்பட்டுள்ளதே.

நடை பாதையை உபயோகியுங்கள்

மாணவன் - எம்மைப்போல் பார்க்க வருபவர்கள் எல்லோரும் பூக்களைப் பறித்தால், இவற்றின் அழகை எப்படி மற்றவர்கள் ரசிப்பது.

ஆசிரியர் - ‘நடை பாதையை உபயோகியுங்கள்’ என்று எழுதப்பட் டுள்ளதைக் கவனித்தீர்களா? நாங்கள் இந்தப் புற்களில் நடந்தால் அவையும் அழிந்துவிடும் அல்லவா!

மாணவன் - அதோ, அந்தப் பெரிய மரத்தில் 1948 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4 ஆந் திகதி என்று எழுதி ‘தேக்கு மரம்’ என எழுதப்பட்டுள்ளதே! ஏன்?

ஆசிரியர் - அது, இலங்கை சுதந்திரம் அடைந்த வருடத்தில் நாட்டப்பட்டது. அதனால் தான் அப்படி எழுதப்பட்டுள்ளது.

மாணவி - நாம் செல்லும் பாதை இருமருங்கிலும் வரிசையாக மரங்கள் நாட்டப்பட்டுள்ளன. பார்க்க எவ்வளவு பசுமையாக இருக்கின்றன.

மாணவன் - அதோ பாருங்கள் மூங்கில்.. ஓரிடத்தில் வளர்க்கப் பட்டுள்ளது.

ஆசிரியர் - மூங்கில் நாளுக்கு நாள் வளரும். தன் இனத்தை தன்னுடனேயே வைத்திருக்கும். இந்த உண்மை தெரியுமா?

மாணவி - அதோ நீர்த்தடாகம்.

ஆசிரியர் - ஆம், அது செயற்கையாக உருவாக்கப்பட்ட நீர்த்தடாகம். அதனுள் தாமரை, அல்லி, நீலோற்பலம், வெவ்வேறு நிறங்களில் ... அற்புதம்... அற்புதம்.

மாணவி - இதோ! இளைப்பாறும் இடம். நாம் இதில் தங்கி, சற்று இளைப்பாறி உணவுண்டு செல்வோம்.

மாணவன் - இதோ பாருங்கள் நான்கு நிறத் தொட்டிகள் அவற்றின் கீழே. 'எம்மைப் பயன்படுத்தியமைக்கு நன்றி' என எழுதப்பட்டுள்ளதே.



ஆசிரியர் - நீல நிறத் தொட்டி எதற்கு?

மாணவி - கடதாசிக் குப்பைகள் போட

ஆசிரியர் - சிவப்பு நிறத்தொட்டி எதற்கு?

மாணவி - போத்தல், தகரம் போன்றவை போட.

ஆசிரியர் - பச்சை நிறத் தொட்டி எதற்கு?

மாணவன் - நாம் கொண்டுவந்து உண்ட உணவின் எஞ்சியதைப் போட.

ஆசிரியர் - செம்மஞ்சள் நிறத்தொட்டி எதற்கு?

மாணவன் - பொலித்தீன், பிளாஸ்டிக் போட.

ஆசிரியர் - ஆ... எல்லாம் நன்கு அறிந்து வைத்திருக்கிறீர்களே!

மாணவி - எமது பாடசாலையில் அப்படி இருக்கிறது. அதில் அவ்வாறுதான் எழுதப்பட்டும் இருக்கிறது. அதனால் எமக்கு நன்கு பரிச்சயம் உண்டு.

ஆசிரியர் - அதோ, நாம் வெளியேறும் வாயில்... வாருங்கள்... போவோம்.

## செயற்பாடு 6

- களப்பயணம் என்ற பாடத்தின் ஊடாக அறிவித்தல், அறிவுறுத்தல், கட்டளைகள், குறியீடுகள் போன்றவற்றை மாணவர்களுக்கு விளக்குங்கள்.

*எடுத்துக்காட்டு:*









செயற்பாடு 7

- பிளாத்திக்குப் போத்தல், பைகள், கடதாசிகள், உடைந்த பொருட்கள் என்பவற்றை வேறுபடுத்தி எவ்வாறு தொட்டிகளில் இடவேண்டும் என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள். பொது இடங்களில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் மாணவர்களுக்கு விளக்குங்கள். கண்டகண்ட இடங்களில் பொருட்களை வீசுவதால் ஏற்படும் விளைவுகளையும் மாணவர்களுக்கு விளக்குங்கள்.

*எடுத்துக்காட்டு:*



- களப் பயணம் தொடர்பான பாடத்தின் ஊடாக அறிவித்தல், அறிவுறுத்தல், கட்டளைகள், குறியீடுகள், நிறுத்தக்குறிகள், தகவல்கள் போன்றவை பற்றிய வினாக்களையும் பயிற்சிகளையும் தயாரித்து வழங்குங்கள்.

செயற்பாடு **8**

- "பசுமை உலகு" என்னும் எண்ணக்கருவை மரங்கள் வளர்ப்பதன் முக்கியத்துவம் ஊடாக மாணவர்களுக்கு விளக்குங்கள். மரங்களை வளர்ப்பதால் நமக்குக் கிடைக்கும் நன்மைகளை மாணவர்களிடமே கேட்டுக் கரும்பலகையில் / வெண்பலகையில் பட்டியற்படுத்துங்கள். அதனை அவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதி வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- அதன் பின்னர் மரங்களால் கிடைக்கும் பயன்களை அறிய "பயன்மிகு மரங்கள்" என்ற பாடத்தை (பக்கம் 51) அறிமுகம் செய்யுங்கள். மாணவர்களுக்கு அப்பாடத்தை ஏற்ற இறக்கங்களுடன் வாசித்துக்காட்டுங்கள்.

*எடுத்துக்காட்டு:*



23 பயன்மிகு மரங்கள்

கிராமத்திலோ அல்லது நகரத்திலோ எங்கு நீங்கள் வசித்தாலும் மரங்கள் எமக்கு உதவி புரிவதனைக் காணலாம். சுவைமிகு கனிகள், அழகிய மலர்கள், சுவாசிக்கச் சுத்தமான காற்று. இவை யாவற்றையும் தருவது மரங்களே. கோடை காலத்தில் சுட்டெரிக்கும் சூரியனிடம் இருந்து தப்பிக்க நிழல் தருவதும் மரங்களேயாகும்.

மழை காலத்திலும் கிளைகளுக்கடியில் இடம் தருகின்றன. குளிர் காலங்களில் குளிர் காய, சருகையும் சுள்ளிகளையும் மரமே தருகின்றது. மரத்தினால் வீட்டின் ஜன்னல், கதவு மட்டுமன்றி பெட்டிகள், வண்டிகள், படகுகள், தெப்பம் போன்றவற்றையும் செய்கின்றோம். நீங்கள் எழுதுகின்ற பென்சில், காகிதங்களும் கூட மரத்தில் இருந்து வந்தவைதான்.



கிராமப்புறங்களில் தென்னோலைகளைக் கொண்டு கூரை வேய்கிறார்கள். தென்னோலைகளை ஊறவைத்து கிடுகாகப் பின்னி பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துகின்றார்கள்.

வேப்பமரம் பல நன்மைகளைத் தருகிறது. வேப்பிலைக் குருத்துக்களைத் தின்றால் தொற்று வியாதிகள் அணுகா. வேப்பங் குச்சிகள் பற்களைச் சுத்தம் செய்ய உதவும். அதனால்தான் "ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி" என்று கூறுகின்றார்கள். காகம், மைனா போன்ற பறவைகள், வேப்பம் பழத்தை விரும்பி உண்டு விதைகள் பரவ உதவுகின்றன.

மாமரங்கள் ஆண்டு முழுவதும் நிழலைத் தருகின்றன. இதன் இலை, காய், விதைகள் மற்றும் இளம் கிளைகள் ஆடு மாடுகளுக்கு உணவாகின்றன. மாமரம் கோடை காலத்தில் தீஞ்சுவைக் கனிகளைத் தருகின்றது. அதன் உறுதியான பரந்த கிளைகள் சிறுவர்களின் பள்ளிக்கூடம் ஆகும்.

மாம்பழங்களைக் கொண்டு பழச்சாறு, பழக்கலவை தயாரிக்கின் றார்கள். மாங்காய், ஊறுகாய் தயாரிக்கவும் பயன்படுகின்றது. இதனாலேயே மாமரம் வரமளிக்கும் மரமாகப் பண்டைக் காலத்தில் கருதப்பட்டது.



பலாமரம் நிழலைத் தருகின்றது. பறவைகளுக்கும் பிராணிகளுக்கும் உறைவிடமாகின்றது. காற்றின் அதீத வேகத்தைக் கட்டுப்படுத்துகின்றது. வேர்களோ, மண்ணரிப்பைத் தடுக்கின்றது. மண்ணின் ஈரத்தன்மையைப் பேணுகின்றது. இதன் இலைகள் ஆடு மாடுகளுக்கு உணவாகின்றன. பலாப் பழங்களும் உணவாகின்றன. பலாக்காய்களையும் விதைகளையும் நீரிலோ அல்லது நீராவியிலோ வேக வைத்துத் தேங்காயுடன் கலந்து உணவாக உண்ணலாம். பாலூட்டும் தாய்மாருக்கு மிகவும் உகந்தது. பலா விதைகளைப் பொரித்தும் உண்ணலாம்.

இவ்வாறு மரங்கள் மனிதனுக்குப் பல்வேறு வழிகளில் உதவுகின்றன. மரங்கள் இன்றேல் மழை இல்லை; மழை இல்லை எனில் பயிர்கள் இல்லை. பயிர்கள் இல்லையேல் உணவு இல்லை. உணவு இன்றேல் உயிர் வாழ முடியாது.

நாம் நலமாக வாழ மரங்களை வளர்ப்போம்; சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்போம்; உலக அழிவைத் தடுப்போம்; பசுமை உலகைப் படைப்போம்; பாதுகாப்போம்.




செயற்பாடு 9

- ஒவ்வொரு மரத்தின் படத்தினையும் வரைந்து அதனால் கிடைக்கும் பயன்களை எழுதுமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள். அதன் பின்னர், ஆசிரியரும் ஒவ்வொரு மரங்கள் பற்றியும் கரும்பலகையில் / வெண்பலகையில் எழுதுங்கள். எழுமாறாக மாணவர்களை அழைத்து வாசித்துக்காட்ட வழிப்படுத்துங்கள். ஆசிரியர் எழுதிய பயன்களை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் பொருத்தமான வினாக்களுக்கு விடை எழுத மாணவர்களை வழிப்படுத்துங்கள். வித்தியாசமான பயிற்சிகளையும் தயாரித்து வழங்குங்கள்.

**கணிப்பீடு :**

- ஒளிப்படங்கள் தொடர்பாகக் கூறுதல், எழுதுதல்
- வீட்டிற்கு வருகைதரும் விருந்தினர் தொடர்பாகக் கூறுதல், எழுதுதல்
- சுற்றுலா அல்லது களப்பயணம் சென்ற அனுபவங்களைக் கூறுதல், எழுதுதுல்
- மரங்களை வளர்ப்பதன் அவசியத்தைக் கூறுதல், எழுதுதல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

# 9

## தேர்ச்சிகள் :

$L_9$ – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றிச் செவிமடுப்பார்.

$S_9$ – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு பொருத்தமுறப் பேசுவார்.

$R_9$ – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் கருத்தூன்றி வாசிப்பார்.

$W_9$ – கிரகித்தலுக்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் எழுதுவார்.

## உள்ளடக்கம் :

- சிறுவர் பாடல்கள்
- சிறுவர் கதைகள் (நகைச்சுவை)
- விஞ்ஞானிகள் / விஞ்ஞான விளக்கம்
- தகவல்கள் (பிராணிகள்)
- சிறுவர் இணையத்தளங்கள்
- சிறுவர் சஞ்சிகைகள்
- சிறுவர் நூல்கள்

## கற்றற்பேறுகள் :

- சிறுவர் பாடல்களை வாசித்து, அப்பாடல்களின் கருத்துக்களை ஆக்கத்திறனுடன் வெளிப்படுத்துவார்.
- சிறுவர் நகைச்சுவைக் கதைகளை இரசித்து ஆக்கத்திறனுடன் வெளிப்படுத்துவார்.
- விஞ்ஞானிகளைப் பற்றி அறிந்து ஆக்கத்திறன்களை வெளிப்படுத்துவார்.
- விஞ்ஞான விளக்கங்களைப் புரிந்துகொண்டு அதன்படி செயற்படுவார்.
- பிராணிகள் பற்றிய தகவல்களை அறிந்து ஆக்கத்திறனுடன் வெளிப்படுத்துவார்.
- சிறுவர் இணையத்தளங்கள், சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் நூல்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு, அவை தொடர்பான முக்கிய தகவல்களை ஆக்கத்திறனுடன் சமர்ப்பிப்பார்.

## வளங்கள் :

- கதை அட்டைகள், பாடல் அட்டைகள், பாடநூல், கணினி, இணையத்தளங்கள், சிறுவர் சஞ்சிகைகள், சிறுவர் நூல்கள், பிராணிகள் பற்றிய தகவல்கள், கதைகள், பாடல்கள், விஞ்ஞானிகள் பற்றிய தகவல்கள், விஞ்ஞான விளக்கம் போன்றவற்றை ஒலி, ஒளிப்பதிவு செய்த இறுவட்டுகள்

## கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :

**செயற்பாடு 1 :**

- மாணவர்களுக்குப் பாடநூலிலுள்ள (பக்கம் 39) **"மணல்வீடு"** என்ற சிறுவர் பாடலலை அறிமுகம் செய்யுங்கள். பாடிக் காட்டுங்கள், கவிதை நடையில் மாணவர்களுடன் சேர்ந்து வாசியுங்கள்.

**மணல் வீடு**

கோடி கோடி பணத்தினால்
மாடி வீடு கட்டுவர்

கோடி கோடி மணலினால்
வீடு நாங்கள் கட்டினோம்

செங்கல் தேவை யில்லையே!
சீமெந்தும் தேவை யில்லையே!
எங்கள் வீட்டைக் கட்டிட
இரும்பும் தேவை யில்லையே!

ஐந்து நிமிட நேரத்தில்
அழகுமிக்க வீட்டினைச்
சந்து பொந்து இன்றியே
குந்தி நாங்கள் கட்டினோம்

கடலின் அலைகள் வீட்டினைக்
கரைத்திட் டாலும் பயமில்லை
உடனே புதிய வீட்டினை
உவகையோடு கட்டுவோம்

ஏடு பிடிக்கும் யாவரும்
கூடி வீடு கட்டினோம்
வீடு உடைந்து போகுமுன்
ஓடி வந்து பாருங்கள்

- செல்ல கணபதி

- இப்பாடலின் கருத்தை மாணவர்களுக்கு உணர்த்துங்கள். மணல் வீடு கட்டும் அனுபவத்தைப் பெற்றுக்கொடுங்கள். அதன் பின்னர் பாடலில் முதல் நான்கு வரிகளிலுள்ள சொற்கள் சிலவற்றை நீக்கிக் கோடிடுங்கள். நீக்கிய பாடல்களில் வரவேண்டிய சொற்களைக் கண்டுபிடித்து எழுத வழிப்படுத்துங்கள்.
*எடுத்துக்காட்டு:*

படி 1

கோடி கோடி பணத்தினால்
.......................... கட்டுவார்
கோ கோடி ..........................
............. நாங்கள் கட்டுவோம்.

படி 2


......................... தேவை யில்லையே!
......................... தேவை யில்லையே!
எங்கள் வீட்டைக் கட்டிட
......................... தேவை யில்லையே!

- இந்த அடிகளைப் பூர்த்திசெய்த பின்னர், அடுத்த நான்கு அடிகளிலும் உள்ள சொற்களை நீக்கி மாணவர்களுக்குப் பயிற்சியளியுங்கள். இப்பயிற்சிகள் மாணவர்களின் ஆக்கத்திறனை வளர்க்க உதவும். இதுபோன்று ஏனைய அடிகளிலும் சொற்களை நீக்கிவிட்டு பூர்த்திசெய்ய ஊக்கமளியுங்கள். இப்பாடலை எழுதியவர் பற்றியும் கூறுங்கள்.

செயற்பாடு 2 :

- பாடநூலிலுள்ள (பக்கம் 50) **வெற்றி** என்ற பாடலை மாணவர்களுக்குக் கவிதை நடையில் அறிமுகம் செய்யுங்கள். அதன் பின்னர் பாடலின் முதல் நான்கு அடிகளையும் வாசியுங்கள். அதன் பின்னர் ஒவ்வொரு அடியாக விளக்குங்கள். இவ்வாறு அடுத்த நான்கு அடிகளையும் விளக்குங்கள். (ஒரே நாளில் மாணவர்களுக்குக் கற்பிப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்)

  ***எடுத்துக்காட்டு:***



22

**வெற்றி**

பலமுறை திருத்தி வரைந்தால் தான்
பாங்காய் ஓவியம் உருவாகும்!
பலமுறை பாடிப் பார்த்தால் தான்
பண்ணுடன் குரலும் வளமாகும்!

பலமுறை நடந்து பார்த்தால் தான்
பாதை புதிதாய் உருவாகும்!
பலமுறை ஓடிப் பார்த்தால் தான்
பந்தயப் பரிசு கைகூடும்!

பலமுறை படித்துப் பார்த்தால் தான்
பாடம் மனதில் பதிவாகும்!
பலமுறை நினைத்துப் பார்த்தால் தான்
படித்தவை கல்மேல் எழுத்தாகும்!

மயங்கித் தயங்கி நிற்காதே!
மனமும் தளர்ந்து போகாதே!
முயன்று முயன்று பார்த்தால் தான்
முடிவில் வெற்றி உன்னைத் தேடும்!


*- கவிஞர் பல்லவன்*

- அதன் பின்னர் ஒவ்வொரு அடியாக மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் எழுதவும் அவ்வடிகளின் கருத்தை விளங்கிக்கொள்ளவும் வகை செய்யுங்கள். இப்பாடல் அடிகளைத் தனித்தனியாக வகுப்பில் எழுதிக் காட்சிப்படுத்துங்கள். பாடலுக்குப் பொருத்தமான பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள்.

செயற்பாடு 3 :

- மாணவர்களுக்குப் பாடநூலிலுள்ள (பக்கம் 34) **பூனையால் வந்த புகார்** என்ற நகைச்சுவைக் கதையை ஒலிப்பதிவு செய்து மாணவர்களைச் செவிமடுக்கச் செய்யுங்கள். அதன் பின்னர், ஆசிரியர் கதையை வாசிக்க மாணவர்கள் பாடத்தைக் கவனித்து மனதுக்குள் வாசிக்க வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் மாணவர்களுடன் சேர்ந்து ஆசிரியர் கதையை வாசிக்க வேண்டும்.

*எடுத்துக்காட்டு:*


16

பூனையால் வந்த புகார்

நான்கு நண்பர்கள் கூட்டாகப் பஞ்சு வியாபாரம் செய்து வந்தனர். நாளடைவில் பஞ்சுக் கடையில் ஏராளமான எலிகள் பெருகின. பஞ்சுப் பொதிகளை நாசம் செய்தன.


எலிகளை ஒழிக்க என்ன செய்யலாம்? என யோசித்தனர். ''ஒரு பூனை வளர்க்கலாம்'' என முடிவெடுத்தனர். நால்வருமாகச் சேர்ந்து ஒரு பூனையை வளர்க்க ஆரம்பித்தனர். பூனை வந்தபின் எலித்தொல்லை குறைந்தது. இதன் காரணமாக நால்வருக்கும் பூனை மீது அன்பு ஏற்பட்டது. பூனைக்குச் சகலவிதமான உபசாரங்களையும் செய்ய ஆரம்பித்தனர். அது மட்டுமல்லாமல் அதன் கால்களுக்கு அணிகலங்கள் அணிவித்து அழகு செய்ய விரும்பினர்.


எனவே வியாபாரிகள் பூனையின் நான்கு கால்களை, ஆளுக்கு ஒன்றாகப் பிரித்துக்கொண்டனர். அவரவர்களுக்குப் பங்கான காலில் தங்களுக்கு விருப்பமான அணிகலன்களைப் பூட்டி அழகு பார்த்தனர்.

ஒருநாள் பூனை ஒரு காலை நொண்டிக் கொண்டே வந்தது. அதைப் பார்த்தவர்கள், அந்தக் காலுக்குரியவனைப் பார்த்து ''நண்பா, உனக்குச் சொந்தமான பூனையின் காலில் அடிபட்டுவிட்டது. கவனமாக மருந்து போட்டுக் குணப்படுத்து'' என்று கூறினர்.

அந்தக் காலுக்கு உரியவனும் பூனையின் காயத்தைத் துடைத்தான். பூனையின் அடிபட்ட காலில் எண்ணெய்த் துணியைச் சுற்றி வைத்தான்.

அன்று இரவு பூனை, விளக்குப் பக்கம் போனது. அதன் காலில் சுற்றியிருந்த துணியில் நெருப்புப் பிடித்துக் கொண்டது; காலில் நெருப்பின் சூடு தாங்காமல் அங்குமிங்கும் பூனை மிரண்டு ஓடியது. அதனால் பஞ்சு மூட்டைகள் அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிட்டன.


வியாபாரிகள் மூவரும், பூனையின் காலில் எண்ணெய்த் துணி சுற்றியவனைப் பார்த்து ''நீ எண்ணெய் துணி சுற்றி வைத்ததால் தான் இந்த நட்டம் வந்தது. எனவே எங்களுக்கு ஏற்பட்ட நட்டத்தை நீதான் தரவேண்டும்'' எனச் சண்டையிட்டனர்.

அவனோ, தான் வேண்டுமென்று செய்யவில்லை. எதிர்பாராமல் நடந்த விபத்திற்குத் தன்னை மன்னிக்க வேண்டுமெனக் கேட்டான். மற்றைய மூவரும் அதை ஏற்றுக்கொள்ளவில்லை.

வழக்கு, மரியாதை ராமனிடம் போயிற்று. நடந்ததை அறிந்த ராமன் ''பூனையின் காலில் அடிபட்டுள்ளது. எனவே அந்தக் காலால், நடக்கவோ ஓடவோ முடியாது. மற்ற மூன்று கால்களால்தான் ஓடியிருக்க வேண்டும். எனவே அந்தக் கால்களுக்குச் சொந்தமானவர்கள்தான் நட்டத்திற்குப் பொறுப்பு. ஆகவே அடிபட்ட காலுக்குரியவருக்கு மற்ற மூவரும் நட்டத்தை வழங்கவேண்டும்'' எனத் தீர்ப்பளித்தான்.

செய்யும் கருமத்தின் முடிவை ஆராய்ந்து பார்த்தே செய்ய வேண்டும்.

- தரம் 3 மாணவர்களுக்கு அறிமுகம் செய்த நிறுத்தக்குறிகளுடன்கூடிய வாக்கியத்தைக் கரும்பலகையில் அல்லது வெண்பலகையில் எழுதுங்கள். எழுதியவற்றை மாணவர்கள் அப்பியாசக் கொப்பியில் உறுப்பமைய எழுத வழிப்படுத்துங்கள். சரியாக நிறுத்தக் குறிகளை இடுகிறார்களா என அவதானியுங்கள்.

*எடுத்துக்காட்டு :*

1. நான்கு நண்பர்கள் கூட்டாகப் பஞ்சு வியாபாரம் செய்தனர்.
2. எலிகளை ஒழிக்க என்ன செய்யலாம்?
3. வழக்கு, மரியாதைராமனிடம் போயிற்று.

**செயற்பாடு 4:**

- கதையில்வரும் லகர, ளகர, ழகர வேறுபாட்டுச் சொற்கள், ரகர, றகர வேறுபாட்டுச் சொற்கள், னகர, ணகர வேறுபாட்டுச் சொற்கள் ஆகியவற்றைப் பட்டியற்படுத்தி, மாணவர்கள் சரியாக உச்சரித்து வாசிக்கவும் எழுதவும் வழிப்படுத்தவும்.

**செயற்பாடு 5:**

- மரியாதைராமன் வழங்கிய தீர்ப்பு தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். குழுவாக மாணவர்கள் கதையைக் கட்டியெழுப்பச் சந்தர்ப்பம் வழங்குங்கள். கதையில் வரும் முக்கிய உரையாடல்களை எழுதிக் காட்சிப்படுத்தி மாணவர்களை வாசிக்கவும் எழுதவும் வழிப்படுத்துங்கள்.


  ***எடுத்துக்காட்டு:***

  (1) பஞ்சுக் கடையில் ஏராளமான எலிகள் பெருகின.
  (2) பஞ்சுப் பொதிகளை நாசம் செய்தன.
  (3) பூனையால் எலித்தொல்லை குறைந்தது.
  (4) ஒரு நாள் பூனை நொண்டிக்கொண்டே வந்தது.

- அதன் பின்னர், வினாக்களுக்கு விடையெழுதவும் கதையுடன் தொடர்புடைய பயிற்சிகளையும் வழங்குங்கள்.


**செயற்பாடு 6:**

- பாடநூலில் "தொலைபேசியின் தந்தை" என்ற தலைப்பில் (பக்கம் 55) அலெக்ஸ்சாண்டர் கிரகாம் பெல் பற்றித் தரப்பட்டுள்ள தகவல்களை மாணவர்கள் சுலபமாக கிரகித்துக்கொள்வதற்காக ஒலிப்பதிவு செய்து மாணவர்களைச் செவிமடுக்க ஆர்வமூட்டுங்கள். இதனூடாக கிரகித்துச் செவிமடுக்கும் திறன் வளரும் என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.
- இப்பாடத்தை மாணவர்கள் கருத்தூன்றி வாசிக்கவும் தகவல்களைத் திரட்டிக்கொள்ளவும் வாய்ப்புகளை வழங்குங்கள். அதன் பின்னர் வினாக்களுக்கு விடை எழுத ஊக்கப்படுத்துங்கள்.




24 தொலைபேசியின் தந்தை

- உலகில் இன்று எவரும் எவருடனும் நொடிப்பொழுதில் பேச முடியும். இதற்குக் காரணமாக இருந்தவர் யார் தெரியுமா?
- அவர்தான் அலெக்ஸாண்டர் கிரகாம் பெல். அவரையே தொலைபேசியின் தந்தை என அழைக்கின்றனர்.
- நாம் 'ஹலோ' என்று சொல்வதற்குக் காரணமாக இருந்தவரும் அவர்தான்.



- கிரகாம் பெல் ஸ்கொட்லாந்தில் உள்ள எடின்பெர்க்கில் 1847 ஆம் ஆண்டு பிறந்தார்.
- அவர் எட்டு வயதிலேயே நன்றாகப் பியானோ வாசிப்பதில் வல்லவராகத் திகழ்ந்தார்.
- உலகின் முதல் தொலைபேசி 1876 ஆம் ஆண்டு பேசியது. கிரகாம் பெல் தனது உதவியாளர் வாட்சனிடம் தொலைபேசியில் பேசினார். "வாட்சன் இங்கே வாருங்கள், உங்களைக் காண வேண்டும்." (Watson come here I want to see you) என்பதே அவர் பேசிய வார்த்தைகளாகும்.
- கிரகாம் பெல் தொலைபேசியைக் கண்டு பிடித்த போது அதைப் பற்றி யாரும் அக்கறை கொள்ளவில்லை.



*முதல் தொலைபேசி*

- பிலெடெல்பியாவில் ஒரு கண்காட்சி நடைபெற்றது. கண்காட்சியில் தொலைபேசியைப் பார்வைக்கு வைத்தார். அங்கு பிரேசில் நாட்டு மன்னர் வந்தார். மன்னர் அதை வியப்போடு எடுத்துப் பயன்படுத்திப் பார்த்தார். அதன் பின்னரே தொலைபேசியின் பெருமை உலகெங்கும் பரவியது.
- தொலைபேசியைக் கண்டுபிடித்த கிரகாம் பெல் 1922 ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2 ஆம் திகதி மறைந்தார். அவர் மறைத்த தினத்தன்று அமெரிக்காவில் உள்ள தொலைபேசிகள் அனைத்தும் ஐந்து நிமிடங்கள் நிறுத்தப்பட்டன.
- கிரகாம் பெல்லின் குரலைப் பழமையான ஒலித்தட்டில் இருந்து மீட்டு எடுத்துள்ளார்கள். நவீன தொழில் நுட்பம் அதற்குத் துணை புரிந்துள்ளது.

செயற்பாடு 7:

- மாணவர்கள் கிரகித்துத் துலங்குவதற்காகவும் ஆக்கத்திறனை வெளிப்படுத்துவதற்காகவும் பாடநூலிலுள்ள (பக்கம் 48) கண்டறிவோம் என்ற விஞ்ஞான செய்முறையை அறிவுறுத்தலைப் பின்பற்றி மாணவர்கள் செயற்படுத்துவதற்கு உதவுங்கள்.

**கண்டறிவோம்**




21 கண்டறிவோம்

ஒவ்வொரு மரத்தினதும் இலைகள் வேறுபட்டவை. பல்வேறு உருவங்களைக் கொண்டவை. அந்த இலைகளில் நரம்புகள் உள்ளன. அந்த நரம்புகளே, உணவு மற்றும் நீரை மரங்களுக்கு எடுத்துச் செல்கின்றன. அதுமட்டுமன்றி இலைகளுக்கு ஒரு திடமான வடிவமைப்பையும் தருகின்றன. அதனை நாம் செய்துபார்த்து அறிவோம்.

**இதனைச் செய்வதற்குத் தேவையான பொருள்கள்**

பல்வேறு இலைகள்
செய்தித் தாள்கள்
வெண்மையான கடதாசிகள்
சிறிய கைச் சுத்தியல்



எப்படிச் செய்வது என்று பார்ப்போம். பலவிதமான இலைகளை முதலில் சேகரித்துக்கொள்ள வேண்டும். அவற்றைத் தனித்தனியே செய்தித் தாள்களின் இடையிலே வையுங்கள். அவற்றின் மேல் கனமான புத்தகங்களை அடுக்குங்கள். இலைகள் நன்றாகக் காயும் வரை அப்படியே வைத்திருங்கள்.

இலைகள் நன்கு காய்ந்த பின்பு, ஒன்றை எடுத்து இரண்டு வெண்மையான கடதாசிகளுக்கு இடையில் வையுங்கள். பின்பு சிறிய கைச்சுத்தியலினால் மெதுவாகத் தட்டுங்கள். அதன் பின்பு அதன் மேலே உள்ள காகிதத்தை எடுத்துவிடுங்கள். இலையை அதன் காம்பைப் பிடித்துத் தூக்குங்கள். இப்போது நீங்கள் என்ன காண்கிறீர்கள் தெரியுமா? உங்கள் கைகளில் இலையினது நரம்புகள் இருக்கின்றன. அதைத்தான் பிடித்துக் கொண்டிருக்கிறீர்கள்.

ஏன் இப்படி வந்தது தெரியுமா? காய்ந்த பின்னர் தட்டுகிறீர்கள் அல்லவா? இலையினது கலங்கள் அப்போது உடைந்து விழுகின்றன. வெறும் நரம்புகள் மட்டுமே கைகளில் இருக்கின்றன. இதனை நாமும் செய்து பார்ப்போமே!

நாம் முயன்று பெறும் அனுபவம் என்றுமே எம்மால் மறக்கப்படமாட்டாது.

- இக்கண்டறிவோம் என்ற பாடத்தின் செய்முறை விளக்கத்தைப் பின்பற்றிச் செய்யும் போது கிரகித்தல் திறனும் ஆக்கத்திறனும் விரிவடைகிறது என்பதை நினைவிற்கொள்ளுங்கள். மாணவர்கள் பாடத்தை வாசித்துச் சுயமாக தமது ஆக்கத்திறனை வெளிப்படுத்த வாய்ப்புகளை வழங்குங்கள்.

செயற்பாடு 8

- பாடநூலிலுள்ள **"தெரிந்து கொள்வோம்"** என்ற பாடத்தின் (பக்கம் 11) வாயிலாக மாணவர்கள் பிராணிகள் பற்றிய தகவல்களைத் திரட்டி எழுத வழிப்படுத்துங்கள். தெரிந்துகொள்வோம் என்ற பாடத்தை வாசித்து, விளங்கி பிராணிகள் பற்றிய தகவல்களை அப்பியாசக் கொப்பியில் குறித்து வகுப்பின் முன் வாசித்துக்காட்ட மாணவர்களை வழிப்படுத்துங்கள். அதன் பின்னர் பிராணிகள் தொடர்பான வினாக்களுக்கு விடையெழுத நெறிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*



7 தெரிந்து கொள்வோம்

**கிளி**

கிளிகள் மரப்பொந்துகளிலேயே வசிக்கின்றன. இவை பழங்கள், விதைகள், பூக்களின் மொட்டுக்கள் போன்றவற்றை உண்கின்றன. கிளியின் அலகு பலம் வாய்ந்தது. பறவைகளிலே கிளி பேசும் தன்மை வாய்ந்தது.

**புறா**

முற்காலத்தில் புறாக்கள் மூலமே செய்திகள் ஓரிடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன. புறாக்கள் சிறிய மரக்குச்சிகளைக் கொண்டு கூடு கட்டுகின்றன. புறாக்களின் பார்வை மிகவும் சக்தி வாய்ந்தது. இவற்றால் வண்ணங்களைப் பார்க்க முடியும். அத்துடன் மெல்லிய ஒலியையும் கேட்க முடியும்.



**பென்குயின்**

பென்குயின்கள் பறவை இனத்தைச் சேர்ந்தவை. ஆனால் அவற்றிற்கு, பறக்க இயலாது. வாத்தினைப் போன்று அசைந்து அசைந்து நடக்கும். பென்குயின்கள் நீரின் உள்ளேயே இரை தேடுகின்றன. இவை பார்ப்பதற்கு மீன்களைப் போலக் காணப்படுகின்றன. இவை மணிக்கு இருபது கிலோ மீற்றர் வேகத்தில் நீந்துகின்றன.

**மரங்கொத்தி**

மரங்கொத்தி, மரத்தை எப்போதும் கொத்திக் கொண்டே இருக்கும். மரத்தின் உட்பகுதியில் வசிக்கும் சிறு சிறு பூச்சிகளை உண்பதற்காகவே மரத்தைக் கொத்துகின்றது. மரங்கொத்தி பூச்சிகள், பழங்கள், விதைகள் என்பவற்றை உ ண்ணுகின்றது.



டொல்பின்

டொல்பின்கள் சூடான கடல் நீரிலும் குளிர்ந்த கடல் நீரிலும் வாழும் இயல்புடையவை. இவற்றின் உடல் மிருதுவாகவும் எண்ணெய்த் தன்மை வாய்ந்ததாகவும் இருக்கும். இவை விரைவாக வளர்ச்சி அடையும்; மிக வேகமாக நீந்திச் செல்லும். இவை மனிதர்களுடன் நட்பாக இருக்க விரும்புகின்றன. மனிதர் இடும் கட்டளைக்கேற்ப செயற்படும் திறனுடையவை.

யானை

யானைகள் கூட்டங் கூட்டமாகவே வாழ்கின்றன. யானைகளில் ஆசிய யானைகள், ஆபிரிக்க யானைகள் என இரு வகை உண்டு. ஆசிய யானையின் காதுகளும் தந்தங்களும் சிறியவையாக இருக்கும். ஆனால் ஆபிரிக்க யானையின் காதுகளும் தந்தங்களும் பெரியவையாக இருக்கும்.



சிங்கம்

சிங்கங்கள் கூட்டமாகவே வாழ்கின்றன. அவை மிகவும் பலம் வாய்ந்தவை. அவற்றிற்கு மோப்பசக்தி அதிகம். அத்துடன் கேட்கும் சக்தியும் பார்க்கும் சக்தியும் துல்லியமானவை. சிங்கங்கள் கர்ச்சித்தால் சுமார் எட்டுக் கிலோ மீற்றர் வரை எதிரொலிக்கும்.

வரிக்குதிரை

வரிக்குதிரைகள், குதிரை இனத்தைச் சேர்ந்தவை. இவை மிக வேகமாக ஓடும் ஆற்றல் பெற்றவை. இவற்றின் பார்வை மிகவும் சக்தி வாய்ந்தது. இவை மற்ற வரிக் குதிரைகளுடன் கூட்டமாக மேயும்.

செயற்பாடு 9

- மாணவர்களை கணினிக்கூடத்திற்கு அழைத்துச்செல்லுங்கள். சிறுவர் இணையத் தளங்களை வாசித்து, கிரகிக்கவும் ஆக்கபூர்வமான விடயங்களைத் திரட்டிக்கொள்ளவும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

*எடுத்துக்காட்டு:*

நண்பர்களே ! கண்டுபிடியுங்கள்.
எத்தனை "**தமிழ்**" வார்த்தைகள்
ஒளிந்திருகின்றது.

தமிழ் புதிர் - 4

| | | | | |
|---|---|---|---|---|
| த | மி | ழ் | மி | த |
| மி | ழ் | மி | த | மி |
| ழ் | மி | த | மி | ழ் |
| மி | த | மி | ழ் | மி |
| த | மி | ழ் | மி | த |

செயற்பாடு 10

- வகுப்பறையில் புத்தக மூலையில் சிறுவர் சஞ்சிகைகளைத் திரட்டி வைத்துக் கொள்ளுங்கள். அச்சஞ்சிகைகளில் தமக்குப் பிடித்த பக்கங்களை வாசிக்கவும் தேவையான பகுதிகளை மாணவர்கள் எழுதிக்கொள்ளவும் ஊக்கப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*




நன்றி: தினமலர்

செயற்பாடு 11

- சிறுவர் நூல்களைப் பார்வையிட நூலகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் அங்கு சிறுவர் நூல்களைப் பார்வையிட அனுமதியுங்கள். மாணவர்கள் தெரிவுசெய்யும் நூல் ஒன்றின் பெயர், அதனை எழுதியவரின் பெயர், புத்தகத்தின் விலை, உள்ளடக்கத்தில் உள்ள தலைப்புகள் போன்ற விபரங்களை அப்பியாசக் கொப்பியில் எழுத வழிப்படுத்துங்கள். எல்லா மாணவர்களும் தாம் தெரிவுசெய்த புத்தகம் தொடர்பான விபரங்களைத் திரட்டி எழுத வழிப்படுத்துங்கள்.

*எடுத்துக்காட்டு:*







நூலின் பெயர் : ..............................................

நூலாசிரியர் பெயர் : ..............................................

புத்தகத்தின் விலை : ..............................................

புத்தகத்தின் பக்கங்கள் : ..............................................

புத்தகத்திலுள்ள படங்கள் எண்ணிக்கை : ..............................................

**கணிப்பீடு :**

- சிறுவர் பாடல்களின் கருத்தைப் புரிந்துகொள்ளல்
- சிறுவர் நகைச்சுவைக் கதைகளை ஆக்கபூர்வமாக வெளிப்படுத்தல்
- விஞ்ஞானிகளைப் பற்றிக் கூறுதல், தகவல்களைத் திரட்டுதல், எழுதுதல்
- இணையத்தளத்தைப் பார்வையிடல், விடயங்களை வாசித்தல்
- சிறுவர் சஞ்சிகைகளை விருப்புடன் வாசித்தல்
- சிறுவர் நூல்களில் இருந்து தகவல்களைப் பெறல், அறிக்கைப்படுத்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

## 10

**தேர்ச்சிகள் :**

- **$L_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் செவிமடுப்பார்.
- **$S_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் பேசுவார்.
- **$R_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் வாசிப்பார்.
- **$W_{10}$** – நியம மொழிப் பிரயோகத்திற்காகவும் மொழிப் பயிற்சிக்காகவும் எழுதுவார்.

**உள்ளடக்கம் :**

- ஒளிப் படங்கள்
- படிப்பினை தரும் கதைகள்
- இணையத்தளங்கள்
- மொழிப் பயிற்சிகள்

**கற்றற்பேறுகள் :**

- ஒளிப் படங்களைப் பார்த்து விளங்கி நியம மொழியில் விபரிப்பார், எழுதுவார்.
- படிப்பினை தரும் கதைகளை வாசித்து நியம மொழியில் கூறுவார், எழுதுவார்.
- ஒலி, ஒளி இறுவட்டுக்களைச் செவிமடுத்து / பார்த்துக் கேட்டு வினாக்களுக்கு நியம மொழியில் விடையளிப்பார்.
- மொழிப் பயிற்சிக்கான அறிவுறுத்தல்களைக் கருத்தூன்றிச் செவிமடுப்பதுடன் வாசித்து விளங்கி வினாக்களுக்குச் சரியாக விடையளிக்க முயல்வார்.

**வளங்கள் :**

- ஒளிப் படங்கள், கதைப்பட அட்டைகள், பாடநூல், ஒலி - ஒளி இறுவட்டுகள், செயல்நூல்

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு 1 :**

- மாணவர்களுக்குப் பொருத்தமான ஒளிப் படமொன்றைத் தெரிவு செய்து, பிரதியெடுத்து மாணவர்களுக்கு வழங்குங்கள். அப்படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் நியம மொழியில் வாக்கியங்களை எழுதி நிறுத்தக்குறிகளை இட வழிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு:*



- ஒளிப்படத்தைப் பார்த்து மாணவர்கள் வினாக்களுக்கு நியம மொழியில் விடையளிக்க வழிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு:*

  (1) ..............................................................................................................

  (2) ..............................................................................................................

  (3) ..............................................................................................................

**செயற்பாடு 2:**

- பாடநூலிலுள்ள (பக்கம் 45) **குருவின் அறிவுரை** என்ற படிப்பினைதரும் கதையை மாணவர்களுக்கு வாசித்துக் காட்டுங்கள். மாணவர்களையும் வாசிக்க வழிப்படுத்துங்கள். கதையுடன் தொடர்புடைய சில வாக்கியங்களை எழுத வழிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு :*


**20 குருவின் அறிவுரை**

பூங்குன்றம் என்ற அழகிய கிராமம். அக்கிராமத்தில் சங்கீத வித்துவான் ஒருவர் வசித்து வந்தார். அவரிடம் அயலூரில் உள்ள மாணவன் சங்கீதம் கற்று வந்தான். அவனுக்கு எல்லா இராகங்களையும் கற்பித்தார்.

மாணவனது படிப்பு முடிந்தது. குருவிடம் ஆசி பெற்றான். தன் ஊருக்குப் புறப்பட்டான். அப்போது குரு அவனைப் பார்த்து ''உனக்கு இசையில் முழுத் திறமையும் வந்துவிட்டது. எதிர்காலத்தில் நினைவில் வைத்துக்கொள். எச்சந்தர்ப்பத்திலும் ஆகிரி இராகத்தை மட்டும் பாடாதே. அப்படிப் பாடினால் அன்று முழுவதும் உனக்கு உணவு கிடைக்காது'' என்று கூறி வழி அனுப்பி வைத்தார்.



கட்டுச்சாதப் பொதியுடன் தன் ஊர் நோக்கி, காட்டு வழியே நடந்து சென்று கொண்டிருந்தான். அவனுக்குக் களைப்பாக இருந்தது.



காலைநேரம் கட்டுச்சாதப் பொதியை மூங்கில் கிளையில் கட்டி விட்டு இளைப்பாற அமர்ந்தான்.

கட்டுச்சாதப் பொதி எதிரில் உள்ளது. ஆகிரி இராகத்தைப் பாடினால் என்ன? உணவு கிடைக்காமலா போகும் என்று நினைத்தான்.

ஆகிரி இராகத்தைத் தன்னை மறந்து நீண்ட நேரம் பாடினான். அவன் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தான். நண்பகல் நேரம் பாட்டைப் பாடுவதை நிறுத்தினான். பசி அவனை வாட்டியது. மூங்கில் கிளையில் கட்டி வைத்திருந்த சாப்பாட்டுப் பொதியைப் பார்த்தான். அங்கே சாப்பாட்டுப் பொதி இல்லை. அதிர்ச்சி அடைந்தான்.

**செயற்பாடு 3:**

- பாடநூலிலுள்ள (பக்கம் 58) புதிய தீர்ப்பு என்ற கதையை மாணவர்களுக்கு வாசித்துக்காட்டுங்கள். மாணவர்களையும் வாசிக்க வழிப்படுத்துங்கள்.

  *எடுத்துக்காட்டு :*

**25 புதிய தீர்ப்பு**

ஓர் ஊரில் ஓர் அரசர் இருந்தார். அவர் மிகவும் நல்லவர். ஒருநாள் விவசாயி ஒருவர் அரசரிடம் முறைப்பாடு செய்தார். அரசே, ''என்னுடைய வயலில் ஆடுகள் மேய்ந்து பயிர்களை அழித்துவிட்டன. பயிர்களை வளர்க்கப் பெருமளவு பணத்தைச் செலவு செய்துள்ளேன். நான் சேர்த்து வைத்திருந்த பணத்தை எல்லாம் செலவு செய்துவிட்டேன். இப்போது எல்லாமே போய்விட்டது. இனிமேல் நான் என்ன செய்வது? நீங்கள்தான் இதற்குச் சரியான தீர்ப்பு வழங்கவேண்டும்'' என்று அந்த விவசாயி கேட்டுக்கொண்டார்.

''அந்த ஆடுகளுக்குச் சொந்தக்காரர் யார் என்று கண்டுபிடியுங்கள். உடனே அவரை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்'' என்று அரசர் உத்தரவிட்டார்.

சேவகர்கள் சென்று ஆடுகளுக்குச் சொந்தக்காரரை அரண் மனைக்கு அழைத்து வந்தார்கள்.

மன்னர் வழக்கை விசாரித்தார். ''விவசாயி அடைந்திருக்கும் இழப்புக்கு ஈடாக உன்னுடைய ஆடுகளை நீ அவரிடம் கொடுத்துவிட வேண்டும்'' என்று தீர்ப்பு வழங்கினார்.

இதை மன்னனின் மகன் பார்த்துக் கொண்டிருந்தான். தந்தையைப் பார்த்து ''இந்தத் தீர்ப்பை இன்னும் சிறப்பாக வழங்கியிருக்கலாமே'' என்று கூறினான். உடனே அரசர் ''சரி, நீயே இதற்குச் சரியான தீர்ப்பைச் சொல்'' என்றார்.

அந்த இளவரசன் ஆடுகளுக்குச் சொந்தக்காரரைப் பார்த்து ''உங்களுடைய ஆடுகள் எல்லாவற்றையும் ஒரு வருட காலம் அந்த விவசாயியிடம் ஒப்படையுங்கள். அந்த ஒரு வருடத்திற்கும் அந்த ஆடுகள் ஈனும் குட்டிகள் மற்றும் அவற்றில் இருந்து கிடைக்கும் பால், எரு ஆகியவற்றை விவசாயி எடுத்துக் கொள்ளட்டும். ஒரு வருடத்தின் பின்னர் உங்களுடைய ஆடுகளை நீங்கள் திரும்பவும் வாங்கிக் கொள்ளுங்கள்'' என்று தீர்ப்புக் கூறினான்.

இது மிகச்சிறந்த தீர்ப்பு. ஒரு தண்டனையைப் பெறுபவன் அதற்குப் பின்னர் சமுதாயத்தில் நல்லவனாக வாழ்வதற்கு வாய்ப்பை வழங்குவது போன்று அத்தண்டனை அமைய வேண்டும்.

''உன்னை மகனாக அடைந்தமைக்காக மிகவும் மனம் மகிழ்கின்றேன். இன்று முதல் அரச பொறுப்புக்களை உன்னிடமே ஒப்படைக்கின்றேன்.'' என்று கூறி அரசர் தனது பொறுப்புக்களை ஒப்படைத்தார்.

- மாணவர்கள் வாசித்த பின்னர் மன்னன் வழங்கிய தீர்ப்பினை அப்பியாசக் கொப்பியில் எழுதுமாறு கூறுங்கள். மாணவர்கள் எழுதி முடித்ததும் மன்னனின் மகன் வழங்கிய தீர்ப்பினை அப்பியாசக் கொப்பியில் எழுதுமாறு கூறுங்கள். யாருடைய தீர்ப்பு மிகச் சிறந்தது என்பதையும் அப்பியாசக் கொப்பியில் எழுதுமாறு கூறுங்கள். அதற்கான காரணத்தையும் எழுத ஊக்கிவியுங்கள்.
- அதன் பின்னர், வினாக்களை வழங்கி, விடைகளை நியம மொழியில் எழுத வழிப்படுத்துங்கள். இதுவரை கற்றவற்றிலிருந்து பல்வேறு விதமான பயிற்சிகளை வழங்குங்கள்.


**செயற்பாடு 4:**

- பாடநூலிலுள்ள பாடங்கள் தொடர்பான விளக்கத்தை ஒலி இறுவட்டுக்களில் பதிவுசெய்யுங்கள். மாணவர்கள் குறிப்பிட்ட பாடங்களை வாசித்த பின்னர் அவை தொடர்பான விளக்கங்களை ஒலிக்கச்செய்து மாணவர்களைச் செவிமடுத்து வைத்து வினாக்களுக்கு விடை எழுத வழிப்படுத்துங்கள். எதிர்காலத்தில் இவ்வாறான பரீட்சைகளுக்கு முகங்கொடுக்க இப்பயிற்சி உதவும்.

**செயற்பாடு 5:**

- சிறுவர் இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் ஊடாக பல்வேறு தகவல்களைத் திரட்டி, நியம மொழியில் எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

  ***எடுத்துக்காட்டு:***




**செயற்பாடு 6:**

- ஒரு வருட காலம் மாணவர்கள் கற்றவற்றைக் கணிப்பீடு செய்வதற்காக பலவிதமான பயிற்சிகளை (ஆசிரியர்) சுயமாக ஆக்கி வழங்குவதன் ஊடாக மாணவர்களின் பலம், பலவீனம் ஆகியவற்றைக் கண்டறியுங்கள். இக்கணிப்பீடு இடர்ப்படும் மாணவர்களை உரிய அடைவு மட்டத்திற்கு இட்டுச்செல்ல துணைபுரியும்.

## மொழிப் பயிற்சிகள்

- மாணவர்கள் விருப்புடன் கற்பதற்கேற்ற மொழிப் பயிற்சிகளை வழங்குங்கள். அப்பயிற்சிகள் அவர்களின் வயது மட்டத்திற்கு ஏற்றதாக இருத்தல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**பயிற்சி : 1**

கீழே தரப்பட்டுள்ள பாடலின் அடிகளைப் பூர்த்தி செய்யுங்கள்.

1. அப்பா என்னை
................ சென்றார்
அங்கு ...............

2. அங்கிருந்த
குயிலும் ..................
ஆடித் ..................

3. பொல்லா ..................
புனுகுப் பூனை
................. எல்லாம் நின்றன

4. குட்டி ....................
ஒட்டகச் ...............
கூட இருந்தன.

**பயிற்சி : 2**

பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் சரி (✓) எனவும் பிழையாயின் பிழை (X) எனவும் அடையாளமிடுங்கள்.

1. யானைகள் கூட்டங் கூட்டமாக வாழ்கின்றன. ( )
2. டொல்பின்கள் மனிதர்களுடன் நட்பாக இருக்க விரும்புகின்றன. ( )
3. சிங்கங்கள் தனித்தனியாகவே வாழ்கின்றன. ( )
4. வரிக்குதிரைகள், குதிரை இனத்தைச் சேர்ந்தவை. ( )
5. வரிக்குதிரைகள் கூட்டமாக வாழ விரும்புவதில்லை. ( )

**பயிற்சி : 3**

கட்டத்தினுள் தரப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வாக்கியங்களைப் பூர்த்தி செய்யுங்கள்.

| கடதாசியை, | பட்டத்தைக், | ஈர்க்கை, | வால், | நூலைச், | திடலுக்கு |
|---|---|---|---|---|---|

1. பட்டம் கட்டுவதற்கு கரீம் ................... எடுத்தான்.
2. முரளி ........... எடுத்து அளவாக வெட்டினான்.
3. மேரி பட்டத்திற்கு ................ செய்தாள்.
4. காந்தன் ஈர்க்குகளினால் ............ கட்டினான்.
5. கரீம் ................... சுற்றினான்.

**பயிற்சி : 4**

பின்வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுங்கள்.

“நாம் விரைந்து பட்டம் செய்வோம்” என்று காந்தன் அவர்களை அழைத்தான்.

பட்டம் கட்டுவதற்கு கரீம் ஈர்க்கை எடுத்தான். அதனை அழுத்தமாகச் சீவி அளந்து முறித்தான். முரளி கடதாசியை எடுத்து அளவாக வெட்டினான். காந்தன் ஈர்க்குகளினால் பட்டத்தைக் கட்டினான். கடதாசியை அதன் மேல் ஒட்டினான். மேரி பட்டத்திற்கு வால் செய்தாள்.

**வினாக்கள்:**

1. பட்டம் கட்ட வருமாறு நண்பர்களை அழைத்தவர் யார்?
2. பட்டம் கட்டுவதற்கு ஈர்க்கை எடுத்தவர் யார்?
3. கடதாசியை அளவாக வெட்டியவர் யார்?
4. கடதாசியைப் பட்டத்தின் மேல் ஒட்டியது யார்?
5. பட்டத்திற்கு வால் செய்தவர் யார்?

**பயிற்சி : 5**

உறுப்பமைய எழுதுவோம்.

1. கைகளை நன்றாகக் கழுவுவோம்.

.................................................................................................................
.................................................................................................................
.................................................................................................................

2. நோய் வராமல் காப்போம்.

.................................................................................................................
.................................................................................................................
.................................................................................................................

**பயிற்சி : 6**

பின்வரும் பந்தியில் உள்ள வாக்கியங்களுக்கு முற்றுப்புள்ளி இடுங்கள்.

நம் முன்னோர் இயற்கையுடன் வாழ்ந்தார்கள் நிம்மதியாக மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்கள் ஆனால் நாமோ இயற்கையைப் புறக்கணித்தோம் மன நிம்மதியை இழந்தோம்

**பயிற்சி : 7**

வாக்கியங்களை நாமே பூர்த்தி செய்வோம்.

1. வண்ண ............... வளர்ப்போம்.
2. நோய்களைத் .................. விரட்டுவோம்.
3. பெரியோரின் ...................... கேட்போம்.
4. மரங்களை வளர்த்துப் ..................... பாதுகாப்போம்.
5. கைகளை ...................... கழுவுவோம்.

**பயிற்சி : 8**

பழமொழிகளைப் பூர்த்தி செய்வோம்.

1. அகத்தின் .............. முகத்தில் தெரியும்.
2. ஆனைக்கும் ................ அடி சறுக்கும்.

3. இளமையில் .................. சிலையில் எழுத்து.
4. மின்னுவதெல்லாம் ................ அல்ல.
5. நோயற்ற ................. குறைவற்ற செல்வம்.

**பயிற்சி : 9**

பந்தியில் உள்ள வாக்கியங்களுக்கு நிறுத்தக்குறிகளை இடுவோம்.

நாங்கள்தான் உங்கள் கைகள் நாங்கள் இல்லாமல் உங்களால் எழுதவும் வாசிக்கவும் முடியுமா நாங்கள் வேலை செய்யும்போது சேர்வடைவது கிடையாது

**பயிற்சி : 10**

ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங்களாக மாற்றி எழுதுக.

1. நான் புத்தகம் வாங்கினேன்.
   ....................................................................................
2. நான் நாய் வளர்த்தேன்.
   ....................................................................................
3. நான் மணல் வீடு கட்டினேன்.
   ....................................................................................
4. நான் குடை வாங்கினேன்.
   ....................................................................................
5. நான் மாலை கட்டினேன்.
   ....................................................................................

குறிப்பு : இதுபோன்ற பல்வேறு விதமான மொழிப் பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குங்கள். அவர்கள் உற்சாகமாக விடையளிக்கக்கூடிய வகையில் பயிற்சிகள் அமைதல் வேண்டும் என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

**கணிப்பீடு:**

- ஒளிப்படங்களைப் பார்த்து நியம மொழியில் விபரித்தல், எழுதுதல்.
- கதைகளைக் கிரகித்து பொருத்தமுற வெளிப்படுத்தல்
- ஒலி - ஒளி இறுவட்டுகளின் ஊடாக வினவப்படும் வினாக்களுக்கு நியம மொழியில் விடை எழுதுதல்
- இணையத்தளங்களைப் பயன்படுத்தி, தகவல்களை நியம மொழியில் எழுதுதல்
- மொழிப்பயிற்சிக்கான அறிவுறுத்தல்களை விளங்கி, நியமமொழியில் விடையளித்தல்

ஆகியவற்றைக் கணிப்பீடு செய்க.

# மாதிரிப் பாடக்குறிப்பு

திகதி : .................... முதல் .................. வரை

## தாய்மொழி - தமிழ்

வகுப்பு: தரம் 3

| தேர்ச்சிகள் | உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | வளங்கள் | உத்தேச நேரம் | கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள் (செயற்பாடுகள்) | கணிப்பீடு |
|---|---|---|---|---|---|---|
| $L_7$ $S_7$ $R_7$ $W_7$ | • காட்சிப் படங்கள் | • காட்சிப் படங்களைப் பார்த்து தமது மொழிநடையில் விபரிப்பார், எழுதுவார். | • காட்சிப் படங்கள், பட அட்டைகள் | 120 நிமிடங்கள் | **செயற்பாடு I**<br>• காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் வாக்கியங்களை கூறுதல், எழுதுதல், குழுக்களிடையே வாசித்தல் (பக்கம் 76) | • காட்சிப் படங்களைப் பார்த்து நிகழ்காலத்தில் எழுதுவதையும் கூறுவதையும் கணிப்பீட செய்தல் |
| | • சுய சரிதை | • சுயசரிதைகளை மொழியாட்சித் திறனை விருத்தி செய்வதற்காக முன்வைப்பார். | • சுயசரிதைக்கான முக மூடிகள், விரல் பொம்மைகள் | 60 நிமிடங்கள் | **செயற்பாடு 4**<br>• முகமூடி அணிந்து சுயசரிதையை தமது மொழிநடையில் கூறுதல் (பக்கம்77) | • மாணவர்கள் போலச் செய்வதை கணிப்பீடு செய்தல் |
| | • உலகநீதி | • தெரிவுசெய்யப்பட்ட உலகநீதி அடிகளை (10 அடிகள்) மனனம் செய்து தெளிவாக முன்வைப்பார், அவற்றின் கருத்தினை அறிந்து கொள்வார். | • உலகநீதி அடிகள் எழுதப்பட்ட அட்டைக் கீலங்கள் | 60 நிமிடங்கள் | **செயற்பாடு 5**<br>• உலகநீதி அடிகளை மனனம் செய்து கூறுதல், எழுதுதல் (பக்கம் 79) | • உலகநீதி பாடலடிகளை சரியாக உச்சரித்துக் கூறுவதனைக் கணிப்பீடு செய்தல் |
| | • கிராமிய விளையாட்டுக்கள் (சிறிய) | • கிராமிய விளையாட்டுக்களின் விதிமுறைகளை அறிந்து மற்றவர்களுடன் இணைந்து விளையாடுவார், விளையாட்டு விதிகளை எழுதுவார். | • கிராமிய விளையாட்டுக் களின் படங்கள், சொல் அட்டைகள் | 120 நிமிடங்கள் | **செயற்பாடு 6**<br>• கிராமிய விளையாட்டுக்களையும் விதிகளையும் அறிமுகம் செய்தல், விளையாடுதல் (பக்கம79) | • ஒற்றுமையாகச் சிறந்த தொடர்பாடலுடன் விளை யாட்டுக்களில் ஈடுபடு வதனைக் கணிப்பீடு செய்தல் |
| | • பண்டிகைகள் | • பாரம்பரிய பண்டிகைகளில் பரிமாறப்படும் உணவுகளை / தின்பண்டங்களைத் தெரிந்து கொள்ள முன்வருவார், அவற்றின் பெளர்களை அறிந்து எழுதுவார். | • பண்டிகைகள் தொடர்பான உணவுகள் / தின்பண்டங்கள் | 60 நிமிடங்கள்<br><br>60 நிமிடங்கள் | **செயற்பாடு 8**<br>• பண்டிகைகள் தொடர்பான உணவுகள், தின்பண்டங்களை அறிந்து கொள்ளலும் பகிர்ந்து கொள்ளலும் (பக்கம் 81)<br><br>• மாதிரிப் பண்டிகைக் கொண்டாட்டப் பலகாரங்களைக் காட்சிப்படுத்தலும் பகிர்ந்துண்ணலும் (பக்கம் 82) | • பண்டிகை உணவுகள், பலகாரங்கள் தொடர் பான அனுபவத்தினைப் பகிர்ந்துகொள்வதைக் கணிப்பீடு செய்தல்<br><br>• பண்டிகை உணவுகள் தொடர்பான அனுபவங் களைப் பெறுவதனை அவதானித்துக் கணிப் பீடு செய்தல் |

# 2.0 சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்

## 01. அறிமுகம்

> ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்' எனும் இக்கற்றல் புலம், மனிதன் மீதும் மனித சமுதாயத்தின் மீதும் பல்வேறு விதங்களில் செல்வாக்குச் செலுத்திய அல்லது செலுத்துகின்ற பௌதிக, சமூக, உயிரியல் தொகுதிகள் தொடர்பாகவும் அவற்றை அடிப்படையாகக் கொண்டு நிகழ வேண்டிய கற்றல் செயலொழுங்கு தொடர்பாகவும் வழிப்படுத்துகின்றது.''

குழந்தைப் பருவம் தொட்டு இயல்பாகவே மனிதன், தனது சுற்றுப்புறத்தின்மீது ஆர்வங்கொண்டு, கிரமமாக அச்சுற்றாடலுடன் வெற்றிகரமாக இடைத்தாக்கம் புரிவதற்கு அவசியமான தேர்ச்சிகளை அடைய முயற்சிக்கின்றான். இச்செயன்முறையின் போது தனது புலனுறுப்புக்களைப் பயன்படுத்துவதோடு அவற்றின் உணர்திறன்களை வகைப்படுத்தல், தர்க்கித்தல் போன்ற அறிவுசார் திறன்களையும் விருத்தி செய்து கொள்கிறான். அவ்வாறே அவற்றின் ஊடாகத் தனது சொற்களஞ்சியத்தையும் தொடர்பாடல் திறனையும் விருத்தி செய்து கொள்கிறான். தான் வாழும் சுற்றாடல் தொடர்பான தகவல்களைக் கண்டறிதல், சேகரித்தல், மீள வெளிப்படுத்துதல் என்பன பிள்ளையின் வாழ்க்கைச் செயன்முறையின் ஓர் அங்கமாகும். இது இயல்பாக எந்தவோர் உயிரியிலும் நிகழ்வதொன்றாகும். பிள்ளையின் அப்போக்கை விருத்தி செய்வதே ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' கட்டியெழுப்பும் அடிப்படையாகும்.

அன்றாட வாழ்கையில் சந்திக்கும் சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளக்கூடிய, நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையில் பங்களிக்கக்கூடிய, சமநிலையான ஆளுமையுடைய ஒருவரிடத்தே பல்வேறு தேர்ச்சிகள் விருத்தியடைதல் அவசியமாகும். கடந்த காலங்களில் அமுலாக்கப்பட்ட ஆரம்பக்கல்விக் கலைத்திட்டங்களில் அழகியற்கல்வி, ஆக்கத் தொழிற்பாடுகள், உடற்கல்வி, ஆரம்ப விஞ்ஞானம் போன்ற பாடங்கள் பங்களிப்புச் செய்தன. புதிய கலைத்திட்டத்தில் ''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் விரிவான பாடத்தின் கீழ் பல்வேறு புலங்களுக்குரிய தேர்ச்சிகளைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வெளிக்கொணர இடமளிக்கப்பட்டுள்ளது. அதாவது இது ஓர் ஒன்றிணைந்த பாடமாகும்.

மூன்றாம், நான்காம் தரங்களில் (ஆரம்பக் கல்வியின் முதன்மைநிலை இரண்டில்) 16 கருப்பொருள்களில் பாடத்திட்டம் விருத்தி செய்யப்பட்டுள்ளது. ஆக்கம், அழகியல், உடற்கல்வி ஆகிய பாடப்பரப்புகளுக்குப் பொருத்தமான தேர்ச்சிகளை வெளிக்கொணர்வதற்கும் சமயம், தாய்மொழி, கணிதம் ஆகிய பிரதான பாடங்களைச் செழுமைப்படுத்துவதற்கும் "சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளைப்" பயன்படுத்தலாம். பிள்ளைகளின் உரையாடலுக்குப் பொருத்தமான எளிமையான ஆங்கிலச் சொற்களையும் இச்செயற்பாடுகளின் ஊடாக வெளிக்கொணரலாம்.

பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட சகல பகுதிகளும் அதிலுள்ளவாறே இலங்கையின் எல்லாப் பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டுமெனக் கருதப்படவில்லை. இப்பருவப் பிள்ளைகளின் சுற்றாடல் வரையறுக்கப்பட்டதாகும். அவ் வரையறையினுள் காணப்படுபவை, நிகழுபவை யாவும் எல்லாப் பாடசாலைகளுக்கும் பொதுவானவை அல்ல. எனவே பிள்ளைகளுக்காகச் செயற்பாடுகளைத் தெரிவுசெய்யும்போது தனது சூழல் வளங்களுக்குப் பொருத்தமானவாறு அவற்றைத் தெரிவு செய்யும் சுதந்திரமும் பொறுப்பும் ஆசிரியருக்கு உண்டு.

## 02. ஆரம்பக் கல்விப் பருவத்திற்குரிய தேர்ச்சிகள்

தரம் ஒன்று முதல் தரம் ஐந்து வரையில் இக்கற்றல் செயற்பாடுகளை வெற்றிகரமாக நிறைவு செய்வதன் ஊடாக மாணவரிடத்தே பின்வரும் அறிவு, திறன்கள், மனப்பாங்குகளை விருத்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

- ✓ தனது சுற்றுப்புறத்தின் அழகினை இனங்கண்டு அதனூடாக இரசனை பெறுவார்.
- ✓ விளையாட்டு, ஓய்வு, களிப்பு என்பன வாழ்க்கைக்கு அவசியமான அம்சங்களெனக் கருதி அவற்றை நாளாந்த வாழ்வில் பொருத்தமாகச் சேர்த்துச் செயற்படுவார்.

- ✓ தொடர்பானவற்றை மதித்து அவற்றைத் தனது வெளிப்பாட்டு நடவடிக்கைகளின் போது பயன்படுத்துவார்.
- ✓ ஆரோக்கிய வாழ்விற்குத் தேவையான அடிப்படைப் பழக்கங்களை வெளிக்காட்டுவார். மனிதனின் ஆக்கங்களை மதிப்பார்.
- ✓ தனது சுற்றாடலில் வசிக்கும் உயிரினங்கள், அவற்றின் சில இடைத்தாக்கங்கள் என்பன தொடர்பான விளக்கத்தைப் பெற்றுச் செயற்படுவார்.
- ✓ மனித சமூகம், மனித நடத்தைகள், மனிதர் மீது அவற்றின் ஆதிக்கம் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.
- ✓ புவி அதன் வளங்கள், வெளி என்பன மனிதன் மீது செலுத்தும் செல்வாக்கை ஆராய்வார். சூழல் பாதுகாப்புச் செயன்முறையில் தனது பொறுப்பை விளங்கி அதற்கேற்பச் செயற்படுவார்.
- ✓ தனது சுற்றாடலில் சக்திப் பயன்பாடு, விசைப் பிரயோகம் என்பன சமூகத்தின் முன்னேற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தினைக் கூர்ந்து நோக்கி மதிப்பார்.
- ✓ எதிர்கால வேலையுலகிற்குத் தேவையான அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்காகத் தமது சூழலிலுள்ள பொருட்களையும் உபகரணங்களையும் தேவைக்கேற்பப் பயன்படுத்துவார்.

## 03. இரண்டாம் முதன்மை நிலைக்குரிய தேர்ச்சிகள்

- ✓ நல்ல ஒழுங்கமைப்புடன் செயலாற்றுவதால் தனது கருமங்களை வெற்றிகரமாகச் செய்வார்.
- ✓ நற்பண்புகளை மதிப்பதன் மூலம் அவற்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுப்பார்.
- ✓ சட்டதிட்டங்களை மதித்து சட்டத்தை மதிப்பவராக நடந்துகொள்வார்.
- ✓ உடல்சார், உளம்சார் நிலைத்திருத்தல் ஆகியவற்றுக்குப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- ✓ இலங்கை கலாசார, தேசிய மரபுரிமைகளின் பண்புகளை மதித்து அவற்றைக் கற்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ பல்வேறு மக்கள் இனங்கள் அவர்களது கலாசாரப் பண்புகளையும் ஆளடையாளத்தையும் மதித்து அவற்றைக் காப்பதற்கு பங்களிப்புச் செய்வார்.
- ✓ தேசாபிமானம் மேலெழும்புமாறு அழகியல்சார் ரீதியாக முன்வைப்புகளைச் செய்வார்.
- ✓ தாவரங்களிடையே நிலவும் விசேடமான வேறுபாடுகளை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- ✓ மரஞ்செடிகொடிகளினதும் தாவரங்களினதும் பெறுமதியை மதித்து அவற்றைக் காப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்.
- ✓ மிருகங்கள் பற்றிய அடிப்படைத் தகவல்கள், விசேட திறன்கள், நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றைத் துருவியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- ✓ பிராணிகளுடனும் தாவரங்களுடனும் மனிதர்களுடனும் உள்ள இடைத்தொடர்புகளை இனங்காண்பார்.
- ✓ சுற்றாடலின் நிலைத்திருத்தலுக்கு, பிராணிகளின் முக்கியத்துவத்தை மதித்து அப்பிராணிகளைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ குறித்த காரியம் ஒன்றுக்காக விசேட பண்டங்களையும் கருவிகளையும் இனங்கண்டு, அவற்றைச் சரியாகவும் கிரமமாகவும் பாதுகாப்பாகவும் கையாள்வார்.
- ✓ வளங்களிலிருந்து உச்சப் பயனைப் பெறும் வகையில் சிக்கனத்துடன் பயன்படுத்துவார்.
- ✓ நாம் பயன்படுத்தும் பண்டமொன்றை அல்லது சேவையொன்றைப் பெற்றுக்கொள்ளும்போதும் வழங்கும்போதும் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி அவதானத்துடன் காரியமாற்றுவார்.
- ✓ சுகாதாரமான வாழ்க்கையை நடத்துவதற்கு உணவுகளை உரிய நேரத்தில் உட்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம் பற்றி விளக்கத்துடன் காரியமாற்றுவார்.
- ✓ பண்பு சார்ந்ததும் மருத்துவப் பண்புள்ளதுமான உணவை நுகர்வதற்கு வெளிப்படுத்துவார்.
- ✓ உணவு விரயமாகும் விதத்தையும் அவற்றைத் தாமதித்து வைப்பதையும் பற்றிய அறிவுடன் செயலாற்றுவார்.
- ✓ உணவு உண்பதற்கான பழக்கவழக்கங்களையும் நற்பழக்கங்களையும் கடைப்பிடிப்பார்.
- ✓ பல்வேறு பண்டங்களையும் உபகரணங்களையும் போன்று தொழினுட்பக் கருவிகளையும் பல்வேறு சக்திகளையும் பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய தீங்குகள் பற்றிக் கவனத்துடன் செயலாற்றுவார்.

- ✓ பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்களிலும் சமூக விரோதச் செயல்களிலும் இருந்து தம்மைப் போன்றே மற்றவர்களையும் பாதுகாப்பதைப் பற்றி கவனத்துடன் செயலாற்றுவார்.
- ✓ தொற்றும், தொற்றா நோய்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வதற்குச் செய்யக்கூடிய தேகாரோக்கிய முறைகள் பற்றிய அறிவுடன் செயலாற்றுவார்.
- ✓ பாதுகாப்புடனும் எச்சரிக்கையுடனும் வேலை செய்ய வேண்டிய விதத்தை, போலச் செய்தலும் வெளிப்பாடுசார் அசைவுகளும், கவிதைகள், பாடல்கள் மூலம் வகைகுறிப்பார்.
- ✓ நீருடன் பல்வேறுபட்டவை செயற்படும் விதத்தைத் துருவியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- ✓ நீரினால் ஏற்படக்கூடிய தீங்குகளையும் ஆபத்துகளையும் பற்றிக் கவனம் செலுத்தி, அவற்றைக் குறைப்பதற்கும் பங்களிப்புச் செய்வார்.
- ✓ பாதையில் பயணம் செய்வோரினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சட்டதிட்டங்களையும் ஒழுக்கத்தையும் பற்றிய விளக்கத்துடன் பலனளிக்குமாறும் பாதுகாப்பாகவும் பாதையைப் பயன்படுத்துவார்.
- ✓ பொது வாகனங்களால் நிறைவேற்றப்படும் சேவைகளை மதித்து அவற்றைக் காப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ திட்டமிடப்பட்ட வீட்டுத்தோட்டம் ஒன்றிலிருந்து அன்றாடம் தனது வீட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- ✓ வீட்டுத்தோட்டத்திற்கு ஆய்வுசார் ரீதியாக பங்களிப்பதன் மூலம் மகிழ்ச்சியடைவார்.
- ✓ வேலையை இலகுபடுத்திக் கொள்வதற்கு தற்காலத்தில் போன்றே முற்காலத்திலும் பயன்படுத்தப்பட்ட முறைகளைக் கற்று அறிக்கைப்படுத்துவார்.
- ✓ வேலையை இலகுபடுத்திக் கொள்வதற்கு பண்புசார் ரீதியான நிறைவொன்றிற்காக திட்டமுடனும் ஒழுங்காகவும் முறைப்படியும் வேலை செய்வதற்குப் பழகிக்கொள்வார்.
- ✓ சேவை வழங்கும்போதும் பெறும்போதும் பண்புடனும் சட்டத்தை மதித்தும் காரியமாற்றுவார்.
- ✓ தனதைப் போன்றே சமூகத்தினதும் நல்வாழ்க்கைக்குப் பயன்படும் இயற்பண்புகளைப் பேணுவார்.
- ✓ மனிதர்களின் பல்வேறு நடத்தைகளை பல்வேறு வெளியீட்டு ஊடகங்கள் மூலம் ஆக்கபூர்வமாக முன்வைப்பார்.
- ✓ மழையிலிருந்தும் காற்றிலிருந்தும் பெறக்கூடிய பயன்களை அறிக்கைப்படுத்துவார்.
- ✓ காற்றின் செயற்படு தன்மையைக் கற்பதன் மூலம் காற்றின் வலுவைப் பெறக்கூடிய பல்வேறு முறைகளை எடுத்துரைப்பார்.
- ✓ சுற்றாடல் மாசடையும் விதம் பற்றி விசாரித்தறிந்து சுற்றாடலுக்கு ஏற்படும் தீங்குகளைத் தவிர்ப்பதற்கு செயற்படுவார்.
- ✓ தனது நடத்தையின் மனதிற்குகந்த மாற்றத்திற்கு கவனத்துடன் செயற்படுவார்.
- ✓ தமது அண்மைச் சுற்றாடலின் பண்புசார் மாற்றத்திற்கு நிலவும் பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்கான திட்டமொன்றைத் தயாரிப்பதற்குச் செயலாற்றுவார்.
- ✓ தொடர்பாடல் நடவடிக்கைகளின்போது பண்புடன் செயற்படுவார்.
- ✓ பெறப்படும் தகவல்களிடையே பொருத்தமான தகவல்களை பகுப்பாய்ந்து தெரிவுசெய்வார்.
- ✓ வரலாற்றுப் பெறுமதிமிக்க இடங்களை மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்கு காரியமாற்றுவார்.
- ✓ வரலாறுசார், கலாசாரஞ்சார் பெறுமதியுடைய மரங்கள், இடங்கள், வேறு பொருள்கள் ஆகியவற்றை இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.
- ✓ பண்டையகால ஆக்கங்களின் விசேடத்துவத்தைத் துருவியாய்வார்.
- ✓ தமது பிரதேசத்தில், நாட்டில் தனித்துத் தெரியும் சேவையொன்றை ஆற்றிய பாத்திரங்களை மதித்து அப்பாத்திரங்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்பட முன்வருவார்.

## 04. கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்

''சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்'' எனும் பாடம், கற்பித்தலை விட கற்றலுக்கே முதலிடம் வழங்குகின்ற ஒரு கற்றல் - கற்பித்தற் செயன்முறையாகும். மாணவர்களைக் குழுக்களாகவோ தனித்தனியாகவோ செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம். தேவைப்படுமிடத்து முழு வகுப்பையுமே அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்.

ஆசிரியர் முன்கூட்டியே இதற்கான திட்டத்தை முன்கூட்டியே தயாரித்துக் கொள்ள வேண்டும். ஒரு குறித்த சந்தர்ப்பத்தில் வெவ்வேறு குழுக்களை வெவ்வேறுபட்ட வேலைகளில் ஈடுபடுத்தலாம். பரந்த பாடப்பரப்பை உள்ளடக்குவதற்கு இது வழிகோலும்.

மாணவர்களுக்காகத் திட்டமிடும் வேலைகளில், அவதானிப்புகள், களப் பிரயாணங்கள். கையாண்டு பார்த்தல், குறுஞ்செயற்றிட்டம், சேகரித்தல், வகிபாகமேற்றல் போன்ற பல்வேறு கற்றல் அணுகுமுறைகளினூடாகவும், மனிதர்கள், நூல்கள், அச்சு ஊடகங்கள், இலத்திரனியல் ஊடகங்கள் போன்றவற்றினூடாகவும் தகவல் சேகரிப்பதற்குரிய நடவடிக்கைகள் அடங்கியிருத்தல் வேண்டும்.

## 05. பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

அழகியல் சார்ந்த, ஆக்கம் சார்ந்த, உடல் சார்ந்த தேர்ச்சிகளை அடைவதற்காக பரந்த வீச்சில் கற்றல் - கற்பித்தல் அனுபவங்களை வழங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டிருத்தல் புதிய கலைத்திட்டத்தில் காணப்படும் தெளிவான ஒரு மாற்றமாகும். அம்மாற்றத்திற்கு ஈடுகொடுப்பதற்காக வகுப்பறையும், ஒட்டுமொத்தப் பாடசாலைச் சூழலும் மாணவரை நோக்கும் கண்ணோட்டமும் மாற்றமடைதல் வேண்டும். பாடசாலைக் கொள்கை வேலைத்திட்டங்களின் கீழ் தகவல்களைச் சேகரித்தல், அவற்றை அறிக்கைப்படுத்தும்போது வெவ்வேறு முறைகளுக்கு அமைய அறிக்கைப்படுத்த வாய்ப்பு வழங்கப்படுவது முக்கியமானதாகும். எனவே நாள் முழுவதும் மேசையருகே கதிரையில் அமர்ந்திருப்பதற்குப் பதிலாக வெவ்வேறு மெய்ந்நிலைகளில் மகிழ்ச்சியாகப் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடும் மாணவரைக் காணத்தக்க வகையிலேயே **“பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் ”** ஒழுங்குசெய்யப்படுதல் வேண்டும்.

**இதற்காகத் திட்டமிடும் வகுப்பில் காணப்படத்தக்க பண்புகள் வருமாறு:**

- ✓ இம்மாணவருக்குப் பிரதானமாக பாடசாலை நேரத்துள் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கேற்ற சூழலைத் தயார்படுத்தல்
- ✓ வகுப்புக்கு வெளியே திறந்தவெளியில் கற்பதற்கான வசதிகளை வழங்குதல்
- ✓ பாடசாலையில் விளையாட்டு, அழகியல் வேலைகள், ஆக்க வேலைகள், ஏனைய பாட இணைச் செயற்பாடுகளில் கவனம் செலுத்துதல்

## 06. மாணவர் முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

“சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்” பாட கணிப்பீட்டின்போது அக்கற்றல் செயன்முறையின் ஊடாக மாணவர்களுக்கு வழங்க எதிர்பார்க்கும் அறிவு, திறன்கள், மனப்பாங்குகள், ஒப்படைகள் ஆகியன குறித்துக் கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தோடு சமூகத் திறன்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும்.

மாணவர் குழுக்களிடத்திலோ தனித்தனி மாணவரிடத்திலோ காணப்படும் குறைபாடுகளை அடுத்துவரும் கற்றல் பணிகளின்போது நிவர்த்தி செய்வதையும் துரிதமாகக் கற்கும் ஆற்றலைக் காட்டும் மாணவர்களுக்கு மேலும் ஊக்கமளிப்பதையும் நோக்காகக் கொண்டே கணிப்பீடு நடத்தப்படல் வேண்டும்.

இதற்காகப் பெரும்பாலும் முறைசார்ந்த மதிப்பீட்டு முறைகளுக்கு அப்பாற்பட்ட முறைகளைப் பின்பற்ற நேரிடும். மாணவர்கள் வேலைகளில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களை அவதானித்தும் அவர்கள் கூறுபவற்றைச் செவிமடுத்தும் அவர்களோடு கலந்துரையாடியும் இதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்ளலாம். அவற்றை முறைமையாக அறிக்கைப்படுத்துவதற்காக ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள கணிப்பீட்டு அறிக்கைப் படிவத்தினைப் பயன்படுத்தலாம்.

## 07. வீட்டு வேலை கொடுத்தல்

- வகுப்பறையில் கற்கும் பாட விடயங்களை மேலும் விருத்தி செய்துகொள்வதற்கு மாணவர்களால் மேற்கொள்ளக்கூடிய அளவிற்கு வீட்டு வேலைகளை வழங்குங்கள்.

- வீட்டு வேலைகளின்போது செய்ய வேண்டியவற்றையும் செய்ய வேண்டிய முறையினையும் மாணவர்களுக்கு விளங்கக்கூடிய விதத்தில் தெளிவுபடுத்துங்கள்.

- வகுப்பறைச் செயற்பாடுகளுக்காக வீட்டிலிருந்து கொண்டுவர வேண்டிய பொருள்கள் தொடர்பாக முன்கூட்டியே மாணவர்களுக்கும் பெற்றோருக்கும் அறிவூட்டுங்கள்.

- பெற்றோருக்கு அறிவூட்டும்போது பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்துங்கள்.
    - வரையறுத்து வழங்கும் வீட்டு வேலைகளை மாணவர்களே செய்தல் வேண்டும்.
    - வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்வதற்கு உதவிசெய்தல் வேண்டும்.
    - வீட்டில் செய்யவேண்டியவை தொடர்பாக உதவி புரிதல் வேண்டும் என்பது பற்றி நினைவூட்டுங்கள்.

      உதாரணம்: இரவு வானத்தை அவதானித்தல், பாடல்களையும் கதைகளையும் கேட்டறிதல், வீட்டுத் தோட்டத் தகவல்களைச் சேகரித்தல்

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| **01.**<br>எமது நல்வாழ்வு | • நன்கு ஒழுங்கமைத்து செயற்படுவதன் மூலம் தமது கருமங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வார்.<br>• நற்பண்புகளை மதித்து அவற்றைப் பேணிவர ஆவன செய்வார்.<br>• பொறுப்புகளை நிறைவேற்றி, பொது வேலைகளுக்குப் பங்களிப்புச் செய்வார்.<br>• சட்டதிட்டங்களை மதித்து, சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடந்து கொள்வார்.<br>• எமது நல்வாழ்வை நடத்துவதற்குத் துணையாகும் விதத்தில் ஆக்கங்கள் படைப்பார்.<br>• உடல், உள நலனுக்குப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• நல்ல நடத்தைகளைப் பிரதிபலிக்கும் ஆக்கங்களில் களிப்புடன் ஈடுபடுவார். | • முயற்சியுடன் செயற்பட்டு, தமது கருமங்களை வெற்றிகரமாக நடத்தக்கூடியதாக இருத்தல்<br>• உடல், உள நலனுக்காக ஓய்வைப் பயனுள்ளவாறு பயன்படுத்தல்<br>• மதிப்பளிக்க வேண்டியோருக்கு மதிப்பளிக்கப் பழகுதல்<br>• அறிவுரைகளை ஏற்றுக் கொள்ளல், தவறுகளை விளங்கிக் கொள்ளும் நற்பண்பின் விருத்தி<br>• நெருக்கடியான சந்தர்ப்பங்களின்போது எழுநிலையாகச் சிந்தித்துச் செயற்படுதல்<br>• வகுப்பின் பொதுத் தேவை களுக்காக பொறுப்புகளை ஏற்றல்<br>• பொது இடங்களிலும் நிறுவனங்களிலும் நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படல்<br>• பல்வேறு சந்தர்ப்பங்களுக்காகப் பயன்படக்கூடிய வாழ்த்து அட்டைகளைத் தயாரித்தல்<br>• எளிய சட்டதிட்டங்களைக் கொண்ட சிறு விளையாட்டுக்களில் ஈடுபட்டு நியாயமான போட்டியில் ஈடுபடல்<br>• நல்வாழ்க்கை தொடர்பாகக் கூறும் பாடல்களை ஆக்குதலும் பாடுதல் |
| **02.**<br>நாம் இலங்கையர் | • இலங்கையின் பண்பாட்டையும் தேசிய மரபுரிமைகளின் பண்புகளையும் தேடியறிந்து அவற்றைப் பாதுகாக்கப் பங்களிப்புச் செய்வார்.<br>• வழக்காறுகள் பற்றிய விளக் கத்துடன் அவற்றைப் பேணி வருவதில் பங்களிப்புச் செய்வார். | • தேசியக் கொடியை ஏற்றும்போது கடைப்பிடிக்க வேண்டிய வழக்கங்கள்<br>• தேசிய கீதத்தைச் சரியான உச்சரிப்புடன் சரியான கொண்ணிலையில் நின்று பாடுதல்<br>• இலங்கையர்கள் பல்வேறு மக்கள் இனங்களால் ஆனவர்கள்<br>• பல்வேறு இனங்களுக்குரிய பண்பாட்டு இயல்புகள் |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | • வெவ்வேறு மக்கள் பிரிவினரையும் அவர்களது பண்பாடுகள், இயல்புகள், தனித்துவங்களையும் மதித்து அவற்றைப் பேணிவருவதில் பங்களிப்புச் செய்வார்.<br>• இலங்கையர்களின் வெவ்வேறு பண்பாடுகள் பற்றிய விளக்கத்துடன் தேசியத்திற்கு முதன்மையிடம் வழங்கி வெவ்வேறு படைப்பாக்கங்களைச் செய்வார்.<br>• இலங்கை மக்களின் பயன்பாட்டிலுள்ள விளையாட்டுகளில் ஈடுபடுவார்.<br>• தேசிய அபிமானம் வெளிக்காட் டப்படும் வகையில் அழகியல் சார்ந்த முன்வைப்புகளைச் செய்வார். | • தேசிய தினம் என்ற ரீதியில் சுதந்திர தினத்தின் பெறுமதி<br>• பல்வேறு இனங்களுக்குரிய விசேட கலாசார நிகழ்வுகளின்போது பயன்படுத்தும் அலங்காரங்களும் அவற்றை அமைத்தலும்<br>• பல்வேறு மக்கள் இனங்களுக்குரியது எனினும் அனைவரும் இலங்கையர்<br>• நாட்டின் அபிமானத்தைக் கூறும் கவிதைகளையும் பாடல்களையும் பாடுதலும் நடித்தலும் |
| **03.**<br>மரஞ்செடி கொடிகள் | • அண்மைச் சூழலில் உள்ள மரஞ்செடிகொடிகளின் இயல்புகளையும் அவை வளர்ச்சியடையும் விதத்தினையும் இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.<br>• தாவரங்களுக்கு இடையே நிலவும் விசேடமான வேறுபாடுகளைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• தாவரங்களுடன் மனிதனும், ஏனைய பிராணிகளும் காட்டும் தொடர்பைக் கற்றறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• மரங்செடி கொடிகளின் பெறுமானத்தை மதித்து அவற்றைப் பேணிக்காக்க நடவடிக்கை எடுப்பார்.<br>• சூழலிலிருந்து பெறக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தி, பல்வேறு ஆக்கங்களில் ஈடுபடுவார்.<br>• மரஞ்செடி கொடிகள் மூலம் நெகிழ்தன்மை, வளர்ச்சிக்குத் | • தாவரங்கள் வளரும் விதம்<br>• அண்மைச் சூழலில் வளரும் பல்வேறு தாவரங்கள்<br>• மரஞ்செடி கொடிகளின் அசைவு சார்ந்த வகையில் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடல்<br>• அண்மைச் சூழலில் வித்தியாசமான இடங்களில் தாவரங்கள் வளரும் விதம்<br>• தாவரங்களின் வேர்களின் அமைவும் விரிவடைதலும்<br>• வேர்களின் தாவரங்களின் நிலைத்திருத்தலுக்கான பயன்<br>• மரஞ்செடிகொடிகளின் அசைவு சார்ந்த செயற்பாடுகள்<br>• விரயமாகும் தாவரப் பகுதிகளைக்கொண்டு ஆக்கங்கள் செய்தல்<br>• மரஞ்செடிகொடிகள் பாதுகாக்கப்பட வேண்டிய வளமொன்றாகும். |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | துணைபுரியும் அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• மரஞ்செடி கொடிகளுக்கு இடையிலான இடைத் தொடர்புகளை வெளிப்படுத்தும் கவிதைகள், பாடல்கள், நடனங்கள், நாடகங்களைக் காட்சிப்படுத்துவார். | |
| **04.**<br>எம்மைச் சூழவுள்ள பிராணிகள் | • பிராணிகள் பற்றிய அடிப்படைத் தகவல்கள், சிறப்பான திறன்கள், நடத்தைக் கோலங்கள் ஆகியவற்றைத் துருவியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• பிராணிகளுக்கும் தாவரங்களுக்கும் மனிதனுக்குமிடையிலான இடைத்தொடர்புகளை இனங்காண்பார்.<br>• சூழலின் நிலைத்திருத்தலில் பிராணிகளின் முக்கியத்துவத்தை மதித்து, அப்பிராணிகளைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.<br>• பிராணிகள் காரணமாக ஏற்படும் பாதிப்புகள், ஆபத்துகள் தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.<br>• பிராணிகளை அவதானித்து பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கங்கள் செய்வார்.<br>• பிராணிகளின் நடத்தைகள் தொடர்பாக அசைவுகளைத் துருவியாய்தலும் போலச் செய்தல் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்.<br>• பிராணிகளின் நடத்தைகள் போன்று மனிதனுக்கும் பிராணிகளுக்கும் இடையிலான தொடர்புகளைக் காட்டும் அசைவியக்கங்களை முன்வைப்பார். | • வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளும் வீட்டைச் சுற்றி நடமாடும் பிராணிகளும்<br>• வீடு தொடர்பான பிராணிகளால் ஏற்படும் பயன்கள்<br>• வீட்டில் வந்து செல்லும் பிராணிகளின் பயன்கள்<br>• வீடுகளில் வளர்க்கப்படும் பிராணிகளால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் ஆபத்துகள் தொடர்பாக அறிந்து கொள்வதன் மூலம் பாதுகாப்பாக இருத்தல்<br>• ஓடுதல், ஊர்தல், துள்ளுதல் ஆகியவற்றை விருத்தி செய்வதற்கான செயற்பாடுகள்<br>• பிராணிகளைப் பற்றி உணர்வுபூர்வமாக இருத்தல்<br>• பிராணிகள் பற்றிக் கூறும் கவிதைகள், பாடல்கள்<br>• பிராணிகளின் பண்புகளைப் பல்வேறு ஊடகங்களைக் கொண்டு நிர்மாணித்தல் |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| **05.**<br>நாம் பயன்படுத் துபவை | • யாதேனும் வேலைக்காக விசேடமான பொருள்களையும் உபகரணங்களையும் இனங்கண்டு அவற்றைச் சரியாக, சீராக, பாதுகாப்பாகக் கையாள்வார்.<br>• உபகரணங்களின் தொழிற்பாடு தொடர்பான விளக்கத்துடன் மிகவும் வினைத்திறனுடன் பயன்படுத்துவார்.<br>• வளங்கள் மூலம் உச்சப் பயன் கிடைக்கும் வகையில் சிக்கனமாக அவற்றைப் பயன்படுத்துவார்.<br>• அன்றாடம் பயன்படுத்துபவற்றை மேலும் கவர்ச்சிகரமானதாக ஆக்கிக் கொள்வதற்காகப் பல்வேறு ஆக்கங்கள் செய்வார்.<br>• பல்வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி சக்தி விருத்திக்கு உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• நாம் பயன்படுத்தும் பொருள்களைத் துணையாகக் கொண்டு பல்வேறு நாட்டார் நடனங்களில் ஈடுபடுவார். | • வீட்டிலும் வகுப்பறையிலும் அன்றாடம் பயன்படுத்தும் பொருள்கள் மற்றும் உபகரணங்களைச் சரியாகவும் ஒழுங்காகவும் கையாளல்<br>• யாதேனும் வேலையைச் செய்துகொள்வதற்கான விசேடமான பொருள்களும் உபகரணங்களும்<br>• கருவிகளைப் பயன்படுத்தவேண்டிய சந்தர்ப்பங்களும் அவற்றைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் அனுகூலங்களும் பிரதிகூலங்களும்<br>• பொதுச் சொத்துக்கள் மற்றும் வளங்கள் வீண்விரயமாகுமாறு கையாள்வதால் ஏற்படும் பிரதிகூலமான நிலைமைகள்<br>• வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி வெளிப்பாட்டுச் சித்திரங்கள் வரைதல்<br>• தயாரிக்கப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி, சக்தி விருத்திக்குத் துணையாகும் செயற்பாடுகளில் ஈடுபடுதல்<br>• அன்றாடம் பயன்படுத்தப்படும் உபகரணங்களின் மாதிரிகள் |
| **06.**<br>எமது உணவு | • ஆரோக்கியமாக வாழ்வதற்காக உணவுளை உரிய நேரத்தில் உட்கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார்.<br>• தரமான, மருத்துவக் குணமுள்ள உணவை நுகர முற்படுவார்.<br>• உணவு உட்கொள்ளும் பழக்க வழக்கங்களையும் நற்பழக்கங்களையும் பின்பற்றுவார். | • ஆரோக்கியமான உடல் வளர்ச்சிக்கான போசாக்கான உணவுகள்<br>• உரிய நேரத்தில் உணவை உட்கொள்வதன் முக்கியத்துவம்<br>• உணவு உட்கொள்ளும்போது கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்கள்<br>• வளர்ச்சிக்குத் தேவையான போசாக்கான உணவு வகைகள்<br>• பாரிய தசைநார்ச் செயற்பாட்டிற்கான திறந்தவெளி விளையாட்டுக்கள் |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | • பாதுகாப்பற்ற உணவு காரணமாக ஏற்படத்தக்க நோய்கள் தொடர்பான விளக்கத்துடன் சுத்தமான உணவையே நுகர முனைவார்.<br>• உணவு பரிமாறுவதற்காக வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமான முடிவுப் பொருள்கள் ஆக்குவார்.<br>• சக்தி விருத்திக்குத் துணைபுரியும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• நாம் உட்கொள்ளும் உணவின் பல்வகைமைக்கு அமைவாகப் பாடல், ஆடல், வாத்திய மற்றும் உடலசைவை வெளிப்படுத்துவார். | • பழுதடைந்த உணவுகளின் இயல்பை இனங்காணல்<br>• பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி உணவு வகைகளின் மாதிரிகளை அமைத்தல்<br>• பொருத்தமான நாட்டார் பாடல்களைப் பல்வேறு தாளங்களுடன் பாடுதல் |
| **07.** பாதுகாப்பும் கரிசனையும் | • ஆபத்துகள் ஏற்படத்தக்க விதம் பற்றிய அறிவுடன் அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெற நடவடிக்கை எடுப்பார்.<br>• பல்வேறு பாவனைப் பொருள்கள், உபகரணங்கள், தொழினுட்பக் கருவிகள் மற்றும் வெவ்வேறு சக்தி வடிவங்களைப் பயன்படுத்தும் வேளைகளில் ஏற்படக் கூடிய பாதிப்புகள் பற்றிக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.<br>• பாதுகாப்பற்ற நிகழ்வுகள், சமூக விரோதச் செயல்கள் ஆகியவற்றிலிருந்து தம்மையும் ஏனையோரையும் பாதுகாத்துக் கொள்ளும் விதம் பற்றிய கரிசனையுடன் செயற்படுவார்.<br>• தொற்றுநோய்கள் மற்றும் தொற்றா நோய்கள் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்வதற்காகக் கையாள வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு | • பாடசாலைகளில் நிகழக்கூடிய விபத்துகளில் இருந்து பாதுகாப்புப் பெறல்<br>• வீட்டில் ஏற்படும் விபத்துகளிலிருந்து பாதுகாப்புப் பெறல்<br>• அறிமுகமற்ற நபர்களிடமிருந்தும் அறிமுகமற்ற இடங்களில் இருந்தும் பாதுகாப்புப் பெறல்<br>• அண்மைச் சூழலில் ஏற்படக்கூடிய ஆபத்துகள் பற்றிக் கவனமாக இருத்தல்<br>• தொற்று நோய்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ளல்<br>• பாதுகாப்புப் பற்றிய செய்தியுடனான சுவரொட்டி ஒன்றை ஆக்குதல்<br>• பாதுகாப்புப் பற்றிக் கவனஞ் செலுத்தும் விளையாட்டுக்கள்<br>• பாதுகாப்புப் பற்றிய செய்தியுடனான நாட்டார் பாடல்கள், கவிதைகள் |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| | முறைகள் தொடர்பாக அறிந்துகொண்டு செயற்படுவார்.<br>• பாதுகாப்புத் தொடர்பான உணர்தன்மையுடன் ஆக்கங்கள் செய்வதில் ஈடுபடுவார்.<br>• பாதுகாப்புத் தொடர்பான அவதானத்துடனும் எதிர்ப்புத் தன்மையை விருத்திசெய்யும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்.<br>• பாதுகாப்பாகவும் கரிசனை யுடனும் வேலைசெய்யவேண்டிய விதத்தைப் போலச் செய்தல், கருத்து வெளிப்பாட்டு அசைவியக்கங்கள், கவிதைகள், பாடல்கள் மூலம் வெளிக்காட்டுவார். | |
| **08.** நீர் | • நீருடன் பல்வேறுபட்டவை செயற்படும் விதத்தைத் துருவியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• வெவ்வேறு வழிகளில் பெறும் நீரை வினைத்திறனுடன் முகாமைசெய்து பாதுகாப்பாக நுகர்வார்.<br>• நீரினால் ஏற்படும் தீங்குகளையும் ஆபத்துகளையும் அறிந்து, அவற்றைக் குறைத்துக் கொள்வதற்குப் பங்களிப்புச் செய்வார்.<br>• நீரின் தொழிற்பாடு தொடர்பான பல்வேறு ஆக்கங்கள் செய்வதில் ஈடுபடுவார்.<br>• நீருடன் தொடர்புபட்ட வகையில் உருவாக்கிய விளையாட்டுக் களில் ஈடுபடுவார்.<br>• நீருடன் தொடர்புபட்ட பல்வேறு சந்தர்ப்பங்களைக் களிப்புடன் முன்வைப்பார். | • நீரினால் சுற்றாடலில் நிகழும் அழகுத்தன்மை<br>• நீர் வரையறுக்கப்பட்ட வளம் ஒன்றாகும்.<br>• நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல்<br>• நீரைச் சுத்திகரிக்கும் முறைகள்<br>• நீரைப் பெறும் விதம் தொடர்பான மாதிரிகளை அமைத்தல்<br>• நிறமூட்டப்பட்ட நீரைக் கொண்டு ஆக்கங்கள்<br>• நீரைப் பயன்படுத்தும் கருவிகள் மூலம் களிப்பு தரும் அசைவுகள்<br>• நீரினால் ஏற்படக்கூடிய ஆபத்துகள் / விபத்துகள் |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| **09.**<br>போக்குவரத்து | • பாதையில் பயணம் செய்வோர் பின்பற்ற வேண்டிய சட்டதிட்டங்கள், ஒழுங்குவிதிகள் தொடர்பான விளக்கத்துடன் பாதைகளைப் பயனுள்ளவாறும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவார்.<br>• போக்குவரத்துத் தொடர்பான வெவ்வேறு சந்தர்ப்பங்கள் சார்ந்த ஆக்கங்கள் செய்வார்.<br>• பல்வேறு பயண முறைகளின் பல்வகைமைக்கமைய அசைவியக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• போக்குவரத்துத் தொடர்பான நடத்தைகளைக் காட்டும் வகையில் களிப்பூட்டும் முன்வைப்புகளைச் செய்வார். | • தமது பாடசாலைச் சுற்றுப்புறத்தில் உள்ள பாதைகளினதும் பிரதான இடங்களினதும் அமைவு<br>• பெரும்பாதையில் நடந்துசெல்லும் போது கடைப்பிடிக்கவேண்டிய சட்டதிட்டங்கள்<br>• பாதைச் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்காதிருப்பதால் ஏற்படக்கூடிய விபத்துகள் / ஆபத்துகள்<br>• பொதுப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள்<br>• போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் மாதிரிகள்<br>• வாகனங்களைப் பயன்படுத்தும்போது கருமமாற்றும் விதம் பற்றிய கவிதைகளும் பாடல்களும்<br>• வாகனங்களின் இயல்புகளுடன் தொடர்பாக அமைக்கப்பட்ட செயற்பாடுகள் |
| **10.**<br>வீட்டுத் தோட்டம் | • திட்டமிட்டமைத்த வீட்டுத் தோட்டத்திலிருந்து நாளாந்தம் தமது வீட்டிற்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்திசெய்வதில் பங்களிப்புச் செய்வார்.<br>• பயிர்களை உற்பத்தி செய்வதற்கும் பயிரைப் பாதுகாப்பதற்குமாகக் கையாளும் உத்திகள் தொடர்பாகத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• வீட்டுத்தோட்டத்திலிருந்து பெறக்கூடியவற்றைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார்.<br>• வீட்டுத்தோட்டத்திலிருந்து பெறும் பொருள்கள் தொடர்பான விளையாட்டுக்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார். | • வீட்டுத்தோட்டத்தில் இருக்க வேண்டியவையும் அவற்றிற்கு மிகப் பொருத்தமான இடங்களும்<br>• முறைப்படி வீட்டுத்தோட்டம் ஒன்றை நடத்துவதன் மூலம் கிடைக்கும் பயன்கள்<br>• வீட்டுத்தோட்டம் ஒன்றில் பயிர் செய்யக்கூடியவை<br>• பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தக்கூடிய மரங்களும் தாவரங்களும்<br>• வீட்டுத்தோட்டம் ஒன்றின் மாதிரியை அமைத்தல்<br>• வீட்டுத்தோட்டத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறும் கவிதைகளும் பாடல்களும்<br>• காய்கறிகளினதும் பழங்களினதும் பெயர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட விளையாட்டுக்கள் |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | • வீட்டுத்தோட்டமொன்றின் அழகையும் பெறுமானத்தையும் வெளிப்படுத்துவதில் காட்டும் ஆக்கங்களில் களிப்புடன் ஈடுபடுவார். | |
| **11.** வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகள் | • வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகத் தற்காலத்தில் பயன்படுத்தப்படுகின்ற மற்றும் கடந்த காலத்தில் பயன்படுத்தப்பட்ட உத்திகளை / முறைகளைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக நேர்த்தியாகவும் திட்டமிட்டு ஒழுங்காகவும் முறையாகவும் வேலைசெய்யப் பழகுவார்.<br>• கூட்டாகச் செயற்படுவதன் மூலம் வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகச் செயற்படுவார்.<br>• மின், காந்தம், எளிய பொறிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக்கொள்ளும் விதத்தைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• அன்றாடம் வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய வெவ்வேறு சக்திகள் தொடர்பாகக் கையாண்டுபார்த்தல்களைச் செய்து களிப்புறுவார்.<br>• ஒத்துழைப்பு, கூட்டுமுயற்சி மூலம் வெற்றியை அனுபவிக்கத்தக்க விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• வேலையை இலகுபடுத்திக் கொள்வதற்காகச் செய்யத்தக்க | • இழுத்தல், தள்ளுதல் மூலம் பொருள்கள், பாவனைப் பொருள்களின் அமைவிடத்தை மாற்றுவதன் மூலம் வேலைகளை இலகுபடுத்திக்கொள்ளக்கூடிய தாக இருத்தல்<br>• தமது வேலைகளைத் தாமே செய்து கொள்வதன் பெறுமதியை விளங்கிக் கொள்ளல்<br>• கூட்டாக வேலை செய்வதனால் வேலைகளை இலகுபடுத்தல்<br>• பல்வேறு எளிய பொறிகளையும் முறைகளையும் கையாண்டு அன்றாட வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளல்<br>• வகுப்பறையிலும் வீட்டிலும் வெவ்வேறு வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள்<br>• கட்டாயமாக ஒத்துழைத்துச் செயற்பட வேண்டிய களிப்பூட்டும் விளையாட்டுக்களில் ஈடுபடல்<br>• வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகவும் அதன் மூலம் களிப்புறுவதற்காகவும் பயன்படுத்தக்கூடிய கிராமிய / நாட்டார் பாடல்கள் |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | வற்றைக் களிப்பூட்டும் வகையிலும் ஆற்றுகையாகவும் முன்வைப்பார். | |
| **12.** மனித நடத்தைகள் | • தமதும் சமூகத்தினதும் நல்ல இருப்புக்காகப் பயன்மிக்க பண்புகளைக் கணிப்பிடுவார்.<br>• நல்ல இடைத்தொடர்புகளைக் பேணிவருவதற்குத் துணையாகும் வகையிலான ஆக்கங்கள் செய்வார்.<br>• பங்குகொள்வதற்காக சம சந்தர்ப்பங்களைப் பெற்று, உபகரணங்களைக் கையாளும் ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• மனிதர்களின் பல்வேறு இயற்பண்புகளையும் நடத்தைகளையும் பாவனை வெளிப்பாடுகளாக வெவ்வேறு வெளிப்பாட்டு ஊடகங்கள் மூலம் ஆக்கபூர்வமாக முன்வைப்பார்.<br>• அன்றாட வேலையை இலகுபடுத்திக்கொள்ளப் பல்வேறு சக்திகள் பற்றிக் கையாண்டு பார்த்து மகிழ்ச்சியடைவார்.<br>• ஒற்றுமையினதும் ஒத்துழைப்பினதும் ஊடாக வெற்றித் தரத்தை அனுபவிக்கக் கூடிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார். | • வகுப்பறையிலும் பாடசாலையிலும் நடந்துகொள்ளும் விதம்<br>• பண்பான சொற்களைப் பயன்படுத்தல்<br>• சேர்ந்து வாழும்போது பேணப்பட வேண்டிய குணாம்சங்கள்<br>• நல்ல பண்புகளை வெளிக்காட்டும் சித்திரங்கள்<br>• சேர்ந்து வாழும்போது பேணப்பட வேண்டிய பண்புகளைப் பற்றிக் கூறும் கவிதைகளும் பாடல்களும்<br>• கூட்டாக வெற்றிபெறக்கூடிய திறந்தவெளிச் செயற்பாடுகள்<br>• இன்னொருவர் மகிழ்ச்சியடையுமாறான ஆக்கங்கள் |
| **13.** நிலமும் வானமும் | • நில மேற்பரப்பின் பல்வகைத்தன்மையைத் துருவியாய்வார்.<br>• காற்றின் தொழிற்பாட்டைக் கற்றாய்ந்து காற்றுச் சக்தியைப் பெறக்கூடிய வெவ்வேறு முறைகளைத் தேடியறிவார். | • அண்மைச் சூழலின் நிலத்தின் பல்வேறு இடங்களின் வித்தியாசங்கள்<br>• காற்றின் காரணமாக சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்கள்<br>• பாடசாலைச் சூழலில் மண் மாசடையும் விதம் |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
| --- | --- | --- |
| | • சூழல் மாசடையும் விதம் பற்றித் தேடியறிந்து சூழலுக்கு ஏற்படும் பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காகச் செயற்படுவார்.<br>• இயற்கையான பொருள்களின் செயற்பாட்டையும் அவை காரணமாக சூழலில் ஏற்படும் தாக்கங்களையும் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.<br>• வானத்தினதும் நிலத்தினதும் தன்மை தொடர்பாகக் கவனஞ் செலுத்தி ஆக்கங்களில் ஈடுபடுவார்.<br>• கிடை, நிலைக்குத்து வெளியைப் பயன்படுத்திச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• நிலத்தையும் வானத்தையும் பற்றிய களிப்பூட்டும் செயற்பாடு-கள், பாடல்கள், கவிதைகள் ஆகியவற்றைப் பாடுவார். | • இரவிலும் பகலிலும் வானத்தில் காணக்கூடியவையும் அவற்றின் தாக்கங்களும்<br>• சூரிய ஒளியின் மூலம் செய்யக்கூடிய சோதனைகள்<br>• நிலத்திலிருந்து மேலே துள்ளும் நிலம்படும் தொடர்பான திறன்கள்<br>• நில மேற்பரப்பின் பல்வகைமை மூலம் வெளிப்படுத்தப்படும் அழகு<br>• நிலத்தின் பல்வேறுபட்ட தன்மையைப் பல்வேறுபட்ட பொருள்களினால் நிர்மாணித்தல்<br>• சுற்றாடலில் ஏற்படும் மாற்றங்கள் பற்றிய கவிதைகளும் பாடல்களும் |
| 14. எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள் | • அண்மைச் சூழலைச் சுத்தமாகவும் ஒழுங்காகவும் வைத்திருக்கச் செயற்படுவார்.<br>• தமது அண்மைச் சூழலின் பண்புசார் மாற்றத்தில் நிலவும் பிரச்சினைகளைத் தேடியறிவதற்கான திட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்துவார்.<br>• நல்லதொரு மாற்றத்தைச் செய்வதற்குத் துணையாகும் ஆக்கங்களைச் செய்வதற்காக, தையல் தொடர்பான பரிச்சயத்தைப் பெறுவார்.<br>• விளையாட்டுத்திடலில் மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம் களிப்பூட்டும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.<br>• தமது நடத்தைகளை நல்ல வகையில் மாற்றிக்கொள்ளத் தக்கவாறு எடுத்துக்காட்டும் களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • பாடசாலைச் சுற்றுப்புறத்தின் சுத்தத்தைப் பேணுவார்.<br>• தனது சுய சுத்தத்தைப் பேணுவார்.<br>• தாம் பயன்படுத்துபவற்றை முறையாகப் பேணுவார்.<br>• வகுப்பறையினுள் மாற்றமொன்றை ஏற்படுத்துவதற்கான பொருத்தமான ஆக்கங்கள்<br>• வகுப்பினதும் சுற்றுப்புறத்தினதும் அழகும் முறைசார் தன்மையும்<br>• உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களின்போது மற்றையவர்களின் மீதும் பிராணிகள் மீதும் உணர்வுபூர்வமாக இருத்தல்<br>• சேர்ந்து செயற்படுவதன் மூலம் வெற்றித்தரத்தை அனுபவிக்கக்கூடிய ஆக்கபூர்வமாகச் செயற்படுதல்<br>• நன்னடத்தைகளை வெளிப்படுத்தும் விதமாகப் பங்கேற்று நடித்தல் |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| 15. மனிதனும் தகவல்களும் | • தொடர்பாடல் காரியங்களை நிகழ்த்தும் விதத்தைக் கற்றாய்வார்.<br>• தொடர்பாடல் காரியங்களின் போது பண்புடன் செயற்படுவார்.<br>• பல்வேறு ஊடகங்களையும் முறையியல்களையும் பயன்படுத்தித் தகவல்களைப் பெற்று அறிக்கைப்படுத்துவார்.<br>• பெறப்பட்ட தகவல்களிடையே பொருத்தமான தகவல்களைப் பகுப்பாய்வுரீதியாகத் தெரிவு செய்வார்.<br>• தொடர்பாடல் முறை தொடர்பாகப் பல்வேறு ஆக்கங்களைச் செய்து கையாண்டுபார்த்தல்களில் ஈடுபடுவார்.<br>• சமிக்ஞை, கட்டளை என்பவற்றைப் பயன்படுத்தி ஆக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவார்.<br>• உரிய அறிவித்தல் ஒன்றின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படும் நடிப்புகளிலும் பாத்திரமேற்றலிலும் ஈடுபடுவார். | • கருத்தொன்றைச் சிக்கல் இன்றியும் சரியாகவும் கூறுதல்<br>• சரியாகச் செவிமடுத்து கருத்துக்களை விளங்கிக்கொள்ளல்<br>• முற்காலத்தில் தகவல்களைப் பரிமாறிக்கொண்ட விதங்கள்<br>• எமக்குத் தகவல்களை வழங்கும் தொடர்பாடல் ஊடகங்கள்<br>• தொடர்பாடலின்போது பேணப்படவேண்டிய பழக்கங்கள்<br>• செய்தித்தாள்களில் தகவல்களை வகைப்படுத்தல்<br>• பயனுள்ளவாறு நூலகத்தைப் பயன்படுத்துதல்<br>• அவசர சந்தர்ப்பம் ஒன்றின் போது தகவல்கள் வழங்க வேண்டிய விதங்கள்<br>• நல்வாழ்த்துக்களுக்கான ஆக்கங்கள்<br>• தகவல்களை வழங்குவதற்குச் சங்கேதங்களைப் பயன்படுத்துதல்<br>• கருத்துக்களைப் பல்வேறு முகபாவனைகள் மூலம் முன்வைத்தல் |
| **16.** எமது பண்டைய தகவல்கள் | • பாடசாலையில் கடந்த காலத்திலும் தற்காலத்திலும் இடம்பெற்ற மாற்றங்களைத் தேடியாய்வார்.<br>• வரலாற்று முக்கியத்துவமுள்ள இடங்களை மதித்து அவற்றைப் பாதுகாக்க நடவடிக்கை எடுப்பார்.<br>• கடந்தகாலக் கலைப் படைப்புகளின் சிறப்புகளைத் துருவியாய்வார்.<br>• தமது பிரதேசத்தில் / நாட்டில் குறித்துக் கூறக்கூடியவாறான சேவை செய்தோரை மதித்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார். | • பாடசாலை வரலாறு பற்றிய தகவல்கள்<br>• அண்மைப் பிரதேசத்தில் உள்ள பண்பாட்டு / வரலாற்றுப் பெறுமானமுள்ள இடங்கள் பற்றிய தகவல்கள்<br>• வரலாற்றுசார் இடங்கள் / நிகழ்வுகள் பற்றிய கவிதைகள், பாடல்கள்<br>• ஆதிவாசி மக்கள் பற்றிய தகவல்கள்<br>• சீகிரியா, கலாவெவ, ஆகிய பண்டைய மரபுரிமைகளின் பெறுமதி |

| கருப்பொருள் | தேர்ச்சிகள் | விடய உள்ளடக்கம் |
|---|---|---|
| | • பண்டைய மரபுரிமைகளை எடுத்துக்காட்டும் ஆக்கங்கள் செய்வார்.<br>• முற்காலம் தொட்டு இருந்துவரும் கிராமிய / நாட்டார் விளையாட்டுக்களை மதித்து அவற்றில் ஈடுபடுவார்.<br>• எமது முன்னோர் நாட்டிற்காகச் செய்த சேவைகளையும் பண்டைய பெருமையையும் எடுத்துக்காட்டும் களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • சீகிரியா, கலாவெவ, ஆகியவற்றின் மாதிரிகளைப் பல்வேறு ஊடகங்களினால் நிருமாணித்தல்<br>• பண்டைக் காலம் முதல் நிலவிவரும் கிராமிய விளையாட்டுக்கள் |

## 01. கருப்பொருள்: எமது நல்வாழ்வு

நற்பண்புகளைப் பெற்று அப்பண்புகள் வெளிப்படும் வகையில் நடந்து கொள்ளலானது எமது வாழ்க்கையைப் பொருளுள்ளதாக்குகிறது. சட்டத்தை மதித்துப் பொறுப்புக்களை வெற்றிகரமாக எதிர்கொண்டு சுய மகத்துவத்துடன் வாழ்தலானது வாழ்க்கையை மேலும் பயனுள்ளதாக்கும். ஆரோக்கியமான வாழ்க்கைக்குப் பொருத்தமான உடல் தகைமையைப் பேணியவாறு ஏனையோரின் கருத்துக்களை மதித்து வெற்றி, தோல்வியைச் சமமாக ஏற்று ஆக்கபூர்வமானவாறு வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக் கொள்ளக்கூடியவர்களை நாம் உருவாக்குதல் வேண்டும்.

அதற்குத் தேவையான பயிற்சியையும் வழிகாட்டலையும் வழங்குதல் இக்கருப்பொருள் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சிகள்:**

- நன்கு ஒழுங்கமைத்துச் செயற்படுவதன் மூலம் தமது வேலைகளை வெற்றிகரமாகச் செய்துகொள்வார்.
- நற்பண்புகளை மதித்து அவற்றைப் பேணிவர ஆவன செய்வார்.
- பொறுப்புக்களை நிறைவேற்றியவாறு பொது வேலைகளில் பங்களிப்புச் செய்வார்.
- சட்டதிட்டங்களை மதித்து நீதியாக நடந்துகொள்வார்.
- எமது நல்வாழ்க்கைக்குத் துணையாகத்தக்க ஆக்கங்கள் செய்வார்.
- உடல், உள நல்வாழ்க்கைக்குப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- நல்ல நடத்தைகளைக் காட்டும் ஆக்கங்கள் செய்வதில் களிப்புடன் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள்:**

- சுய மகத்துவத்துடன் வகுப்பறையிலும் பாடசாலையிலும் வேலைகளில் பங்குபற்றுவார்.
- பாடசாலையிலும் வகுப்பறையிலும் தாம் கட்டுப்பட வேண்டிய சட்டதிட்டங்களை இனங்கண்டு அவற்றுக்குக் கட்டுப்பட்டுச் செயற்படுவார்.
- பாடசாலைக்கு நேரகாலத்துடன் வருவதுடன் ஆசிரியர்களுக்கும் அதிபருக்கும் மரியாதை செலுத்துவார்.
- தம்மிடமுள்ள திறன்களை இனங்கண்டு ஆக்கங்கள் செய்வதில் ஈடுபடுவார்.
- எளிய சட்டதிட்டங்களைக் கொண்ட விளையாட்டுக்களில் ஈடுபட்டுக் களிப்புறுவார்.
- திட்டமிட்டுச் செயற்படுவதில் பரிச்சயத்தை வெளிப்படுத்துவார்.
- வகுப்பிலுள்ள ஏனைய மாணவரை வரவேற்று அனைவருக்கும் மதிப்பளித்துச் செயற்படுவார்.
- விளையாட்டுக்களில் ஈடுபட்டுத் தோல்வியை ஏற்று, வெற்றியை நன்கு அனுபவித்துச் செயற்படுவார்.
- பாடசாலையிலும் வகுப்பிலும் செய்யும் சமயக் கிரியைகள் / கருமங்களில் விருப்பத்துடன் பங்குபற்றுவார்.
- சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நற்பண்புகள் வெளிக்காட்டப்படும் வகையிலான நாடகங்கள் நடித்துப் பார்த்துக் களிப்புறுவார்.
- நற்பண்புகள் பற்றிக் கூறும் பாடல்களைப் பாடியும், கவிதைகளைச் சொல்லியும் களிப்புறுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1**

- மாணவரைத் திறந்தவெளிக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- இன்று நாம் வண்ணத்துப்பூச்சி - மயிர்க்கொட்டி செயற்பாட்டைச் செய்யப்போவதாக மாணவர்களிடம் கூறுங்கள்.
- நீங்கள் கூறுபவற்றைச் சரியாகப் பின்பற்றுவோரை வண்ணத்துப்பூச்சிகள் பக்கத்திற்கும் கூறுபவற்றைச் சரியாகப் பின்பற்றாது தவறுவோரை மயிர்க்கொட்டிகள் பக்கத்திற்கும் செல்லுமாறு வழிப்படுத்துங்கள்.
- பின்னர் அப்பிராணிகளின் இயல்புகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடல் ஒன்றைக் கட்டியெழுப்புங்கள். இரு தொகுதிப் பிராணிகளினதும் விசேட நிலைகளை மேலெழுப்புங்கள்.

***உதாரணம்*** :
- அழகானது, பறக்கக்கூடியது
- தூர இடங்களுக்குச் செல்லக்கூடியது
- புதுமையானவற்றையும் பார்க்கச் சந்தர்ப்பம் கிடைக்கும் (சந்திரன், நட்சத்திரங்கள், வானவில்)
- உராயும்போது வேதனையை உணர்தல் (வேதனை, இடர் ஏற்படுதல்)
- காயங்கள் ஏற்படுதல்

- அதற்கமையக் கூறுபவற்றைப் பின்பற்றுவோருக்கு நல்லது நடக்கும் எனவும் பின்பற்றாதோர் துன்பங்களுக்கு முகங்கொடுக்க நேரும் எனவும் மேலெழுப்பிக்காட்டும் கலந்துரையாடல் ஒன்றினூடாக மாணவர்கள் விளங்கிக்கொள்ள ஒழுங்குசெய்யுங்கள்.
- அந்தந்த பிராணிக்குரிய தனித்துவமான அசைவுகளை மாணவர்கள் தமது விருப்பத்திற்கேற்ப செய்வதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஆசிரியர் தவிர, வேறு யார் கூறுவதை மாணவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என மாணவர் களிடம் வினவுங்கள். அதற்கான விடையைக் கூறுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஆசிரியரினால் அல்லது அதிபரினால் அவ்வாறு பின்பற்றுதல் வேண்டுமென்பதை மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்து, அவர்கள் பின்பற்றுபவை எவையென மாணவர்களிடம் வினவுங்கள். பின்வருவன குறித்து விசேட கவனஞ் செலுத்துங்கள்.

***உதாரணம்*** :
- பாடசாலை ஆரம்பமாகும் நேரத்திற்கு முன்னர் உரிய ஆயத்தத்துடன் வரும் மாணவர்
- பாடசாலை வேளைகள் மாறும் நேரத்தைக் கவனித்து மற்றைய பாடத்திற்கு ஆயத்தமாக வரும் மாணவர்
- ஓய்வு நேரம் பற்றிக் கவனம் செலுத்திச் செயற்படும் மாணவர்
- சமய நடவடிக்கைகளின்போது காலம் பற்றிக் கவனம் செலுத்தும் மாணவர்
- விசேட உணர்வுகள் பற்றிக் கவனம் செலுத்தித் தனது வேலைகளைச் செய்யும் மாணவர்
- பாடசாலை முடிவடையும் நேரம் பற்றிக் கவனம் செலுத்திச் செயற்படும் மாணவர்

- பாடசாலைக் காரியங்களுக்கும் சட்டதிட்டங்களுக்கும் ஏற்பச் செயற்படும் மாணவரை எப்போதும் மதிப்பதற்கு நடவடிக்கை எடுங்கள்.

செயற்பாடு 2

- எவ்வாறான சந்தர்ப்பங்களில் மகிழ்ச்சியை உணர்கிறீர்கள் என மாணவர்களிடம் வினவி, சுயாதீனமாகக் கருத்தை வெளிப்படுத்தச் சந்தர்ப்பமளியுங்கள். (விளையாடும்போது, பாட்டுப் பாடும்போது, ஆசிரியர் நல்ல பிள்ளை எனக் கூறும்போது..... என்றவாறாக பலவற்றை முன்வைப்பார்)
- மயிர்க்கொட்டிகளை விட வண்ணத்துப் பூச்சிகள் எவ்வளவு அழகாக உள்ளன என மாணவர்களுக்கு விளங்கப்படுத்தும்போது வண்ணத்துப்பூச்சி போல் செயற்படுவதற்கு ஆலோசனை கூறுங்கள்.
- அவை யாவும் நல்லது ஒன்றினை, தீமை விளைவிக்காத ஒன்றினை, நன்மையான ஒன்றினைச் செய்வதால் எமக்கு நன்மை கிடைக்கிறது என்பதைக் கலந்துரையாடி எடுத்துக்காட்டி, விளங்கிக் கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்னர் தாய், தந்தை, ஆசிரியர், மதகுரு, அதிபர் போன்ற தெளிவாக இனங்காணக்கூடிய படங்களைக் காட்சிப்படுத்துங்கள். அந்தப் படங்களையும் இனங்காணத் துணைபுரியுங்கள்.
- நான்கு இடங்களில் அவற்றைக் காட்சிப்படுத்தி, அவற்றை அவதானிப்பதற்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.
- ஒவ்வொரு படத்தினதும் அருகே சென்று படத்தில் உள்ளவர் நல்லவர், மிக நல்லவர், மிகவும் நல்லவர் எதனால் என மாணவரிடம் வினவுங்கள்.
- எந்தெந்தச் சந்தர்ப்பத்தில் அவ்வாறு கூறினர் என மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் வினவுங்கள்.
- இவ்வாறாக நான்கு படங்களின் அருகேயும் சென்று கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
- அதற்கமைய நல்வாழ்வைச் சொல்லிச் சட்டதிட்டங்களைப் பேணி நடந்த வேளையிலேயே தமது உள்ளத்திற்கு மகிழ்ச்சி, பெருமிதம் ஏற்பட்டது என்பதை விளங்கிக் கொள்ளுமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- அவ்வாறு செயற்படுவதால் கிடைக்கும் பயன்கள், அனுகூலங்கள் மற்றும் உள்ளத்தால் உணரப்படும் மகிழ்ச்சி தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- அதற்கேற்ப மகிழ்ச்சி, வெற்றி, சவால்களை வெற்றிகொள்ளல், தலைமைத்துவம், பாராட்டுப் பெறல், பரிசு கிடைத்தல், பிரபல்யமடைதல், விருது கிடைத்தல் போன்ற உதாரணங்கள் சிலவற்றை மாணவர்களுக்கு முன்வையுங்கள்.

***உதாரணம்*** :
- குழுத் தலைவர், வகுப்புத் தலைவர், சுத்திகரிப்புத் தலைவர், காலைக் கூட்டத் தலைவர், கணிதத் தலைவர், சூழல் தலைவர், அழகியல் தலைவர், வகுப்பை ஒழுங்குபடுத்தும் தலைவர் ........... போன்ற புதிய அம்சங்கள் குறித்து மாணவர்களின் கவனத்தை வழிப்படுத்துங்கள். அதற்கு ஆர்வம் ஏற்படக்கூடியவாறாகப் பாராட்டி, வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 3

- சில வகிபாகமேற்று நடித்தல்களை, முன்னரே திட்டமிட்டு நடிக்கும் ஆற்றல் கொண்ட சில மாணவர்களைக் கொண்டு முன்வையுங்கள்.

***உதாரணம்*** :
- பாடசாலைக்கு வரும்போது முதியோரைக் கேலி செய்தலும் அதன் விளைவாக ஏற்படக்கூடிய பிரச்சினைகளும்
- பாடசாலைக்கு வரும்போது கூட்டமாக வருதலும் அதனால் ஏற்படக்கூடிய பிரச்சினைகளும்

- தேசிய கீதம் / பாடசாலைக் கீதம் பாடப்படும்போது கவனமாக நிற்காமை காரணமாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள்
- பாடசாலையின் அழகு கெடுதலினால் (மரங்களுக்குக் கல் எறிதல் / தடி எறிதல், சுவர்களை மாசுபடுத்தல்) ஏற்படக்கூடிய பிரச்சினைகள்
- கை - கால் கழுவுதல், மலசலகூடத்தை முறையாகப் பயன்படுத்தாமை ஆகியவற்றின்போது நீர் வீண்விரயமாதலின் விளைவாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள்

ஆகியவற்றை வகைகுறித்துக் காட்டுவதற்காக ஐந்து மாணவர் குழுக்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- அத்தவறுகளைத் திருத்திக் கொள்வதற்காகச் செய்யக்கூடியவற்றை மாணவர்களின் பங்குபற்றலுடன் கோவைப்படுத்த வழிகாட்டுங்கள்.
- பின்னர், அறிவுரை வாசகங்களை (உதாரணம் : நாம் முதியோரைக் கேலி செய்யோம்) வாரத்திற்கு ஒன்று வீதம் வகுப்பில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.
- அவ்வாண்டு முடிவடையும் வரையும் இந்த அறிவுரை வாசகங்களை மாற்றி மாற்றிக் காட்சிப்படுத்துவதோடு மாணவர்களிடத்தில் ஏற்படும் நடத்தைசார் மாற்றங்களை அவ்வப்போது பாராட்டுங்கள்.

செயற்பாடு 4

- மாணவரை 7 பேர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- ''எமது பாடசாலைக்கு எங்கள் பரிசு'' எனும் தலைப்பில் நடைமுறைப்படுத்தப்படும் அழகிய பூம்பாத்தி எனும் செயற்பாடு குறித்து மாணவர்களுக்கு விளக்கமளியுங்கள். அதன்போது
    - ⁕ பாத்தியை அமைத்தல்
    - ⁕ மலர்க் கன்றுகள், மலர் வித்துகள் நடுதல்
    - ⁕ தினமும் அதனைப் பராமரித்து வருமாறு அறிவுறுத்துதல்
- சகல வேலைகளையும் மாணவர்களது பங்குபற்றலுடன் செய்ய முயற்சி செய்தல் வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் பெற்றோரினது உதவியைப் பெற்றுக் கொள்ளுங்கள். (ஒரு குழுவுக்கு பெற்றோர் ஒருவர் வீதம்)
- பரஸ்பரம் உதவிபுரிதல், கூட்டுணர்வு, பாதுகாப்பாக நடந்துகொள்ளல், ஏனையோரின் பாதுகாப்புக் குறித்துக் கவனஞ்செலுத்துதல், வேலைகளைச் சீராக நிறைவுசெய்தல், பகிர்ந்து பரிமாறிக்கொள்ளல், சுய மகத்துவம், தலைமைத்துவத் திறன்களை ஏற்படுத்திக் கொள்ளல், உபகரணப் பயன்பாடு, வாழ்க்கைப் பரிச்சயத்திற்கு வழிகாட்டல் ஆகியவற்றுக்காக இச்செயன்முறையின்போது மாணவர்களுடன் நட்புடன் செயற்பட்டு வழிகாட்டுங்கள்.
- குறுகிய காலத்தில் பூக்கள் பூக்கும் பூஞ்செடிகளை நடுதல், பூப்பூத்த பின்னர் தமது வகுப்புக்கும் பாடசாலை அலுவலகத்திற்கும் ஏனைய வகுப்புகளுக்கும் வழிபாட்டிற்காகப் பூங்கொத்து / பூத்தட்டு போன்றவற்றை அன்பளிப்பாக வழங்க வழிப்படுத்துங்கள்.
- அத்தோடு நண்பர்கள் செய்த நல்ல வேலைகளைக் காட்சிப்படுத்துங்கள்.
- உக்கும் குப்பை, உக்காத குப்பை ஆகியவற்றுக்காக குப்பைப் பாத்திரங்களைத் தயாரிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

- இப்பழக்கத்தை வகுப்பு மட்டத்தில் நடத்தச் சந்தர்ப்பமளித்து உணவு உட்கொண்ட பின்னர் பிரதான கழிவுகளை அப்புறப்படுத்துவது வரையில் பெற்றோரின் ஒத்துழைப்புடன் கழிவுகளை வெளியேற்ற வழிப்படுத்த முடியும்.

செயற்பாடு **5**

- மாணவர்கள் அனைவரையும் திறந்தவெளிக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவர்களை இரண்டு குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒருவர் பின் ஒருவராக இரண்டு வரிசைகளில் (2 மீற்றர் இடைவெளியில்) நிறுத்துங்கள்.
- மாணவர்கள் இருவரை முன்னரே அழைத்து வரிசைகள் இரண்டிற்கும் எதிரே முகத்தை முகம் நோக்கியவாறு நிற்க வழிப்படுத்துங்கள். (இம்மாணவர்கள் இருவரும் 2 மீற்றர் இடைவெளியில் நிற்க வேண்டும்.)
- பின்னர் நீங்கள், நட்சத்திர அடையாளங்களிட்டுத் தயாரித்த 2”x 2”x 2” மாயாஜாலப் பெட்டிகள் இரண்டையும் முன்னே இருக்கும் மாணவர்கள் இருவரினதும் தலைகளின்மீது வையுங்கள். (மாயாஜாலப் பெட்டியிலுள்ள பொருள்கள் வெளியே தெரியாதிருக்க வேண்டும்.)
- அம்மாணவர்கள் தமது தலையிலுள்ள பெட்டியை வலது கையினால் மாத்திரம் எடுத்துத் தமது வரிசையில் நிற்கும் மாணவர்களது தலை மீது வைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- வரிசைகளிலுள்ள மாணவர்கள் தலை மீது உள்ள பெட்டியைக் கைகளால் பிடிக்காது மெதுவாகப் பின்புறம் திரும்பி வலது கையினால் பெட்டியை எடுத்து மற்றைய மாணவனின் தலைமீது வைக்க வழிப்படுத்துங்கள்.
- இவ்வாறாக மாணவர்கள் அனைவரும் மாயாஜாலப் பெட்டியை நிலத்தில் விழாதவாறு விளையாடி முடித்த பின்னர், இறுதியாக நிற்கும் மாணவர் ஓடி வந்து ஆசிரியரின் தலை மீது மாயாஜாலப் பெட்டியை வைத்தல் வேண்டும் என அறிவுறுத்துங்கள்.
- குழுவில் மற்றைய மாணவர்களும் ஆசிரியரின் அருகே ஓடி வந்து வட்டமாக நிற்றல் வேண்டும் எனவும் அறிவுறுத்துங்கள்.
- முதலில் வரும் குழு ஆசிரியருக்கு வலது பக்கத்திலும் இரண்டாவதாக வரும் குழு ஆசிரியரின் இடது பக்கத்திலும் நிற்குமாறு கூறுங்கள்.
- இரண்டு குழுவினரும் சரியாக விளையாட்டில் வெற்றி பெறும் வரையில் விளையாட்டை நடத்தி முடித்த பின்னர் ஆசிரியர் தம்மைச் சூழ மாணவர் குழுக்கள் இரண்டையும் இரண்டு வட்டங்களாக நிறுத்திப் பொறுமை, பதட்டப்படாதிருத்தல், கூறுவனவற்றைச் சரியாகச் செவிமடுத்தல், போட்டித்தன்மை, மறக்காதிருத்தல் ஆகியன மூலம் போட்டியை இலகுவாக வெல்லலாம் என்பது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மேற்படி நிபந்தனைகளின் கீழ் தவறுவிட்ட மாணவர்கள் மற்றைய மாணவர்களிடம் மன்னிப்புக் கோரவும் இனிமேல் அவ்வாறு நிகழாதவாறு செயற்படுவதாகக் கூறவும் வழிப்படுத்துங்கள்.
- முதலில் வெற்றியடைந்த குழுவுக்குக் கைதட்டிப் பாராட்டுங்கள். பின்னர் இரண்டாவதாக வெற்றிபெற்ற குழுவையும் கைதட்டிப் பாராட்டுங்கள்.
- பின்னர் மாயாஜாலப் பெட்டியில் உள்ள நட்சத்திரங்களை முதலில் வெற்றிபெற்ற குழுவுக்கு முதலாவதாகவும் இரண்டாவதாக வெற்றிபெற்ற குழுவுக்கு இரண்டாவதாகவும் வழங்கி நாம் கூட்டாக வெற்றிபெற்றோம் எனும் வாக்கியத்தை உரத்து உச்சரித்துக் (கூட்டாக) கூறுமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு **6**

- திறந்தவெளியான ஓர் இடம் அல்லது வகுப்பு மேடை அல்லது பாடசாலைப் பிரதான மேடையைப் பயன்படுத்தி நற்பண்புகள் பற்றிக் கூறும் பாடலைத் தாள - லயத்திற்கேற்ப பாடிக் களிப்புறுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- அதன்போது கருப்பொருளுக்கு அமைவாக இடையிடையே வெவ்வேறு செயற்பாடுகளின் போதும் வேறு கருப்பொருள்களின்போதும் பாடம் முடிவடையும் சந்தர்ப்பத்திலும் பாடலைப் பாடுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மகிழ்ச்சியாகவும் சுயாதீனமான கொண்ணிலையை வெளிப்படுத்துவதற்கும் புத்தளிப்பு அல்லது பொருத்தமான தாள வாத்தியம் ஒன்றிற்கேற்பச் செயற்படுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**நற்பழக்கம்**

1. காலையிலே எழுந்திடுவோம்
காலைக்கடன் முடித்திடுவோம்
அன்னை சொல்லைக் கேட்டிடுவோம்
அதன்படியே நடந்திடுவோம்.

2. பாதை ஓரம் நடந்திடுவோம்
பாடசாலை சென்றிடுவோம்
வகுப்பறைக்கு விரைந்திடுவோம்
வகுப்பின் அழகைப் பேணிடுவோம்

3. ஆசிரியர் சொல்லைக் கேட்டிடுவோம்
அறிவுரைப்படி நடந்திடுவோம்
நட்புடனே பழகிடுவோம்
நற்பண்புகளை வளர்த்திடுவோம்.

- இவ்வாறாறான நற்பண்புகளைக் கூறும் எளிய கவிதைகளை எப்போதும் பாடி மாணவருள் நற்பண்புகளை வளர்ப்பதற்கு ஊக்குவியுங்கள்.

## 02. கருப்பொருள் - நாம் இலங்கையர்

வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தோராயினும் நாம் அனைவரும் இலங்கையர்கள் ஆவோம். சமய, இனம், உயர்ந்தோர், தாழ்ந்தோர் போன்ற எந்தவித வேறுபாடுகளும் இன்றி, அனைவரும் சமமான, முழுமையான இலங்கையராகக் கருதப்படுகின்றனர். வெவ்வேறு மக்கட் பிரிவினரின் பண்பாடுகளை மதித்து அவற்றைக் கௌரவித்து, இணங்கி வாழ்தல் தொடர்பான உடன்பாடான மனப்பாங்குகளைச் சிறுபராயம் முதலே பிள்ளைகளிடத்தே உருவாக்குதல் வேண்டும். தேசியக் கொடிக்கும் தேசிய கீதத்திற்கும் உரியவாறு மதிப்பளித்தல், வெவ்வேறு தேசிய, சமய பண்டிகைகளின் முக்கியத்துவத்தை விளக்கி, அவற்றில் பங்குபற்றல், அவை பற்றிய அடிப்படையான பரிச்சயத்தை ஏற்படுத்துதல் ஆகியனவே இக்கருப்பொருளின்கீழ் தரப்பட்டுள்ள செயன்முறைச் செயற்பாடுகளின் குறிக்கோளாகும்.

**தேர்ச்சிகள்:**

- இலங்கையின் பண்பாட்டினதும் தேசிய மரபுரிமைகளினதும் பண்புகளை அறிந்து அவற்றைக் காப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- சம்பிரதாயங்கள் தொடர்பாக விளக்கத்துடன் அவற்றைப் பேணுவதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- வெவ்வேறு மக்கட் பிரிவினரையும் அவர்களது பண்பாட்டு இயல்புகளையும் தனித்துவங் களையும் மதித்துப் பேணுவதில் பங்களிப்புச் செய்வார்.
- இலங்கையர்களின் வெவ்வேறு பண்பாடுகள் பற்றிய விளக்கத்துடன் தேசியத்திற்கு முதன்மையிடம் வழங்கி வெவ்வேறு படைப்பாக்கங்கள் செய்வார்.
- இலங்கை மக்களிடையே நிலவும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- தேச அபிமானம் வெளிக்காட்டப்படும் வகையில் அழகியல் சார்ந்த முன்வைப்புகளைச் செய்வார்.

**கற்றற்பேறுகள் :**

- தேசியக் கொடியை ஏற்றும்போது பின்பற்ற வேண்டிய வழக்கங்களைப் பின்பற்றுவார்.
- தேசிய கீதத்தினைப் பெருமிதத்துடனும் சரியான உச்சரிப்புடனும் பாடுவார்.
- தேசிய தினமாக சுதந்திர தினத்தின் பெறுமதியை இனங்கண்டு அதனைப் பெருமிதத்துடன் கொண்டாடுவார்.
- இலங்கையர்கள் பல்வேறு மக்களினங்களுக்குரியவர்கள் என அறிந்து கொள்வார்.
- அந்தந்த இன மக்களின் தனித்துவமான பண்பாட்டு இயல்புகளை மதித்துச் செயற்படுவார்.
- வெவ்வேறு பண்பாடுகளைச் சேர்ந்த தனிச்சிறப்பான சந்தர்ப்பங்களில் கூட்டாகச் செயற்படுவார்.
- வெவ்வேறு மக்கள் இனங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பினும் நாமெல்லோரும் இலங்கையர் என ஏற்றுக்கொள்வார்.
- ஏனைய இனத்தவரின் விசேட பண்பாட்டுச் சந்தர்ப்பங்களின்போது பயன்படுத்தப்படும் அலங்காரங்களை ஆக்குவதற்குப் பழகிக்கொள்வார்.
- இலங்கையரிடையே பிரசித்தமான கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- தேசாபிமானத்தை வெளிப்படுத்தும் கவிதைகள், பாடல்கள் ஆகியவற்றை வெளிக்காட்டும் அசைவுகளுடன் முன்வைப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1**

- இலங்கையராகிய எமக்கு மட்டும் உரித்தான கீதம் தேசிய கீதமென மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள் அதனை ஆக்கியோன் ஆனந்த சமரக்கோன் என மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- தேசிய கீதத்தைச் சரியாகப் பாடும் ஆற்றலை மாணவருள் ஏற்படுத்துவதற்குத் தேசிய கீதத்தைப் பெரியளவிலான பிறிஸ்டல் அட்டை ஒன்றில் அல்லது டிமைத் தாளில் காட்சிப்படுத்துங்கள்.
- அதனை வகுப்பறையில் மாணவர்கள் அனைவரும் காணக்கூடியவாறான இடமொன்றில் காட்சிப்படுத்தி, கீதத்தின் சொற்களைச் சரியான உச்சரிப்புடன் மாணவர்களுக்கு அறிமுகம் செய்யுங்கள்.
- கீதத்தின் கருத்தையும் எளிமையாக விளங்கப்படுத்துங்கள்.
- பின்னர் ஆசிரியர் எல்லா மாணவருடனும் சேர்ந்து கீதத்தைச் சரியான இராகத்தில் சரியான உச்சரிப்புடன் பாடுங்கள்.
- இதற்கு ஒலி நாடாவில் சரியாகப் பாடப்பட்ட தேசிய கீதத்தைச் செவிமடுப்பதற்கும் அதற்கேற்ப மாணவர்களைப் பாடுவதற்கும் பயிற்றுவியுங்கள்.
- மாணவர்கள் கீதத்தைச் சரியாகப் பாடுகின்றனரா எனப் பார்ப்பதற்கு மாணவர்களைக் குழுக்களாகவும் சோடிகளாகவும் கீதத்தைப் பாடச் செய்யுங்கள்.
- இதற்குப் பாடசாலை சங்கீத ஆசிரியர் அல்லது வேறு பொருத்தமான வள நபரைப் பயன்படுத்தி மாணவர்கள் மிகவும் சரியாகக் கீதத்தைப் பாடுவதற்குத் தேவையான ஆற்றலைப் பெறுவதற்கு அவசியமான நடவடிக்கைகளைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.

**செயற்பாடு 2**

- மாணவரைத் திறந்த வெளிக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- தேசிய கீதத்தைப் பாடும்போது சரியான கொண்ணிலையில் இருக்கும் விதம் தொடர்பாகத் தேவையான பழக்கத்தைப் பின்வருமாறு வழங்குங்கள்.
  - ⁕ இரு கால்களையும் கைகளையும் உரியவாறு வைத்திருத்தல்
  - ⁕ கணுக்கால்கள் இரண்டும் அருகில் இருக்குமாறு கால்களைச் சற்று விலக்கி ஆங்கில அரிச்சுவடியில் எழுத்து ‘V’ போல வைத்திருத்தல்.
  - ⁕ உடலை நேராக நிமிர்த்தி வைத்திருத்தல்
  - ⁕ தலையை நேராக வைத்து முன்னாலுள்ள இலக்கொன்றை நோக்கி இரு கண்களையும் திறந்து வைத்திருத்தல். (கண் மட்டத்திலிருந்து நேரே முன்நோக்கிப் பார்த்தல்)
  - ⁕ இரு கைகளும் கீழ் நோக்கி இலகுவாக இருக்குமாறு கை முஷ்டியைப் பெருவிரல் தசையை நோக்கி இருக்கமாறு வைத்திருத்தல். (உடலுக்கும் இருகைகளுக்கும் இடையே இடைவெளி இருத்தலாகாது.)
- தேசியக் கொடியை ஏற்றுவதற்குப் பொருத்தமான இடமொன்றை ஒழுங்கு செய்யுங்கள்.
- தேசியக் கொடியை உயர்த்தும் போது நிற்க வேண்டிய விதத்தையும் அதற்கு மரியாதை செய்யும் விதத்தையும் விளக்குங்கள்.
- பின்னர் தேசியக் கொடியை உயர்த்தும் விதத்தைப் பற்றி மாணவர்கள் அறிந்துகொள்வதற்காக அதனை முறையாக (மெதுவாக) உயர்த்தும் விதத்தையும் கொடிக் கம்பத்தின் உச்சிக்குச் சென்றதன் பின்னர் கயிற்றைக் கம்பத்தில் கட்ட வேண்டிய விதத்தினையும் மாணவருக்குச் செய்து காட்டுங்கள்.

- பொருத்தமானவாறு மாணவர்களும் கொடியை உயர்த்திக் கட்டுவதற்கு அனுபவங்களைப் பெறும் வகையில் தேவையான பயிற்சியை வழங்குங்கள்.
- தேசியக் கொடியை ஏற்றும்போதும் அதனை இறக்கும் போதும் நாம் மரியாதையுடன் நிற்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.
  (மாணவர்கள் கண்ட தேசியக் கொடியைக் கௌரவிக்காமல் தேவையற்றவாறு பயன்படுத்தும் சந்தர்ப்பங்களைப் பற்றிக் கலந்துரையாடித் தேசியக் கொடிக்கும் கீதத்திற்கும் மரியாதை செலுத்துவதன் முக்கியத்துவத்தை மேலெழுப்பிக் காட்டுங்கள்.)
- அடுத்ததாகத் தேசியக் கொடியை உயர்த்தித் தேசிய கீதத்தைப் பாடுங்கள்.
- தேசிய கீதத்தைப் பாடும்போது சரியான உச்சரிப்புடனும் (தேசியக் கொடியை உயர்த்துவதற்கு அதிதி ஒருவரை அழைக்கலாம்) சரியான கொண்ணிலையிலும் இருந்து பாடுவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு **3**

- இலங்கையராகிய எமக்கு மிகவும் முக்கியமான நாள் ஒன்றாக எமது நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்த நாளை அறிமுகச் செய்யலாம் என்பதை எடுத்துக்காட்டுங்கள்.
- எமது நாட்டில் பிரசைகள் ஒவ்வோர் ஆண்டும் பெப்ரவரி நான்காம் திகதியைச் சுதந்திரத்தைக் கொண்டாடும் தினமாக ஏற்றுக் கொண்டுள்ளதோடு அதற்காகப் பல்வேறு கொண்டாட்டங் களையும் செயற்பாடுகளையும் ஒழுங்கமைக்கின்றனர் என்பதனை எடுத்துக் காட்டுங்கள்.
- இதற்குப் புகைப்படங்கள், காணொளிக் காட்சிகள் போன்றவற்றையும் பயன்படுத்தி அத்தினத்தின் முக்கியத்தவம் பற்றிச் சுருக்கமாக விளக்கப்படுத்துங்கள்.
- சுதந்திர தினத்தின்போது நிகழும் பல்வேறு செயற்பாடுகளை உதாரணங்களாகக் காட்டி விளங்கப்படுத்துங்கள்.

  ***உதாரணம்***
  - தேசிய கொண்டாட்டத்தை ஒழுங்கமைத்தல்
  - வீடுகள் / பாடசாலைகள் / நிறுவனங்களில் தேசியக் கொடியை ஏற்றி வைத்தல்
  - மற்றைய பல்வேறு சமய நடவடிக்கைகளை ஒழுங்குசெய்தல்
  - அத்தினத்தை நினைவுபடுத்துவதற்கு மரநடுதல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்
  - தேசிய வீரர்களை / வீராங்கனைகளை நினைவுபடுத்துவதற்கு நிகழ்ச்சி களை ஒழுங்கு செய்தல்
  - பிராணிகளை விடுதலை செய்தல்
- இவ்விதமாகப் பாடசாலை மாணவர்கள் என்ற ரீதியில் சுதந்திர தினத்தைக் கொண்டாடக் கூடிய விதங்களைப் பற்றிய பிரேரணைகளை முன்வைப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவற்றிடையே செயற்படுத்தக்கூடிய ஒன்று அல்லது சில பிரேரணைகளைத் தெரிவுசெய்து சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதற்கு மாணவருடன் சேர்ந்து அவற்றைச் செயற்படுத்துங்கள்.

  ***உதாரணம்***
  - மரநடுகை நிகழ்ச்சி
  - இடர்படும் மாணவர் உள்ள பாடசாலைகளுக்கு/ மாணவர் ஒருவருக்கு/ சிலருக்கு பாடசாலைக் கருவிகளை வழங்குதல்.
- இவ்வாறான நடவடிக்கைகளைச் செயற்படுத்திச் சுதந்திர தினத்தைப் பயனுள்ளவாறு கொண்டாடுவதில் உள்ள முக்கியத்துவம் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

செயற்பாடு 4

- எமது நாட்டில் வாழும் சகலரும் இலங்கையர் எனினும் அவர்கள் பல்வேறு இனங்களுக்கு உரியவர்கள் என்பதையும் அவர்களைச் சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், பறங்கியர் என்றவாறு பிரதான நான்கு இனங்களாக இனங்காண முடியும் என்பதையும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுங்கள்.
- அந்த ஒவ்வொரு இனத்துக்குமுரிய ஆடை அணிகள், உணவு வகைகள், பழக்க வழக்கங்கள், பண்பாட்டு அம்சங்கள் ஆகியன உள்ளன என்பதையும் நாங்கள் ஒன்று சேர்ந்து இலங்கையர் என வாழும்போது அவை அனைத்தையும் பற்றிய விளக்கத்துடன் அவற்றை மதிப்பதுடனும் செயலாற்ற வேண்டும் என்பதையும் மாணவருக்கு எடுத்துக்காட்டுங்கள்.
- இதற்குச் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய இனங்களைப் பிரதிநிதித் துப்படுத்துமாறு சில மாணவர்களுக்கு ஆடை அணிகளை அணிவியுங்கள்.
- அவர்களை வகுப்பில் மற்றைய மாணவர் முன்னிலையில் அழைத்து அவ் ஆடை அணிகளில் உள்ள விசேடத்துவங்கள் பற்றி உரையாடுங்கள்.
- இதை மேலும் விளக்குவதற்குப் புகைப்படங்கள்/ காணொளிக் காட்சிகளையும் பயன்படுத்த முடியும்.
- ஒவ்வொரு இனத்திற்குமேயுரிய உணவு வகைகளுடனான சில பாத்திரங்களைப் பெற்றோரின் உதவியுடன் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- அவற்றை நான்கு மேசைகளின் மீது வைத்து அம்மேசைகளை நான்கு இடங்களில் வையுங்கள். ஒவ்வொரு உணவு வகைக்கும் முன்னால் அவற்றின் பெயர்கள் குறிப்பிடப் பட்ட அட்டையை வையுங்கள்.
- அம்மேசைகளின் அருகில் உரிய மக்களினத்தைப் பிரதிநிதிப்படுத்துவதற்கு ஆடை அணிந்த மாணவர்கள் நிற்பதற்கு/ இருப்பதற்கு ஒழுங்குசெய்யங்கள்.
- பின்னர் வகுப்பிலுள்ள மற்றைய மாணவர்கள் வரிசையாக ஒவ்வொரு மேசை அருகிலும் சென்று ஒவ்வொரு இனத்திற்குமுரிய ஆடையணிகள், உணவு, பானங்கள் பற்றிய விளக்கத்தை வழங்குவதற்கு மாணவர்களைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- எல்லா மாணவர்களும் அவ்வுணவுகளைப் பற்றிய விளக்கத்தைப் பெற்றதன் பின்னர் வேறுபடுத்தி வைக்கப்பட்டிருந்த நான்கு மேசைகளையும் ஒரே இடத்தில் வைத்து எல்லா மாணவரும் அவ்வுணவுகளை உரியவாறு அனுபவிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு 5

- ஒவ்வொரு இனத்தைச் சேர்ந்த மனிதர்கள் ஒன்றுக்கொன்று வித்தியாசமான உணவு வகைகள் ஆடை அணிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துவது போன்றே அவர்கள் பின்பற்றும் சமயங்களும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது என்பதை உரையாடல் மூலம் விளங்கிக் கொள்வதற்கு ஒழுங்கு செய்யுங்கள்.
- இதற்குப் பல்வேறு சமயங்களுக்குரிய வழிபாட்டுத் தலங்களின் படங்கள்/ புகைப்படங்கள்/ காணொளிகளைப் பயன்படுத்துங்கள். இவற்றுக்கு ஒத்த தமது பிரதேசத்தில் உள்ள வழிபாட்டு தலங்கள் பற்றி மாணவருக்கு நினைவுபடுத்துங்கள்.
- ஒவ்வொரு சமயத்தலத்துடன் தொடர்புபட்ட பல்வேறு பண்டிகைகள் நடக்கின்றன என்பதையும் அப்பண்டிகைகள் ஒவ்வொன்றிற்கும் உரிய பண்புகள் உள்ளன என்பதை உதாரணங்களுடன் விளக்குங்கள்.


*உதாரணம்* ○ பன்சல - வெசாக், பொசான், எசல, சங்கமித்தா ஊர்வலம், மகிந்த ஊர்வலம்
○ கோயில் - மகா சிவராத்திரி, நவராத்திரி, விசேட பூசை
○ தேவாலயம் - நத்தார் பண்டிகை, பாஸ்கு வருடாந்த விழா
○ மஸ்ஜித் - றம்ழான், ஹஜ் பெருநாள்கள்

- இவ்வாறான சமயங்களுடன் தொடர்புபட்ட மதருகுமார்கள் அல்லது வளர்ந்தோரைக் கொண்டு பல்வேறு சமயங்களுக்குரிய பண்டிகைகளையும் வரலாற்றுக் கதைகளையும் பற்றிய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இக்கலந்துரையாடலின் ஊடாக ஒவ்வொரு சமயத்தையும் நாங்கள் மதிக்க வேண்டும் எனவும் அச்சமயத் தலங்களைப் பாதுகாக்க வேண்டும் எனவும் இலங்கையர் என்ற ரீதியில் நாம் வாழும்போது ஒற்றுமையாக வாழ்வதற்கு அவ்வாறான பழக்கம் மிகவும் முக்கியமானது எனவும் இக்கலந்துரையாடலின்போது மேலெழுப்பிக் காட்டுங்கள்.
- அவ்வாறே மற்றைய இனத்தவரின் பல்வேறு விசேட சந்தர்ப்பங்கள் பண்டிகைகளில் பங்குபற்றுவதன் மூலம் அவர்களுடன் ஒற்றுமையுடன் செயலாற்றுவதற்கு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் முன்வருதல் மிகவும் பெறுமதியானது ஆகும் என விளங்கப்படுத்துங்கள்.


செயற்பாடு 6

- பல்வேறு இனங்களினால் தமது பண்டிகைச் சந்தர்ப்பங்களின்போது செய்யும் அலங்காரங்கள் பற்றிய அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதற்குப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- இதற்குத் தேவையான பொருள்களை வகுப்பில் முன்கூட்டியே சேர்த்து வைத்திருங்கள்.
- மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாக்கி அலங்காரங்களை நிர்மாணிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தமிழரினால் நிர்மாணிக்கப்படும் கோல அலங்காரங்களை மாணவரின் திறன்களுக்குப் பொருத்தமானவாறான நிர்மாணத் தளத்திலே பொருத்தமான இடத்தில் வரைந்து அவற்றை நிறமூட்டப்பட்ட தேங்காய்த் துருவலைப் பயன்படுத்தி அலங்காரம் செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தமிழ், முஸ்லீம் இனத்தவர்களால் உள்ளங்கைகளில் இடும் மருதாணிக் கோலங்ளை இடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இதற்கு மாணவர்களுக்குத் தங்களது கைகளைத் தாளொன்றின் மீது வைத்து வரைந்து அதனுள் பல்வேறு கோலங்களை வரைவதற்குச் சந்தர்ப்பம் வழங்க முடியும்.
- சிங்கள, பறங்கி இனத்தவரினால் பண்டிகைச் சந்தர்ப்பங்களின்போது நிர்மாணிக்கப்படும் அலங்காரங்கள் இதற்கு வீட்டை அலங்காரம் செய்வதற்கு பயன்படுத்தக்கூடியவாறு கீழே காட்டப்பட்டுள்ளவாறான தாள்களில் ஆக்கங்களைச் செய்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

*உதாரணம்* ○ 20 cm மட்டில் நீள அகலமுள்ள சதுரமொன்றை நிறத்தாள்களில் கீழே உள்ளவாறு மடித்துக் கொள்ளுங்கள்.
○ அதனை உரு 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு தாள்களின் பகுதிகள் வேறுபடுத்தப்படக் கூடியவாறு வெட்டுங்கள்.




உரு 1



உரு 2

- இவ்வாறாக வெட்டப்பட்ட தாளை முழுமையாக விரித்தெடுங்கள்.
- அதில் A, B C, D எனக் காட்டப்பட்டுள்ள மூலைகளை இணைத்துப் பசை பூசுங்கள்.
- இவ்வாறு தயாரிக்கப்பட்ட பகுதிகள் சிலவற்றை ஒன்றாகச் சேர்த்து அலங்காரம் ஒன்றை அமைப்பதற்கு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குங்கள்.

**செயற்பாடு 7**

- நாம் எதிர்காலத்தில் நாட்டிற்குக் கீர்த்தியைக் கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கும் பாத்திரத்தை சித்திரமாக வரைவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அச்சித்திரத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள பாத்திரமும் அதனூடாக நாட்டில் ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் சேவையையும் எழுதிக் காட்டுமாறு மாணவருக்குக் கூறுங்கள்.
- எல்லா மாணவர்களும் செய்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள். அவற்றில் எழுதிக் காட்டப்பட்டுள்ள விடயங்களைப் பாராட்டி உரையாடுங்கள்.

**செயற்பாடு 8**

- இலங்கையரிடையே பிரசித்தமான விளையாட்டாக சட்டை ஊசி (safety pin) மறைத்துவைக்கும் விளையாட்டை மாணவருக்கு அறிமுகஞ்செய்யுங்கள்.
- இவ்விளையாட்டை விளையாடுவதற்கு மாணவரை இரு குழுக்களாக்குங்கள்.

- இரு குழுக்களையும் இரு நிரல்களாக நிறுத்தி நடுவில் கோடொன்றைக் குறியுங்கள்.
- பின்னர் ஒரு குழுவிற்குச் சட்டை ஊசியொன்றைக் கொடுங்கள்.
- அக்குழுவின் உறுப்பினர்கள் சேர்ந்து மற்றைய குழுவின் உறுப்பினர்கள் காணமுடியாதவாறு ஒருவரது கையில் ஊசியை மறைத்து வைத்துக்கொள்ள வேண்டும்.
- பின்னர் குழு உறுப்பினர் முன்பிருந்தவாறு மீண்டும் நிரலாக நிற்க வேண்டும்.
- மற்றைய குழுவின் உறுப்பினர் ஒருவர் ஊசி உள்ள குழுவிற்கு வந்து அவர்களது கைகளைப் பிடிக்காமல் அவதானித்து யாரின் கையில் ஊசி உள்ளது என அனுமானித்துத் தனது குழுவிற்குச் சென்று அவர்களுடன் கலந்துரையாடி ஊசியை வைத்திருக்கும் மாணவரின் பெயரைக் கூற வேண்டும்.
- அனுமானித்தது பிழை எனின் ஊசியை வைத்திருக்கும் மாணவர் யாரெனச் சரியாகக் கூறிய மாணவர் தமது குழுவிற்குரிய நிரையில் ஒரு படி முன்னால் வந்து நிற்க வேண்டும்.
- மீண்டும் அவ்விதமாகவே விளையாட்டை நடத்துவதற்கு மற்றைய குழுவிற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இவ்விதமாக விளையாட்டைத் தொடர்ந்து நடத்த முடியும்.
- இறுதியில் தான் நிற்கும் நிரையின் முன்னால் கூடுதலான மாணவர்கள் சென்றுள்ள குழு வெற்றியடையும்.

## 03. கருப்பொருள் : **மரஞ்செடிகொடிகள்**

பாடசாலைத் தோட்டத்தில் உள்ள மரஞ்செடிகொடிகளைப் பற்றி நன்றாகத் தேடியறிய இக்கருப்பொருளின் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. இங்கு தாவரங்களை அவதானிப்பு, தேடியாய்வுகள் மூலம் இனங்காணவும் அவற்றைப் பல்வேறு விதமாக அறிக்கைப்படுத்தவும் இடமளிக்கப்பட்டுள்ளது. அதற்கேற்ற சூழலை ஏற்படுத்தவும் சூழலை நேசிப்பதோடு அதனைக் காப்பதில் பங்களிப்புச் செய்யும் நல்ல மனப்பாங்குகளையும் மாணவரில் விருத்திசெய்யவும் இக்கருப்பொருளினூடாக எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சிகள்**

- அண்மைச் சுற்றாடலில் உள்ள தாவரங்களினதும் மரங்களினதும் பண்புகளையும் வளரும் விதங்களையும் இனங்கண்டு அறிக்கைப்படுத்துவார்.
- மரஞ்செடிகொடிகளிடையே உள்ள விசேட வித்தியாசங்களைச் சோதனை செய்து அறிக்கைப் படுத்துவார்.
- மரஞ்செடிகொடிகளுடன் மனிதர்களும் மிருகங்களும் காட்டும் தொடர்பை ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- தாவரங்களினதும் மரங்களினதும் பெறுமதியை மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்.
- சுற்றாடலில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடியவற்றைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கங்களில் ஈடுபடுவார்.
- மரஞ்செடிகொடிகள் தொடர்புபட்ட நெகிழ்தன்மை விருத்திக்கு உதவும் அசைவு செயல்களில் ஈடுபடுவார்.
- தாவரங்களுக்கும் மரங்களுக்கும் இடையிலான இடைத்தொடர்பை வெளிப்படுத்தும் கவிதைகள், பாடல்களையும் நடித்தலையும் நாடகங்களையும் காட்சிப்படுத்துவார்.

**கற்றற்பேறுகள்:**

- அண்மைச் சுற்றாடலில் வளரும் பல்வேறு மரஞ் செடி கொடிகளின் பண்புகளைஅவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- அண்மைச் சுற்றாடலில் பல்வேறு இடங்களில் உள்ள தாவரங்கள் வளரும் விதத்தைக் கலந்துரையாடுவார்.
- மரங்களுடனும் தாவரங்களுடனும் தொடர்புபட்ட மனப்பாங்கு ரீதியான பெறுமதிகளை இனங்கண்டு கடைப்பிடிப்பார்.
- விரயமாகும் தாவரப் பகுதிகளைப் பயன்படுத்தி ஆக்கங்கள் செய்து மகிழ்ச்சி அடைவார்.
- பல்வேறு இலைகளை வடிவத்திற்கு ஏற்ப வகைப்படுத்துவார்.
- தாவரமொன்று வளர்வதற்குத் தேவையான காரணிகளைச் சோதித்து அது பற்றிய அனுபவங்களைக் கூறுவார்.
- தாவரங்களிலும் மரங்களிலும் இருந்து பெறப்படும் பயன்களை இனங்கண்டு கூறுவார்.
- மரஞ்செடிகொடிகளின் அசைவுகளின் அடிப்படையில் அமைக்கப்பட்ட இயக்கச் செயற்பாடு களில் ஈடுபட்டு மகிழ்ச்சி அடைவார்.
- மரங்களுக்கும் உடலின் பகுதிகளுக்கும் இடையே உள்ள தொடர்பை வெளிப்படுத்திக் காட்டும் பாத்திரமேற்று நடித்தலை முன்வைப்பார்.
- மரங்கள் தொடர்பாக நிகழ்த்தக்கூடிய ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

செயற்பாடு 1 :

- மாணவரைப் பொருத்தமான விதத்தில் குழுக்களாக்குங்கள்.
- அண்மைச் சுற்றாடலில் உள்ள மரங்கள், செடிகள், கொடிகள், புதர்கள் ஆகியவற்றில் இருந்து பெறப்பட்ட தாவரங்களின் பகுதிகளை (இலைகள், பூக்கள், காய்கள் போன்றன) வகுப்பறையில் சேகரித்து வையுங்கள். அவற்றை மாணவர் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- அத்தாவரங்களின் பகுதிகளில் பல்வேறு பண்புகளை அவதானிப்பதற்காக மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். இதற்காக கைவில்லை ஒன்றையும் வழங்குங்கள். இதில் பின்வரும் விடயங்கள் வழியே அவதானிக்க வேண்டும் என மாணவருக்குக் கூறுங்கள்.

***உதாரணம்*** :
- வடிவம், நிறம், கரடு முரடு/மென்மை தன்மை
- இலையொன்றை விரல்களினால் கசக்கும் போது ஏற்படும் மணம்/ நாற்றம்
- அவ்விலைகளின் நரம்புகள் அமைந்துள்ள விதம்

- தமது குழுக்களுக்குக் கிடைத்த தாவரப் பகுதிகளுக்கு ஏற்ப பாடசாலைத் தோட்டத்தில் அல்லது சுற்றுப்புறத்தில் தெரிவு செய்யப்பட்ட இடத்தில் அத்தாவரங்கள் அமைந்துள்ள இடங்களுக்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- அதற்கேற்பப் பின்வரும் விடயங்களை அவதானிப்பதற்கு மாணவர்களுக்குத் தேவையான வழிகாட்டலை வழங்குங்கள்.

***உதாரணம்*** :
- உரிய தாவரத்தின் பெயர்
- வளர்ந்துள்ள இடம்
- தாவரத்தின் இயல்பு - தண்டின் இயல்பு (உறுதித்தன்மை, பருமன்)
  - கிளைகள் படர்ந்துள்ள விதம்
  - தாவரம் வளர்ந்துள்ள உயரம்
- பூக்கள், காய்கள் இருப்பின் அவை அமைந்துள்ள விதம்
- வேறு விசேட பண்புகள்

- மாணவர் குழுக்களினால் சேகரிக்கப்பட்ட தகவல்களை வகுப்பில் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் முன்வைக்கும் தகவல்களைக் கொண்டு ஒவ்வொரு தாவரத்திலும் பல்வேறுபட்ட தன்மையொன்று உண்டு எனவும் அத்தாவரங்கள் ஒவ்வொன்றும் அவற்றுக்கேயுரிய விசேடமான பண்புகளைக் கொண்டிருக்க முடியும் எனவும் மேலெழுப்பிக் காட்டுங்கள்.

செயற்பாடு 2 :

- பாடசாலைத் தோட்டத்தில் அல்லது அண்மைச் சுற்றாடலில் பல்வேறுபட்ட தன்மை உள்ள சில இடங்களை அவதானிப்பதற்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.

  ***உதாரணம்*** :
  - திறந்த சுற்றாடல், நிழல் உள்ள இடம், நீர் உள்ள இடம், சேறுள்ள இடம், கற்கள் உள்ள இடம் என்றவாறானவை
- பின்வரும் விடயங்கள் மீது அவ்விடங்களில் வளரும் தாவரங்கள் பற்றி அவதானிப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

*உதாரணம்* ⚬ அவ்விடத்தில் தாவரங்கள் வளர்ந்துள்ளனவா? இருப்பின், குறைவாகவா? கூடுதலாகவா?

⚬ தாவரங்கள் அதிகமாக இருப்பின் அவற்றின் உயர அளவுகள் எவ்வாறானவை?

⚬ அவ்விடங்களில் வளர்ந்துள்ள தாவரங்களின் தண்டுகளின் இயல்புகள் எவ்வாறானவை?

⚬ கிளைகள் பரந்துள்ள விதம் எவ்வாறானது?

⚬ வேர்களின் இயல்பு எவ்வாறானது?

- அவதானிப்பைப் பொருத்தமானவாறு குறித்துக் கொள்வதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இங்கு பாசி வகைகள் ஆகியவற்றை அவதானிப்பதற்கு கைவில்லையை வழங்குங்கள்.
- சுற்றுலாவின் பின்னர் வகுப்பறைக்குத் திரும்பி வந்ததன் பின்னர் மாணவர் குழுக்களுக்கு அவதானித்த இடமொன்று வீதம் வழங்கி அவ்விடங்களில் மரங்களை / தாவரங்களை அவதானிக்கும்போது கண்டவற்றை மேற்குறித்த விடயங்கள் மீது முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைத்த விடயங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு சுற்றாடல் நிலைகளிலும் தாவரங்கள் வளரும் விதம், இயல்பு, பல்வேறுபட்டதன்மை ஆகியவற்றைக் கலந்துரையாடுங்கள்.

செயற்பாடு 3 :

- தாவரங்கள் வளர்வதற்குத் தேவையான காரணிகளைக் காண்பதற்காகக் கீழே காட்டப்பட்டுள்ளவாறான செயற்பாடொன்றைத் திட்டமிடுங்கள்.
- முதலாவது முதன்மைக் கட்டத்தில் தாவரங்களின் வளர்ச்சிக்குச் சூரிய ஒளியின் செல்வாக்கைச் சோதிப்பதற்காகப் புற்கள் உள்ள தரையொன்றை தென்னஞ்சிரட்டையினால் மூடி வைத்துச் செய்த செயற்பாட்டினை நினைவுபடுத்துங்கள்.
  - ⁕ சம அளவிலான 4 பாத்திரங்களைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.
  - ⁕ அந்நான்கு பாத்திரங்களுக்கும் 1, 2, 3, 4 எனப் பெயரிடுங்கள்.
  - ⁕ சம அளவிற்கு வளர்ந்துள்ள ஒரே வகைத் தாவரங்கள் நான்கைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
  - ⁕ அவற்றுள் 2 பாத்திரங்களில் இரு தாவரங்களை நட்டு கீழே காட்டப்பட்டுள்ளவாறு தேவையான காரணிகளை வழங்குங்கள்.

    **பாத்திரம்** 1 - ஒவ்வொரு நாளும் நீர் ஊற்றி சூரிய ஒளி உள்ள இடமொன்றில் வையுங்கள்.

    **பாத்திரம்** 2 - நீர் ஊற்றாமல் அவ்விடத்திலேயே வையுங்கள்
- அத்தாவரங்களைத் தினமும் அவதானித்துக் குறித்துக் கொள்வதற்குப் பின்வரும் அட்டவணையை மாணவர் குழுக்களுக்கு வழங்குங்கள்.
- அவதானிப்பிற்கு ஏற்ப உரிய பகுதியில் பாத்திரங்களின் எண்ணை (1, 2) என அடையாளம் இடுமாறு கூறுங்கள்.

தாவரங்களின் வளர்ச்சிக்கு நீர் அவசியமானது எனச் சோதித்தல்

| திகதி | தாவரம் அளவிற்கு இருக்கிறது | தாவரம் வாடி இருக்கிறது |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

- எஞ்சியுள்ள இரு தாவரங்களுக்குப் பின்வரும் நிலைகளை வழங்குங்கள்.

**பாத்திரம் 3** - மண்ணுடனான பாத்திரத்தில் தாவரத்தை சூரிய ஒளியுடனான இடமொன்றில் வையுங்கள். பொருத்தமானவாறு நீரை இடுங்கள்.


**பாத்திரம் 4** - மண் இல்லாத பாத்திரத்தில் தாவரத்தை வையுங்கள். மேலே கூறிய இடத்தில் பொருத்தமானவாறு நீரை இடுங்கள்.

- மேற்குறித்த விதத்தில் தயாரிக்கப்பட்டுள்ள அட்டவணையொன்றை (தாவரங்கள் வளர்வதற்கு மண் தேவையா எனச் சோதித்தல்) மாணவர் குழுக்களுக்கு வழங்கி அவதானிப்புகளை அறிக்கைப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள். மாணவர் அவதானிப்புகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அந்த அவதானிப்புகளைக் கொண்டு தாவரங்களின் வளர்ச்சிக்குத் தேவையான காரணிகளைப் பற்றிக் கலந்துரையாடல் ஒன்றைக் கட்டியெழுப்புங்கள்.

செயற்பாடு 4:

- வகுப்பில் உள்ள மாணவர்களைச் சில குழுக்களாக்குங்கள்.
- பாடசாலைத் தோட்டத்தை அவதானித்து ஒவ்வொரு குழுவும் சிறு தாவரமொன்று வீதம் கழற்றிக்கொண்டு வருவதற்கு வழிப்படுத்துங்கள்.
- தாவரத்தைப் கழற்றும் போது அதன் வேர்களுக்கு சேதம் ஏற்படாதவாறு அவற்றைக் கழற்றுவதற்காகக் கூராக்கப்பட்ட உறுதியான கோலொன்றை அல்லது கைமுள்ளொன்றைப் பயன்படுத்துவது பொருத்தமாகும் என மாணவருக்குக் கூறுங்கள்.
- தாவரத்தின் வேர்களை நன்கு அவதானிக்கக்கூடியவாறு வேர்களைப் பாதுகாப்பாகக் கழுவிக் கொள்ளுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.
- குழுக்களாகச் சேகரித்த தாவரங்களை நன்கு அவதானிப்பதற்கு மாணவருக்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அத்தாவரங்களின் வேர்கள், வித்துகள், இலைகள், தண்டு, ஆணிவேர், பக்கவேர்கள் ஆகியவற்றை மாணவர்களுக்கு அறிமுகஞ் செய்து அவற்றைத் தனித்தனியாக இனங்காண்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- பின்னர் தாளொன்றில் தாவரமொன்றை வரைந்து அத்தாவரத்தின் பகுதிகளின் பெயர்களைக் குறிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.


*உதாரணம்* :




- இதற்கேற்ப அநேகமான தாவரங்கள் பூக்கள், வித்துக்கள், இலைகள், தண்டு, வேர்கள் ஆகிய பகுதிகளைக் கொண்டனவாகும் எனக் காட்டுங்கள்.

செயற்பாடு 5

- அண்மைச் சுற்றாடலில் இருந்து பெற்ற பல்வேறு வடிவங்களிலான இலைகளை வகுப்பறையில் சேகரித்து வையுங்கள்.



- சேகரிக்கப்பட்ட அனைத்து இலை வகைகளும் கிடைக்கக்கூடியவாறு அவற்றை மாணவர் குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- அவ்விலைகளின் வடிவங்களுக்கு ஏற்ப அவற்றை வகைப்படுத்துவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

*உதாரணம்* :
- வகை 1 - பலா, கத்தாப்பு
- வகை 2 - புல் வகை, கரும்பு, மூங்கில்
- வகை 3 - புளியம் இலை, அகத்தி, தொட்டாற்சுருங்கி
- வகை 4 - வெண்டி, ஈரப்பலா, பப்பாசி, ஆமணக்கு ...... என்றவாறு

- ஒவ்வொரு மாணவர் குழுவும் இலைகளை வகைப்படுத்தியுள்ள விதம் சரியாவென அவதானித்துப் பாருங்கள்.
- பின்னர் மாணவர் குழுக்களிடம் இருக்கும் இலைகளிடையே ஒரே வகைக்குரிய இலைகளைச் குழுவொன்றுக்கு என்றவாறு பகிர்ந்தளியுங்கள்.

  ***உதாரணம்*** : குழு 1 இற்கு வகை 1 இலைகள்
- ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு டிமைத்தாளை / பிரிஸ்டல் அட்டை வீதம் வழங்கித் தமது குழுவிற்குக் கிடைத்த இலைகளை அதில் ஒட்டுமாறு ஆலோசனை வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் இலைகளை ஒட்டிய டிமைத்தாளை/பிரிஸ்டல் அட்டையைக் காட்சிப் படுத்துங்கள்.
- மாணவர் குழுக்கள் இலைகளைச் சரியாக ஒட்டியுள்ளனரா என அவதானிக்குமாறு வகுப்பில் உள்ள மாணவர்களுக்குக் கூறுங்கள். ஒட்டப்பட்டுள்ள இலைகளை, பெயர்களைக் கொண்டு இனங்காண முடியுமா என மாணவர்களிடம் விசாரியுங்கள்.
- அதற்கேற்ப அவர்கள் அறிந்த இலைகளின் பெயர்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கு வதோடு பெயர் தெரியாத இலைகளைப் பற்றி மாணவர்களுக்கு அறிவூட்டுங்கள்.

செயற்பாடு 6

- வகுப்பில் உள்ள மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிற்கும் மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் மிகவும் பிரயோசனமான மரம்/ செடி/கொடி ஒன்றின் பெயர் எழுதப்பட்ட அட்டையொன்று வீதம் வழங்குங்கள்.

  ***உதாரணம்*** :
  - பலாமரம்
  - தென்னமரம்
  - வாழைமரம்
- ஒவ்வொரு குழுவிற்கும் கிடைத்த மரத்தில் / செடியில் / கொடியில் இருந்து மனிதர்களுக்கும் மிருகங்களுக்கும் உள்ள பிரயோசனங்களைப் பட்டியற்படுத்துவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவும் தம்மால் பட்டியற்படுத்தப்பட்ட விடயங்களை வகுப்பில் மற்ற மாணவர் களுக்குக் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாணவர் முன்வைத்த விடயங்களை மேலும் வளப்படுத்துங்கள்.
- இவ்விதமாக அட்டைகளில் பெயர் குறிக்கப்படாத வேறு தாவரங்கள் சிலவற்றில் உள்ள பிரயோசனத்தைப் பற்றியும் மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- இவ்வுரையாடலின் மூலம் நாம் உண்ணும், அருந்தும், மருந்தாகப் பயன்படுத்துபவை ஆகியன பெருமளவில் மரஞ்செடிகொடிகளில் இருந்ததாகும் என்பதனை விளங்கிக் கொள்வதற்கு இடமளியுங்கள்.
- மரஞ்செடிகொடிகளில் இருந்து பெறப்படும் கீழே காட்டப்பட்டுள்ள பயன்களைப் பற்றியும் மாணவருடன் உரையாடுங்கள்.

  ***உதாரணம்*** :
  - குளிர்ச்சியைத் தருதல்
  - சூரிய வெப்பத்தில் இருந்து பாதுகாத்தல்
  - வீட்டுத் தளபாடங்களைச் செய்வதற்குப் பலகைகளைத் தருதல்
  - வீடு கட்டுவதற்கான மூலப்பொருள்களாகப் பயன்படுத்துதல்
  - மிருகங்களின் வசிப்பிடமாகப் பயன்படுதல். (கூடு கட்டுதல்)

- இவ்விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தாவரங்களையும் மரங்களையும் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை மேலெழுப்பிக் காட்டி மரஞ் செடி கொடிகளைப் பாதுகாப்பதற்காகச் செய்யவேண்டியவற்றைப் பற்றி மாணவருடன் உரையாடுங்கள்.

செயற்பாடு 7

- மரங்கள் தொடர்பாகச் செய்யக்கூடிய பின்வருமாறான ஆக்கபூர்வமான விளையாட்டு ஒன்றில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- அதற்கு ஓடுவதற்கு இடவசதியுள்ள திறந்தவெளியில் உள்ள இடமொன்றுக்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.
- அவ்விடத்தில் விளையாட்டை மேற்கொள்வதற்குப் போதுமான அளவில் எல்லை ஒன்றைக் குறித்துக்கொள்ளுங்கள்.
- மாணவரிடையே ஒரு மாணவரை பிடிப்பவராகவும் மற்றையவர்களை ஓடுபவர்களாகவும் அறிமுகஞ்செய்யுங்கள்.
- ஆசிரியர் வழங்கும் சமிக்ஞைக்கு ஏற்ப மாணவர்கள் அவ்வெல்லையினுள் அங்குமிங்கும் ஓட வேண்டும்.
- அம்மாணவர்கள் ஓடிக்கொண்டிருக்கும் போது பிடிப்பவர் யாரேனும் ஒரு மாணவரின் மீது தட்டினால் அவர் மரமொன்றாகத் தரித்து நிற்க வேண்டும்.
- மரமொன்றாக நிற்கும் போது ஆக்கபூர்வமாக பல்வேறு இயல்புகளை வகைக்குறிக்குமாறு தமது உடலுறுப்புகளை அசைத்துக் கொண்டு ஒரே இடத்தில் இருக்க வேண்டும் என மாணவருக்கு விளங்கப்படுத்துங்கள்.
- அனைத்து மாணவரும் மரங்களாக நிற்கும் வரையில் விளையாட்டைத் தொடர்ந்து நடத்திச் செல்ல வேண்டும்.
- இவ்வாறாகப் பிடிப்பவராகச் செயற்படுவதற்கு மற்றைய மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமாறு செயற்பாட்டினை நடத்துங்கள்.
- மாணவர்களைச் சில குழுக்களாக்கியும் இச்செயற்பாட்டை நடத்த முடியும்.
- இவ்வாறான ஆக்கபூர்வமான விளையாட்டுக்களைத் தயாரித்து, அவற்றில் ஈடுபடச் செய்யுங்கள்.

செயற்பாடு 8

**படிமுறை 1:**

- தாவரங்கள், பூக்கள், இலைகளின் வடிவங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தி பல்வேறு ஆக்கங்களைச் செய்வதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதற்குப் பூக்களையும் பல்வேறு வடிவங்களிலான கரடுமுரடான இலைகளையும் சேகரித்துக் கொள்ளுங்கள்.
- இலைகளையும் பூக்களையும் பிரிஸ்டல் அட்டையின் மீது பல்வேறு வடிவங்களில் வைத்து ஒட்டுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒட்டிய இலைகளின் அல்லது பூக்களின் மீது இருந்து பின்புறத்தில் (பிரிஸ்டல் அட்டையின் ஒரு பக்கத்தில்) ப்ளேட் முறையில் நிறந் தீட்டி ஆக்கங்களைச் செய்வதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படிமுறை 2:

- கரடுமுரடான இலைகளை எடுத்து நரம்புகளின் பக்கத்தை தண்டின் பக்கத்திற்குத் திருப்பி அதன் மீது தாள் ஒன்றை வைத்து அழுத்துமாறு மாணவருக்குக் கூறுங்கள்.
- தாவரங்களை நுனியின் பக்கம் திருப்பி இலைகளுடனான எல்லையை மடித்து இலையின் வடிவத்தை மேலெழுப்புவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- இவ்விதமாகத் தயாரிக்கப்பட்ட இலைகளின் வடிவங்களையும் பல்வேறு நிறங்கள் பூசப்பட்ட இலைகளையும் பயன்படுத்திப் பல்வேறு உருக்களை அமைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள், பாராட்டுங்கள்.

செயற்பாடு 9

- மரஞ்செடிகொடிகளின் பல்வேறு இயல்புகளையும் அவற்றினால் எமக்குக் கிடைக்கும் பயன்களும் / கிடைப்பவையும் பற்றிய கட்டுரைகள், கவிதைகளை / பாட்டுக்களைப் பாடி வெளிப்பாடுசார் அசைவுகளைப் பயன்படுத்தி அவற்றை இரசனையுடன் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். இதற்காக அமைக்கப்பட்ட கவிதைகள், பாடல்கள் அல்லது கீதங்களைப் பயன்படுத்த முடியும்.

***உதாரணம்*** : **மரம் வளர்ப்போம்**

மரங்கள், செடிகள், கொடிவகைகள் - மற்றும்
மரகத வண்ணப் புல்லினங்கள்
உலகம் முழுவதும் இருந்தால்தான் - இங்கே
உயிரினம் நன்றாய் வாழ்ந்திடலாம்.

மழையை அழைப்பன தாவரங்கள்! - கோடி
மலரைச் சொரிவன தாவரங்கள்!
அழகைத் தருவன தாவரங்கள்! - மண்ணின்
அரிப்பைத் தடுப்பன தாவரங்கள்!

குளிரும் நிழலும் இளங்காற்றும் - ஒன்றாய்க்
கூட்டித் தருவது மரம் அன்றோ!
மரங்கள் அழிந்தால் நாடெல்லாம் - பாலை
வனங்கள் ஆகிப் போம் அன்றோ!

காடுகள் முழுக்கப் பறவையினம் - எண்ணிக்
கணக்கிட முடியா விலங்கினங்கள்!
காடுகள் அழிந்து போய்விட்டால் - இந்த
உயிரினம் எப்படி வாழுவது?

ஒருமரம் தறிக்க வேண்டுமெனில் - வேறு
ஒருமரம் உடனே நாட்டிவிடு!
புதுமரக் காடுகள் வளர்த்துவிடு - இந்தப்
பூமியில் உயிரினம் செழிக்கவிடு!

- வ. இராசையா

- இவ்வாறான கவிதைகளையும் பாடல்களையும் பாடி மரங்களின் அழகு, தாவரங்களின் பல்வேறு இயல்புகள் போன்றன பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- பல்வேறு தாவரங்கள் எமது சுற்றாடலில் இருத்தலினால் எமது சுற்றுப்புறம் அழகாக இருக்கின்றது எனவும் சௌந்தரியத்தைப் பேணிச் செல்வதற்காக எம்மால் மரஞ்செடிகொடிகள் பாதுகாக்கப்படல் வேண்டும் எனவும் மாணவருக்கு விளங்கப்படுத்துங்கள்.
- மரங்களினது உடல் பகுதிகளுக்கு இடையே உள்ள தொடர்புகள் வெளிப்படுமாறு உடலின் உறுப்புகளிடையே உள்ள தொடர்பைக் காட்டும் விதத்தில் பாத்திரமேற்று நடித்தல் மூலம் முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## 04. கருப்பொருள் : **எம்மைச் சூழ உள்ள பிராணிகள்**

இந்தக் கருப்பொருளில் மாணவர்களுக்குச் சூழலில் வாழும் பிராணிகள் பற்றிக் கற்க வாய்ப்புக் கிடைக்கும். குறிப்பாக வீட்டிலும் வீட்டுச் சூழலிலும் வளர்க்கப்படும் பிராணிகள், அவற்றின் சிறப்பியல்புகள், பயன்கள், பண்புகள், அப்பிராணிகளைப் பாதுகாப்பதன் அவசியம் ஆகியவை வலியுறுத்தப்பட்டுள்ளன. மேலும் அப்பிராணிகளால் மனிதருக்கு ஏற்படத்தக்க பாதிப்புகளைத் தவிர்ப்பதற்காக நாம் செய்யத்தக்கவை யாவை என்பது பற்றியும் கவனஞ் செலுத்தப்படுகிறது. மாணவர்களுக்கு நேரடி அனுபவங்களை வழங்குவதற்காகப் பாடசாலைத் தோட்டத்திலோ அயற் சூழலிலோ பிராணிகளை அவதானிப்பதற்கான வாய்ப்பை வழங்குவது முக்கியமானதாகும்.

**தேர்ச்சிகள் :**

- பிராணிகள் பற்றிய அடிப்படைத் தகவல்கள் விசேட திறன்கள் நடத்தைக் கோலம் ஆகியவற்றைத் துருவியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- பிராணிகளுக்கும் தாவரங்களுக்கும் மனிதர்களுக்கும் இடையேயான இடைத்தொடர்புகளை இனங்காண்பார்.
- சுற்றாடலின் நிலைத்திருத்தலுக்கு பிராணிகளின் முக்கியத்துவத்தை மதித்து அப்பிராணிகளைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- பிராணிகளால் ஏற்படும் தீங்குகளும் ஆபத்துக்களும் தொடர்பாக கவனத்துடன் செயற்படுவார்.
- பிராணிகளை அவதானித்து பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி பிராணிகளின் உருக்களை நிர்மாணம் செய்வார்.
- பிராணிகளின் நடத்தைகள் தொடர்பாக அவற்றின் அசைவுகளைத் துருவியாய்தல், போலச் செய்தல் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- பிராணிகளின் நடத்தைகளைப் போன்றே மனிதர்களுக்கும் பிராணிகளுக்கும் இடையிலுள்ள தொடர்பு வெளிப்படுமாறு செய்யப்படும் அசைவுகளை முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளையும் வீட்டுடன் தொடர்பாக வந்து செல்லும் பிராணி களையும் வேறுபடுத்தி இனங்காண்பார்.
- வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளினதும் வீட்டுடன் தொடர்பாக வந்து செல்லும் பிராணி களினாலும் ஏற்படும் பயன்களை விபரிப்பார்.
- வீடுசார் சுற்றாடலில் வாழும் பிராணிகளின் விசேட திறன்கள் பற்றி ஆய்ந்து அறிக்கைப் படுத்துவார்.
- பிராணிகளின் நடத்தைகள் பற்றிக் கூறப்படும் கவிதைகளையும் பாடல்களையும் பாடி லயத்துடன் ஆடுவார்.
- வீட்டுச் சூழலில் வாழும் பிராணிகளால் ஏற்படும் தீங்குகளை இனங்கண்டு கூறுவார்.
- வீட்டுச் சூழலில் வாழும் பிராணிகளால் ஏற்படும் தீங்குகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளக்கூடிய விதம் பற்றிக் கூறுவார்.
- பிராணிகள் பற்றிய உணர்வுடன் இருப்பதனால் அவற்றைப் பாதுகாப்பது தொடர்பாகப் பங்களிப்புச் செய்வார்.
- ஓடுதல், துரத்துதல், ... என்பன விருத்தியடைவதற்குப் பிராணிகளின் நடத்தைகளில் இருந்து தயாரிக்கப்பட்ட ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- பிராணிகளின் பல்வேறு இயற்பண்புகளைப் பல்வேறு ஊடகங்களைக் கொண்டு செய்து காட்டுவார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் :**

**செயற்பாடு - I**

- வீட்டில் வளர்க்கும் பிராணிகளையும் வீட்டுச் சூழலில் நடமாடும் வேறு பிராணிகளையும் தெளிவாகக் காணக்கூடிய படங்களைச் சேகரித்துக் கொள்ளுங்கள். அவற்றை ஒவ்வொரு மாணவருக்கும் ஒன்று வீதம் கிடைக்கக் கூடியவாறு வழங்க வேண்டும்.

  ***உதாரணம்*** :
  - வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகள்

    நாய், பூனை. ஆடு, பசு, கோழி, செம்மறியாடு, எருமை
  - வீட்டுச் சூழலில் காணப்படும் வேறு பிராணிகள்

    காகம், கிளி, மைனா, அணில், ஓணான், சிலந்தி, பல்லி, உடும்பு, கபரகொயன், காட்டுக் கோழி, நத்தை, மயிர்க்கொட்டி, குரங்கு போன்றன.

- சேகரிக்கப்பட்ட எல்லா உருக்களையும் வெற்றுப் பெட்டி ஒன்றினுள் இடுங்கள். பெட்டியை ஒவ்வொரு மாணவருக்கும் கை மாற்றி ஒவ்வொரு மாணவரும் ஒரு உருவை எடுக்குமாறு கூறுங்கள்.
- எழுதுவதற்குப் பயன்படுத்தும் பலகையை இரண்டு பகுதிகளாகப் பிரித்து வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகள் வீட்டுச் சூழலில் நடமாடும் பிராணிகள் எனப் பெயரிடுங்கள்.
- தனக்குக் கிடைத்த உருவைப் பொருத்தமான நிரலில் ஒட்டுவதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் சந்தர்ப்பம் அளியுங்கள்.

| வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகள் | வீட்டுச் சூழலில் நடமாடும் பிராணிகள் |
|---|---|
| நாய் (படம்) | கபரகொயன் (படம்) |

- மாணவர் அனைவரும் தரப்பட்ட உருக்களை ஒட்டியதன் பின்னர் அவ்விரு நிரைகளிலும் ஒட்டப்பட்டுள்ள உருக்களை தொடரொழுங்கில் வாசிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அப்படங்கள் சரியான நிரல்களில் ஒட்டப்பட்டுள்ளனவா என அவதானிப்பதற்கும் மாணவரை வழிப்படுத்துங்கள்.
- சரியான நிரல்களில் ஒட்டப்படாத படங்களைக் கழற்றி உரிய நிரலில் ஒட்டுவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- இப்பட அட்டவணையைக் கொண்டு எப்போதும் காணும் பிராணிகளை மேற்குறித்தவாறு இரு தொகுதிகளின் கீழ் வேறுபடுத்திக் காட்டலாம் என்பதை எடுத்துக் காட்டுங்கள்.
- அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பிராணிகளின் உருக்களுக்கு மேலதிகமாக மாணவர் களுக்குத் தெரிந்த வேறு பிரானிகளின் பெயர்களையும் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்கி அப்பிராணிகளின் பெயர்களையும் உரிய தொகுதியின் கீழ் குறிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- அதனை மாணவர்கள் நன்கு காணக்கூடியவாறு பொருத்தமான இடமொன்றில் தொங்க விடுங்கள்.

செயற்பாடு 2

- வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளினதும் வீட்டுச் சூழலில் நடமாடும் பிராணிகளினதும் பெயர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரியுங்கள். (இதில் அவ்வப் பிரதேசத்தில் கூடுதலாக நடமாடும் பிராணிகள் பற்றிய மாதிரிகளை முன் வையுங்கள்.)
- அதில் காட்டப்படும் ஒவ்வொரு பிராணியைப் பற்றி மாணவரின் கவனத்தை வழிப்படுத்தி அப்பிராணிகளினால் எமக்கு கிடைக்கும் பயன்களைப்பற்றி மாணவரிடம் விசாரியுங்கள்.
- அப்பிராணிகளின் பெயர்களிடையே ஒவ்வொரு பிராணியினதம் பெயர் வீதம் ஒவ்வொரு மாணவனுக்கும் தெரிவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தாம் தெரிவு செய்த பிராணியைப் பற்றிப் பின்வரும் விடயங்களின் கீழ் அவதானிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள். இதற்கு மாணவர்களுக்கு சில நாட்கள் வழங்குங்கள்.
  - ⁕ உடல் இயல்புகள்
  - ⁕ பயணம் செய்யும் பாங்கு
  - ⁕ அப்பிராணிகளின் நடத்தைகள்
  - ⁕ அப்பிராணிகளால் மனிதனுக்குள்ள பயன்

  (துண்டுகளை வழங்குவதற்கு முன்னர் ஒரு பிராணியைப் பற்றிச் சில நாட்கள் அவதானிக்கச் செய்யுங்கள்.)
- மாணவரினால் அவதானிக்கப்பட்ட பிராணிகளின் உடல் இயல்புகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவர் வீதம் முன்னால் அழைத்துத் தான் தெரிவுசெய்த பிராணிகளின் நடத்தையை போலச் செய்துகாட்டுமாறு கூறுங்கள். மற்றைய மாணவர்களுக்கு அவர் போலச் செய்துகாட்டியது எந்த பிராணியென்று இனங்கண்டு கூறுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- போலச் செய்தலை முன்வைத்த மாணவர் அப்பிராணியினால் எமக்கு கிடைக்கும் ஒரு பயனை அல்லது சிலவற்றைக் கூறவேண்டும்.
- மாணவர் வழங்கும் விடைகளை ஆசிரியர் கரும்பலகையில் அட்டவணை ஒன்றாக கட்டியெழுப்ப வேண்டும்.

  உதாரணம்:

| | | |
|---|---|---|
| தேனீ | - | மருந்தை வழங்குதல் (தேன்) |
| குருவிகள்<br>வண்ணத்துப்பூச்சி<br>மீன் | } | சுற்றாடலை அழகுபடுத்தல் |
| கபரகொய்யன் | - | தீங்கான பிராணிகளை அழித்தல் |
| வௌவால் | - | வித்துக்களை பரவச் செய்தல் |
| பருந்து<br>ஈசல் (மெருன்)<br>சேவல் | } | சூழல் மாற்றத்தை அறிவிக்கும் |

| | | |
|---|---|---|
| ஆடு<br>கோழி | } | உணவு வழங்குதல் |
| எருமை<br>காளை | } | வயல் நடவடிக்கைகளுக்கு உதவி செய்தல் |
| நாய் | - | விசேட திறனைப் பயன்படுத்தி மனிதனுக்கு உதவுதல் (குற்றவாளிகளை பிடித்தல் போதைப் பொருள்களைக் கண்டுபிடித்தல்) |
| மண்புழு<br>கறையான் | } | குப்பைகளை உக்கச் செய்தல் |

- ஒவ்வொரு மாணவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமாறு செயற்பாட்டினை நடத்துங்கள்.
- மேலே கலந்துரையாடப்பட்ட விடயங்களையும் மாணவர்களின் செயற்பாடுகளில் இருந்து மேலெழுந்த விடயங்களையும் அடிப்படையாகக் கொண்டு வீட்டிலும் சூழலிலும் காணப்படும் ஒவ்வொரு பிராணியினதும் நடத்தை மாற்றமடைகின்றது எனவும் பிராணிகளுள் அநேகமானவை எமக்குப் பயன் தருபவை எனவும் மேலெழுப்பிக் காட்டுங்கள்.

செயற்பாடு **3**

- எமது அண்மைச் சூழலில் வாழும் பிராணிகளில் உடலியல்புகளும் ஆற்றல்களும் ஒன்றுக் கொன்று வேறுபடும் என்பதைப் படங்கள்/ காணொளி மூலம் மேலெழுப்பிக் காட்டுங்கள்.
- அவ்வாறான படங்களிலும் காணொளிகளிலும் இருந்து கண்ட பிராணிகளையும் வேறு பிராணிகளையும் பற்றி மாணவரின் அனுபவங்களை வகுப்பிற்கு முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அத்தகவல்களைக் கொண்டு பிராணிகளையும் அவற்றின் ஆற்றல்களையும் வரிசைப் படுத்துங்கள்.

***உதாரணம்*** :

| | **பிராணிகள்** | | **ஆற்றல்கள்** |
|---|---|---|---|
| 1. | கிளி/ குருவி | | சிலவற்றை வெட்டுவதற்கான திறன் |
| 2. | மரங்கொத்தி | | மரமொன்றைத் துளையிடும் திறன் |
| 3. | தச்சன் குருவி | | ஆக்கபூர்வமாக கூடு கட்டும் திறன் |
| 4. | சிட்டுக்குருவி<br>தேன்குருவி | } | நுட்பமாகக் கூடு கட்டுதல் |
| 5. | குரங்கு | | மரத்துக்கு மரம் தாவுதல் |
| 6. | தவளை<br>பாம்புகள்<br>பல்லி | } | நீண்ட நாக்கைப் பயன்படுத்திப் பிடித்தல் |
| 7. | பச்சோந்தி | | பாதுகாப்பிற்காக நிறம் மாறும் திறன் |
| 8. | ஆமை<br>நத்தை | } | பாதுகாப்பிற்காக ஓட்டினுள் ஒளிந்து கொள்ளும் திறன் |

- இவ்வாறான விசேட திறன்களைக் காட்டுவதற்காக இப்பிராணிகளின் உடல் உறுப்புக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும் வலியுறுத்துங்கள்.

- இவ் ஆற்றல்களை அன்றாட வாழ்ந்திருத்தலுக்காகப் பயன்படுத்தும் விதத்தைப் பற்றியும் மாணவர்கள் அறிந்து கொள்ளச் செய்யுங்கள்
- பிராணிகளின் நடத்தைகள் விசேட திறன் பற்றிக் கூறும் கவிதைகளையும் பாடல்களையும் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- கவிதைகளையும் பாடல்களையும் தாளத்துடன் சில தடவைகள் பாடுங்கள்.
- பாட்டிற்கு ஏற்ப அசைவுகளை முன்வைப்பதற்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடலைப் பாடி முடித்ததன் பின் அப்பிராணிகளின் நடத்தைகளில் இருந்து எமது வாழ்க்கைக்குச் சேர்த்துக்கொள்ளக்கூடிய முன்மாதிரிகள் இருப்பின் அவற்றைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

***உதாரணம்*** :

சிலந்தி வலையைப் பாருங்கள்
சின்னஞ் சிறிய பூச்சியே
வளைந்து வளைந்து புதுமையாய்
வட்ட வலையைப் பின்னுமே.

தேன் கூட்டைப் பாருங்கள்
திறமையோடு ஒற்றுமை
பேணி வீட்டைக் கட்டுமே
பெரிய முயற்சி வேண்டுமே.

எறும்புப் புற்றைப் பாருங்கள்
எள்ளைப் போன்ற எறும்புகள்
அருமையான முயற்சியால்
அழகுப் புற்றைச் செய்தன.

- பெருஞ்சித்திரனார்

செயற்பாடு 4

- பிராணிகளினால் மனிதருக்கு ஏற்படும் தீங்குகள் பற்றிய செய்தித்தாள் அறிக்கைகள் படங்கள் சுவரொட்டிகள் என்பவற்றைச் சேகரித்து வையுங்கள்.
- அவற்றைக் கொண்டு தமது அண்மைச் சூழலில் வசிக்கும் பிராணிகள் போன்றே வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளாலும் எமக்குத் தீங்கு நடக்கலாம் என்பதை எடுத்துக் காட்டுங்கள்.
- இவ்விதமாக எமக்குத் தீங்கு விளைவிக்கக் கூடிய பிராணிகளின் பெயர்களை விசாரித்துக் கரும்பலகையில் பட்டியல் ஒன்றைக் கட்டியெழுப்புங்கள்.
- இதில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பிராணிகளின் பெயர்களையும் மாணவரிடம் இருந்து வெளிக் கொணருங்கள்.

*உதாரணம்* :

| தீங்கு | பெயர் | |
|---|---|---|
| 1. நோய் பரவுதல் | ♦ நுளம்புகள் | ♦ எலிகள் |
| | ♦ இலையான்கள் | ♦ மூட்டைப்பூச்சி |
| | ♦ உண்ணி (கினிதுல்) | ♦ நாய் |
| | ♦ பூனை | ♦ அணில் |
| | ♦ குரங்கு | |
| 2. உணவு அசுத்தமடைதல் | ♦ எலிகள் | ♦ இலையான்கள் |
| | ♦ கரப்பான்பூச்சி | ♦ அணில் |

- இவ்வாறான பிராணிகளினால் தீங்கு நிகழும் சந்தர்ப்பங்கள் பற்றிய தமது அனுபவங்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அத்தீங்குகளைத் தவிர்ப்பதற்குச் செய்யக் கூடியவை பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வதற்காக பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- இதற்குப் பிராணிகளின் பெயர்கள் எழுதப்பட்ட சில அட்டைத் தொகுதிகளையும் அப்பிராணி களால் ஏற்படும் தீங்குகள் எழுதப்பட்ட அட்டைத் தொகுதிகளையும் அத்தீங்குகளை தவிர்க்கும் செயற்பாடுகள் எழுதப்பட்ட அட்டைத் தொகுதிகளையும் மாணவர்களுக்கு வழங்குங்கள்.

  *உதாரணம்* :

| | | |
|---|---|---|
| நுளம்பு | நோய் பரவுதல் | பரவக் கூடிய இடங்களை அழிப்போம் |
| இலையான் | உணவு அசுத்தமடைதல் | உணவுப் பொருள்களை மூடி வைத்தல் |

- ஒவ்வொரு குழுவிற்கும் பிராணிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்ட அட்டைத் தொகுதி ஒன்றையும் அவற்றினால் ஏற்படும் தீங்குகள் எழுதப்பட்ட அட்டைத் தொகுதி ஒன்றையும் அத்தீங்குகளை தவிர்க்கும் செயற்பாடுகள் எழுதப்பட்ட அட்டைத் தொகுதி ஒன்றையும் வழங்குங்கள்.
- குழுவிலுள்ள எல்லா மாணவரும் சேர்ந்து அவ் அட்டைகளைப் பயன்படுத்தித் தீங்கு விளைக்கும் பிராணிகளையும் ஏற்படும் தீங்கையும் தீங்கினைத் தவிர்த்துக் கொள்ளக்கூடிய விதத்துடன் பொருந்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களினால் பொருத்தப்பட்ட வாக்கியத்தை வகுப்பில் முன்வைப்பதற்கு ஒவ்வொரு குழுவிற்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஏதேனும் பிராணி ஒன்றினால் தீங்கு ஏற்படுவதற்கு முன்னர் அதனைத் தவிர்த்துக்கொள்வதற்கு நாம் நடவடிக்கை எடுப்பது முக்கியம் எனவும் செயற்பாட்டின் இறுதியில் மாணவருக்கு வலியுறுத்துங்கள்.

செயற்பாடு **5**

- மனிதர்களின் பல்வேறு செயற்பாடுகளின் காரணமாக பிராணிகளிற்கு தீங்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் போன்றே பிராணிகளைப் பாதுகாப்பதற்கு மனிதர்கள் தலையிடும்

சந்தர்ப்பங்களைக் காட்டும் கதைகள், காணொளிகள், புகைப்படங்கள், படங்கள், செய்தித் தாள் அறிக்கைகள் ஆகியவற்றைச் சேகரித்துக்கொள்ளுங்கள்.

- அவற்றைப் பயன்படுத்திப் பின்வரும் விதமான அட்டவணை ஒன்றை மாணவரின் அனுபவங்களையும் அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்புங்கள்.

***உதாரணம்*** :

| மனிதர்களினால் பிராணிகளுக்கு ஏற்படும் தீங்குகள் | மனிதர்களினால் பிராணிகள் பாதுகாக்கப்படும் விதம் |
|---|---|
| • பிராணிகளைத் துன்புறுத்தல்<br>• பிராணிகளில் நிலைத்திருத்தலுக்குத் தீங்கான பொருள்களைக் சுற்றாடலில் வெளியேற்றுதல். (உ-ம்: பொலித்தீன்)<br>• பிராணிகளை அடைத்து வைத்தல்<br>• வாழ்விடங்களை அழித்தல் | • பாதுகாப்பு வழங்குதல்<br>• சுத்தம் செய்தல்<br>• உணவு, பானங்களை வழங்குதல்<br>• தேவையான மருந்துகள் தடுப்பூசிகள் வழங்குதல் போன்ற விடயங்கள் |

- இவ்வட்டவணையில் தீங்குகள் பற்றிய பகுதிகளுக்கு விசேட அவதானத்தை வழிப்படுத்தி தம்மாலும் பிராணிகளுக்கு அவ்வாறானவை நிகழ்ந்துள்ளனவா எனச் சிந்தித்துப்பார்க்க வழிப்படுத்துங்கள்.
- மாணவர் தமது அனுபவங்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவ்வாறான நடத்தைகளின் ஊடாகப் பிராணிகளுக்கு ஏற்படும் தீங்குகளைப் பற்றி உணர்வு பூர்வமான அனுபவங்களை முன்வைத்துக் கதைகளினூடாக இவ்வாறான நடத்தைகளை தவிர்த்துக் கொள்ளச் செய்யுங்கள். இதன் மூலம் பிராணிகள் என்பன சுற்றாடலின் பகுதி ஒன்றென விளங்கப்படுத்துங்கள்.
- பிராணிகளைக் காப்பதற்காக நாம் செய்யக்கூடியவை பற்றி முன்னர் தயாரித்த அட்டவணைக்கு அவதானத்தைச் செலுத்துவதற்காக உரையாடுங்கள்.
- பிராணிகள் தொடர்பாகக் காரியமாற்றும்போது வளர்ந்தோரின் உதவியைப் பெற்றுக் கொள்ளல் மிகவும் பொருத்தமாகும் என்பதை மேலெழுப்பிக் காட்டுங்கள்.
- அவ்வாறே வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளைப் போன்றே மற்றைய பிராணிகளையும் பாதுகாத்தல் நற்செயல் ஒன்று என்பதோடு எமது கடமையுமாகும் என்பதை எடுத்துக் காட்டுங்கள்.
- பிராணிகளைக் காப்போம் எனும் கருத்தில் மாணவருள் ஏற்படும் உணர்வுகளைச் சித்திரமாக்கிக் காட்டுவதற்குச் சகல மாணவருக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் ஆக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள். பாராட்டுங்கள்.


**செயற்பாடு 6**

- பிராணிகளின் நடத்தையைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கீழே காட்டப்பட்டுள்ள விதத்திலான ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் மாணவர் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- வகுப்பிலுள்ள மாணவர்களிடையே இருவரைப் பூனைகளாகவும் இன்னும் சிலரை எலிகளாகவும் பெயர் குறித்து நடிக்குமாறு வழிப்படுத்துங்கள். எஞ்சிய மாணவர்களை கைகளைக் கோர்த்துக்கொண்டு வட்டமாக நிற்க ஒழுங்குசெய்யுங்கள்.
- எலிகள் வட்டத்தினுள்ளும் பூனைகள் வட்டத்திற்கு வெளியேயும் இருக்குமாறு ஒழுங்கு செய்யுங்கள்.
- ஆசிரியரினால் வழங்கப்படும் சமிக்ஞைக்கேற்ப வட்டத்தினுள் உள்ள பூனைகள் வட்டமாக நிற்கும் மாணவரின் சங்கிலியை உடைத்துக்கொண்டு வட்டத்தினுள் புகுந்து செல்வதற்கு முயற்சிக்க வேண்டும். வட்டத்திலுள்ள மாணவர்கள் பூனைகள் வட்டததினுள் செல்ல இடமளிக்கலாகாது.
- எவ்வாறாயினும் வட்டத்தினுள் பூனைகள் செல்ல வேண்டியதோடு வடடத்தினுள் உள்ள எலிகளைப் பிடிக்க வேண்டும்.
- பிடிபடும் எலிகள் வட்டத்திலிருந்து வெளியேறி, பூனைகளாக மாற வேண்டும். அவர்களும் முன்பு போலவே பூனைகள் வட்டத்தினுள் புகுந்த அதே விதத்தில் வட்டத்தினுள் புகுந்து எலிகளைப் பிடிக்க வேண்டும்.
- வட்டத்தில் கைகளைப் பிடித்துக் கொண்டிருக்கும் மாணவருக்கும் பூனைகளாகவும் எலிகளாகவும் செயற்பாட்டில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இச்செயற்பாட்டில் மாணவர்களின் ஓடுதல், துரத்துதல், அசையும் திறன் ஆகியன விருத்தியடையும் விதத்தில் மிகவும் நன்றாக ஒழுங்கு செய்து இதனை ஆசிரியர் நடத்த வேண்டும்.

செயற்பாடு 7

- மாணவரைக் குழுக்களாக்கிக் கொள்ளுங்கள்.
- பின்வரும் பொருட்களைச் சேகரித்துக் குழுக்களுக்கு வழங்குங்கள்.
  சிறிய அளவிலான அட்டைப் பெட்டியொன்று (5" x 5" x 5"), நூலிழை, காந்தம், தாள் கொளுவி, பல்வேறு நிறத்தாள்கள்
- பல்வேறு நிறக் காகிதத் தாள்களினால் சிறிய அளவிலான வண்ணத்துப்பூச்சிகள், மீன்கள், குருவிகள், பூ வகைகள் போன்றவற்றின் மாதிரிகளை வெட்டியெடுக்க வழிப்படுத்துங்கள். அப்பிராணிகளின் மாதிரிகளில் காகிதக் கொழுவியைப் பொருத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- மாதிரிகளை மாணவர்கள் நன்கு காணக்கூடியதாக இருப்பதற்காக அட்டைப் பெட்டியின் இரு பக்கங்களை (எதிர்ப் பக்கங்கள்) வெட்டி நீக்குங்கள்.
- அட்டைப் பெட்டியின் அடியில் இரு துளைகளை (பொருத்தமான தூரத்தில் துளையிட) வழிப்படுத்துங்கள்.
- இரு நூலிழைகளை அத்துளைகளினூடாகச் செலுத்தி காகிதக் கொளுவிகளில் கட்டி அக்காகிதக் கொளுவிகளுக்கு பிராணி மாதிரிகளைப் பொருத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- அட்டைப் பெட்டிக்கு மேலேயும் இரு துளைகளைத் துளையிடுங்கள். அத்துளைகளின் ஊடாக இரு நூலிழைகளைச் செலுத்தி அவற்றில் பெட்டியின் உள்ளேயுள்ள முனைகளில் இரு காந்தத் துண்டுகளைக் கட்டுங்கள்.
- இடதையும் வலதையும் பயன்படுத்தி மாதிரிகளிடம் காந்தத் துண்டுகளை அருகே செலுத்தி அசைப்பதனால் மகிழ்ச்சி அடைவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.




- மாதிரிகளை மாற்றுவதன் மூலம் இச்செயற்பாட்டில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கடதாசிக் கொளுவிகளுக்குப் பிரதியீடாக வேறு புத்தளிப்புப் பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் கையாண்டுபார்க்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு **8**

- சுற்றுப்புற சூழலில் இருந்து பெறக்கூடிய/ பாவனை நீங்கிய பொருள்களைக் கொண்டு பிராணி மாதிரிகளை அமைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.



- இதற்காக பல்வேறு நிறங்களையும் தளவடிவங்களையும் பயன்படுத்தி கையாண்டு பார்ப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- மாணவரின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள். பாராட்டுங்கள்.

## 05. கருப்பொருள்: **நாம் பயன்படுத்துபவை**

அன்றாட வாழ்வில் எமக்குப் பல்வேறு பாவனைப் பொருள்கள், உபகரணங்களைப் பயன்படுத்த வேண்டிய தேவை ஏற்படுவதுண்டு. அவை தனிப்பட்ட வகையிலும் பொதுவாகவும் பயன்படுத்தப் படுவதுண்டு. அவ்வாறு பயன்படுத்தும்போது அவற்றின் சுத்தம், நேர்த்தி, சரியாகக் கையாளல், பராமரித்தல் ஆகியன குறித்துக் கவனஞ்செலுத்துதல் முக்கியமானது. அவ்வாறு கையாள்வது தொடர்பான அடிப்படையான பழக்கத்தை ஏற்படுத்த வகைசெய்வதே இக்கருப்பொருளின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். அதற்காகச் செயன்முறைத் தொழிற்பாடுகளில் ஈடுபடுத்தி உரிய அனுபவங்களைப் பெற்றுக்கொடுப்பது அவசியமாகும்.

**தேர்ச்சிகள்:**

- யாதேனும் வேலைக்காகச் சிறப்பாக உபகரணங்களையும் பாவனைப் பொருள்களையும் இனங்கண்டு அவற்றை முறைமையாகவும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவார்.
- உபகரணங்களின் தொழிற்பாடு தொடர்பான விளக்கத்துடன் பயன்மிக்க வகையில் அவற்றைப் பயன்படுத்துவார்.
- வளங்கள் மூலம் உச்சப்பயன் கிடைக்கும் வகையிலும் சிக்கனமாகவும் பயன்படுத்துவார்.
- அன்றாடம் பயன்படுத்துபவற்றை மேலும் கவர்ச்சிகரமானதாக அமைத்துக்கொள்வதற்கு வெவ்வேறு ஆக்கங்கள் செய்வார்.
- வெவ்வேறு உபகரணங்களைக் கையாண்டு சக்தி வளர்ச்சிக்கு உதவும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- தாம் பயன்படுத்துபவற்றைத் துணையாகக்கொண்டு வெவ்வேறு கிராமிய / நாட்டார் நடனங்களில் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள்:**

- வகுப்பறையில் பயன்படுத்தும் உபகரணங்களையும் பாவனைப் பொருள்களையும் அவற்றினால் செய்யப்படும் வேலைக்கு அமைய இனங்கண்டு கொள்வார்.
- பாடசாலையிலும் வீட்டிலும் பயன்படுத்தும் உபகரணங்களை வெவ்வேறு காரணிகளுக்கேற்ப வகைப்படுத்தி இனங்காண்பார்.
- உபகரணங்களையும் பாவனைப் பொருள்களையும் பயன்படுத்தும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய அம்சங்கள் குறித்து அறிவூட்டம் பெற்றுச் செயற்படுவார்.
- தாம் நிதமும் பயன்படுத்தும் உபகரணங்களைப் பரிச்சயத்துடனும் செயலூக்கத்துடனும் பயன்படுத்தும் திறனை வெளிக்காட்டுவார்.
- நாம் பயன்படுத்தும் பொருள்களின் பயன்பாட்டைப் பல்வேறு ஊடகங்களினால் வெளிப்பாட்டுச் சித்திரங்களாக முன்வைப்பார்.

- நாம் பயன்படுத்தும் பொருள்கள் தொடர்பான கிராமிய / நாட்டார் நடனங்களில் ஈடுபடுவார்.
- பல்வேறு திறந்தவெளி விளையாட்டுக்களில் ஈடுபட்டு அன்றாடக் காரியங்களை மிகவும் வினைத்திறனுடன் செய்வதற்குப் பழகிக்கொள்வார்.
- கம்பளித் தையலில் ஆரம்பப் பயிற்சி பெறுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1**

- வகுப்பறையில் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், பாவனைப் பொருள்கள் பற்றியும் அவற்றின் பயன்கள் பற்றியும் மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

  ***உதாரணம்*** :
  - ஏதேனுமொன்றைத் துளையிடுவதற்கு
  - சில பொருள்களை ஒன்றாகச் சேர்ப்பதற்கு
- கலந்துரையாடப்பட்ட உபகரணங்கள், பாவனைப் பொருள்களை வகுப்பில் ஓர் இடத்தில் சேகரித்து வையுங்கள்.
- முதலில் அவற்றைப் பயன்படுத்தும் விதத்தின்படி வகுப்பறையில் பயன்படுத்துபவை, வகுப்பறைக்கு வெளியே பயன்படுத்துபவை என வகைப்படுத்துங்கள்.
- பின்னர் அப்பாவனைப் பொருள்கள் மற்றும் உபகரணங்களை ஆக்குவதற்குப் பயன்படுத்தியுள்ளவற்றுக்கேற்ப அவற்றை (பிளாத்திக்கு, உலோகம், மரம், காகிதம், கழித்தொதுக்கிய பொருள்கள் என்றவாறாக) வேறுபடுத்துங்கள்.
- மேலே கலந்துரையாடிய விடயங்களின்படி பின்வரும் செயற்பாட்டிற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- மாணவர் தொகைக்கேற்ப அவர்களைக் குழுக்களாகப் (4 குழுக்கள்) பிரியுங்கள்.
- கரும்பலகையை நான்கு பகுதிகளாகப் பிரித்து நான்கு குழுக்களது புள்ளிகளையும் குறிப்பதற்கு ஒழுங்குசெய்யுங்கள்.
- ஊடுகாட்டும் தன்மையற்ற (அட்டை) பெட்டியொன்றினை எடுத்து வகுப்பறையில் பயன்படுத்திய சகல பொருள்கள் மற்றும் பாவனைப் பொருள்களின் பெயர்கள் எழுதிய காகிதச் சீட்டுக்களை அதனுள் இடுங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் முதலில் ஒரு காகிதச் சீட்டு வீதம் எடுக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அச்சீட்டில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உபகரணத்தின் / பாவனைப் பொருளின் படத்தைக் குழுவில் அனைவரும் கூட்டாக வரைந்து அல்லது ஒட்டுச் சித்திரமாக (கொலாஜ்) ஆக்கி, வகுப்பில் காட்சிப்படுத்தி அதன் பயன்களையும் (குறைந்தது 2) உபகரணத்தின் பாதுகாப்புக்காகச் செய்யவேண்டியவற்றையும் கூறுதல் வேண்டும்.
- குழு முன்வைப்பின்படி பொருத்தமானவாறும் நியாயமானவாறும் மாணவர்களுக்குப் / குழுக்களுக்குப் புள்ளி வழங்குவது குறித்து ஆசிரியர் கவனஞ்செலுத்துதல் வேண்டும்.
- முதலாவது சந்தர்ப்பம் / சுற்று முடிவடைந்ததன் பின்னர் இரண்டாவது தடவையாக செயற்பாட்டில் ஈடுபட மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- இரண்டாவது சந்தர்ப்பத்தின்போதும் முன்னர் போன்றே செயற்பட இடமளியுங்கள்.
- மூன்றாவது சந்தர்ப்பத்தின் பின்னர் பெற்ற புள்ளிகளைக் கூட்டி, குழுக்களைப் பாராட்டுங்கள்.
- பின்வரும் நியமங்களின்படி 20 புள்ளிகள் வீதம் வழங்குங்கள்.
  - ❋ வரைந்த சித்திரத்தின் நேர்த்தி 10 புள்ளிகள்
  - ❋ உபகரணத்தின் / பாவனைப் பொருளின்

பயன்களைச் சரியாகக் குறிப்பிடுதல் 05 புள்ளிகள்

* பயன்படுத்திய பின்னர் அதன் பாதுகாப்புக்காகச் செய்யவேண்டியவற்றைக் குறிப்பிடுதல் 05 புள்ளிகள்

- மாணவரது செயலூக்கமான பங்களிப்பைப் பாராட்டுங்கள்.
- ஒவ்வோர் உபகரணத்தையும் பாவனைப் பொருளையும் சுத்தமாகவும் ஒழுங்காகவும் உரிய இடத்தில் வைப்பதால் மீளப் பயன்படுத்துவது இலகுவாதல், அவற்றுக்குப் பாதிப்பு ஏற்படுவது தவிர்க்கப்படுதல், நேரம் எஞ்சியிருத்தல் ஆகிய நன்மைகள் கிடைக்கின்றமையை வலியுறுத்துங்கள்.

செயற்பாடு 2

- மேலே செயற்பாடு 1 இல் இனங்கண்ட பாவனைப் பொருள்களுள் சிலவற்றைத் தெரிவுசெய்து அவற்றைப் பயன்படுத்தும்போது கவனஞ்செலுத்த வேண்டிய பின்வரும் விடயங்கள் குறித்து மாணவர்களது கவனத்தை வழிப்படுத்துங்கள்.

**விளக்குமாறு**
- விளக்குமாற்றின் இரண்டு பக்கங்களும் பயன்படும் வகையில் அதன் பக்கத்தை மாற்றி மாற்றிப் பயன்படுத்துதல்
- பயன்படுத்திய பின்னர் ஈர்க்குகள் மேல்நோக்கி இருக்குமாறு வைத்தல்
- பல்வேறு தேவைகளுக்கென விளக்குமாறிலிருந்து ஈர்க்குகளை முறிக்காதிருத்தல்

**தும்புத்தடி**
- விளக்குமாற்றில் செய்ததுபோன்றே தும்புத்தடியின் இரண்டு பக்கங்களும் பயன்படும் வகையில் பயன்படுத்துதல்
- பயன்படுத்திய பின்னர் தும்புத்தடியில் சிக்கியுள்ள நூல், மயிர் போன்றவற்றை நீக்குதல்
- பயன்படுத்திய (தரையைக் கூட்டிய) பின்னர் தும்புத்தடியைத் தொங்கவிடல்

**கால் துடைப்பம்**
- கால் துடைப்பத்தில் சிக்கியுள்ள மணலை உதறி நீக்குதல்
- மயிர், நூல் போன்றவை சிக்கியிருந்தால் அவற்றை நீக்குதல்
- பாதணிகளில் / பாதத்தில் ஒட்டியுள்ள மணல், தூசு போன்றவற்றைக் கால் துடைப்பத்தில் நன்கு துடைத்த பின்னர் வகுப்பில் / வீட்டினுள் நுழைதல்
- கால் துடைப்பத்தில் மணல், தூசு போன்றவை தவிர வேறு அழுக்குகள் ஒட்டியுள்ளதாயின் அவற்றைக் கழுவிச் சுத்திகரித்தல்

**கத்தரிக்கோல் / கத்தி**
- பற்றிப் பிடிக்கும் முறை (உதாரணம் : கத்தரிக்கோல்)
- இரண்டு வளையங்களிலும் விரல்களைப் புகுத்திப் பிடித்தல்
- கொடுக்கும் முறை (கூர்முனைப் பகுதியை தம்மை நோக்கி வைத்து மழுங்கிய முனைப் பகுதியைப் பெறுபவருக்கு நீட்டுதல்)

**கதிரை / நாற்காலி**

- கதிரையை இழுப்பதைத் தவிர்த்தல்
- நான்கு கால்களும் தரையுடன் தொடுகையுறும் வகையில் அமர்தல்
- கதிரையை ஆட்டி அசைப்பதைத் தவிர்த்தல்
- அமர முன்னர் கதிரையைத் துடைத்துச் சுத்திகரித்து அமருதல்
- பாடசாலை முடிந்த பின்னர் கதிரையை வாங்கு / மேசை மீது பாதுகாப்பாக வைத்தல்

**கை துடைக்கும் துண்டு / கைக்குட்டை**

- தும்மும்போதும் இருமும்போதும் மூக்கையும் வாயையும் மறைத்தல்
- தேவையான வேளைகளில் வாய் துடைப்பதற்கும் கை துடைப்பதற்கும் பயன்படுத்துதல்
- தினசரி கழுவிச் சுத்திகரித்துப் பயன்படுத்துதல்

- இவ்வாறாகப் பாவனைப் பொருள்களையும் உபகரணங்களையும் பயன்படுத்தும்போது கவனஞ்செலுத்த வேண்டிய விடயங்களைத் தனித்தனியாக மாணவர்க்கு விளங்கிக்கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேற்குறித்த பொருள்களையும் கருவிகளையும் பயன்படுத்துதல் தொடர்பாக வகுப்பறையில் இனங்காணக்கூடிய முன்மாதிரிகளைக் காட்டுங்கள்.
- இது தொடர்பான விளக்கத்தைப் பெற்ற பின்னர் வகுப்பறையில் பயன்படுத்தும் உபகரணங்கள், பாவனைப் பொருள்களின் பாதுகாப்பு, நிலைத்திருத்தல், சரியாகப் பயன்படுத்தும் விதம் ஆகியன பற்றிய விளக்கத்தை வலியுறுத்துங்கள்.
- மேலும் பாடசாலையில் மாத்திரமின்றி வீட்டில் பயன்படுத்தும் பாவனைப் பொருள்கள், உபகரணங்கள் தொடர்பாகவும் கவனஞ்செலுத்தி காரியமாற்றுவதனால் பணமும் திருப்தியும் மகிழ்ச்சியும் ஒருமித்துக் கிடைக்கின்றமையை மாணவர்களுக்கு மேலும் எடுத்துக்காட்டுங்கள்.

**செயற்பாடு 3**

- பாடசாலையில் நாம் பயன்படுத்துபவற்றுள் பெரும்பாலானவை பாடசாலையில் எமக்குத் தரப்படும் வளங்களும் வசதிகளுமாகும் என மாணவர்களுக்கு விளக்கி அவை பற்றிச் சிந்திப்பதற்கு ஒழுங்குசெய்யுங்கள்.


  ***உதாரணம்*** : o மேசை, கதிரை, அலுமாரி, ஆசிரியர் மேசை, ஆசிரியர் கதிரை, புத்தக இறாக்கை, நீர்க்குழாய், தொட்டி, கரும்பலகை, .........
- வகுப்பறையில் நாம் பயன்படுத்தும் பொது வளங்கள் மற்றும் பாடசாலையில் நாம் பயன்படுத்தும் பொது வளங்களை வெவ்வேறாகப் பட்டியற்படுத்துமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- பின்னர் மாணவர்களை 4 - 5 பேர் கொண்ட சில குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு மாணவரினாலும் வெவ்வேறாகப் பட்டியற்படுத்திய பொது வளங்கள் பட்டியல் ஒன்றைத் திரட்டி வகுப்பில் ஓர் இடத்தில் காட்சிப்படுத்தச் சந்தர்ப்பமளியுங்கள்.
- முதலாவது குழுவினர் எழுதியுள்ளவற்றைவிட புதியதொன்றை இரண்டாம் குழுவினர் எழுதியுள்ளனராயின் அதனைப் பாராட்டுங்கள்.

- மாணவரது முன்வைப்புகளைப் பாராட்டுங்கள்.
- பின்னர் இவற்றை நன்கு பயன்படுத்துவதால் கிடைக்கும் பயன்களின் பட்டியலை ஆசிரியர் தயாரித்து அட்டையொன்றில் ஒட்டி வெட்டி வைத்துக்கொள்ளுங்கள்.
- அந்தந்தக் குழுவினர் தயாரித்த அட்டவணைகளைத் தனித்தனியாக வைத்திருங்கள். (வகுப்பில், பாடசாலையில் என்றவாறு)
- ஆசிரியர் தயாரித்த பயன்கள் அடங்கிய அட்டைகளிலிருந்து தெரிவுசெய்து மேற்படி பட்டியலிலுள்ள பாவனைப் பொருள்களின் பயன்களை ஒவ்வொன்றாக விவரியுங்கள்.
- முன்வைக்கும் விடயங்களைக் குறித்துக்கொள்ளுமாறு மற்றைய குழுக்களைச் சேர்ந்த மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- ஆசிரியர் விழிப்புடன் இருந்து மாணவர்கள் தவறான விடயங்களை முன்வைக்கின்றனரா எனக் கவனியுங்கள்.
- சரியான ஒரு விடயத்திற்கு 5 புள்ளியும் தவறான விடயத்திற்கு 0 புள்ளியும் வழங்குங்கள்.
- சகல மாணவர் குழுக்களினதும் முன்வைப்புகளைப் பாராட்டுங்கள்.
- கூடுதலான புள்ளி பெற்ற குழு வெற்றிபெற்ற குழு ஆகும்.
- இவ்விதமாகக் குழுக்களை மாற்றி மீண்டும் இச்செயற்பாடுகளைச் செய்யுங்கள்.

செயற்பாடு 4

- நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு உபகரணங்கள், பாவனைப் பொருள்களைப் பயன்படுத்தும்போது சிலவற்றைக் கட்ட / முடிச்சிட நேர்வதுண்டு எனக் காட்டுங்கள்.
- இவ்வாறு கட்டுவதற்குப் பயன்படுத்துவதனால் அப்பாவனைப் பொருள்களும் உபகரணங்களும் அப்பாவனைப் பொருளின் / உபகரணத்தின் பாதுகாப்பையும் நிலைத்திருத்தலையும் பேணுவதற்குத் துணைபுரியும் எனவும் எடுத்துக்காட்டுங்கள்.

  ***உதாரணம்*** :
  - காலணி நாடா கட்டுதல்
  - தலைமுடியைப் பின்னிக் கட்டுதல்
  - உணவுப் பெட்டியைக் கட்டும் துணி போன்றவை
- இவ்வாறானவற்றைப் பயன்படுத்தும்போது கட்டுவதில் பரிச்சயம் கிடைப்பதற்காக மாணவர்கள் சகலரையும் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- இதற்காக 30 சென்ரிமீற்றர் நீளமும் 4 சென்ரிமீற்றர் அகலமும் கொண்ட ஒரு துணி நாடா, உருளை வடிவச் சிறிய மரக்கட்டை அல்லது குழாய்த்துண்டு ஒவ்வொன்று வீதம் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்குங்கள்.
- அவற்றைப் பயன்படுத்தி கட்டுதலில், முடிச்சிடுதலில் அடிப்படைத் திறன்களைப் பெறுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.








- இவ்வாறாக மாணவர்கள் கொண்டுவந்துள்ள உணவுப் பெட்டி, கை துடைக்கும் துண்டு ஆகியவற்றையும் பயன்படுத்தி உணவுப் பெட்டியில் உள்ள உணவு வெளியே சிந்தாதவாறும் பாதுகாப்பாகவும் அதனைக் கட்டும் விதத்தை மாணவர்களுக்குப் பயிற்றுவியுங்கள்.
- உணவுப் பெட்டியைச் சரியாகக் கை துடைக்கும் துண்டினால் கட்டுவதால் உணவு வீணாகாது என்பதையும் பாடசாலைப் புத்தகப்பையைச் சுத்தமாகப் பேண முடியும் என்பதையும் எடுத்துக்காட்டுங்கள்.
- அவ்வாறே நீர் கொண்டுவரும் போத்தலைச் சரியாக மூடுவதும் அதனை நிலைக்குத்தாக புத்தகப்பையில் வைத்திருப்பதும் முக்கியமானது என்பதை எடுத்துக்காட்டுங்கள்.
- அதற்கமைய தாம் நிதமும் பயன்படுத்தும் உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்துவதை நாம் பழகிக்கொள்ளல் வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.


செயற்பாடு 5

- கம்பளித் தையல் தொடர்பான அடிப்படைப் பரிச்சயத்தைப் பெறுவதற்காக மாணவர்களைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- இதற்காக, 20 cm நீளமும் 10 cm அகலமுமுள்ள பிறிஸ்டல் அட்டைத்துண்டொன்று, ரபெஸ்ட்ரி (Tapestry) ஊசி, கம்பளி நூல் ஆகியவற்றை மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்குங்கள்.
- பிறிஸ்டல் அட்டைத் துண்டின் நீளப்பக்க ஓரங்கள் இரண்டிலும் படத்தில் காட்டப்பட்டது போன்று கம்பளித் தையல் முறையைப் பயன்படுத்தித் தைக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.




உரு 1

- பின்னர் கீழே உள்ள படத்தில் காட்டியுள்ளவாறு பிறிஸ்டல் அட்டைத்துண்டு ஒவ்வொன்று வீதம் மாணவர் ஒவ்வொருவருக்கும் வழங்குங்கள்.




உரு 2



உரு 3

- அவ்வட்டைத்துண்டின் ஒரு பக்கத்தில் நிறத்தாள் / பரிசுப்பொருள் பொதிசெய்யப் பயன்படுத்தப்படும் காகிதத்தாளினை ஒட்டுமாறு வழிப்படுத்துங்கள்.
- கம்பளித் தையலைப் பயன்படுத்தி உரு 3 இல் காட்டியுள்ளவாறு மேற்படி பிறிஸ்டல் அட்டைத்துண்டுகளைக் கொண்டு பணப்பை போன்று ஆக்குமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள். துவாரங்கள் ஊடாக ரிபன் அல்லது பொருத்தமான ஒரு நூல் வகையைப் புகுத்தி நாடா ஒன்றினை அமைக்குமாறும் வழிப்படுத்துங்கள்.
- தயாரித்த பணப்பையை ஆளுக்காள் கைமாற்றியவாறு அவற்றின் அழகை அனுபவிக்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அன்றாடம் பயன்படுத்தும் பெரும்பாலானவற்றை நாமே தயாரித்துக்கொள்ளலாம் என்பதையும் அதன் மூலம் அதிக உளத் திருப்தியை அனுபவிக்கலாம் என்பதையும் இச்செயற்பாட்டின் மூலம் மாணவர்கள் விளங்கிக்கொள்ள ஒழுங்குசெய்யுங்கள்.

செயற்பாடு 6

- நாம் பயன்படுத்தும் உபகரணங்களுள் அரிவாள், சுளகு ஆகியவற்றைப் பயன்படுத்திச் செய்யப்படும் கிராமிய / நாட்டார் நடனங்கள் பல உள்ளன.
- நெற்கதிரினை அறுவடை செய்யும் வேளையில் பாடும் பாடல்கள் அரிவு வெட்டும் பாடல்கள் எனப்படும்.

***உதாரணம்*** : அரிவு வெட்டுப் பாடல்

பச்ச வளையல் தொட்டு ஏலேலோ மயில் ஏலேலோ
பயிரறுக்கப் போற பெண்ணே ஏலேலோ மயில் ஏலேலோ

பச்சை நல்ல மின்னலுக்கு ஏலேலோ மயில் ஏலேலோ
பயிரறுப்பு மிஞ்சுது பார் ஏலேலோ மயில் ஏலேலோ

நீல வளையல் தொட்டு ஏலோலோ மயில் ஏலோலோ
நெல்லறுக்கப் போற பெண்ணே ஏலேலோ மயில் ஏலேலோ

நீல நல்ல மின்னலுக்கு ஏலேலோ மயில் ஏலேலோ
நெல்லறுப்பு பிந்துதடா ஏலேலோ மயில் ஏலேலோ

- நெல்லை அறுவடை செய்த பின்னர் தூற்றுவதற்காகவும் அரிசி புடைப்பதற்காகவும் (உமி, தவிடு, உடைந்த மணிகளை நீக்குவதற்கு) சுளகு பயன்படுத்தப்படும்.
- சுளகைக் கையிலேந்தி முன்வைக்கும் நடனம் சுளகு நடனம் எனப்படும்.

***உதாரணம்*** : உண்ண உணவு தந்திடும்
உழவர் வாழ்க, வாழ்கவே,
மண்ணை உழுது பயிர்களை
வளர்க்கும் உழவர் வாழ்கவே.

ஒன்றை நூறு நெற்களாய்
உண்டு பண்ணித் தருபவர்
நன்கு உழுது வியர்வையால்
நனைந்து போக உழைப்பவர்.

கண்ணைப் போலப் பயிர்களைக்
காத்து உயிர்கள் காப்பவர்
உண்ண உணவு இன்றியே
உடல் வருந்தல் நீதியோ?

பாடு பட்டு உழுபவர்
பலனும் கண்டு தருபவர்
நாடு வளர வாழ்பவர்
நன்கு வாழ்க, வாழ்கவே!

- அழ. வள்ளியப்பா

## 06. கருப்பொருள் : எமது உணவு

உணவும் பானங்களும் எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதவை. நாம் உண்ணும் உணவின் அளவு, தரம் என்பனவும் உரிய நேரத்தில் உணவருந்துதலும் ஆரோக்கிய வாழ்வுக்குக் காரணங்களாகும். இக்கருப்பொருள் ஊடாக அவற்றை வலியுறுத்துவதுடன் உணவு உட்கொள்வதுடன் தொடர்புடைய நற்பழக்கங்கள், வழமைகள் என்பவற்றை அறியச் செய்வதுடன் எதிர்பார்க்கப்படுகின்றது. செயன்முறைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தி அனுபவங்களை வழங்கவும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சிகள் :**

- சுகாதாரமான வாழ்க்கையை நடத்துவதற்காக உணவை உரிய நேரத்தில் உட்கொள்வதன் முக்கியத்துவம் பற்றிய விளக்கத்துடன் காரியமாற்றுவார்.
- பண்புசார்ந்தும் மருத்துவப் பண்புகளைக் கொண்டதுமான உணவை உண்பதற்கு வழிப்படுவார்.
- உணவு பழுதடையும் விதத்தையும் அவற்றை நீண்ட நேரம் வைத்திருப்பதற்கான விதத்தையும் பற்றி அறிந்து கொண்டு காரியமாற்றுவார்.
- உணவை உட்கொள்ளும் பழக்கவழக்கங்களையும் நற்பழக்கங்களையும் கடைப்பிடிப்பார்.
- பாதுகாப்பற்ற உணவின் காரணமாக ஏற்படக்கூடிய நோய்களைப் பற்றிய விளக்கத்துடன் சுத்தமான உணவை உட்கொள்வதற்கு வழிப்படுவார்.
- சரியான ஒழுங்குமுறையைப் பின்பற்றி உணவை வழங்குவார்.
- உணவை வழங்குவதற்குப் பல்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி ஆக்கபூர்வமாக நிறைவு செய்தல்களில் ஈடுபடுவார்.
- சக்தி விருத்திக்கு உதவும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நாம் உண்ணும் உணவுகளின் பல்வேறுபட்ட தன்மைக்கு ஒத்தவாறு பாடுதல், நடித்தல், சங்கீதக் கருவியொன்றை இசைத்தல், வெளிப்பாடுசார் அங்க அசைவுகள் ஆகியவற்றை முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள் :**

- நோயின்றி வளர்வதற்குப் போஷாக்கான உணவுவேளையொன்றின் அவசியத்தை விளங்கிக் கொள்வார்.
- உணவு உண்ணும் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பார்.
- உரிய வேளையில் உணவு உட்கொள்வதன் முக்கியத்துவத்தை விளங்கிக்கொள்வார்.
- கூட்டாக உணவொன்றைத் தயாரித்து அனுபவித்து மகிழ்ச்சியடைவார்.
- எமது வளர்ச்சிக்குப் போஷாக்கான பான வகைகளை அருந்துதலின் முக்கியத்துவத்தை அறிந்து கொள்வார்.
- அசுத்தமடைந்த உணவுகளின் இயல்பை இனங்கண்டு அவற்றை உண்பதைத் தவிர்த்துக் கொள்ளும் விதத்தைச் செய்துகாட்டுவார்.
- பல்வேறு தாளங்களுடன் உணவு பற்றிக் கூறும் பாடல்களைப் பாடுவார்.
- உணவுகளின் பெயர்களைப் பயன்படுத்தி திறந்தவெளி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி உணவுகளின் மாதிரிகளை அமைப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1**

- தான் உண்ணும் உணவுவேளைகள் பல்வேறுபட்ட தன்மையானவையாக இருக்க வேண்டும் என்பதனை விளங்கிக் கொள்வதற்கு மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- தான் விரும்பும் கறிகளுடனான சோற்றை அடுத்த நாள் இடைவேளையின்போது உண்பதற்குக் கொண்டு வருமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- மாணவர்கள் இடைவேளையின்போது கொண்டுவரும் உணவைப் பற்றி விசாரித்து ஆசிரியர் கீழே காட்டப்பட்டுள்ளவாறான அட்டவணையொன்றைக் கரும்பலகையில் கட்டியெழுப்புங்கள்.

| இறைச்சி / மீன் முட்டை / கருவாடு | தானிய வகை | காய்கறி | கீரை |
|---|---|---|---|
| 15 | 05 | 25 | 12 |

- அதற்கேற்ப எத்தனை மாணவர்கள் இறைச்சி, மீன், முட்டை அல்லது கருவாடு உணவுவேளில் சேர்த்துக் கொண்டிருந்தனர், தானியங்களை எத்தனை மாணவர்கள் சேர்த்துக் கொண்டிருந்தனர் என்றவாறு அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விதத்தில் குறியுங்கள்.
- குறிக்கப்பட்ட அட்டவணையைப் பயன்படுத்தி ஒவ்வொரு நாளும் உண்ணும் உணவு வேளைகளில் பல்வேறுபட்டதன்மையான கலப்பு உணவொன்றாக உட்கொள்ளுதல் மிகவும் முக்கியம் என்பதனை வலியுறுத்துங்கள்.
- இவற்றில் இருந்து ஒரு தொகுதிக்குரிய உணவு தொடர்ந்து உடலுக்குக் கிடைக்காது இருப்பின் உடல் விருத்தி உரியவாறு இருப்பதில்லை எனவும் நோய்கள் ஏற்பட முடியும் எனவும் கூறுங்கள்.
- நோயற்ற பிள்ளையொன்றினதும் போஷாக்கின்மை உள்ள பிள்ளையொன்றினதும் படங்களைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.



நோயற்ற பிள்ளை



போசாக்கின்மையைக் காட்டும் பிள்ளை

- அப்படங்களை மாணவர்களுக்கு முன்வைத்துக் கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை மிகவும் நன்றாக எந்தப் பிள்ளைக்குச் செய்ய முடியும் என மாணவர்களிடம் வினாவி அதனைக் குறித்துக் கொள்ளுங்கள்.

| செயற்பாடு | போஷாக்கின்மை உள்ள பிள்ளை | நோயற்ற பிள்ளை |
|---|---|---|
| ஓடுதல் | | |
| பாய்தல் | | |
| விளையாடுதல் | | |
| பாரமொன்றைக் கொண்டுசெல்லல் | | |
| ஏதேனுமொன்றை உயர்த்துதல் | | |
| பாடங்களைப் படித்தல் | | |

- நோயற்ற பிள்ளை ஒன்றின் உணவில் இறைச்சி, மீன், தானிய வகைகள், பல்வேறு நிறக் காய்கறிகள், கீரை வகைகள் என்பன உள்ளடங்க வேண்டும் எனக் கூறுங்கள்.
- நாம் உட்கொள்ளும் உணவுகளில் போஷாக்குத்தன்மை குறைவதன் காரணமாக போஷாக்கின்மை நிலை ஏற்படுகிறது எனவும் உடல், உள நோயற்ற தன்மைக்குத் தீங்கு ஏற்படுகிறது எனவும் மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுங்கள். அதனால் மாணவர்கள் தினமும் உண்ணும் உணவுவேளைகளில் பல்வேறுபட்ட தன்மையுடன் உட்கொள்ளுதல் முக்கியமாகும் எனவும் மாணவருக்கு வலியுறுத்துங்கள்.

செயற்பாடு 2 :

- உணவு உட்கொள்ளும் போது எம்மால் பேணப்பட வேண்டிய பழக்கவழக்கங்களைப் பெற்றுக்கொள்வதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- உணவு உண்பதற்கு முன்னர் கடைப்பிடிக்கப்பட வேண்டிய நற்பழக்கங்களைப் பற்றி கீழே காட்டப்பட்டுள்ள விடயங்களையும் பயன்படுத்தி மாணவர்களுக்கு விளங்கப்படுத்துங்கள்.
  - ❋ சுத்தமான நீரினால் இரு கைகளையும் நன்கு கழுவுதல். (இதற்கு கிணறு/நீர்க்குழாய் அருகில் சண்டையிடாமல் தனது முறை வரும் வரையில் பொறுமையாக வரிசையில் நிற்றல்)
  - ❋ தட்டில் அல்லது வேறு பாத்திரத்தில் உணவைப் பரிமாறிக் கொள்வதெனின் அல்லது பாத்திரத்தை முன்கூட்டிக் கழுவிக்கொள்ளலும் தனக்குப் போதுமானளவு உணவைப் பரிமாறிக்கொள்ளலும்
  - ❋ நீர் அருந்தும் பாத்திரத்தில் அல்லது கோப்பையில் சுத்தமான நீரை நிரப்பித் தனக்குப் பக்கத்தில் வைத்துக்கொள்ளல்
  - ❋ உணவை உண்ணுவதற்குப் பொருத்தமான இடமொன்றில் இருத்தல்
- உணவு உண்ணும் போது கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களைப் பற்றிப் பின்வரும் விடயங்களை மாணவர்களிடம் விசாரியுங்கள். அக்கருத்துக்களைக் கூறும்போது விளங்கிக் கொள்வதில் அவதானம் செலுத்துங்கள்.
  - ❋ உணவு உண்ணும் போது அங்குமிங்கும் பார்த்துக் கொண்டு உண்ணுதலைத் தவிர்த்தல்
  - ❋ உணவு உண்ணும் போது மற்றையவர்களுடன் தேவையற்றவாறு உரையாடுதல்,

உரத்துச் சிரித்தல் போன்றவற்றைத் தவிர்த்துக் கொள்ளல்

* மற்றையவர்களின் உணவுப் பாத்திரங்களை எட்டிப் பார்க்காதிருத்தல்
* உணவு உண்ணும்போது மற்றைய செயல்களில் ஈடுபடாது உணவு உண்ணுதலில் மட்டும் கவனத்தைச் செலுத்துதல்
* கையினால் உணவு உண்பதெனின், உணவை விரல்களினால் மட்டும் பிசைந்து கொள்ளல்
* உதடுகள் மிகவும் அதிகமாகத் திறக்காதவாறு உணவை உட்கொள்ளல்.
* வாயைச் சுற்றி உணவு ஒட்டி இருத்தலைத் தவிர்த்துக் கொள்ளல்.
* உணவை மெல்லும் போது உதடுகள் சப்புக்கொட்டாதிருத்தல்.
* உணவை விழுங்குவதற்கு முன்னர் போதியளவு அதனை மெல்லுதல்
* மற்றையவரின் பாத்திரங்களில் கையை இடாதிருத்தல்.
* உணவாகக் கொள்ளாத பகுதிகளைப் (பச்சை மிளகாய்த் துண்டுகள், கொரக்கா துண்டங்கள், கறுவாத் துண்டுகள் போன்றன) பாத்திரத்தின்/தட்டின் ஓரத்தில் வைத்தல். அவற்றை மேசையின் மீது அல்லது தரையில் போடுதலைத் தவிர்த்துக் கொள்வதில் கவனஞ்செலுத்துதல்
* நீர் அருந்தும் போது மேசையின் மீது அல்லது தரையில் சிந்தாதிருத்தல்

- உணவு உண்டதன் பின்னர் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நற்பழக்கங்களாகப் பின்வரும் விடயங்கள் பற்றி அவதானத்தை வழிப்படுத்துங்கள்.
  * தட்டில் அல்லது பாத்திரத்தில் எஞ்சியுள்ள பகுதியைக் குப்பை இடும் பாத்திரத்தினுள் இடுதல்
  * வெற்று உணவுப் பாத்திரத்தை/தட்டை நன்கு கழுவுதலும் ஈரத்தைத் துடைத்தலும் தட்டைப் பத்திரமாக மீண்டும் வைத்தல்
  * கைகளையும் வாயையும் சுத்தஞ் செய்தல்
  * தான் அமர்ந்திருந்த கதிரையை உரியவாறு ஒழுங்குபடுத்துதல்
  * உணவு உண்ட இடத்தைச் சுத்தஞ் செய்தல்
- எல்லா மாணவரும் வகுப்பறையிலும் வீட்டிலும் வேறு இடங்களிலும் உணவு உட்கொள்ளும் போது இவ்வாறான நல்ல பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பதற்குப் பழகிக் கொள்ளுதலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.

செயற்பாடு 3

- சோறு, காய்கறி வகைகள், கீரை வகைகள் என்பனவும் கருவாடு, மீன், முட்டை அல்லது அதற்குப் பிரதியாக பயற்றங்காய், பருப்பு, தானிய வகை (சோயா, போஞ்சி, .. போன்றன), உண்ணும் காளான் என்பனவும் கொண்ட உணவுவேளையொன்றைப் பெற்றோரினதும் மாணவர்களினதும் பங்குபற்றலுடன் பாடசாலையில் சமைப்பதற்குத் தேவையான நடவடிக்கை களைத் திட்டமிடுங்கள்.
- இதில் உணவைச் சமைப்பதில் ஈடுபடுவதற்கு மாணவரையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.
- மாணவர்கள் இவ்வுணவை உண்ணுவதற்கு முன்னர் அதற்கு முன்னர் கற்ற நல்ல உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடித்து உணவை உண்ண வேண்டும் என மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- சமைத்த உணவை உண்ணுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- மாணவர்கள் உணவை உண்ணும் போது கற்ற நற்பழக்கங்களைக் கடைப்பிடிக்கிறாரா என ஆசிரியர் அவதானிக்க வேண்டும். தேவையான சந்தர்ப்பங்களில் ஆலோசனைகள் வழங்குங்கள்.
- உணவு உண்டதன் பின்னர் போதியளவு நீர் அருந்துகிறாரா எனவும் அவதானியுங்கள்.
- நற்பழக்கங்களைக் கடைப்பிடித்து உணவு உண்ணும் அக்காட்சியைப் பார்க்கும் மற்றையவர்களுக்கு மிகவும் விருப்பத்தை ஏற்படுத்துபவர் என இங்கு மேலெழுப்பிக் காட்டுங்கள்.

செயற்பாடு 4

- காலையுணவை உண்ணாமல் பாடசாலைக்கு வரும் மாணவர்கள் முகங்கொடுக்க நேரிட்ட நிகழ்வுகளைப் பற்றிக்கூறும் ஆக்கபூர்வமான கதையொன்றை மாணவருக்கு முன்வையுங்கள்.
- இவ்வாறான கதைகளை / நிகழ்வுகளைப் பயன்படுத்தி உரிய நேரத்திற்கு உணவு உண்ணுவதன் முக்கியத்துவத்தை மேலும் மாணவர்களுக்கு வலியுறுத்துங்கள்.
- அதில் நாம் உண்ணும் உணவு வயிற்றினுள் சீரணித்து சில பகுதிகள் இரத்தத்திற்குள் உறிஞ்சப்படுகின்றன எனவும் எஞ்சிய பகுதிகள் மலமாக வெளியேற்றப்படுகின்றன எனவும் விளங்கப்படுத்துங்கள். இக்காரணத்தினால் எமது வயிறு தடவைக்குத் தடவை வெறுமையாகிறது எனவும் அப்போது எமக்கு பசி உணரப்படுகிறது எனவும் நீண்டநேரம் பசியுடன் இருப்பதனால் நோய்கள் ஏற்பட முடியும் எனவும் விளங்கப்படுத்துங்கள்.
- அதனால் நாளின் உரிய நேரங்களின் போது மீண்டும் உணவு உண்ணுவது மிகவும் முக்கியம் என விளங்கப்படுத்துங்கள்.
- எந்த வயதைச் சேர்ந்த ஒருவருக்கும் முக்கியமான உணவுவேளை காலையுணவு வேளை என்பதனைக் குறிப்பிடுங்கள்.
- இரவு முழுவதும் உணவு உண்ணாதிருப்பதனால் காலையுணவு பெறப்படாவிடில் நோய் நிலைக்கு உள்ளாக முடியுமென்பதனால் அன்றாடம் பாடசாலை செல்வதற்கு முன்னர் போஷாக்கான போதியளவு உணவை உட்கொள்ள வேண்டும் என மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- அவ்வாறே காலை உணவு கலப்பு உணவுவேளையொன்றாக இருக்க வேண்டும் எனவும் எடுத்துக்காட்டுங்கள்.
- சுத்தமான நீரையும் போதியளவு ஒவ்வொரு நாளும் அருந்துவதன் முக்கியத்துவத்தையும் மாணவருக்கு விளங்கப்படுத்துங்கள்.

செயற்பாடு 5

- உடலுக்குச் சிறந்த சுகாதார நிலையைப் பேணுவதற்கு விருப்பமான பான வகைகளை சரியாகத் தெரிவு செய்து கொள்ளும் திறனைப் பெற்றுக் கொள்வதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- இதற்குச் செயற்பாட்டினைச் செய்வதற்கு சில நாட்களுக்கு முன்னர் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ள பான போத்தல்களின் மேலுறைகள் சிலவற்றைச் சேகரிக்குமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- மாணவர்கள் கொண்டுவந்த மேலுறைகளைக் காட்சிப்பலகை ஒன்றில் ஒட்டிக் காட்சிப் படுத்துங்கள்.

- ஒவ்வொரு மாணவருக்கும் A4 தாளொன்று வீதம் வழங்கி அதில் தாம் விரும்பும் பான வகையொன்றின் படத்தை வரைவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அடுத்ததாக ஆசிரியர் சந்தையில் விற்பனைக்குள்ள பான வகைகளின் மேலுறைகள் மீது மாணவரின் கவனத்தை வழிப்படுத்துங்கள்.
- அவற்றில் சிவப்பு/மஞ்சள்/பச்சை ஆகிய நிறங்களைக் கொண்ட குறியீடொன்று வட்டம் ஒன்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை மாணவர்களுக்குக் காட்டுங்கள்.
- அதற்கேற்ப சிவப்பு நிற வட்டத்தினால் சீனி அதிகமாக உள்ளது எனவும் மஞ்சள் நிற வட்டத்தினால் சீனி மத்திம அளவில் உள்ளது எனவும் பச்சை நிற வட்டத்தினால் சீனி குறைந்தளவில் உள்ளது எனவும் காட்டப்படுகிறது என்பதை மாணவருக்கு விளங்கப் படுத்துங்கள்.
- மேலுறைகள் ஒட்டப்பட்டுள்ள காட்சிப்பலகையில் உள்ள மேலுறைகளிடையே தாம் வரைந்து காட்டிய பான வகைக்குரிய மேலுறை இருப்பின் அதில் காட்டப்பட்டுள்ள நிறத்தை தாம் வரைந்துள்ள போத்தலில் குறிக்குமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- அதற்கேற்ப எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சந்தையில் பான வகையொன்றைக் கொள்வனவு செய்யும் போது எப்போதும் பச்சை நிற மேலுறையுள்ள பான வகையைத் தெரிவுசெய்தல் உடலாரோக்கியத்திற்கு நல்லது என எடுத்துக்காட்டுங்கள்.
- அதன் மூலம் அதிக கொழுப்புத் தன்மையும் நீரிழிவும் உள்ள நோய் நிலைகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் எனவும் எடுத்துக்காட்டுங்கள்.
- தாம் விரும்பிய பான வகையைப் பற்றி விசாரித்துப் பார்ப்பதற்கு நிறக் குறியீட்டிற்கேற்ப மாணவர்களை வழிப்படுத்துங்கள். அப்பான வகையைச் சந்தையில் கொள்வனவு செய்வ தெனின் பச்சை நிற வட்டக் குறியீட்டிற்கு மாறுதலின் முக்கியத்துவத்தை மேலுமுழுப்பிக் காட்டுங்கள்.
- எவ்வாறெனினும், சந்தையில் கொள்வனவு செய்யும் பான வகைகளை விட வீட்டில் தயாரித்துக்கொள்ளும் இயற்கைப் பானங்களும் நீரும் அருந்துவதற்கு மிகவும் பொருத்த மானவை என இங்கு வலியுறுத்துங்கள்.

செயற்பாடு 6

- சேகரித்துக் கொண்ட மேலுறைகளுடனான பொதிகள், போத்தல்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி ஏதேனும் உணவு வகையொன்று உற்பத்தி செய்யப்பட்ட திகதியையும் அது காலவதியாகும் திகதியையும் பற்றி மாணவர்களுக்கு விளங்கப்படுத்துங்கள்.
- அந்தச் சேகரிக்கப்பட்ட மேலுறைகளைக் குழுக்களுக்குத் தொகுதிகளாக்கிப் பகிர்ந்தளித்து அன்றைய திகதியில் அம்மேலுறைகளில் உள்ள காலவதியாகியுள்ள திகதியுடனான மேலுறைகளை வேறுபடுத்துமாறு கூறுங்கள்.
- இவ்வாறான காலவதியான உணவு வகைகளை நுகர்வதினால் பல்வேறு நோய்கள் ஏற்பட முடியும் எனவும் எடுத்துக்காட்டுங்கள்.
- அதற்கேற்ப அவ்வாறானவற்றைக் கொள்வனவு செய்யும்போது காலவதியான திகதி பற்றிக் கவனஞ்செலுத்துவது முக்கியம் என மாணவர்கள் விளங்கிக் கொள்வதற்கு வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 7

- பல்வேறு உணவுகளைக் காலந்தாழ்த்தி வைக்கும்போது ஏற்படும் மாற்றங்களை அவதானிப்பதற்குச் சில உணவுப் பகுதிகளை வகுப்பறைக்குக் கொண்டுவாருங்கள்.

  ***உதாரணம்*** :
  - பாண் துண்டொன்று
  - தேங்காய்த்துருவல்
- சில நாட்களுக்குப் பின்னர் அவ்வுணவுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
  - ❋ உணவின் இயல்பு
  - ❋ உணவின் நிறம்
  - ❋ துர்நாற்றம்
  - ❋ உணவில் ஏற்பட்டுள்ளவற்றின் இயல்பு
  - ❋ அதன் நிறம்
- அவ்வுணவைக் கைவில்லையொன்றினால் அவதானித்து உணவில் உண்டாகியுள்ள பொருளின் இயல்பை விபரிப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- அதற்குக் கீழே காட்டப்பட்டுள்ளவாறான பழுதடைந்த உணவுகள் சிலவற்றையும் வகுப்பறைக்குக் கொண்டு வாருங்கள்.

  ***உதாரணம்*** :
  - அந்துப் பூச்சிகளுடனான தானிய வகையொன்று
  - பழுதடைந்த யோகட் ஒன்று
  - புழுக்கள் தோண்டிய பழமொன்று
  - நசுங்கிய பழம்
  - ஊசிப்போன உணவுகள்
- அவ்வுணவுகளையும் திறந்த கண்ணுடன் கைவில்லையையும் பயன்படுத்தி அவதானிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரின் அவதானிப்புக்கேற்ப உணவு பழுதடைந்துள்ளபோது அவற்றில் காணப்படும் இயல்புகளின் மீது மாணவர்களின் அவதானத்தை வழிப்படுத்துங்கள்.


  ***உதாரணம்*** :
  - துர்நாற்றம், ஒட்டுந்தன்மை, புழுக்கள், அந்துப் பூச்சிகள் போன்றன இருத்தல்
  - பழுதடைந்த உணவுப் பொருள்கள் பற்றிய மாணவர்களின் அனுபவங் களைப் பற்றி உரையாடுங்கள்.
  - பழுதடைந்த உணவுகளின் இயல்புகளை மாணவர் குழுக்கள் அட்டவணை ஒன்றாக காகிதத் தாளொன்றில் எழுதிக்காட்சிப்படுத்துவதற்கு ஆலோசனை வழங்குங்கள். இதற்குப் பின்வரும் விதத்தில் அட்டவணை ஒன்றைத் தயாரிக்க முடியும். அவை ஒவ்வொன்றையும் பற்றி முன்னர் கலந்துரை யாடாத விடயங்களைப் பற்றி மேலும் கலந்துரையாடி பழுதடைந்த உணவை உண்ணுதல் தீங்கானதாகும் என்பதை விளங்கப் படுத்துங்கள்.

| உணவு | இயல்பு |
|---|---|
| பாண் | பூஞ்சணம் பிடித்திருத்தல் |
| தேங்காய்ப் பாதி | கறுப்புப் புள்ளிகள் ஏற்படுதல், சிவப்பு நிறமும் எச்சிற்றன்மையும் ஏற்படுதல் |
| பாற்சோறு | துர்நாற்றம் ஏற்படுதல் |

- அசுத்தமான உணவை உண்பதனால் உடலுக்கு ஏற்படும் தீங்கான தாக்கங்களையும் நோய்களையும் பற்றிக் கூறும் ஆக்கபூர்வமான எளிய பாடலொன்றை முன்வைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் முன்வைப்புகளைப் பாராட்டுங்கள்.
- பல்வேறு தாளங்களுடன் உணவு பற்றிக் கூறும் பாடல்களைப் பாடுங்கள்.

செயற்பாடு 8

- மாணவர்களை அவர்களது கதிரைகளுடன் திறந்தவெளிக்கு அழைத்துச்சென்று சோடிகளாகக்குங்கள்.
- மாணவர் சோடிகள் பின்புறம் பின்புறத்துடன் சேர்ந்திருக்குமாறு கதிரைகளில் வட்டம் ஒன்றாக இருக்க வேண்டும்.




- வட்டத்தின் உட்புறத்தில் இருக்கும் மாணவர்களுக்குக் காகிதத் தாளொன்றும் பென்சில் ஒன்றும் வீதம் வழங்குங்கள்.
- மாணவர் சோடிகளில் வட்டத்தின் வெளிப்புறத்தில் இருக்கும் மாணவர்கள் தமக்கு விருப்பமான பழமொன்றைப் பற்றி அதன் பெயரைக் கூறாமல் விவரிக்க வேண்டும். வட்டத்தின் உட்புறத்தில் இருக்கும் மாணவர்கள் பழம் யாது என்பதை அனுமானிக்க வேண்டும். இதில் வட்டத்தின் உட்புறத்தில் உள்ள மாணவருக்குப் பழத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக மற்றைய மாணவரிடம் பல்வேறு வினாக்களை வினாவ முடியும்.


  ***உதாரணம்:*** பழத்தின் நிறம், வடிவம், சுவை ..... போன்றன
- பழத்தைச் சரியாக இனங்கண்டதன் பின்னர் வட்டத்தினுள் உள்ள மாணவர் அதனைத் தன்னிடம் உள்ள காகிதத்தாளில் வரைந்து அதன் கீழ் பழத்தின் பெயரை எழுத வேண்டும்.
- உரிய நேரத்திற்குப் பின்னர் சகல மாணவர்களும் வரைந்த பழங்கள் சரியா என்பது பற்றி மற்றைய மாணவர்களுக்குக் காட்டி விசாரியுங்கள்.
- வரைந்துள்ள பழம் பிழையெனின் சரியான பழம் யாதென வட்டத்தின் உள்ளே உள்ள மாணவரிடம் விசாரியுங்கள்.
- சரியாகப் பழத்தை இனங்கண்ட மாணவர்களைப் பாராட்டுங்கள்.
- வெளி வட்டத்தில் உள்ள மாணவர்களை உட்புறத்திற்கு மாற்றிச் செயற்பாட்டினை மீண்டும் செய்யுங்கள்.

செயற்பாடு 9

- பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி உணவு வகைகளின் மாதிரிகளைத் தயாரிப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

  ***உதாரணம்***
  - பலூனொன்றை ஊதி அதன் வாயைக் கட்டி அதனைச் சுற்றிப் பசை பூசி பலூன் தெரியாதவாறு அதன் மீது பாசிப்பயறை ஒட்டி ஈரப்பலாக்காய் ஒன்றை ஆக்குதல்
  - முட்டைக் கோதுகளைப் பயன்படுத்தி கத்தரிக்காய் ஒன்றாக நிறந்தீட்டி காம்பு ஒன்றைப் பயன்படுத்தித் தயாரித்துக்கொள்ளல்
  - பான போத்தல் மூடிகளில் ஊதா நிறத் தாளை ஒட்டி முந்திரிக் கொடி ஒன்றை அமைத்தல்.





- மாணவரின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- மேலும் இவ்வாறான ஆக்கங்களைச் செய்வதற்கு மாணவரை ஊக்குவியுங்கள்.

செயற்பாடு 10

- உடலை நன்கு செயற்பாடுடனான விளையாட்டுக்களில் / செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் முக்கியத்துவத்தை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- நன்றாக விளையாடுதல் நோயற்று வாழ்வதற்குக் காரணமாகிறது என்பதையும் இங்கு மேலெழுப்பிக் காட்டுங்கள்.
- மாணவர்களுக்குக் கீழே காட்டப்பட்டுள்ளவாறான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

  ***உதாரணம்*** :
  - மாணவரைச் சோடிகளாக்குங்கள்.
  - ஒவ்வொரு மாணவர் சோடியையும் காய்கறி அல்லது பழ வகை ஒன்றின் பெயரினால் பெயரிடுங்கள்.
  - மாணவர் சோடிகளை இரு வரிசைகளாக 4 / 5 மீற்றர் தூரத்தில் நிறுத்துங்கள். இரு வரிசைகளுக்கு நடுவில் பந்தொன்றை வையுங்கள்.
- ஆசிரியர் மாணவர்களைப் பெயரிட்டுள்ள பழமொன்றின் / காய்கறியொன்றின் பெயரைக் கூறியதும் இரு குழுக்களிலும் இருந்து அப்பெயருக்குரிய இரு மாணவர்களும் முன்னால் ஓடி வந்து பந்தை எடுக்க வேண்டும்.
- விரைவாக வந்து பந்தை எடுக்கும் மாணவரின் குழுவிற்குப் புள்ளியொன்று உரித்தாகும்.
- இவ்வாறாக எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கக்கூடியவாறு செயற்பாட்டினைத் தொடர்ந்து செய்யுங்கள்.
- கூடுதலான புள்ளிகளைப் பெறும் குழு வெற்றி பெற்ற குழுவாகும்.

## 07. கருப்பொருள் : **பாதுகாப்பும் கரிசனையும்**

பாதுகாப்பும் கரிசனையும் - கவனஞ் செலுத்தப்படவேண்டிய தற்காலத் தேவைகளின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டுள்ள ஒரு தொனிப்பொருளாகும். அலட்சியமாகவும், கவனயீனமாகவும் விளக்கம் இல்லாமலும் செயற்படுவதனால் பௌதிக வளங்களும் மனித வளங்களும் சேதமுறக்கூடிய சந்தர்ப்பங்கள் உள்ளன. கவனமாகச் செயற்பட வேண்டிய சந்தர்ப்பங்களில் அதுபற்றி எவ்வித கரிசனையும் கொள்ளாதிருப்பதால் எதிர்பாராத விபத்துகளுக்கு ஆளாக நேரிடும். எனவே வாழ்க்கையின் ஆரம்பப் பருவம் தொட்டே ஆபத்துகளுக்கு உள்ளாகலாம் எனக் கருதக்கூடிய வேலைகளில் உரிய கவனத்துடன் செயற்படுவதற்கு மாணவரைத் தூண்டுவதையும் அது குறித்து மாணவர்களுக்கு அறிவூட்டுவதையும் இலக்காகக்கொண்டே இக்கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.

**தேர்ச்சிகள் :**

- ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய விதத்தைப் பற்றி அறிந்து கொண்டு அவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பார்.
- பல்வேறு சாதனங்களையும் உபகரணங்களையும் போன்றே தொழினுட்பக் கருவிகளையும் பல்வேறு சக்திகளையும் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய தீங்குகளைப் பற்றிக் கவனத்துடன் காரியமாற்றுவார்.
- பாதுகாப்பற்ற சந்தர்ப்பங்களிலும் சமூக விரோத செயல்களிலும் இருந்து தன்னுடையதைப் போன்றே மற்றையவர்களினதும் பாதுகாப்பைக் கருத்திற்கொள்ளும் விதம் பற்றிய கவனத்துடன் காரியமாற்றுவார்.
- தொற்றும், தொற்றா நோய்கள் ஏற்படுதலைத் தடுப்பதற்காக மேற்கொளளக்கூடிய சௌக்கியப் பாதுகாப்பு முறைகளைப் பற்றி அறிந்து கொண்டு காரியமாற்றுவார்.
- பாதுகாப்புப் பற்றிய உணர்வுடன் ஆக்கச்செயல்களில் ஈடுபடுவார்.
- பாதுகாப்புப் பற்றிய கவனத்துடன் மறுதாக்கத்தை ஏற்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- பாதுகாப்புடனும் எச்சரிக்கையுடனும் கருமமாற்ற வேண்டிய விதத்தை அபிநயத்துடனும் வெளிப்பாட்டுடனும் அசைவுகள், கவிதைகள், பாடல்கள் ஆகியன ஊடாகச் செய்து காட்டுவார்.

**கற்றற்பேறுகள்:**

- பாடசாலையில் செய்யப்படும் பல்வேறு செயற்பாடுகளின் போது ஏற்படக்கூடிய ஆபத்துக்களை இனங்கண்டு அவற்றில் இருந்து பாதுகாப்புடன் செயலாற்றுவார்.
- வீட்டில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை இனங்கண்டு அவ்வாபத்துக்களில் இருந்து பாதுகாப்புடன் செயற்படுவார்.
- அண்மைச் சுற்றாடலில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களையும் நிகழ்வுகளையும் பற்றிக் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் நடந்துகொள்வார்.
- அறிமுகமற்ற நபர்களும் அறிமுகமற்ற இடங்களும் தொடர்பாகப் பாதுகாப்புடனும் எச்சரிக்கை யுடனும் செயற்படுவார்.
- தொற்று நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளும் விதத்தைப் பற்றிய விளக்கத்துடன் செயலாற்றுவார்.
- பாதுகாப்புத் தொடர்பான செய்தியுடனான சுவரொட்டிகளை நிர்மாணிப்பார்.

- பாதுகாப்பும் கரிசனையும் பற்றிய செய்திகளைக் கொண்ட போலச்செய்தல், கவிதைகள், பாடல்கள் ஆகியவற்றைப் பாடுவார்.
- பாதுகாப்புத் தொடர்பாகக் கவனமெடுப்பதன் மூலம் ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1:**

- அன்றாடம் ஏற்படும் ஆபத்துக்களைப் பற்றி மாணவருடன் அனுபவங்களைக் கொண்டு கலந்துரையாடுங்கள்.
- அதில் வகுப்பில் உள்ள மாணவர்கள் முகங் கொடுத்த ஆபத்துக்கள், மாணவர்களுக்குத் தெரிந்தவர்கள் முகங் கொடுத்த ஆபத்துக்கள், அவர்கள் கண்ட ஆபத்துக்கள் ஆகியன பற்றிய கருத்துக்களை முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பாடசாலையில்/வகுப்பில் மாணவர்கள் முகங் கொடுத்த ஆபத்துக்களைக் கீழே குறிப்பிடப் பட்டுள்ளவாறான அட்டவணையொன்றைப் பயன்படுத்தி நிரப்புவதற்குக் குழுக்களாக வழிப்படுத்துங்கள்.

| மாணவர் | ஆபத்து ஏற்பட்ட விதம் | ஆபத்து ஏற்பட்ட இடம் | ஏற்பட்ட தீங்கு |
|---|---|---|---|
| நிமல் | கால் வழுக்கி விழுதல் | விளையாட்டு மைதானம் | காலில் காயம் |
| சுபாஷ் | மரத்தில் இருந்து விழுதல் | வீட்டுத்தோட்டம் | கை உடைந்தது |
| நிமாலி | பட்டாசு வெடிக்கும்போது | வீட்டில் | கண்ணில் காயம் |

- மேலுள்ள அட்டவணையில் இருந்து பின்வரும் விடயங்களை வலியுறுத்திக் கலந்துரை யாடுங்கள்.
    - ⁕ கூடுதலாக நிகழ்ந்துள்ள ஆபத்துக்கள் யாவை?
    - ⁕ ஆபத்து ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
    - ⁕ ஆபத்து ஏற்படுவதற்கான இடங்கள் யாவை?
    - ⁕ ஆபத்துக்களினால் நேரக்கூடிய தீங்குகள் யாவை?
    - ⁕ ஆபத்துக்கள் பல்வேறு காரணங்களினால் ஏற்பட முடியும் என்பது போன்ற விடயங்களை வலியுறுத்தி பாடசாலையில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் யாவை என்பது பற்றி மாணவர்கள் அறியச் செய்யுங்கள்.
- ஆபத்தொன்று நிகழ்ந்ததன் பின்னர் அதற்குப் பரிகாரஞ் செய்வதனை விட ஆபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வது மிகவும் முக்கியம் எனவும் மாணவருக்கு எடுத்துக்கூறுங்கள்.
- அவ்விதமாக மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆபத்தான சந்தர்ப்பங்களின்போது செய்யக்கூடியதாக இருந்தவை யாவை என்பது பற்றியும் மாணவர்களுக்கு ஆலோசனைகளை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- முடியுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ஆபத்தான இடங்களையும் சந்தர்ப்பங்களையும் தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இங்கு மாணவருக்கு வலியுறுத்துங்கள்.

செயற்பாடு 2

- பாடசாலையில் போன்றே வீட்டிலும் கவனமின்மையின் காரணமாக ஆபத்து ஏற்பட முடியும் என மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.
- அவ்விதமாக வீட்டில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் பற்றிக் கீழே காட்டப்பட்டுள்ள விதத்திலான உதாரணங்கள் மீது அவதானத்தைச் செலுத்தி உரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.

***உதாரணம்***
- மின்னல் தாக்குதல்
- வாயு கசிவதனால் உடல் தீப்பிடித்தல்
- மண்ணெண்ணெய்க் குப்பி விளக்கு கவிழ்வதனால் தீப்பிடித்தல்
- பிழையான விதத்திலும் கவனமின்றியும் கருவிகளைப் பயன்படுத்துவதனால் காயங்கள் ஏற்படுதல்
- குளிக்கச் சென்று கிணற்றில் இருந்து நீரை அள்ளும் போது ஆபத்து ஏற்படுதல்
- கவனமின்றி மருந்துத் திரவங்களை அருந்துதல்
- செல்லப்பிராணிகளினால் கடிபடுதல் (நாய், பூனை, அணில்)
- மேசையொன்றின் மீது பொருள்கள் வைக்கப்பட்டிருக்கும் போது மேசை விரிப்பை இழுப்பதனால் பொருள்கள் உருண்டு விழுந்து பல்வேறு ஆபத்துக்கள் நிகழுதல் (மேசையின் மீதுள்ள குப்பி விளக்கு போன்றன சரிந்து விழுதல், வெந்நீர் பாத்திரம் சரிந்து விழுதல்)

- மேற்குறிப்பிட்ட விதமான ஆபத்துகளைப் பற்றி வலியுறுத்தி, தனதும் மற்றையவர்களினதும் பாதுகாப்பைக் கருதும் விதத்தில் ஆபத்தில்லாதவாறு எச்சரிக்கையுடன் செயலாற்றவேண்டிய விதத்தின் மீது அவதானத்தை வழிப்படுத்துங்கள்.
- தனக்குப் போன்றே மற்றையவர்களுக்கும் மிருகங்களுக்கும் ஏற்படக்கூடிய ஆபத்துக்களைத் தவிர்த்துக் கொள்வதற்குச் செயற்படுதல் நல்லவர்களின் இயற்பண்பொன்றாகும் எனவும் எடுத்துக்காட்டுங்கள்.
- ஏதேனும் ஆபத்தொன்று நேர்ந்த சந்தர்ப்பத்தில் எம்மால் செய்யக்கூடியதையும் செய்ய வேண்டியதையும் பற்றி மாணவர் மிகவும் நன்றாக அறிந்துகொள்வதற்காகப் பாடசாலையினுள் முதலுதவிப் பாசறையொன்றை ஒழுங்குசெய்யுங்கள். இதற்கு நிறுவனங்களின் ஒத்தாசையைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளைத் திட்டமிடுங்கள்.

***உதாரணம்***
- செஞ்சிலுவை ஒழுங்கமைப்பு
- சுகாதார சேவை பணிப்பாளர் அலுவலகம்
- இலங்கை பொலிஸ் ...... போன்ற நிறுவனங்களும் ஒழுங்கமைப்புகளும்

- பாடசாலையில் மாணவருக்கு ஆபத்து ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் முதலுதவி வழங்குவதற்கும் தேவையான மற்றைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் ஆசிரியரின் வழிகாட்டலின் கீழ் எந்நேரமும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுங்கள்.

***உதாரணம்***
- காயம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் மருந்து போடுதல்.... போன்ற சந்தர்ப்பங்கள்

- மேலே குறிப்பிடப்பட்ட ஆபத்தான சந்தர்ப்பங்களைப் போலச்செய்தல் மூலம் முன்வைப்பதற்கு எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களின் முன்வைப்புகளைப் பாராட்டுங்கள்.

செயற்பாடு **3**

- அண்மைக்காலத்தில் எமது சுற்றுப்புறச் சுற்றாடலில் ஏற்பட்ட ஆபத்துக்களைக் காட்டும் புகைப்படங்கள், செய்திகள், காணொளி ஆகியன சிலவற்றை வகுப்பில் சேகரித்துவையுங்கள்.
- இவ்வாறான ஆபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணமான விடயங்களைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடலொன்றைக் கட்டியெழுப்புங்கள்.

  ***உதாரணம்***
  - வெள்ளப்பெருக்கு
  - மண்சரிவு
  - திடீர்த் தீப்பற்றல்
  - உணவு நஞ்சாகுதல் .... போன்ற நிலைகள்
- இவ்விதமான ஆபத்துக்கள் நிகழுவதனைக் குறைத்துக் கொள்வதற்காக மாணவராகச் செய்யக்கூடியனவற்றைப் பற்றி உரையாடுங்கள்.

  ***உதாரணம்***
  - நீர் வழிந்தோடும் வழிகள் தடைப்படும் விதத்தில் குப்பைகளைக் கொட்டாதிருத்தல்
  - மரம் நடுதல்
  - தீயைப் பயன்படுத்தும் போது எச்சரிக்கையாக இருத்தல்
  - பாதுகாப்பற்ற விதத்தில் உணவுகளையும் பானங்களையும் உட்கொள்ளுதலைத் தவிர்த்தல்
- இவ்வாறு தான் வாழும் அண்மைச் சுற்றாடலிலும் பல்வேறு ஆபத்தான இடங்கள் இருக்க முடியும் என்பதனாலும் விளக்கமின்றியும் கவனமின்றியும் காரியாமற்றுவதனாலும் அவ்வாறான இடங்களில் ஆபத்துக்கள் ஏற்பட முடியும் என மாணவர்களுக்கு எடுத்துக் காட்டுங்கள். (மாணவர்கள் வாழும் சுற்றாடலின் நிலையின் மீது இங்கு அவதானத்தை வழிப்படுத்துங்கள்.)

  **ஆபத்துக்கள் நிகழக்கூடிய இடங்களுக்கான உதாரணங்கள்:**
  - மூடி வைக்கப்படாத கிணறுகளும் குழிகளும்
  - மூடி வைக்கப்படாத கிடங்குகள்
  - ஆறுகள் (ஆழமான இடங்கள், முதலைகள் அதிகமாகவுள்ள இடங்கள்)
  - கால்வாய்கள் (நீர்ப்பாசி பிடித்த கற்களுடனானவை)
  - பாதுகாப்பற்ற மரங்கள் (இற்றுப் போனவை)
  - அடர்ந்த காடுகள் (முட்கள், பாம்புகள் ஆகியவற்றைக் கொண்டவை)
  - நடைப் பாலங்கள் போன்ற இடங்கள்
  - மாடுகள், ஆடுகள், பாம்புகள், நாய்கள் போன்ற மிருகங்கள் நடமாடும் இடங்கள்
  - பாதையில் நீர் நிரம்பிய குழிகள் உள்ள இடங்கள்
  - உடைந்த போத்தல் துண்டுகள், ஆணிகள் போன்றன கவனமின்றி போடப்பட்டுள்ள இடங்கள்
  - வாகனங்களில் பயணஞ்செய்யும் போது தலை, கை போன்ற உடற்பகுதிகளை வாகனத்திற்கு வெளியே வைத்துக் கொண்டு செல்வதனால் ஏற்படும் ஆபத்துகள்
  - சஞ்சிகைகள், செய்தித் தாள்கள் போன்றவற்றை வாசித்துக் கொண்டு, நண்பர்களுடன் உரையாடிக் கொண்டு பாதையில் செல்வதனால் வாகனங்களில் மோதி ஏற்படும் ஆபத்துக்கள்
  - பாதுகாப்பற்ற மின்சாரப் பயன்பாட்டினால் ஏற்படும் ஆபத்துக்கள்
  - கையடக்கத் தொலைபேசியைப் பயன்படுத்திக் கொண்டு பயணஞ்செய்தல் போன்ற பெரும்பாதையில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள்

- மேலே காட்டப்பட்டுள்ள விதத்தில் பாதுகாப்பற்ற இடங்களில் நிகழக்கூடிய ஆபத்துக்களின் இயல்புகளையும் அவ்வாறான இடமொன்றில் ஆபத்தொன்று ஏற்பட்டால் நடவடிக்கை எடுக்கவேண்டிய விதத்தைப் பற்றியும் அவ்வாறான சந்தர்ப்பமொன்றில் செய்யலாகாத வற்றையும் பற்றி மாணவருடன் கலந்துரையாடித் தகவல்களைச் சேகரியுங்கள்.

| ஆபத்து | ஆபத்து ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் உடனடியாகச் செய்யவேண்டியவை | செய்யலாகாதவை |
|---|---|---|
| மயக்கம் ஏற்படுதல் | நோயாளிக்கு நன்றாக மூச்செடுத்து விடக்கூடியவாறான பொருத்தமான சூழலை வழங்குதல் | நோயாளியைச் சுற்றிக் கூடியிருத்தல். நோயாளிக்கு நீர் புகட்டுவதற்கு முயற்சித்தல் |
| நாய் கடித்தல் | ஓடிக்கொண்டிருக்கும் சுத்தமான நீரினால் சவர்க்காரம் இட்டு நன்றாகக் கழுவுதல் | கடித்த இடத்தை துணிக் கீலங்களினால் கட்டுதல். கைமருந்து இடல் |
| இன்னொருவர் நீரில் மூழ்குதல் | உதவி கோரி சத்தமிடுதல். கூடிய விரைவில் வளர்ந்தோர் ஒருவருக்கு அறிவித்தல் | காப்பாற்றுவதற்கு தான் நீரில் குதித்தல். ஆபத்து ஏற்பட்டிருப்பதை யாருக்கும் அறிவிக்காமல் இருத்தல். |

- அறிமுகமற்ற / பாதுகாப்பற்ற / தனக்கு பரிச்சயமற்ற நபர்களுடன் செயலாற்றும்போதும் செயற்பட வேண்டிய விதம் பற்றி மாணவருக்கு விளங்கப்படுத்துங்கள்.
- அவ்வாறு தனக்குப் பாதுகாப்பில்லை என உணரும் சந்தர்ப்பம் ஏற்படின் அது பற்றி நம்பகமான வளர்ந்தோர் ஒருவருக்கு அறிவிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றி மாணவருக்கு வலியுறுத்துங்கள்.

### செயற்பாடு 4

- எல்லா மாணவருக்கும் ஒன்று வீதம் கிடைக்கக்கூடியவாறு சிறிய அட்டைகளை வழங்குங்கள். அவற்றில் தமக்குத் தெரிந்த எந்தவொரு நோயினதும் பெயரை எழுதுவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- பின்வருமாறான விதத்திலான அட்டவணையொன்றை ஆசிரியர் எழுதிப் பலகை ஒன்றின் மீது / பிரிஸ்டல் அட்டையொன்றின் மீது காட்சிப்படுத்துங்கள்.

| ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குத் தொற்றக்கூடிய நோய்கள் | மற்றைய நோய்கள் |
|---|---|
| உதாரணம்: வைரஸ் காய்ச்சல் | உதாரணம்: நீரிழிவு |

- பின்னர் மாணவர் எழுதியுள்ள அட்டைகளிடையே ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்குத் தொற்றக்கூடிய நோய்கள் யாவை என இனங்காணுங்கள்.
- இவ்வட்டவணையையும் பயன்படுத்தி ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்குத் தொற்றக்கூடிய நோய்களைப் பற்றி மாணவருக்கு அறிமுகஞ்செய்யுங்கள்.

- அவ்வாறான நோய்கள் தொற்றுதலைத் தடுப்பதற்குச் செய்யவேண்டியவற்றைப் பற்றிய ஆலோசனைகளை முன்வைப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

  ***உதாரணம்***
  - இருமல், காய்ச்சல், தடிமல், தும்மல் ஆகியன ஏற்படும்போது கைக்குட்டையினால் வாயையும் மூக்கையும் மறைத்துக் கொள்ளல்
  - மனிதர்கள் நடமாடும் இடங்களில் அதிகமாக இருக்காதிருத்தல்
  - விரைவாக வைத்திய சிகிச்சை பெறுதல் போன்ற விடயங்களைப் பற்றி மாணவருக்கு விளங்கப்படுத்துங்கள்.
- எமக்கு ஏதேனும் நோய் ஏற்பட்டால் அது மற்றையவர்களுக்குத் தொற்றக்கூடிய சந்தர்ப்பங்களை முடிந்தளவு குறைத்துக் கொள்ளக்கூடியவாறு நடவடிக்கை எடுத்தலும் நடந்து கொள்ளலும் நற்பண்புகளாகும் எனவும் இங்கு எடுத்துக்காட்டுங்கள்.
- அவ்வாறே நோயுற்ற நபர்களைத் தாமும் பாதுகாப்பாக இருக்கும் விதத்தில் உதவி வழங்குதலின் முக்கியத்துவத்தை மரபுக் கதைகளையும் புராணக் கதைகளையும் பயன்படுத்தி விளங்கப்படுத்துங்கள்.
- அவ்வாறான நற்பண்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு மாணவரை ஊக்குவியுங்கள்.

செயற்பாடு 5

- "ஆபத்துக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வோம்" எனும் கருப்பொருளின் கீழ் சுவரொட்டி தயாரிப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இதற்கு மாணவரை மூன்று மட்டிலான குழுக்களாக்குங்கள்.
- சுற்றாடலில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள், வீட்டில் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் ஆகியவற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்ளல், பாடசாலையில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களில் இருந்து பாதுகாத்துக் கொள்ளல் எனும் மூன்று தலைப்புகளின் கீழ் மூன்று மாணவர் குழுக்களுக்கும் சுவரொட்டிகளைத் தயாரிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரினால் தயாரிக்கப்பட்ட சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்துங்கள், பாராட்டுங்கள்.

செயற்பாடு 6


- அன்றாடம் செய்யப்படும் பல்வேறு காரியங்களின் போது பாதுகாப்பாகவும் எச்சரிக்கையாகவும் காரியமாற்ற வேண்டிய விதத்தைப் பற்றி அறிவுறுத்தும் பாடல்களை நீங்கள் நிர்மாணியுங்கள்.
- அவற்றை மாணவருடன் சேர்ந்து பாடுங்கள்.

  ***உதாரணம்***
  - உயரமான மரங்களில் ஏற வேண்டாம் - கால் வழுக்கி விழுவீர்கள்<br>ஆழந் தெரியாத நீரில் இறங்கி - விளையாடுதல் வேண்டாம்<br>அது உண்மை உண்மை உண்மை
  - திரிந்து செல்லும் நாய்கள் - கடிக்கும் கவனமாக இருங்கள்<br>பாதையில் மாட்டு மந்தை - தவிர்த்துக் கொள்ளுங்கள்<br>அது உண்மை உண்மை உண்மை
  - தலையை, கையை வெளியில் போட்டு - செல்ல வேண்டாம் வாகனத்தில்<br>புத்தகங்களை வாசித்துக் கொண்டு - செல்ல வேண்டாம் பெரும்பாதையில்<br>அது உண்மை உண்மை உண்மை
  - பெரும்பாதையில் செல்வோரை அழைத்தல் - கூடாது கூடாது<br>இருவருமே முகமன் கூறுவீர் - மேலோகத்தில்<br>அது உண்மை உண்மை உண்மை

    - பிள்ளைகளே இங்கே கேளுங்கள் - நான் சொல்வதைக் கேளுங்கள் பாதுகாப்பிற்கும் எச்சரிக்கைக்கும் - இவற்றை மனதில் பதித்துக் கொள்ளுங்கள்.
- மாணவரின் ஆற்றலை பாராட்டுங்கள்.

செயற்பாடு 7

- சமநிலையையும் பாதுகாப்பையும் காட்டிச் செய்யக்கூடிய கீழே காட்டப்பட்டுள்ள விதத்திலான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இதற்கு 1 மீற்றர் நீளமுள்ள 15 தடிகளையும் 3 கோப்பைகளையும் சேகரித்துக் கொள்ளுங்கள்.
- மாணவரை ஐவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.
- அவற்றுள் மூன்று குழுக்களை அழைத்து மூன்று வரிசைகளாக நிற்பதற்கு ஒழுங்கு செய்யுங்கள். வரிசைகளுக்கிடையே உள்ள இரு மாணவர்களுக்கிடையே உள்ள தூரம் 7/8 மீற்றர்கள் மட்டில் இருக்க வேண்டும்.




- ஒவ்வொரு குழுவிலும் ஆரம்பக் கோட்டில் நிற்கும் முதலாவது மாணவர் தனது கையிலுள்ள கோலை மேலே உயர்த்துமாறு கூறி அதன் மீது தொப்பி ஒன்றை வையுங்கள்.
- ஆசிரியர் வழங்கும் கட்டளைக்கேற்ப அம்மாணவர்கள் இரண்டாவது மாணவரிடம் ஓடிச்சென்று தமது கோலில் உள்ள தொப்பியைக் கையால் தொடாமல் கோலின் உதவியுடன் இரண்டாமவரின் கையிலுள்ள கோலின் மீது இட வேண்டும்.
- இரண்டாவது மாணவரும் முதலாவது மாணவர் செய்த அதே விதத்தில் தொப்பியை மூன்றாவது மாணவருக்கு வழங்க வேண்டும்.
- இவ்விதமாக ஐந்தாவது மாணவர் வரையில் தொப்பியை மாற்றிச்சென்றதன் பின்னர் அம்மாணவர் முடிவுக்கோடு வரை ஓட வேண்டும்.
- விரைவாகப் போட்டியை நிறைவுசெய்யும் குழு வெற்றி பெறும்.
- இவ்விளையாட்டை குழுக்களின் அளவையும் குழுவொன்றிலுள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும் அதிகரிப்பதனாலும் நடத்தலாம்.

## 08. கருப்பொருள் : நீர்

நீர் ஓர் இயற்கை வளமாகும். எமக்கு நீர் கிடைக்கும் வழிகள் பல உள்ளன. மனிதன் அன்றாடம் நீரினால் பல பயன்கள் பெறுகிறான். அன்றாடம் நீர் வீண்விரயமாவதைத் தவிர்த்தல், நீரை மாசுபடுத்துவதைத் தவிர்த்தல் போன்ற அம்சங்கள் பற்றிய அனுபவங்களை வழங்கவும் நீரை இயற்கையான ஒரு வளமாக மதித்து, அதனைப் பாதுகாப்பாக உபயோகிக்கும் நல்ல மனப்பாங்கைக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன் இக்கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.

**தேர்ச்சிகள் :**

- நீருடன் பல்வேறுபட்டவை செயற்படும் விதத்தைத் துருவியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- பல்வேறு விதங்களில் சேகரிக்கப்படும் நீரை வினையாற்றலுடனான முகாமைத்துவத்துடன் பாதுகாப்பாக நுகர்விற்கு எடுப்பார்.
- நீரினால் ஏற்படக்கூடிய தீங்குகளையும் விபத்துகளையும் பற்றித் தேடியாந்து அவற்றைக் குறைத்துக் கொள்வதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- நீரின் செயற்பாட்டுத்தன்மை தொடர்பான பல்வேறு ஆக்கங்களில் ஈடுபடுவார்.
- நீர் தொடர்பாக ஆக்கப்பட்டுள்ள விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நீருடன் தொடர்புபட்ட பல்வேறு சந்தர்ப்பங்களை இரசனையுடன் முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள்:**

- நீரினால் சுற்றாடல் அழகுபடுத்தப்பட்டுள்ள விதம் பற்றித் தனது கருத்தைக் கூறுவார்.
- நீர் வரையறுக்கப்பட்ட வளம் என்பதை இனங்கண்டு சிக்கனமாகப் பயன்படுத்துவார்.
- நீரைச் சுத்திகரிக்கும் முறைகள் யாவையெனக் கூறுவார்.
- எமக்கு நீர் கிடைக்கும் விதம் பற்றிய மாதிரியை நிர்மாணிப்பார்.
- நிறமூட்டப்பட்ட நீரைப் பல்வேறு ஆக்கங்களுக்காகப் பயன்படுத்துவார்.
- நீரினால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பான விளக்கத்துடன் செயலாற்றுவார்.
- நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் மனப்பாங்கை விருத்தி செய்வதற்கு ஆக்கபூர்பமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நீரையும் நீரைச் சேகரிக்கும் கருவிகளையும் பயன்படுத்தி லயத்துடனான அசைவுகளை முன்வைப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1 :**

- எம்மைச் சுற்றியுள்ள சுற்றாடலில் உள்ள அநேகமானவற்றைப் போன்றே நீரினாலும் சுற்றாடல் மிகவும் கவர்ச்சிகரமானதாகும் என்பது பற்றி மாணவரின் கவனத்தை வழிப்படுத்துவதற்கு சுமுகமான உரையாடலொன்றில் ஈடுபடுங்கள்.
- அவ்வுரையாடலில் பின்வரும் விடயங்களை வெளிக்கொணருங்கள்.
  - ✱ ஆறுகள், அருவிகள், ஓடைகள், குளங்கள், வாவிகள், நீர்வீழ்ச்சி போன்றவற்றினால் ஏற்படும் அழகு
  - ✱ நீர் நன்றாகக் கிடைப்பதனால் மரஞ்செடிகள் உயிர்ப்புற்று அதனால் சுற்றாடலுக்குக் கிடைக்கும் சௌந்தர்யம்

* நீர் நிறைந்துள்ள இடங்களில் மிருகங்கள் நடமாடுவதனால் அவ்வாறான சுற்றாடல்களில் ஏற்படும் அழகு போன்ற விடயங்கள்

- இவ்வாறாக நீரினால் சுற்றாடல் மிகவும் அழகாக மாணவர்கள் காணும் இடங்களை / சந்தர்ப்பங்களைப் பற்றிய மாணவரின் அனுபவங்களை விசாரியுங்கள்.
- அவ்விடங்கள் அழகாகக் காணப்படுவது ஏன் என்பது பற்றி மாணவரிடம் விசாரியுங்கள்.
- அதில் கீழுள்ள விடயங்களையும் வெளிக்கொணருங்கள்.

***உதாரணம்*** :
- உயரமான இடத்தில் இருந்து கீழ் நோக்கி விழுதல் (நீர் வீழ்ச்சி)
- மெதுவாகப் பாய்ந்து செல்லுதல்
- கற்களில் மோதுதலும் கற்களிடையே வேகமாகவும் மெதுவாகவும் பாய்ந்து செல்லுதல் ..... போன்றன

- நீரின் காரணமாகச் சுற்றாடல் மிகவும் அழகாகின்றது என்பதனை இக்கலந்துரையாடல் மூலம் மேலும் வெளிக்கொணர்ந்து காட்டுங்கள்.

செயற்பாடு 2

- நீர் என்பது எம்மால் மிகவும் பாதுகாப்பாகப் பயன்படுத்தப்பட வேண்டிய மிகவும் பெறுமதி வாய்ந்த வளம் என்பதை மாணவருக்கு எடுத்துக்காட்டுங்கள்.
- நீர் இல்லாமற் போவதனால் வறட்சி போன்ற நிலைகள் ஏற்பட முடியும் எனவும் அவ்வாறான நிலைகளில் மனிதர்களும் மிருகங்களும் பல்வேறு விதங்களில் படும் துன்பத்தைப் பற்றிக் காட்டும் நிழற்படங்களை அல்லது காணொளிகளைப் பயன்படுத்தி மாணவருக்கு உணர்வூட்டும் விதத்தில் உரையாடலொன்றைக் கட்டியெழுப்புங்கள்.
- எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இவ்வாறான வறட்சி நிலைகளைக் குறைத்துக் கொள்வதற்கு நாம் செய்யக்கூடியனவற்றைப் பற்றி மாணவரிடம் விசாரியுங்கள்.
- அதற்கு எடுக்கக்கூடிய மிகப் பிரதானமான படிமுறையொன்றாக நீர் விரயமாகாத விதத்தில் நுகர முடியும் என்பதை மாணவர் அறிந்து கொள்ளச் செய்யுங்கள்.
- அன்றாடம் நாம் செய்யும் அநேகமான காரியங்களில் எமது கவனக்குறைவின் காரணத்தினால் அநேகமான நீர் விரயமாகின்றது எனக் காட்டுவதற்கு மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- நீரை ஊற்றி வைப்பதற்குப் பொருத்தமான சுத்தமான ஒரு சிறிய குடம், இரு கோப்பைகளும் இரு பேசின்களும், சம அளவிலான ஊடுகாட்டும் மூன்று போத்தல்கள் ஆகியவற்றைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.
- குடத்தை நீரினால் நிரப்பிக் கொள்ளுங்கள்
- வகுப்பில் உள்ள அனைத்து மாணவர்களுடன் பேசின்களையும் கோப்பைகளையும் எடுத்துக் கொண்டு நீர்க் குழாய் அருகில் செல்லுங்கள்.
- நீர்க் குழாயின் கீழ் பேசின் ஒன்றை வையுங்கள்.
- மாணவர் ஒருவரை முன்னால் அழைத்து, குழாயைத் திறந்து நீரை அருந்துமாறு கூறுங்கள்.
- அம்மாணவர் குழாயைத் திறந்து நீரை அருந்தும் போது வெளியேறிய நீர் சேகரிக்கப்பட்ட பேசினை ஒரு பக்கத்தில் வையுங்கள்.
- மற்றைய பேசினை மீண்டும் குழாயின் கீழ் வைத்து இன்னொரு மாணவரின் கையில் கோப்பையொன்றைக் கொடுத்து, குழாயைத் திறந்து நீரைப் பெற்று அருந்துமாறு கூறுங்கள்.
- மாணவருக்குக் கோப்பையில் எடுத்த நீர் அனைத்தையும் அருந்த முடியவில்லை எனின்,

எஞ்சியதை பேசினுள் இடுமாறு கூறுங்கள்.

- இன்னொரு மாணவரை முன்னால் அழைத்துக் கோப்பையொன்றைக் கையில் கொடுத்து குடத்தில் இருந்து நீரை எடுத்து அருந்துமாறு கூறுங்கள்.
- குடத்தின் வாய் மடியும் இடத்தின் கீழ் இன்னொரு பேசினொன்றை வையுங்கள். முன்பு போல அருந்துவதற்கு எடுத்த நீர் எஞ்சியிருப்பின் அந்நீரையும் மீண்டும் பேசினுக்குள் இடுமாறு கூறுங்கள்.
- அதன் பின்னர் அந்த எஞ்சிய நீரை விரயமாகாதவாறு ஊடுகாட்டும் சமனான போத்தல் மூன்றிலும் இடுங்கள்.
- ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நீரை அருந்தும் போது பேசின்களில் சேகரிக்கப்பட்ட நீரை போத்தல்களில் இட்டு அவ்வச் சந்தர்ப்பங்களில் நீரை அருந்திய மாணவர்களுக்குக் கொடுங்கள்.
- அதற்கேற்ப கூடுதலாக நீர் விரயமாகி இருப்பது எவ்விதத்தில் நீரை அருந்தும்போது என்பது பற்றி அவதானிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- மாணவரின் அவதானிப்பின் மூலம் நீர் விரயமாகாத விதத்தில் நுகர்வதற்கு மிகவும் பொருத்தமான முறையைத் தெரிவு செய்வதன் முக்கியத்துவத்தைப் பற்றிச் சிந்திப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 3

- மனிதர்கள் அன்றாட தேவைகளுக்காக நீரைப் பெற்றுக் கொள்ளும் முறைகள் பற்றிய நிழற்படங்களை அல்லது உருப் படங்களை மாணவருக்கு முன்வைத்துப் பெருமளவில் பயன்படுத்தப்படும் பிரதேசங்களை அறிமுகஞ் செய்யுங்கள்.

***உதாரணம்*** :
- கிணறு
- துலாக் கிணறு
- வாவி
- ஓடும் நீர் (ஆறு / ஓடை / வாய்கால்)
- பீலி
- நீர்க் குழாய்/குழாய்க் கிணறு

- இவற்றிடையே பாடசாலையில் நீரைப் பெறுவதற்குப் பயன்படுத்தப்படும் முறை / முறைகள் யாவை எனக் கலந்துரையாடுங்கள். அந்நீர் வழங்கலை / வழங்கல்களை அவதானிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- பின்னர் ஒவ்வொரு மாணவரினதும் வீட்டுக்கு நீர் பெற்றுக் கொள்ளப்படும் விதத்தைப் பற்றி விசாரியுங்கள்.

***உதாரணம்*** :
- ஊற்றுகள் / ஓடும் ஓடைகளுக்குக் குறுக்கே அணை கட்டுதல் / நீர்த்தாங்கி
- அம்முறைகளில் நீரைப் பெறுவது எவ்வாறு? (கயிற்றுடனான வாளி / நீர்க்குழாயைத் திறத்தல் / குடத்தில் எடுத்துச்செல்லல் போன்றன மூலம்)
- நீருள் கழிவுப் பொருள்கள் (குப்பைக் கூளங்கள்) விழுதல் தடுக்கப் பட்டுள்ளதா? (கிணற்றுக்கு மேலே வலையொன்று பொருத்தப்பட்டிருத்தல் / கொங்கிறீட் மூடியினால் மூடப்பட்டிருத்தல்)

- பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள உத்திகள் யாவை? (கிணற்றைச் சுற்றிக் கட்டொன்று / நீர்க் குழாயின் கீழே வழுக்குதலைத் தவிர்ப்பதற்கான முறையொன்று)
    - நீரைச் சேகரித்து வைக்கும் முறை யாது? (பாடசாலைக்குக் கொங்கிறிட் / பிளாஸ்திக் நீர்த் தாங்கி / மூடியும் பிடியும் உள்ள பாத்திரம், குடம்)
    - மேலதிக நீரை வெளியேற்றும் முறையொன்று பயன்படுத்தப்பட்டுள்ளதா? (வடிகால்)
    - அந்நீர் மீண்டும் பயன்படுத்தப்படுகிறதா?

- நீர் வழங்கல் சபையினால் அல்லது பிரதேச நிர்வாக அதிகாரசபையினால் விநியோகித்த சில சிட்டைகளை வகுப்பறையில் முன்வையுங்கள்.
- பாடசாலைக்கும் வீடுகளுக்கும் நீரைப் பெற்றுக் கொள்ளும்போது பெரும் முயற்சியைப் போன்றே பெரும் பணத்தொகையொன்றும் செலவாகின்றது எனவும் அதனால் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் எமது சக்திமிக்க கடமையொன்றெனவும் விளங்கிக்கொள்வதற்கு வசதி செய்யுங்கள்.
- வறட்சிக் காலத்தில் நீர் வளம் குறைவடைகிறதெனவும் அது இயற்கை வளமொன்று என்பதனால் மீண்டும் உற்பத்தி செய்யப்பட முடியாதது எனவும் அதனால் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நீரைச் சிக்கனத்துடன் பயன்படுத்த வேண்டும் எனவும் வலியுறுத்துங்கள்.
- கிணறுகளின் நீர் மட்டத்தின் மீது மழை தாக்கமேற்படுத்தும் விதம், காடழித்தலினால் மழை குறையும் விதம், வறட்சிக் காலம் அதிகரித்தல் ஆகியன பற்றி அவதானத்தை வழிப்படுத்தி இங்கு உரையாடுங்கள்.


செயற்பாடு 4

- ஆதிகாலத்தில் மூதாதையர் நீரைச் சுத்திகரிப்பதற்குச் செய்தவற்றையும் தற்காலத்தில் செய்பவற்றையும் பற்றிய விடயங்களைக் கண்டறிந்து வருமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.


  ***உதாரணம்:***

| ஆதிகாலத்தில் நீரைச் சுத்தஞ் செய்த முறை | தற்காலத்தில் செய்யும் முறை |
|---|---|
| * கரியை நீரில் இடுதல் | * வடிகட்டியைப் பயன்படுத்துதல் |
| * துணியினூடாக வடித்தல் | * குளோரீன் இடுதல் |
| * கொதிக்க வைத்து ஆறவிடல் | * நீர்க் குழாய்க்கு வடிகட்டியைப் பயன்படுத்துதல் |

- இவ்வாறான பல்வேறு முறைகளைப் பயன்படுத்தி நீரைச் சுத்திகரிப்பதற்கு ஆதிகாலத்தைப் போன்றே தற்காலத்திலும் மனிதர்கள் முயற்சிக்கின்றனர் என்பதை எடுத்துக்காட்டுங்கள்.
- எமது திறந்த கண்களுக்கு நீர் சுத்தமானதாகக் காணப்பட்டாலும் அநேகமான சந்தர்ப்பங்களில் நீர் அசுத்தமடைந்து இருக்க முடியும் என்பதைக் காட்டுவதற்கு மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- வடித்தல் மூலம் நீரைச் சுத்தஞ் செய்ய முடியுமாவெனக் கண்டுபிடிப்பதற்கு பின்வரும் விதத்திலான செயற்பாட்டில் ஆசிரியருடன் சேர்ந்து ஈடுபடுவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- உருவில் காட்டப்பட்டுள்ளவாறான எளிய அடுக்கொன்றைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.
- சேறு கலந்த நீர் அல்லது நிறமூட்டப்பட்ட நீர் மாதிரியொன்றைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.




- அடியில் துளையிடப்பட்ட யோகட் கோப்பைகளின் அடியில் பஞ்சு அல்லது வெள்ளைத்துணித் துண்டொன்றை வையுங்கள். (3 அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான யோகட் கோப்பைகளைப் பயன்படுத்தலாம்.)
- சேகரித்த சேற்று நீரின் / நிறமூட்டப்பட்ட நீரின் மாதிரியொன்றை ஊடுகாட்டும் பாத்திரம் ஒன்றில் (கண்ணாடி நீர்க்குவளை) வேறுபடுத்திக் கொள்ளுங்கள்.
- எஞ்சிய பகுதியை அடுக்கில் மேலே உள்ள யோகட் கோப்பையினுள் இடுங்கள்.
- ஒவ்வொரு யோகட் கோப்பையாக அந்நீர் மாதிரி வடிந்து செல்லும் விதத்தை அவதானித்துக் கருத்துக் கூறுவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலே உள்ள யோகட் கோப்பையில் இருந்து வடிந்து செல்லும் நீரை முன்பு பயன்படுத்திய பாத்திரத்திற்கு ஒத்த ஊடுகாட்டும் இன்னொரு பாத்திரத்தில் சேகரித்துக் கொள்ளுங்கள். அதனை முதலாவது மாதிரியில் வேறுபடுத்திக் கொண்ட அளவிற்குச் சம அளவாகுமாறு பெற்றுக்கொள்ளுங்கள்.
- அந்நீருடனான ஊடுகாட்டும் பாத்திரங்களை ஒன்றுக்குப் பக்கத்தில் ஒன்றை வைத்து அவதானித்துக் கருத்துக் கூறுவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வடிகட்டியாகப் பயன்படுத்திய வெள்ளைத் துண்டுகளில் அல்லது பஞ்சுகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை அவதானிப்பதற்கும் மாணவரை வழிப்படுத்துங்கள். தேவைக்கு ஏற்ப மாணவருக்கு கைவில்லையை வழங்குங்கள்.



1 2

- இரண்டாவது பாத்திரத்தில் உள்ள சேற்று நீரினதும் / நிறமூட்டப்பட்ட நீரினதும் நிறம் முதலாவது பாத்திரத்தில் உள்ளதை விடக் குறைவடைந்துள்ளது எனினும் அது அருந்தும் அளவிற்கு சுத்தமானது அல்ல என்பதை மாணவருக்கு வலியுறுத்துங்கள்.

செயற்பாடு 5 :

- எமக்கு நீர் கிடைக்கும் விதத்தை மாதிரி மூலம் நிர்மாணிப்பதற்குத் தேவையான பொருள்களை வகுப்பறையில் சேகரித்து வையுங்கள். திறந்தவெளியில் பொருத்தமான இடமொன்றில் அவற்றைப் பயன்படுத்திக் கீழே காட்டப்பட்டுள்ளவாறான மாதிரிகளைக் குழுவொன்றுக்கு ஆக்கம் ஒன்று வீதம் செய்வதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

  ***உதாரணம்*** :
  - வடிகால்
  - நீர்த் தாங்கியுடனான தூண்
  - வாவி
  - குளம்
  - மலையிலிருந்து பாய்ந்தோடி வரும் நீர்வீழ்ச்சி
  - துலாக் கிணறு
- மாணவரின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள். பாராட்டுங்கள்.

செயற்பாடு 6 :

- வாய் ஓரளவு பெரிய 5 - 6 பேசின்களைச் சேகரித்துக்கொள்ளுங்கள். அவற்றுக்குச் சவர்க்காரம் கலந்த நீரை இட்டு உணவு தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் நிறங்களைப் பேசின் ஒன்றுக்கு ஒரு நிறம் வீதம் கரைத்துக்கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு மாணவருக்கும் வெள்ளை நிற A4 தாள் ஒன்றும் உறிஞ்சுகுழாய் ஒன்று வீதமும் வழங்குங்கள்.
- மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாக்கி ஒவ்வொரு பேசினுக்கும் அருகில் ஒவ்வொரு குழு வீதம் நிறுத்துங்கள். பின்னர் மாணவர்கள் பேசினில் உள்ள சவர்க்கார நீரிலிருந்து சவர்க்காரக் குமிழ்களை ஊதுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- அதற்கிடையே இன்னொரு மாணவர் மேலே எழும் சவர்க்கார நுரையின்மீது A4 தாளை வைத்து விரைவாக வெளியே எடுப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- அத்தாளை நன்கு காய வைப்பதற்கு சற்று நேரம் வெயிலில் வையுங்கள். பின்னர் மாணவர் செய்த ஆக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- இவ்விதமாகப் பெரிதாக ஊதப்பட்ட சவர்க்காரக் குமிழ் சிறிதாக ஊதப்பட்ட சவர்க்காரக் குமிழ் என்பவற்றைப் பயன்படுத்தியும் நிறத்தை மாற்றியும் வேறு தாள் பகுதிகளைப் பயன்படுத்தியும் A4 தாளைப் பல்வேறு விதமாக நிரப்பியும் ஆக்கங்கள் செய்வதற்கு மாணவர்களை ஊக்குவியுங்கள்.
- ஒவ்வொரு மாணவருக்கும் இவ்விதமான பல்வேறு ஆக்கங்களைச் செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- தயாரிக்கப்பட்ட சவர்க்கார நுரைகளினால் சவர்க்காரக் குமிழ்களை மேலே அனுப்பி சுதந்திரமாக மகிழ்ச்சி அடைய மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

செயற்பாடு 7 :

- பின்வரும் சம்பவத்தை மாணவர்கள் செவிமடுப்பதற்கு ஒழுங்குசெய்யுங்கள்.

  *ஒரு நாள் மூன்று நண்பர்கள் குளத்தில் குளிப்பதற்குச் சென்றனர். குளித்ததன் பின்னர் கரைக்கு வரும்போது ஒருவர் கால் வழுக்கி மீண்டும் குளத்தினுள் விழுந்தார். உண்மையில், இவர்கள் மூவரில் ஒருவருக்கும் நீந்தத் தெரியாது. குளத்தில் விழுந்த நண்பர் “என்னைக்*

*காப்பாற்றுங்கள்" என்று கத்தத் தொடங்கினார். உடனே கரையில் இருந்த இன்னொரு நண்பர் குளத்தில் விழுந்தவரைக் காப்பாற்றுவதற்காகக் குளத்தில் பாய்ந்தார். இருவருக்கும் நீந்தத் தெரியாததனால் கரைக்கு வர முடியவில்லை. கரையில் நின்ற மற்ற நண்பர் குளக்கரைக்கு மேலே ஓடி உதவி கோரி கத்தத் தொடங்கினார்.*

1. இச்சம்பவத்தில் குளத்தில் விழுந்தது நீங்கள் எனின் என்ன செய்வீர்கள்?
2. நீங்கள் நினைக்கின்ற விதத்தில் கரையில் நின்ற இரு நண்பர்களுள் புத்தியுடன் செயற்பட்ட நண்பர் யார்?
3. ஏன் அப்படி நினைக்கிறீர்கள்?

- இவ்வினாக்களுக்கு மாணவர்கள் தரும் விடைகளைப் பயன்படுத்தி நீரில் நீந்தத் தெரியாத ஒருவர் நீரில் விழுந்தால் செய்ய வேண்டியவற்றைப் பற்றிக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை வலியுறுத்துங்கள்.
  - ❋ முடிந்தவரையில் நீரின் மேற்றளத்தில் இருப்பதற்கு முயற்சி செய்தல்
  - ❋ நீரினுள் மூச்செடுத்தலைத் தவிர்த்துக் கொள்ளல்
  - ❋ நீரின் மேற்றளத்தில் மிதக்கும் ஏதேனுமொன்றைப் பிடித்துக் கொள்வதற்கு முயற்சித்தல்
- வேறொருவர் நீரில் விழுந்தால் உடனடியாகச் செய்ய வேண்டியவற்றைப் பற்றி கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை வலியுறுத்துங்கள்.
  - ❋ உதவி கோரிக் கத்துதல்
  - ❋ நீரில் மூழ்குபவருக்குப் பிடித்துக் கொள்ளக்கூடிய விதத்தில் சுற்றுப்புறத்தில் கிடைக்கக் கூடியவற்றை நீரின் மேல் மிதக்கக்கூடியவாறு நீரில் இடுதல். அதனைப் பிடித்துக் கொள்ளுமாறு கூறுதல்

    ***உதாரணம்*** :
    - ரியூப் ஒன்று
    - மரத்துண்டொன்று
    - பலகையொன்று
    - ஓரளவு பெரிய அளவிலான வாய் மூடப்பட்ட வெற்றுப் பிளாஸ்திக்குப் பாத்திரமொன்று / போத்தலொன்று
    - ஓரளவு நீளமான கயிறொன்று/துணியொன்று

    (இவ்வாறானதொன்றை நீரில் இட்டு அதனை அருகிலுள்ள உறுதியான மரம் ஒன்றில் கட்டுதல்)
- இவ்வாறான சம்பவமொன்றுக்குத் தான் முகங்கொடுக்க நேர்ந்தால் முடிந்தளவு விரைவாக வளர்ந்தோர் ஒருவருக்கு அறிவிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
- **இங்கு மிகவும் முக்கியமாவது பொருத்தமான இடமொன்றை மட்டும் குளிப்பதற்குத் தெரிவு செய்தலாகும்.**

செயற்பாடு **8 :**

- ஒரேயளவு நீரைக் கொள்ளக்கூடிய 15 போத்தல்கள் மட்டில் சேகரித்துக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொன்றிலும் ஐந்து மாணவர்களைக் கொண்ட மூன்று குழுக்களை அமைத்துக் கொள்ளுங்கள். அக்குழுக்களில் உள்ள ஒவ்வொரு மாணவருக்கும் போத்தல் ஒன்று வீதம் வழங்குங்கள்.
- மூன்று மாணவர் குழுக்களையும் மூன்று நிரல்களாக நிற்குமாறு ஒழுங்குபடுத்தி ஒவ்வொரு

நிரலிலும் முன்னால் நிற்கும் மாணவர்களுக்கு தம்மிடம் உள்ள போத்தலில் நீர் நிரப்பிக் கொள்ளுமாறு கூறுங்கள்.

- பின்னர் ஆசிரியரினால் வழங்கப்படும் சமிக்ஞைக்கு அல்லது கட்டளைக்கு ஏற்ப ஒவ்வொரு குழுவிலும் முதலாவதாக நிற்கும் மாணவர் இரண்டாவதாக நிற்கும் மாணவரின் போத்தலை தன்னிடம் உள்ள போத்தல் நீரினால் நிரப்ப வேண்டும்.
- இவ்வாறாக இரண்டாவது மாணவர் மூன்றாவது மாணவரினதும் என்றவாறு வரிசையில் ஐந்தாவது மாணவர் வரை போத்தல்களுக்கு நீரை நிரப்ப வேண்டும்.
- வரிசைகளில் இறுதியில் நிற்கும் மாணவர்கள் தமது போத்தல்களை நீரினால் நிரப்பிக் கொண்டதன் பின்னர் மற்றையவர்கள் காணக்கூடியவாறு அவற்றை மேலே தூக்கிப்பிடிக்க வேண்டும்.
- மூன்று குழுக்களிடையே கூடிய நீர் அளவை விரைவாக நிரப்பிக் கொள்ளும் குழு வெற்றி பெற்றதாகும்.
- இவ்விதமாக வகுப்பில் உள்ள மற்றைய மாணவர்களும் இச்செயற்பாட்டில் ஈடுபடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு 9

- ஒவ்வொரு மாணவருக்கும் ஒன்று வீதம் கிடைக்கக்கூடியவாறு சிறிய மண் குடங்களை வழங்குங்கள்.
- பொருத்தமான நிறத்தைப் பயன்படுத்தி அவற்றுக்கு உரியவாறு நிறந்தீட்டுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். பின்னர் அவற்றை வெய்யிலில் வைத்துக் காயவிடுங்கள்.
- மாணவர்களை இடவசதியுள்ள திறந்தவெளிக்கு அழைத்துச்சென்று முந்திய தினம் தயாரித்துக் கொண்ட குடங்களைப் பயன்படுத்தி ஆசிரியர் கூறும் பின்வரும் விதங்களிலான போலச் செய்தல்களை முன்வைப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

  ***உதாரணம்*** :
  - தலையின் மீது நீர் நிரம்பிய குடமொன்றை வைத்துக் கொண்டுசெல்லும் விதம்
  - இடுப்பில் நீர் நிரப்பிய குடமொன்றை வைத்துக் கொண்டுசெல்லும் விதம்
  - தோளின் மீது நீர் நிரம்பிய குடமொன்றை வைத்துக் கொண்டுசெல்லும் விதம்
- பின்னர் மாணவர்கள் அனைவரையும் வட்டமாக நிறுத்தி குடங்களை அவற்றின் வாயில் பிடித்துக் கொண்டு ஆசிரியர் குட நடனத்திற்கு உரிய பாடலைப் பாடும் போது குடத்தைக் கைவிடாதவாறு அசைவுகளை முன்வைப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இவ்வாறான செயற்பாடுகளை மாணவர்கள் சிறு குழுக்களாகவும் சோடிகளாகவும் செய்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஒரே குடத்தை நான்கு மாணவர்கள் வீதம் பிடித்துக்கொண்டு அசைவினை முன்வையுங்கள்.
- ஆற்றில் அல்லது ஓடையில் இறங்கி நீரில் விளையாடும் விதத்தை வெளிப்படுத்தும் இலயத்துடனான நடிப்பையும் முன்வைப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## 09. கருப்பொருள் : **போக்குவரத்து**

போக்குவரத்து, எமது வாழ்க்கையுடன் மிக நெருங்கியது. இதில் சிறியவர், பெரியவர் என்ற பேதம் கிடையாது. கடந்த காலங்களில் மிக எளிமையாக இடம்பெற்ற போக்குவரத்து நடவடிக்கைகள் தற்போது மிகவும் சிக்கலானவையாக மாறியுள்ளன. ஒருவர் சுற்றாடலுக்குத் தம்மை இசைவாக்கிக் கொள்ளும்போது இது தொடர்பாகவும் தேர்ச்சியடைந்திருப்பது அவசியமான ஒன்றாகும். மேலும் விபத்துக்களினால் மரிப்போரின் தொகை மிக அதிகமாக உள்ளது. இவ்விபத்துக்களில் சிறுவர்களும் பலியாகின்றனர். இந்த விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்வதற்கும் போக்குவரத்துத் தொடர்பாக நடைமுறையில் உள்ள நிலைமைகள் தொடர்பாகவும் மாணவர்கள் அறிந்துகொள்ளச் செய்வதற்காக இங்கு சில தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆசிரியரின் முன்னாயத்தமும் இங்கு முக்கியமானதாகும். இவை தொடர்பாக மாணவர் நடைமுறை அனுபவங்களைப் பெறுவதனூடாக தேர்ச்சிகளை அடைய ஆசிரியர் வழிகாட்ட வேண்டும்.

**தேர்ச்சிகள் :**

- பாதையில் செல்வோரினால் கடைப்பிடிக்க வேண்டிய சட்டதிட்டங்களையும் ஒழுக்கத்தையும் பற்றிய விளக்கத்துடன் பாதையைப் பயனுள்ளவாறும் பாதுகாப்பாகவும் பயன்படுத்துவார்.
- வாகனங்களினால் ஏற்படுத்தப்படும் தீங்கான தாக்கங்களை ஆராய்ந்து அவற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பார்.
- பொது வாகனங்களினால் நிறைவேற்றப்படும் சேவைகளை மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.
- போக்குவரத்துடன் தொடர்புபட்ட பல்வேறு சந்தர்ப்பங்களையொட்டி ஆக்கங்களில் ஈடுபடுவார்.
- பல்வேறு பயணங்களின் பல்வேறுபட்ட தன்மைக்கேற்ப இயக்கச் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- போக்குவரத்துடன் தொடர்பான நடத்தைகளை நகைச்சுவையுடன் முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள்:**

- தனது பாடசாலைச் சுற்றுப்புறப் பாதைகள் பற்றிய பருமட்டான வரைபடமொன்றை ஆராய்ந்து சில பிரதான இடங்களின் அமைவிடங்களைச் சுட்டிக்காட்டுவார், விளங்கப்படுத்துவார்.
- பொதுப் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களை இனங்கண்டு கூறுவார்.
- பெரும்பாதையில் நடந்து செல்லும்போது கடைப்பிடிக்க வேண்டிய சட்டதிட்டங்களை அறிந்துகொண்டு கூறுவார்.
- பெரும்பாதையில் பயணஞ்செய்யும்போது கடைப்பிடிக்கவேண்டிய சட்டதிட்டங்களைக் கடைப்பிடித்துக் கருமமாற்றுவார்.
- பெரும்பாதையில் பயணஞ்செய்யும்போது சட்டதிட்டங்களைக் கடைப்பிடிக்காமையின் காரணமாக விபத்துகள் நிகழும் என்பது பற்றிய விளக்கத்துடன் காரியமாற்றுவார்.
- விரயமாகும் பொருள்களைப் பயன்படுத்திப் போக்குவரத்துக்குப் பயன்படுத்தும் வாகனங்களின் மாதிரிகளை நிர்மாணிப்பார்.
- போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களையும் வாகனங்களைப் பயன்படுத்தும் போது காரியமாற்ற வேண்டிய விதத்தைப் பற்றியும் கூறும் கவிதைகளையும் பாட்டுக்களையும் பாடுவார்.
- போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் இயல்புகளைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

- பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படும் பயணப் பாங்குகளைப் பயன்படுத்தி மகிழ்ச்சி அடைவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுறைகள்**

**செயற்பாடு 1 :**

- பாடசாலையின் அண்மைச் சூழலில் உள்ள பாதைகள் பற்றி அறிந்துகொள்ளச் செய்வதற்காக மாணவரைப் பின்வருமாறான செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- இதற்குப் பாடசாலையைச் சுற்றியுள்ள பாதைகள் அமைந்துள்ள விதம் பற்றிக் கலந்துரை யாடுங்கள்.
- அதற்கேற்பப் பாடசாலையை மையப்படுத்தி அப்பாதைகள் பரந்துள்ள விதத்தைப் பற்றிய பருமட்டான வரைபடத்தை மாணவருடன் உரையாடி கரும்பலகையின்மீது கட்டியெழுப்புங்கள்.
- பின்னர் பாடசாலைச் சுற்றுப்புறத்தில் உள்ள சில பிரதான இடங்களை இனங்காணுங்கள்.

***உதாரணம்***
- பன்சல / கோவில் / தேவாலயம் / மஸ்ஜித்
- பொலிஸ் நிலையம்
- பேருந்து தரிப்பிடம்
- அஞ்சல் அலுவலகம் ....... போன்ற இடங்கள்

- இவ்விடங்களுள் ஒன்றை மாணவரின் விருப்பத்திற்கேற்பத் தெரிவுசெய்து அவ்விடம் வரை பாடசாலையிலிருந்து பயணம் செய்யவேண்டிய பாதையைக் காட்டுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இங்கு அவ்விடம் வரையில் செல்லக்கூடிய பாதைகள் சில இருப்பின் மிகக்கிட்டிய பாதை யாது என்பது பற்றி மாணவரின் கவனத்தை வழிப்படுத்துங்கள்.
- இவ்வாறாக முன்னர் இனங்கண்ட மற்றைய இடங்களுக்குப் பயணம் செய்யக்கூடிய விதம் பற்றியும் ஒவ்வொன்றாகக் கலந்துரையாடுங்கள்.
- அவ்வாறு பயணஞ் செய்யும்போது சந்திக்கும் ஒவ்வொரு பாதைகளிலும் காணக்கூடிய வேறுபாடுகளையும் இயல்புகளையும் பற்றிய தகவல்களைக் கலந்துரையாடுங்கள்.


  ***உதாரணம்:*** தார் இடப்பட்ட பாதை, ஒற்றையடிப் பாதை, ..... போன்றவாறு
- மாணவர்கள் ஒவ்வொரு நாளும் பாடசாலைக்கு வரும் விதம் பற்றி அவர்களுடன் கலந்துரை யாடுங்கள்.

***உதாரணம்***
- நடந்து
- பேருந்து
- பாடசாலை வாகனம்
- சைக்கிள்/மோட்டார் சைக்கிள்
- புகையிரதம்

- மாணவரைச் சோடிகளாக்குங்கள்.
- இவ்வாறு மாணவர்கள் வீட்டில் இருந்து பாடசாலைக்கு வரும் பாதையை ஒவ்வொரு சோடியில் உள்ள மாணவர்கள் ஒருவருக்கொருவர் கூறுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்ட சில மாணவர்களுக்கு அவர்கள் வீட்டில் இருந்து பாடசாலைக்கு வரும் விதத்தைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு 2:

- பாடசாலையின் திறந்தவெளியில் பொருத்தமான இடமொன்றில் பாடசாலையை மையமாக வைத்து (செயற்பாடு 1 இல் கலந்துரையாடியவாறு) சுற்றுப்புறத்தில் உள்ள சில இடங்களுக்கு பயணஞ் செய்யக்கூடிய விதத்தில் கிடைப்படமொன்றைக் கட்டியெழுப்புங்கள்.
- குறிப்பதற்காகப் பொருத்தமான சாதனங்களைப் பயன்படுத்துங்கள்.
- கிடைப்படத்தைத் தயாரிக்கும்போது அண்மைச் சுற்றாடலில் மாணவர்கள் இலகுவாகப் பயணப் பாதையைக் கூறக்கூடிய இடங்களைத் தெரிவுசெய்யுங்கள்.




- மாணவரொருவரைப் பாடசாலையில் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் நிறுத்தி இன்னொரு மாணவரை முன்னால் அழைத்துப் பாடசாலைக்கு அருகாமையில் இருக்கும் மாணவருக்கு முன்னால் அழைக்கப்பட்ட மற்ற மாணவர் ஏதேனுமோர் இடத்திற்குப் பயணஞ் செய்வதற்கான வழியைச் சரியாகக் கூறவேண்டும்.

*உதாரணம்*
- பாடசாலையிலிருந்து பேருந்துத் தரிப்பிடத்திற்குச் செல்லும் பாதையைக் கூறுங்கள், முன்னுக்குச் செல்லுங்கள்.
- இடது பக்கத்தில் உள்ள தார்ப் பாதை வழியே செல்லுங்கள்
- மீண்டும் இடது பக்கத்தில் உள்ள பாதைக்குத் திரும்பி முன்னோக்கிச் செல்லுங்கள்.

- அம்மாணவர் கூறும் வழிக்கு ஏற்ப பயணப் பாதையில் பாடசாலை அமைந்திருக்கும் இடத்தில் இருந்து மாணவர் பயணஞ்செய்ய வேண்டும்.
- இவ்விதமாக எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கக்கூடியவாறு செயற்பாட்டைத் தொடர்ந்து நடத்துங்கள்.
- இங்கு பாதையைச் சரியாகக் கூறும் ஆற்றலை விருத்தி செய்வதற்கு ஆசிரியர் வழிப்படுத்த வேண்டும்.

செயற்பாடு 3

- நடந்து செல்வோரினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சட்டதிட்டங்களைப் பற்றி மாணவருடன் உரையாடுங்கள்.

  ***உதாரணம்***
  - மஞ்சள் கோடுகள்/வெள்ளைக் கோடுகள் இடப்பட்டுள்ள இடங்களில் பாதையைக் கடத்தல் (நடைபாதைக் கடவை)
  - முதலில் வலது பக்கமும், இரண்டாவதாக இடது பக்கமும் மீண்டும் வலது பக்கமும் என்றவாறு பாதையின் இரு பக்கங்களையும் நன்கு சோதித்துப்பார்த்து வாகனங்கள் இல்லையெனின் விரைவாகப் பாதையைக் கடத்தல்.

- பாதையைக் கடக்கும் சரியான விதம் பற்றிக் கூறும் பின்வருமாறான பாடலையும் மாணவருடன் சேர்ந்து பாடுங்கள்.

*வலது பக்கம் பார்த்து இடது பக்கம் பாருங்கள்*
*மீண்டும் வலது பக்கம் பாருங்கள்*
*பாதையில் வாகனங்கள் வரவில்லை என்றால்*
*விரைவாகப் பாதையைக் கடவுங்கள்*

- அவ்வாறே நடந்து செல்லும் போது வலது பக்கத்தில் பயணஞ் செய்தலின் முக்கியத்துவம் பற்றி உரையாடுங்கள்.
- சரியான விதத்தில் பாதையைப் பயன்படுத்தும் விதத்தைப் பற்றி மாணவருக்கு அறிவூட்டு வதற்குப் பொருத்தமான நபரொருவரை அழையுங்கள். அவ்வறிவுறுத்தலின்போது பெரும் பாதையில் பயணஞ்செய்யும் சரியான முறையைப் பற்றி செயல்முறையான அனுபவங்களைப் பெறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுங்கள். போக்குவரத்தின்போது கடைப்பிடிக்கவேண்டிய பாதைச் சட்டதிட்டங்களைப் பற்றியும் மாணவர்களுக்கு அறிவூட்டுங்கள்.
- போக்குவரத்தின் போது ஆபத்துகள் நிகழக்கூடிய சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு விளங்கப்படுத்துங்கள்.

  ***உதாரணம்***
  - பாதையைக் கடப்பதற்கு மஞ்சள் கோடுகள் / வெள்ளைக் கோடுகள் பயன்படுத்தும்போதும் பாதையின் இரு பக்கங்களையும் மிகவும் நன்றாகப் பார்க்க வேண்டும்.
  - விசேடமாக மாணவரின் உயரத்திற்கு ஏற்பக் காணக்கூடிய மட்டம் வரையறுக்கப்பட்டிருப்பதனால் அது பற்றிக் கவனத்தைச் செலுத்துவது முக்கியம் ஆகும்.

- புகையிரதப் பாதையொன்றுக்கும் பெரும்பாதையொன்றுக்கும் உள்ள வித்தியாசங்கள் யாவை என்பது பற்றி மாணவருடன் உரையாடலில் ஈடுபடுங்கள்.
- அதற்கேற்ப எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புகையிரதப் பாதையில் பயணம் செய்யலாகாது என மாணவருக்கு விளங்கப்படுத்துங்கள்.
- புகையிரதப் பாதையில் ஏற்படக்கூடிய விபத்துக்கள், புகையிரத சமிக்ஞை, சட்டதிட்டங்கள் ஆகிய தகவல்கள் பற்றி மாணவரின் கவனத்தை வழிப்படுத்துங்கள். பெரும்பாதையில் பயணஞ் செய்யும்போது செய்யவேண்டியவையும் செய்யக்கூடாதவையும் யாவை என்பது பற்றியும் பயணஞ் செய்பவர்களின் பொறுப்புக்களும் கடமைகளும் பற்றியும் மாணவருடன் உரையாடுங்கள்.

- வாகனங்கள் பயணம் செய்யும் பாதையொன்றுக்கு அருகில் மாணவர்களை அழைத்துச்சென்று வாகனங்களினால் வெளியிடப்படும் சமிக்ஞைகளை அவதானிப்பதற்கு வழிப்படுத்துங்கள். முடியுமெனின், நிறுத்தப்பட்டுள்ள வாகனமொன்றின் (உதாரணம்: ஆசிரியரொருவரின் அல்லது அயலவர் ஒருவரின் வாகனமொன்று) ஒளிச் சமிக்ஞைத் (Light Signal) தொகுதியை சோதித்துப் பார்ப்பதற்குச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துங்கள். (ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ்)

  ***உதாரணம்***
  - பிரதான விளக்குகள், நிறுத்தப்பட்டிருக்கும் போது பயன்படுத்தப்படும் விளக்குகள், சமிக்ஞை விளக்குகள்
  - வாகனங்களினால் வெளியிடப்படும் பல்வேறு ஒளிச் சமிக்ஞைகள் (வாகனத்தை நிறுத்தும்போது, திருப்பும் போது, பின்னோக்கி எடுக்கும் போது) விளங்கப்படுத்துங்கள்.

- அண்மைச் சுற்றாடலில் உள்ள பாதைகளில் உள்ள சமிக்ஞை அடையாளங்களை அறிந்து கொள்வதற்கு வழிப்படுத்துங்கள். அறிந்துகொண்ட அச்சமிக்ஞைகளினதும் அடையாளங் களினதும் கருத்தை அறிந்து கொள்வதன் முக்கியத்துவத்தை விளங்கப்படுத்துங்கள்.

  ***உதாரணம்***
  - பாதை மாறுதல்
  - வாகனங்கள் நிறுத்தத் தடை
  - ஒலி எழுப்பத் தடை

செயற்பாடு 4:

- நிலத்தில், ஆகாயத்தில், நீரில் பயணஞ் செய்யும் வாகனங்களின் புகைப்படங்களை வகுப்பில் சேகரித்து வையுங்கள்.
- அவ்வுருக்களை குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- ஆசிரியர் மூன்று பிரிஸ்டல் அட்டைகளை அல்லது மூன்று டிமைத் தாள்களை எடுத்து மேலே இனங்கண்ட ஆகாயத்தில் பயணஞ் செய்யும் வாகனம், நிலத்தில் பயணஞ்செய்யும் வாகனம், நீரில் பயணஞ் செய்யும் வாகனம் எனப் பெயரிட்டு பொருத்தமான இடங்களில் தொங்கவிடுங்கள்.
- மாணவர்கள் வகைப்படுத்திய உருக்களைச் சரியாக உரிய தாளின்மீது ஒட்டுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்னர் நிலத்தில், ஆகாயத்தில், நீரில் பயணஞ் செய்யும் வாகனங்களின் வித்தியாசங்களைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.

  ***உதாரணம்***
  - சில்லுகளின் எண்ணிக்கை, பயணஞ் செய்யும் பாதை (பெரும்பாதை, புகையிரதப்பாதை)
  - வடிவம்
  - பொருள்களை/பயணிகளை கொண்டு செல்லும் விதம்
  - பயணச் சீட்டை வழங்கும் விதம்
- முடியுமெனின், இவ்வாகனங்களின் மாதிரிகள் சிலவற்றைச் சேகரித்துக்கொண்டு அவற்றையும் பயன்படுத்தி விளங்கப்படுத்துங்கள்.
- இவ்வாகனங்களில் ஒவ்வொரு மாணவரும் மிகவும் விரும்பும் வாகனம் யாதென விசாரித்து அதற்கான காரணத்தைக் கூறுவதற்கும் அவற்றை வரைவதற்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரின் ஆக்கங்களைப் பாராட்டுங்கள்.


செயற்பாடு 5:


- பெரும்பாதையில் பயணஞ் செய்யும்போது, வாகனங்களில் பொதுப் போக்குவரத்து சேவைகளில் பயணஞ் செய்யும்போது எம்மால் செய்ய வேண்டியவையும் செய்யலாகா தவையும் பற்றி மாணவரின் அவதானத்தை வழிப்படுத்துங்கள்.
- இதற்குப் பொருத்தமான படங்கள், புகைப்படங்கள் அல்லது சுவரொட்டிகள், காணொளிக் காட்சிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துங்கள்.
- இவற்றின் மூலம் பொது வாகனங்களுக்குத் தீங்கு விளைவிப்பதனால் தமக்கும் பொதுச் சொத்துக்களுக்கும் ஏற்படும் தீங்கைப் பற்றியும் இதனால் நாட்டின் முன்னேற்றத்திற்கு தடை ஏற்படும் விதம் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- பொது வாகனங்களைப் பயன்படுத்தும்போது சட்டவிரோதமாக நடந்துகொள்ளல் தண்டனைக் குரிய குற்றமாகும் எனவும் எடுத்துக்காட்டுங்கள்.
- அவ்வாறே எந்தப் பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பயன்படுத்துவதற்கும் பயணச் சீட்டொன்றைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அவ்வாறாக சட்டரீதியாகப் பயணஞ் செய்வதனால் தமக்கும் நாட்டிற்கும் நன்மை ஏற்படும் என எடுத்துக்காட்டுங்கள்.
- அவ்வாறு சில மனிதர்கள் வாகனங்களைப் பயன்படுத்தும்போது நிகழ்த்தும் பொருத்தமற்ற நடத்தைகள் / செயல்கள் தொடர்பாகவும் மாணவரின் அவதானத்தை வழிப்படுத்துங்கள்.

  ***உதாரணம்***
  - வாகனத்தின் ஒலியெழுப்பியை (horn) கூடிய சத்தத்தில் பயன்படுத்துதல்
  - தீங்கான புகையை சுற்றாடலுக்கு வெளியேற்றுதல்
  - தனக்குரிய பாதையில் பயணஞ் செய்யாமை
  - பாதசாரிகளுக்கு விபத்தேற்படும் விதத்தில் வாகனத்தைச் செலுத்துதல்
  - தனக்கும் வாகனத்தில் பயணஞ் செய்யும் பயணிகளுக்கும் பாதையில் செல்லும் மற்றைய வாகனங்களுக்கும் ஆபத்தேற்படும் விதத்தில் அதிக வேகத்தில் வாகனத்தைச் செலுத்துதல்
- அதற்கேற்பப் பெரும்பாதையில் பயணஞ்செய்யும்போது நாம் மிகவும் ஒழுக்கத்துடனும் பாதுகாப்பாகவும் பயணஞ்செய்ய வேண்டும் எனவும் அதன் மூலம் அநேகமான விபத்துக் களைத் தவிர்த்துக்கொள்ள முடியும் எனவும் மாணவருக்கு எடுத்துக்கூறுங்கள்.

செயற்பாடு 6:

- போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்களின் மாதிரிகளை நிர்மாணிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதற்காக இரப்பர் விதைகள், உடைந்த விளையாட்டுப் பொருள்களின் சில்லுகள், வெற்றுத் தீப்பெட்டிகள், பேனாக் குழாய்கள், நிறத் தாள்கள் போன்றவற்றை சேகரித்துக் கொள்ளுங்கள்.





- மாணவர்கள் தயாரித்த மாதிரிகளைப் பயன்படுத்தி மகிழ்ச்சி தரும் செயற்பாடுகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியடைவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவரின் ஆக்கங்களைப் பாராட்டுங்கள்.

செயற்பாடு 7

- போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் வாகனங்கள், வாகனத்தைப் பயன்படுத்தும்போது நடந்துகொள்ள வேண்டிய விதம், பெரும்பாதையில் நடந்துகொள்ளவேண்டிய விதம் ஆகியன பற்றிய கவிதைகளையும் பாடல்களையும் சேகரித்துக் கொள்ளுங்கள். இல்லை எனின், அவ்வாறானவற்றை நீங்கள் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- கவிதைகளின் / பாடல்களின் கருத்துத் தெளிவாகுமாறு மாணவர்களுடன் பாடுங்கள்.

**வீதி விதிகள்**

வீதியிலே நடந்து போகும்
சின்னத்தம்பி - என்றும்
கவனமாகச் செல்ல வேண்டும்
சின்னத்தம்பி

வீதியினைக் கடக்கும் போது
சின்னத்தம்பி - என்றும்
இருபுறமும் பார்க்க வேண்டும்
சின்னத்தம்பி

மஞ்சள் கோட்டால் நடந்து சென்றால்
சின்னத்தம்பி - என்றும்
ஆபத்தில்லை மறந்திடாதே
சின்னத்தம்பி

சந்தியினைக் கடக்கும் போது
சின்னத்தம்பி - என்றும்
பச்சை மனிதன் வர வேண்டும்
சின்னத்தம்பி

வீதி விதியை மதித்து நடந்தால்
சின்னத்தம்பி - என்றும்
விபத்துகளைத் தவிர்த்திடலாம்
சின்னத்தம்பி.

- வி.என்.எஸ். உதயசந்திரன்

செயற்பாடு 8

- மெதுவாக ஓடுதல், குழுவாகுதல், நடத்தல், திரும்புதல் போன்ற திறன்களை விருத்தி செய்வதற்கு பயணங்களுக்காகப் பயன்படுத்தும் வாகனங்களின் அசைவுகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள விதமான ஆக்கரீதியான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இதற்குப் பொருத்தமான அளவிலான எல்லையொன்றைக் குறித்துக்கொள்ள வேண்டும்.
- ஆசிரியர் கட்டத்தின் நடுவில் நிற்க வேண்டும். மாணவர்கள் அவ்வெல்லையினுள் சுதந்திரமாக அங்குமிங்கும் மெதுவாக ஓடிக் கொண்டிருக்க வேண்டும்.
- மாணவர்கள் அங்குமிங்கும் ஓடிக் கொண்டிருக்கும் போது ஆசிரியர் ஏதேனுமோர் எண்ணைக் கூற வேண்டும். கூறப்படும் எண்ணிற்குப் பொருத்தமான விதத்தில் பெட்டிகளின் எண்ணிக்கை யுடன் புகையிரதமொன்றை மாணவர்கள் ஒரு மாணவரின் தோளின் மீது இரு கைகளையும் வைத்து அமைக்க வேண்டும்.
- இவ்வாறு புகையிரதத்தின் பெட்டிகளை அமைக்கும் போது எந்தப் புகையிரதப் பெட்டியுடனும் சேர்ந்து கொள்வதற்கு முடியாத மாணவர்களும் ஏதேனும் புகையிரதப் பெட்டியுடன் ஆசிரியர் கூறிய எண்ணிக்கையை விடக்கூடுதலாகச் சேர்ந்து கொண்ட மாணவர்களும் எல்லைக் கோட்டின் மீது நின்று கொண்டிருக்கவேண்டும். (ஏதேனும் புகையிரதத்திற்கு உரிய பெட்டிகளின் எண்ணிக்கையை விடக் கூடுதலாக இருப்பின் புகையிரதத்தின் பின் பகுதியில் இருந்து நீக்கப்படல் வேண்டும்.)
- இவ்வாறு தயாரிக்கப்பட்ட புகையிரதப் பெட்டிகள் உரிய எல்லையினுள் ஆசிரியர் மீண்டும் சமிக்ஞை வழங்கும் வரையில் பயணஞ் செய்ய வேண்டும்.
- மீண்டும் ஆசிரியர் வழங்கும் சமிக்ஞைக்கு ஏற்பப் புகையிரதம் கலைந்து எல்லையினுள் மீண்டும் மெதுவாக ஓடிக் கொண்டிருக்க வேண்டும். முன்பு போல ஆசிரியர் மீண்டும் எண்ணொன்றைக் கூற வேண்டியதோடு மாணவர்கள் முன்பு போன்று செயற்பாட்டினைச் செய்ய வேண்டும்.

செயற்பாடு 9

- போக்குவரத்திற்காகப் பாதையைப் பயன்படுத்தும்போது நாம் பல்வேறு பயணப் பாங்குகளைப் பயன்படுத்த நேரிடும். அப்பயணப் பாங்குகள் லயத்துடனானவை. அவையாவன
    - ⁕ சாதாரண பயணம்
    - ⁕ மெதுவாகச் செல்லல்
    - ⁕ வேகமாகச் செல்லல்
    - ⁕ காலில் இடர்பாடுடனான சந்தர்ப்பங்களில் நடந்து செல்லல்
    - ⁕ பாதத்தில் ஏதேனும் குத்திய சந்தர்ப்பங்களில் நடந்து செல்லல்
    - ⁕ திறந்தவெளியில் இடவசதியுள்ள சுற்றாடலில் மகிழ்ச்சியுடன் சுதந்திரமாகப் பயணஞ் செய்தல்

  இவ்விதமாக எமது பல்வேறு தேவைகளைப் போன்றே பல்வேறு நிலைமைகளின் கீழும் எமக்குப் பழக்கப்பட்ட பயணப் பாங்கு மாற்றமடையும் விதத்தைக் கையாண்டுபார்த்தலுக்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

## 10. கருப்பொருள் : **வீட்டுத்தோட்டம்**

வீட்டுத்தோட்டச் செய்கை, அன்றாட வாழ்க்கையில் குடும்பத்தின் நலனுக்கு முக்கிய பங்களிப்பைப் பெற்றுத்தரக்கூடிய ஒரு வழியாகும். எனவே வீட்டுத்தோட்டச் செய்கையுடன் தொடர்புபட்டு களிப்படையவும் பயிர்ச்செய்கை தொடர்பான இலகுவான அனுபவங்களைப் பெறவும் இக்கருப்பொருளின் மூலம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. மாணவரைச் சிறுபராயம் தொட்டே வீட்டுத்தோட்டச் செய்கை நடவடிக்கைகளுக்குப் பழக்கியவாறு அதன் முக்கியத்துவம் பற்றிய விளக்கத்தையும் வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சிகள் :**

- திட்டமிடப்பட்ட ஒரு வீட்டுத்தோட்டத்தில் இருந்து அன்றாடம் தனது வீட்டுக்குத் தேவையான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்குப் பங்களிப்புச்செய்வார்.
- தானியங்களை உற்பத்தி செய்வதற்கும் பயிர்ச்செய்கையைப் பாதுகாப்பதற்கும் பிரயோகிக்கப்படும் உத்திகளைப் பற்றி ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- வீட்டுத்தோட்டத்தில் இருந்து பெற்றுக் கொள்ளக்கூடியவற்றைக் கொண்டு ஆக்கங்கள் செய்வார்.
- வீட்டுத்தோட்டத்தில் இருந்து பெறப்படும் பொருள்களுடன் தொடர்புபட்ட விளையாட்டுக்களிலும் செயற்பாடுகளிலும் ஈடுபடுவார்.
- வீட்டுத்தோட்டமொன்றின் அழகையும் பெறுமதியையும் வெளிப்படுத்திக் காட்டும் ஆக்கங்களில் ரசனையுடன் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள் :**

- வீட்டுத்தோட்டமொன்றில் இருக்க வேண்டியவற்றையும் அவற்றுக்கு மிகப் பொருத்தமான இடங்கள் யாவை எனவும் கூறுவார்.
- முறையான வீட்டுத்தோட்டமொன்றை நடத்துவதன் பயன்பாட்டைக் கூறுவார்.
- வீட்டுத்தோட்டமொன்றில் பயிரிடக்கூடியவற்றை இனங்கண்டு வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கைக்குப் பங்களிப்புச் செய்வார்.
- வீட்டுத்தோட்டப் பயிர்ச் செய்கைக்காகப் பயன்படுத்தக்கூடிய வித்துக்கள், மரங்கள், தாவரங்கள் ஆகியவற்றை மிகவும் வெற்றிகரமான விதத்தில் தயாரிக்கக்கூடிய விதம் பற்றிக் கையாண்டு பார்ப்பார்.
- சுற்றாடலில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய பொருள்களைப் பயன்படுத்தி வீட்டுத் தோட்டமொன்றின் மாதிரியொன்றை நிர்மாணிப்பார்.
- வீட்டுத்தோட்டமொன்றை உரியவாறு நடத்துவதன் முக்கியத்துவம் பற்றிக் கூறும் கவிதைகள், பாட்டுக்கள், ஆக்கரீதியான நாடகங்கள் ஆகியவற்றை முன்வைப்பார்.
- காய்கறிகளினதும் பழங்களினதும் பெயர்களைப் பயன்படுத்திப் பெருந்தசைகள் செயற்படும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

செயற்பாடு 1 :

- வகுப்பிலுள்ள மாணவர்களைத் தமது இரு கண்களையும் மூடிக் கொள்ளுமாறு கூறுங்கள். இரு கண்களையும் மூடிக் கொண்டு தமது வீட்டுத்தோட்டத்தில் உள்ளவற்றைப் பற்றி நன்கு சிந்தித்துப் பார்ப்பதற்கு வழிப்படுத்துங்கள். மீண்டும் கண்களை திறந்து குறிப்புப் புத்தகத்தில் அல்லது காகிதத் தாளொன்றில் தமது வீட்டுத்தோட்டத்தில் உள்ளவற்றைக் குறிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்களினால் குறித்துக் கொள்ளப்பட்ட விடயங்களை எழுமாற்றாக பெயர் குறிக்குமாறு சில மாணவர்களுக்குக் கூறுங்கள். அதற்கேற்ப வீட்டுத்தோட்டமொன்றில் காணக்கூடிய அம்சங்கள் யாவை என்பது பற்றி மாணவரின் அவதானத்தை வழிப்படுத்தி உரையாடல் ஒன்றில் ஈடுபடுங்கள். (உதாரணம்: வேலி, கிணறு, மலசலகூடம், சாக்கடை, பூப்பாத்திகள், காய்கறிப் பாத்திகள், மரங்கள், மருந்துத் தாவரங்கள் நடப்பட்ட பாத்திகள் போன்ற அம்சங்கள்)
- இவ்விதமாக வீட்டுத்தோட்டமொன்றில் காணப்படும் ஒவ்வோர் அம்சத்திலும் இருந்து எமக்குக் கிடைக்கும் பிரயோசனத்தைப் பற்றி உரையாடுங்கள்.

  ***உதாரணம்*** :
  - பூப்பாத்திகளினால் வீட்டுத் தோட்டம் அழகாகயிருத்தல்
  - வாயிற்கதவு/வேலி பாதுகாப்பை வழங்குதல்
  - வடிகால், நன்கு நீர் வழிந்தோடுவதற்காகப் பயன்படுத்துதல் போன்றன
- இவ்வாறு வீட்டுத்தோட்டமொன்றில் அமைந்துள்ளவை எமக்குப் பல்வேறு விதங்களில் பிரயோசனமாக இருப்பதனையும் முறைப்படி அமைக்கப்பட்டிருத்தலின் முக்கியத்துவத்தையும் பற்றியும் உரையாடுங்கள்.

  ***உதாரணம்*** :
  - அவற்றைப் பயன்படுத்துவதனால் மிகவும் இலகுதன்மை ஏற்படுதல்
  - முறைப்படி இருப்பதன் ஊடாக வீட்டுத் தோட்டம் மிகவும் அழகாகின்றது
  - ஒழுங்கினாலும் அழகினாலும் மனதில் அமைதி ஏற்படுதல்
- இவ்விதமாக தமது வீட்டுத்தோட்டத்தை ஒழுங்காக அமைத்துக் கொள்வதற்குச் செய்ய வேண்டியவற்றைப் பற்றிச் சிந்திப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அது தொடர்பாக மாணவர்களின் கருத்துக்களை விசாரியுங்கள்.

  ***உதாரணம்*** :
  - முறையற்ற விதத்தில் அமைக்கப்பட்டுள்ள பாத்தியை முறைப்படி ஒழுங்கு படுத்துதல்
  - பாத்திகளை ஒன்றிலிருந்து ஒன்று வேறுபடுத்துவதற்கு வேலி கட்டுதல்
  - தேவையான இடங்களில் புற்கள் நடுதல்
- இவ்வாறு மாணவர்களுக்குத் தமது வீட்டுத்தோட்டங்களிலும் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களைச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- சில நாட்களுக்குப் பின்னர் மாணவர்கள் தமது வீட்டுத்தோட்டங்களில் ஏற்படுத்திய மாற்றங்களைப் பற்றி விசாரித்து அதற்கு முன்னர் இருந்த நிலையை விட ஏற்பட்டுள்ள மாற்றங்களைப் பற்றி விசாரியுங்கள்.

செயற்பாடு 2

- அண்மைச் சூழலில் அமைக்கப்பட்டுள்ள பயிர்ச்செய்கையாக நடத்திச் செல்லப்படும் வீட்டுத் தோட்டமொன்றைப் பார்வையிடச் செல்வதற்கு அவசியமான நடவடிக்கைகளை ஒழுங்குசெய்யுங்கள்.

- களப் பயணம் செல்வதற்கு முன்னர் அங்கு அவதானிக்கப்பட வேண்டியவற்றைப் பற்றி மாணவருக்குத் தெரியப்படுத்துங்கள்.

  *உதாரணம்* :

    - பயிர்ச்செய்கைகள், பயிரிடப்பட்டுள்ள விதம் (பாத்தி, புத்தளிப்புப் பாத்திரங்கள்)
    - பயிரிடப்பட்டுள்ள பயிர்கள்
    - வீட்டுத்தோட்டத்தின் சுத்தத்தைப் பேணுவதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
    - நீரைச் சேகரிக்கும் விதம்
    - அழகைப் பேணுவதற்கு எடுக்கப்பட்டுள்ள செயல்வழிகள்
    - பயிரைப் பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்

- களப் பயணத்தின் பின்னர் அவ்வீட்டுத் தோட்டத்தில் உள்ள விசேடமான தன்மைகள் ஒவ்வொன்றும் அமைக்கப்பட்டுள்ள இடங்களினதும் அவற்றை நடத்திச்செல்லும் விதத்தினதும் காரணத்தினால் பெற்றுக்கொள்ளக்கூடிய பயன்பாட்டின்மீது மாணவரின் அவதானத்தை வழிப்படுத்தி உரையாடுங்கள்.
- அவ்வாறே வீட்டுத்தோட்டமொன்றை நடத்தும் போது அதனை மிகவும் ஜனரஞ்சகமாக நடத்தும் காரணத்தினால் அது பற்றி மேலும் வழிப்படுத்தப்படுவதற்கு எம்முள் விருப்பம் ஒன்று உருவாகிறது என்பதை மேலெழுப்பிக் காட்டுங்கள்.
- அவதானித்த வீட்டுத்தோட்டத்திலிருந்து பெற்ற அனுபவத்தின் மீது தமது வீட்டிலும் வீட்டுத்தோட்டமொன்றில் பயிரிடக்கூடிய பயிர்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பத்தை வழங்குங்கள்.
- தமது வீட்டுத்தோட்டத்தைப் பயனுள்ள, அழகான வீட்டுத்தோட்டமொன்றாக ஆக்குவதற்கு ஊக்குவிப்பு ஏற்படும் விதத்தில் மாணவருடன் உரையாடலொன்றைக் கட்டியெழுப்புங்கள்.
- அதற்கு மாணவரை ஊக்குவியுங்கள்.


செயற்பாடு 3

- பயிர் வகைகளைப் பல்வேறு முறைகளில் பயிர் செய்ய முடிவதோடு அவை வளரும் விதம் ஒன்றுக்கொன்று வித்தியாசமானவை என்பதையும் பற்றிய அனுபவத்தைப் பெறுவதற்கு மாணவர்களைப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

படிமுறை 1:

- தெளிவாகப் பார்க்கக்கூடிய ஊடுகாட்டும் பெரிய வாயுடனான கண்ணாடிப் போத்தல்களைச் சேகரித்துக் கொள்ளுங்கள். (வெற்று பழப்பாகுப் போத்தல் இதற்குப் பொருத்தமானதாகும்)
- அப்பாத்திரங்களினுள் பஞ்சை அடைத்து அவற்றில் பாசிப்பயறு/போஞ்சி அல்லது பயற்றம் விதைகள் சிலவற்றை இடுங்கள்.
- பஞ்சு நனையக்கூடியவாறு சற்று நீரை அதனுள் இடுங்கள்.
- பின்னர் குழுக்களுக்கு அப்பாத்திரங்களை வழங்கி பின்வரும் விடயங்களின்மீது ஒவ்வொரு நாளும் பாசிப்பயற்றில் (அல்லது வேறு வித்துக்கள்) நிகழும் மாற்றங்களை அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அவதானிப்பதற்காகக் கைவில்லையொன்றை வழங்குங்கள்.
- அவ்வித்து வளரும் போது காணப்படும் பின்வருவனவற்றைப் பற்றி மாணவரின் அவதானத்தை வழிப்படுத்துங்கள்.
    - ❋ முதலில் காணக்கூடிய பகுதி

* வேர்கள் வளரும் விதம்
* வேர்கள் வளரும் திசை
* தண்டு உயரும் விதம்
* தண்டு வளரும் திசை
* இலைகள் துளிர்க்கும் விதம்
* ஒவ்வொரு பகுதியினதும் நிறம் மாற்றமடையும் விதம்



- அவதானிப்பவற்றை வரிப்படங்கள் மூலம் அலலது வேறு விதத்தில் அறிக்கைப்படுத்துவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படிமுறை 2 :

- வீட்டுத் தோட்டத்தில் நடுவதற்காக எடுக்கப்படும் பயிர்களை 15 cm மட்டிலான உயரமுள்ள உறைகளைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.
- மாணவர்களைப் பத்துக் (10) குழுக்களாகப் பிரியுங்கள்.
- ஒவ்வொரு மாணவர் குழுவிற்கும் தயாரிக்கப்பட்ட உறையொன்று வீதம் வழங்குங்கள்.
- நன்கு உக்கிய கூட்டெரு, மணல், மண் ஆகியவற்றைச் சம அளவில் சேர்த்து தயாரிக்கப்பட்ட கலவையை உறைகளினுள் சம அளவில் இடுமாறு எல்லா மாணவர் குழுக்களுக்கும் கூறுங்கள்.
- இவ்வாறாகத் தயாரிக்கப்பட்ட எல்லா உறைகளிலும் கங்குன் தண்டு வீதம் நடுவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- உறைகளுக்குப் போதுமானளவு நீர் இட்டு அவற்றை அசையாதவாறு ஓரிடத்தில் 3 அல்லது 4 நாட்களுக்கு வையுங்கள்.
- அக்காலத்தினுள் ஒவ்வொரு நாளும் எல்லா உறைகளினுள்ளும் சம அளவான நீர் இடுங்கள்
- மூன்று அல்லது நான்கு நாட்களின் பின்னர் அப்பாத்திரங்களிடையே ஒரு பாத்திரத்தின் மெழுகு உறையைக் கவனமாக வெட்டி நீக்கிவிட்டு அதில் உள்ள தண்டில் உள்ள மண்ணை வேர்கள் உடையாமல் கவனமாக நீக்குங்கள்.
- தண்டின் மண்ணில் கீழே இருந்த பகுதியில் உள்ள மாற்றங்களைப் பற்றி மாணவர்களின் அவதானத்தை வழிப்படுத்துங்கள்.
- அதற்கேற்ப ஏதேனும் பயிர்த் தண்டாக நடப்படலாம் என்பதை விளங்கிக் கொள்ளச் செய்யுங்கள்.
- இவ்விதமாக 3 நாட்களுக்கொரு தடவை ஓர் உறை வீதம் எடுத்து அவதானிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- அவதானித்தவற்றை வரிப்படங்கள் மூலம் அட்டவணைப்படுத்துவதற்கும் மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

படிமுறை 3 :

- நாற்றுக்களை நடுவதற்கான இன்னொரு முறையாக நாற்றுமேடை அமைக்கலாம் என மாணவருக்கு எடுத்துக்காட்டுங்கள்.
- நாற்று மேடை அமைப்பதற்குப் பாத்திரமொன்றின் அல்லது சிறிய நிலப்பகுதி ஒன்றின் மேற்றளத்தில் மண், மணல், நன்கு உக்கிய கூட்டெரு ஆகியவற்றை சம அளவில் கலந்து தயாரித்துக் கொள்ளுங்கள்.
- அதில் விரைவாக முளைக்கும் மிளகாய், காசித்தும்பை, செவ்வந்தி (மெரிகோல்ட்) போன்றவற்றின் வித்துக்களை இடுங்கள்.
- போதியளவு நீர் ஊற்றுங்கள்.
- நிலத்தில் அமைக்கப்படும் நாற்றுமேடை அல்லது பாத்திரமொன்றில் அமைக்கப்படும் நாற்று மேடை நீர் நன்றாக இறங்கக்கூடியவாறு தயாரிக்கப்படல் வேண்டும்.
- ஒவ்வொரு நாளும் வித்துக்களில் ஏற்படும் மாற்றத்தை அவதானிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்
- அவதானிப்புகளை அறிக்கைப்படுத்துவதற்கு வழிப்படுத்துங்கள்.
- தாவரம் போதியளவு வளர்ந்ததன் பின்னர் அவற்றின் வேர்கள் உடையாதவாறு கவனமாகக் கழற்றி பாடசாலைத் தோட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ள பொருத்தமான இடமொன்றில் / நடுகைப் பாத்திரங்களில் நடுங்கள்.
- நடப்பட்ட தாவரத்தைப் பராமரிப்பதற்காக நாளொன்றுக்கு ஒரு குழு வீதம் மாணவர் குழுக்களை ஈடுபடுத்துங்கள்.
- மேற்குறித்த செயற்பாட்டின் படிமுறைகள் 1, 2, 3 ஆகியவற்றின் மூலம் பெறப்பட்ட அனுபவங்களின்மீது தண்டு மூலம் வளர்க்கக்கூடிய தாவரங்கள், வித்துக்கள் மூலம் வளர்க்கக்கூடிய தாவரங்கள் என்பன பற்றி மாணவரிடம் விசாரித்து விளக்கத்தை மேலும் பதியுங்கள்.
- இவ்வாறு பாடசாலை வீட்டுத் தோட்டத்தில் / தமது வீட்டுத் தோட்டத்தில் இலகுவாகப் பயிரிடக்கூடிய பயிர்களை இனங்காண்பதற்கும் / அவற்றின் பெயர்களைக் கூறுவதற்கும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு 4

- பாவனையில் இருந்து ஒதுக்கப்பட்ட பொருள்களையும் சுற்றாடலில் கிடைக்கக்கூடியவற்றையும் வகுப்பறையில் சேகரித்து வையுங்கள்.
- அவை அனைத்தையும் ஓரிடத்தில் சேர்த்து வையுங்கள்.
- மாணவரைக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு மாணவர் குழுவிற்கும் வீட்டுத் தோட்டத்தின் மாதிரியொன்றை அமைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவற்றுக்குத் தேவையான பொருள்களை, பொருள்கள் சேகரித்து வைக்கப்பட்டுள்ள இடத்தில் இருந்து எடுத்துக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்குங்கள்.
- இதில் பொருள்களைப் பகிர்ந்து கொண்டு செயலாற்றுவதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- மாதிரியைக் கட்டியெழுப்பும் போது தேவையான இடங்களில் ஆசிரியர் உதவி செய்யலாம்.
- மாணவர்களின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்துங்கள். பாராட்டுங்கள்.

செயற்பாடு **5**

- வீட்டுத் தோட்டத்தை உரியவாறு நடத்துவதன் முக்கியத்துவத்தைக் காட்டுவதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள சிறு நாடகமொன்றை முன்வைப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இதற்குப் பொருத்தமான பாத்திரங்களைத் தெரிவு செய்து கொள்வதற்கும் உரையாடலைக் கலந்துரையாடுவதற்கும் மாணவரை வழிப்படுத்துங்கள்.

***உதாரணம்***:

**நோயாளியும் வைத்தியரும் (உரையாடல்)**

| | | |
|---|---|---|
| நோயாளி | : | ஐயா! |
| வைத்தியர் | : | வாருங்கள், அமருங்கள் |
| நோயாளி | : | எனக்குக் கடுமையான வயிற்று வலி, அத்துடன் வாந்தியும் மயக்கமும் வருகிறது |
| வைத்தியர் | : | எப்பொழுதிருந்து<br>(நோயாளியைப் பரிசோதித்தல்) |
| நோயாளி | : | இன்று மதியம் சாப்பிட்ட சிறிது நேரத்தின் பின் |
| வைத்தியர் | : | என்ன உணவு சாப்பிட்டீர்கள்? |
| நோயாளி | : | சோறும் கத்தரிக்காய் கறியும் கீரையும் |
| வைத்தியர் | : | மரக்கறிகளை எங்கே வாங்கினீர்கள்? |
| நோயாளி | : | சந்தையில் |
| வைத்தியர் | : | கீரையையும் மரக்கறியையும் வெட்டுமுன் உப்பு நீரில் நன்றாகக் கழுவினீர்களா? |
| நோயாளி | : | இல்லை |
| வைத்தியர் | : | நீங்கள் சாப்பிட்ட மரக்கறிகளினால்தான் உமது உணவு நஞ்சாகியுள்ளது. அதனால்தான் வயிறு வலிக்கிறது. |
| நோயாளி | : | அப்படியா? |
| வைத்தியர் | : | தோட்டம் செய்வோர் பயிர்களுக்கு கிருமிநாசினிகளை அதிகம் பயன்படுத்துகிறார்கள். |
| நோயர்ளி | : | அப்படியா ஐயா? |
| வைத்தியர் | : | செயற்கைப் பசளை, இரசாயனப் பசளை பயன்படுத்தாத மரக்கறிகளை வாங்கி உண்பதே சிறந்தது. இல்லாவிடின் வீட்டுத் தோட்டத்தில் உங்களுக்குத் தேவையான மரக்கறிகளைப் பயிரிடுங்கள். |
| நோயாளி | : | நன்றி ஐயா. |

- வீட்டுத்தோட்டத்தின் பெறுமதியைப் பற்றி பின்வரும் பாடல் மூலம் மாணவருக்கு விளங்கப்படுத்துங்கள்.

***உதாரணம்*** :

**வீட்டுத்தோட்டம்**

கத்தரி தக்காளி மிளகாய்
காய்த்துக்கு லுங்குதே அழகாய்
சத்துள்ள உணவாகும் வெண்டி
சாப்பிடுவோம் கீரை சுண்டி

பந்தலில் தொங்கியே ஆடும்
பாகற்கா யோடுபு டோலும்
சந்தையில் விற்றது போக
சாப்பிடு வோம் களிப்பாக

பற்றியே கொம்பினில் தாவிப்
பற்றை அவரையும் ஏறும்
சற்று முன்னே அவை பறித்து
முறித்தே கறிசமைப் போம்

வேலியில் படருதே பீர்க்கு
வீட்டின்மேல் பூசனி காய்க்கும்
வாளிப்பாய் வளருதே இங்கே
வத்தாளை மரவள்ளிக்கிழங்கு.

செயற்பாடு 6

- சில பிளாத்திக்குக் குடங்கள் / சம அளவான சில வெற்றுப் பெட்டிகள், ஓரளவு பெரிய போத்தலொன்று ஆகியவற்றைச் சேகரித்துக் கொள்ளுங்கள். (10 மட்டில்)
- அவற்றில் காய்கறிகளின் அல்லது பழங்களின் உருக்களை ஒவ்வொன்றின் மீது ஒன்று வீதம் வரைந்து கொள்ளுங்கள். இல்லாவிடில் ஒட்டிவிடுங்கள்.
- இவ்வாறு தயாரித்துக் கொண்ட குடங்களை / பெட்டிகளைத் திறந்தவெளியில் பொருத்தமான இடமொன்றில் கொடியொன்று போல மாணவரின் உயரத்திற்கேற்பத் தொங்கவிடுங்கள்.
- வகுப்பில் உள்ள மாணவர்களை இரு குழுக்களாக்குங்கள்.
- இரு மாணவர் குழுக்களும் இரு நிரைகளாக அக்குடங்கள் தொங்கவிடப்பட்டுள்ள இடத்திற்குச் சற்று தூரத்தில் நிற்பதற்கு ஒழுங்குசெய்யுங்கள்.
- மாணவர் குழுக்கள் இரண்டிற்கும் A, B எனப் பெயரிடுங்கள்.
- குழு A இல் உள்ள முதலாவது மாணவர் குழு B இல் உள்ள முதலாவது மாணவருக்குத் தொங்கவிடப்பட்டுள்ள குடத்தில்/பெட்டியில் காட்டப்படும் பழத்தின் அல்லது காய்கறியின் பெயரைக் கூற வேண்டும்.
- அதற்கேற்ப B குழுவில் உள்ள முதலாவது மாணவர் பந்தொன்றினால் உரிய உருவுள்ள குடத்திற்கு / பெட்டிக்கு வீசி அடிக்க வேண்டும்.
- சரியாக வீசி அடித்தால் குழு B இற்குப் புள்ளியொன்று உரித்தாகும்.
- பின்னர் குழு B இன் முதலாவது மாணவர் முன்னர் குழு A மாணவர் செய்தவாறே உணவு வகையொன்றின் பெயரைக் குழு A இன் முதலாவது மாணவருக்குக் கூறவேண்டியதோடு அவர் சரியாக உரிய குடத்திற்கு / பெட்டிக்குப் பந்தை வீச வேண்டும்.
- இவ்வாறாக இரு குழுக்களிலும் உள்ள சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்குமாறு செயற்பாட்டினைச் செய்யுங்கள்.
- மாணவர்களின் பெருந் தசைநார் செயற்படும் விதத்தில் இச்செயற்பாட்டினை மேலும் விருத்தி செய்து / மாற்றியமைத்து நடத்துவதற்கு ஆசிரியருக்கு இடமுண்டு.

## 11. கருப்பொருள்: வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளும் வழிகள்

ஒழுங்காகவும் கிரமமாகவும் வேலை செய்வதன் ஊடாக எமது அன்றாட காரியங்களை இலகுவாக்கிக்கொள்ள முடியும். அவ்வாறே கூட்டாக வேலை செய்தலும் மிகவும் பயனளிப்பதாகும். வேலையை இலகுபடுத்திக் கொள்வதற்கு ஆதிகாலத்தில் மக்கள் பல்வேறு எளிய முறைகளைப் பயன்படுத்தியதோடு தற்காலத்தில் அதற்கு அநேகமாக நவீன முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றைப் பற்றித் துருவியாய்தல் ரீதியாகத் தகவல்களையும் அனுபவங்களையும் சேர்த்துக் கொள்வதற்குப் பல்வேறு விதங்களில் அவற்றை அறிக்கைப்படுத்தவும் இக்கருப்பொருளின் ஊடாக மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

**தேர்ச்சிகள்:**

- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக தற்காலத்தில் மட்டுமின்றி பண்டைய காலத்திலும் பயன்படுத்திய நுட்பமுறைகளைக் கற்றாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக தரமான முழுநிறைவுக்காகத் திட்டமிட்டு, ஒழுங்காக, நேர்த்தியாக வேலை செய்யப் பழகிக் கொள்வார்.
- கூட்டாக வேலை செய்வதன் மூலம் வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளச் செயற்படுவார்.
- மின்சாரம், காந்தம், எளிய பொறிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வேலைகளை இலகுபடுத்திக்கொள்ளும் விதத்தைத் தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- அன்றாடம் வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய வெவ்வேறு சக்திகள் தொடர்பான கையாண்டுபார்த்தல்களைச் செய்து களிப்புறுவார்.
- ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பு மூலம் வெற்றியை அனுபவிக்கக்கூடிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகச் செய்த பலவற்றையும் களிப்புடனும் ஆற்றுகையாகவும் முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள்:**

- வேலைகளை மேலும் இலகுவாகச் செய்துகொள்வதற்காக உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்துவார்.
- பண்டைய காலத்தில் வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக பிராணிகளைப் பயன்படுத்திய விதத்தைக் கூறுவார்.
- வேலைகளை இலகுபடுத்துவதற்காகப் பயன்படுத்தும் உபகரணங்களின் மாதிரியுருக்களை பல்வேறு பொருள்களைப் பயன்படுத்தி ஆக்குவார்.
- நேரசூசிக்கு அமைவாகச் செய்யப்படும் காரியங்களால் வேலைகளை இலகுபடுத்திக் கொள்வார்.
- திட்டமிட்டு வேலைகளில் ஈடுபடுவதன் மூலம் வேலைகளை இலகுபடுத்திக் கொள்வார்.
- வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்கும் அதனூடாக இரசனையைப் பெறுவதற்கும் பயன்படுத்திய தாளத்துடனான கவிதைகளையும் பாடல்களையும் லயத்துடனும் பாவ வெளிப்பாட்டுடனும் பாடுவார்.
- ஒத்துழைத்துச் செயற்படுவதன் மூலம் வெற்றியை அனுபவிக்கக்கூடிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

செயற்பாடு 1

- இரண்டு வட்டங்கள் வீதம் வரையப்பட்ட A4 அளவுள்ள காகிதங்களை ஆளுக்கு ஒன்று வீதம் மாணவர்களுக்கு வழங்குங்கள். அவற்றுள் ஒரு வட்டத்தின் வழியே கையால் கவனமாகக் கிழித்து வட்டமொன்றினைப் பெறுமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- மற்றைய வட்டத்தைக் கத்தரிக்கோலைப் பயன்படுத்தி வெட்டியெடுக்குமாறு கூறுங்கள். அவ்விரு வட்டங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மிக நேர்த்தியாகவும் இலகுவாகவும் எந்த முறையில் வட்டத்தைப் பெற முடிந்தது? கையால் கிழித்தல் மூலமா, கத்தரிக்கோலால் வெட்டுதல் மூலமா என வினவி வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்கு நாம் உபகரணங்களைப் பயன்படுத்துகின்றோம் என்பதை எடுத்துக்காட்டுங்கள்.
- வகுப்பறையில் வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காகப் பயன்படுத்தும் உபகரணங்கள் யாவை என வினவி அவற்றை அவதானிக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அவ்வுபகரணங்களின் பயன்கள் யாவை, அவற்றின் மூலம் செய்யக்கூடிய வேலைகள் யாவை என மாணவர்களிடம் வினவுங்கள்.

  ***உதாரணம்*** : பிணைகருவி (ஸ்டெப்லர்), துளைகருவி (பஞ்சர்), கத்தரிக்கோல் ...... போன்றவை

செயற்பாடு 2

- பண்டைய கால மக்கள் தமது வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக பிராணிகளைப் பயன்படுத்தியமையைக் காட்டும் படங்கள், காணொளிக் காட்சிகளைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.
- அவற்றைக் காட்சிப்படுத்திப் பண்டைய காலத்தில் வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காக பிராணிகளைப் பயன்படுத்திய விதம் தொடர்பாக உரையாடுங்கள்.

  ***உதாரணம்*** : வயல் வேலைக்கு எருதுகள், மரக்குற்றிகளை இழுப்பதற்கு யானைகள், பொதி சுமப்பதற்காக சில வகைப் பிராணிகள், ஏறிச் சவாரி செய்யக் குதிரைகள், எண்ணெய் பிளிவதற்கு செக்கு, யுத்தத்தில் பிராணிகளைப் பயன்படுத்துதல், அணைக்கட்டுகள் கட்டுவதற்கு, பண்டைய காலத் தூது / செய்தி அனுப்புவதற்கு ...... போன்றன
- பண்டைய காலத்தில் பிராணிகளைப் பயன்படுத்திச் செய்த வேலைகளை வகிபாகமேற்று நடித்தல் மூலம் வகுப்பில் முன்வைக்குமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

  ***உதாரணம்*** : சூடுமிதித்தல், செக்கு சுழற்றுதல், மரக்குற்றிகள் இழுத்தல், பொதி சுமத்தல்

செயற்பாடு 3

- வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காக நாம் அன்றாடம் பயன்படுத்தும் பல்வேறு உபகரணங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- வளர்ந்தோர் போன்று நாமும் எமது வேலைகளை இலகுபடுத்திக் கொள்வது பயன்மிக்கதாகும் எனக் குறிப்பிட்டு பெருமளவில் பயன்படுத்தும் சில உபகரணங்களை வகுப்புக்குத் தருவித்துக் கொள்ளுங்கள்.

- அவ்வுபகரணங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- அவ்வாறான உபகரணங்களைப் பயன்படுத்திச் செய்யும் வேலைகள் பற்றி உரையாடுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- குழுவுக்கு ஓர் உபகரணம் வீதம் (திருப்புளி, சுத்தியல், குறடு .... போன்ற) ஒதுக்கி, தமது குழுவுக்குரிய உபகரணத்தை அவதானிக்குமாறு கூறி பின் அதனைப் பயன்படுத்த வழிப்படுத்துங்கள்.

**சுத்தியலைப் பயன்படுத்தும்போது**

- வகுப்பு மாணவர்கள் கொண்டுவந்துள்ள சுத்தியல்களின் தன்மையை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- அதற்கமைய வெவ்வேறு வகைச் சுத்தியல்கள் உள்ளன என்பதை எடுத்துக்காட்டுங்கள்.
- அவ்வொவ்வொரு வகைச் சுத்தியலின் விசேட பண்புகளையும் விளக்குங்கள்.

  ***உதாரணம்*** :
  - கவர்ச் சுத்தியல் - ஆணி அறைவதற்கும், கழற்றுவதற்கும் பயன்படுத்தப் படும்.
  - சம்மட்டி - கல் உடைக்கப் பயன்படுத்தப்படும்
- பின்னர் வேலைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்ற தச்சன் மேசையின் பொதுவான சுத்திய லொன்றைக் காட்டுங்கள். அது ஆக்கப்பட்டுள்ள விதத்தை அவதானிக்கச் செய்யுங்கள்.
- சுத்தியலின் வடிவம் எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது என அவதானிக்கச்செய்து, அவ்வடிவ மானது வேலைகளை இலகுபடுத்திக்கொள்ள உதவும் விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- சுத்தியல் சார்ந்த திறன்களை வழங்குவதற்காகச் சற்று மென்மையான ஒரு பலகைத்துண்டில் சுயாதீனமாக ஓர் ஆணியை அறைய மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பமளியுங்கள். ஆணியையும் சுத்தியலையும் பயன்படுத்தும் சரியான முறையைக் காட்டுங்கள்.
- சுத்தியலின் கைபிடியைப் பிடிக்கும் விதத்திற்கேற்ப ஆணியை இலகுவாகப் பலகையினுள் செலுத்த முடியும் என்பதைச் செயல்முறை மூலம் விளங்கிக் கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள்.
- இவ்வாறு பலகையில் ஆணி தேவையான அளவுக்குப் புதையும் வரையில் சுத்தியலினால் ஆணி மீது அறையுங்கள்.
- இவ்வாறாக, தேவையான திறன்களைப் பெற்றுக்கொள்ள ஆர்வமூட்டுங்கள்.

**குறடைப் பயன்படுத்தும்போது**

- முதலில் குறடை அவதானிக்கச் செய்து குறடின் அமைப்பு வேலைகளை இலகுபடுத்தக் காரணமாகும் விதத்தை விளங்கிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
- பின்னர் அதனைச் செய்முறையாகப் பயன்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறடு வகைகள் பல உள்ளன என்பதை மாணவருக்கு எடுத்துக்காட்டுங்கள்.
- அவ்வொவ்வொரு வகைக் குறடினாலும் செய்யப்படும் வேலைகளை விளங்கப்படுத்துங்கள்.
- யாதேனுமொன்றை இறுக்கமாகப் பற்றிப் பிடிப்பதற்கும் கம்பி போன்றவற்றை வெட்டுவதற்கும் குறடைப் பயன்படுத்தலாம் என்பதைச் செயல் மூலம் இனங்காணச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- குறடின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறு வேலைகளைச் செய்வதற்கு ஏற்றவாறு அமைக்கப்பட்டுள்ளது என எடுத்துக்காட்டி அவ்வாறான சந்தர்ப்பங்களை முன்வைத்து குறடினால் செய்யக்கூடிய பல்வேறு வேலைகளை இனங்காண்பதற்கு மாணவர்களுக்கு ஆர்வமூட்டுங்கள்.

திருப்புளியை (screw driver) பயன்படுத்தும்போது

- திருப்புளி வகைகள் பல உள்ளன என்பதை மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுங்கள்.
- அவ்வொவ்வொரு வகைக்கும் இடையிலான வேறுபாடுகளைக் கற்றாயுமாறு வழிப்படுத்துங்கள்.
- பொதுவான திருப்புளி, பூமுனைத் திருப்புளி (பலிப்பு வகை), மின்சோதிப்பான் (tester) ஆகியவற்றின் மூலம் வேலைகளைச் செய்யும் விதத்தை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- பொதுவான திருப்புளியினால் பொதுவான திருகாணிகளையும் பலிப்பு வகைத் திருப்புளியினால் நான்காகக் பிரித்த தவாளிப்புள்ள திருகாணிகளையும் கழற்றிப் பூட்டலாம் என்பதை எடுத்துக் காட்டுங்கள்.
- யாதேனும் ஓர் இடத்தில் மின் பாய்கிறதா / உண்டா எனச் சோதிப்பதற்கு மின்சோதிப்பானை (tester) பயன்படுத்தலாம் என்பதையும் விளக்குங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி இந்த உபகரணங்களை வழங்கி அவற்றைப் பயன்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குங்கள். (பாதுகாப்புக் குறித்துக் கவனஞ் செலுத்துங்கள்)

  ***உதாரணம்*** : o கவர்ச் சுத்தியல் : ⁕ சரியாகப் பிடிக்கும் முறை
  ⁕ ஆணியைச் சரியாக அறையும் முறை

செயற்பாடு 4

- பாடசாலைச் சுற்றுப்புறத்தில் வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளும் உபகரணங்கள் பயன்படுத்தப்படும் ஒரு வேலைத்தலத்தைப் பார்வையிடுவதற்கு மாணவர்களை அழைத்துச் செல்லுங்கள்.
- அங்கு வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், அவற்றை இயக்கும் விதம், அவை அமைந்துள்ள விதம், அவற்றைத் தயாரிப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள மூலப்பொருள், ..... போன்றவை தொடர்பாகக் கவனத்தை ஈர்த்து வேலைத்தலத்தை அவதானிக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- தேவையான சந்தர்ப்பங்களில் வழிகாட்டல் வழங்குங்கள்.
- பின்னர், வேலைத்தலத்தில் அவதானித்தவற்றை அறிக்கைப்படுத்துங்கள்.

செயற்பாடு 5

- வேலைகளை இலகுபடுத்திக்கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் சில உபகரணங்களின் மாதிரியுருக்களை ஆக்குவதற்குத் தேவையான பொருள்களைக் கொண்டு வருமாறு மாணவர்களுக்கு அறிவியுங்கள்.


  ***உதாரணம்*** : அட்டை, காகிதத்தாள், சிறிய மரக்கட்டைகள், வெற்றுப் பெட்டிகள் போன்ற பாவனைநீங்கிய பொருள்கள்
- அப்பொருள்களைப் பயன்படுத்தி, தாம் விரும்பும் வேலையை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தும் உபகரணங்கள், பண்டங்கள், பொறிகள் போன்றதொன்றை ஆக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.


  ***உதாரணம்*** : ஒற்றைச் சில்லுவண்டி, வாள், சுத்தியல், தூசு துடைப்பான், நில உருளை, ....... போன்றவை
- தமது வீட்டிலும் வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகப் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், அவற்றின் தொழில்கள் என்பன தொடர்பாக உரையாடுங்கள்.

  ***உதாரணம்*** : பிளெண்டர், தையல் பொறி, இயந்திர ஆட்டுக்கல் (grinder), மின்னழுத்தி, சலவைப் பொறி, ........... போன்றவை.


செயற்பாடு 6


- யாதேனும் பொருளை நிலத்தின் மீது தள்ளிய அல்லது இழுத்த சந்தர்ப்பங்களை நினைவுபடுத்துங்கள்.
    - ⁕ கரடுமுரடான தரையின் மீது தள்ளிய அல்லது இழுத்த சந்தர்ப்பங்கள்
    - ⁕ ஒப்பமான தரையின் மீது தள்ளிய அல்லது இழுத்த சந்தர்ப்பங்கள்





- இந்தச் சந்தர்ப்பங்கள் தொடர்பான அனுபவங்களைப் பெற மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- எந்தச் சந்தர்ப்பத்தில் மிகவும் இலகுவாகத் தள்ள அல்லது இழுக்கக்கூடியதாக இருந்தது என வினவுங்கள்.
- அதே பொருளைச் சாய்வான ஒரு தளத்தில் மேல் நோக்கித் தள்ளுமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள். அப்போது எதிர்கொண்ட அசௌகரியங்களை விபரிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அவ்வாறான வேலைகளை இலகுபடுத்திக் கொள்வதற்காகக் கப்பியைப் பயன்படுத்தலாம் என எடுத்துக்காட்டுங்கள்.





- அன்றாட வாழ்க்கையில் கப்பி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்களை நினைவுபடுத்துங்கள்.
- வகுப்பறையில் எளிய கப்பியொன்றினை அமைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

***உதாரணம்*** :
- பிளாத்திக்குப் போத்தல் மூடியொன்றின் (அல்லது அதுபோன்ற வடிவமுள்ள ஒரு பொருளை) மத்தியில் துளையிடுங்கள்.
- பிளாத்திக்கு மூடியிற்கு சற்றுப் பெரிய வட்ட வடிவ அட்டைத் துண்டுகள் இரண்டினை அம்மூடியின் இரு பக்கங்களிலும் ஒட்டுங்கள். அவ்விரு வட்டங்களின் மத்தியிலும் துளையிடுங்கள்.
- துளையின் ஊடாக ஒரு கம்பிக்கோலை / தடியைப் புகுத்துங்கள்.
- பொருத்தமான உறுதியான நூல் வகையொன்றைப் பயன்படுத்தி சுமை ஒன்றினை உயர்த்துவதற்காகக் கப்பி யைப் பயன்படுத்தும் விதத்தைப் பற்றிச் செயன்முறையான அனுபவத்தைப் பெறுவதற்கு ஒழுங்குசெய்யுங்கள்.



செயற்பாடு 7

- வகுப்பறையில் நேரசூசியைக் காட்சிப்படுத்தி வகுப்பின் / பாடசாலையின் வேலைகள் நேரசூசிக்கு ஏற்ப நடைபெறுகின்றன என்பதையும் அன்றாட வேலைகளைச் செய்யும் போது, அவ்வேலையை மேலும் இலகுவாகவும் பயன்மிக்கதாகவும் செய்துகொள்வதற்காக நேரசூசியின் அவசியத்தைப் பற்றி உரையாடுங்கள்.
- பின்னர் மாணவர்களுக்குத் தமது வீட்டில் அன்றாட வேலைகளைச் செய்யும் விதத்தைக் காட்டும் நேரசூசியைத் தயாரிக்குமாறு கூறுங்கள். (பாடசாலை வேளையின் பின்னர் மறுநாள் பாடசாலை ஆரம்பமாகும் வரையிலான காலத்திற்காக)
- தாம் எழுதிய சில நேரசூசிகளை வகுப்பில் முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அவற்றில் அடங்கியுள்ள வேலைகள், அவ்வேலைகளுக்காக செலவுசெய்யும் காலம் ஆகியன தொடர்பாகக் கவனஞ்செலுத்தி, மிகவும் வினைத்திறனுள்ளவாறு நேரசூசியைத் தயாரித்துக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குங்கள்.
- அந்நேரசூசியை வீட்டில் பொருத்தமான ஓர் இடத்தில் காட்சிப்படுத்துமாறு மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குங்கள்.
- அதற்கேற்பச் செயற்படுவதற்கும் மாணவர்களுக்கு அறிவூட்டுங்கள். தேவையான உதவிகளை வழங்குவதற்குப் பெற்றோரும் அதனைப் பற்றி அறிந்து கொள்ளச் செய்யுங்கள்.

செயற்பாடு 8

- சுற்றாடல்சார் செயற்பாடுகள் பாடத்தின் பல்வேறு கருப்பொருள்களின் கீழ் மாணவர்கள் செய்த ஆக்கங்களைப் பயன்படுத்தி வகுப்பறையில் கண்காட்சி நடத்துவதற்காகச் செய்ய வேண்டிய காரியங்கள் யாவை என வினாவி, அவற்றை வரிசைப்படுத்துவதற்கு மாணவர் குழுக்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- வரிசைப்படுத்திய விடயங்களை முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- இவ்விடயங்கள் தொடர்பாக உரையாடிக் கண்காட்சியை நடத்துவதற்காகச் செய்யவேண்டிய காரியங்களை ஒழுங்குவரிசையில் கரும்பலகையில் குறிப்பிடுங்கள்.

  ***உதாரணம்*** :
  - அழைப்பிதழ் ஒன்று தயாரித்தல்
  - தயாரிக்கப்பட்ட காட்சிப்பொருள்களைச் சேகரித்து வைத்தல்.
  - வகுப்பறையை ஒழுங்கு செய்து கொள்ளல்
  - தயாரிக்கப்பட்ட காட்சிப்பொருள்களை வகுப்பறையில் பொருத்தமானவாறு வைத்தல்
  - பொருத்தமான இடங்களில் மாணவரை இடப்படுத்துதல்
  - அழைக்கப்பட்டோரை வரவேற்றல்
  - காட்சிப்பொருள்கள் பற்றி விவரித்தல் (மாணவர்கள்)
  - கண்காட்சி நிறைவு பெற்றதும் கண்காட்சி நடத்திய இடத்தை முன்னிருந்த நிலைக்கு மீள ஒழுங்குபடுத்துதல்
- யாதேனும் வேலையைச் செய்யும்போது அதனைத் திட்டமிட்டு, ஒழுங்குமுறையில் செய்வதால் எமது வேலைகள் இலகுவாகும் என்பதை வலியுறுத்துங்கள்.
- குழுவாக வேலைகளைப் பகிர்ந்து கொண்டு கண்காட்சியை ஒழுங்குசெய்வதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டுங்கள்.

செயற்பாடு **9**

- வேலைகளை இலகுபடுத்திக் கொள்ளல் தொடர்பாகக் கூறும் பாடல்கள், கவிதைகளைப் பாடுவதற்கும் பாடி ஆடுவதற்கும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

  ***உதாரணம்*** :
  - கம்மாலைக்காரன் பாடல்
  - கல் உடைப்போர் பாடல்
  - கமக்காரர் பாடல்
  - மீனவர் பாடல்

மீனவர் பாடல்

விடிவெள்ளி நம் விளக்கு ஐலசா
விரிகடலே பள்ளிக் கூடம் ஐலசா

அடிக்கும் அலையே நம் தோழன் ஐலசா
அருமைமேகம் நமது குடை ஐலசா

பாயும் புயல் நம் ஊஞ்சல் ஐலசா
பனிமூட்டம் உடற்போர்வை ஐலசா

பின்னல் வலை அரிச்சுவடி ஐலசா
பிடிக்கும் மீன்கள் நம் பொருட்கள் ஐலசா.

நன்றி : விக்கிபீடியா.

செயற்பாடு **10**

- வகுப்பு மாணவரைச் சில குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவின் எதிரிலும் 6 மீற்றர் தூரத்தில் கொடிக்கம்பம் போன்ற அடையாளம் ஒன்றினை வையுங்கள்.
- மாணவர் குழுக்களில் முதலாவதாக நிற்கும் மாணவரிடம் சிறிய பந்தொன்றையும் சற்றுப் பெரிய துடுப்பொன்றையும் கொடுங்கள்.
- ஆசிரியர் வழங்கும் கட்டளைகளுக்கேற்ப குழுக்களில் முதலாவதாக நிற்கும் மாணவர்கள் பந்தைத் துடுப்பினால் உருட்டிச் சென்று தமக்கு எதிரே உள்ள குறிக்கப்பட்டுள்ள இடத்தைச் சுற்றிப் பந்தைக் கொண்டு சென்று தமது குழுவின் இரண்டாவது மாணவர் இருக்கும் இடத்திற்குப் பந்தைத் தட்டிக்கொண்டு வரவேண்டும்.
- பந்தையும் துடுப்பையும் இரண்டாம் மாணவருக்குக் கொடுத்தல் வேண்டும். அம்மாணவரும் முதலாமவரைப் போன்றே பந்தைத் துடுப்பினால் உருட்டிச் சென்று திரும்பி வந்து மூன்றாமவரிடம் துடுப்பையும் பந்தையும் ஒப்படைக்க வேண்டும்.
- இவ்வாறாக இறுதி மாணவர் வரை செயற்பாட்டை நடத்துதல் வேண்டும்.
- விரைவாகச் செயற்பட்டு முதலில் செயற்பாட்டைப் பூர்த்திசெய்த குழு வெற்றி பெற்ற குழுவாகும்.

## 12. கருப்பொருள்: **மனித நடத்தைகள்**

சிறந்த சமூக உருவாக்கத்திற்கு மனிதத்துவத்தை மதிக்கும் நிலையும் அன்னியோன்ய பரிந்துணர்வும் மிக முக்கியமாகும். ஒவ்வொருவரையும் கௌரவத்துடன் மதிக்கும் ஏனையோருக்கு செவிமடுக்கும் அதிகமான நபர்களைக் கொண்டிருக்கும் சமூகம் முதிர்வடைந்த அமைதியான சமூகமாகும். இக்கருப்பொருளில் தான் தொடர்பாகவும் ஏனையோர் தொடர்பாகவும் பரிந்துணர்வுடன் செயல்படுவதற்கு வழிப்படுத்தப்படுவதுடன் எதிர்காலத்தில் முதிர்வுபெற்ற அமைதியான நபரொருவருக்கு அவசியமான தேர்ச்சிகளுக்குரிய அடிப்படைகளை வழங்குவது இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சிகள்:**

- தமதும் சமூகத்தினதும் நன்னிலைக்காகப் பயன்மிக்க பண்புகளைப் பேணிவருவார்.
- நல்ல இடைத்தொடர்புகளை வைத்திருப்பதற்குத் துணையாகும் வகையில் ஆக்கங்கள் செய்வார்.
- பங்குபற்றுவதற்கான சம சந்தர்ப்பத்தைப் பெற்று உபகரணங்களைக் கையாளும் வகையிலான ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- மனிதனின் வெவ்வேறு நடத்தைகளை உணர்வு வெளிப்பாடாக வெவ்வேறு வெளிப்பாட்டு ஊடகங்கள் மூலம் ஆக்கபூர்வமாக முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள்:**

- மனிதர்கள் கூட்டாகச்சேர்ந்து வாழும் ஒரு தொகுதியினர் ஆவர் என்பதை விளங்கிக்கொள்வார்.
- கூட்டாக வாழும்போது தனியாட்கள் கொண்டிருக்க வேண்டிய சில பண்புகளை எடுத்துக்காட்டுவார்.
- பிள்ளையொன்று என்ற வகையில் சமூகத்தின் நன்மைக்குப் பொருத்தமான சூழலை விளங்கிக் கொள்வார், அதனை விளக்குவார்.
- தனது அன்பர்களுடன் நல்ல முறையில் செயற்படுவதற்காகச் செய்யவேண்டியவற்றைக் கூறுவார், அதற்கமையச் செயற்படுவார்.
- தமது நண்பர்களுடன் / தோழியர்களுடன் செயற்படும்போது கருமமாற்ற வேண்டிய விதத்தை விளங்கிச் செயற்படுவார்.
- நல்ல நடத்தைகளை ஆடல், பாடல்கள் மூலம் வெளிப்படுத்திக்காட்டுவார்.
- கூட்டாகச் செயற்படும்போது வெற்றிபெறக்கூடிய திறந்தவெளி விளையாட்டுகளில் ஈடுபடுவார்.
- ஏனையோரை மகிழ்விப்பதற்காகப் பயன்படுத்தக்கூடிய ஆக்கங்கள் செய்வார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

செயற்பாடு 1

- நாம் வாழ்வதற்குத் தேவையானவை பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

  ***உதாரணம்*** :
  - வளி (சுவாசிப்பதற்கு)
  - சூழல் (சுத்தமான சூழல்)
  - மொழி (கருத்துக்களைப் பரிமாறுவதற்கு)
  - நல்ல பண்புகள் (அன்பு, கருணை, இரக்கம்)

- ஏனையோருக்கு உதவி புரிதல் / ஏனையோரை மதித்தல்
- பகிர்ந்து பரிமாறிக்கொள்ளல்
- சுத்தமாகவும் நேர்த்தியாகவும் இருத்தல்

- மேற்குறிப்பிட்டவை எல்லாம் தமக்கு விருப்பமான மனதைக் கவரும் பண்பொன்று நன்றாகக் கிடைக்கும்போது உணரப்படும் மகிழ்ச்சியைக் கண்ணை மூடி உணருமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- பின்னர் மாணவர்களின் கருத்துக்களை வினவுங்கள்.
- நாம் விரும்புபவை கிடைக்கும்போது மனதில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது என்பதையும் நாம் விரும்பாதவை எமக்குக் கிடைக்கும்போது மனதில் அதிருப்தி ஏற்படுகிறது என்பதையும் மாணவர்களது கருத்துக்களின் ஊடாக உறுதிப்படுத்துங்கள்.
- தனக்கு விருப்பமில்லாதவை சிலருக்கு விருப்பமுள்ளவை எனவும் தான் விரும்புபவை சிலருக்கு விருப்பமில்லாதவை எனவும் எடுத்துக்காட்டுங்கள்.
- அதனால் தான் விரும்பாத ஏதேனுமொன்றை மற்றையவர்களுக்குக் கூறாதிருப்பதற்கும் செய்யாதிருப்பதற்கும் எப்போதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை விளங்கப் படுத்துங்கள்.
- கூட்டாக நாம் வாழும்போது எம்மைப் போன்று மற்றவர்களையும் பற்றிச் சிந்தித்து காரியமாற்றுவதற்கு மாணவர்களின் மனதைப் போன்றே இதயத்தினாலும் உணரப்படும் செயற்பாடுகளில் மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இதற்காக வகுப்பு மாணவரை இரண்டு குழுக்களாக்குங்கள்.
- முதலில் ஒரு குழு செயற்பாட்டை நடத்துவதற்கும் மற்றைய குழுவினர் அவதானிப்பதற்கும் வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டில் பங்குபற்றும் குழுவில் அனைவரும் வட்டமாக இருக்குமாறு அறிவுறுத்துங்கள்.
- பின்னர் அனைவரும் கைகளை முன்னோக்கி நீட்டி நிலத்திற்குச் சமாந்தரமாக வைத்து தோள்கள் அணையுமாறு நெருங்கும் வரையில் வட்டத்தைச் சிறியதாக்குமாறு அறிவுறுத் துங்கள்.
- இனி, தமது வலது கையினால் தமக்கு நேர் எதிரே இருப்பவரது இடது கையைப் பிடிக்குமாறு கூறுங்கள்.
- இவ்வாறாகக் கைகளை விடுவிக்காது ஒரு வட்டம் அமைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.
- ஒன்றாகச் சிக்கியுள்ள **மனிதச் சங்கிலியை** நன்றாக அவதானிக்குமாறு மற்றைய குழு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- ஒரு மதில் போன்று ஒன்றாக இணைந்து நாம் எப்போதும் செயற்பட வேண்டிய விதத்தை மாணவர் அவதானிப்பு மூலம் கற்றறியச் சந்தர்ப்பமளியுங்கள்.
- பின்னர் மற்றைய குழுவினருக்கு இவ்வாறாகச் செயற்படச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒவ்வொரு மனிதனும் ஏனையோருடன் கூட்டாக வாழும்போது எப்போதும் ஏனையோரின் உதவி, ஒத்தாசை தேவை என்பதையும் இவ்வாறு எல்லாச் சந்தர்ப்பங்களிலும் உதவி புரிவதற்கு ஒருபோதும் தயங்குதலாகாது என்பதையும் மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- தமது நடத்தை மூலம் அதனை ஏனையோருக்கு வெளிக்காட்டுமாறு செயற்படுவதற்கு இயலுமான எல்லாச் சந்தர்ப்பத்திலும் செயற்பட வேண்டுமென வலியுறுத்துங்கள்.
- செயற்பாட்டின் இறுதியில் தான் உணர்ந்தவற்றைப் பற்றி மாணவர்களிடம் வினவுங்கள்.
- குழுச் செயற்பாட்டை நன்றாக நடத்தியமை குறித்து மாணவர்களைப் பாராட்டுங்கள்.

செயற்பாடு 2

- வகுப்பு மாணவர்களைத் திறந்தவெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச்செல்லுங்கள்.
- இதுவரையில் அவர்கள் கேட்டுள்ள கதைகள் பற்றி மாணவர்களிடம் வினவுங்கள்.

  ***உதாரணம்*** :
  - தொப்பி வியாபாரி
  - காகமும் வடையும்
  - ஆமையின் ஆகாய வழிப் பயணம் ......... போன்றவை
- மாணவர்கள் குறிப்பிடும் கதைத் தலைப்புகளுள் முழுக் கதையையும் தெரிந்துவைத்துள்ள ஒரு மாணவனை முன்னே அழைத்து அக்கதையைக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அவ்வொவ்வொரு கதையினாலும் கூறப்படும் விடயங்களின் மூலம் தனி நபர்களிடம் காணப்படவேண்டிய பண்புகளை வெளிக்கொணர்ந்து மாணவர்கள் அவற்றைப் பற்றி மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு உதவி வழங்குங்கள்
- கதை கூறிய மாணவரைப் பாராட்டுங்கள்.
- கூட்டாக வாழும்போது நாம் கொண்டிருக்கவேண்டிய பண்புகளை எமது வாழ்க்கையுடன் சேர்த்துக்கொள்வதற்காக புறாக்களின் கதை (வலையைத் தூக்கிக்கொண்டு பறத்தல்), போன்ற கதைகளை மாணவர் உள்ளத்தைத் தொடும் வகையில் கூறுங்கள்.
- அக்கதை மூலம் மாணவர்கள் உள்ளத்தில் தோன்றிய உணர்வுகள் பற்றிக் கலந்துரை யாடுங்கள்.
- எப்போதும் ஏனையோருடன் நட்புடனும் ஒருவரை ஒருவர் மதித்தும் பகிர்ந்து பரிமாறியவாறும் செயற்படுவதன் மூலம் வாழ்க்கையில் முகங்கொடுக்கும் சவால்களை வெற்றிகொள்ளலாம் என்பதை மாணவர்களின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.
- கதைகளின் உள்ளடக்கத்தை வாழ்க்கையுடன் இணைத்துக்கொள்ளும் விதத்தையும் மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- மேற்படி கதைகளிலிருந்து பொருத்தமான பாத்திரங்களைத் தெரிவுசெய்து சிறிய வகிபாகமேற்று நடித்தல்கள் அல்லது நாடகமாக முன்வைக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மாணவர்களது முன்வைப்புகளைப் பாராட்டுங்கள்.
- நாம் எல்லோரும் மன்னர்கள், நாம் எல்லோரும் பிரசைகள் போன்ற கருத்தைத்தரும் பாடலொன்றைப் பாடி இக்கருத்தை மேலும் வலுப்படுத்துங்கள்.

செயற்பாடு 3

- நாம் அன்றாடம் செய்யும் வெவ்வேறு காரியங்களின்போது சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மரியாதையான வார்த்தைப் பிரயோகங்களைப் பயன்படுத்தும்போது தனியாட்களுக்கிடையே காணப்படும் தொடர்புகள் உறுதிபெறுவதற்குக் காரணமாகும் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுங்கள்.
- அவ்வாறான சந்தர்ப்பங்களில் பயன்படுத்தக்கூடிய சொற்பிரயோகங்களை உதாரணங்காட்டி விளக்குங்கள்.
- அச்சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தும்போது குரலிலும் முகபாவனையிலும் நிகழவேண்டிய மாற்றங்களின்மீது கவனஞ்செலுத்துங்கள்.

  ***உதாரணம்*** :
  - மன்னியுங்கள், தவறுதலாகச் செய்துவிட்டேன்
  - நீங்கள் செய்த உதவிக்கு நன்றி
  - வணக்கம்
  - நன்றி
- இவ்வாறான சொற்பிரயோகங்களைப் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய விதத்தில் எளிய உரையாடல் ஒன்றையும் போலச் செய்தலையும் முன்வைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.


செயற்பாடு 4

- ஏனையோருடன் சேர்ந்து செயற்படும்போது பேணிவர வேண்டிய நற்பண்புகள் பற்றிக் கூறும் பாடல்கள், கவிதைகளைத் தேடிப்பெறுங்கள்.

  ***உதாரணம்*** :
  - கரிக்கட்டியால் சுவரில் கிறுக்காதீர்கள்.
  - கண்ட கண்ட இடங்களில் எதனையும் எழுதாதீர்கள்.
  - ஆசிரியர், மூத்தோர் அழைப்புக்கு எழுந்து பதில் கூறுவோம்.
- இவ்வாறான பாடல்களை மாணவர்களுடன் சேர்ந்து பாடுங்கள். அவற்றின் பொருளை விளக்கி, ஏனையோருடன் சேர்ந்து வாழும்போது நல்ல பழக்கங்களைப் பேணிவர வேண்டும் எனவும் அவ்வாறான சகல இடங்களிலும் கணிப்புக்கு (பாராட்டுக்கு) உள்ளாவர் எனவும் (நற்பண்புகள் உள்ள பிள்ளைகள்) அவ்வாறானோரை ஏனையோர் விரும்புவர் எனவும் எடுத்துக்காட்டுங்கள்.
- எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மன்னியுங்கள் எனக் கூறுவதற்கும் தயங்கக்கூடாது என மாணவர்களுக்கு எடுத்துக்கூறுங்கள்.
- வகுப்பறையிலும் பாடசாலையிலும் பாதையிலும் வீட்டிலும் வேறு எந்தவோர் இடத்திலும் இவ்வாறான பதங்களைப் பிரயோகிக்கும் பரிச்சயத்தை ஏற்படுத்துவதற்கான ஏக்கம் கிடைக்கும் வகையில் ஆசிரியர் உரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
- மாணவர்கள் பாடசாலையிலும் மேற்கூறியவாறாகச் செயற்படுகின்றனரா என்பது குறித்துக் கவனஞ்செலுத்துங்கள்.
- இவ்வாறானவற்றுக்கு மாணவர்களை ஊக்குவியுங்கள்.

செயற்பாடு 5

- கூட்டாகச் செயற்படுவதன் மூலம் வெற்றிபெறக்கூடிய ஆக்கபூர்வமான விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- இதற்காக ஒரு மாணவனுக்கு ஒன்று வீதம் இரண்டு நிறங்களில் பலூன்கள் பெறுங்கள்.
- பலூன்களை நன்கு ஊதிக்கொள்ளுங்கள்.
- இடவசதியுள்ள திறந்தவெளியான ஓர் இடத்திற்கு மாணவர்களை அழைத்துச்செல்லுங்கள்.
- ஒரு நிறப் பலூன்களை வைத்திருப்போரை முதலாம் குழுவாகவும் மற்றைய நிற பலூன்களை வைத்திருப்போரை இரண்டாம் குழுவாகவும் வேறாக்குங்கள்.



- திறந்தவெளியில் இடவசதியுள்ள இடமொன்றை ஒதுக்கிக்கொள்ளுங்கள்.
- அங்கு பலூன்களை நிறுத்தவேண்டிய இடமாக நான்கு அடி நீளமான சதுர வடிவக் கட்டங்கள் இரண்டினைப் படத்தில் காட்டியவாறு அடையாளமிடுங்கள்.
- மாணவர்களின் கைகளிலுள்ள பலூன்களை திறந்தவெளி முழுவதிலும் பரப்புங்கள்.
- ஆசிரியர் வழங்கும் சமிக்ஞையின்படி இரண்டு குழுக்களினது மாணவர்களும் ஓடிச்சென்று தமது குழுவுக்குரிய பலூன்களை ஒரு தடவைக்கு ஒன்று வீதம் கொண்டுவந்து தமது குழுவுக்குரிய கட்டத்தினுள் சேகரித்தல் வேண்டும்.
- அக்கட்டத்தினுள் (எல்லையினுள்) மாணவர்கள் பிரவேசிக்கலாகாது. இவ்வாறாக விரைவாக தமது குழுவுக்குரிய எல்லாப் பலூன்களையும் கட்டத்தினுள் சேகரிக்கும் குழு வெற்றிபெற்ற குழுவாகும்.
- செயற்பாட்டின் இறுதியில் மாணவர்கள் அனைவரும் ஒரே நோக்கத்திற்காகச் செயற்பட்ட மையால் வெற்றி பெறுவது இலகுவாக இருந்தது என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் காட்டுங்கள்.
- இவ்வாறாக வெவ்வேறு வேலைகளில் ஈடுபடும்போது தம்மாலான அளவுக்கு கூட்டாகச் செயற்படுவதன் மூலம் மேலும் வெற்றிகரமான பெறுபேறுகளை அனுபவிக்கலாம் என்பதை மாணவர்கள் விளங்கிக்கொள்ளச் செய்யுங்கள்.


செயற்பாடு 6

- தமது நண்பருக்கு / தோழிக்கு / ஆசிரியருக்கு / தாம் விரும்பும் ஒருவருக்கு (காகிதத்தினால்) ஆக்கம் செய்து அதனை அன்பளிப்பாக வழங்குவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அதற்காகப் பின்வருவது போன்ற எளிய ஓர் ஆக்கத்தைச் செய்யுமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.


***உதாரணம்***

- நிறத்தாளைப் பயன்படுத்தி 7 சென்ரிமீற்றர் விட்டமுடைய வட்டங்கள் (மாணவர் ஒருவருக்கு 6/7 வீதம்) வெட்டியெடுங்கள்.
- வெட்டியெடுத்த நிறக் காகித வட்டங்கள் 6/7 வீதம் மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கி அவற்றை உரு 2 இல் காட்டியவாறு வெட்டிக்கொள்ளுமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துங்கள்.
- பின்னர் 15 சென்ரிமீற்றர் நீளமும் 4 சென்ரிமீற்றர் அகலமும் கொண்ட பிறிஸ்டல் அட்டைத் துண்டை சில தடவைகள் மடித்து அதனைப் பூக்காம்பு போன்று ஒட்டித் தயார்படுத்திக் கொள்ளுங்கள்.
- வெட்டியெடுத்த வட்டங்களுள் ஒன்றின் நடுப்பகுதியில் பசை இட்டு மேலே தயார்படுத்திய பூக்காம்பின் முனையை ஒட்டிக்கொள்ளுங்கள்.
- இனி, மற்றுமொரு வட்டத்தை எடுத்து அதன் நடுப்பகுதியில் மாத்திரம் பசை பூசி அதனை முன்னர் ஒட்டிய வட்டத்தின் மத்தியில் ஒட்டுங்கள்.
- இவ்வாறாக மாணவர்கள் தம்மிடமுள்ள எல்லா வட்டங்களையும் மத்தியில் மாத்திரம் சிறிதளவு பசை பூசி ஒட்டுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- இறுதியில் இவ்வாறாக ஒட்டிய வட்டங்களின் மத்தியில் 2 சென்ரிமீற்றர் விட்டமுள்ள சிறிய வட்டமொன்று ஒட்டுவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- ஒவ்வொரு வட்டத்திலும் வெட்டி வேறாக்கிய பகுதிகளைப் பொருத்தமானவாறு மேல்நோக்கி வளைத்து பூ / மலர் இதழ்கள் போன்று அமையுங்கள்.
- ஆக்கத்தை மேலும் அழகுபடுத்துவதற்காக இலைகள், கேசரங்கள் போன்ற பகுதிகளைச் சேர்ப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மாணவர்களது ஆக்கங்களைப் பாராட்டுங்கள்.
- பின்னர் தமது ஆக்கத்தை வகுப்பில் தாம் விரும்பும் ஒரு நண்பருக்கு / தோழிக்கு அன்பளிப்புச் செய்யுமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பூ / மலர் கிடைக்கத்தக்கவாறு ஆசிரியர் தலையிட்டுச் செயற்படுத்துங்கள்.
- தாம் செய்த ஆக்கத்தை அன்பளிப்புச் செய்வதால் கிடைக்கும் மகிழ்ச்சி பற்றியும் மாணவர்களுடன் உரையாடுங்கள்.
- இவ்வாறான பழக்கங்களைப் பேணிவருவதன் முக்கியத்துவம் பற்றியும் வலியுறுத்துங்கள்.




படம் 1



படம் 2

## 13. கருப்பொருள்: **நிலமும் வானமும்**

நாம் வாழும் பூமியின் மேற்பரப்பு பல்வேறு வகைப்பட்டது. மழை, காற்று போன்ற இயற்கைக் காரணிகளால் பூமியின் மேற்பரப்பில் மாற்றங்கள் ஏற்படும். மனிதனின் தேவைகளுக்காகவும் பூமியின் மேற்பரப்பில் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. அதன் விளைவாக தீய விளைவுகள் ஏற்படுவதுண்டு. இவை பற்றி அறிந்து கொள்வதற்கும் மழை, காற்று போன்றவற்றின் தன்மைகள் பற்றிய களிப்பூட்டும் அனுபவங்களைப் பெறுவதற்கும் அழகியல் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கும் வாய்ப்பளிக்கும் வகையில் இக்கருப்பொருள் திட்டமிடப்பட்டுள்ளது.

**தேர்ச்சிகள்:**

- நிலத்தின் மேற்பரப்பின் பல்வேறுபட்ட தன்மையை துருவியாய்வார்.
- காற்றின் செயற்பாட்டை ஆராய்ந்து காற்றின் சக்தியைப் பெற்றுக்கொள்ளக்கூடிய பல்வேறு முறைகளை விபரித்துக் கூறுவார்.
- சுற்றாடல் மாசடையும் விதம் பற்றி ஆராய்ந்து சுற்றாடலின் தீங்குகளைத் தவிர்த்துக் கொள்வதற்காக பல்வேறு முறைகளை எடுத்துக் கூறுவார்.
- இயற்கைப் பொருள்களின் செயற்படு தன்மையையும் அவற்றினால் ஏற்படும் சுற்றாடல்சார் தாக்கங்களையும் துருவியாய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- நிலத்தினதும் வானத்தினதும் இயல்புகள் பற்றிக் கவனம் செலுத்துவதன் மூலம் ஆக்கங்களில் ஈடுபடுவார்.
- வெளியைப் பயன்படுத்தி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- வானத்தினதும் நிலத்தினதும் வியத்தகுதன்மை தொடர்பாகக் களிப்பூட்டும் செயற்பாடுகளை (கவிதைகள், பாடல்கள்) ஆடல், பாடல்கள் மூலம் முன்வைப்பார்.

**கற்றற்பேறுகள்:**

- சுற்றுப்புறச் சூழலில் வெவ்வேறு இடங்களை அவதானித்து அவற்றிற்கிடையிலான வேறுபாடுகளை ஒப்பீட்டுரீதியில் விளக்குவார்.
- காற்று காரணமாகச் சூழலில் நிகழும் மாற்றங்களை அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- பாடசாலைச் சுற்றாடல் மாசடையும் விதத்தைக் கண்டறிந்து அதனைத் தவிர்ப்பார்.
- பகலிலும் இரவிலும் வானத்தில் காணக்கூடியவற்றையும் அவற்றின் தாக்கங்களையும் அவதானித்து அறிக்கைப்படுத்துவார்.
- ஒளி சார்ந்ததாக வெவ்வேறு பரிசோதனைகளில் ஈடுபடுவார்.
- நிலத்திலிருந்து துள்ளியெழுதல் மற்றும் நிலம்படுதல் தொடர்பான திறன்களை விருத்தி செய்துகொள்வதற்காக செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- நிலத்தின் பல்வேறு தன்மை மூலம் வெளிப்படும் அழகைச் சித்திரமாக வரைந்துகாட்டுவார்.
- வெவ்வேறு பொருள்களைப் பயன்படுத்தி நிலத்தின் வேறுபட்ட தன்மைகளை வெளிக் காட்டுவார்.
- வானத்தின் வியத்தகுதன்மை பற்றிய பாடல்கள், கவிதைகளை வெளிப்பாட்டுரீதியான அசைவுகள் மூலம் முன்வைப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

செயற்பாடு 1

- பாடசாலைத் தோட்டத்தில், நிலத்தின் வேறுபாடுகளை இலகுவாக இனங்காணக்கூடிய சில இடங்களைத் தெரிவுசெய்துகொள்ளுங்கள்.

  *உதாரணம்* : o உயரமான ஓர் இடம், சமதளமான ஓர் இடம், சிறிது மேடான / சாய்வான ஓர் இடம்
- மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரித்து மேலே குறிப்பிடப்பட்டவாறு தெரிவுசெய்த இடங்களுக்கு வழிப்படுத்துங்கள்.
- பின்வரும் செயற்பாடுகள் மூலம் அனுபவங்களைப் பெறச் சந்தர்ப்பமளியுங்கள்.
  - ⁕ மேட்டின் உச்சியை நோக்கி ஓடுதலும் மேட்டிலிருந்து திரும்பிக் கீழ்நோக்கி ஓடிவருதலும்
  - ⁕ பந்தொன்றினை உருட்டிப் பார்த்தல்
  - ⁕ சில்லு ஒன்றினைத் தள்ளி உருட்டிவிடல்
  - ⁕ மேட்டின் உச்சியில் நீரை ஊற்றி அது வடிந்தோடும் விதத்தை அவதானித்தல்
- மாணவர் பெற்ற அனுபவங்கள் பற்றி உரையாடுங்கள்.

  ***உதாரணம்*** **:** o மேட்டின் உச்சியை நோக்கி ஓடும்போது களைப்பு ஏற்பட்டதா? ஏன் களைப்பு ஏற்பட்டது?
  - o பந்து எவ்வாறு உருண்டு சென்றது?
  - o சில்லைத் தள்ளியபோது என்ன நடந்தது?
  - o நீர் எவ்வாறு வடிந்தோடியது? ஏன் அவ்வாறு நிகழ்ந்தது?
- இவ்வாறாக நிலத்தில் வெவ்வேறு இடங்களில் இச்செயற்பாட்டை நடத்திப்பார்க்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அச்சந்தர்ப்பங்களை ஒப்பிட்டுக் கருத்துத் தெரிவிக்க வழிப்படுத்துங்கள்.
- நிலத்தின் பல்வகைமை ஏற்படுதலில் பங்களிப்புச் செய்துள்ள சூழல் காரணிகளை மேற்படி அவதானிப்புகள் மூலம் இனங்காணுங்கள்.

  ***உதாரணம்*** **:** o மழை காரணமாக நிலம் கழுவிச்செல்லப்பட்டுள்ள இடங்கள், நிலத்தில் உருவாகியுள்ள குழிகள்
- வெவ்வேறு தேவைகளுக்காக நிலத்தில் மாற்றங்கள் செய்யப்படுவதைக் காட்டுவதற்காக பாடசாலையில் செய்யப்பட்டுள்ள அவ்வாறான சில மாற்றங்கள் பற்றி வினவுங்கள்.

  ***உதாரணம்*** **:** o விளையாடுவதற்காகச் சமதளமாக்கப்பட்ட நிலம் (விளையாட்டு மைதானம்)
  - o கட்டடம் கட்டுவதற்காக மாற்றியமைக்கப்பட்ட ஒரு நிலம்
  - o விவசாயம் / கமம் செய்வதற்காக அமைக்கப்பட்ட ஒரு பண்ணை நிலம்
- மேற்குறிப்பிட்ட இடங்களுள் மாணவர் விரும்பும் ஓர் இடத்தின் மாதிரியுருவை ஆக்குவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மாணவரது ஆக்கங்களைப் பாராட்டுங்கள்.

செயற்பாடு 2

- காற்று வீசும்போதும் காற்றின் வேகம் அதிகரிக்கும்போதும் சூழலில் உள்ள பல்வேறுபட்டவை செயற்படும் விதம் பற்றிய அனுபவங்களைப் பெறுவதற்காகப் பின்வரும் சந்தர்ப்பங்களை அவதானிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

*உதாரணம்* 
- காய்ந்த இலைகள், சருகுகள் போன்றவற்றுக்கு நிகழ்பவை
- திறந்தவெளியான ஓர் இடத்தில் ஏற்றப்பட்டுள்ள ஒரு கொடிக்கு காற்று வீசும்போது என்ன நடக்கிறது?
- காற்று வீசும்போது மரங்களின் இலைகளும் கிளைகளும் அசைதல்
- காற்று வீசும் வேளையில காய்ந்த இலைச சருகுகள், சிறிய துண்டுகளாகக் கிழிந்த காகிதத்தாள், பஞ்சு போன்றவற்றைக் காற்று வீசும் வேளையில் வெளியில் வீசுவதுடன் நிகழ்பவை
- சீதேவியர் செங்கழுநீர் வித்து, எருக்கலை வித்து, பஞ்சுடன் இணைந்த பருத்தி வித்து போன்றவை செயற்படும் விதம்
- காற்று வீசும் வேளையில் கொளுத்தி வைக்கப்பட்டுள்ள ஊதுபத்தியிலிருந்து வெளியேறும் புகை செல்லும் விதம்
- காற்று வீசும் வேளையிலும் காற்று வீசாத வேளையிலும் புகை செல்லும் விதம்
- வேகமான காற்று வீசும் வேளையில் விரித்துப்பிடித்த குடைக்கு நிகழ்பவை
- நனைந்த துணித் துண்டொன்று தொங்கவிடப்பட்டுள்ளபோது காற்று வீசுகையில் நிகழ்பவை

  (வசதி உள்ளதாயின் ஈரத்துணித் துண்டொன்றைச் சுழலும் மின்விசிறி ஒன்றின் எதிரே வைத்து அவதானிக்க வழிப்படுத்துங்கள்)

- இச்செயற்பாடுகள் மூலம் காற்றுக் காரணமாகச் சில பொருள்கள் அவை அமைந்துள்ள இடத்திலேயே அசையும் எனவும் மற்றும் சில பொருள்களின் திசை மாற்றமடையும் எனவும் மற்றம் சில பொருள்கள் இருந்த இடத்திலிருந்து அடித்துச் செல்லப்படும் எனவும் ஈரமான பொருள்கள் உலரும் எனவும் எடுத்துக்காட்டுங்கள்.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் தடியுடன் இணைந்த துணியிலான கொடி ஒவ்வொன்று வீதம் வழங்குங்கள்.
- திறந்தவெளியான பொருத்தமான ஓர் இடத்திற்கு மாணவரை அழைத்துச் செல்லுங்கள்.
- கொடியைக் கையில் ஏந்தியவாறு காற்று வீசும் திசையில் செல்லுமாறும் எதிர்த்திசையில் செல்லுமாறும் மாணவரை வழிப்படுத்துங்கள்.
- அவ்வாறு செல்லும்போது உணரப்படும் வேறுபாடுகள் பற்றியும் கொடிக்கு என்ன நிகழ்கிறது என்பது பற்றியும் உரையாடுங்கள்.
- எல்லாக் கொடிகளையும் திறந்தவெளியான ஓர் இடத்தில் நட்டு, காற்றிற்கு ஏற்ப கொடிகள் அங்குமிங்கும் அசையும் விதத்தை அனுபவிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- அதற்கமைய காற்று வீசும் திசையை இனங்காணுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- செயற்பாட்டின் இறுதியில் காற்றுக் காரணமாகச் சூழலில் நிகழும் மாற்றங்கள் பற்றி மாணவருடன் உரையாடுங்கள்.

செயற்பாடு 3

- பாடசாலைச் சூழலில் பின்வருவன போன்ற சில இடங்களை அவதானிப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

*உதாரணம்* 
- நீர்க்குழாய் வாயிலுக்கு அருகே
- மலசலகூடச் சுற்றுப்புறம்
- பாடசாலையில் குப்பைகூளங்கள் கொட்டும் இடம்

- அவ்வாறான இடங்களைச் சூழவுள்ள நிலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்மீது மாணவரது கவனத்தை வழிப்படுத்துங்கள்.
- அத்தீங்கான மாற்றங்கள் நிகழ்ந்துள்ள விதம் தொடர்பான விடயங்களை அவதானித்துக் கூறுவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.


***உதாரணம்*** :
- கண்டகண்ட இடங்களில் பொலித்தீன் போடுதல்
- நீர்த்தாரையை நேரடியாக நிலத்தில் விழவிடல்

- பின்னர் பாடசாலைச் சூழலிலுள்ள சுத்தமாகவும் மனங்கவரக்கூடிய விதமாகவும் பேணிவரப்பட்டுள்ள ஓர் இடத்தை அவதானிக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மேலே அவதானித்த அசுத்தமான, நேர்த்தியற்ற இடத்தைச் சுத்தமான, மனங்கவரக்கூடிய இடமாக மாற்றுவதற்காகச் செய்யக்கூடியவைகள் பற்றி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

***உதாரணம்*** :
- கழிவுப் பொருள்களை வகைப்படுத்தி வெளியேற்றல்
- எச்சில், கழிவுநீர் போன்றவற்றை முறைமையாக வழிந்தோடச்செய்தல்
- கூட்டெரு தயாரித்தல்

- எமது சுற்றுப்புறத்திலுள்ள நிலம் அசுத்தமடைவதற்கும் நேர்த்தியற்றுக் காணப்படுவதற்கும் எப்பொழுதும் காரணமாக அமைவது குப்பைகூளங்களை உரியவாறு வெளியேற்றாமையே என்பதை மாணவர்களுக்கு விளக்குங்கள்.
- அதற்காக, கழிவுப்பொருள்களை உரியவாறு வெளியேற்றுவதற்காகக் கூட்டெருப் பாத்திர மொன்றினை மாணவர்களுடன் சேர்ந்து அமையுங்கள்.





- இதற்காகத் தடிகள், தென்னம்மட்டை போன்றவற்றைப் பயன்படுத்தி அமைப்பொன்றை உருவாக்குங்கள்.
- கூட்டெருப் பாத்திரத்தில் எவ்வாறான கழிவுகளைப் போடலாம் என மாணவருடன் வினவுங்கள்.
- அமைத்த பாத்திரத்தினுள் உக்கும் தன்மையுள்ள கழிவுப்பொருள்களைத் தினமும் இடுமாறும் மற்றைய கழிவுப்பொருள்களை வேறாக்குவதற்கும் மாணவர்களை எப்போதும் ஆர்வமூட் டுங்கள்.

செயற்பாடு 4
- பகலிலும் இரவிலும் வானத்தில் காணப்படுபவற்றையும் அங்கு நிகழும் மாற்றங்களையும் அவதானித்து மாணவர்களைப் பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.
- அதற்காக மாணவர் ஒவ்வொருவருக்கும் பின்வருவது போன்ற மாதிரிப் படிவம் ஒவ்வொன்று வழங்குங்கள்.

| | பகல் வானம் | | | இரவு வானம் | |
|---|---|---|---|---|---|
| | சூரியன் உதித்துள்ளது | வானத்தில் முகில்கள் உண்டு | மழை நாள் | சந்திரன் தோன்றியுள்ளது | நட்சத்திரங்கள் உள்ளன |
| திகதி |  |  |  |  |  |
| | | | | | |

- இந்த அட்டவணைக்கேற்ப ஒரு வார காலத்திற்கு தகவல்களைத் திரட்டுவதற்கு மாணவர் களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ஒரு வார காலத்தின் பின்னர் மாணவர்கள் சேகரித்த தகவல்கள் தொடர்பாக உரையாடுங்கள்.
- மாணவர்கள் முன்வைக்கும் தகவல்களுக்கேற்ப அந்தந்தத் தினத்தில் வானத்தில் காணப்படும் நிலைமைகள் வேறுபட்டவை எனக் காட்டுங்கள்.
- மேலும் பகல் காலத்திலும் இரவுக் காலத்திலும் நிகழும் மாற்றங்களின்படி சூழலில் நிகழும் வெவ்வேறு வேறுபாடுகள் தொடர்பாக அவதானித்து அறிக்கைப்படுத்துமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

  ***உதாரணம்*** :
    - இரவில் / பகலில் மலரும் மலர்கள்
    - இரவில் / பகலில் சஞ்சரிக்கும் பிராணிகள்
    - சூழல் வெப்பநிலையில் உள்ள வேறுபாடு
- மாணவரது அவதானிப்புகளை முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- தேவையான சந்தர்ப்பங்களில் பின்னூட்டம் வழங்குங்கள்.


செயற்பாடு 5

- ⁕ இரவில் மலரும் மலர்கள்
- ⁕ பகலில் மலரும் மலர்கள்
- ⁕ இரவு காலத்தில் சஞ்சரிக்கும் பிராணிகள்
- ⁕ பகல் காலத்தில் சஞ்சரிக்கும் பிராணிகள்
- ⁕ சூரியன், சந்திரன் போன்றவற்றையும் உள்ளடக்கிய முகமூடிகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.


- சூரிய, சந்திர முகமூடிகள் இரண்டை மாணவர்கள் இருவருக்கு அணிவியுங்கள்.
- தயாரித்த மற்றைய முகமூடிகளையும் மாணவர்களுக்கு அணிவியுங்கள்.
- ஆசிரியர் வழங்கும் கட்டளைகளுக்கேற்ப சூரிய முகமூடி அணிந்துள்ள மாணவர் முன்னால் வரவேண்டும். கூடவே பகலில் சஞ்சரிக்கும் பிராணிகளும் பகலில் மலரும் மலர்களும் முன்னால் வரவேண்டும்.
- மீண்டும் ஆசிரியர் வழங்கும் சமிக்ஞையின்படி அம்மாணவர்கள் கலைந்து செல்ல வேண்டும். கூடவே சந்திர முகமூடி அணிந்த மாணவர் முன்வர வேண்டும். அவருடன் இரவில் சஞ்சரிக்கும் பிராணிகளும் இரவில் மலரும் மலர்களும் முன்வருதல் வேண்டும்.
- இவ்வாறாக மாணவர்கள் அனைவரும் செயற்பாட்டில் ஈடுபடச் சந்தர்ப்பமளியுங்கள்.

செயற்பாடு **6**

- மாணவர்களைப் பொருத்தமானவாறு குழுக்களாக்குங்கள்.
- சற்றுப் பெரிய தளவாடிகள் (பாதுகாப்பாகச் சட்டகமிடப்பட்ட முகம் பார்க்கும் கண்ணாடிகள்), தடித்த வெண்ணிறக் காகித அட்டைகள் (பிறிஸ்டல் அட்டைகள்) பேசின்கள் சில ஆகியவற்றைப் பெறுங்கள்.



- மாணவர்களைப் பிரகாசமாக சூரிய ஒளியுள்ள தினத்தில் திறந்தவெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவர் குழுக்களுக்கு தளவாடி, வெண்ணிறக் காகித அட்டை ஆகியவற்றை வழங்கி தளவாடியில் பட்டுத் தெறிக்கும் சூரிய ஒளியை அட்டைமீது பதியச்செய்து வெவ்வேறு கோலங்களை ஆக்க முடியுமாவெனக் கையாண்டுபார்க்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- சூரிய ஒளிக்கு நிறம் உண்டா என வினவுங்கள்.
- சூரிய ஒளிக்கு நிறம் உண்டாவெனச் சோதிப்போம் எனக்கூறி தேடிப்பெற்ற சற்றுப் பெரிய பேசினில் நீர் நிரப்பிக் கொள்ளுங்கள்.
- சூரிய ஒளி படக்கூடியவாறாக தளவாடியை பேசினுள் வையுங்கள்.
- தளவாடியின் எதிரே வெண்ணிற அட்டையைப் பிடிக்குமாறு மாணவர் ஒருவரிடம் கூறுங்கள்.





- வெண்ணிற அட்டையில் நிறங்கள் காட்சியளிக்கும் சந்தர்ப்பம் வரையில் தளவாடியையும் வெண்ணிற அட்டையையும் செப்பஞ் செய்யுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- வெண்ணிற அட்டையில் நிறங்கள் எவ்வாறு தோன்றின என மாணவர்களிடம் வினவுங்கள்.
- மாணவர்கள் தமது கருத்துக்களை வெளியிடச் சந்தர்ப்பமளியுங்கள்.

- கொண்டுவந்த பேசின்களை மாணவர் குழுக்களிடையே பகிர்ந்தளித்து ஒளியில் உள்ள நிறங்களை வேறாக்குவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

### செயற்பாடு 7

- மிதத்தல், அமிழ்தல் தொடர்பான திறன்களை மாணவர்களுக்கு வழங்குவதற்காக பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- வகுப்பு மாணவர்களைச் சமமான சில குழுக்களாக்குங்கள்.
- மாணவர் குழுக்களை வரிசைகளில் நிறுத்தி அவ்வரிசைகளுக்கு முன்னே தொடக்கக்கோடு ஒன்றை வரையுங்கள்.



- ஆசிரியர் வழங்கும் சமிக்ஞையின்படி ஒவ்வொரு குழுவிலும் இருக்கும் முதலாம் மாணவன் தொடக்கக் கோட்டை அடைந்து அவ்விடத்திலிருந்து இரு கால்களையும் ஊன்றி இயன்றளவு தூரத்திற்கு முன்னோக்கிப் பாய்தல் வேண்டும். (நின்ற நிலையிலிருந்து பாய்தல்)
- மாணவர் பாய்ந்த இடத்தை ஆசிரியர் யாதேனுமொன்றினால் அடையாளமிடுதல் வேண்டும்.
- மீண்டும் ஆசிரியர் வழங்கும் சமிக்ஞையின்படி வரிசையில் இரண்டாவது மாணவன் முன்னைய மாணவன் பாய்ந்த இடத்திலிருந்து இயன்றளவு தூரத்திற்கு முன்னோக்கிப் பாய்தல் வேண்டும்.
- அந்த இடத்தையும் ஆசிரியர் அடையாளமிட்டுக்கொள்ள வேண்டும்.
- இவ்வாறாக குழுவிலுள்ள மாணவர்கள் அனைவரும் செயற்பாட்டில் பங்குபற்றிய பின்னர் அதிக தூரம் பாய்ந்த குழுவினரை வெற்றிபெற்ற குழுவாகப் பாராட்டுங்கள்.
- குழுவில் மாணவர்களை மாற்றி, மாணவர்கள் பாயும் தூரத்தை அடையாளமிடுவதற்கு அம்மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளித்து செயற்பாட்டைத் தொடர்ந்து நடத்திச் செல்லுங்கள்.

### செயற்பாடு 8

- திறந்தவெளியான ஓர் இடத்தில் எல்லையிட்டு வேறாக்கி அதில், படத்தில் காட்டியுள்ளவாறு மலை எனக் குறிப்பிட்ட சில இடங்களை வேறாக்கிக்கொள்ளுங்கள்.
- மலை தவிர ஏனைய பகுதிகளைக் கடல் எனப் பெயரிடுங்கள்.
- மாணவர்கள் சிலரை சுறா மீன்கள் எனப் பெயரிடுங்கள். ஏனைய மாணவர்களை கடலில் வாழும் சிறிய மீன்கள் எனப் பெயரிடுங்கள்.
- சிறிய மீன்கள் கடலின் எல்லையில் நீந்திக்கொண்டிருக்கும்போது ஆசிரியரின் சமிக்ஞைக்கேற்ப சுறா மீன்கள் நீந்தி வந்து சிறிய மீன்களைப் பிடிக்க முயற்சிசெய்தல் வேண்டும்.
- சுறா மீன் வரும்போது சிறிய மீன்கள் மலைமீது ஏறித் தப்பித்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

- தப்பிச்சென்று மலையில் ஏறிக்கொள்ளத் தவறுவோர் போட்டியிலிருந்து நீங்குவார்.
- இவ்வாறாகப் படிப்படியாக மலைகளின் எண்ணிக்கையைக் குறைத்து விளையாட்டை / போட்டியைத் தொடர்ந்து நடத்துங்கள்.
- இறுதியில் கடைசியான ஒரேயொரு மலையில் ஏறியிருப்போர் வெற்றிபெற்றவர்களாவர்.

### செயற்பாடு 9

- குடும்ப உறுப்பினர்களுடன் அல்லது வேறு குழுவினருடன் தாம் சென்ற ஒரு சுற்றுலாவின் போது தமது மனங்கவர்ந்த ஓர் இடம் தொடர்பாக வினவி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- அவ்விடத்தைத் தாம் பெரிதும் விரும்புவதற்கான காரணம் யாதென மாணவரிடம் வினவுங்கள்.
- குறித்த சூழலில் உள்ள யாதேனும் விசேடமான அழகு காரணமாக பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நாம் அந்த இடத்தை விரும்புகின்றோம் என்பதைக் கலந்துரையாடல் மூலம் விளங்கிக்கொள்ளச் செய்யுங்கள்.
- இவ்வாறாகத் தமது மனங்கவர்ந்த இடங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துங்கள்.
- தமது மனங்கவர்ந்த குறித்த இடத்தினைச் சித்திரமாக வரையச் சந்தர்ப்பமளியுங்கள்.
- மாணவரது ஆக்கங்களைக் காட்சிப்படுத்திப் பாராட்டுங்கள்.

### செயற்பாடு 10

- சூழலில் காணப்படும் சாதாரணமான நிலைமைகள் மாற்றமடையும்போது சூழலில் நிகழும் மாற்றங்கள் தொடர்பாகக் கூறும் பாடல்கள் / கவிதைகளை மாணவருடன் சேர்ந்து பாடுங்கள்.

  ***உதாரணம் : 1***

மழைக்காலம்

வெண்முகில் மறைந்தது
வெப்பமும் தணிந்தது

கார்மேகம் சூழ்ந்தது
காரிருள் ஆனது

காற்றும் வீசியது
குளிரும் வந்தது

மழையும் பெய்தது
மண்ணும் குளிர்ந்தது


குடைகளும் விரிந்தன
குளங்களும் நிறைந்தன

தவளைகள் கத்தின
தாளமும் போட்டன.

வி.என்.எஸ். உதயசந்திரன்

செயற்பாடு **11**

- காற்றினால் சுழலக்கூடிய காற்றாடி ஒன்றை ஆக்குவதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- இதற்குச் சற்றுத் தடித்த காகிதத்தாளை எடுத்து சதுர வடிவில் (15 cm x 15 cm) வெட்டிக் கொள்ளுமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள். கீழே காட்டப்பட்டுள்ளவாறு படிப்படியாக அதனை ஆக்குமாறு கூறுங்கள்.



- ஒட்டிய இடத்தில் காகித வட்டமொன்று ஒட்டியபின் தடியொன்றுடன் குண்டூசியால் இணையுங்கள்.
- ஆக்கி முடிந்த பின்னர் அதனைக் கையில் பிடித்தவாறு ஓடுவதற்கும் காற்றாடி சுழலும் விதத்தைக் கண்டு களிப்புறுவதற்கும் மாணவர்களுக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- தென்னோலைக் கீற்றுகள் / குருத்தோலைக் கீற்றுகளைப் பயன்படுத்தியும் காற்றாடி ஆக்கலாம். அதற்கும் சந்தர்ப்பமளியுங்கள்.
- காற்றுக் காரணமாக நிகழும் மாற்றங்களைக் காண்பதற்காக, காற்றாடி ஆக்கிப் பிடித்திருத்தல் அல்லது ஓடிச்செல்லல் அல்லது சற்று உயரமான யாதேனும் ஓர் இடத்தில் கட்டிவைத்தல் ஆகியவற்றைச் செய்யலாம்.

## 14. கருப்பொருள்: **எம்மால் செய்யக்கூடிய மாற்றங்கள்**

தொடர்ந்தும் நிகழ்ந்த சாதகமான மாற்றங்களும் அம்மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட மாற்று முகவர்களின் பணிகளுமே உலகையும் உலக மக்களின் சமூகத்தையும் மேம்பட்ட வாழ்க்கைப் பண்புகளைக் கொண்ட ஓரிடமாக மாற்றியுள்ளன. இந்த உலகும் சாதகமான மாற்றங்களாக மாற்றுதல் வேண்டும். ஆக்கபூர்வமான மாற்று முகவர்களுக்கு மாத்திரமே இந்த அறைகூவலை எதிர்கொள்ள முடியும். அவ்வாறாயின், எதிர்காலச் சந்ததி மேலும் பரந்த கண்ணோட்டத்தைக் கொண்ட திடசங்கற்பம் பூண்ட ஆக்கபூர்வமான மாற்று முகவர்களாக மாறுதல் வேண்டும். அம்மாற்றங்கள் முதலில் தம்மிடத்திலேயே ஏற்படுதல் வேண்டும். தம்மிடத்திலும் தமது வகுப்பிலும் தமது சூழலிலுமே முதலில் அம்மாற்றங்கள் ஏற்பட வேண்டும். இதற்காக நாம் தனியாகவும் தமது நண்பர்களுடன் கூட்டாகவும் செயற்பட வேண்டும். கூட்டாக ஏற்படுத்தும் சாதகமான மாற்றங்களினூடாகக் களிப்படைய வேண்டும். எதிர்கால உலகில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக ஆக்கபூர்வமான மாற்று முகவர்களாவதற்குத் தேவையான மனப்பாங்குகளுக்கும் தேர்ச்சிகளுக்கும் அடிப்படையாக இக்கருப்பொருள் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சிகள்:**

- தமது நடத்தையில் நேர்வகையான மாற்றத்திற்காகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.
- கிட்டிய சூழலைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வைத்திருக்க ஆவன செய்வார் / செயற்படுவார்.
- தமது கிட்டிய சூழலின் தரம்சார்ந்த மாற்றத்திற்காகக் காணப்படும் பிரச்சினைகளை நுணுகி நோக்கி அதற்காகத் திட்டம் தயாரித்துச் செயற்படுத்துவார்.
- நல்ல வகையான மாற்றமொன்றைச் செய்வதற்குத் துணைபுரியும் ஆக்கங்கள் செய்வதற்காக தையல்சார்ந்த பரிச்சயத்தைப் பெறுவார்.
- விளையாட்டுத் திடலில் மாற்றங்கள் செய்து களிப்பூட்டும் விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- நமது நடத்தைகளை நல்லவையாக மாற்றிக்கொள்ளத்தக்க விதத்தைக் காட்டும் களிப்பூட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள்:**

- தமது சுய சுத்தத்தைப் பேணுவதற்காகச் செய்யக்கூடியவற்றை இனங்கண்டு செயற்படுவார்.
- தமது ஆடையணிகள், புத்தகங்களை நேர்த்தியாகவும் அழகாகவும் பேணிக்கொண்டு திருப்தியடைவார்.
- பாடசாலை அயற் பிரதேசத்தை ஈக்கள், நுளம்புகள், வேறு தீங்குவிளைவிக்கும் பிராணிகள் அற்ற இடமாகப் பேணிவருவதற்காகச் செய்யவேண்டியவற்றை இனங்கண்டு, அது தொடர்பாகக் கவனஞ்செலுத்திச் செயற்படுவார்.
- உதவி தேவைப்படும் நபர்களை இனங்கண்டு அவர்களுக்குத் தாம் செய்யக்கூடிய உதவிகளைச் செய்ய முன்வந்து செயற்படுவார்.
- தமது வகுப்பறையைச் சுத்தமாகவும் நேர்த்தியாகவும் பேணிவருவதற்காகச் செய்யத்தக்க வற்றை இனங்கண்டு செயற்படுவார்.
- நல்ல நடத்தைகளை வெளிப்படுத்தும் வகையிலான பாடல்கள் / கவிதைகளை முன்வைப்பார்.

- எவரேனும் ஒருவருக்கு அல்லது பிராணிக்கு உதவி தேவைப்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் தொடர்பாக உணர்வுகாட்டி நல்ல மாற்றத்தைச் செய்ய முன்வருவார்.
- கூட்டாகச் செயலூக்கத்துடனும் ஆக்கபூர்வமாகவும் செயற்பட்டுச் செய்யத்தக்க மாற்றங்களை அனுபவிப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்:**

**செயற்பாடு 1**

- வகுப்பு மாணவர்களைத் திறந்தவெளியான ஓர் இடத்திற்கு அழைத்துச்செல்லுங்கள்.
- வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கைக்கு அமைய குழு 1, குழு 2 ஆகுமாறு வரிசையாக நிறுத்துங்கள். இரண்டு வரிசைகளையும் ஆசிரியரின் எதிரே அழைத்துக்கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு மாணவரதும்
  - ⁕ உடைகள்
  - ⁕ நகம் (கைகள், கால்களின் நகங்கள்)
  - ⁕ பல்


  போன்றவை பற்றிக் கவனஞ்செலுத்தி அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக அவதானியுங்கள்.

  ***உதாரணம்*** **:**
  - நகங்கள் வெட்டப்பட்டுள்ளனவா
  - தலைமயிர் எண்ணெய் போட்டு நன்கு வாரப்பட்டுள்ளதா
  - கழுத்துப் பட்டையில், கைகளின்கீழ், சட்டைப்பை அயலில் அழுக்குப் படிந்துள்ளனவா
  - முழங்கை, முழங்கால், அக்குள் ஆகிய பகுதிகள் நன்கு சுத்தம் செய்யப்பட்டுள்ளனவா
- பின்னர் தத்தமது சுய சுத்தத்தின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடுங்கள்.
  - ⁕ கைவிரல்களில் நகங்கள் வளரும்போது அவற்றை வெட்டி நீக்குதல் வேண்டும் என்பதையும் அவ்வாறு செய்யாவிடின் நோய்க்கிருமிகள் கைகளின் வழியே வாயை அடைந்து பின்னர் உடலினுள் செல்லுதல்
  - ⁕ சரியாகப் பல் துலக்காவிடின் வாயில் துர்நாற்றம் ஏற்படுவதுடன் பற்சூத்தை ஏற்படல், பற்களைப் பிடுங்க நேரிடுவதால் முகத்தில் - தாடைக்குழிவு ஏற்படல், எதிர்காலத்தில் துரிதமாக முதிர்ச்சி, வயோதிபமடைதல் போன்றன ஏற்படல்
  - ⁕ உடலைச் சுத்தமாக வைத்திராவிடின் உடலில் வியர்வைத் துர்நாற்றம் ஏற்படல், தோலில் கொப்புளங்கள் போன்றவை தோன்றும்.
- இவ்வாறான விடயங்களைக் கலந்துரையாடி மாணவர்களுக்கு அறிவூட்டம் செய்து அதற்கிணங்க அவர்கள் செயற்படுகின்றனரா என்பதைக் கவனியுங்கள்.
- அறிவுறுத்தல்களுக்கேற்ப தமது சுய சுத்தம் பற்றிய கவனத்துடன் இருக்கும் மாணவரைப் பாராட்டுங்கள்.
- சுய சுத்தத்தை எடுத்துக்காட்டும் வகிபாகமேற்று நடித்தல்கள், பாடல்கள், கவிதைகளை ஆக்கபூர்வமாக முன்வையுங்கள்.
- கைகள்பற்றி அவதானிப்பதற்காக குழுவாகப் பொருத்தமான விளையாட்டை வகுப்பில் ஓய்வான ஓர் வேளையில் நடத்துமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு 2

படிமுறை 1

- கண்களிரண்டும் மூடிக் கட்டப்பட்டுள்ளபோது / இரவில் இருளில் இருக்க நேர்ந்துள்ளபோது எமக்கு என்ன நடக்கும் என மாணவரிடம் வினவுங்கள். மாணவர்கள் தரும் விடைகளைப் பதிவுசெய்யுங்கள்.
- எதையும் சரியாகப் பார்ப்பதற்கு / காண்பதற்கு கண்கள் இருக்கின்றமையினாலேயே நாம் நேர்த்தியாக / ஒழுங்காக இருக்க முடிகிறது என்பதை மாணவர்களுக்கு வலியுறுத்துங்கள்.
- கண்பார்வை உள்ள நாம் எமது கண்களை மூடிக்கொண்டு சென்று எடுக்கக்கூடிய பொருள்கள் பற்றி நினைவுகூருமாறு மாணவர்களுக்குக் கூறுங்கள்.
- பொருள்களை உரிய இடங்களில் ஒழுங்காக வைத்தால் மாத்திரமே அவ்வாறு நாம் அவற்றைக் கண்களை மூடிக்கொண்டு எடுக்கலாம் என்பது பற்றிச் சிந்தித்துப்பார்க்க வழிப்படுத்துங்கள்.
- தாம் பயன்படுத்தும் ஆடை, அணிகள், புத்தகங்கள், தண்ணீர்ப் போத்தல் ஆகியவற்றை உரிய இடங்களில் முறைப்படி வைப்பதற்குப் பழகிக்கொள்வதன் பெறுமதியை எடுத்துரை யுங்கள்.
- ஒழுங்கு, நேர்த்தி, பொறுமை ஆகிய பண்புகளை மாணவரிடத்தே உறுதிப்படுத்துவதற்காக பின்வரும் செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துங்கள்.
- வகுப்பு மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் 10 சென்ரிமீற்றர் நீளமும் 7.5 சென்ரிமீற்றர் அகலமும் கொண்ட சிறிய காகிதத்துண்டு ஒவ்வொன்று வீதம் வழங்குக. அக்காகிதத்துண்டின் எப்பகுதியையும் கிழித்து நீக்காதவாறு அதனைக் கொண்டு ஒரு வட்டம் ஆக்குமாறு வழிப்படுத்துங்கள்.
- காகிதத்துண்டின் அடியிலும் நுனியிலும் பைண்டர் கம் (பசை) தடவி வளையமொன்று / வளையல் ஒன்று செய்து கையில் அணிந்துகொள்ள வழிப்படுத்துங்கள்.



- தமக்குக் கிடைத்த காகிதத்துண்டைப் பொறுமையுடன் துண்டுகள் நீங்காதவாறு கிழித்த மாணவரைப் பாராட்டுங்கள்.
- ஒழுங்காக, நேர்த்தியாக வேலை செய்வதற்குப் பொறுமை அவசியம் என்பதை மாணவர் களுக்கு வலியுறுத்துங்கள்.
- இவ்வாறாக காகிதத்துண்டுகளைக் கிழித்து மாலை, வளையல் ஆக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

படிமுறை 2

- மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் புத்தகம், பேனா / பென்சில், அழிறப்பர், தண்ணீர்ப் போத்தல், பென்சில் கூராக்கி ஒவ்வொன்று வீதம் வழங்கி இடவசதியுள்ள ஓர் இடத்திற்கு அவர்களை அழைத்துச் செல்லுங்கள்.

- வகுப்பிலுள்ள மாணவர்களின் தொகைக்கேற்ப அவர்களை 3 - 4 குழுக்களாக்குங்கள்.
- தமக்குத் தரப்பட்டுள்ள உபகரணங்களை மாத்திரம் (பேனா, பென்சில், தண்ணீர்ப்போத்தல், அழிறப்பர், பென்சில் கூராக்கி போன்றவை) பயன்படுத்தி அவற்றை ஒழுங்காக நீளமாக வைத்துக் கோடொன்றினை ஆக்குமாறு வழிப்படுத்துங்கள்.
  மிக நீளமான கோட்டை ஆக்கிய குழுவைப் பாராட்டுங்கள்.
- மாணவர்கள் ஒழுங்காக வேலை செய்தல், எடுத்த பொருள்களைச் சரியாக உரிய இடத்தில் வைத்தல், கோட்டை நேர்த்தியாக (கோணல் இன்றி) அமைத்தல் ஆகியவற்றுக்காக கூட்டாகப் பங்களிப்புச் செய்தல் தொடர்பாக அவதானித்து ஒழுங்காக, நேர்த்தியாக, அழகாகச் செயற்பட்ட மாணவர்களைப் பாராட்டுங்கள்.
- எப்போதும் தமது வேலைகளை ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் சுத்தமாகவும் செய்வதன் முக்கியத்துவத்தை மேலும் எடுத்துக்காட்டுங்கள்.
- மாணவர்களின் ஒழுங்கு, நேர்த்தி போன்ற விடயங்களை மேம்படுத்துவதற்காகப் பெற்றோருடன் கலந்துரையாடி மாணவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்கிக் கொடுங்கள்.

செயற்பாடு **3**

- பாடசாலையையும் அதன் சுற்றுப்புறத்தையும் ஈக்கள், நுளம்புகள் மற்றும் ஏனைய தீங்கு விளைவிக்கத்தக்க பிராணிகள் அற்ற ஓர் இடமாகப் பேணிவருவதற்காக இயற்கையின் அருங்கொடையாக எமக்குக் கிடைத்துள்ள சுற்றாடலை நாம் மிகவும் நன்றாகக் கையாளுதல் வேண்டும் என்பதையும் நாம் சூழலைக் காப்போமாயின் அச்சூழல் எம்மைக் காக்கும் என்பதையும் மாணவர்கள் விளங்கிக்கொள்வதற்கு வழிப்படுத்துங்கள்.
- அதற்காக சூழலில் பாதகமான எதனையும் விடுவித்தலாகாது என்பதையும் அவ்வாறான பாதகமானவற்றை வெளியேற்றுவதால் ஈக்களும், நுளம்புகளும் பெருகும் இடங்கள் உருவாகும் என்பதையும் குப்பை - கூளங்கள் என்று எதுவும் கிடையாது என்பதையும் எல்லாமே கழிவுப்பொருள்களே என்பதையும் கலந்துரையாடல் மூலம் உணர்த்துங்கள்.
- இதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- ஒன்று, இரண்டு; ஒன்று, இரண்டு, .... என்று எண்ணியவாறு வகுப்பறையிலுள்ள குப்பைக் கூடை (Dust bin) மற்றும் பாடசாலையில் வெளியே வைக்கப்பட்டுள்ள குப்பைப் பாத்திரம் ஆகியவற்றுக்காக மாணவர்களைப் பிரித்து இரண்டு குழுக்கள் அமைத்துக் கொள்ளுங்கள்.
- வெளிக்குழு, உட்குழு என குழுக்களுக்குப் பெயரிட்டுக்கொள்ளுங்கள்.
- வகுப்பறைக்கு வெளியேயும் வகுப்பறைக்கு உள்ளேயும் கழிவுப் பொருள்கள் சேகரிக்கப் பட்டுள்ள இடங்களின்பால் குழுக்களை வழிப்படுத்துங்கள்.
- பிறிஸ்டல் அட்டை, பசைப் போத்தல், கத்தரிக்கோல், செலோடேப் (பசை நாடா) ஒவ்வொன்று வீதம் ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.
- கழிவுப்பொருள்களைக் கொண்டு தாம் விரும்பிய ஆக்கமொன்றைச் செய்து முன்வைக்குமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- மாணவர்களது ஆக்கங்களைக் காட்சிப்படுத்திப் பாராட்டுங்கள்.
- எவ்வித செலவுமின்றி நாம் கழித்தொதுக்கும் பொருள்களைச் சரியாகப் பயன்படுத்தி புதியதொன்றினை ஆக்க முடியும் என்பதை மாணவரிடத்தே பதியச் செய்யுங்கள்.
- கழித்தொதுக்கும் சகல பொருள்களையும் வகைப்படுத்தி, குப்பைப் பாத்திரங்களில் இடுமாறு மாணவர்களுக்குப் பழக்குங்கள்.

***உதாரணம்***
- காகிதம்
- மெழுகுத்தாள்
- பொலித்தீன்
- உக்கும் தன்மையுள்ள பொருள்கள் (தாவர இலைகள், உணவு மீதிகள், தேங்காய்ப்பூ, வெங்காயத்தோல் ..... - இயற்கையான பொருள்கள்)
- பிளாத்திக்கு
- கண்ணாடி
- மின்சார்ந்த ஒதுக்கப்பட்ட பொருள்கள் (மின்கலம், மின்குமிழ், கம்பி,....)

- இதற்காகப் பாடசாலையிலும் வீட்டிலும் வெவ்வேறாகப் பாத்திரங்களை ஆயத்தப்படுத்தி வைக்க வேண்டும் எனவும் அவ்வாறு ஆயத்தப்படுத்தி வைக்கப்படுதல் மீள்சுழற்சி செய்வதற்கு இலகுவாக இருக்குமெனவும் ஒதுக்கப்பட்ட பொருள்கள் மூலம் வருமானம் பெறலாம் எனவும் மாணவர்களுக்கு விளக்கமளிக்க ஆவன செய்யுங்கள்.
- இதன் மூலம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பெறுபேறுகளைப் பெறலாம் என மாணவர்களுக்கு எடுத்துக்காட்டுங்கள்.
  - ❋ சூழல் சுத்தமாகவும் அழகாகவும் மனங்கவரத்தக்கதாகவும் அமைதல்
  - ❋ சுற்றுப்புறம் சுத்தமாகவும் அழகாகவும் மனங்கவரத்தக்கதாகவும் அமைதல்
  - ❋ ஈக்கள், நுளம்புகள் பெருகுவதைத் தவிர்த்துக்கொள்ளல்
  - ❋ சூழலில் கரப்பான்பூச்சி, எலி போன்ற தீங்கு விளைவிக்கக்கூடிய பிராணிகள் இல்லாதிருத்தல்
  - ❋ பொருத்தமான காற்றோட்டமுள்ள சூழலை அமைத்துக் கொள்ளல்

செயற்பாடு 4

- அன்றாடம் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நெருங்கிய நண்பர்கள், தனி நபர்கள், பிராணிகளுக்கு உதவிகள் செய்ய நேரிடும் என்பதை மாணவர்களுடன் உரையாடி வெளிக்கொணருங்கள்.
- மாணவர்கள் எதிர்நோக்கிய அவ்வாறான சில சந்தர்ப்பங்களை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளியுங்கள். அவ்வாறாக ஏனையோருக்கு உதவி செய்தமையின் விளைவாக ஏற்பட்ட மாற்றம் யாது என்பது குறித்து மாணவரது கவனத்தை வழிப்படுத்துங்கள்.
- அவ்வேளையில் தமக்கு ஏற்பட்ட உள மகிழ்வு, உதவியைப் பெற்றவரின் உள்ளத்தில் உங்களைப் பற்றி ஏற்பட்ட பாராட்டுணர்வு / மகிழ்ச்சி ஆகியன மிகவும் பெறுமதிமிக்கவை என்பதையும் அவ்வாறு செயற்படுவதானது பிள்ளைகள் என்ற வகையில் மிகச்சிறந்ததொரு பழக்கமாகும் என்பதையும் எடுத்துக் காட்டுங்கள்.
- அதனை மாணவரது மனதில் உறுதிப்படுத்துவதற்காகப் பின்வருவன போன்ற சம்பவங்களை முன்வைத்து அச்சந்தர்ப்பங்களில் மாணவர்கள் செய்யக்கூடியவை எவையென்பது பற்றி மாணவரிடையே சிந்தனைக்கிளர்வொன்றை நடத்துங்கள்.

***உதாரணம்***
- ஒரு மரத்தின்கீழ் மழையில் நனைந்த நிலையில் சத்தமிட்டுக் கொண்டிருக்கும் ஒரு நாய்க்குட்டியை / பூனைக்குட்டியைக் காண்பீர்கள் ஆயின் நீங்கள் என்ன செய்வீர்கள்?
- இவ்வாறான ஒரு கூற்றை முன்வைத்து வெவ்வேறு விதமாக வினாக்களை வினவி, அச்சந்தர்ப்பத்தில் செய்யவேண்டியவை பற்றிச் சிந்தித்துப் பார்ப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

- பூனைக்குட்டி / நாய்க்குட்டி ஏன் சத்தமிட்டுக் கொண்டிருக்கிறது, அதற்காக நாம் என்ன செய்யலாம்?
- நனைந்துகொண்டிருக்கும் பூனைக்குட்டிக்கு / நாய்க்குட்டிக்கு முதலில் என்ன செய்ய வேண்டும்?
- தனித்து விடப்பட்டிருக்கும் இந்தப் பூனைக்குட்டிக்காக / நாய்க்குட்டிக்காக நீங்கள் வேறு என்ன செய்யலாம்?

- இவ்வாறான வினாக்களை வினவி உதவி தேவைப்படும் ஒருவருக்காக நாம் செய்யக்கூடிய நல்ல மாற்றமொன்றுக்காகத் தலையிடத்தக்க விதம் பற்றிச் சிந்தித்துப்பார்க்குமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- இவ்வாறாகப் பின்வருவன போன்ற வேறு நிகழ்வுகளையும் முன்வைத்து மாணவர்களுடன் உரையாடுங்கள்.

***உதாரணம்*** :
- குருவிக்கூட்டிலிருந்த ஒரு குஞ்சு கீழே விழுந்துள்ளது. தாய்ப்பறவை குஞ்சின் அருகே கீச்சிட்டபடி உள்ளது. பூனையொன்று குருவிக் குஞ்சை இலக்கு வைத்துக் காத்திருக்கிறது.
- நீங்கள் பாடசாலைவிட்டு வீடு செல்லும் வேளையில் ஒரு வயோதிபப் பெண்மணி கையில் தூக்கிச்சென்ற காய்கறி உறை கிழிந்து காய்கறிகள் வீதியில் சிதறியுள்ளன. அப்பெண்மணி காய்கறிகளை ஒவ்வொன்றாகப் பொறுக்கிக் கொண்டிருக்கிறார்.

- இவ்வாறானதொரு சந்தர்ப்பத்தைக் காண்பீர்களாயின் நீங்கள் என்ன செய்வீர்கள்?
- மாணவர் தரும் விடைகளைத் தழுவி, சிற்சில சந்தர்ப்பங்களையும் நிலைமைகளையும் மேலும் நல்லவையாக மாற்றுவதற்காக நாம் தலையிடலாம் என்பதையும் அவ்வாறான பழக்கங்களை நாம் சிறுவயது முதலே பரிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டுங்கள்.
- மேற்குறிப்பிட்ட சம்பவங்களை வகிபாகமேற்று நடித்தலாக முன்வைக்குமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு **5**

- கூட்டாகச் சேர்ந்து செயற்படுவதன் மூலம் ஆக்கபூர்வமான மாற்றங்களைச் செய்யலாம் என்பதை எடுத்துக்காட்டுவதற்காகப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- இதற்காக 20 சென்ரிமீற்றர் நீளமான தடிகளில் 10 சென்ரிமீற்றர் நீளமும் 6 சென்ரிமீற்றர் அகலமும் கொண்ட வெவ்வேறு நிறக்கொடிகள் சிலவற்றைத் தயாரித்துக்கொள்ளுங்கள்.
- மாணவர்களைச் சில குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு குழுவிலும் ஒவ்வொருவருக்கும் ஒரே நிறத்தைச் சேர்ந்த ஒவ்வொரு கொடி வீதம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் திறந்தவெளியில் இடங்களை ஒதுக்கி வழங்குங்கள்.
- தமக்குரிய எல்லையினுள்ளே கொடியைக் கையிலேந்தி மெதுவாக ஓடுமாறு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் அவ்வாறு ஓடும்போது ஆசிரியர் வழங்கும் கட்டளைகளுக்கேற்ப மாணவர்கள் அனைவரும் அசையாது நின்று அச்சந்தர்ப்பத்தில் ஆசிரியர் கூறும் தளவடிவத்தை குழுவின் அனைவரும் சேர்ந்து அமைத்தல் வேண்டும்.

***உதாரணம்*** 
- முக்கோணி வடிவம்
- சதுர வடிவம்
- செவ்வக வடிவம்
- வட்ட வடிவம்
- அரை வட்ட வடிவம்
- புள்ளடி வடிவம்

- மாணவர்கள் தமது கையிலுள்ள கொடியை மேலே உயர்த்திக் குதிக்காலின் மீது குந்தியிருக்க வேண்டும்.
- மிக விரைவாகவும் சரியாகவும் தளவடிவத்தை / குறியீட்டை / அடையாளத்தை உருவாக்குமாறு மாணவர்களுக்கு ஆர்வமூட்டுங்கள்.
- குழுவாகச் சேர்வதால் இவ்வாறான வெவ்வேறு ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடலாம் என்பதையும் அவ்வாறு செயற்படுவதால் வேலைகளை மேலும் இலகுவாகவும் அழகாகவும் செய்யலாம் என்பதையும் எடுத்துக்காட்டுங்கள்.

## 15. கருப்பொருள்: **மனிதனும் தகவல்களும்**

சமூகத்தில் வாழும் நபரொருவர் என்றரீதியில் உலக விடயங்களைப் பற்றி அறிந்திருத்தல் முக்கியமாகும். சமூகம், அரசியல், பொருளாதாரம், சமயம் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களையும் இற்றைப்படுத்திக் கொண்டிருப்பதும் முக்கியமாகும். தற்காலத்தில் தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஊடகங்கள் பல உள்ளன. மின்னூடகமும் எழுத்துமூல ஊடகமும் தொடர்பாடல் ஊடகங்களிடையே பிரதானமானவை ஆகும். இவ்வாறான ஊடகங்களைப் பயன்படுத்தி தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் சந்தர்ப்பங்களைப் போன்றே ஏதொன்றையும் சரியாக வாய்மொழியாகத் தொடர்பாடுவதற்கான சந்தர்ப்பங்களையும் பயனுள்ள விதத்தில் கையாண்டு பார்ப்பதற்கு மாணவர்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்குதல் இக்கருப்பொருளின் எதிர்பார்ப்பாகும்.

**தேர்ச்சிகள் :**

- தொடர்பாடல் காரியத்தை நிகழ்த்தும் விதத்தைக் கற்றாய்வார்.
- தொடர்பாடல் காரியங்களின் போது ஒழுக்கத்துடன் செயற்படுவார்.
- பல்வேறு ஊடகங்களையும் முறையியல்களையும் பயன்படுத்தித் தகவல்களைப் பெற்றுக் கொள்ளவும் அறிக்கைப்படுத்தவும் செய்வார்.
- பெறப்படும் தகவல்களிடையே பொருத்தமான தகவல்களைப் பகுப்பாய்ந்து தெரிவுசெய்வார்.
- தொடர்பாடல் முறைகள் தொடர்பான பல்வகை ஆக்கங்களைக் கையாண்டு பார்த்தலில் ஈடுபடுவார்.
- சமிக்ஞை, கட்டளை, செய்தி ஆகியவற்றைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவார்.
- குறித்த செய்தியொன்றின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படும் நடிப்புகளிலும் பல்வேறு செய்துகாட்டல்களிலும் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள் :**

- கருத்தொன்றை சிக்கலின்றியும் சரியாகவும் மற்றையவர்கள் முன்னிலையில் கூறுவார்.
- செய்தியொன்றைச் செவிமடுத்துச் சரியாக விளங்கிக்கொண்டு கருத்தைக் கூறுவார்.
- ஆதிகாலத்தில் தகவல்களைப் பரிமாறிக் கொண்ட விதங்களின் பெயர்களைக் கூறுவார்.
- எமக்குத் தகவல்களை வழங்கும் தொடர்பாடல் ஊடகங்கள் யாவை எனக் கூறுவார்.
- தொடர்பாடலின் போது பேணப்பட வேண்டிய நற்பழக்கங்களை வெளிப்படுத்துவார்.
- தகவல்களை வழங்கும் ஊடகமொன்றாக செய்தித் தாள்களை இனங்கண்டு அவற்றில் உள்ள தகவல்களை வகைப்படுத்துவார்.
- தகவல்களைப் பெறுவதற்காக நூலகத்தைப் பயனுள்ளவாறு பயன்படுத்துவார்.
- அவசர சந்தர்ப்பங்களில் நடந்து கொள்ள வேண்டிய விதத்தையும் அறிவூட்டப்பட வேண்டிய விதத்தையும் பற்றிய கருத்துக்களைக் கூறுவார்.
- யாரேனுமொருவருக்கு வாழ்த்து கூறுவதற்குப் பொருத்தமான விதத்தில் ஆக்கமொன்றைச் செய்வார்.
- பல்வேறு சமிக்ஞைகளைப் பயன்படுத்தி அமைக்கப்பட்ட திறந்தவெளி விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.
- கருத்துக்களைப் பல்வேறு முகபாவங்கள் வெளிப்படும் விதத்தில் முன்வைப்பார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1:**

- கட்டளை முரசறைவோனாக வகுப்பு மாணவரொருவரை ஆயத்தப்படுத்துங்கள்.
- முரசை அறைந்து கொண்டு வகுப்பினுள் வந்து கீழே காட்டப்பட்டுள்ளவாறான செய்தி ஒன்றைப் பாடலொன்றாக முன்வைப்பதற்கு அம்மாணவரை வழிப்படுத்துங்கள்.

    ***உதாரணம்*** : ○ டும் டும் டும்

    கேளுங்கள் கேளுங்கள் நன்றாகக் கேளுங்கள்

    ஞாயிற்றுக்கிழமை பின்னேரம் இரண்டிற்கு

    எமது பாடசாலையின் சிரமதானத்திற்கு

    தாய்தந்தையர்களில் ஒருவரை

    வரச் சொல்வோம் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு

- சில மாணவர்களுக்குச் சரியாக விடையளிக்க முடியாதிருப்பின் அதற்கான காரணத்தை விசாரியுங்கள். இங்கு அம்மாணவர்கள் தமக்குச் சரியாகக் கேட்கவில்லை, விளங்கவில்லை போன்றவாறு கூற முடியும். அதனைப் பற்றிக் கலந்துரையாடி அனைவருக்கும் மீண்டும் கவனத்துடன் செவிமடுக்குமாறு கூறி மீண்டும் செய்தியைக் கூறுங்கள்.
- எளிய செய்திகள் சிலவற்றை அட்டைகளில் எழுதித் தயாரித்துக் கொண்டு அச்செய்திகளை மாணவர்களுக்குக் கேட்கும் விதத்தில் கூறுவதற்குச் சகல மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- இதற்கேற்ப, செய்தியொன்றை வழங்கும் போது அது மற்றையவர்களுக்கு நன்கு தெளிவாகும் விதத்தில் வழங்கப்படல் வேண்டும் எனவும் செவிமடுப்பவர் நன்கு செவிமடுத்துச் சரியாக செய்தியை விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் விளங்கப்படுத்துங்கள்.

**செயற்பாடு 2 :**

- பண்டைக்காலத்தில் தகவல்களைப் பரிமாறிக் கொண்ட விதங்கள் பற்றி மாணவருடன் உரையாடுங்கள்.

    ***உதாரணம்*** :
    - ஓவொன்று சத்தமிடுதல்
    - புகையை எழுப்புதல்
    - சேனைப் பாட்டு
    - முரசைறைதல்
    - பறவைகள் மூலம் செய்தி அனுப்புதல்
    - அம்பினால் இன்னோர் அம்பிருக்கும் இடத்துக்கு எய்தல்
    - தூதுவர்கள் மூலம் செய்திகளை அனுப்புதல் ..... போன்ற

- இவ்விதமாக பாடசாலையில் எமக்கு செய்திகள் கிடைக்கும் முறைகள் யாவை என்பது பற்றி மாணவரிடம் விசாரியுங்கள்.

    ***உதாரணம்*** :
    - மணி, ஒலிபெருக்கி மூலம்
    - மாணவர் தலைவர்கள் மூலம்
    - காரியாலய உதவியாளர்கள் மூலம்
    - அறிவித்தல் மூலம்
    - கூட்டங்கள் மூலம் ....... போன்ற முறைகள்

- இவ்வாறாக பாடசாலையினுள் செய்தியைப் பெறுவதற்கு / செய்தியை வழங்குவதற்குப் பல்வேறு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன எனக் காட்டுங்கள்.

- இம்முறைகள் சிலவற்றில் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காகப் பல்வேறு கருவிகளும் பயன்படுத்தப்படுகின்றன எனவும் காட்டுங்கள்.
- தற்காலத்தில் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதற்காக நாம் பயன்படுத்தும் கருவிகள்/ முறைகள் பற்றி மாணவரிடம் விசாரியுங்கள்.

  ***உதாரணம்*** :
  - கடிதம், தொலையஞ்சல், அறிவித்தல், வானொலி, சுவரொட்டி, தொலைபேசி, செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், தொலைக்காட்சி
- இம்முறைகள் ஒவ்வொன்றினாலும் வழங்குவதற்கு மிகப் பொருத்தமானது எவ்விதமான செய்தி என்பது பற்றியும் மாணவருடன் உரையாடுங்கள்.

செயற்பாடு 3:

- மாணவர்களைக் குழுக்களாக்குங்கள்.
- ஒவ்வொரு மாணவர் குழுக்களும் தாம் விரும்பியவொன்றை ஒட்டுவதற்குப் பிரச்சாரத்திற்குப் பொருத்தமான அறிவித்தலொன்றைக் காகிதத் தாளொன்றில் தயாரிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

  ***உதாரணம்*** :
  - உணவு வகையொன்று
  - விளையாட்டுப் பொருளொன்று ...... போன்ற
- மாணவரினால் தயாரிக்கப்பட்ட அறிவித்தல்களை மாணவர் குழுக்களிடையே பரிமாறிக் கொண்டு அவற்றைப் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அதற்கேற்ப ஏதேனுமொன்றைப் பற்றி மக்களுக்கு அறிவிப்பதற்காக மிகவும் பொருத்தமான முறையொன்றாக வியாபார விளம்பரத்தை அறிமுகஞ் செய்யுங்கள்.
- அவ்வாறே வியாபார விளம்பரம் என்பது ஏதேனுமொன்றை சந்தைப்படுத்துவதற்காக மக்களைக் கவரும் மிகவும் சக்தி வாய்ந்த ஊடகமொன்று என்பதனால் அவற்றில் இருந்து பெறப்படும் தகவல்களை நாங்கள் தெரிவுசெய்து விளங்கிக்கொள்ள வேண்டும் எனவும் எடுத்துக் காட்டுங்கள்.

  ***உதாரணம்*** :
  - செயற்கையானவையும் உடனடியானவையுமான உணவு வகைகள் பற்றிய விளம்பரங்கள்
  - இனிப்புப் பானங்கள் பற்றிய விளம்பரங்கள்

செயற்பாடு 4:

- அன்றாட நடவடிக்கைகளின் போது நாம் எந்நேரமும் சந்திக்கும் நபர்களைப் பற்றி மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- அவ்வாறான எவரேனுமொருவருடன் உரையாடும் போது தனது கருத்துக்களை சிக்கலின்றி பண்புடன் சிநேகபூர்வமாகப் பரிமாறிக் கொள்ள வேண்டும் எனவும் எடுத்துக்காட்டுங்கள்.
- இதனைப் பழகிக் கொள்வதற்காக மாணவரைப் பின்வரும் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- இதற்கு மாணவரை இருவர் வீதம் குழுக்களாக்குங்கள்.
- கீழே காட்டப்பட்டுள்ளவாறான பாத்திரங்களை ஒவ்வொரு சோடிக்கும் வழங்குங்கள்.

  ***உதாரணம்*** :
  - தாயும் பிள்ளையும்
  - வைத்தியரும் நோயாளியும்
  - பேருந்து வழிநடத்துநரும் பயணியும்
  - வியாபாரியும் நுகர்பவரும்
  - பாட்டியும் பேரனும்
  - மதகுருவும் பிள்ளையும்

- அவ்வொவ்வொரு பாத்திரச் சோடிக்கும் பொருத்தமான சுருக்கமான உரையாடலை அமைத்துக் கொள்வதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். ஆசிரியர் இதற்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்குங்கள்.
- பின்னர் ஒவ்வொரு சோடிக்கும் அக்குறுகிய உரையாடல் பகுதியை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் தமது உரையாடலை முன்வைக்கும் போது அது இன்னும் பண்புடன் கூறக்கூடிய சந்தர்ப்பமெனின் ஆசிரியர் இடையிட்டு அவற்றை வளப்படுத்த வேண்டும்.
- அதற்கேற்ப நாம் எவருடனும் எச்சந்தர்ப்பத்திலும் உரையாடும் போது பணிவும் நற்பண்பைப் பேணுவதன் முக்கியத்துவத்தை மேலெழுப்பிக் காட்டுங்கள்.

**செயற்பாடு 5:**

- ஒரு வார காலத்தினுள் வெளியிடப்பட்ட தேசிய செய்தித் தாள்கள் சிலவற்றில் இருந்து மாணவருக்குப் பொருத்தமான செய்திகளை வெட்டியெடுத்து காகிதத் தாள் / பிரிஸ்டல் துண்டுகளில் ஒட்டுங்கள். அச்செய்திகள் ஒவ்வொன்றிலும் அது வெளியிடப்பட்ட திகதியைக் குறித்துக் கொள்ளுங்கள்.
- அவ்வாறு ஒட்டப்பட்ட செய்திகளை வாசித்து அவற்றை வகைப்படுத்துவதற்கு மாணவர் குழுக்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

  ***உதாரணம்*** : சமயச் செய்திகள், பல்வேறு நாடுகளின் தகவல்கள், பொருள்களின் விலைகள் பற்றிய தகவல்கள், விபத்துக்கள் பற்றிய தகவல்கள் ....... போன்றன
- பின்னர் குழுக்களுக்குக் கிடைக்கப் பெற்ற செய்திகளிடையே ஒரு தலைப்பிற்கு உரிய தகவல்களை வேறுபடுத்துமாறு அறிவுறுத்துங்கள்.
- இவ்வாறு வகைப்படுத்தும் போது ஒரு குழுவிற்கு ஒரு வகையிலான செய்திகள் மட்டும் கிடைக்கக்கூடியவாறு அவற்றைக் குழுக்களிடையே பகிர்ந்தளியுங்கள்.
- அக்குழுவிற்குக் கிடைத்த செய்திகளைத் திகதிக்கு ஏற்பத் தொடரொழுங்கில் வைக்குமாறு அறிவுறுத்துங்கள். அவற்றை வாசித்து அவ்வாரத்தினுள் நிகழ்ந்த நிகழ்வுகளை தகவல்கள் எனக் கொள்ளலாம் எனக் காட்டுங்கள்.
- இவ்விதமாக அன்றாட தகவல்களை ஒன்றுசேர்த்து வாரத்தின் செய்திகள் என்ற பெயரில் சுவர்ச்செய்தித் தாளொன்றாக வகுப்பறையில் நடத்திச் செல்லுங்கள்.
- ஓய்வு நேரங்களில் அவ்வாக்கங்களை வாசிப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

**செயற்பாடு 6:**

- பாடசாலையில் அல்லது வேறோரிடத்தில் தனக்கு அல்லது இன்னொருவருக்கு விபத்து ஏற்படும் போது அதனைப் பற்றி அறிவிக்கக்கூடிய முறையையும் அறிவிக்கப்பட வேண்டிய வர்களையும் பற்றி அறியச் செய்து பின்வரும் செயற்பாட்டில் மாணவரை ஈடுபடுத்துங்கள்.
- இதற்குக் கீழே காட்டப்பட்டுள்ளவாறான சந்தர்ப்பத்தை அல்லது நிகழ்வை எழுதி அட்டைகளில் ஒட்டித் தயாரித்துக் கொள்ளுங்கள்.

  ***உதாரணம்*** : o இரு நண்பர்கள் பாடசாலை மலசலகூடத்திற்குச் சென்றனர். ஒருவர் மலசலகூடத்தினுள் இருக்கும் போது அதன் கதவைத் திறக்க முடியாமல் போயிற்று. அம்மாணவருடன் மலசலகூடத்திற்குச் சென்ற மாணவர் இந்நிகழ்வை யாருக்கு அறிவிக்க வேண்டும்? எவ்வாறு?

    - விளையாட்டுத் திடலில் விளையாடிக் கொண்டிருக்கும் போது ஒரு பிள்ளைக்கு விபத்து ஏற்பட்டது. இதனை யாருக்கு அறிவிக்க வேண்டும்? எவ்வாறு?
    - நிறைய மக்கள் கூட்டமுள்ள இடமொன்றில் வழிதவறிவிடல் (உதாரணம்: சந்தை, வெசாக் தோரணமொன்றுள்ள இடத்தில், கண்காட்சி யொன்றில்). இதனை யாருக்கு அறிவிக்க வேண்டும்? எவ்வாறு?
    - பாடசாலை விட்டதன் பின்னர் தன்னை அழைத்துச் செல்வதற்கு பெற்றோர் அல்லது வளர்ந்தோரொருவர் வராதிருக்கும் போது யாருக்கு அறிவிக்க வேண்டும்? எவ்வாறு?
    - வகுப்பாசிரியர் வருகை தராத நாளொன்றில் வகுப்பில் உள்ள மாணவர் ஒருவர் நோயுற்றால் யாருக்கு அறிவிக்க வேண்டும்? எவ்வாறு?
- மாணவரைக் குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவிற்கும் நிகழ்வொன்றுள்ள அட்டையொன்று வீதம் வழங்குங்கள்.
- குழுவில் உள்ள மாணவர் ஒன்றுசேர்ந்து அவ்வட்டையில் காட்டப்பட்டுள்ள நிகழ்வு போன்ற சந்தர்ப்பமொன்றில் செய்யவேண்டியது / அறிவிக்கப்பட வேண்டியவர் பற்றி உரையாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- பின்னர் ஒவ்வொரு குழுவும் தமது கருத்துக்களைக் கூறுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர்கள் கருத்துக்களைக் கூறும் போது ஆசிரியரும் இடையிட்டு மேலும் அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது நடவடிக்கை எடுக்க வேண்டிய விதத்தைப் பற்றி மாணவர்கள் அறிந்துகொள்ளச் செய்யுங்கள்.
- இவ்வாறான சந்தர்ப்பங்களில் முடிந்தளவு விரைவாக இன்னொருவருக்கு அதனைப் பற்றி அறிவிப்பதன் முக்கியத்துவத்தை மேலெழுப்பிக் காட்டுங்கள்.

செயற்பாடு 7:

- வாழ்த்து மடலொன்றைத் தயாரிப்பதற்குப் பொருத்தமான அளவிலான பிரிஸ்டல் அட்டைத் துண்டுகளை ஒவ்வொரு மாணவருக்கும் வழங்குங்கள்.
- சுற்றாடலில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளவற்றையும் பல்வேறு நிறங்களையும் பயன்படுத்தி அவற்றை வாழ்த்து மடலாகத் தயாரிப்பதற்கு மாணவருக்குத் தேவையான வழிகாட்டலை வழங்குங்கள்.
- அவ்வாக்கத்தைத் தயாரித்ததன் பின்னர் அதன் உட்பகுதியில் தனது பெற்றோருக்கு அனுப்பக்கூடிய விதத்தில் நல்வாழ்த்தொன்றை எழுதுவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

    ***உதாரணம்*** :
    - நீண்ட ஆயுள் கிட்டட்டும்
    - நோயற்ற வாழ்வு கிடைக்கட்டும்
    - பிறந்தநாள் வாழ்த்துக்கள்
- வாழ்த்து மடலை இடக்கூடிய விதத்தில் உறையொன்றைத் தாளினால் தயாரிப்பதற்குப் பொருத்தமான மாதிரியொன்றை ஆசிரியர் எல்லா மாணவருக்கும் வழங்குங்கள்.
- உறையை வெட்டி ஒட்டி வாழ்த்து மடலை உறையினுள் இட்டு அதில் முத்திரை ஒட்டி வீட்டு முகவரிக்குத் தபாலில் அனுப்புவதற்குத் தேவையான காரியங்களைச் செய்யுங்கள்.
- யாருக்கும் செய்தி/வாழ்த்து ஒன்றை அனுப்புவதற்கான ஊடகமொன்றாகக் கடிதம் அனுப்பலாம் என இச்செயற்பாட்டின் மூலம் காட்டுங்கள்.

செயற்பாடு **8:**

- வகுப்பிலுள்ள மாணவரை திறந்தவெளியில் இடவசதியுள்ள இடமொன்றிற்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவரை வட்டமொன்றாக நிற்கச் செய்து அவ்வட்டத்தில் ஏதேனுமோரிடத்தில் ஆசிரியரும் நிற்க வேண்டும்.
- மாணவருடன் ஆசிரியரும் வட்டத்தின் வழியே பயணஞ் செய்வதோடு ஆசிரியர் ஏதேனுமோர் அசைவைச் செய்ய வேண்டும்.

  ***உதாரணம்*** : கை தட்டுதல்
- அவ்வசைவிற்கு ஏற்ப ஆசிரியருக்குப் பின்னால் நிற்கும் மாணவர்கள் அவ்வசைவைப் போலச் செய்யவேண்டும்.
- அம்மாணவருக்குப் பின்னால் நிற்கும் மாணவர் அவ்வசைவைப் போலச் செய்ய வேண்டும்.
- இவ்விதமாக தனக்கு முன்னால் நிற்கும் மாணவர் காட்டும் போலச் செய்தலை செய்ததன் பின்னர் ஆசிரியரினால் வேறு அசைவொன்று முன்வைக்கப்படல் வேண்டும்.
- மாணவர்கள் முன்பு போல அவ்வசைவைப் போலச் செய்ய வேண்டும்.
- இவ்விதமாக ஆசிரியர் நிற்கும் இடத்தை வேறொரு மாணவருக்கு வழங்கியும் அசைவை மாற்றியும் செயற்பாட்டினைத் தொடர்ந்து செய்யுங்கள்.

செயற்பாடு 9

- மாணவரை திறந்தவெளியில் உள்ள பொருத்தமான இடமொன்றுக்கு அழைத்துச்செல்லுங்கள்.
- இசையொன்றை இசைக்கக்கூடியவாறு வானொலிக்கருவியை அல்லது வேறு கருவி ஒன்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்.
- இசையை இசைக்கச் செய்து அதற்கேற்ப மாணவருக்குச் சுதந்திரமாக அசைவைக் காட்டுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆசிரியர் மாணவருக்கு அறிவிக்காமல் இசையை நிறுத்த வேண்டியதோடு இசை நிற்கும் சந்தர்ப்பத்தில் மாணவர்கள் விரைவாக தமக்கு விருப்பமான மாணவரொருவரைப் பிடித்துக் கொண்டு தான் பிடித்துக் கொண்ட மாணவருக்கு மிகவும் விருப்பமான பழம் யாது? போன்ற வினாவொன்றுக்கு இருவருக்கிருவர் விடையளிக்க வேண்டும்.
- இவ்வாறாக இச்செயற்பாட்டினைப் பல தடவைகள் செய்யுங்கள்.
- மாணவர்கள் வினாவும் வினாக்களாக,
  - உங்கள் செல்லப்பிராணி யாது?
  - உங்களுக்கு விருப்பமான நண்பர் யார்?

  போன்ற வினாக்களையும் முன்வைக்கலாம்.
- பின்னர் எல்லா மாணவரையும் அழைத்துக் கொண்டு வகுப்பறைக்குத் திரும்பி வந்து தாம் விளையாடும் போது கைகளைப் பிடித்துக் கொண்ட மாணவரிடையே நால்வரின் பெயர்களை எழுதி அவர்கள் விரும்பும் பழங்கள் யாவை/அவர்களின் செல்லப்பிராணி யாது/விருப்பமான நண்பர் யார் என்பதை அதற்கு முன்னால் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

  ***உதாரணம்*** :
  - சாந்தி - ரம்புட்டான்
  - பாலன் - மங்குஸ்தான்
  - ஹர்ஷன் - மாம்பழம்

- காவியா - ரம்புட்டான்

- இச்செயற்பாட்டின் மூலம் தாம் சேகரித்த தகவல்களை நன்கு நினைவில் வைத்துக்கொள்வது மிகவும் முக்கியம் என்பதனையும் எடுத்துக்காட்டுங்கள்.

**செயற்பாடு 10:**

- ஒரே செய்தியை எமக்கு பல்வேறு விதங்களில் தொடர்பாட முடியும்.
- இச்செயற்பாட்டின் மூலம் தாம் சேகரித்த தகவல்களை நன்கு நினைவு வைத்திருப்பது முக்கியம் என எடுத்துக்காட்டுங்கள்.
- இங்கு செய்தியைக் கருத்தொன்றாகக் கருதும்போது அதனைப் பயன்படுத்தும் விதத்திற்கு ஏற்ப இன்னொருவர் நினைக்கும் விதத்தை விட வேறு கருத்தை வழங்க முடியும்.

  ***உதாரணம் :*** காசா, லேசா

  காசாலே, சா
- இக்கருத்தை நன்கு பாருங்கள். பிழையான விதத்தில் தொடர்பாடுவதன் மூலம் நினைத்திராத ஒன்று நிகழும் என்பதை விளங்கப்படுத்துங்கள்.
- எமது மனதில் உள்ள கருத்தைச் சரியாகத் தொடர்பாடுவதற்கு அல்லது கருத்தைக் கூறுவதற்கு நாம் அது பற்றிய கவனத்துடன் இருக்க வேண்டும்.
- ஒரே விடயம் நாம் கூறும் விதத்திற்கு ஏற்ப அதன் கருத்து பல்வேறுபட்டதாக இருக்கமுடியும்.

  ***உதாரணம் :*** "ஏன் உனக்கு என்ன தேவை?"

  போன்ற வாக்கியங்கள் பல கருத்துக்களில் கூறும் விதத்தை முன்வைப்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- இருவர் முன்வைக்கும் கருத்துக்கள் பற்றி உணர்ந்தவற்றை மாணவருடன் கலந்துரையாடுங்கள்.
- ஒவ்வொரு மாணவருக்கும் இவ்வாறான கருத்துக்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மாணவர் முன்வைத்தவற்றைப் பாராட்டுங்கள்.

## 16. கருப்பொருள் : **எமது பண்டைய தகவல்கள்**

கடந்த காலம் பற்றிய விளக்கத்தைப் பெற்றிருத்தல் எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப மிக அவசியமானதாகும். ஆகவே சிறு வயது முதலே மாணவர்களைத் தமது கடந்த காலத் தகவல்களை ஒழுங்குமுறையாகக் கற்றுக்கொள்ளவும் அதனை மதிக்கவும் வழிப்படுத்துதல் மிக முக்கியமாகும். இக்கருப்பொருளின் கீழ் எமது பாடசாலையையும் அதன் அயற் சூழலையும் அடிப்படையாகக்கொண்ட கடந்தகாலத் தகவல்களைத் தேடியறியவும் கற்கவும் மதிக்க வேண்டியவற்றை இனங்கண்டு மதிக்கவும் மாணவரை ஆற்றல் மட்டத்திற்கேற்ப தேடியாய்தல், அவதானித்தல் போன்ற நுட்பமுறைகள் மூலம் தகவல்களை இனங்காணவும் அவற்றைப் பொருத்தமானவாறு அறிக்கைப்படுத்தலில் மாணவரை ஈடுபடுத்தவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**தேர்ச்சி :**

- பாடசாலையில் கடந்தகாலத்திலும் நிகழ்காலத்திலும் நிகழ்ந்த மாற்றங்களை ஆராய்வார்.
- வரலாற்றுப் பெறுமதியுடனான இடங்களை மதித்து அவற்றைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுப்பார்.
- பண்டைக்கால கலை ஆக்கங்களின் விசேடத்தன்மையைத் துருவியாய்வார்.
- தமது பிரதேசத்தில் / நாட்டில் அர்ப்பணிப்புடன் சேவையாற்றியவர்களை மதித்து அவர்களை முன்மாதிரியாகக் கொண்டு செயற்படுவார்.
- பண்டைய மரபுரிமைகளைத் தெளிவாகக் காட்டும் ஆக்கங்களைச் செய்வார்.
- பண்டைக்காலத்தில் இருந்து நிலவி வரும் கிராமிய விளையாட்டுக்களை மதித்து அவற்றில் ஈடுபடுவார்.
- பண்டைய மூதாதையரினால் நாட்டிற்காகச் செய்யப்பட்ட சேவைகளும் பண்டைய பெருமைகளும் பிரதிபலிக்கும் இரசனையுடனான செயற்பாடுகளில் ஈடுபடுவார்.

**கற்றற்பேறுகள்:**

- பாடசாலை வரலாறு பற்றிய தகவல்களை ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவார்.
- அண்மைச் சுற்றாடலில் அமைந்துள்ள வரலாற்றுப் பெறுமதிமிக்க இடங்களைப் பற்றிய தகவல்களை தேடியறிந்து அறிக்கைப்படுத்துவார்.
- எமது நாட்டில் ஆதிகாலத்தில் இருந்து வாழ்ந்து வந்த மக்களினமொன்றாக ஆதிவாசி மக்களை இனங்கண்டு அதைப் பற்றிய தகவல்களைக் கூறுவார்.
- சீகிரியா, கலாவெவ போன்ற எமது பண்டைய மரபுரிமைகளின் பெறுமதியை அறிந்துகொண்டு அவற்றின் பெறுமதியை பல்வேறு ஊடகங்களினால் நிர்மாணிப்பார்.
- எமது தேசத்தவர்கள் பல்வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கும்போது பாடிய கவிதைகள், பாடல்களைப் பாடுவார்.
- பண்டைக்காலந் தொட்டு நிலவி வரும் கிராமிய விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறை**

**செயற்பாடு 1:**

- பாடசாலையின் வரலாற்றைப் பற்றி அறிந்த வளர்ந்த நபர் ஒருவரை வகுப்பிற்கு அழையுங்கள்.
- வகுப்பிற்கு வரும் அதிதியை கௌரவத்துடன் (உதாரணம்: வெற்றிலை வழங்கி) வரவேற்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.

- அந்நபர் பாடசாலை வரலாறு பற்றிய தகவல்களை முன்வைப்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

  ***உதாரணம்*** :
  - பாடசாலை தாபிக்கப்பட்ட ஆண்டு
  - பாடசாலையைத் தாபித்தது தனிநபரொருவர் எனின் அவரது பெயரும் அவர் யார் என்பதும்
  - பாடசாலை ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்த கட்டடங்களின் எண்ணிக்கை
  - பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்து இருந்த மாணவரினதும்/ ஆசிரியர்களினதும் எண்ணிக்கைகள்
  - பாடசாலையின் முதலாவது அதிபர்
- அந்நபரிடம் பாடசாலை வரலாறு பற்றி விசாரிப்பதற்கான ஏதேனும் இருப்பின் அவற்றை முன்வைத்து விடைகளைப் பெறுவதற்கு மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- அந்நபரின் வருகைக்கும் அறிவூட்டலுக்கும் நன்றி கூறுவதற்கு முன்கூட்டியே ஆயத்தப்படுத்திய மாணவரை முன்வரச் செய்யுங்கள்.
- ஆசிரியரும் அது தொடர்பாக நன்றி தெரிவியுங்கள்.
- முடியுமெனின் மாணவரின் ஆக்கமொன்றுடன் ஞாபகார்த்த மடலொன்றை அதிதிக்குச் சமர்ப்பியுங்கள். வளர்ந்த நபரினால் கூறப்பட்ட கடந்தகால பாடசாலை விபரங்களை (பாடசாலை அமைத்தல்) டிமைதாளில் வரைந்த பின்னர் பாடசாலையில் தற்போது நிலவும் நிலைமையையும் தாளொன்றில் வரையுங்கள். அக்குறிப்புகள் இரண்டையும் ஒப்பிட்டு மாற்றத்தை இனங்காண மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- பின்னர் ஆசிரியர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தின் நிழற்படங்கள் சிலவற்றைச் சேகரித்து அக்காலத்தில் பாடசாலை இருந்த நிலையும் தற்போது பாடசாலை இருக்கும் நிலையும் பற்றி ஒப்பிட்டு மாணவருடன் கலந்துரையாடல் ஒன்றைக் கட்டியெழுப்புங்கள்.
- அடுத்ததாக மாணவருடன் பாடசாலைத் தோட்டத்திற்குக் களப்பயணமொன்று சென்று நிழற்படங்களில் கண்டவாறான விதத்தில் அக்கட்டடங்கள் கடந்தகாலத்தில் அமைந்திருந்த இடங்களை இனங்காண்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- மீண்டும் மாணவருடன் வகுப்பறைக்குத் திரும்பிவந்து ‘‘எமது எதிர்காலப் பாடசாலை’’ எவ்வாறானதாக இருக்கவேண்டும் என்பது பற்றி மாணவருடன் விசாரியுங்கள்.
- அதற்கேற்ப “எமது எதிர்காலப் பாடசாலை” எனும் தலைப்பில் சித்திரம் ஒன்றை நிர்மாணிக்க மாணவரை வழிப்படுத்துங்கள்.

செயற்பாடு **2:**

- அண்மைச் சுற்றாடலில் அமைந்துள்ள வரலாற்றுரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இடம் ஒன்றைப் பார்வையிடுவதற்கு மாணவருடன் செல்லுங்கள்.

  ***உதாரணம்*** :
  - பிரமுகர் ஒருவரின் வீடு
  - புராதன கோவிலொன்று
  - வழிப்பாட்டுத் தலமொன்று போன்ற இடமொன்று
- இங்கு இவ்விடங்களினால் சமூகத்திற்கு ஆற்றப்பட்ட சேவைகள், அவ்விடம் வரலாற்றுரீதியாக முக்கியமாவதற்கான காரணம் என்பன பற்றி மாணவருடன் உரையாடுங்கள்.

- மாணவர்கள் பார்த்த இடங்களைப் பற்றிய தகவல்களை மேலும் வளர்ந்தோரிடம் விசாரித்து அறிந்து கொண்டுவருமாறு மாணவருக்குக் கூறுங்கள்.
- அத்தகவல்களை வகுப்பில் அறிக்கைப்படுத்துவதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு 3

- எமது நாட்டில் பண்டைக்காலந் தொட்டு வாழ்ந்து வந்த மக்கள் பிரிவினரான ஆதிவாசி மக்களைப் (வேடர்கள்) பற்றிய தகவல்களை மாணவருடன் உரையாடுங்கள்.
  - ❋ அவர்கள் உணவைப் பெற்றுக் கொண்ட விதம்
  - ❋ அவர்கள் உண்ட உணவுகள்
  - ❋ அணிந்த ஆடையணிகள்
  - ❋ பேசிய மொழி
  - ❋ நடிக்கும் பாங்கு
- வகுப்பறையில் பூக்கள், இலைகள், கிளைகள் ஆகியவற்றைச் சேகரித்து வையுங்கள்.
- அவற்றைப் பயன்படுத்தி பூ மாலைகளையும் இடுப்பில் அணியும் இலைகள், கிளைகள் போன்றவற்றைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- வேடர்களினால் பாடப்படும் கவிதைகள், பாடல்கள் சிலவற்றைச் சேகரித்துக் கொள்ளுங்கள்.

*உதாரணம்:* தாலாட்டுப் பாட்டு

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ

ஆரடித்து நீயழுதாய்
கண்மணியே கண்ணுறங்கு

கண்ணே யாரடித்தார்
கற்பகத்தைத் தொட்டாரார்

தொட்டாரைச் சொல்லியழு
தோள் விலங்கு போட்டிடுவோம்

மாமன் அடித்தானோ
மல்லிகைப்பூச் செண்டாலே

அண்ணன் அடித்தானோ
ஆவாரங் கொம்பாலே

பாட்டி அடித்தாளோ
பால்வடியும் கம்பாலே

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ - விக்கிபீடியா.

- அவ்வாறான கவிதையை, பாடலைப் பாடிக் கொண்டு வேடர்கள் நடிக்கும் விதத்தில் முன்வைப்பதற்கு மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு 4

- சீகிரியா, கலாவெவ போன்ற எமது பண்டைய மரபுரிமைகளின் பெறுமதியைப் பற்றி மாணவருடன் உரையாடுங்கள்.
- அவற்றின் நிழற்படங்களையும் முக்கியத்துவம் பற்றிக் காட்டும் செய்தித்தாள் கட்டுரைகள் / சஞ்சிகைக் கட்டுரைகள் போன்றவற்றைக் கொண்டுவருமாறு மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- வகுப்பில் உள்ள மாணவரைக் குழுக்களாக்கிச் சேகரிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி சுவரொட்டியொன்றை அமைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

  ***உதாரணம்*** ○ குழு 1, 2 - சீகிரியா பற்றிய தகவல்களுடனான சுவரொட்டி
  ○ குழு 3, 4 - கலாவெவ பற்றிய தகவல்களுடனான சுவரொட்டி

- தமது குழுவினால் தயாரிக்கப்பட்ட சுவரொட்டியில் காட்டப்படும் தகவல்களைப்பற்றி மற்றைய மாணவர்களுக்கு வகுப்பின் முன்னால் வந்து கூறுவதற்கு ஒவ்வொரு குழுவிலும் உள்ள மாணவரை ஊக்குவியுங்கள்.
- தயாரிக்கப்பட்ட சுவரொட்டிகளை நன்கு காணக்கூடிய இடமொன்றில் பொருத்துங்கள்.
- அவற்றில் காட்டப்படும் விடயங்களை வாசிப்பதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

செயற்பாடு 5:

* பண்டைக்காலத்தில் எமது மூதாதையர்கள் பல்வேறு காரியங்களில் ஈடுபட்டிருக்கும்போது தமது களைப்பு, தனிமை ஆகியவற்றைத் தணித்துக் கொள்வதற்காகப் பல்வேறு நாட்டுப் பாடல்களைப் பாடினர் என்பதையும் மாணவருக்கு எடுத்துக்கூறுங்கள்.
- அவ்வாறான எளிய கருத்துக்களுடனான பாட்டுக்கள் சிலவற்றைத் தெரிவுசெய்து கொள்ளுங்கள்.

  **உதாரணம் : மரமும் மாடும்**

  'மரமே, மாடே' என்றெல்லாம்
  மனிதர் திட்டிக் கொள்கின்றார்.
  மரமும் மாடும் உதவுதல்போல்
  மனிதர் எங்கே உதவுகிறார்?

  நிழலைத் தந்து களைப்பெல்லாம்
  நீக்குதல் அந்த மரமாகும்.
  பழத்தைத் தந்து உடலுக்கே
  பலத்தைத் தருவது மரமாகும்.

  விறகைத் தந்து அரிசியினை
  வேகச் செய்வது மரமாகும்.
  பறவை கூடு கட்டிஇனம்
  பரவச் செய்வது மரமாகும்.

வயலை உழுது பயிர்களையே
வளரச் செய்வது மாடாகும்.
வெயிலில், மழையில் மனிதர்களை
விரைந்து இழுப்பது மாடாகும்.

கழுத்து நோகத் தினந்தினமும்
கவலை இழுப்பது மாடாகும்.
கொளுத்தும் வெயிலில் நடந்திடவே
கொடுப்பது மிதியடி, மாடாகும்.

- அழ. வள்ளியப்பா.

- அந்த நாட்டார் பாடலை மாணவருடன் சேர்ந்து பாடுங்கள்
- அவ்வாறான நாட்டார் பாடலைப் பாடுவதன் மூலம் பண்டைக்கால மக்கள் வேலை செய்வதனால் ஏற்படும் களைப்பைத் தணித்துக் கொண்டனர் எனவும் காட்டுங்கள்.
- மேலும் இவ்வாறான பாடல்களைச் சேகரிக்க மாணவர்களுக்கு ஆலோசனை வழங்குங்கள். பிரதேசரீதியாக இனங்காணக்கூடிய இவ்வாறான பாடல்களைச் சேகரித்து வகுப்பில் முன்வைக்க மாணவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

**செயற்பாடு 6:**
- பண்டைக்காலத்தில் இருந்து நிலவும் கிராமிய விளையாட்டொன்றான **பசுவும் புலியும்** விளையாட்டை மாணவருக்கு அறிமுகஞ் செய்யுங்கள்.

## பசுவும் புலியும்

- சிறுவர்கள் வட்டமாகக் கைகோர்த்து நிற்பர்.

- இவர்களை வேலியென்று கருதிக் கொள்வார்கள். வட்டமாகவுள்ள வேலிக்குள் பசு நிற்கும் இதற்காக ஒரு சிறுவன் விடப்படுவான்.

- வேலிக்கு வெளியில் புலியாக ஒரு சிறுவன் நிற்பான்.

- புலி பசு நிற்பதை நிகர்ந்து அறிந்து கொள்ளும் வேலியைச் சுற்றிச் சுற்றி வந்து பசுவைத் தேடும்.

- வேலிக்குள்ளால் செல்ல முடியாததால் வேலியைக் கேட்டுப்பார்க்கும் பசு நிற்குதோ என்று வேலி இல்லையென்று மறுக்க வேலிக்குள் புல்லுக்கட்டொன்றை போடுவதாகப் புலி பாவனை செய்யும் புல்லைக் கண்டு மாடு ஓடிவர புலி பாயும் வேலிவிடாது இவ்வாறாக விளையாட்டு நகர்கிறது.

- இவ்விளையாட்டை இரு குழுக்களிடையே ஏற்படும் பாட்டு உருவிலான உரையாடலுடன் நடத்த வேண்டும்.

**உரையாடல்கள்**

**புலி :** சங்கிலி புங்கிலி கதவத் திற

**வேலி :** நான் மாட்டன் வேங்கைப் புலி

**புலி :** பசு மாட்டைக் கண்டீங்களா?

**வேலி :** இல்லை

**புலி :** பால் மணக்குது

**வேலி :** பக்கத்து வீட்டில்

இது சிறந்ததொரு நாடகப் பாங்கான விளையாட்டாகும். உரையாடல்கள், பாடல்களாக, பாடல் தர்க்கங்களாக அமைந்திருக்கின்றன. பாடல்கள் தாள அமைவுக்கு ஏற்ற சொற்கட்டுக்களைக் கொண்டமைந்துள்ளன.

பாடல்களே விளையாட்டின் தாளகதியையும் நிர்ணயிக்கின்றன.

- மேலும் இவ்வாறான கிராமிய விளையாட்டுக்களை இனங்கண்டு செயற்படுத்துவதற்குத் தேவையான வழிகாட்டல்களையும் வழங்குங்கள்.

## 3.0 செயற்பாடுகள் அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலம்

முதன்மை நிலை ஒன்றின் செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி ஆங்கிலத்தைப் பயன்படுத்தல் தொடர்பாக அனுபவத்தைப் பெற்றுள்ள மாணவர்களை மேலும் வளப்படுத்துவதுடன் தொடர்பாடலுக்காக ஆங்கில மொழியைப் பயன்படுத்தும் அனுபவத்தையும் வழங்குதல் இரண்டாம், மூன்றாம் முதன்மை நிலைகளில் எதிர்பார்க்கப்படுகின்றது.

தரம் மூன்றில் இருந்து ஆங்கில மொழி மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கப்படும் மூன்று சந்தர்ப்பங்கள்

(i) வகுப்புக்குச் சமூகமளிக்கும் ஆங்கில ஆசிரியர் ஆங்கில பாடத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளையில் பாடத்திட்டத்திற்கு ஏற்ற ஆங்கில மொழி கற்பித்தல்

(ii) முதன்மை நிலை ஒன்றைப் போன்றே சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் விடயத்திற்கு ஏற்ற பாடவேளையையும் கணிதப் பாடவேளையையும் ஓய்வு நேரங்களையும் பயன்படுத்தி வகுப்பாசிரியர் மாணவர்கள் ஆங்கிலம் பேசுவதற்கும் ஆங்கிலத்தைக் கேட்பதற்கும் சந்தர்ப்பத்தை வழங்குதல்

(iii) வாரத்திற்கு ஒருமுறை அல்லது பொருத்தமானவாறு ஆங்கில உரையாடல் நிகழ்ச்சி ஒன்றை வகுப்பாசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையே மகிழ்ச்சி தரும் செயற்பாடுகள் மூலம் மேற்கொள்ளல்

இங்கு மாணவர்களுக்கு அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துவதற்கு அவசியமான உரையாடலை பயிற்றுவித்தல் - தன்னைப் பற்றி, வீட்டிலுள்ள செல்லப் பிராணிகளைப் பற்றி சில வாக்கியங்களை பழக்குவித்தல் ஆகியன எதிர்பார்க்கப்படுகிறது.

மிகவும் நன்றாக ஆங்கிலச் சொற்களைக் கிரகிக்க இலகுவான 16 பாடல்கள் 16 கருப்பொருள் களுக்கு ஏற்றவாறு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கு எல்லாப் பாடசாலைகளுக்கும் அப்பாடங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளசொற்கள், உரையாடல்கள் ஆகியன பதிவுசெய்யப்பட்ட இறுவட்டு (DVD) ஒன்றை வழங்குவதற்குத் தேசிய கல்வி நிறுவகத்தின் ஆரம்பக் கல்வித் துறை நடவடிக்கை எடுத்துள்ளது.

வகுப்பறைக்குப் பொறுப்பான நீங்கள் அதனை நன்கு செவிமடுத்து மாணவர்களுக்கு ஆங்கில மொழியைச் செவிமடுப்பதற்கும் பேசுவதற்கும் பயிற்றுவித்தல் எதிர்பார்க்கப்படுகிறது.

உதாரணமாக கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஆங்கிலச் சொற்களஞ்சியமொன்று இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளது. அதில் அன்றாட வாழ்க்கையில் மாணவர் எந்நேரமும் சந்திக்கும் பொருள்களின் ஆங்கிலச் சொற்களையும் பல்வேறு சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான எளிய வாக்கியங்கள் போன்றவற்றையும் உள்ளடக்கியுள்ளன.

மாணவர்களுக்கு அண்மையான சுற்றாடலுக்கு ஏற்ப இச்சொற்களஞ்சியத்திற்கு சொற்களைப் புதிதாகச் சேர்ப்பதனால் அல்லது குறைப்பதனால் பொருத்தமானவாறு மாற்றிக்கொள்வதற்கு ஆசிரியருக்குச் சுதந்திரம் உண்டு. இங்கு முன்வைக்கப்பட்டுள்ள சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் விடயத்திற்குப் பொருத்தமாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள சொற்கள் அத்தனையையும் பயன்படுத்துதல் கட்டாயமானதல்ல. அவ்வாறே சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் விடயத்தில் கருப்பொருளுக்குப் பொருத்தமாக முன்வைக்கப்பட்டுள்ள செயற்பாடுகளைப் போன்றே பாடல்களையும் ஆசிரியரின் விருப்பிற்கேற்ப மாற்றிக் கொள்வதற்கும் சுதந்திரம் உண்டு எனக் கூற வேண்டும்.

மாணவரின் ஆங்கில அறிவை அளப்பதற்கு கருப்பொருள் ஒன்றின் இறுதியில் அவர்களிடம் இருந்து வாய்மொழியாக வினாக்கள் வினவுதல், படம் ஒன்றைக் காட்டி அது என்ன என வினவுதல், சொல் ஒன்றைக் கூறி அதற்கு உரிய படத்தைக் காட்டுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல் போன்ற எளிய செயற்பாடுகளை இதற்குப் பயன்படுத்த முடியும். (What is this? / What is this colour? / Show me .......)மாணவரின் ஆங்கில அறிவை அளப்பதற்கு :உதாரணம்: Draw a cat / Colour is this Black என்றவாறும் இந்த மதிப்பீட்டைப் பொருத்தமானவாறு வகுப்பாசிரியர் செய்ய முடியும். இம்மதிப்பீட்டுச் செயலொழுங்கு வகுப்பாசிரியரினால் பிள்ளைக்குப் பாரமற்ற விதத்தில் வழங்கப்பட வேண்டும். செயற்பாடுகளின்போது அறிமுகம் செய்யப்பட்ட சொற்களையும் வாக்கியங்களையும் மட்டும் பயன்படுத்தி இம்மதிப்பீடு செய்யப்படல் வேண்டும்.

# ACTIVITY BASED ORAL ENGLISH

## Grade 3 - Syllbus 2018

| Suggested vocabulary | Songs | Conversational Language - between class teacher and students, students and students |
|---|---|---|
| **1. Our Good Behaviour**<br>1. win<br>2. loss<br>3. happy<br>4. sad<br>5. smile<br>6. sing<br>7. life<br>8. clean<br>9. dirty | **Song**<br>Win or loss – happy or sad //<br>Smile and sing – it's our life // | 1. I am Ruwan.<br>What's your name?<br><br>2. How old are you?<br>I am eight.<br><br>3. Where do you live?<br>I live in Maharagama.<br><br>4. How many sisters do you have?<br>I have one sister. / two sisters/ no sisters |
| **2. Plants Trees & Creepers**<br>1. Large plants<br>2. small plants<br>3. climbers<br>4. creepers<br>5. bushes<br>6. flowers<br>7. leaf/leaves<br>8. roots<br>9. trunk<br>10. branch/ branches<br>11. bud/buds<br>12. stem | **Song**<br>Large plants small plants<br>climbers creepers bushes ///<br>trees// green everywhere<br>(John Brown's .. tune) | 5. How many brothers do you have?<br>I have one brother. / two brothers/ no brothers.<br><br>6. What's your school ?<br>My school is Dharmapala Vidyalaya.<br><br>7. In which grade are you?<br>I'm in grade three.<br><br>8. Can you sing?<br>Yes, I can. / No, I can't.<br>I can dance.<br><br>9. Do you have a pet?<br>Yes, I have a cat. /No, I don't have. |

| Suggested vocabulary | Songs | Conversational Language - between class teacher and students, students and students |
|---|---|---|
| **3. Animals around us**<br>1. beak<br>2. horns<br>3. fins<br>4. tail<br>5. whiskers<br>6. trunk<br>7. wings<br>8. eyes<br>9. nose<br>10. mouth<br>11. tongue<br>12. antenna<br><br>1. dog<br>2. cat<br>3. elephant<br>4. cow<br>5. goat<br>6. fish<br>7. iguana<br>8. snake<br>9. parrot<br>10. peacock<br>11. sparrow<br>12. woodpecker<br>13. crane<br>14. rabbit<br>15. crow<br>16. caterpillar<br>17. spider<br>18. ant<br>19. hen<br>20. cock<br>21. owl | **Song**<br>They are animal friends of mine<br>Who says meow meow - cat says meow meow<br>Who says bow wow - dog says bow wow<br>Meow//// bow wow bow<br><br>Who says quack quack – duck says quack quack<br>Who says moo moo – cow says moo moo<br>quack //// moo ///<br><br>Who says cheep cheep - bird says cheep cheep<br>Who says oink oink - pig says oink oink<br><br>Cheep //// Oink ///<br>(Eskimo …tune)<br><br>They are animal friends of mine | 10. Do you have a pencil? / a piece of paper/ an eraser.<br>Sorry, I don't have./ Yes, here you are.<br><br>11. Is this your pencil?<br>Yes, it's mine. / Yes, it's my pencil.<br>No, it's Saman's pencil.<br><br>12. What do you like?<br>I like buns.<br><br>13. Do you like ice cream?<br>Yes, I do./ No, I don't.<br><br>14. What is this?<br>It's a bush.<br><br>15. Who is this?<br>This is my father.<br><br>16. How many flowers are there?<br>Two flowers/There are two flowers.<br><br>17. How much is it?<br>It's ten rupees.<br><br>18. Where's my pencil?<br>It's on the table./ It's under the table./ It's in the bag.<br><br>19. Where are you going?<br>I am going to the canteen. |

| Suggested vocabulary | Songs | Conversational Language - between class teacher and students, students and students |
|---|---|---|
| **4. What We Use**<br>1. needle<br>2. thread<br>3. knife<br>4. spoon<br>5. fork<br>6. cup<br>7. saucer<br>8. plate<br>9. pan<br>10. broom<br>11. ekel broom<br>12. saw<br>13. ruler<br>14. mammoty<br>15. plough<br>16. hanky (handkerchief)<br>17. blackboard<br>18. table<br>19. chair<br>20. duster<br>21. desk<br>22. dustbin<br>23. bed<br>24. comb<br>25. toothbrush<br>26. toothpaste<br>27. mug<br>28. glass<br>29. vase<br>30. pencil<br>31. bottle | **Song**<br>Books in the library – desks and chairs in the classroom<br>All in our school//<br>Let's protect them lovingly<br>(Bingo …tune) | 20. Where is Saman?<br>In the canteen./Saman is in the canteen./ He is in the canteen.<br><br>21. Where are they?<br>They are in the canteen.<br><br>22. What are you doing?<br>I am reading a book.<br><br>23. What can you see?/ What can you see in this picture?<br>I can see a house./ a house, a cat..<br><br>24. What is in my hand?/a bag<br>An umbrella.<br><br>25. I am Sahan.<br>I am eight.<br>I live in Nawala.<br>I go to Dharmapala Vidyalaya.<br>I am in grade three.<br>I have one brother and one sister.<br>I like red. |

| Suggested vocabulary | Songs | Conversational Language - between class teacher and students, students and students |
| --- | --- | --- |
| **6. Our Food**<br>1. healthy food<br>2. fatty food<br>3. spicy food<br>4. homemade food<br>5. junk food<br>6. banana<br>7. pineapple<br>8. mango<br>9. roseapple<br>10. pawpaw<br>11. fruit juice<br>12. woodapple<br>13. olive<br>14. water melon<br>15. custard apple<br>16. potato<br>17. cabbage<br>18. tomato<br>19. jak<br>20. carrot<br>21. beetroot<br>22. drumsticks<br>23. brinjal<br>24. cucumber<br>25. rice and curry<br>26. bread<br>27. hoppers<br>28. buns<br>29. tea<br>30. milk<br>31. ice cream<br>32. string hoppers<br>33. egg<br>34. fish<br>35. meat | **Song**<br>To be a healthy - boy or girl//<br>You need to eat good food//<br><br>Homemade food like – rice and curry//<br>Will make you a healthy boy<br>Will make you a healthy girl<br><br>But you should not eat – fatty food fatty food or spicy food//<br>But you should not eat – fatty food or spicy food – too much | 26. I have two eyes.<br>I have two ears.<br>I have one nose.<br>I have one mouth.<br>I have two hands.<br>I have two legs.<br>I have ten fingers.<br>I have ten toes.<br><br>27. I am a cat.<br>I am brown.<br>I have a bushy tail.<br>I have whiskers.<br>I like fish.<br><br>28. I have a pet.<br>It is a cat.<br>My cat is black.<br>It has four legs.<br>It has a tail.<br>It has two eyes.<br>It has two ears.<br>It has a small nose.<br>It has a small mouth.<br>It has whiskers.<br>It has sharp teeth.<br>It has sharp nails.<br>My cat likes milk. |

| Suggested vocabulary | Songs | Conversational Language - between class teacher and students, students and students |
|---|---|---|
| **6. We are Sri Lankans**<br>1. Sri Lankans<br>2. Sinhalese<br>3. Tamils<br>4. Muslims<br>5. Burgers<br>6. Food<br>7. Dress<br>8. Language<br>9. hand in hand<br>10. national anthem<br>11. national flag<br>12. national dress | **Song**<br>We are Sri Lankans//<br>We are sons and daughters of you<br><br>We are Sinhalese we are Tamils<br>We are Muslims or Burgers<br>We are Sri Lankans<br>We are soì and daughters of you<br><br>Though our food, though our dress, though our language is different<br>Let's live happily in hand in hand. | |
| **7. Safety & Protection**<br>1. fire<br>2. strangers<br>3. slip<br>4. fall | **Song**<br>Don't play with fire//<br>Don't speak with strangers//<br>Don't eat from strangers//<br>Think of you - wherever go<br>Think of you – whatever do | 29. Be careful.<br>You may fall.<br>You may slip. |
| **8. Water**<br>1. bathe<br>2. cook<br>3. wash<br>4. drink<br>5. water (the plants) | **Song**<br>Water// we need you - Water// we like you<br>Water// without you<br>We can't bathe – we can't cook- we can't wash or we can't live<br>We protect you// - wasting no- no wasting<br>Water// we need you - Water// we like you<br>Water// without you<br>We can't live//<br>(Jameica…tune) | |

| Suggested vocabulary | Songs | Conversational Language - between class teacher and students, students and students |
|---|---|---|
| **9. Transport**<br>1. left<br>2. right<br>3. cross<br>4. road<br>5. bus<br>6. car<br>7. lorry<br>8. van<br>9. train<br>10. aeroplane<br>11. helicopter<br>12. ship<br>13. boat | **Song**<br>Look to the right- look to the left – look to the right again<br>Cross the road if the road is clear<br>Look to the right- lookto the left – look to the right again<br>Cross the road if the road is clear<br><br>No playing - no running- no playing<br>No playing no running on the road<br>No playing - no running - no playing<br>As vehicles moving on the road | |
| **10. Home Garden**<br>1. Sunflowers<br>2. roses<br>3. jasmine<br>4. bees<br>5. Butterflies<br>6. humming birds<br>7. fruit trees<br>8. flowers<br>9. home garden<br>10. shoe flowers<br>11. sweet potatoes<br>12. yams<br>13. manioc<br>14. curry leaves | **Song**<br>Sunflowers and roses jasmine and bees<br>Butterflies and humming birds - on my fruit trees<br>Cool breeze shady trees flowers with sweet smell<br>All kinds of green leaves in my garden<br>(all kinds …tune) | |

| Suggested vocabulary | Songs | Conversational Language - between class teacher and students, students and students |
|---|---|---|
| **11. Ways of Making Work Easy**<br>1. hole puncture<br>2. stapler machine<br>3. pencil sharpener<br>4. hammer | **Song**<br>Let's save time// la la ….<br>Let's do work// la la…<br>Let's play and work// la la ..<br>Don't waste time// la la ..<br><br>(hey ho …tune) | |
| **12. Human Behaviour** | **Song**<br>If you're happy and you know it clap your hands//<br>If you're happy and you know it – and you really want to show it<br>If you're happy and you know it clap your hands<br><br>If you're angry and you know it<br>no no fights//<br>If you're angry and you know it – and you really want to show it<br>If you're angry and you know it<br>no no fights<br><br>If you're sad and you know it share with friends//<br>If you're sad and you know it – and you really want to lessen it<br><br>If you're sad and you know it share with friends// | |

| Suggested vocabulary | Songs | Conversational Language - between class teacher and students, students and students |
|---|---|---|
| **13. Earth & Sky**<br>1. sky<br>2. sun<br>3. moon<br>4. stars<br>5. rainbow<br>6. wind<br>7. clouds<br>8. rain<br>9. river<br>10. hill<br>11. mountain<br>12. rain drops<br>13. lightening<br>14. floods<br>15. thunder<br>16. sea<br>17. beach<br>18. mist<br>19. waterfall<br>20. trees<br>21. flowers | **Song**<br>Don't throw rubbish everywhere<br>Put them into a garbage pit<br>Keep the classroom beautiful – keep the school your beautiful<br>Keep Sri Lanka beautiful<br>Keep my country beautiful | |
| **14. Changes We Can Do** | **Song**<br>Keep your hair neat and clean<br>Neat and clean//<br>keep you hair neat and clean<br>My dear friend<br><br>Wear your clothes- tidy and clean//<br>wear you cloths tidy and clean<br>My dear friend<br><br>Cut your nails and keep them clean //<br>Cut your nails and keep them clean<br>My dear friends<br>Then you will become a healthy boys healthy girls healthy girls or a healthy boy or a healthy girl<br>My dear friends ( London…tune) | |

| Suggested vocabulary | Songs | Conversational Language - between class teacher and students, students and students |
|---|---|---|
| **15. Man & Information**<br>1. letter<br>2. newspapers<br>3. telephone<br>4. post | **Song**<br>Information where we find – where we find//<br>Information where we find - my dear friend<br><br>Newspapers –read///<br>Newspapers –read /// my dear friend<br>Radio - listen to it///<br>Radio - listen to it - my dear friend<br>Television – watch///<br>Television – watch/// -but don’t watch too much.<br>(London..tune) | |
| **16. Our Past**<br>1. history<br>2. stone carvings<br>3. timber carvings | **Song**<br>Ancient kings our fore fathers//<br>Built this world beautiful//<br>Built this world happy and safe//<br>Let’s call them our heroes//<br>Let’s become great like them.// | |

# 4.0 இரண்டாம் தேசிய மொழி - சிங்களம்

**அறிமுகம்**

இலங்கையர் என்ற வகையில் தம்முடன் வாழும் சகோதர மக்களின் மொழியைக் கற்பதன் மூலம் ஒருவரையொருவர் விளங்கிச் செயற்படும் திறனை மாணவரிடத்தே வளர்ப்பதே இதன் மூலம் எதிர்பாரக்கப்படுகின்றது.

இக்குறிக்கோளை மையப்படுத்தி, இரண்டாம் தேசிய மொழியைக் கற்பிப்பதன் மூலம் மாணவரிடம் மொழிப் பண்டியத்தியத்தை ஏற்படுத்த எதிர்பார்க்கப்படவில்லை. மாறாக தொடர்பாடல் திறன்களை ஓரளவுக்கு வளர்த்துக் கொள்வதும் ஒருவரோடொருவர் புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

செயலூக்கமுள்ள தேசிய ஒன்றிணைப்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தேசிய ஒற்றுமையை ஏற்படுவத்துவதற்கான முதன்மையான அடித்தளத்தை இடுவதற்கும் இரண்டாம் தேசிய மொழியைக் கற்பது தூண்டுகோளாக அமையும் என்பது எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய இரண்டாம் முதன்மை நிலையில் இரண்டாம் தேசிய மொழியின் கீழ் பின்வரும் தேர்ச்சிகளை அடைவதற்காக இந்த ஆசிரியர் வழிகாட்டி தயாரிக்கப்பட்டுள்ளது. **செவிமடுத்தல், பேசுதல் ஆகிய மொழித்திறன்கள் தொடர்பான செயற்பாடுகள் மாத்திரமே இங்கு தரப்பட்டுள்ளன**. இத்தேர்ச்சிகள், மாணவரது வயது, முதிர்ச்சி என்பவற்றோடு அவர்கள் பெற்றுள்ள அனுபவங்களையும் கவனத்திற் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

**ஆரம்பக் கல்விப் பருவத்துக்குரிய தேர்ச்சிகள் (இரண்டாம் தேசிய மொழி)**

- நாளாந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொருத்தமான சொற்களையும் சொற்றொடர்கள் - வாக்கியங்களைப் பயன்படுத்திப் பேசுவார்.
- சிங்களத்தில் கூறுபவற்றை செவிமடுத்து பொருளுள்ள வகையில் துலங்குவார்/ எதிர்வினை காட்டுவார்.
- மொழியைக் கையாளும்போது நற்பழக்கங்களை வெளிப்படுத்துவார்.
- ஏனையோரது முன்னிலையில் தமது கருத்தையும் வெளிப்படுத்த முன்வருவார்.
- வாசிப்புத்திறனை வெளிப்படுத்தி, அதனைப் பொருளுள்ள வகையில் பயன்படுத்துவார்.
- பாடல்கள், கவிதைகளை செவிமடுத்தும் பாடியும் இரசிப்பார்.
- இரண்டாம் தேசிய மொழியைக் கையாள்வதன் மூலம் களிப்புறுவார்.
- இரண்டாம் தேசிய மொழியைக் கையாளும் திறன்களை மதிப்பார்.

**முதன்மை நிலை இரண்டிற்குரிய தேர்ச்சிகள்**

- குறிப்பாக ஓர் இடத்தை ஏனையோருக்குச் சரியாகக் கூறுவார்.
- தமது தேவைகளுக்குரிய பொது இடங்களைக் குறிப்பிடுவார் அல்லது பெயரிடுவார்.
- அன்றாடக் கருமங்களின்போது குறித்த எளிமையான கட்டளைகளுக்கு எதிர்வினை (துலங்கல்) காட்டுவார்.
- அன்றாடம் தமது தேவைகளுக்காக நட்புடன் வேண்டுகோள் விடுப்பார்.
- விருத்தினர்களை வரவேற்று நட்புடன் உரையாடுவார்.
- தமது கிட்டிய சூழலில் காணப்படும் மரஞ்செடிகொடிகள், பூக்களின் பெயர்களை இனங்கண்டு கூறுவார்.
- தமது கிட்டிய சூழலில் காணப்படும் பழங்கள், காய்கறிகளைச் சரியாக இனங்கண்டு கூறுவார்.
- தமது உடலின் உறுப்புக்களைச் சரியாகக் கூறுவார்.

- அன்றாடம் பயன்படுத்தும் பாவனைப் பொருட்கள் மற்றும் உபகரணங்களை இனங்கண்டு கூறுவார்.
- எண்குறிகளை இனங்கண்டு சரியாகவும் தெளிவாகவும் உச்சரித்து வாசிப்பார்.
- பொது இடங்களில் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகத் தகவல்களை விசாரித்தறிவார்.
- எளிமையான பாடல்கள், கவிதைகளை அங்க அசைவுகளுடன் பாடுவார்.
- அடிப்படைத் தகவல்கள் தொடர்பாக உரையாடல் ஒன்றில் ஈடுபடுவார்.

**தரம் மூன்றிற்குரிய தேர்ச்சிகள்**

- தம்மைப்பற்றிய தகவல்களை கூறுவார்
- பாடசாலையில் பொது இடங்களைப் பெயரிடுவார்.
- பாடசாலையில் தமது தேவைகளுக்காக நட்புடன் கோரிக்கை விடுப்பார்.
- விசேட உற்சவங்களின்போது வாழ்த்துக்கள் தெரிவிப்பார்.
- தமது கிட்டிய சூழலில் வளரும் பூக்களை இனங்கண்டு கூறுவார்.
- தமது கிட்டிய சூழலில் காணப்படும் பழங்களை இனங்கண்டு கூறுவார்.
- உடலின் உறுப்புக்கள் சிலவற்றை இனங்கண்டு சரியாகக் கூறுவார்.
- தமது அன்பர்களுடன் நட்புடன் உரையாடுவார்.
- எளிமையான பாடல்கள், கவிதைகளை அங்க அசைவுகளுடன் பாடுவார்.

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

முதலாம் முதன்மை நிலை தொடக்கம் இரண்டாம் தேசிய மொழியைப் பயிலுவதற்கு மாணவர்க்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. திட்டமிட்ட விளையாட்டுக்கள், களிப்பூட்டும் வேலைகள் மற்றும் செயற்பாடுகளை முதன்மையாகக் கொண்டு முன்வைக்கப்பட்டுள்ள இத்தப் பாடத்தினால் எதிர்பார்க்கப்படும் கற்றல் - தேர்சசிகளை அடையத்தக்கவாறான கற்றல் - கற்பித்தற் செயன்முறை திட்டமிடப்பட்டுள்ளது.

இரண்டாம் தேசிய மொழியொன்றினைக் கற்பதால் அடைய எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை அடையத்தக்கவாறாக, கற்றல் - கற்பித்தல் செய்ன்முறையை ஒழுங்கு செய்து கொள்வது ஆசிரியரின் பொறுப்பாகும். மேலும் இங்கு தரப்பட்டுள்ள செயற்பாடுகளுக்குப் பதிலாக பொருத்தமான புதிய செயற்பாடுகளைத் திட்டமிடல் பயன்படுத்தும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.

**பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டங்களும்**

- இரண்டாம் தேசிய மொழியைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களைப் பாடசாலைக் கொள்கையின் வழியே உருவாக்குவது தொடர்பாக அதிபர் கவனஞ் செலுத்த வேண்டும். அத்தோடு தரம் மூன்று வகுப்பில் இரண்டாம் தேசிய மொழிப் பயன்பாட்டுக்கேற்ற கொள்கைகளை உருவாக்குவது குறித்து வகுப்பாசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும். வாழ்த்துத் தெரிவித்தல், நன்றி கூறுதல் போன்றவற்றை சில சந்தர்ப்பங்களில் இரண்டாம் தேசிய மொழியிலும் கூறுதல் போன்ற மொழிகளை உருவாக்குதல் வேண்டும். மேலும் இரண்டாம் தேசிய மொழிக்கான ஒரு தினத்தைப் பெயரிட்டு (பிரகடனப்படுத்தி) வகுப்புமட்டததில் விசேட நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்யலாம்.

**மாணவரது முன்னேற்றத்தைக் கணிப்பிடுதல்**

- சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொற்களைப் பயன்படுத்துதல் தொடர்பான தகவல்களைத் திரட்டுங்கள். மாணவரது வலுக்களை இனங்காண்பதற்கும் இடர்பாடுகளின் போது உதவி புரிவதற்கும் அத்தகவல்களை பயன்படுத்துங்கள். ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ள பொதுக்கணிப்பீட்டப் பத்திரத்தின் இரண்டாம் தேசிய மொழிக் கணிப்பீட்டுக்காக உரிய நியமங்கள் உள்ளடக்கப்படடுள்ளன.

## இரண்டாம் தேசிய மொழி - சிங்களம்

### பாடத்திட்டம்

**தேர்ச்சி : 1**

- தம்மைப் பற்றிய தகவல்களைக் கூறுவார்.

| | | |
|---|---|---|
| ඔබේ නම මොකක් ද ? | (ஒபே நம மொகக் த?) | உங்கள் பெயர் என்ன? |
| මම/මගේ නම . . . | (மம/மகே நம ....) | எனது பெயர் .... |
| ඔබේ ගම කොහේ ද ? | (ஒபே கம கொஹே த?) | உங்கள் ஊர் எது? |
| මගේ ගම . . . | (மகே கம ....) | எனது ஊர் ... |
| ඔයාගේ වයස කීයද ? | (ஒயாகே வயச கீயத?) | உங்கள் வயது எத்தனை? |
| මගේ වයස . . . | (மகே வயச ...) | எனது வயது... |
| ඔයාගේ පාසල මොකක් ද ? | (ஒயாகே பாசல மொகக்த?) | உங்கள் பாடசாலை எது? |
| මගේ පාසල . . . | (மகே பாசல ...........) | (எனது பாடசாலை .........) |

**தேர்ச்சி 2**

- பாடசாலையில் உள்ள பொது இடங்களைப் பெயரிடுவார்.

| | | |
|---|---|---|
| පන්ති කාමරය | (பந்தி காமரய) | வகுப்பறை |
| ක්‍රීඩා පිටිය | (கிரீடா பிட்டிய) | விளையாட்டு மைதானம் |
| විදුහල්පති කාර්යාලය | (விதுஹல்பதி காரியாலய) | அதிபர் காரியாலயம் |
| වැසිකිළිය | (வெசிக்கிலிய) | மலசல கூடம் |
| පුස්තකාලය | (புஸ்தகாலய) | நூலகம் |

**தேர்ச்சி 3**

- பாடசாலையில் தமது தேவைகளுக்காக நட்புடன் வேண்டுகோள் விடுப்பார்.

| | | |
|---|---|---|
| මට පෑන දෙන්න | (மட்ட பேன தென்ன) | எனக்கு பேனையொன்று தாருங்கள் |
| මට වතුර දෙන්න | (மட்ட வதுர தென்ன) | எனக்குத் தண்ணீர் தாருங்கள் |
| මට පොත දෙන්න | (மட்ட பொத தென்ன) | எனக்கு புத்தகம் தாருங்கள் |
| ඇතුළට එන්නද ? | (அத்துலட என்னத?) | உள்ளே வரலாமா? |
| එළියට යන්නද ? | (எலியட்ட யன்னத?) | வெளியே போகலாமா? |
| මම ඇතුළට එන්නද ? | (மம அத்துலட என்னத?) | நான் உள்ளே வரலாமா? |
| මම එළියට යන්න ද ? | (மம எலியட்ட யன்னத?) | நான் வெளியே போகலாமா? |

**தேர்ச்சி 4**

- விசேட உற்சவங்களின் போது வாழ்த்துத் தெரிவிப்பார்.

සුභ අලුත් අවුරුද්දක් වේවා ! (சுப அலுத் அவுறுத்தக் வேவா) இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்

සුභ නත්තලක් වේවා ! (சுப நத்தலக் வேவா) இனிய நத்தார் வாழ்த்துக்கள்

සුභ දීපවාලියක් වේවා ! (சுப தீபாவளியக் வேவா) இனிய தீபாவளி வாழ்த்துக்கள்

සුභ රාමලාන් දිනයක් වේවා ! (சுப ரமழான் தினயக் வேவா) இனிய ரமழான் வாழ்த்துக்கள்

**தேர்ச்சி 5**

- தமது சுற்றுப் புறத்தில் வளரும் பூக்களை இனங்கண்டு கூறுவார்.

| | | |
|---|---|---|
| අරලිය මල | (அரலிய மல) | அலரிப்பூ |
| රෝස මල | (ரோச மல) | ரோசாப்பூ |
| පිච්ච මල | (பிச்ச மல) | மல்லிகைப்பூ |
| නෙළුම් මල | (நெலும் மல) | தாமரைப்பூ |

**தேர்ச்சி 6**

- தமது சுற்றுப் புறத்தில் உள்ள பழங்களை இனங்கண்டு கூறுவார்.

| | | |
|---|---|---|
| අන්නාසි | (அன்னாசி) | அன்னாசிப்பழம் |
| අඹ | (அம்ப) | மாம்பழம் |
| කෙසෙල් | (கெசெல்) | வாழைப்பழம் |
| පැපොල් | (பெப்பொல்) | பப்பாசிப்பழம் |
| දොඩම් | (தொடம்) | தோடம்பழம் |

**தேர்ச்சி 7**

- உடலின் உறுப்புக்கள் சிலவற்றை இனங்கண்டு சரியாகக் கூறுவார்.

| | | |
|---|---|---|
| හිස | ஹிச | தலை |
| අත | அத்த | கை |
| කකුල | ககுல | கால் |
| බඩ | ப(B)ட | வயிறு |
| මුහුණ | முஹுண | முகம் |

**தேர்ச்சி 8**

- தமது நண்பர்களுடன் நட்புடன் உரையாடுவார்.

தரம் 1, தரம் 2, தரம் 3 இல் கற்ற சொற்கள், சொற்றொடர்களைப் பயன்படுத்தித் தயாரித்த இலகவான சிறிய உரையாடல்களை இதற்காகப் பயன்படுத்துக.

**தேர்ச்சி 9**

- இலகுவான பாடல்களை அபிநயத்தடன் பாடுவார்.

**தேர்ச்சி 1 :- தம்மைப்பற்றிய தகவல்களைக் கூறுவார்.**

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

செயற்பாடு - I

- சிங்கள மொழியில் தமது பெயரை அறிமுகம் செய்யும் விதத்தை மாணவரிடம் வினவுக.
  உ-ம்: මගේ නම කුමාර (மகே நம குமார) எனது பெயர் குமார்
- இவ்வாறாக மாணவர் சிலரிடம் பெயரை வினவி, சிங்கள மொழியில் விடைபெறுக.
- இங்கு මගේ என்பதன் கருத்து எனது என்பதாகும் எனவும் නම என்பதன் கருத்து பெயர் என்பதாகும் எனவும் விளக்குக. பின்னர் වයස எனும் சொல்லை அறிமுகஞ் செய்க. වයස எனும் சொல்லின் கருத்து வயது என்பதாகும் எனக் கூறுக.
- மேலே பெயரைக் கூறிய விதத்திலேயே வயதைக் கூறுவதற்கு மாணவரைப் பழக்குக.
  உ-ம்: මගේ නම කුමාර (மகே நம குமார) எனது பெயர் குமார்
  මගේ වයස අට යි (மகே வயச அட்டய்) எனது வயது எட்டு
- வயது வித்தியாசமுள்ள மாணவர் எவரேனும் உள்ளனராயின் அவ்வயதைக் கூறுவதற்கு அம்மாணவருக்கும் சந்தர்ப்பமளிக்குக.
  உ-ம்: මගේ වයස නවයයි (மகே வயச நவயய்) எனது வயது ஒன்பது
- ஆசிரியர் தமிழ் மொழியில் சில மாணவர்களிடம் வயதை வினவி மேற்குறிப்பிட்டவாறு விடைபெறுக.
- அது நன்கு உறுதியான பின்னர், பின்வருமாறாக வயது பற்றி, சிங்கள மொழியில் ஆசிரியர் வினவுக.
  உ-ம்: ඔයාගේ වයස කීයද ? (ஒயாகே வயச கீயத?) உங்கள் வயது எத்தனை?
- இவ்வாறாக ஆசிரியர் ඔයාගේ වයස කීයද ? (ஒயாகே வயச கீயத?) உங்கள் வயது எததனை? என வினவும்போது மாணவன்/மாணவி මගේ වයස අට යි (மகே வயச அட்டய்) எனது வயது எட்டு என விடையளித்தல் வேண்டும்.
- இவ்வாறாக வகுப்பு மாணவருக்குத் தமது வயதைச் சிங்கள மொழியில் கூறும் திறமை கிடைக்கும் வரையில் மேற்படி கூற்றைச் சில தடவைகள் உச்சரிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர் ஆசிரியர் வினவியது போன்றே வயதை வினவவும் விடையளிக்கவும் மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
  உ-ம்: හසන් ඔයාගේ වයස කීයද? (ஹசன் ஒயாகே வயச கீயத?) ஹசன் உங்கள் வயது எத்தனை?
  මගේ වයස අට යි (மகே வயச அட்டய்) எனது வயது எட்டு

செயற்பாடு - 2

- மாணவரைத் திறந்தவெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க. அவர்களை வட்டமாக நிறுத்துக.
- ஆசிரியர் வட்டத்தின் மத்தியில் நிற்குக. ஆசிரியர் ஒரு மாணவனுக்கு பந்தை அனுப்பியவாறு ඔයාගේ වයස කීයද ? (ஒயாகே வயச கீயத?) என வினவுதல் வேண்டும்.
- பந்தைப் பெறும் மாணவன் මගේ වයස අටයි (மகே வயச அட்டய்) எனது வயது எட்டு என விடை கூற வேண்டும்.

- இவ்வாறாக ஆசிரியர் மாணவர் ஒவ்வொருவருக்கும் பந்தை அனுப்பி வயதை வினவிச் சரியான விடையைப் பெறுதல் வேண்டும்.
- இவ்வாறு மாணவர் அனைவரும் விடையளித்த பின்னர் ஆசிரியருக்குப் பதிலாக மாணவர் ஒருவரை வட்டத்தின் மத்தியில் அழைக்குக.
- மேலே ஆசிரியர் செய்தது போன்றே மத்தியில் இருக்கும் மாணவன் ஒரு மாணவனுக்கு பந்தை அனுப்பி ඔයාගේ වයස කීයද? (ஒபகே வயச கீயத) உங்களது வயது எத்தனை? என வினவுதல் வேண்டும்.
- பந்தைப் பெற்ற மாணவன் அதற்கு விடையளித்த பின் வட்டத்தின் மத்திக்கு வரவேண்டும்.
- வட்டத்தின் மத்தியில் இருந்த மாணவன் மேலே விடையளித்த மாணவன் நின்றிருந்த இடத்துக்குச் சென்று நிற்றல் வேண்டும்.
- வட்டத்தின் மத்திக்கு வந்த மாணவன் மீண்டும் முன்னைய மாணவன் செயற்பட்டது போன்றே செயற்பாட்டைச் செய்தல் வேண்டும்.
- இவ்வாறாக மாணவர் சகலருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வரையில் செயற்பாட்டை நடத்துக.

செயற்பாடு - 3

- பின்வரும் பாடலை மாணவருடன் பாடுக.

A - ඔයාගේ වයස කීයද //
කියන්නකෝ කියන්නකෝ
ஒயாகே வயச கீயத //
கியன்னகோ // கியன்னகோ //
(உங்களுடைய வயது எத்தனை? //
செல்லுங்கள் சொல்லுங்கள்.)

B - මගේ වයස අට යි, බලන්නකෝ
மகே வயச அட்டய், பலன்னகோ //
(எனது வயது எட்டு, பாருங்கள்)

- ஆசிரியர் A பகுதியைப் பாடுவதோடு மாணவர்கள் B பகுதியைப் பாடுதல் வேண்டும்.
- இங்கு මගේ වයස අට යි (மகே வயச அட்டய்) எனது வயது எட்டு என மாணவர்கள் கூறும்போது தமது கைவிரல்களால் அவ்வெண்ணிக்கையைக் காட்ட வேண்டும் என மாணவர்களுக்குக் கூறுக.

செயற்பாடு - 4

- சில மாணவர்களிடம் ඔබේ නම මොකක් ද ? (ஒபே நம மொகக்த?) உங்கள் பெயர் என்ன? என வினவுக. அதன்விடையைப் பெறுக.
- ஒருவரின் பாடசாலை பற்றி வினவும் போதும் இவ்வாறாகவே ඔයාගේ පාසලේ නම මොකක් ද? (ஒபகே பாசலே நம மொகக்த?) உங்கள் பாடசாலையின் பெயர் என்ன? என வினவ முடியும் என்பதை மாணவர்க்கு விளக்குக.
- இங்கு පාසල என்பதன் கருத்து, பாடசாலை ஆகும் என்பதை எடுத்துக்காட்டுக.

- இதற்காக මගේ පාසලේ නම . . . (மகே பாசலே நம சுஜாதா வித்தியாலய) எனது பாடசாலைப் பெயர் சுஜாதா வித்தியாலயம் என விடையளிக்கலாம் என விளக்குக.
- இக்கூற்று நன்கு பதியும் வரை உச்சரிக்கச் செய்க.
- பின்னர் குழுவாகவும் தனித்தனியாகவும் தமது பாடசாலைப் பெயரை வினவுதலையும் விடையளித்தலையும் நடத்துக.

செயற்பாடு - 5

- மாணவரைத் திறந்தவெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- பாடசாலைப் பெயர் எழுதப்பட்ட ஒரு பலகையை அல்லது அட்டையை பொருத்தமான ஓர் இடத்தில் தொங்க விடுக.
- பாடசாலைப் பெயர் தொங்கவிடப்பட்டுள்ள இடத்துக்குச் சற்று அப்பால் மாணவரை வரிசையாக நிறுத்துக.
- மாணவரில் ஒருவரை புகைவண்டியின் எஞ்சின் எனப் பெயரிடுக.
- அம்மாணவரின் கழுத்தில் பாடசாலைப் பெயர் எழுதிய அட்டையை மாலை போல் தொங்க விடுக.
- புகைவண்டியில் ஏறப் பயணச் சீட்டு வழங்குபவராக ஆசிரியை செயற்படுதல் வேண்டும்.
- பயணச்சீட்டாகப் பயன்படுத்துவதற்காகச் சிறிய காகித அட்டைத்துண்டுகளைத் தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
- ஆசிரியை, வரிசையில் முதலில் நிற்கும் மாணவரின் அருகே சென்று, புகை வண்டியில் பயணம் செய்வதற்குப் பயணச்சீட்டுப் பெற வேண்டும் எனக் கூறுக. பயணச்சீட்டைப் பெறுவதற்காக தாம் வினவும் வினாவுக்குச் சரியாக விடை கூற வேண்டும் எனவும் கூறுக. அவ்வாறு கூறி ඔයාගේ පාසලේ නම මොකක් ද ? (ஒயாகே பாசலே நம மொகக்த?) உங்கள் பாடசாலை பெயர் என்ன? என வினவுதல் வேண்டும்.
- சரியான விடையை வழங்கிய மாணவருக்குப் பயணச் சீட்டு வழங்குக.
- இவ்வாறாக ஒவ்வொரு மாணவரிடத்திலும் தனித்தனியே தமது பாடசாலைப் பெயரை வினவி மாணவன் விடையைக் கூறிய பின்னர் பயணச் சீட்டுப் பெற்ற மாணவன் மாலை அணிந்துள்ள மாணவரின் பின்னால் வரிசையாக நிற்றல் வேண்டும்.
- மாணவர்கள் தமது முன்னே நிற்கும் மாணவரின் தோள்களை அல்லது இடுப்பைப் பிடித்தவாறு புகை வண்டி போன்று பாடசாலைப் பெயர்ப்பலகை தொங்கவிடப்பட்டுள்ள இடம் வரை செல்ல வேண்டும்.
- புகைவண்டி பாடசாலையை அடைந்த பின்னர் ඔයාගේ පාසලේ නම මොකක් ද ? ஒபகே பாசலே நம மொகக்த? உங்கள் பாடசாலை பெயர் என்ன என வினவிய பின்னர் மாணவர் அனைவரும் கூட்டாக

  මගේ පාසලේ නම . . . (மகே பாசலே நம .........) எனது பாடசாலை பெயர் .......... என விடையளித்தல் வேண்டும்.

தேர்ச்சி :- பாடசாலையில் நிதமும் பயன்படுத்தப்படும் பொது இடங்களைப் பெயரிடுவார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - 1**

- பின்வரும் சொற்களுள் இரண்டு சொற்களை அவற்றின் பொருளுடன் மாணவர்க்கு அறிமுகம் செய்க.

| | | |
|---|---|---|
| ක්‍රීඩා පිටිය | (கிரீடா பிட்டிய) | விளையாட்டு மைதானம் |
| පන්ති කාමරය | (பந்தி காமரய) | வகுப்பறை |
| පුස්තකාලය | (புஸ்தகாலய) | நூலகம் |
| විදුහල්පති කාර්යාලය | (விதுஹல்பதி காரியாலய) | அதிபர் காரியாலயம் |
| වැසිකිළිය | (வெசிக்கிலிய) | மலசலகூடம் |

- மாணவர்கள் சொற்களை நன்றாக உச்சரிக்கும் வரை சில தடவைகள் மாணவர்க்கு இச்சொற்களை மீண்டும் மீண்டும் உச்சரிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

  உ-ம்: පන්ති කාමරය (பந்தி காமரய) வகுப்பறை
  
  පුස්තකාලය (புஸ்தகாலய) நூலகம்

  போன்ற, மாணவர்கள் இலகுவாக உச்சரிப்பதற்கேற்ற சொற்களைத் தெரிவு செய்து கொள்க.
- இச்சொற்களை அவற்றின் பொருளுடன் நன்கு விளங்கிய பின்னர் மற்றைய மூன்று சொற்களையும் படிப்படியாக அறிமுகம் செய்க. இதற்காக ஒளிப்படங்கள், சித்திரங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றைப் பயன்படுத்துக.

**செயற்பாடு - 2**

- மேற்படி சொற்களுக்குரிய படங்களை A4 அளவுள்ள தாள்களில் ஐந்து பட அட்டைகளைத் தயாரித்துக் கொள்ளுங்கள்.
- மாணவரது கண்களை மறைத்துக் கட்டுவதற்குத் துணிநாடாவொன்றைப் பெறுக.
- திறந்த வெளியான பொருத்தமான ஓர் இடத்துக்கு மாணவரை அழைத்துச் செல்க.
- தயார்ப்படுத்திய பட அட்டைகளை ஒரே வரிசையில் அமையுமாறு நிறுத்தி வைக்குக./ தொங்கவிடுக.
- மாணவருள் ஒருவரை எதிரே அழைத்து அவரது கண்களைத் துணி நாடாவால் மறைத்துக் கட்டுக.
- எல்லைக் கோட்டிலிருந்து முன்னே சென்று எதிரே தொங்கவிடப்பட்டுள்ள அட்டைகளுள் ஓர் அட்டை மீது மாத்திரம் விரலை வைத்தல் வேண்டும் என மாணவருக்கு அறிவுறுத்துக.
- பின்னர் கண்களைத் திறந்து தாம் தொட்ட படத்துக்குரிய சிங்களப் பெயரை அம்மாணவர் கூறுதல் வேண்டும். பின்னர் குழுவில் ஏனைய மாணவர்களும் அச்சொல்லைக் கூற வேண்டும்.
- குறித்த சொல்லைச் சரியாகக் கூற முடியாமற் போனதாயின், குழுவில் ஏனைய மாணவர்க்கு சரியான சொல்லைக் கூறச் சந்தர்ப்பமளியுங்கள்.
- இச்செயற்பாட்டைக் குழுக்களாகப் பிரித்து நடத்துவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.


**செயற்பாடு - 3**

- மேற்குறிப்பிட்ட சொற்கள் ஒவ்வொன்றுக்குமாக இரண்டு பட அட்டைகள் வீதம் தயாரித்துக் கொள்க.

- அவ் அட்டைகளை வெவ்வேறாக இரண்டு பெட்டிகளில் இடுக. பெட்டிகளை A, B எனப் பெயரிடுக.
- படப் பெட்டிகள் இரண்டையும் வகுப்பில் காட்சிப்படுத்துக.
- மாணவரை இரண்டு குழுக்களாகப் பிரித்து, A, B எனப் பெயரிடுக.
- ஒவ்வொரு குழுவில் இருந்து ஒவ்வொருவர் வீதம் எதிரே அழைத்துத் தமது குழுவுக்குரிய பெட்டியில் இருந்து ஒரு படத்தை வெளியே எடுத்து, அப்படத்துக்குரிய சிங்களப் பெயரை (சொல்லைக்) கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- முதலில் A குழு மாணவன் சொல்லைக் கூறிய பின்னர் மற்றைய எல்லா மாணவர்களும் அச்சொல்லை உச்சரித்தல் வேண்டும். (மாணவன் சரியாக உச்சரித்தார் எனின் அக்குழுவுக்கு ஒரு புள்ளி (1) அல்லது ஒரு நட்சத்திரம் வழங்குக.)
- அம்மாணவனால் சரியாக உச்சரிக்க முடியாமற்போனதாயின், அக்குழுவில் வேறொருவர் சரியாக உரத்து உச்சரித்தல் வேண்டும்.
- பின்னர் B குழு மாணவர் வெளியே எடுத்த படத்துக்குரிய சொல்லை உச்சரித்தல் வேண்டும்.
- இவ்வாறு மாணவர் வெளியே எடுத்த பட அட்டைகளை மீண்டும் பெட்டியில் இடுதல் வேண்டும்.
- இவ்வாறாக வகுப்பு மாணவர் ஒவ்வொருவரும் முன்னே வந்து அட்டையொன்றினை எடுத்து அதில் உள்ள படத்தைக் குறிக்கும் சிங்களச் சொல்லை உச்சரிக்கச் சந்தர்ப்பமளிக்குக.

செயற்பாடு - 4

- இத்தேர்ச்சியின் கீழ்க் கற்ற சொற்களுக்குரிய படங்களைக் கொண்டு கீழே காட்டப்பட்டுள்ள வாறு ஒரு சுழல் சக்கரத்தை ஆக்கிக் கொள்க.




- ஆசிரியர் குறிக்கும் மாணவன் சுழல் சக்கரத்தைச் சுழற்றி, சுழற்சி நின்ற பின்னர் அம்புக்குறி காட்டும் படத்துக்குரிய சிங்களச் சொல்லைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறாக வகுப்பு மாணவர் அனைவர்க்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற்பாட்டை நடத்துக.

செயற்பாடு - 5

- மேற்படி சொற்களை மாணவர் மனதில் மேலும் பதியும் விதத்தில் பதிப்பதற்காக இச்செயற்பாட்டைப் பயன்படுத்துக.
- மாணவருடன் ஒரு சுற்றுலா செல்வதாகவும் அவ்வாறு செல்லும்போது நாம் எதிர்கொள்ளும் பாடசாலையின் பொது இடங்களின் பெயரை வாசிக்கும்போது அச்சொல் ஏற்கனவே கற்ற ஒரு சொல் எனின் அதற்குரிய சிங்களச் சொல்லைச் சகல மாணவர்களும் உரத்துக் கூற வேண்டும் என மாணவர்களுக்கு அறிவூட்டல் செய்க.
- இப்போது நாம் வனக்கிராமப் பாடசாலையைப் பார்க்கப் போகிறோம். எதிரே ஒரு நீரோடை இருக்கிறது அதனைக் கடப்போம். நாம் இப்போது காட்டினுள் இருக்கிறோம். அங்கே இருப்பது විදුහල්පති කාර්යාලය (விதுகல்பதி காரியாலய - அதிபர் அலுவலகம் (காரியாலயம்)) என மாணவர்கள் உரத்துக் கூற வேண்டும். இனி நாம் அந்தப் பக்கமாகப் போவோம். இங்கு இருக்கிறது වැසිකිළිය (வசிக்கிலிய - மலசல கூடம்) இனி நாம் எங்கே போவது?. நாம் පුස්තකාලය (புஸ்தகாலய - நூலகம்) பக்கம் போவோம். இனி நாம் எங்கே போவது? පන්ති කාමරය (பந்தி காமறய - வகுப்பறை) பார்க்கப் போவோம். வகுப்பறைக்குப் போகும்போது பூஞ்செடி வேலியினூடாகப் புகுந்து போவோம். அதோ அங்கே பாருங்கள். அங்கே தூரத்தில் இருப்பது ක්‍රීඩා පිට්ටනිය (கிரீடா பிட்டனிய - விளையாட்டு மைதானம்). அதோ முயல்கள் பாய்ந்து பாய்ந்து போகின்றன. நாமும் முயல்போலப் பாய்வோமா? சரியான களைப்பாக இருக்கிறது நாம் இங்கே உட்காருவோம்.

வனகிராமப் பாடசாலையில் நாம் சந்தித்த இடங்கள் எவை எனக் கூறுங்கள். என்றவாறு வினவி மேற்படி சொற்களை மீண்டும் மீண்டும் உச்சரிக்கச் சந்தர்ப்பமளிக்கும் வகையில் மாணவரிடமிருந்து விடைகளைப் பெறுக.

**தேர்ச்சி :- பாடசாலையில் தமது தேவைகளுக்காக நட்புடன் வேண்டுகோள் விடுப்பார்.**

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - 1**

- தரம் - 2 இல் கற்ற நட்புடனான வேண்டுகோள்களை மாணவர்க்கு மீள நினைவூட்டுவதற்காக அதே போன்ற கூற்றுக்களை மாணவரிடம் சில தடவைகள் உச்சரிக்குக.

  உ-ம்:

  | | | |
  |---|---|---|
  | පොත ගන්න. | பொ(த்)த கன்ன | புத்தகம் எடுங்கள் |
  | පැන්සල දෙන්න. | பென்சல தென்ன | பென்சில் தாருங்கள் |
  | අඩිරූල දෙන්න. | அடிரூல தென்ன | அடிமட்டம் தாருங்கள் |

- இவ்வாறாக පෑනක් දෙන්න (பேனக் தென்ன - பேனை தாருங்கள்) எனும் கூற்றை මට පෑන දෙන්න (மட்ட பேன தென்ன - எனக்குப் பேனை தாருங்கள்) எனக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- அக்கூற்றைச் சில தடவை உச்சரிக்கச் சந்தர்ப்பமளிக்குக. பின்னர் අඩිරූල් (அடிமட்டம்), பென்சில், தண்ணீர் போத்தல் போன்ற சொற்களைப் பயன்படுத்தி மேற்படி கூற்றை மீண்டும் மீண்டும் கூற மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

  உ-ம்:

  මට පෑනක් දෙන්න. மட்ட பேனக் தென்ன - எனக்கு பேனை தாருங்கள்.
  මට අඩිරූලක් දෙන්න. மட்ட அடிரூலக் தென்ன - எனக்கு அடிமட்டம் தாருங்கள்.
  මට බෝලයක් දෙන්න. மட்ட போலயக் தென்ன - எனக்கு பந்து தாருங்கள்.
  මට මලක් දෙන්න. மட்ட மலக் தென்ன - எனக்கு பூ தாருங்கள்.

**செயற்பாடு - 2**

- வெவ்வேறு நிறமுள்ள (நீலம், பச்சை, மஞ்சள், வெள்ளை, கறுப்பு) அடிக்கோல், பந்து, மலர், பேனை, புத்தகம் , பென்சில் போன்ற பொருள்களைப் பெறுக.
- அவற்றை வகுப்பின் எதிரே வைக்குக.
- மாணவரை ஒவ்வொருவராக எதிரே அழைத்து, மேலே சேகரித்த பொருட்களுள் ஆசிரியர் குறிப்பிடும பொருளை (பொருட்களை எடுத்துத் தம்மிடம் தர வேண்டும் என அம்மாணவரிடம் கூறுக.

  உ-ம்:

  මට කහ පාට අඩිරූලක් දෙන්න. (மட்ட கஹ பாட்ட அடிரூலக் தென்ன)
  எனக்கு மஞ்சள் நிற அடிமட்டம் தாருங்கள்.
  මට රතු පාට පොතක් දෙන්න. (மட்ட ரது பாட்ட பொதக் தென்ன)
  எனக்கு சிவப்பு நிற புத்தகம் தாருங்கள்.
  මට කොළ පාට පොතක් දෙන්න. (மட்ட கொல பாட்ட பொதக் தென்ன)
  எனக்கு சிவப்பு நிற புத்தகம் தாருங்கள்

**செயற்பாடு - 3**

- பின்வரும் கூற்றுக்கள் இரண்டினதும் பொருளுடன் சரியாக உச்சரிப்பை மாணவர்க்கு அறிமுகம் செய்க.


  ඇතුළට එන්න ද? அத்துலட்ட என்னத? உள்ளே வரலாமா?
  එළියට යන්න ද ? எலியட்ட யன்னத? வெளியே போகலாமா?

- பின்னர், பின்வரும் செயற்பாடுகளில் மாணவரை ஈடுபடுத்தி, இக்கூற்றுக்கான விளக்கத்தைப் பதிக்குக.

- மாணவரைத் திறந்த வெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க. தரையில் ஒரு தடியினால் பெரிய வட்டமொன்று வரைக. சகல மாணவர்களும் வட்டத்தின் வெளியே (படத்தில் காட்டியுள்ளவாறு) அவர்களை இடப்படுத்துக. அல்லது நிறுத்துக.
- ஆசிரியர் வழங்கும் சைகைகளுக்கு அமைய மாணவர்கள் ඇතුළට එන්න ද? (அத்துலட்ட என்னத? - உள்ளே வரலாமா?) என ஆசிரியரிடம் வினவுதல் வேண்டும்.
- அதற்கு விடையாக එන්න (என்ன - வாருங்கள்) என விடையளித்தல் வேண்டும்.
- அதற்கமைய மாணவர்கள் முயல்கள் போன்று வெளியே இருந்து வட்டத்தின் உள்ளே வருதல் வேண்டும்.
- அடுத்ததாக ஆசிரியை வழங்கும் சைகைக்கு அமைய மாணவர்கள் එළියට යන්න ද? (எலியட்ட யன்னத? - வெளியே போகலாமா?) என வினவும் போது ஆசிரியை යන්න (யன்ன - போங்கள்) என விடையளித்தல் வேண்டும். மாணவர்கள் முன்னர் போன்றே முயல் போல் வட்டத்தின் உள்ளே இருந்து வெளியே ஒரே பாய்ச்சலில் பாய்தல் வேண்டும்.
- இவ்வாறாகச் சில தடவைகள் செயற்பாட்டை நடத்துதல், ஆசிரியர்க்குப் பதிலாக ஒரு மாணவரை ஈடுபடுத்திச் செயற்பாட்டைத் தொடர்ந்து வெவ்வேறு பிராணிகளின் நடத்தையைப் போலச் செய்ய மாணவர்க்கு சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரைச் சில குழுக்களாகப் பிரித்து இச்செயற்பாட்டை தொடர்ந்தும் நடத்துக.

செயற்பாடு - 4

- மாணவரைத் திறந்தவெளியான ஓர் இடத்துக்கு அழைத்துச் செல்க.
- படத்தில் காட்டியுள்ளவாறு மாணவரை இரண்டு வரிசைகளில் நிறுத்தி அவ்வரிசைகளுக்கு இடையே நடுவில் சற்றுப் பெரிய வட்டமொன்று வரைக.



- மாணவர் குழுக்களை (வரிசைகளை) A, B எனப் பெயரிடுக.
- A குழு மாணவர்கள், B குழு மாணவர்களிடம் ඇතුළට එන්න ද? (அத்துலட்ட என்னத? - உள்ளே வரலாமா?) என உரத்து வினவுதல் வேண்டும்.
- அப்போது B குழு மாணவர்கள் එන්න (என்ன - வாருங்கள்) என விடை கூறுதல் வேண்டும். அதற்கமைய A குழு மாணவர்கள் வட்டத்தினுள் வர வேண்டும்.
- மீண்டும் A குழு மாணவர்கள் එළියට යන්න ද? (எலியட்ட யன்னத? - வெளியே போகலாமா?) என B குழு மாணவரிடம் வினவுதல் வேண்டும். அப்போது A குழு மாணவர்கள் යන්න (யன்ன - போங்கள்) என விடை கூற வேண்டும். அதற்கமைய A குழு மாணவர்கள் வட்டத்தில் இருந்து வெளியே சென்று தாம் முன்னர் நின்ற இடத்தில் நிற்க வேண்டும்.
- B குழு மாணவர்களையும் இவ்வாறாகவே செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவர்கள் வட்டத்தினுள் செல்வதற்கும் பின்னர் வெளியே வருவதற்கு பிராணிகளின் பயணப் பாங்குகளைப் பயன்படுத்துக.

தேர்ச்சி :- விசேட உற்சவங்களின்போது வாழ்த்துத் தெரிவிப்பார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு - 1**

- பிறந்த தினத்துக்காக வாழ்த்துக்கூறிய விதம் பற்றி மாணவருக்க நினைவூட்டுக. அதற்காகப் பயன்படுத்தும் கூற்று அல்லது வாசகம் பற்றி மாணவரிடம் வினவுக.
  සුබ උපන් දිනයක් වේවා - சுப உபன் தினயக் வேவா (இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்)
- இவ்வாறாக விசேட உற்சவங்களின்போது வாழ்த்துத் தெரிவிக்கலாம் என மாணவரிடம் கூறுக.
  உ-ம்: புத்தாண்டு/ நத்தார்/ றமழான்/ தீபாவளி
- இவற்றுள் முதன்முதலாக புத்தாண்டுக்காக வாழ்த்துத் தெரிவிக்கும் விதத்தை மாணவருக்கு அறிமுகம் செய்க.
  සුබ අලුත් අවුරුද්දක් වේවා - சுப அலுத் அவுறுத்தக் வேவா (இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்)
- இவ்வாறான ஏனைய உற்சவங்களின் போதும் வாழ்த்துத் தெரிவிக்கும் விதத்தை மாணவருக்கு அறிமுகஞ் செய்க.
  සුබ නත්තලක් වේවා சுப நத்தலக் வேவா இனிய நத்தார் வாழ்த்துக்கள்
  සුබ දීපාවලී දිනයක් වේවා சுப தீபாவளி தினயக் வேவா இனிய தீபாவளி வாழ்த்துக்கள்
  සුබ රාමලාන් දිනයක් වේවා சுப ரமழான் தினயக் வேவா இனிய ரம்ழான் வாழ்த்துக்கள்
- மாணவரிடம் வினாக்கள் வினவியபோது அவ்வாழ்த்துத் தெரிவித்தல்களைச் சரியாக இனங் கண்டுள்ளார்களா சரியாகப் பயன்படுத்துகின்றனரா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**செயற்பாடு - 2**

- வகுப்பு மாணவரை நான்கு குழுக்களாகப் பிரிக்குக.
- அக்குழுக்களை புத்தாண்டு, நத்தார், தீபாவளி, றமழான் ஆகிய உற்சவங்களைக் கொண்டாடுவோராகப் பெயரிடுக.
- குழுக்கள் மாறி மாறி வாழ்த்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளிக்குக. (மேலே தரப்பட்டது போன்று)

**செயற்பாடு - 3**

- மாணவரை முகத்தை முகம் நோக்கியவாறு இரண்டு வரிசைகளில் நிறுத்துக.
- புத்தாண்டுக்காக வாழ்த்துத் தெரிவிப்பதற்காக A குழுவின் முதலாவது மாணவன் B குழுவின் முதலாவது மாணவனுக்கு
  සුබ අලුත් අවුරුද්දක් වේවා - சுப அலுத் அவுறுத்தக் வேவா (இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்) என வாழ்த்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
  B குழுவின் முதலாவது மாணவன் அதற்குப் பதிலாக ස්තුතියි - ஸ்துதிய் (நன்றி) எனப் பதிலளித்தல் வேண்டும்.
- இவ்வாறாக B குழுவின் முதலாவது மாணவன் A குழுவின் முதலாவது மாணவனுக்கு சிங்களத்தில் புத்தாண்டு வாழத்துத் தெரிவித்தல் வேண்டும். A வரிசை மாணவன் ස්තුතියි - ஸ்துதிய் (நன்றி) என பதிலளித்தல் வேண்டும்.
- இவ்வாறாக வரிசைகளில் நிற்கும் மாணவர்க்கு வாழ்த்துத் தெரிவிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- மாணவரை இரண்டு வட்டங்களில் நிறுத்தி வைத்து, முன்னர் அறிமுகம் செய்வதற்காக வட்டத்தில் சென்றவாறு, ஆளுக்காள் வாழ்த்துத் தெரிவிக்க மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

**தேர்ச்சி :- விசேட உற்சவங்களின்போது வாழ்த்துத் தெரிவிப்பார்.**

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**


- பின்வரும் மலர்களைக் குறிக்கும் பெயர்களை அவற்றின் பொருளுடன் மாணவருக்கு அறிமுகம் செய்க.

| | | |
|---|---|---|
| அலரிப்பூ | අරලිය | அரலிய |
| ரோஜாப்பூ | රෝස | ரோச |
| மல்லிகைப்பூ | පිච්ච | பிச்ச |
| தாமரைப்பூ | නෙළුම් | நெலும் |


- இம்மலர்களைக் குறிக்கும் பெயர்களைச் சிங்களத்தில் நன்கு உச்சரிக்கும் வரை சில தடவைகள் மீண்டும் மீண்டும் உச்சரிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- இதற்காக இயற்கையான மலர்களைப் பெறுவது நல்லது. உண்மை மலர்களைப் பெற முடியாத போது மாத்திரம் படங்கள், ஒளிப்படங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துக.
- மலர்களை ஒவ்வொன்றாகக் காட்டி, அதன் சிங்களப் பெயரைச் சரியாக உச்சரிக்க வழிப்படுத்துக.

செயற்பாடு - 1


- ரோச, அலரி, மல்லிகை, தாமரை ஆகிய மலர் வகைகளைத் தேடிப் பெறுக.
- மாணவரை நான்கு குழுக்களாகப் பிரித்து நான்கு வகையான மலர்களையும் பிரித்து குழுவுக்கு ஒரு மலர் வகை வீதம் வழங்குக. தேடிப்பெற முடியாத மலர்களுக்காக ஒளிப்படங்கள் அல்லது படங்களைப் பயன்படுத்துக.
- மாணவர் ஒவ்வொருவருக்கும் ஒரு மலர் வீதம் கிடைக்கும் வகையில் மலர்களைப் பகிர்ந்தளிக்குக.




අරලිය (அரலிய) அலரிப்பூ



රෝස (ரோச) ரோஜாப்பூ



පිච්ච (பிச்ச) மல்லிகைப்பூ




නෙළුම් (நெலும்) தாமரைப்பூ

- ஆசிரியர் இந்த நான்கு வகைப்புக்களிலும் ஒவ்வொன்றைத் தம்மிடம் வைத்திருக்க வேண்டும். அதற்கமைய ஆசிரியர் ஒரு பூவைக்காட்டும்போது அம்மலரை வைத்திருக்கும் குழுவின் மாணவர்கள் எழுந்து நின்று மலரை மேலே உயர்த்திக்காட்டி சிங்களத்தில் அதன் பெயரை உரத்துக்கூற வேண்டும்.
- பின்னர் வகுப்பு மாணவர் அனைவரையும் அம்மலரின் பெயரை உச்சரிக்க வழிப்படுத்துக.
- இவ்வாறாக மற்றைய வகை மலர்களை வைத்திருக்கும் குழுக்களுக்கும் தமது குழுவுக்குமுரிய மலரின் பெயரைக் கூறச் சந்தர்ப்பமளிக்குக. மாணவர் குழுக்கள் மலரின் பெயரைச் சரியாகக் கூறும் வேளைகளில் கைதட்டிப் பாராட்டுக.
- பின்னர் குழுக்களுக்கு இடையே மலர்களைப் பரிமாறியவாறு எல்லாக் குழுக்களுக்கும் எல்லா மலர்களின் பெயர்களையும் கூறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற் பாட்டைத் திட்டமிட்டு நடத்துக.

செயற்பாடு - 2


- நான்கு மலர்வகைகளும் உள்ளடங்குமாறு பட அட்டைத் தொகுதிகள் மூன்றினைத் தயாரித்துக் கொள்க. ஒவ்வொரு தொகுதியையும் ஒவ்வொரு பெட்டியில் (3 பெட்டிகளில்) இடுக.
- இனி படத்தில் காட்டியுள்ளவாறு மாணவரை திறந்தவெளியில் ஓர் இடத்துக்கு அழைத்துச் சென்று வட்டமாக நிற்கச் செய்க.
- வட்டத்தில் ஒவ்வொரு இடங்களில் நிற்கும் மூன்று மாணவர்களின் கையில் அம்மூன்று பெட்டிகளையும் கொடுக்குக.




- பின்னர் ஆசிரியை வழங்கும் சைகையின்படி அப்பெட்டிகளை வட்டத்தில் நிற்கும் மாணவர்களிடையே ஆளுக்காள் கைமாற்றி அனுப்புமாறு அறிவுறுத்துக.
- பெட்டிகளை கைமாற்றி அனுப்புபோது இடையிடையே ஆசிரியை சைகை வழங்கியவுடன் அனுப்புவதை நிறுத்துதல் வேண்டும்.
- அச்சந்தர்ப்பத்தில் பெட்டிகளைக் கையில் வைத்திருக்கும் மாணவர் மூவரும் அப்பெட்டிகளிலிருந்து ஒரு மலர் அட்டை வீதம் வெளியே எடுத்து, அப்படத்தில் உள்ள மலரின் பெயரைச் சிங்களத்தில் உரத்துக்கூற வேண்டும்.
- எவரேனும் மாணவருக்கு மலரின் பெயரைச் சரியாகக் கூற முடியாமல் போகுமாயின், சரியான பெயரைக் கூறுவதற்கு மற்றைய மாணவர்களுக்கு சந்தர்ப்பமளிக்குக.
- மீண்டும் முன்னர் போன்றே ஆசிரியரின் சைகைப்படி பெட்டியை ஆளுக்காள் கைமாற்றி அனுப்பியவாறு செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்தும் மாணவர் ஒவ்வொருவருக்கும் பெட்டியிலிருந்து மலர் ஒன்றினை வெளியே எடுத்து அதன் பெயரைச் சிங்களத்தில் கூறுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற்பாட்டைத் திட்டமிட்டுக் கொள்க.

செயற்பாடு - 3

- நான்கு மலர்வகைகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் வகையில் வகுப்பில் உள்ள மாணவர் தொகைக்குப் போதுமானவாறு கீழே காட்டப்பட்டுள்ளது போன்று மலர்களின் படங்கள் அடங்கிய மாலைகள் தயாரித்துக் கொள்க.



- மாணவரை அரைவட்டத்தில் நிறுத்துக. ஆசிரியை மலர் வகையொன்றின் பெயரைக் கூறியவுடன் அம்மலர் வகை அடங்கியுள்ள மாலைகளை அணிந்திருப்போர் எதிரே வந்து ஒரு மாலை போன்று கைகோர்த்து நின்று, தாம் மாலையாக அணிந்திருக்கும் மலரின் பெயரை உரத்துக் கூறுதல் வேண்டும்.



- அம்மாணவர்களை மீண்டும் அரைவட்டத்தில் சேர்ந்துக் கொள்ளுமாறு அனுப்புக. பின் மற்றுமொரு மலரின் பெயரை ஆசிரியை கூறியவுடன் அவ்வகை மலரை அணிந்துள்ள மாணவர்கள் முன்னே வந்து, தமது மலரின் பெயரைச் சிங்களத்தில் உரத்துக்கூறிக் கைகோர்த்து ஒரு மாலைபோன்று வட்டமாக நிற்க வேண்டும்.
- இவ்வாறாக எல்லா மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் மாலைகள் அணிந்திருக்கும் மாணவர்கள் ஏனைய மாணவர்களிடையே பரிமாற்றப்படும் வகையிலும் செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துக.

**தேர்ச்சி :- அயற்சூழலில் உள்ள பழங்களை இனங்கண்டு கூறுவார்.**

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**


- அன்னாசி, மா, வாழை, பப்பாசி, தோடை ஆகிய பழங்களை வகுப்பறைக்கு கொண்டு வருக.

| | | |
|---|---|---|
| அன்னாசிப்பழம் | අන්නාසි | அன்னாசி |
| மாம்பழம் | අඹ | அம்ப |
| வாழைப்பழம் | කෙසෙල් | கெசேல் |
| பப்பாசிப்பழம் | පැපොල් | பெப்போல் |
| தோடம்பழம் | දොඩම් | தொடம் |

- பின்னர் அவற்றை ஒவ்வொன்றாகக் காட்டி அப்பழங்களின் சிங்களப் பெயர்களை அறிமுகம் செய்க. சொற்கள் பரிச்சயமாகும் வரையில் சில தடவைகள் உச்சரித்துக் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர், மாணவரை ஒவ்வொருவராக எதிரே அழைத்து 5 பழவகைகளுள் தாம் விரும்பும் ஒரு பழத்தைத் தெரிவு செய்து அதன் பெயரைச் சிங்களத்தில் கூறச் சந்தர்ப்பமளிக்குக. இவ்வாறாக சில மாணவர்களுக்கு தாம் விரும்பும் பழவகையைச் சிங்களத்தில் கூறச் சந்தர்ப்பமளிக்குக. ஏனைய மாணவர்களுக்கு தாம் விரும்பும் பழத்தை சிங்களத்தில் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- செயற்பாட்டின் இறுதியில் மாணவர்க்கு பழங்களைச் சுவைக்க/ உண்ண சந்தர்ப்பமளிக்குக.

செயற்பாடு - 2

- மாணவருக்கு களி/ வெண்களி அல்லது அதுபோன்ற ஒரு மூலப்பொருளைப் பயன்படுத்தி மாம்பழம், தோடம்பழம், வாழைப்பழம், அன்னாசிப்பழம், பப்பாசிப்பழம் ஆகிய பழங்களின் மாதிரியுருக்களை ஆக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- அப்பழங்களுக்குப் பொருத்தமானவாறு நிறந்தீட்ட வழிப்படுத்துக.
- அவை நன்கு உலர்ந்த பின்னர் ஒருவருக்கு இரு பழம் வீதம் அடங்குமாறு குழுக்களுக்கு இடையே மாதிரிப் பழங்களைப் பகிர்ந்தளிக்குக.
- அப்பழ வகை மாதிரியை மூடுவதற்கு ஏற்ற பெட்டியை பிளத்திக்கு கிண்ணத்தை குழுவுக்கு ஒன்றாக வழங்குக.



- பின்னர் அந்தந்தக் குழுவில் ஒரு மாணவரின் கண்களை மூடிக்கொள்ளுமாறு கூறுக. அவ்வாறு கண்களை மூடிக்கொண்டிருக்கும்போது பெட்டிகளை இடமாற்றுமாறுக் கூறுக.
- கண்களை மூடிக்கொண்டிருக்கும் மாணவனுக்குக் கண்களைத் திறக்குமாறு கூறி யாதேனும் ஒரு பெட்டியைக் காட்டி அதில் இருப்பது என்ன பழம் என அனுமானிக்க முடியுமா என வினவுக.

- மாணவன் யாதேனும் பழத்தின் பெயரைச் சிங்களத்தில் கூறியவுடன் பெட்டியைத் திறந்து கூறிய பெயர் சரியானதா என உறுதிப்படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பமளிக்குக.
- அப்பழத்தின் பெயரைக் குழுவின் அனைவரும் கூட்டாக உரத்து சிங்களத்தில் கூறச் சந்தர்ப்பமளிக்குக.
- இவ்வாறாக குழுவின் அனைவருக்கும் பழத்தின் பெயரைச் சிங்களத்தில் கூறச் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற்பாட்டைத் தொடர்ந்தும் நடத்துக.

செயற்பாடு - 3

- மேற்குறிப்பிட்ட ஐந்து பழங்களையும் காட்டும் 5 பொய் முகங்களை ஆக்கிக் கொள்க. வகுப்பறையில் பொருத்தமான ஓர் இடத்தில் ஒரு திசையை அமைத்துக் கொள்க.
- மாணவர் ஐவருக்கு அப்பொய் முகங்களை அணிவித்து ... பின்னால் மற்றைய மாணவர்கள் காணாதவாறு அமர்ந்திருக்குமாறு கூறுக.
- ஆசிரியரின் அறிவுறுத்தல்களின்படி தடவைக்கு ஒரு மாணவன் (பழம்) வீதம் வகுப்பு மாணவர் காணக்கூடியதாக எழுந்து நிற்குமாறு கூறுக.
- அம்மாணவன் எழுந்து நிற்கும்பொது அவர் அணிந்துள்ள பொய் முகத்தினால் காட்டப்படும் பழத்தின் பெயரைச் சிங்கள மொழியில் ஏனைய மாணவர்கள் கூறுதல் வேண்டும்.
- வகுப்பு மாணவர்கள் ஐந்து பழங்களின் பெயர்களையும் சிங்களத்தில் நன்கு உச்சரித்து பரிச்சயத்தைப் பெறும் வரையில் இச்செயற்பாட்டைக் களிப்பூட்டத்தக்க வகையில் திட்டமிட்டுக் கொள்க.
- பொய் முகமணிந்து திரையின் பின்னால் இருந்து செயற்படுவதோடு ஏனைய மாணவர்க்கும் சந்தர்ப்பமளிக்குக.

**தேர்ச்சி :- உடலின் உறுப்புக்கள் சிலவற்றை இனங்கண்டு கூறுவார்.**

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**


- ஆசிரியை தனது உடலில் தலை, கை, கால், வயிறு, முகம் ஆகிய பகுதிகளைச் சுட்டிக்காட்டி சிங்களமொழியில் அவற்றின் பெயர்களை அறிமுகம் செய்க.

| | | |
|---|---|---|
| தலை | හිස | ஹிச |
| கை | අත | அத்த |
| கால் | කකුල | கக்குல |
| வயிறு | බඩ | ப(B)ட(d) |
| முகம் | මුහුණ | முகுண |

- இப்பகுதிகளைச் சில தடவைகள் அறிமுகம் செய்து மாணவர்கள் இச்சொற்களை நன்கு விளங்கியுள்ளமையை உறுதிப்படுத்திக் கொள்க.
- பின்னர் ஆசிரியை, கரும்பலகையில் தொங்கவிடப்பட்டுள்ள தாளில் பொருத்தமான இடத்தில் அப்பகுதியை ஒட்டுக. பின்னர் மேலுமொரு உடற்பகுதியை எடுத்து அதன் பெயரை சிங்களத்தில் கூறுமாறு மாணவரை வழிப்படுத்துக. மாணவர் விடையைக் கூறிய பின்னர், முன்னர் போன்றே அப்பகுதியைக் கரும்பலகையில் உள்ள தாளில் உரிய இடத்தில் ஒட்டுக.
- இவ்வாறு படத்தில் சகல பகுதிகளையும் ஒட்டி உருவத்தைப் பூர்த்தி செய்க.
- பின்னர் ஆசிரியை மேற்படி உடலின் பகுதிகளைச் சுட்டிக்காட்டும்போது மாணவர்கள் அவற்றின் பெயரைச் சிங்களத்தில் உரத்துக்கூற வழிப்படுத்துக.
- பின்னர் ஆசிரியை அந்த உடற்பகுதிகளை சிங்ளத்தில் ஒவ்வொன்றாக கூறும்போது தமது உடலில் அந்தந்தப் பகுதிமீது கையை வைத்துக் காட்டுமாறு மாணவருக்கு கூறுக.

செயற்பாடு - 2

- பின்வருவது போன்ற ஒரு படம் வரைந்து ஆளுக்கொன்று கிடைக்குமாறு போதிய அளவு பிரதிகள் தயாரித்துக் கொள்க.



- அப்படத்தில் தலை, கைகள், வயிறு, கால்கள் ஆகிய பகுதிகளை வெவ்வேறாக வெட்டியெடுக்குக.
- மாணவர் ஒவ்வொருவரும் அப்படத்தை மீள உருவாக்குவதற்காக போதுமான அளவுள்ள ஒரு கடதாசியை வழங்குக.
- ஆசிரியை உடலின் பகுதி படங்களை சற்றுப் பெரிதாக வரைந்து கொள்க. அவற்றை ஒட்டுவதற்குப் போதுமான அளவுள்ள வெற்றுத்தாளொன்றைக் கரும்பலகையில் தொங்கவிட்டுக் கொள்க.
- ஆசிரியை உடற்பகுதிகளின் படங்களை ஒவ்வொன்றாக எடுத்து (உ-ம்: தலையை எடுத்து) அதன் மூலம் காட்டப்படுவது யாது என வினவி விடையைச் சிங்களத்தில் பெறுக.
- மாணவர் அனைவருக்கும் அச்சிங்களச் சொல்லை உச்சரிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- பின்னர் மாணவருக்கு தமது கடதாசியில் அப்படப் பகுதியை ஒட்டுமாறு அறிவுறுத்துக.

கருப்பொருள் :- தமது நண்பர்களுடன் நட்புடன் உரையாடுவார்.

**கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள்**


**செயற்பாடு - I**

- முதலாம், இரண்டாம் தரங்களில் கற்ற சொற்களைப் பயன்படுத்தி சிறு உரையாடல்களை அமைத்துக் கொள்ளுங்கள்.
- மாணவரைக் குழுக்களாகப் பிரித்து, அவ்வாறான உரையாடல்களைக் கட்டியெழுப்புமாறு கூறி, தேவையான வழிகாட்டல்களை வழங்குக.
- ஏனைய மாணவர்களின் எதிரே அவ்வுரையாடல்களை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
  உரையாடல்கள் - உதாரணம்:


1.




2.


ආයුබෝවන් (ஆயூபோவன்) வணக்கம்
ආයුබෝවන් (ஆயூபோவன்) வணக்கம்
එන්න ඉඳගන්න (என்ன, இந்தகன்ன) வாருங்கள், உட்காருங்கள்
ස්තුතියි (ஸ்தூதிய்) நன்றி
(කොහොමද සැප සනීප ?) கொஹொமத ஸெபஸனீப? (எப்படி சுகம்?)
(හොඳින් ඉන්නවා) (ஹொந்தின் இன்னவா/ சுவென் சிட்டினவா?) (நல்ல சுகம்)

3.



සමන් ඇතුළට එන්න. சமன் எத்துலட்ட என்ன? (சமன் உள்ளே வாருங்கள்)
ස්තුතියි (ஸ்தூதிய்) நன்றி
දීපාවලී සුබ පැතුම් தீபாவளி சுப பெதும் (தீபாவளி வாழ்த்துக்கள்)
ස්තුතියි (ஸ்தூதிய்) நன்றி
(ඉඳගන්න.) இந்தகன்ன (உட்காருங்கள்/இருங்கள்)

4.



කුමාර් එන්න.
குமார் என்ன
(குமார் வாருங்கள்)
ඉඳගන්න. இந்தகன்ன
(உட்காருங்கள்/இருங்கள்)
ස්තුතියි.
(ஸ்துதிய்)
நன்றி
වතුර ටිකක් දෙන්න.
வத்துர டிக்கக் தென்ன
(தண்ணீர் கொஞ்சம் தாருங்கள்)
මෙන්න වතුර බොන්න.
மென்ன வத்துர, பொன்ன
(இதோ தண்ணீர், குடியுங்கள்)
ස්තුතියි.
(ஸ்துதிய்)
நன்றி


5.



මෙහේ සිටගන්න.
மெஹே சிடின்ன
(இங்கே நில்லுங்கள்)
හරි සර් (ஹரி சேர்)
சரி டீச்சர்




පේලියට හිටගන්න.
பேலியட்ட ஹிட்டகன்ன
(வரிசையாக நில்லுங்கள்)




- இவ்வாறாக இலக்கம் பத்து வரையில் வினவியவாறு உரையாடலைக் கட்டியெழுப்பலாம்.

**தேர்ச்சி :- இலகுவான பாடல்களை அபிநயத்துடன் பாடுவார்.**

**கற்றல் - கற்பித்தல் அணுகுமுறைகள்**

**செயற்பாடு 1**

- மாணவர்களுக்கு பரீட்சயமான சிறிய சிங்களப் பாடலைப் பாடிக்காட்டி மாணவர்களையும் சேர்ந்து பாட வழிப்படுத்துக.

  எடுத்துக்காட்டு: பாடல்

| | |
|---|---|
| අම්ම තාත්තා අයියා අක්ක මං<br>அம்மா தாத்தா அய்யா அக்கா மங் | அம்மா அப்பா அண்ணா அக்கா நான் |
| හරි සතුටෙන් ගෙදර ඉන්නෙ දැං<br>ஹரி சதுட்டென் கெதர இன்னே தென் | வீட்டில் மிக மகிழ்ச்சியாக இருக்கிறோம் இப்போது |
| අම්මා බත් උයනවා - තාත්තා වැඩ කරනවා<br>அம்மா பத் உயனவா - தாத்தா வெட கரனவா | அம்மா சோறு சமைக்கிறார் அப்பா வேலை செய்கிறார் |
| අයියා අක්කා එක්කලා - මම සෙල්ලම් කරනවා<br>அய்யா அக்கா எக்கலா - மம செல்லம் கரனவா | அக்கா அண்ணாவுடன் நான் விளையாடுகிறேன் |
| අම්මා තාත්තා අයියා අක්කා මං<br>அம்மா தாத்தா அய்யா அக்கா மங் | அம்மா அப்பா அண்ணா அக்கா நான் |
| හරි සතුටෙන් ගෙදර ඉන්නෙ දැං<br>ஹரி சதுட்டென் கெதர இன்னே தென் | வீட்டில் மிக மகிழ்ச்சியாக இருக்கிறோம் இப்போது |

| | | | |
|---|---|---|---|
| 1. | කළු මාමගෙ කළු ගොනා | கலு மாமகே கலு கொனா | கறுத்த மாமாவின் கறுத்த காளை |
| | කන්ද පහළ පෙරළුනා | கந்த பஹல பெரலுனா | மலையிலிருந்து கீழே புரண்டது |
| | ඒක දැකපු සුදු ගොනා | ஏக தெகபு சுது கொனா | அதைக் கண்ட வெள்ளைக் காளை |
| | පෙරලි පෙරලි හිනැහුනා | பெரலி பெரலி ஹினஹுனா | புரண்டு புரண்டு சிரித்தது |

| | | |
|---|---|---|
| 2. | පුංචි ඔරුව හෙමින් හෙමින් පාවී එනවා<br>புஞ்சி ஒருவ ஹெமின் ஹெமின் பாவீ எனவா | சின்ன ஓடம் மெல்ல மெல்ல மிதந்து வருகுது |
| | පුංචි පුංචි රැලිමාලා විසිරී යනවා<br>புஞ்சி புஞ்சி ரலிமாலா விசிறீ யனவா | சின்னச் சின்ன அலைத்தொடர்கள் பரவிச் செல்லுது |
| | පුංචි පුංචි මාළු පැටව් වෙරළට එනවා<br>புஞ்சி புஞ்சி மாலு ப(ட்)டவ் வெரல(ட்)ட எனவா | சின்னச் சின்ன மீன் குஞ்சுகள் கரைக்கு வருகுது |
| | පුංචි අපේ සිත සතුටින් ඉපිලී යනවා<br>புஞ்சி அபே சித சது(ட்)டின் இபிலீ யனவா | சிறுவர் எங்கள் மனங்களிலே மகிழ்ச்சி பொங்குது |
| 3. | හඳ හාමී හැංගි හැංගි එබිල බලනවා<br>ஹ(ந்)த ஹாமி ஹங்கி ஹங்கி எபில (ழ)பலனவா | சந்திரன் மாமா ஒளிந்து ஒளிந்து எட்டிப் பார்க்குது |
| | අහසේ ඈත වටකුරුවට සුදට පේනවා<br>அஹசே அ(த்)த வட குருவட சுதட பேனவா | தூர வானில் வட்ட வடிவில் வெள்ளையாகத் தெரியுது |
| | රන් තැටියට කිරියි පැණියි අරගෙන එනවා<br>ரன் த(ட்)டியட கிரிய் பனிய அர(பு)கென எனவா | தங்கத் தட்டில் பாலும் தேனும கொண்டு வருகுது |
| | පුංචි අපට ඉන් ටික ටික දීලා යනවා<br>புஞ்சி அப(ட்)ட இன் டி(க்)க டி(க்)க தீலா யனவா | சிறுவர் எமக்கு கொஞ்சம் கொஞ்சம தந்து செல்லுது |

- ஆரம்பத்தில் புத்தளிப்புக்கருவிகளுடன் பாடிய மாணவர்களை புத்தளிப்புக்கருவி இன்றி தனித்தனியாகவும் குழுவாகவும் பாடவழிப்படுத்துக.

### வருடம் முழுவதும் கவனம் செலுத்த வேண்டிய சொற்கள்

| | | |
|---|---|---|
| මම | மம | நான் |
| මට | மட்ட | எனக்கு |
| මගෙ | மகே | எனது |
| කොහේ ද? | கொஹெத? | எங்கே |
| එහේ | எஹெ | அங்கே |
| මෙහේ | மெஹெ | இங்கே |
| මොකක් ද? | மொகத்த | என்ன? |
| මේ | மே | இது |
| අර | அற | அது |
| ඔබගේ | ஒபகே | உங்கள் |
| මොකක් ද?/කොහේ | மொகத்த? / கொஹெ | எது |
| තිබෙන්නේ/තිබේ | திபென்னே / திபே | உள்ளது |

*பாடத்திட்டத்தில் தரப்பட்டுள்ள சொற்கள் மற்றும் சொற்றோடர்கள் பேசுவதற்காகவே அன்றி எழுதுவதற்கல்ல.*

*குறிப்பு :* தரம் மூன்றிற்கான இரண்டாம் மொழிப் பாட **(சிங்களம்)** கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளில் ஈடுபடும் போது தரம்1, தரம் 2 இரண்டாம் தேசிய மொழிப் பாடத்திட்டத்தில் இடம் பெற்ற சொற்களையும் சொற்பிரயோகங்களையும் பொருத்தமானவாறு பயன்படுத்துக

தரம் 1 இரண்டாம் தேசிய மொழிப் பாடத்திட்டத்தில் (சிங்களம்) இடம்பெற்றள்ள சொற்களும் கொற்பிரயோகங்களும்

| | | |
|---|---|---|
| ආයුබෝවන් | ஆயுபோவன் | (வணக்கம்) |
| நான் .......... | නාන් ................ | (මම ..............) |
| எனது பெயர் ........... | එනදු පෙයර් ............. | (මගේ නම .............) |
| | | |
| ගන්න | Gகன்ன | (எடுங்கள்) |
| දෙන්න | dh தென்ன | (தாருங்கள்) |
| යන්න | யன்ன | (போங்கள்) |
| එන්න | என்ன | (வாருங்கள்) |
| කියන්න | கியன்ன | (சொல்லுங்கள்) |
| ගයන්න | Gகயன்ன | (பாடுங்கள்) |
| බලන්න | Bபளன்ன | (பாருங்கள்) |
| ලියන්න | லியன்ன | (எழுதுங்கள்) |

| | | |
|---|---|---|
| හිනාවෙන්න | ஹினாவென்ன | (சிரியுங்கள்) |
| නැගිටින්න | நெGகிட்டின் | (எழும்புங்கள்) |
| වාඩිවෙන්න | வாடிவென்ன | (இருங்கள்) |
| අත්පුඩි ගසන්න | அப்புடிGகசன்ன | (கை தட்டுங்கள்) |
| දුවන්න | dhதுவன்ன | (ஓடுங்கள்) |
| නවතින්න | நவ(த்)தின்ன | (நில்லுங்கள்) |
| උඩපනින්න | உடபனின்ன | (துள்ளுங்கள்) |

| | | |
|---|---|---|
| ඔබේ නම මොකක් ද ? | ஒபே நம மொகத்த? | (உங்கள் பெயர் என்ன?) |
| ඔබේ ගම කොහේ ද ? | ஒபே கம கொஹேத | (உங்கள் ஊர் எது?) |
| මගේ ගම ................. | மகே கம | (எனது ஊர்) |

| | | |
|---|---|---|
| එක | எ(க்)க | (ஒன்று) |
| දෙක | தெ(க்)க | (இரண்டு) |
| තුන | துன | (மூன்று) |
| හතර | ஹதற | (நான்கு) |
| පහ | பஹ | (ஐந்து) |

| | | |
|---|---|---|
| නිල් පාට | நில் பா(ட்)ட | (நீல நிறம்) |
| කොළ පාට | கொள பா(ட்)ட | (பச்சை நிறம்) |
| කහ පාට | கஹ பா(ட்)ட | (மஞ்சள் நிறம்) |
| සුදු පාට | சுது பா(ட்)ட | (வெள்ளை நிறம்) |
| කළු පාට | களு பா(ட்)ட | (கறுப்பு நிறம்) |

**தரம் 2 இரண்டாம் தேசிய மொழிப் பாடத்திட்டத்தில் (சிங்களம்) இடம்பெற்றள்ள சொற்களும் கொற்பிரயோகங்களும்**

| | | |
|---|---|---|
| සුබ උපන් දිනයක් වේවා | சு(B)ப உ(P)பன் (TH)தினய(K)க் வேவா | (பிறந்தநாள் வாழ்த்துக்கள்) |
| ස්තුතියි | (S)ஸ்து(TH)திய் | (நன்றி) |

| | | |
|---|---|---|
| පොත ගන්න. | (P)பொத(TH) கன்ன | (புத்தகம் எடுங்கள்) |
| පැන්සල දෙන්න. | (P)பென்(S)சல (TH)தென்ன | (பென்சில் தாருங்கள்) |
| මෙහෙ එන්න | (M)மெஹே என்ன | (இங்கே வாருங்கள்) |
| එහෙ යන්න. | எஹே யன்ன | (அங்கே போங்கள்/செல்லுங்கள்) |
| මෙහෙ බලන්න | (M)மெஹே (B)பலன்ன | (இங்கே பாருங்கள்) |
| අතනින් ඉඳගන්න | அ(TH)தனின் இந்த(G)கன்ன | (அங்கே இருங்கள்) |
| අතනට දුවන්න | அதன(DH)ட துவன்ன | (அங்கே ஓடுங்கள்) |
| මෙහෙ නවතින්න | (M)மெஹே நவதின்ன | (இங்கே நில்லுங்கள்) |

| | | |
|---|---|---|
| අම්මා | அம்மா | (அம்மா) |
| තාත්තා | தாத்தா | (அப்பா) |
| අක්කා | அக்கா | (அக்கா) |
| අය්යා | அய்யா | (அண்ணா) |
| නංගී | நங்கி | (தங்கை) |
| මල්ලි | மல்லி | (தம்பி) |

| | |
|---|---|
| ඔයාගේ අම්මාගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே அம்மாகே நம மொகக்(DH)த?<br>(உங்கள் அம்மாவின் பெயர் என்ன?) |
| මගේ අම්මාගේ නම .................... | ம(G)கே அம்மா(G)கே நம ....................<br>(எனது அம்மாவின் பெயர் ...........) |
| ඔයාගේ තාත්තාගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே தாத்தா(G)கே நம மொகக்த?<br>(உங்கள் அப்பாவின் பெயர் என்ன?) |
| මගේ තාත්තාගේ නම .................... | மகே தாத்தாகே நம ............<br>(எனது அப்பாவின் பெயர் ...........) |
| ඔයාගේ අයියාගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே அய்யா(G)கே நம மொகக்த?<br>(உங்கள் அண்ணாவின் பெயர் என்ன?) |
| මගේ අයියාගේ නම .................... | ம(G)கே அய்யா(G)கே நம .............<br>(எனது அண்ணாவின் பெயர் ...........) |
| ඔයාගේ අක්කාගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே அக்கா(G)கே நம மொகக்த?<br>(உங்கள் அக்காவின் பெயர் என்ன?) |
| මගේ අක්කාගේ නම .................... | ம(G)கே அக்கா(G)கே நம ..........<br>(எனது அக்காவின் பெயர் ...........) |
| ඔයාගේ නංගිගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே நங்கி(G)கே நம மொகக்த?<br>(உங்கள் தங்கையின் பெயர் என்ன?) |
| මගේ නංගිගේ නම .................... | ம(G)கே நங்கி(G)கே நம ...........<br>(எனது தங்கையின் பெயர் ...........) |
| ඔයාගේ මල්ලිගේ නම මොකක් ද ? | ஒயா(G)கே மல்லி(G)கே நம மொகக்த?<br>(உங்கள் தம்பியின் பெயர் என்ன?) |
| මගේ මල්ලිගේ නම .................... | ம(G)கே மல்லி(G)கே நம ..........<br>(எனது தம்பியின் பெயர் ...........) |
| මට අක්කා කෙනෙක් නැහැ | மட்ட அக்கா கெனெக் நெஹெ<br>(எனக்கு அக்கா இல்லை) |

| | | |
|---|---|---|
| එක | எ(K)க | (ஒன்று) |
| දෙක | தெ(K)க | (இரண்டு) |
| තුන | து(TH)ன | (மூன்று) |
| හතර | ஹ(TH)தர | (நான்கு) |

| | | |
|---|---|---|
| පහ | (P)பஹ | (ஐந்து) |
| හය | (H)ஹய | (ஆறு) |
| හත | ஹ(TH)த | (ஏழு) |
| අට | அ(TA)ட | (எட்டு) |
| නවය | நவய | (ஒன்பது) |
| දහය | (DH)தஹய | (பத்து) |
| අහස නිල් පාටයි | அஹ(S)ஸ நில் பா(T)ட்டய் | (வானம் நீல நிறம்) |
| කොළය කොළ පාටයි | (K)கொலய (K)கொல பா(T)ட்டய் | (இலை பச்சை நிறம்) |
| කෙසෙල් කහ පාටයි | கெ(S)செல் கஹ பாட்டய் | (வாழைப்பழம் மஞ்சள் நிறம்) |
| කොකා සුදු පාටයි | கொ(K)கா (S)சுது பாட்டய் | (கொக்கு வெள்ளை நிறம்) |
| කපුටා කළු පාටයි | கபு(T)டா களு பாட்டய் | (காகம் கறுப்பு நிறம்) |
| ජම්බු රතු පාටයි | ஜம்பு ர(TH)து பாட்டய் | (ஜம்பு சிவப்பு நிறம்) |

| | | |
|---|---|---|
| සැප දුක් කොහොම ද ? | (S)செப (DH)துக் கொஹொம(DH)த | (எப்படிச் சுகம்?) |
| සුවෙන් සිටිනවා | (S)சுவென் (S)சிடினவா? | (நல்ல சுகம்) |

| | | |
|---|---|---|
| පැන්සල | (P)பென்(S)சல | (பென்சில்) |
| පොත | (P)பொத | (புத்தகம்) |
| මේසය | (M)மேசய | (மேசை) |
| පුටුව | (P)புடுவ | (கதிரை) |
| අඩිකෝදුව | அடி(K)கோ(DH)துவ | (அடிமட்டம்) |

| | | |
|---|---|---|
| ඉඳිආප්ප | இந்(DH)தியாப்ப | (இடியப்பம்) |
| පිට්ටු | (P)பிட்(T)டு | (பிட்டு) |
| බත් | (B)பத் | (சோறு) |
| කිරිබත් | (K)கிரி(B)பத் | (பாற்சோறு) |
| ආප්ප | ஆப்(P)ப | (அப்பம்) |

| | | |
|---|---|---|
| බල්ලා | (B)பல்லா | (நாய்) |
| පූසා | (P)பூ(S)சா | (பூனை) |
| කපුටා | (K)கபு(T)டா | (காகம்) |
| ගිරවා | (G)கிரவா | (கிளி) |
| ලේනා | லேனா | (அணில்) |

# 5.0 மாணவரது முன்னேற்றத்தைக் கணிப்பிடல்

## 1.0 அறிமுகம்

ஆரம்பத் தரங்களில் கற்கும் மாணவர்களுக்காக, விளைதிறன்மிக்க கற்றல் அனுபவங்களை ஒழுங்குசெய்யும் ஆசிரியர், தமது மாணவர்கள் கற்றலில் காட்டும் இடர்ப்பாடுகள், திறமைகள் பற்றிய தெளிவான விளக்கத்தைப் பெற்றிருத்தல் அவசியமாகும். அதற்கமைய வகுப்பறையில் இருக்கும் ஒவ்வொரு மாணவருக்கும் பொருத்தமானவாறு கற்றல் முறைகளை ஒழுங்குபடுத்தலாம். இந்தப் பரந்த நோக்குடன் வகுப்பறையில் மாணவரது முன்னேற்றம் குறித்து இடையறாது தகவல் சேகரிக்கும் செயன்முறையே கணிப்பீடு எனலாம். மாணவரைக் கண்டறிதல், அறிவுறுத்தல் வழங்குதல், சான்றிதழ் வழங்குதல், ஆராய்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புடைய நோக்கங்கள் இவற்றுள் முக்கியமானவையாகும். எனினும் ஆரம்பத் தரங்களில் குறிப்பாக கண்டறிதல், அறிவுறுத்தல் வழங்குதல் ஆகிய பணிகளை அடிப்படையாகக் கொண்டே கணிப்பீடு நடத்தப்படுகிறது. ஆரம்பத் தரங்களில் கற்கும் மாணவர்கள் பல இடர்ப்பாடுகளைக் காட்டுவதுண்டு. ஆசிரியர் கற்பிக்கும் வேளையிலேயே அவற்றை இனங்கண்டு தீர்வு வழங்குதல் அவசியமாகும். தமது வகுப்பிலுள்ள ஒவ்வொரு பிள்ளையும் குறிப்பாக எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்கண்டு அவ்வொவ்வொரு மாணவருக்கும் பொருத்தமானவாறு கற்றல் நடவடிக்கைகளை ஒழுங்குசெய்வதற்கு இது துணையாகும். அதன் மூலம் ஆசிரியரால் ஒவ்வொரு மாணவரையும் கலைத்திட்டத்தினால் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளின்பால் இட்டுச்செல்ல முடியும். மாணவரை முதலாமவர், இரண்டாமவர் எனத் தரவரிசைப்படுத்துதல், திறமைமிக்க மாணவர்கள், திறமை குறைந்த மாணவர்கள் என வகைப்படுத்துதல் போன்றவை ஆரம்பத் தரங்களில் கணிப்பீடு நடத்தப்படுவதன் நோக்கங்களல்ல.

## 2.0 மாணவர்களைக் கணிப்பீடு செய்வதற்காகப் பயன்படுத்தத்தக்க நுட்ப முறைகள்

மாணவரைக் கணிப்பீடு செய்வதற்காகப் பயன்படுத்தத்தக்க நுட்ட முறைகளைப் பிரதானமாக இரண்டு விடயங்களுக்கமைய எடுத்துக்காட்டலாம்.

### 2.1 மாணவரது முன்னேற்றத்தை முறைமையாகக் கணிப்பிடுதல்

கற்பித்தல் செயன்முறையைத் தற்காலிகமாக நிறுத்தி, முன்னாயத்தத்துடனும் திட்டமிட்ட வகையில் முழுக் கவனத்தையும் அதன்பால் செலுத்திச் செய்யப்படும் கணிப்பீடு முறைமையான கணிப்பீடு ஆகும். இதற்காக முறைமையான சோதனைகளும், செயற்பாடுகளும் தயாரிக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்காக ஆரம்பத் தரங்களில் கற்பிக்கும் ஆசிரியரின் பயன்பாட்டிற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள “முறைமையான சோதனைகளைத் தயாரிப்பதற்குரிய வழிகாட்டல் கோவை” யைப் பயன்படுத்தலாம்.

### 2.2 மாணவரது முன்னேற்றத்தை முறைசாராத வகையில் கணிப்பிடுதல்

இங்கு மாணவர்கள் கற்றலில் ஈடுபட்டிருக்கையிலேயே அதற்குப் பங்கம் விளையாத வகையில் தகவல் சேகரிக்கப்படும். இதற்காகப் பிரதானமாக வினாக்கள் வினவுதல், தனித்தனி மாணவருடனோ, மாணவர் குழுக்களுடனோ கலந்துரையாடுதல், மாணவர்கள் வேலையில் ஈடுபட்டிருக்கும்போது அவர்களது வேலைகளை அவதானித்துத் தகவல் சேகரித்தல், மாணவரது வீட்டு வேலைகளை மதிப்பீடு செய்தல் போன்ற நுட்பமுறைகள் பயன்படுத்தப்படும். இங்கு ஆசிரியரின் வாண்மை மிக முக்கியமானது. ஆசிரியர் எப்போதும் மிகச்சரியான தீர்மானங்களையே எடுக்க வேண்டுமாதலால் அது குறித்துக் கவனத்துடன் செயற்படுதல் முக்கியமானதாகும். முறைசாரா நுட்ப முறைகளினூடாக மாணவர் தொடர்பான விரிவான, பண்பு ரீதியான தகவல்கள் கிடைக்கின்றமையால் அவற்றைக் கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்காக விளைதிறன்மிக்க

வகையில் பயன்படுத்த வாய்ப்புக் கிடைக்கும். மாணவர் தொடர்பாக ஆசிரியர் முறைமையின் வகையில் எடுக்கும் தீர்மானங்களின் நம்பகத்தன்மை மிக உயர்வானது என்று பல ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது.

## கணிப்பீட்டுப் வடிவங்கள்

கணிப்பீட்டை, கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நடத்தலாம். அதற்கமைய கணிப்பீட்டுச் செயன்முறையை இறுதிநிலைக் (Summative) கணிப்பீடு, தொடர் (Formative) கணிப்பீடு என வகைப்படுத்தலாம்.

**இறுதிக் கணிப்பீடு**

குறித்த ஒரு கற்றல் கட்டத்தின் முடிவில், மாணவர்கள் தமது கற்றலை எந்தளவு வெற்றிகரமாக அடைந்துள்ளனர் என்பதைப் பரீட்சித்தலையே இறுதிக் கணிப்பீடு என்பர். இதன்படி இறுதியில் அந்த வருடத்தில் / தவணையில் / அலகில் கற்பித்த விடயங்களை உள்ளடக்கித் தயாரித்த வினாப்பத்திரம் ஒன்றின் மூலம் மாணவரின் அடைவைக் கணிப்பிட முடியும். எனினும் இவ்வாறான தொரு கணிப்பீட்டு முறை ஆரம்பத் தரங்களுக்குப் பொருத்தமானதெனக் கருதமுடியாது.

**தொடர் கணிப்பீடு**

யாதேனும் கற்றல் கட்டத்தின் இடையில் தொடர்ச்சியாக மாணவரின் கற்றல் திறன்களையும் இடர்ப்பாடுகளையும் கண்டறிவதே இதனால் கருதப்படுகின்றது. இது தொடர் கணிப்பீடு எனவும் அழைக்கப்படுகின்றது. ஆரம்பத் தரங்களில் மாணவர்கள் கற்றலின்போது எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளுக்குப் பொருத்தமான தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தல் கட்டாயமானதாகும். அல்லது அவர்களுக்குத் தொடர்ந்து கற்றல் கடினமானதாக அமையும். இவ்வாறு கற்றலில் அடையும் தோல்வியினால் அவர்கள் மேலும் பின்னடைவார்கள். ஆகவே மாணவரைப் பற்றித் தொடர்ச்சியாகத் தேடியறிதல் ஆரம்பத் தரக் கணிப்பீட்டின் முக்கியமான ஒரு நோக்கமாகக் கருதப்படுகின்றது.

ஆரம்பத் தரங்களில் நியதிசார் கணிப்பீடே நடத்தப்படுகின்றது. இங்கு ஆசிரியரால் மேற்கொள்ளப்படும் முதன்மைப்படுத்தியுள்ள முறைசாரா நுட்பங்களில் கூடுதலான கவனம் செலுத்தப்படும்.

**நியதிசார் கணிப்பீடு**

கலைத்திட்டத்தின் உள்ளடக்கம், தேர்ச்சிகள் என்பவற்றுக்கேற்ப தயாரிக்கப்பட்ட நியதிகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதைப் பரீட்சித்தல் நியதி அடிப்படையிலான கணிப்பீடாகும். இதற்குப் பயன்படுத்தக்கூடிய நியதிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட கணிப்பீட்டுப் படிவங்கள் ஆரம்பத் தரங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவ்வாசிரியர் வழிகாட்டியில் மொழி, சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் ஆகிய பாடப்பரப்புகளுக்கான கணிப்பீட்டுப் படிவங்கள் அப்பாடங்களின் இறுதியிலும் பொதுக் கணிப்பீட்டுப் படிவம் ஆசிரியர் வழிகாட்டியின் இறுதியிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் கணிதப் பாடத்திற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள கணிப்பீட்டுப் படிவம் கணித ஆசிரியர் வழிகாட்டியின் இறுதியிலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் ஆகிய பாடங்களுக்குத் தயாரிக்கப்பட்ட நியதிகள் சில இங்கு தரப்பட்டுள்ளன.

**கணிதம்**

*எடுத்துக்காட்டு:* நாளொன்றில் நடைபெறும் சம்பவங்களைத் தொடர்புபடுத்தி நேரத்தைக் கூறுவார்.

**முதன்மொழி**

*எடுத்துக்காட்டு:* கருத்துப் படமொன்றைப் பார்த்து அதற்குரிய சிறிய உரையாடலை எழுதுவார்.

**சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள்**

*எடுத்துக்காட்டு:* ஏனையோரிடம் மகிழ்ச்சியுடன் சுமுகமாக உரையாடுவார்.

**பொதுக் கணிப்பீடு**

*எடுத்துக்காட்டு:* பிறருக்கு உதவுவதற்கு ஆர்வம் காட்டுவார்.

## செயல் அடைவுக்கோவை

மாணவர்களைக் கணிப்பிட உபயோகிக்கக்கூடிய மிகவும் பயனுறுதியுள்ள ஒரு முறையாக இது கருதப்படுகின்றது. மாணவரின் கற்றல் தொடர்பான இடர்களையும் அவர்களது திறன்களையும் தொடர்ச்சியாகக் கணிப்பிடும் ஒரு முறை என்ற வகையில் அதிக முக்கியத்துவமுடையது. பொதுவாக ஆரம்பத் தர ஆசிரியர்கள் யாவரும் மாணவர் ஒவ்வொருவரதும் வேலைகளைத் தனித்தனிக் கோவைகளில் சேகரிக்கும் வழக்கமுடையவர்களாவர். எனினும் செயல் அடைவுக் கோவை முறையை இதனிலும் முன்னேற்றகரமான ஒரு முறையாகக் கருதப்படுகிறது. இதன்படி செயல் அடைவுக் கோவை என்பது மாணவரது திறமைகளையும் அவர் கற்றலின்போது எதிர்கொள்ளும் இடர்களையும் காட்டும் வகையில் கருத்தாழத்துடன் தயாரிக்கப்பட்டுள்ள மாணவர் வேலைத் தொகுப்பாகும் எனக் கருதலாம். இது மாணவர்கள் பற்றிய தெளிவான கருத்தை வெளிக்காட்டும் ஒரு கோவையாக அமைதல் வேண்டும். இதனைத் தயாரிக்கும் முறை ஆசிரியர்களுக்கேற்பவே மாறுபடும். இது பற்றிய ஒரு நியம முறை இல்லையாகையால் ஆக்கத்திறனுடைய ஒரு ஆசிரியரால் தனது ஆக்கத்திறனுக்கேற்ப மிக உயர்மட்டச் செயலடைவுக் கோவை ஒன்றை வடிவமைத்துக்கொள்ள முடியும். செயல் அடைவுக் கோவை ஒன்றில் உள்ளடக்கத்தக்கவை யாவை? இதில் மாணவரது வேலைகளின் மாதிரிகளை உள்ளடக்கும் எழுத்து வேலைகள், செய்த கணக்குகள், வரைந்த சித்திரங்கள், ஆக்கங்கள் போன்றவை இதில் உள்ளடக்கப்படலாம். மேலும் ஆசிரியரின் சிறு குறிப்புகளையும் இதில் உள்ளடக்கலாம்.

## சுருக்கக் குறிப்பு எழுதுதலும் செவ்வைபார்ப்புப் பட்டியல்களை உபயோகித்தலும்

ஒரு ஆசிரியர் தனது மாணவர்களின் முன்னேற்றத்தையும் கற்றல் இடர்ப்பாடுகளையும் இனங்காண முயற்சிக்கும்போது அவர்கள் ஒவ்வொருவரையும் பற்றிய தகவல்களையும் சிறு சிறு குறிப்புகளாகச் சேகரித்துவைத்தல் பயனளிக்கும். வகுப்பில் கற்பிக்கும்போது மாணவர் பற்றிய ஏராளமான தகவல்கள் ஆசிரியருக்குக் கிடைக்கின்றன. மென்மேலும் இத்தகவல்கள் கருத்தாழமுள்ளவாறு பயன்படுத்தப்படுவது கிடையாது. ஆகவே மாணவர்கள் பற்றிய தகவல்களைப் புத்தகமொன்றில் சுருக்கக் குறிப்பாக எழுதிவைத்து அவற்றைத் தேவைக்கேற்றவாறு பயன்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்படல் வேண்டும். செவ்வைபார்ப்புப் பட்டியல்களைப் பயன்படுத்துதல் பயன்மிக்க மற்றுமொரு முறையாகும். ஆசிரியர் வழிகாட்டியின் இறுதியில் தரப்பட்டுள்ள நியதிகளை மாணவர் அடைந்துள்ளனரா எனத் தீர்மானிப்பதற்கு செவ்வைபார்ப்புப் பட்டியல்களைப் பயன்படுத்தலாம்.

## கணிப்பீட்டுப் படிவங்களும் அவற்றைப் பயன்படுத்துதலும்

சேகரித்த தகவல்களைக் குறித்துவைத்து அறிக்கைப்படுத்துவதற்காகப் பயன்படுத்தக்கூடிய நான்கு படிவங்களின் மாதிரிகள் ஆசிரியர் வழிகாட்டியில் தரப்பட்டுள்ளன. அவை தாய்மொழி, கணிதம், சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள், பொதுக் கணிப்பீடு எனப் பெயரிடப்பட்டுள்ளன.

அவற்றில் ஒவ்வொரு மாணவரின் பெயருக்கு எதிரேயும் ஒவ்வொரு கற்றல் பேறுக்காகவும் ஒரு கட்டம் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் அந்தந்த கற்றல் பேற்றை அண்மித்துள்ளனரா இல்லையா எனச் சோதித்தறிந்த பின்னர் அதனை இங்கு குறித்துக்கொள்ள வேண்டும். பொதுக் கணிப்பீட்டுப் படிவத்தில் தரப்பட்டுள்ள கணிப்பீட்டிற்கு உட்படுத்த வேண்டிய பெரும்பாலான "கற்றல் பேறுகள்" வருடம் முழுவதும் கண்டறிய வேண்டிய விதத்தில் பரந்தமைந்துள்ளன. இங்கு ஒரு தவணைக்கு ஒரு மாணவனுக்கு ஒரு கட்டம் வீதம் பயன்படுத்தக்கூடியவாறு ஒரு கற்றல் பேறுக்கு மூன்று கட்டங்கள் வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாணவர் தொடர்பாகவும் ஒவ்வொரு கற்றல் பேற்றின் கீழும் நீங்கள் சேகரித்த தகவல்களின் உதவியுடன் பின்வருமாறு குறியீடுகளைப் பயன்படுத்தி அறிக்கைப்படுத்தலாம்.

| முடிவு | குறியீடு |
|---|---|
| வெற்றிகரமாகச் செய்கிறார். | ✓ |
| இடர்ப்படுகிறார் / மேலும் உதவி தேவைப்படுகின்றது. | • |

யாதேனும் ஒரு கற்றல்பேறு தொடர்பாக மாணவர் வெற்றியைக் காட்டுகின்றனரா என்பதை ஆசிரியர் முடிவு செய்வதற்காகக் குறித்த கற்றற்பேறுக்குப் பொருத்தமானதாகத் தாமே தயாரித்த நியதிகளைப் பயன்படுத்தலாம்.

## கண்டறிதலும் பரிகாரமும்

முறைசாரா - தொடர் கணிப்பீட்டு முறையின் பிரதான நோக்கம் கண்டறிதலாகும்.

ஒரு மாணவனின் கணிப்பீட்டுப் படிவத்தில் "•" குறியீடு இடப்படும் ஒவ்வொரு சந்தர்ப்பம் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தப்படல் வேண்டும். மாணவன் எதிர்நோக்கும் இடர்ப்பாடுகளை இனங்கண்டு, அவற்றுக்குப் பரிகாரம் கண்டு, பின்னர் மீண்டும் கணிப்பீட்டிற்கு உட்படுத்தல் வேண்டும். குறித்த "•" எனும் குறியீடு "✓" எனும் குறியீடாக மாறும் வரை இச்செயற்பாட்டைத் தொடர்ச்சியாக நடத்துதல் ஆசிரியரின் பொறுப்பாகும்.

இனங்கண்ட கற்றல் இடர்ப்பாடுகளைத் தவிர்ப்பதற்கு அந்தந்தச் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான வாறு சிறப்பான பரிகாரக் கற்றல் - கற்பித்தல் முறைகளை ஒழுங்கமைத்தல் முக்கியமானதாகும். இவை ஒவ்வொரு மாணவனும் காட்டும் கற்றல் இடர்ப்பாடுகளுக்கேற்பவே தீர்மானிக்கப்படலாம்.

அவ்வாறே குறிப்பிட்ட சில கற்றல் - நோக்கங்கள் தொடர்பாக வகுப்பு மாணவருள் பெரும்பாலானோர் "•" குறியீட்டைப் பெற்றுள்ளனராயின், அதற்கு ஏதுவான காரணங்கள் பல இருக்க முடியும். அவற்றை இனங்கண்டு பொருத்தமான ஒரு நடைமுறையைப் பின்பற்றி அம்மாணவர்கள் உரிய கற்றல் பேறுகளை அடையச் செய்வது ஆசிரியரின் பொறுப்பாகும்.

## ஏனைய விடயங்கள்

- ஒரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்தை மற்றொரு மாணவனின் கற்றல் முன்னேற்றத்துடன் ஒப்பிடுவதன் மூலம் கல்வி ரீதியாக முக்கியத்துவம் பெறும் தீர்மானங்களை எடுத்தல் கடினமானதாகும். ஆகவே மாணவர் - மாணவர் அடைவுகளை ஒப்பிடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

- ஒரு மாணவனின் தற்போதைய அடைவு மட்டத்தை அவனது முன்னைய அடைவு மட்டத்துடன் ஒப்பிட்டு, மாணவனது முன்னேற்றம் பற்றிய தகவல்களைப் பெறலாம். எனவே இது பற்றி அக்கறை செலுத்துங்கள். மேலும் கலைத்திட்டத்தின் நோக்கங்களை எந்தளவுக்கு அடைந்துள்ளனர் என அறிதலும் அவசியமாகும்.

- வகுப்பாசிரியர் தனது வகுப்பிலுள்ள மாணவர்களுக்குப் பொருத்தமான விதத்தில் கணிப்பீட்டு உபகரணங்களைத் தயாரித்துக் கொள்ளத்தக்கவராக இருத்தல் வேண்டும்.

# தாய்மொழி (தமிழ்) கணிப்பீட்டுப் - படிவம்

**கணிப்பீட்டு அளவுத்திட்டம்**
வெற்றிகரமாகச் செய்கிறார் √
இடர்ப்படுகிறார்/ மேலும் உதவி தேவை •

| | | | | மாணவர் பெயர் | அடிப்படை மொழித்திறன்கள் |
|---|---|---|---|---|---|
| | | | | 01. பேசுவதனைச் செவிமடுத்து சுயமாக பேசுவதற்கு முன்வருவார். | |
| | | | | 02. சரியான கொண்ணிலையில் அமர்ந்து சரியாகப் பென்சிலைப் பிடிப்பார். | |
| | | | | 03. காட்சிப் படங்களைப் பார்த்து சிறிய வாக்கியங்கள் எழுதுவார். | |
| | | | | 04. சிறிய கதை அல்லது உரையாடலை இரசனையுடன் செவிமடுத்து முக்கிய கருத்துக்களைக் கூறுவார். | |
| | | | | 05. ஒலி வேறுபாடுகளை இனங்கண்டு சரியாக உச்சரித்து எழுதுவார். | |
| | | | | 06. ஒருமை, பன்மைச் சொற்களைச் சரியாக இனங்கண்டு வாக்கியங்களில் பயன்படுத்துவார். | |
| | | | | 07. ஒத்த கருத்துள்ள சொற்களை இனங்கண்டு கூறுவார்/எழுதுவார். | |
| | | | | 08. எதிர்க் கருத்துள்ள சொற்களை இனங்கண்டு கூறுவார்/எழுதுவார். | |
| | | | | 09. எதிர்ப்பாற் சொற்களைச் சரியாக இனங்காண்பதுடன் அச்சொற்களைப் பிழையின்றி எழுதுவார். | |
| | | | | 10. அடைமொழிகளை வாக்கியங்களில் பொருத்தமுறப் பயன்படுத்துவார். | |
| | | | | 11. காலங்களை அனுசரித்து வாக்கியங்கள் எழுதுவார். | |
| | | | | 12. நிறுத்தக் குறிகளை (முற்றுப்புள்ளி, காற்புள்ளி, வினாக்குறி) வாக்கியங்களில் பொருத்தமுறப் பயன்படுத்துவார். | |
| | | | | 13. படங்கள், கதைகளை விருப்புடனும் இரசனையுடனும் அசைவியக்கச் செயற்பாடுகளுடன் வெளிப்படுத்துவார். | |
| | | | | 14. விரல் பொம்மை உரையாடல் மூலம் கற்பனையாற்றலையும் ஆக்கத்திறனையும் வெளிப்படுத்துவார். | |
| | | | | 15. தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் சித்திரங்கள் மூலம் வெளிப்படுத்துவார். | |
| | | | | 16. நூலகத்துடன் தொடர்புடைய அறிவித்தல்கள், அறிவுறுத்தல்கள், கட்டளைகள் ஆகியவற்றை விளங்கி, சுயமாகத் துலங்குவார். | |
| | | | | 17. நூலகத்தில் தகவல்களைத் திரட்டி மாணவர்களுக்குக் கூறுவார். | |
| | | | | 18. சுயவிபரப் படிவங்களை வாசித்துச் சரியாகப் பூர்த்தி செய்வார். | |
| | | | | 19. சிறிய கதைகளைச் செவிமடுத்துக் கிரகித்து வினாக்களுக்கு விடையளிப்பார். | |
| | | | | 20. இளமைப் பெயர்களைச் சரியாக இனங்கண்டு கூறுவார் / எழுதுவார். | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | 21. விடுகதைகளைக் கருத்தூன்றிச் செவிமடுத்து விடுவிப்பார். | |
| | | | | 22. பழமொழிகளை மனனஞ் செய்வதுடன் அவற்றின் கருத்துக்களையும் கூறுவார், செவிமடுப்பார். | |
| | | | | 23. குறியீடுகளைச் சரியாக இனங்கண்டு துலங்குவார். | |
| | | | | 24. கூறப்படும் சொற்களைச் சரியாகச் செவிமடுத்து பழையின்றி எழுதுவார். (சொல்வதெழுதல்) | |
| | | | | 25. பொது இடங்களிலும் பாடசாலையிலும் வீட்டிலும் மற்றவர்களை மதித்துக் கண்ணியத்துடன் உரையாடுவார். | |
| | | | | 26. நூலகத்தைச் சரியாகப் பயன்படுத்தி அதன் பயனைப் பெற்றுக்கொள்வார். | |
| | | | | 27. வானொலி, தொலைக்காட்சிச் செய்தி வாசிப்பு, நேர்முக வர்ணனை ஆகியவற்றின் ஊடாகத் தனது திறமைகளை வெளிக்கொணர்வார். | |
| | | | | 28. பொது இடங்களில் பெயர்ப் பலகைகள், ஒட்டிகளைச் சரியாக வாசித்துத் தகவல்களைக் குறித்துக்கொள்வார். | |
| | | | | 29. காட்சிப் படங்களைப் பார்த்து பிழையின்றி மூன்று வாக்கியங்கள் எழுதுவார். | அடிப்படை மொழித்திறன்கள் |
| | | | | 30. ஒன்றின் சுயசரிதையைச் சரியாகக் கூறுவார். | |
| | | | | 31. தெரிவுசெய்யப்பட்ட உலகநீதி அடிகளை மனனஞ் செய்வதோடு அவற்றின் கருத்துக்களையும் கூறுவார். | |
| | | | | 32. கிராமிய விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலம் சொற்களஞ்சியத்தை விருத்திசெய்து கொள்வார். | |
| | | | | 33. பல்வேறு சமூகத்தினரின் பண்டிகைகளில் பரிமாறப்படும் உணவுகள், தின்பண்டங்களை அறிந்து கூறுவார், எழுதுவார். | |
| | | | | 34. ஒளிப்படங்களைப் பார்த்து இரசித்து அப்படங்கள் தொடர்பாக ஆக்கபூர்வமாக எழுதுவார். | |
| | | | | 35 வீட்டிற்கு வருகைதரும் நண்பர்கள், சுற்றுலாக்கள் மூலம் பெற்ற அனுபவங்கள் ஆகியவற்றைச் சித்திரமாக வரைவார். | |
| | | | | 36. பசுமை உலகின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மரங்களை வளர்த்து சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாப்பார். | |
| | | | | 37. தெரிவுசெய்யப்பட்ட பகுதிகளை ஒலி - ஒளி இறுவட்டுகளின் துணையுடன் வாசிப்பார், பேசுவார். | |
| | | | | 38. சிறுவர் சஞ்சிகைகள், பத்திரிகைகள், இணையத்தளங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டு, தகவல்களைக் குறித்துக் கொள்வார். | |
| | | | | 39. பாடல்கள், கதைகளைச் செவிமடுத்து, இரசித்து தமது கருத்துக்களை தமது மொழிநடையில் எழுதுவார். | |
| | | | | 40. மொழிப் பயிற்சிகளுக்காக அறிவுறுத்தல்களை வாசித்துக் கிரகித்து வினாக்களுக்கு விடையளிப்பார். | |

## சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகளைக் கணிப்பீடு செய்தல் - தகவல்களை அறிக்கைப்படுத்தும் படிவம்

| | | | | மாணவர் பெயர் / வெற்றிகரமாக செய்கிறார் √ / இடர்ப்படுகிறார்/ மேலும் உதவி தேவை • |
|---|---|---|---|---|
| | | | | 1. பாடசாலையிலும் வகுப்பிலும் தனக்குரிய சட்ட திட்டங்களை இனங்கண்டு அவற்றுக்கேற்ப காரியமாற்றுவார். |
| | | | | 2. அன்றாட காரியங்களில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானவாறு நன்றி செலுத்துதல், மன்னிப்புக் கோரல், நல்வாழ்த்துக்கூறல் ஆகியவற்றில் பண்புடன் நடந்து கொள்வார். |
| | | | | 3. இலங்கையின் பல்வேறு மக்கள் பிரிவுகளின் பெயர்களைக் கூறுவார். |
| | | | | 4. இலங்கை மக்கள் பிரிவுகளுக்குரிய பண்டிகைகள் பற்றிய அடிப்படைத் தகவல்களைக் கூறுவார். |
| | | | | 5. சுற்றாடல் உள்ள மரஞ் செடி கொடிகள் சிலவற்றின் பெயர்களைக் கூறுவார். |
| | | | | 6. இலையொன்றின் விசேட பண்புகளை துருவியாய்ந்து அறிக்கைப்படுத்துவார். |
| | | | | 7. இலையொன்றின் பகுதிகளை அவதானித்து விவரிப்பார். |
| | | | | 8. மரஞ் செடி கொடிகளின் நிலைத்திருத்தலின் முக்கியத்துவத்தை மதிப்பார். |
| | | | | 9. அண்மைச் சூழலில் வாழும் மிருகங்களின நடத்தைக் கோலங்களை அவதானித்துக் கூறுவார். |
| | | | | 10. மிருகங்களினால் மனிதன் பெறும் பயன்களை ஆராய்ந்து அறிக்கைப்படுத்துவார். |
| | | | | 11. வீட்டில் வளர்க்கப்படும் மிருகங்களைப் பாதுகாப்பதற்கு செய்யவேண்டியன யாவை எனக் கூறுவார். |
| | | | | 12. மிருகங்களின் நடத்தைகளை எடுத்துக்காட்டும் பாடல்களையும் நடிப்புகளை முன்வைப்பார். |
| | | | | 13. அன்றாடம் பயன்படுத்தப்படும் பொருள்களினாலும் கருவிகளினாலும் செய்யக்கூடிய காரியங்களைக் கூறுவார். |
| | | | | 14. அன்றாட காரியங்களின் போது அடிப்படை முடிச்சுகளைப் பயன்படுத்துவார். |
| | | | | 15. கலப்பு உணவில் அடங்கியிருக்க வேண்டியவை யாவை எனக் கூறுவார். |
| | | | | 16. உணவைத் தெரிவு செய்யும் போது நோய்களில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு செய்ய வேண்டியவற்றைக் கூறுவார். |
| | | | | 17. கலப்பு உணவை உட்கொள்வதன் முக்கியத்துவத்தைக் கூறுவார். |
| | | | | 18. உணவு உட்கொள்ளும் போது கடைப்பிடிக்க வேண்டிய பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிப்பார். |
| | | | | 19. அண்மைச் சுற்றாடலில் நிகழக்கூடிய ஆபத்துக்களையும் அவற்றைத் தவிர்த்துக் கொள்வதற்குச் செய்ய வேண்டியவற்றையும் கூறுவார். |
| | | | | 20. தொற்றுநோய்களைத் தவிர்த்துக் கொள்வதற்கு தன்னால் செய்யக்கூடியவற்றைக் கூறுவார். |
| | | | | 21. தனது பாடசாலைக்கு நீர் பெறப்படும் விதத்தை விவரிப்பார். |
| | | | | 22. நீரை இயற்கை வளமொன்றாக மதித்து அதன் பயன்களைக் கூறுவார். |
| | | | | 23. மாணவர்கள் பாடசாலைக்கு வரும் விதத்தை விவரிப்பார். |
| | | | | 24. பயணஞ் செய்வதற்கு மனிதர்கள் பயன்படுத்தும் முறைகளைக் கூறுவார். |
| | | | | 25. பாதை பயணஞ் செய்வோரினால் கடைப்பிடிக்கப்பட வேண்டிய சட்ட திட்டங்களை விளங்கப்படுத்துவார். |
| | | | | 26. வித்துக்களையும் தண்டுகளையும் நடுவதன் மூலம் தாவரங்கள் பெறப்படும் விதத்தை விவரிப்பார். |
| | | | | 27. வீட்டுத் தோட்டமொன்றை நடத்துவதன் பயனை விவரிப்பார். |
| | | | | 28. அன்றாட வேலைகளை இலகுவாக்கிக் கொள்வதற்கு உதவும் கருவிகளின் பெயர்களைக் கூறுவார். |
| | | | | 29. வேலையை இலகுவாக்கிக் கொள்வதற்கு ஆதிகாலத்தில் பயன்படுத்திய முறைகளையும் தற்காலத்தில் பயன்படுத்தப்படும் முறைகளையும் ஒப்பிட்டு வித்தியாசங்களைக் கூறுவார். |
| | | | | 30. நேரசூசிக்கு ஏற்ப வேலை செய்வதன் மூலம் காரியங்களை இலகுவாக்கிக் கொள்ளக்கூடிய விதத்தைக் கூறுவார். |

### பொதுக் கணிப்பீடு - தகவல்களை அறிக்கைப்படுத்தும் படிவம்

| கணிப்பீடு அளவுத்திட்டம் | |
|---|---|
| வெற்றிகரமாக செய்கிறார் | ✓ |
| இடர்ப்ப்படுகின்றார்/ மேலும் உதவி தேவை | • |

| | | | | மாணவர் பெயர் |
|---|---|---|---|---|
| | | | | 1. வகுப்பில் மற்றையவர்களுக்கு மரியாதையுடன் செயற்படுவார். |
| | | | | 2. பகிர்ந்து கொண்டு காரியமாற்றுதலின் பெறுமதியைக் கூறுவார். |
| | | | | 3. சுய சுத்தம் பற்றிய கவனத்துடன் செயலாற்றுவார். |
| | | | | 4. தனது சுற்றுப்புறச் சுற்றாடலை சுத்தஞ் செய்வதற்குப் பங்களிப்புச் செய்வார். |
| | | | | 5. மற்றையவர்களுக்கு உதவி செய்வதற்கு விருப்புக் காட்டுவார். |
| | | | | 6. மற்றையவர்களுடன் சுமுகமாக உரையாடுவார். |
| | | | | 7. சுமுகமாக மற்றையவர்களின் உதவியைப் பெற்றுக் கொள்வார். |
| | | | | 8. சுற்றாடலுக்கு அன்பு செலுத்துவார். |
| | | | | 9. நிறைவொன்றைக் காணும் வரையில் இறுதி வரையில் வேலை செய்வார். |
| | | | | 10. கருவிகளை சரியாகப் பயன்படுத்துவார். |
| | | | | 11. பயன்படுத்தியதன் பின்னர் கருவிகளை உரிய இடங்களில் வைப்பார். |
| | | | | 12. வேலையொன்றின் இறுதியில் கருவிகளையும் இடத்தையும் சுத்தஞ் செய்வார். |
| | | | | 13. பாதுகாப்பைப் பற்றி கவனத்துடன் செயலாற்றுவார். |
| | | | | 14. சுய கற்றலுக்கு விருப்புக் காட்டுவார். |
| | | | | 15. பொருத்தமான சந்தர்ப்பங்களில் எளிய சிங்கள சொற்களைப் பயன்படுத்துவார். |
| | | | | 16. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப சிங்கள வாழ்த்துப் பதங்களைப் பயன்படுத்துவார். |

# 6.0 முதன்மை நிலை இரண்டிற்குரிய அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள்

## 1. அறிமுகம்

ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டுள்ள முதல் ஐந்து ஆண்டுகள் நபரொருவரின் வாழ்க்கையில் முக்கியமான காலகட்டமாகும். தற்கால ஏற்றுக்கொள்ளலுக்கு ஏற்ப அவற்றுள் முதல் மூன்று ஆண்டுகளும் முன் பிள்ளைப்பருவத்திற்கும் எஞ்சிய இரு ஆண்டுகளும் பிள்ளைப்பருவத்தின் தொடக்க நிலைக்கும் உரித்தாகும். முறைசார் கல்விக்கு அவசியமான அடிப்படைத் தேர்ச்சிகளைப் போன்றே வெற்றிகரமான தனிநபரொருவராக வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளும் விருத்தி அடைவது இக்காலக்கட்டத்தினுள்ளே ஆகும். அதனால் இக்கட்டத்தில் மாணவருள் அத்தியாவசியாக விருத்தி செய்யப்பட வேண்டிய தேர்ச்சிகளை இனங்கண்டு மாணவர்கள் அத்தேர்ச்சிகளில் பாண்டித்தியம் பெறுதலை உறுதிப்படுத்துதல் இவ்வேலைத்திட்டத்தின் தலையாய கொள்கையாகும்.

தனது வகுப்பில் கற்கும் மாணவர் அத்தியாவசிய தேர்ச்சிகளில் பாண்டித்தியம் அடைந்துள்ளனரா எனச் சோதித்துப் பார்த்தலும், அவ்வாறில்லாவிடில் அவற்றை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்தலும் ஆசிரியரின் பொறுப்பொன்றாகும். அவ்வாறே கடமையும் ஆகும்.

இங்கு தேர்ச்சி என்பதனால் வரைவிலக்கணப்படுத்துவது அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியங்கள் ஆகியனவற்றின் சிக்கலான சேர்மானமொன்றிற்கு குறித்த தேர்ச்சியொன்றிற்கு இவ்வம்சங்கள் அனைத்தும் அல்லது சில பல்வேறு மட்டங்களில் உள்ளடங்கப்பட்டிருக்க முடியும். அதற்கேற்ப சில தேர்ச்சிகள் திறனை நோக்கி கூடுதலாக சார்ந்திருக்கக்கூடியனவாக இருக்கக்கூடியதோடு வேறு தேர்ச்சியொன்று அறிவையும் மனப்பாங்கையும் நோக்கிக் கூடுதலாக சார்ந்திருக்க முடியும். சில தேர்ச்சிகள் விழுமியத்தை நோக்கியும் கூடுதலாக சார்ந்திருக்க முடியும்.

ஒவ்வொரு முதன்மை நிலையும் முடிவடையும் போது சகல மாணவர்களும் அந்த நிலைக்கு அத்தியாவசியமான கற்றல் தேர்ச்சிகள் அனைத்தினதும் பாண்டித்தியத்தை உறுதிப்படுத்துதல் அந்நிலைக்குப் பொறுப்பான ஆசிரியரின் பொறுப்பாகும்.

அதில்,
- அத்தியவசிய கற்றல் தேர்ச்சி என்பதனால் கருதப்படுவது யாது?
- முதலாவது முதன்மை நிலைக்கு இனங்காணப்பட்டுள்ள அத்தியாவசிய தேர்ச்சிகள் யாவை?
- பாண்டித்தியம் என்பதன் கருத்து யாது?
- அத்தியாவசிய கற்றல் தேர்ச்சியொன்றின் பாண்டித்தியத்தை உறுதிப்படுத்திக் கொள்வது எவ்வாறு?
- பாண்டித்திய மட்டத்தை அடையாக மாணவர்களுக்கு வழிகாட்டுவதற்கான செயல்வழிகள் யாவை?

எனும் விடயங்களைப் பற்றி விரிவான விளக்கத்தைப் பெற்றிருத்தல் முக்கியமாகும்.

## 2. அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகள் என்பன யாவை?

ஆரம்பத் தரங்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள கலைத்திட்டம் பல்வேறு திறன் மட்டங்களில் உள்ள மாணவர்களுக்குப் பொருத்தமாகுமாறு எளிய மட்டத்தில் இருந்து சிக்கலான மட்டம் வரையிலான தேர்ச்சிகளைக் கொண்டுள்ளது. இவற்றிடையே உரிய நிலையினுள் சகல மாணவர்களினாலும் கட்டாயமாக அடையப்பெற வேண்டிய அடிப்படை தேர்ச்சிகளின் தொகுதி

அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி என்றழைக்கப்பட முடியும்.

அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளினுள்,

- உரிய நிலையினுள் மாணவரின் அபிவிருத்தித் தேவைகளைப் பூர்த்தி செய்தல்,
- கற்றலை மேலும் கட்டியெழுப்புவதற்கும் நடத்திச் செல்வதற்கும் உதவும்
- நல்ல பிரஜையாக வெற்றிகரமாக வாழ்வதற்கு கட்டாயமாகத் தேவையான அத்திவாரம் ஆகிய தேர்ச்சிகள் கட்டியெழுப்பப்படும்.

**3. முதன்மை நிலை ஒன்றிற்கு விதந்துரைக்கப்பட்டுள்ள கற்றல் தேர்ச்சிகள் யாவை? முதன்மை நிலை**

முதன்மை நிலை இரண்டில் மாணவரொருவர் 50 அத்தியாவசிய தேர்ச்சிகளை நிறைவு செய்ய வேண்டும். இவற்றை இனங்காணும் போது முதலாம், இரண்டாவதும் மூன்றாவதும், நான்காவதும் ஐந்தாவதும் தரங்களின் பாடத்திட்டங்களும் மற்றைய கலைத்திட்ட சாதனங்களும் ஆழமாகக் கற்றாயப்பட்டதோடு ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், விரிவுரையாளர்கள், கலைத்திட்டங்களை விருத்திசெய்வோர், கல்வியாளர்கள் ஆகியோரின் கருத்துக்களும் கவனத்திற் கொள்ளப்பட்டன. அவ்வாறே வேறு நாடுகளில் வெளியிடப்பட்டுள்ள இவ்வாறான அத்தியாவசிய அடைவு மட்டங்களும் கற்றாயப்பட்டன. அது மட்டுமன்றி இக்கட்டத்தில் உள்ள மாணவர்களின் விருத்தித் தேவைகள் மீதும் ஆழமாக அவதானிக்கப்பட்டன. இவற்றுக்கு மேலதிகமாக இத்திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட பிள்ளை விருத்தி தரங்கள் பற்றிய ஆய்வுசார் கற்கைகளிலிருந்து கண்டறியப்பட்டவையும் கவனத்திற் கொள்ளப்பட்டன.

இனங்காணப்பட்டுள்ள அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சிகள் தொகுதி பாடரீதியாகத் தனித்தனியாக மட்டுமன்றி பொதுத் தேர்ச்சித் தொகுதியொன்றாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்தேர்ச்சிகள் தொகுதியினுள் ஆரம்பக் கல்விக்கு அடிப்படையான தொடர்பாடல், சுற்றாடல், ஒழுக்கநெறியும் சமயமும், விளையாட்டும் ஓய்வும், கற்றலுக்கும் ஆளுமைக்கும் பொருத்தமாகவும் வேலையுலகியின் ஆயத்தத்திற்கும் பொருத்தமான தேர்ச்சிகளும் எனும் அடிப்படை தேர்ச்சிகளுக்குரிய தேர்ச்சிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

விசேடமாகக் கருதும் போது அத்தியாவசிய கற்றற்றொகுதி மாணவரின் ஒட்டுமொத்த விருத்திக்குக் கீழே குறிப்படப்பட்டுள்ள அம்சங்களுடன் நேரடியானத் தொடர்புகளைக் காட்டும்.

மாணவரின் பூரண விருத்திக்கு அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளும் பங்களிப்புச் செய்யும் பல்வேறு அம்சங்களும்.

| | |
|---|---|
| * நல்வாழ்க்கைப் பழக்கங்கள் | * உயிருள்ள, உயிரற்ற சுற்றாடல்கள் |
| * சுய பாதுகாப்பு | * ஆராய்வூக்கம், ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை தொடர்ந்திருத்தல் |
| * நுண்ணியக்கத் திறன் | * ஒப்பிடுதலும் அளத்தலும் |
| * சமவயதினருடன் தொடர்பு | * அழகை மதித்தல் |
| * சுய நம்பிக்கையும் சுயாதீனமும் | * மனதிற்குகந்த சமூக நடத்தைகள் |
| * எண் எண்ணக்கரு | * வளர்ந்தோருடனான தொடர்பு |
| * பிரச்சினைகள் தீர்த்தல் | * பேரியக்கத் திறன்கள் |
| * ஆக்கபூர்வதன்மையும் கற்பனையும் | * போஷாக்கு |
| * விசாரிக்கும் மனம் | * மொழியும் ஆரம்ப எழுத்தறிவும் |

4. பாண்டித்தியம் என்பதன் கருத்து யாது?

ஒவ்வொரு மாணவரையும் சகல அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளிலும் பாண்டியத்தியம்

பெறச் செய்தல் இங்கு எதிர்பார்க்கப்படுகிறது. ஏதேனும் தேர்ச்சியுடன் தொடர்புபட்ட அறிவு, திறன், மனப்பாங்கு, விழுமியம் தொடர்பாக உரிய வயதிற்குப் பொருத்தமானவாறு உயர் மட்டத்தின் திறனொன்றை வெளிக்காட்டும் மாணவரொருவர் அத்தேர்ச்சியில் நிபுணர் எனக் கருதப்பட வேண்டும். ஏதேனும் தேர்ச்சியொன்று தொடர்பாக பாண்டித்திய மட்டத்தை அடைந்த மாணவரொருவர் கீழே காட்டப்பட்டுள்ளவாறான பண்புகள் அனைத்தையும் அல்லது அநேகமானவற்றை வெளிப்படுத்திக் காட்டுவார்.

* தேர்ச்சிக்கு உரிய நிரந்தரமான நடத்தைசார் மாற்றத்தைக் காட்டுவார்.
* தேர்ச்சிக்கு உரிய அடுத்த உயர் மட்டத்திற்குச் செல்வதற்கு ஆயத்தம் என்பதை வெளிப்படுத்துவார்.
* தேர்ச்சியில் ஈடுபடுதல் பற்றி தன்னுள் சுய நம்பிக்கை உண்டென வெளிப்படுத்துவார்.
* தேர்ச்சியுடன் தொடர்புபட்ட விடயங்களை இன்னொருவருக்கு விளங்கப்படுத்தும் திறனை வெளிப்படுத்துவார்.
* தேர்ச்சி பற்றி விசேட ஆர்வத்தை அல்லது விருப்பத்தை வெளிப்படுத்துவார்.
* தேர்ச்சியுடன் தொடர்புபட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் போது அதனை சுய முயற்சியுடன் தீர்க்குந் திறனை வெளிப்படுத்துவார்.
* தேர்ச்சிக்கு உரிய காரியங்களை சரியாக நிறைவேற்றுவார்.
* தேர்ச்சிக்கு உரிய மனப்பாங்குள் தொடர்பான நடத்தையை எப்போது வெளிப்படுத்துவார்.

தேர்ச்சியொன்றில் பாண்டித்தியம் அடையப்பெற்றுள்ளதா எனத் தீர்மானிப்பதற்கு பல்வேறு விதங்களில் தகவல்களைச் சேகரித்தல் அவசியமாகும். அது ஆசிரியரின் தொழில்சார் **தீர்மானமெடுத்தல் மீதும், பண்புசார் தன்மையிலும், எப்போதும்** தகவல்களை சேகரித்தல் மீதும் முதன்மை நிலை முழுவதும் நிகழ வேண்டும்.

## 5. தேர்ச்சியொன்றின் பாண்டித்தியத்தை கணிப்பீடு செய்தல் எவ்வாறு?

மாணவரொருவரை ஏதேனும் தேர்ச்சியொன்றின் பாண்டித்தியத்தை நோக்கி கொண்டு செல்லும் பொறுப்பு வகுப்பாசிரியருக்கு உரியதாகும். இதில் ஆசிரியரினால் எடுக்கப்படும் தீர்மானங்களின் வலிதுதன்மை வெளிப்படுமாறு பொறுப்புடன் மாணவர் கற்கும் போது வெளிப்படுத்தும் பிரச்சினைகளை இனங்கண்டு தேவையான செயல்வழிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் அவர்களைப் படிப்படியாக எதிர்பார்த்த மட்டங்களுக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளின் பாண்டித்துவத்தை அடைந்துள்ளனரா என்பதை தொடர் கணிப்பீடு, இறுதிக் கணிப்பீடு, தொடர் கணிப்பீடும் இறுதிக் கணிப்பீடும் ஆகிய முறையியல்களினால் கணிப்பீடு செய்ய முடியும். அது பின்வரும் உருவிற் காட்டப்பட்டுள்ளது.

பாண்டித்தியத்தை உறுதிப்படுத்துதல் ⇄
- இறுதிக் கணிப்பீட்டு தகவல்கள் மூலம்
- தொடர் கணிப்பீட்டு தகவல்கள் மூலம்
- தொடர், இறுதி கணிப்பீட்டு தகவல்கள் மூலம்

### 5.1 பாண்டித்தியத்தை தொடர் கணிப்பீட்டால் கணிப்பீடு செய்தல்

தொடர் கணிப்பீடு செய்தல் என்பது கற்றல் - கற்பித்தல் படிமுறை ஒன்றினுள் அன்றாட கற்பித்தல் மேற்கொள்ளும் சந்தர்ப்பங்களில் தகவல்களை சேகரித்து மாணவரின் ஆற்றல் மட்டங்களை இனங்காணும் செயல்வழியாகும். இதற்கு மாணவரை அவதானித்தல், மாணவருக்கு செவிமடுத்தல், வாய்மொழி வினாக்களை வினாவுதல், ஒப்படைகளுக்குப் புள்ளி வழங்குதல் போன்ற முறைகளைப் பயன்படுத்த முடியும்.

### 5.2 பாண்டித்தியத்தை இறுதிக் கணிப்பீட்டால் கணிப்பீடு செய்தல்

சில அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளை இறுதிக் கணிப்பீட்டின் ஊடாக மிகவும் நன்றாகக் கணிப்பீடு செய்ய முடியும். இறுதிக் கணிப்பீடு என்பது கற்றல் - கற்பித்தல் படிமுறையொன்றின் இறுதியில் தகவல்களை சேகரித்து மாணவரின் ஆற்றல் மட்டங்களை இனங்காணும் செயல்வழியொன்றாகும். அதாவது, பாட அலகொன்றை கருப்பொருளொன்றின், மாதமொன்றின், தவணையொன்றின் இறுதியில் கணிப்பீடு செய்யும் கருவிகளைப் பயன்படுத்தி நிகழ்த்தும் கணிப்பீட்டு முறையியல் ஒன்றாகும்.

அதில் கற்றல் - கற்பித்தல் செயல்வழியை தற்காலிகமாக நிறுத்தி கணிப்பீடு செய்யும் செயல்வழிக்கு முன்னர் வரும். அதற்கேற்ப அலகொன்று மாதமொன்றின், தவணையொன்றின் இறுதியில் வழங்கப்படும் முறைசார் கணிப்பீடாக செயற்பாடுகளைப் பயன்படுத்தி மாணவர் எதிர்பார்த்த மட்டங்களை அடைந்துள்ளனரா எனத் தீர்மானிக்கப்படும்.

### 5.3 பாண்டித்தியத்தை தொடர், இறுதி ஆகிய இரண்டினாலும் கணிப்பீடு செய்தல்

சில அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிகளுக்கு பாண்டித்தியத்தைத் தீர்மானிப்பதற்கு மேற்குறிப்பிடப்பட்ட தொடர், இறுதி கணிப்பீடுகள் இரண்டையும் பயன்படுத்த முடியும். வகுப்பின் அன்றாட கற்றல் - கற்பித்தல் செயல்வழியில் சேகரிக்கப்படும் தகவல்கள், மாணவர்களுக்கு வழங்கப்படும் முறைசார் கணிப்பீட்டுச் செயற்பாடுகளின் மூலம் பெறப்படும் தகவல்கள் எனும் இரு வகைகளினதும் தகவல்கள் இதற்குப் பயன்படும்.

### 5.4 பாண்டித்தியத்தை குறிப்பதற்கான குறிகாட்டிகள்

மாணவர்கள் ஏதேனும் தேர்ச்சியை அடைதலை 3 மட்டங்களில் குறிக்க முடியும். அத்தியாவசிய கற்றல் தேர்ச்சியில் மாணவர் அடைந்துள்ள பாண்டித்தியத்தை “பாண்டித்தியத்தை அடையவில்லை, பாண்டித்தியத்தை அண்மித்துள்ளார், பாண்டித்தியத்தை அடைந்துள்ளார்” என மூன்று மட்டங்களில் இனங்காண வேண்டியுள்ளது. அது பற்றிய விவரங்கள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

*உதாரணம்:* கிடையாக வைக்கப்பட்டுள்ள மரக் கட்டையொன்றின் மீது நடப்பார்.

| | | |
|---|---|---|
| சமநிலையான மரக் கட்டையொன்றின் மீது அடிகளை மாற்றி மாற்றி வைப்பதன் மூலம் சமநிலையாக ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை நடத்தல். | சமநிலையான மரக் கட்டையொன்றின் மீது ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை செல்ல முடியுமெனினும் செல்லுதலில் இடர்களைக் காட்டுகிறார். | சமநிலையான மரக் கட்டையில் ஆரம்பத்தில் இருந்து இறுதி வரை நடக்க முடியாது. |
| பாண்டித்தியத்தை அடைந்துள்ளார் √ (சிவப்பு நிறம்) | பாண்டித்தியத்தை அண்மித்துள்ளார் • (பச்சை நிறம்) | பாண்டித்தியத்தை அடையவில்லை. • (நீல நிறம்) |

### 5.5 பாண்டித்தியத்தை அடையாத மாணவரின் இடர்களை கண்டறிவதற்குப் பயன்படுத்தக்கூடிய முறை

மாணவரொருவரைப் பற்றிய முடிபுகளுக்கு வரும் போது அவர்களை நுண்ணியமாக அவதானித்தலும் அதன் மீது செய்யப்படும் தொழில்சார் தீர்மானமும் மிகவும் முக்கியமாகும். பாண்டித்தியத்தை அடையாத மாணவர்கள் காட்டும் இடர்ப்பாடுகளை கண்டறிவதற்கு பல்வேறு முறைகளைப் பயன்படுத்த முடியும். மாணவர்களைப் பற்றி பெறப்பட்டுள்ள தகவல்களைக் கொண்டு விசேடமான மிகவும் பொருத்தமான முறையை/ முறைகளைத் தெரிவு செய்தல் முக்கியமாகும். அதற்காகப் பயன்படுத்தக்கூடிய

கண்டறிதல் முறைகள் சில கீழே காட்டப்பட்டுள்ளன.

* குறித்த காலமொன்றினுள் நுணுக்கமாக மாணவரின் நடத்தைக் கோலத்தை அவதானித்தல்.
* மாணவருடன் தனியாக சுமுகமாக உரையாடி பெறப்படும் துலங்கலைப் பற்றி கவனஞ் செலுத்துதல்.
* விளங்கப்படுத்துதல்களில் மாணவரை வழிப்படுத்தி அவதானத்துடன் செவிமடுத்தல்.
* உரிய வேலையில் ஈடுபட்டிருக்கும் போது விசேடமாக அவதானித்தல்.
* மாணவர் பற்றி எழுதப்பட்டுள்ள சிறு குறிப்புகள்/அறிக்கைகள் ஆகியவற்றை பகுப்பாய்வு செய்தல்.
* மாணவரின் வரவு அறிக்கையை பகுப்பாய்வு செய்து வராமைக்கான காரணங்களை தேடியறிதல்.
* உரிய மற்றைய ஆசிரியர்களுடன் கலந்துரையாடி தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
* மூத்த சகோதர/சகோதரிகள் பாடசாலையில் இருப்பின் அவர்களுடன் கலந்துரையாடி தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ளல்.
* பெற்றோருடன் அல்லது பாதுகாவலர்களுடன் கலந்துரையாடி தேவையான தகவல்களை சேகரித்தல்.
* மாணவரின் வீட்டுக்குச் சென்று தகவல்களை சேகரித்தல்.
* மாணவரின் செயல்நூல், பயிற்சிப் புத்தகம், ஒப்படைகள் போன்றவற்றை விசேடமாக கற்றாய்தல்.
* மாணவரின் ஆக்கங்கள், சித்திரங்கள், மாதிரியாக்கங்கள் ஆகியவற்றை சோதித்துப் பார்த்தல்.
* முறைப்படி அமைக்கப்பட்ட கண்டறிதல் சோதனையை நடத்துதல்.
* தேவையான சந்தர்ப்பங்களில் மாணவரை வைத்தியரொருவரிடம் அல்லது சாரகமொன்றிற்கு வழிப்படுத்தி ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ளல்.
* ஆசிரியர் பயன்படுத்திய கற்றல் - கற்பித்தல் முறைகளின் பொருத்தப்பாட்டினைப் பற்றி சிந்தித்துப் பார்த்தல்.
* ஆசிரியர் மாணவரிடம் காட்டிய மனப்பாங்கு, மாணவர் தொடர்பாக நடவடிக்கை செய்த விதம் என்பன பற்றி சிந்தித்துப் பார்த்தல்.
* கற்றல் இடர்ப்பாட்டை இனங்காண்பதற்காக மிகவும் பொருத்தமான முறை இருப்பின் அதற்கேற்ப மாணவரை இனங்காணல்.

## 6. முன்மாதிரியான கணிப்பீட்டுக் கருவிகள் யாவை?

ஒவ்வோர் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சிக்கும் பாண்டித்தியம் அடையப்பெற்றுள்ளதா என உறுதிப்படுத்துதல் 5.1இன் கீழ் காட்டப்பட்டுள்ளவாறான முறையியல்களுக்கு ஏற்ப ஆசிரியர்களினால் கணிப்பீடு செய்யப்படல் வேண்டும். அதற்கேற்ப தயாரிக்கப்பட்ட முன்மாதிரி கணிப்பீட்டுக் கருவிகள் பக்கம் இலக்கம் 1இலிருந்து உள்ளடக்கப்பட்டுள்ளன. அவற்றை அவ்விதத்திலேயே அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ப மாணவருக்குப் பொருத்தமான விதத்தில் அமைத்து பயன்படுத்த முடியும்.

முன்மாதிரி கணிப்பீடு செய்யும் கருவிகள் பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்கும்.

* தேர்ச்சி

* எதிர்பார்க்கப்படும் எல்லை
* கணிப்பீட்டை செயற்படுத்துவதற்குப் பொருத்தமான காலம்
* முன்னாயத்தம்
* செயலொழுங்கு
* பாண்டித்தியத்தைத் தீர்மானிப்பதற்கான பிரமாணங்கள்
* எதிர்பார்த்த பாண்டித்திய மட்டத்தை அடையாத மாணவருக்கான வழிகாட்டல்.

## 7.0 பாண்டித்தியம் பற்றிய முடிபுகளைக் குறித்துக் கொள்வது எவ்வாறு?

அத்தியாவசியக் கற்றல் தேர்ச்சியை இட்டு மாணவரைக் கணிப்பீடு செய்தலை மேற்கொள்ளும் போது அவர்களின் முன்னேற்றம் பற்றி அடிக்கடி சோதித்து அறிக்கைப்படுத்திக் கொள்ளுதல் அவசியமாகும். அதற்காகப் பயன்படுத்தக்கூடிய படிவமொன்று அட்டவணை 4இல் காட்டப்பட்டுள்ளது. ஒவ்வோர் அத்தியாவசிய கற்றல் தேர்ச்சி பற்றி ஒவ்வொரு மாணவரும் பாண்டித்திய மட்டத்தை அடைந்துள்ளனர் அல்லது பாண்டித்திய மட்டத்தை அடையவில்லை என்றாவாறு நீங்கள் எடுக்கும் முடிபுகளை இதில் குறிப்பிடுங்கள். இவ்வாறு மாணவர்கள் பற்றி தீர்மானம் எடுக்கும் போது ஆசிரியர்களின் தொழில்சார் தீர்மானித்தல் திறன் கட்டாயமாக முக்கியமாகும். அதனை வலிதுதன்மையுடன் தீர்மானிப்பதற்கு கவனஞ் செலுத்த வேண்டும்.